392

Q23:38.21197TK
N10
118835

உ.

சிவமயம்

மேலகரம்.

திரிகூடராசப்பக் கவிராயரவர்கள்

அருளிச்செய்த

# திருக்குற்றாலத்தலபுராணம்.

---

மதுரைத்தமிழ்ச்சங்கம் நூற்பரிசோதகர்

## மு. ரா. அருணாசலக்கவிராயர்

செய்த

அரும்பதவுரையுடன்

மேற்படி

திருக்குற்றாலநாதஸ்வாமி கோவில்

தருமகர்த்தர்களாகிய

ஸ்ரீமாந் சுப்பிரமணியபிள்ளையவர்கள்

ஸ்ரீமாந் குற்றாலலிங்க முதலியாரவர்கள்

ஸ்ரீமாந் இராமசாமி பிள்ளையவர்கள்

பொருளுதவியால்

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

சாதாரண ௵ ஆவணி௴

Copy Right Registered

இதன் விலை] [ரூ. 1—8—0

118835. M99
1899

சிவமயம்.

# இப்புத்தகத்திலடங்கியவை.

---

1. சிறப்புப்பாயிரம்.

2. முகவுரை.

3. விசேடக்குறிப்புக்கள்.

4. நூலாசிரியர்வரலாறு.

5. ஷை வம்மிசாவளி.

6. திருக்குற்றாலத் தேவாரம்.

7. சருக்க அகராதி.

8. புராணம்.

9. அரும்பதவுரை.

10. பிழைத் திருத்தம்.

மதுரைத் தமிழ்ச்சங்கம் நூற்பரிசோதகர்

## மு. ரா. அருணாசலக்கவிராயர் இயற்றிய

## சிறப்புப் பாயிரம்.

அரியபெருங் காப்பியத்தி னிலக்கணங்கட் கிலக்கியமீ தாமெ
ன்றேதற், குரியதிருக் குற்றாலத் தலபுரா ணம்பாடி யுய்ந்தான்
வண்மைப், பெரியவே ளாளர்குல சிகாமணியாய் மேலகரம் பிறங்
குஞ் சீர்த்தித், தெரியலணி திரிகூட ராசப்பக் கவிராச செல்வன்
மன்னே.

சிவமயம்.

# முகவுரை.

சந்தனப் பொதியத் தடவரை முனிக்குச்
செந்தமி ழுணர்த்திய தேசிகற் பணிவாம்

திருக்குற்றாலமென்பது, பாண்டிநாட்டிலே தமிழ்வேதம்பெற்ற பதினான்கு சிவஸ்தலங்களுளொன்று. மலைவளம் நீர்வளம் நிலவளம் முதலிய பலவளங்களாலுங் கண்டவர்கள் கண்ணையுங் கருத்தையுங்கவரத்தக்க பேரெழில்வாய்ந்தது. தன் பெயரைக் கேட்பினும், சொல்லினும், தன்பால்வதியினும் சகல பாவங்களையும் போக்கிச் சுவர்க்காதிபோகங்களையும், மோக்ஷத்தையும் கொடுக்கும் பெரும் புண்ணியப்பேறுமுள்ளது. இன்னும் இத்தலத்தின் பெருமைகளைக் கூறப்புகின் மிக விரியுமாதலின், அவற்றையெல்லாம் இப் புராணத்துட் காண்க. இங்கே திருக்கோயில் கொண்டருளும் பெருங்கருணைத் தடங்கடலாகிய பரமேசுவரரின் அற்புதச் சரிதங்களைக் கூறுவதே திருக்குற்றாலத் தலபுராணமாம். இச்சரிதம் வடமொழிஸ்காந்தத்தில் சங்கரசங்கிதை, சனற்குமாரசங்கிதை என்னும் இரு சங்கிதைகளிலும் கூறப்பெற்றதாம். அதனைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடித்தருகவென்று அத்தலத்து ஆதிசைவப் பிராமணர்கள் வேண்டிக்கொண்டவாறே *இந்நூலாசிரியரால் பாடித் தரப்பெற்ற இப்புராணம், தானவைபவகாண்டம், சிவரகசியகாண்டம் என இருபிரிவும், 32 சருக்கங்களும், 2072 செய்யுட்களுங் கொண்டுள்ளது. ஒவ்வொரு சருக்கங்களிலுள்ள கவிகளும் "ஆயுந்தொறுமினிதாந்தமிழ்" என்ற ஆன்றோர்வாக்கிற் கிலக்கியமாகப் படிக்குந்தோறும், இனிக்கும்பான்மையன. தமிழ்ப்புலவர் எல்லாரும் இந்நூலைக்கற்றுப் பெருமகிழ்ச்சியுட் குளித்துள்ளாரென்பது நிச்சயம். காவியங்களுக்குவேண்டிய எல்லா நயங்களையும் இந்நூலில் பரக்கக்

* இந்நூலாசிரியர் சரித்திரமும் வம்மிசாவளியும் பின்னர்க்காட்டப்பட்டுள்ளன.

காலமாம். இங்ஙனம் புலவர்க்கு நல்விருந்தாகப் போந்த இப்புராணம் 40 வருடங்கட்குமுன்னர் அச்சியற்றப்பெற்றதாயினும் இப்போது அப்பிரதிகள் கிடைத்தலின்மையானும், முன்னர் அச்சியற்றியவர் தமக்குக்கிடைத்த ஒருபிரதியைக் கொண்டு அதிலிருந்தவாறே பதிப்பிட்டமையின் ஆங்காங்குப் பற்பலவேறுபாடுகள் காணப்பட்டமையானும், தற்காலம் இத்தலத்தின்கண்ணே ஆண்டுதோறும் வந்துகூடும் பற்பலதேசத்தார்களும் இந்நூல்கிடைக்கப்பெறாதுவருந்துவதானும் இவ்வெல்லாக்குறையும் நீங்குமாறு கருதி எனது சேஷ்டசகோதரரும், மதுரைத் தமிழ்ச்சங்கத்து நூற்பரிசோதகரும், பல்புராணங்களை ஆராய்ந்து அச்சியற்றியவரும் ஆகிய ஸ்ரீ மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள் பற்பல தாலபத்திரப்பிரதிகளைத் தேடித் தொகுத்து ஒப்புநோக்கிவருங்கால், இந்நூலாசிரியர் பரம்பரையிலவதரித்துத் தற்போது திருநெல்வேலி இந்துகலாசாலையில் தமிழ்ப்பண்டிதராகவிருக்கும் ஸ்ரீமத் மே. சோ. சுப்பிரமணியக்கவிராஜரவர்கள் இதனையறிந்து மிகமகிழ்ந்து தம்பாலுள்ள மூலப்பிரதியை அன்பாலளித்ததுடன் சிற்சில அருங்கவிகட்குத் தாங்கொண்ட பொருளையும் எழுதியனுப்பி இம்முயற்சியை விரைவில்முடிக்குமாறு தூண்டியதுடன் அரும்பதவுரையும் எழுதிச் சேர்க்குமாறு வேண்டுவாராயினர். அவ்வண்ணமே பிரதிகளை ஒப்புநோக்கி மூலபாடத்தைச் சுத்தஞ்செய்து அரும்பதவுரையையும் எழுதி முடித்தமையுணர்ந்த ஷை சுப்பிரமணியக்கவிராஜரவர்களால் இவ்வெல்லா விஷயங்களையும் திருக்குற்றாலநாதசுவாமிகோயில் தருமகர்த்தர்களும், சிவநேயச்செல்வர்களும், செந்தமிழபிமானிகளுமாகிய ஸ்ரீமாந் சுப்பிரமணியபிள்ளையவர்கள், 1. ஸ்ரீமாந் குற்றாலலிங்கமுதலியாரவர்கள் 2. ஸ்ரீமாந் இராமசாமிபிள்ளையவர்கள் 3. இம்மூவரும் கேள்வியுற்று மிகமகிழ்ந்து இதனை உடனே அச்சியற்றவேண்டுமெனவும், அதற்குரிய பொருட்செலவனைத்தும் தாமே கொடுப்பதாகவும் தெரிவித்தார்கள். குற்றாலநாதசுவாமி, மூவருமொருவராமூர்த்தியாதலின், தருமகருத்தர்கள் மூவரும் ஒருமனப்பட்டு இப் புண்ணியத்தைக் கைக்கொள்ள முன்வந்தனர்போலும். இவர்களின் கருத்தை மேற்குறித்த சுப்பிரமணியக்கவிராஜரவர்களாலறிந்த ஸ்ரீ ரா. அருணாசலக்கவிராயரவர்கள் இந்த தருமகர்த்தர்கள் செயலைப்புகழ்ந்து வாழ்த்தி



உடனே அச்சியற்றி வெளியிடத் தொடங்கினார்கள். இவ்வெல்லாருடைய அன்புடைமையாலும் எல்லாம்வல்ல இறைவன் திருவருளாலும் இவர்கள் நினைத்தவாறே இனிது நிறைவேறியது. இதிற்செய்துள்ள அரிய வேலைகட்கும், புத்தகத்தின் வடிவமைப்புக்கும் அதிகவிலை ஏற்படுத்தலாமாயினும் எல்லாரும் எளிதிற் பெற்றுக்கொள்ளக்கருதியே புத்தகம் 1-க்குவிலை ரூபா 1—8—0 ஏற்படுத்திய தருமகருத்தர்களின் தயாளசிந்தைக்குத் தமிழ்மக்கள் மிகுநன்றிபாராட்டுங் கடப்பாடுடையரே. இந்நூலின் முற்பதிப்பிலில்லாத ஒருகவி இப்போது கிடைத்த ஏட்டுப்பிரதிகள் பலவற்றினுங் காணப்பட்டமையின் அதையுஞ்சேர்த்துப் பதிப்பிடலாயிற்று. அது கவுற்சனச்சருக்கம் ஐம்பதாவது "அநித்தபோக" மென்னுங்கவியே. இங்ஙனம் ஆராய்ந்து அச்சிட்டுவருதலைக் கேள்வியுற்று, இலஞ்சிநகர்வாசியும், சைவாபிமானியும், தமிழ்ப்பிரியரும், திருவிலஞ்சிமுருகர்பிள்ளைத்தமிழை அச்சியற்றியவரும், உத்தம குணசீலருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ பெ. சண்முகவேலாயுதம்பிள்ளையவர்கள் தமதுஏட்டுப்பிரதியொன்றைத் தாமேயனுப்பி யுபகரித்து இடையிடையே கடிதங்கள்விடுத்து மிக வூக்கமூட்டினார்கள். தமிழ்நாட்டுவாசிகளில் ஓலைச்சுவடிகள் வைத்திருப்போர்இவ்வாறே சமயத்தில் உதவிபுரிவார்களாயின் நம் தமிழ்நூல்கள் செவ்விது வெளிவருதற்கு அனுகூலமாகுமென்பதை யுணர்வார்களாக. ஏட்டுப்பிரதிகள் பலவற்றினும் திருநெல்வேலிப் பரம்பரை வித்துவகுல சிகாமணியாகிய ஸ்ரீமாந். நெல்லையப்பன் கவிராஜரவர்கள் புத்தகசாலைப் பிரதியொன்றே கையெழுத்துச் சிதையாமல் மிகவுஞ் சிறந்த பாடமாக இருந்தது. அவர்கள் புத்தகசாலையிலுள்ள எல்லா நூல்களுமே இங்ஙனஞ் சிறந்துள்ளனவென்பது யாவருக்குந் தெரிந்த விஷயம். சுபம், சுபம், சுபம்.

இங்ஙனம்,

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

வித்தியாபாநுப் பத்திராதிபர், மதுரை.

## இத்தலத்தின் பெயர்கள்.

பிதுர்கண்டதீர்த்தபுரம் முதல் குறும் பலா விசேடபுரம் என்பதிறுதியாக 21 பெயர்களுண்டு. இவற்றைத் திருக்குற்றாலத் தலமகிமைச்சருக்கம் 30–31ஆம் கவிகளிற்காண்க.

## தீர்த்தங்கள்.

சிவமதுகங்கை, செண்பகத்தடாகம், பொங்குமாகடல், வடவருவி, சித்திராநதி என ஐந்தாகும். வடவருவியிலே நீராடினவர்கண்ணுக்கு அவ்வருவியிலே இந்திரதநுசு தோன்றுமெனவும், நீராடுவோர் பாவங்களெல்லாம் கழுநீராகி யோடுமெனவும் கூறுவன்தை இற்றைக்கும் பிரத்தியட்சமாகக் காணலாம்.

## விருக்ஷம்.

பலாவிருக்ஷம்: இது குறும்பலாஎனப் பெயர்பெறும். இதனை நான்குவேத சொரூப மென்பார். இதற்கே ஸ்ரீ ஞானசம்பந்த சுவாமிகளருளிய தேவாரப்பதிகமொன்றிருத்தலால் இது மகாவிசேடமுடைத்தாதல் பெறப்படும்.

## சித்திரசபை.

சித்திரசபையாகிய தெய்வசபை: இஃது ஆலயத்துக்கு வடபக்கமுள்ளது; இச்சபையில் சிவபிரான் திருநடனத்தில் உமாதேவியார் தாளம் அடித்துக்கண்டுகளித்தனர். நடனகாலத்தில் அந்தர துந்துபி வாத்தியம் முழங்கும். இவ்விரண்டும் மிகுந்த ஆச்சரியமே.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# நூலாசிரியர் வரலாறு.

இந்நூலாசிரியராகிய திரிகூடராஜப்பக்கவிராஜ மூர்த்திகள் பாண்டிவளநாட்டிலே சித்திராநதியருகிலே தென்காசிக்கும் திருக்குற்றாலத்துக்கும் இடையிலுள்ள மேலகரம் என்னும் புண்ணிய நகரத்திலே விருந்து புறந்தந்து அருந்தவர்ப்பேணிச் சிவநேயச் செல்வத்திற் சிறந்து விளங்கும் சைவ வேளாளர் திருமரபிலே இற்றைக்கு இருநூறு வருடங்கட்கு முன்னர் அவதரித்தருளினர். தமிழிலக்கிய இலக்கண சாத்திர முதலிய பல நூல்களையும் ஐயந்திரிபறவுணர்ந்து, சொன்னயம் பொருணயம் அணிநயம் முதலிய எந்நயத்தானுஞ் சிறப்பமைந்து படிக்கப்படிக்க இனிக்கத்தக்க செய்யுளியற்றுந் திறமைபெற்று வாழ்ந்தனர். திருக்குற்றாலநாத சுவாமிமீது பற்பல அற்புதப் பிரபந்தங்களியற்றினர். அக்காலத்துத் தென்னாட்டை ஆண்டுவந்த முத்துவிஜயரெங்க சொக்கநாத நாயக்கரவர்கள், இக்கவிராஜ மூர்த்திகளியற்றும் செய்யுட் சுவைப்பெருக்கையுண்டு களித்துப் பற்பல மரியாதைகள் செய்து போற்றுவாராகி, திருக்குற்றாலக் குறவஞ்சி யென்றநூலை அரங்கேற்றுவித்துப் பற்பல சிறப்புச்செய்து, முற்றூட்டாக நன்செய்நிலம் கொடுத்துள்ள விஷயம் இதனடியில் வரும் தாமிர ஸாஸனத்து வாக்கியங்களால் நன்கு தெளியத்தகும். இந்நன்செய் நிலங்கள் அக்காலமுதல் இக்காலவரை குறவஞ்சிமேடு என்னும் பெயருடன் இந்நூலாசிரியர் சந்ததியார்கள் ஆட்சியிலிருந்து வருகின்றது. இவர்கள் சந்ததியார்கள் இற்றைக்கும் திருக்குற்றாலநாதசுவாமிகோயில் வித்துவான்களாக ஆலயத்தும் ஏனையிடங்களிலும் முதல் மரியாதை பெற்று வாழ்கின்றார்கள்.

## குறவஞ்சிமேட்டுத்தாமிர சாஸனம்.

"சாலிவாகன சகாப்தம் 1640-க்குச் செல்லாநின்ற கொல்லம் 891-ரு தைமீ 11உ ராஜமானிய ராஜஸ்ரீ முத்துவிஜயரெங்க சொக்கநாத நாயக்கரவர்களோம் திருக்குத்தாலம் ராஜப்பன் கவிராஜ

ருக்கு பொறுப்புப் பட்டயம் எழுதிக்கொடுத்தபடி சுவாமி திருக்குத்தால நாத சுவாமிபேரில் குறவஞ்சி நாடகம் பாடி அரங்கேத்தினதற்கு மேலச்செண்பகக்காவில் கருப்புக்கட்டி ஊத்துமேட்டில் கல் உ-ல் சங்கிலி அளவு ஹீ ஙவ-யும் ருஉ-யும் விட்டுக்கொடுத்தபடியினாலே பொறுப்பு ஙு க-க்கு தீர்வை வீதம் குடுத்து கையாடிக்கொண்டு சன்னதி பிரபந்தவித்துவானாக நடந்து வருவாராகவும். இந்த நிலத்துக்கு வேறே வரி நாட்டுச்சிலவு காவல்கூலி போர்நெல் குடுக்கத்தேவையில்லை யென்று கட்டளையிட்டபடியினாலே இந்தப்படிக்குக் கையாடிக்கொள்ளவும்."


(ஊயோப்பம் தெலுங்கில்) ஸ்ரீராமசெயம்.

இவ்வாறெழுதி அக்காலத்து முத்திரையும் போடப்பட்டிருக்கிறது. இந்தப்பட்டயத்தின் காலத்தைக்கொண்டு ஊகிக்குமிடத்து இந்நூலாசிரியர் காலம் இற்றைக்கு 200 வருடங்கட்கு மேலிருக்கலாமென்பது தெளிவாம். இதிற்கண்ட குறவஞ்சிநாடகமே மற்றையோரியற்றிய குறவஞ்சித் தமிழிற்கெல்லாம் தலைமைப்பாடுற்றுப் படிப்பவர் மனத்தைத்தன் வசப்படுத்தத்தக்க நவரசங்களும் நிரம்பக் கொண்டுள்ளதாதல் தமிழ்நாட்டு வாழ்வார் பலருமறிவர்.

இந்நூலாசிரியரியற்றிய பிரபந்தங்கள்.

| | |
|---|---|
| 1. குற்றாலக்குறவஞ்சி | 8. ஷை பரம்பொருள்மாலை |
| 2. குற்றாலத்தலபுராணம் | 9. ஷை கோவை [மாலை |
| 3. ஷை மாலை | 10. குழல்வாய் மொழிகலிப்பா |
| 4. ஷை சிலேடைவெண்பா | 11. ஷை கோமளமாலை |
| 5. ஷை யமகவந்தாதி | 12. ஷை வெண்பாவந்தாதி |
| 6. ஷை உலா | 13. ஷை பிள்ளைத்தமிழ் |
| 7. ஷை ஊடல் | 14. நன்னகர்வெண்பா |

என்னும் பதினொன்கு பிரபந்தங்களென்று இப்போது வெளியாகின்றன. இவர்களியற்றிய நூல்களெல்லாம் கற்றோரும் மற்றோரும் புகழ்ந்து மகிழ்ந்து போற்றத்தக்கனவாதல் இப்புராணத்தைப்படிப்பவர் யாவரும் உணர்தல் கூடுமாதலின் இவண் விரித்தல் மிகையென்று விடுக்கப்பெற்றது.



திருச்சிற்றம்பலம்.

# திருக்குற்றாலத்தேவாரம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

பண் - குறிஞ்சி.

---

திருச்சிற்றம்பலம்.

வம்பார்குன்றநீடுயர்சாரல்வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக்கோலவண்டியாழ்செய்குற்றால
மம்பானெய்யோடாடலமர்ந்தானலர்கொன்றை
நம்பான்மேயநன்னகர்போலுநமரங்காள். (௧)

பொடிகள்பூசித்தொண்டர்பின்செல்லப்புகழ்விம்மக்
கொடிகளோடுநாள்விழமல்குகுற்றாலங்
கடிகொள்கொன்றைகூவிளமாலைகாதல்செய்
யடிகண்மேயநன்னகர்போலுமடியீர்காள். (௨)

செல்வமல்குசெண்பகம்வேங்கைசென்றேறிக்
கொல்லைமுல்லைமெல்லரும்பீனுங்குற்றாலம்
வில்லினொல்கமும்மதிலெய்துவினைபோக
நல்குநம்பானன்னகர்போலுநமரங்காள். (௩)

பக்கம்வாழைப்பாய்கனியோடுபலவின்றேன்
கொக்கின்கோட்டுப்பைங்கனிதூங்குங்குற்றால
மக்கும்பாம்புமாமையும்பூண்டோரனலேந்து
நக்கன்மேயநன்னகர்போலுநமரங்காள். (௪)

மலையார்சாரன்மகவுடன்வந்தமடமந்தி
குலையார்வாழைத்தீங்கனிமாந்துங்குற்றால
மிலையார்சூலமேந்தியகையானெயிலெய்த
சிலையான்மேயநன்னகர்போலுஞ்சிறுதொண்டீர். (௫)

மைம்மாநீலக்கண்ணியர்சாரன்மணிவாரிக்
கொய்ம்மாவேனலுண்கிளியோப்புங்குற்றாலங்
கைம்மாவேழத்தீருரிபோர்த்தகடவுள்ளெம்
பெம்மான்மேயநன்னகர்போலும்பெரியீர்காள். (௬)

நீலநெய்தற்றண்சுனைசூழ்ந்தநீள்சோலைக்
கோலமஞ்ஞைபேடையொடாடுங்குற்றாலங்
காலன்றன்னைக்காலாற்காய்ந்தகடவுள்ளெஞ்
சூலபாணிநன்னகர்போலுந்தொழுவீர்காள். (௭)

போதும்பொன்னுமுந்தியருவிபுடைசூழக்
கூதன்மாரிநுண்டுளிதூங்குங்குற்றால
மூதூரிலங்கைமுட்டியகோனைமுறைசெய்த
நாதன்மேயநன்னகர்போலுநமரங்காள். (௮)

அரவின்வாயின்முள்ளெயிறேய்ப்பவரும்பீன்று
குரவம்பாவைமுருகமர்சோலைக்குற்றாலம்
பிரமனோடுமாலறியாதபெருமையெம்
பரமன்மேயநன்னகர்போலும்பணிவீர்காள். (௯)

பெருந்தண்சாரல்வாழ்சிறைவண்டுபெடைபுல்கிக்
குருந்தமேறிச்செவ்வழிபாடுங்குற்றால
மிருந்துண்டேருநின்றுண்சமணுமெடுத்தார்ப்ப
வருந்தண்மேயநன்னகர்போலுமடியீர்காள். (௰)

மாடவீதிவருபுனற்காழியார்மன்னன்
கோடலீன்றுகொழுமுனைகூம்புங்குற்றால
நாடவல்லநற்றமிழ்ஞானசம்பந்தன்
பாடல்பத்தும்பாடநம்பாவம்பறையுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

# திருக்குறும்பலாத்தேவாரம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
26 OCT 1910
MADRAS.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

திருந்தமதிசூடித்தெண்ணீர்சடைக்கரந்துதேவிபாகம்
பொருந்திப்பொருந்தாதவேடத்தாற்காடுறைதல்புரிந்தசெல்வ
ரிருந்தவிடம்வினவிலேலங்கமழ்சோலையினவண்டியாழ்செய்
குருந்தமணநாறுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. (௧)

நாட்பலவுஞ்சேர்மதியஞ்சூடிப்பொடியணிந்தநம்பானம்மை
யாட்பலவுந்தானுடையவம்மானிடம்போலுமந்தண்சாரற்
கீட்பலவுங்கீண்டுகிளைகிளையன்மந்திபாய்ந்துண்டுவிண்ட
கோட்பலவின்றீங்கனியைமாக்கடுவனுண்டுகளுங்குறும்பலாவே. (௨)

வாடற்றலைமாலைசூடிப்புலித்தோல்வலித்துவீக்கி
யாடலரவசைத்தவம்மானிடம்போலுமந்தண்சாரற்
பாடற்பெடைவண்டுபோதலர்த்தத்தாதவிழ்ந்துபசும்பொனுந்திக்
கோடன்மணங்கமழுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. (௩)

பால்வெண்மதிசூடிப்பாகத்தோர்பெண்கலந்துபாடியாடிக்
காலனுடல்கிழியக்காய்ந்தாரிடம்போலுங்கல்சூழ்வெற்பி
னீலமலர்க்குவளைகண்டிறக்கவண்டரற்றுநெடுந்தண்சாரற்
கோலமடமஞ்ஞைபேடையோடாட்டயருங்குறும்பலாவே. (௪)

தலைவாண்மதியங்கதிர்விரியத்தண்புனலைத்தாங்கித்தேவி
முலைபாகங்காதலித்தமூர்த்தியிடம்போலுமுதுவேய்சூழ்ந்த
மலைவாயசும்புபசும்பொன்கொழித்திழியுமல்குசாரற்
குலைவாழைத்தீங்கனியுமாங்கனியுந்தேன்பிலிற்றுங்குறும்பலாவே. ( )

நீற்றேறுதைந்திலங்குவெண்ணூலர்தண்மதியர்நெற்றிக்கண்ணர்
கூற்றேர்சிதையக்கடிந்தாரிடம்போலுங்குளிர்சூழ்வெற்பி
லேற்றேனமேனமிவையோடவைவிரவியிழிபூஞ்சாரற்
கோற்றேனிசைமுரலக்கேளாக்குயில்பயிலுங்குறும்பலாவே. (௬)

பொன்ஞெருத்தகொன்றையும்பிள்ளைமதியும்புனலுஞ்சூடிப்
பின்ஞெருத்தவார்சடையெம்பெம்மானிடம்போலும்பிலயந்தாங்கி
மன்றத்துமண்முழவமோங்கிமணிகொழித்துவயிரமுந்திக்
குன்றத்தருவியயலேபுனறதும்புக்குறும்பலாவே. (எ)

ஏந்துதிணிதிண்டோளிராவணனைமால்வரைக்கீழடரவூன்றிச்
சாந்தமெனநீறணிந்தசைவரிடம்போலுஞ்சாரற்சாரற்
பூந்தணறுவேங்கைக்கொத்திறுத்துமத்தகத்திற்பொலியவேந்திக்
கூந்தற்பிடியுங்களிறுமுடன்வணங்குங்குறும்பலாவே. (அ)

அரவினணையானுநான்முகனுங்காண்பரியவண்ணல்சென்னி
விரவிமதியணிந்தவிகிர்தர்க்கிடம்போலும்விரிபூஞ்சாரன்
மரவமிருகரையுமல்லிகையுஞ்சண்பகமுமலர்ந்துமாந்தக்
குரவமுறுவல்செய்யுங்குன்றிடஞ்சூழ்தண்சாரற்குறும்பலாவே. (கூ)

மூடியசீவரத்தர்முன்கூறுண்டேறுதலும்பின்கூறுண்டு
காடி[illegible]தாடுசமணைக்காய்ந்தாரிடம்போலுங்கல்சூழ்வெற்பி
னீடுயா[illegible]வய்குனியப்பாய்கடுவனீள்கழைமேனிருந்தஞ்செய்யுங்
கூடியவே[illegible]வர்கள்குய்விளியாக்கைமறிக்குங்குறும்பலாவே. (க௦)

கொம்பார்பூஞ்சோலைக்குறும்பலாமேவியகொல்லேற்றண்ண
னம்பானடிபரவுநான்மறையான்ஞானசம்பந்தன்சொன்ன
வின்பாயபாடலிவைபத்தும்வல்லார்விரும்பிக்கேட்பார்
தம்பாலதீவினைகள்போயகலுநல்வினைகடளராவன்றே. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

திருக்குற்றாலத் திருப்பதிகம் - உ.

---

சுவாமி - குறும்பலாநாதர். தேவி - குழல்வாய்மொழியம்மை.

உ

# சருக்க அகராதி.


| | பக்கம். |
|---|---|
| உமை திருவவதாரச் சருக்கம் ... ... | க௱க |
| கடவுள் வணக்கம் ... ... | க |
| கண்டகசேதனச் சருக்கம் ... ... | உ௱கூ |
| கவுற்சனச் சருக்கம் ... ... ... | உ௱சு |
| குறுமுனி வழிபடுசருக்கம் ... ... | உஙரு |
| குறும்பலாச் சருக்கம் ... ... ... | எகூ |
| சிவபூசை விதியுரைத்த சருக்கம் ... ... | உகஅ |
| சிவமதுகங்கைச் சருக்கம் ... ... ... | ருஎ |
| தக்கன்வேள்விச் சருக்கம் ... ... ... | கூரு |
| தக்கன் வேள்வியழிந்த சருக்கம் ... ... | ககரு |
| தருமசாமிச் சருக்கம் ... ... ... | உஅக |
| திரிகூடமலைச் சருக்கம் ... ... ... | ங0 |
| திருக்குற்றாலத் தலமகிமைச் சருக்கம் ... ... | ஙகூ |
| திருநகரச் சருக்கம் ... ... ... | [illegible]0 |
| திருநடச் சருக்கம் ... ... ... | உ[illegible]ரு |
| திருநதிச் சருக்கம் ... ... ... | அ |
| திருநாட்டுச்சருக்கம் ... ... ... | கஉ |
| திருமணச் சருக்கம் ... ... ... | ககூகூ |
| திருமால் சிவபிரானை சருக்கம் ... ... | கசுஉ |
| தேவர்கள் சிவத்துரோகந்தீர்ந்த சருக்கம் ... | கஙகூ |
| தேவர்கள் சிவத்துரோகமடைந்த சருக்கம். ... | கஉஅ |
| நதிவீழ்வேடன் கதிபெறு சருக்கம் ... ... | உஉஅ |
| நூற்பயனுரைத்த சருக்கம் ... ... | ங0க |
| பராசத்திபீடச் சருக்கம் ... ... ... | கூஎ |
| புட்பகந்தச் சருக்கம் ... ... ... | உஎச |
| புராண வரலாற்றுச் சருக்கம் ... ... | உசு |
| மந்தமாருதச் சருக்கம் ... ... ... | எரு |
| மூர்த்திவிசேடச் சருக்கம் ... ... | சுசு |
| யானைபூசித்த சருக்கம் ... ... ... | கருரு |
| வடவருவிச் சருக்கம் ... ... ... | சகூ |
| வாசுகி தவம்புரிந்த சருக்கம் ... ... | உஙகூ |
| வானவர் வழிபடு சருக்கம் ... ... ... | உஙஉ |
| வேடன் வலம்வந்த சருக்கம் ... ... | கஎஎ |

உ

# அரும்பதவுரையைப்பற்றிய ஒரு விஞ்ஞாபனம்.

இந்நூலின் அரும்பதவுரையனைத்தும் ஆராய்ச்சிசெய்யும் ஆன்றோர் அரும்பதவுரையெனப் பெயரிட்டுச் சாமானிய பதங்கட்கும் உரையுரைந்த தெற்றுக்கெனின், தமிழ்கற்பார் சுருங்கிய இக்காலத்துச் சிறறிஞர் பலர்க்கும் அப்பதங்கள் அரும்பதங்களாகக் காணப்படுதலின், அவர்பொருட்டு வரைந்தேனென்க. "தான்கற்ற நூலளவே யாகுமாம் நுண்ணறிவு" என்ற பழமொழிப்படி என் சிற்றறிவிற் கெட்டியமட்டுந் தெரிந்தெழுதிய இவ்வுரையில் மாறுபாடாகக் காணப்பட்ட வுரைகளுளவேல், அவற்றை நுண்ணறிவாளர்களெடுத்துக் காட்டி வேறுரைகள் கூறுவார்களாயின் நன்றியறிதலோடேற்று இரண்டாம்பதிப்பில் வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்ஙனம்,

மு. ரா. அருணாசலக்கவிராயர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம் நூற்பரிசோதகர்.

உ

கணபதிதுணை.

சிவமயம்.

REGISTERED MADRAS

# திருக்குற்றாலத்தலபுராணம்.

## முதலாவது: தானவைபவகாண்டம்.

### காப்பு.

புயல்காட்டும் பனிவரையின் பிடிதழுவுஞ் சிவவேழம் பொருப்பில் வானி, லியல்காட்டு மிருபிடிசேர் முந்நாலு துதிக்கையன்முன் னீன்ற ஞானச், செயல்காட்டு மொருகோட்டி னிருகோட்டு வெண்பிறைவாழ் செக்கர் வானை, மயல்காட்டுந் திருமேனி மழைமதச் செண்பகக்களிற்றை மனத்துள் வைப்பாம்.

## கடவுள் வணக்கம்.

### திருக்குறும்பலாவீசர்.

பூமேவு சதுர்முகத்துப் புத்தேளு மவனையுந்தி பூத்த தேவுந் தேமேவு நிலமேவி வான்மேவித் தினந்தேடத் திரிகூடத்துக், கோமேவு பழம்பொருளைக் குற்றாலப் பரஞ்சுடரைக் குறும்பலாவின் மாமேவு மறைக்கொழுந்தைப் பிறைக்கொழுந்தை வனைந்தோனை வணக்கஞ் செய்வாம். (௧)

### குழல்வாய்மொழி யம்மை.

இமையவரைக் குலக்கொழுந்து கயிலைவரை மேருவரைக் கிறைவி வேதச், சிமையவரைத் திரிகூடச் சிவக்கொழுந்து மணக்குமொரு செழும்பூங் கொம்பு, கமையவரைப் புரக்கவரு கருல்சுரந்து மடைதிறந்த கண்ணு ளென்னுஞ், சமையவரைத் தழைக்குழல்வாய்மொழியம் பிகைதிருத்தா டலைமேற் கொள்வாம். (௨)

### சித்திரசபை நடராஜர்.

வானாகி வளியாகிக் கனலாகிப் புனலாகி வளர்பா ராகி
யூனாகி யுயிராகி யொன்றாகிப் பலவாகி யுலகம் யாவுந்

தானாகிப் புறமாகி யகமாகி யறம்வளர்த்தா டாள மேந்தப்[போற்றி. கேசனாகி நடம்புரியுஞ் சித்திரப்பொற் பொதுவுடையான் கோலம்

## செண்பகப்பூங்கோதை யம்மை

அம்பரத்தி னிடைத்தோன்று மாருதம்போ லம்பரத்தி லருளாய்த் தோன்றி; யம்பரத்தி னம்பரவா னொருதனுப்பேர் விருதனுவு மமைந்தோன் றாகி, யம்பரத்தின் விசிகரம்போ லத்துவித மாகியண்ட மனைத்து மீன்று, எம்பரத்தி னமர்கடந்த வருள்விழிச்செண் பகக்கோதை யடிசார்ந் துய்வாம். (௪)

## திரிகூட நாதர்.

பொன்பூத்த நறையிதழிப் பூமாலை பொன்னரிய மாலை யாகக் கொன்பூத்த புயங்கவெள்ளிக் கொடிவேய்ந்த சடைப்பவளக் கொடியாம் வீடு, மன்பூத்த மணவறையா மதிவிளக்கா மலர்கண்மதுத் தாரை வார்ப்பத், தென்பூத்த நதிமாதைச் சேர்வேட்குந் திரிகூடச் சிவனைச் சேர் வேட்பாம். (௫)

## ஞான பராசத்தி.

வேறு.

பூதபல பேதவுயிர் தேககர ணாதிமுறை போகபுவ னாதி களைலா, மாதியுமை வாணிதிரு வாயகில லோகநிறை வாகவருள் கூருமொருதாய், நாதர்கயி லாசகிரி வாசர்திரி கூடநட ராசருட னாத வடிவாய், வேதமொழி யோதிவினை யாடுகுழல் வாய்மொழிமெய்ஞ் ஞானபரை பாத நினைவாம். (௬)

## தக்கிண மூர்த்தி.

வேறு.

ஆல்வருக்கந் தனிலுயர்ந்த வடநிழற்கே தென்முகங்கொண் டறவோராய, நால்வருக்கு மிருவருக்கு மொருவருக்கு மின்றருளி நவிலொ ணாத, நால்வருக்க மொருவருக்கு நவலாம லுவன்றனை நுதற்கண் ணானை நால்வருக்கைக் கனியூயருட் பசுந்தேனைப் பரவாமற் பரவல் செய்வாம். (௭)

## விநாயகக் கடவுள்.

கங்கையா ராம்பலைப்பூங் கவுரிநுதற் சிந்தூரத்தைக் கயிலை யாளி, செங்கையார் மாதங்கத் திருமுனியைத் தேவேந்தர் திக்கு வேந்



தர், பங்கயா சனர்முதலோர் முடிமலர்த்தும் பியைவலவை பருவட்பாரக், கொங்கையார் களபத்தைச் செண்பகக்குஞ் சரத்தையினக் கூடஞ் சேர்ப்பாம். (௮)

## சண்முகக் கடவுள்.

வேறுமுகந் தொறுந்தோறும் பிறந்துழலுஞ் சனனவிடாய் விடுப்ப மூலச், சேறுமுக மாயைமலங் கழியவிரு வினைப்பழைய, நீட்டுந் தீரக், கூறுமுகந் தொறும்கரக் குழைதாவி வள்ளிதெய்வக் கொடிகட் செல்பா, யாறுமுகம் பெற்றகொற்றத் தானந்தக் கடல்பரவியாடல் செய்வாம். (௯)

## சரசுவதி இலக்குமி.

எண்கமலங் கரஞ்சலிப்ப வொருகமலத் தபன்பிறப்பி லெழுதாவண்ணந், தண்கமலப் பதஞ்சிரமேல் வைத்தருள்வார் குற்றாலத் தமிழ்நூல் வாய்ப்பாக், கண்களுனுங் கருங்கமலங் கரங்களுனும் பசுங்கமலங் கவினைப் பூத்து, வெண்கமலத் திருந்தாளைச் செங்கமலத் திருந்தாளை வேண்டல் செய்வாம். (௧௦)

## திருநந்தி தேவர்.

நேத்திரங்க ளொருமூன்றும் புயநான்கும் விழிமணியு நிரைநூன் மார்புஞ், சாத்துபுலித் தோலுடையும் வெண்ணீறும் விரிசடையுஞ் சடைமேற் பாம்புங், காத்திரள்கைம் மான்மழுவுங் கண்ணுதலா மெனத்தோற்றிக் களங்கார் மாற்றி, வேத்திரத்தின் படைதரித்த விடைமுகத்தெம் பெருமானை வேண்டல் செய்வாம். (௧௧)

## சண்டேசுரர்.

தான்பிறந்த தந்தையையு மினிப்பிறக்கு நிந்தையையுந் தடிந்துசேயென், றூன்பிறங்கு மழுவிடைமே லொருவரளைந் திடவிருவ ரயிர்ப்ப வேகிக், கான்பொலிதா ரசிபிரமா தியர்க்குமெய்தா விருக்கையெய்திக் கடவுட் சேடஞ், வான்புலவர் பெறுதற்கரிது பெற்றவனை நற்றவனை வழுத்தல் செய்வாம். (௧௨)

## திருஞான சம்பந்த சுவாமிகள்.

மதுரேசர் திருநீட்டி வந்தசமண் கழுவேற மாறுச் சைவஞ் சதுரேற மனுநீதி தழைத்தேறத் திருவேடு தமிழ்நேசர் வைகை

யெதிரேறத்தொண்டர்குழாமீடேறப்பரசமையவிருள்விட் டோட்கதிரேறுமணிச்சிவிகையேறினன்சரணமந்தக்கரணஞ்சேர்ப்பாம். ()

### திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருநீற்றை மெய்யழுத்தி யஞ்செழுத்தை நெஞ்சழுத்திச் சிலைக்கை மார, னுருநீற்றும் பெருமானை யுறவழுத்திச் சமணரேனு மொன்னார் மூட்டும், பொருநீற்றுக் குடவறையுங் கடகரியும் விடவரவும் புறங்கண் டாழிக், கருநீத்தங் கடப்பவொரு கற்றோணி யுங்கைத் தானைக் கருத்துள் வைப்பாம். (௧௪)

### சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

புவிபாசைக் களைசுழிந்து தலைவரா வணக்கூடம் புகுந்து பொற்பூண், டவிராத கொம்பிரண்டு மேவியொரு வல்லிதொடர் தளையை நீவிக், குவியாரம் புனைபரவை கொங்கையா னையின்பொருட்டுக் குழைதோய் சங்கச், செவியானைத் தூதுவிட்ட கவியானை தனைத்தினமுஞ் சிந்தை செய்வாம். (௧௫)

### மாணிக்கவாசக சுவாமிகள்.

சொன்னவனைத் துளகலையும் பயிலாமாத் தியர்குலத்துத் தோன்றி யாங்கோர்,தென்னவனை யரசுரிமைத் திறல்செயுமந்திரியாக்கித் தென்னர்க் கெல்லா, முன்னவனைப் பின்னுசடை முடியின்மேற் பொன்னின்முடி சூட்டி யாண்ட, மன்னவனை மதுரையிலே குதிரைவிற்கச் சொன்னவனை வணக்கஞ் செய்வாம். (௧௬)

### அகத்திய மாமுனிவர்.

இளையேந்து மணிநிலவு விரிகூடத் திரிகூடக் கிரிக்கே யாவும் விளையேந்து புகழ்க்காரகந் தண்டேந்திப் படைத்தபிரான் விடுத்த நேமி, வளையேந்து [illegible] மானேந்திப் பசுந்துளவ மவுலிக் காடு, முளையேந்[illegible]யந்தத் துதியேந்துந் தமிழ்முனிதாண் முடிமேற் கொள்வாம். (௧௭)

### அறுபத்துமூவர்முதலிய நாயன்மார்.

தில்லைவா ழந்தணர்பொய் யடிமையிலாப் புலவர்சிவ பத்த ராதி வல்லவரெம் பெருமான்க ளெழுவாடி பரவியபன் மாலுங் காணு



நல்லசீர் மலர்ப்பாதங் கண்டதிருத் தொண்டரெனு நாயன் மார்களெல்லைதீர்பெரும்புகழா ரறுபத்துமூவர்பதமிறைஞ்சல்செய்வாம். ()

### திருக்கோயிற் பணிவிடைக்காரர்.

காவார்ந்த திரிகூடத் தானுவுக்கும் வேணுமொழிக் கவுரி யார்க்குந், தேவாரப் பணிபுரிவா ருழவாரப் பணிபுரிவார் சேவை செய்வார், பூவாசத் தொடைதொடுப்பார் புகழ்வாசுத் தொடைதொடுப்பார் பூசை செய்வா, ராவார்கண் முதலாய வடியார்கட் கடியார்கட் கடிமை செய்வாம். (௧௯)

### திரிகூடச் சிவநாம கீர்த்தனர்.

நடந்தாலு மிருந்தாலு நின்றாலும் வளர்ந்தாலு நலிவுற்றாலுங் கிடந்தாலு மயின்றாலும் பயின்றாலுந் துயின்றாலுங் கிரிக டாவிப் படர்ந்தாலும் விழுந்தாலு மெழுந்தாலுந் திரிகூடப் பரமனுமங் கிடந்தாலு வுறவழுத்துந் தொண்டரடிப் பாதுகைகள் சென்னி சேர்ப்பாம். (௨௦)

### வாழ்த்து.

சீதமழை முகில்பொழிக தேசமெலாம் பயிர்விளைக செல்வ மோங்க, மாதர்குழா மக்கள்குழா மனையறக்க ளுடன்பொலிந்து மலிந்து வாழ்க, மேதகுசீர்ச் சைவநெறி வேதநெறி தழைத்தோங்க மேலு மேலும், பூதலமேற் சிவபெருமா னாலயங்கள் பூசனைகள் பொலிக மாதோ. (௨௧)

கடவுள்வணக்கம் முற்றிற்று.

---

## முதனூல் வழி.

காரணமுங் காரியமுங் கற்பனையுங் கடந்துதனிப்
பூரணமாய் நின்றபிரான் புவனமெலாம் படைத்தளி
யாரணமு மாகமமு மருங்கலையும் விரித்தருளி
நாரணற்கு நான்முகற்கு நவிலுவன நவின்றருளி. (௧)

செப்பரிய கயிலையின்மேற் றிருநந்தி தேவனுக்கு
வைப்பரிய பொருளைவிரித் துபதேசம் வைத்தருள
வொப்பரிய சனற்குமாரற் குண்மையா வவனுரைப்ப
மெய்ப்பொருளை யுணர்ந்தவனும் வியாதமா முனிக்குணர்த்த. (௨)

சூதனுக்கு வியாதமுனி சொன்னதொகை மூவாறின்
மாதவற்குக் காருடநா ரதம்விண்டு பாகவத
மாதவனுக் குயர்பிரம கைவருத்த மழலோற்கு
மேதகுசீ ராக்நேயம் விதிக்குயர்பற் பம்பிரமம். (௩)

இச்சைபெறு நால்வருக்கு மிருநான்கு வகைபோக
மச்சம்வா மனங்கூர்மம் வராகமாற் கன்றேய
பெச்சுபவி டியங்காந்தம் வியனிலிங்கம் பிரமாண்ட
மச்சைவ மெனச்சிவபு ராணங்க ளையிரண்டில். (௪)

காந்தமெனு மகவிடத்திற் கடலேழி லுவர்கழித்துச்
சார்ந்தகட லாறணைய சனற்குமா ரஞ்சூதங்
கூர்ந்தசிவ மால்பிரமங் குமரமெனப் பெயர்குலவு
மார்ந்தபெருஞ் சங்கிதைக ளாறுரு மாங்கவையில். (௫)

கிளர்ந்தபெருஞ் சங்கரசங் கிதையென்னும் பாற்கடலும்
வளம்பெருகுஞ் சனற்குமர சங்கிதையா மதுக்கடலு
முளந்தனிலொன் றுப்பெருக்கி யுயர்மதிமந் தரமாகக்
குளந்தருகட் புனிதர்திரி கூடமான் மியவமிர்தம். (௬)

முனிசூதன் கடைந்தெடுத்து முதுநாவாந் தருவிகொடு
நனிமேவு மாதவத்து நைமிசா ரணியத்தோ
ரினிதாகச் செவிவாயா லிசைத்தருந்தப் பரிமாறிப்
புனிதமாக் கதிகிடைக்கும் புண்ணியமாக் கதையிதனை. (௭)

## நூல் செய்தற்குக் காரணம்.

வடமொழியைத் தென்மொழியா வகுத்துநீ யுணர்த்துகெனத்
திடமொழியா லத்தலத்துச் சிவமறையோர் பணித்தருள
வுடனுரைவை திகவுறையோ ருறுபொருளை விரித்துணர்த்தக்
குடமுனிபோற் றியபெருமான் றிருவருளாற் குறிக்கொண்டு. (௮)

## நூல் செய்த விதம்.

சித்ரநதி நாடுநகர் புராண மூலஞ் சிகரிதல மருவிமது சங்கை
மூர்த்தி, சத்திகுறும் பலவுமந்தா நிலத்தின் பான்மை தக்கன்மக மக
மழிதல், வானோர் பாவம், புக்கேதளிர் பலத்திர்தல் சம்பு வேடன் புரி



யும்வலங் கடகளிறு புரியும் பூசை, வைத்தபெருஞ் சங்கரசங் கிதை
சேர் தான வைபவகாண் டஞ்சருக்கம் பதினெட் டாக. (௯)

தேவிதிரு வவதாரம் பரமன் வேட்டல் செங்கண்மால் சிவனு
தல் பூசைப் பான்மை, பாவிவன் சரன்பேறு வானோர் கும்பன் பணி
விடைவா சுகிதவஞ்சிற் பரம னுட, ருவில்பொருட் கண்டகசே
தனகவுற்சன் சமையமிகழ் புட்பகந்தன் றரும சாமி,மேவுகதி நா
ற்பயனற் சனற்கு மாரம் விளங்குசிவ ரகசியத்தின் விரிவீ ரேழா.(௰)

ஒருமைபெறு சிவநெறியே வடிவ மாக வுமையகாண் டமுங்க
ருணைப் பார்வை யாக, வருமைதெரி தருசருக்க முறைமையெல்லா
மவயவங்க ளாகமதி யணிந்த பெம்மான், கருதுகிர்த் தனங்களணி
கலன்க ளாகக் கற்பவர்கேட் பவர்க்கிருமைக் கதியும் வீடுந், திருவரு
ள்செய் குற்றாலச் சிவபு ராணச் செல்விகல்வி யுருமகிமை தெரிக்கின்
றேன்ல். (௧௧)

## அவையடக்கம்.

தோட்டகத் தளிகள் பாயுந் துணர்த்தபூங் கடுக்கை வேய்ந்தா
ரேட்டகத் தெழுதா வேத மேத்தரும் வரம்பில் சீர்த்தி
காட்டகத் தறிஞர் முன்னர் நானெடுத் தியம்பும் பான்மை
கோட்டகக் கமல நாப்பண் கொட்டிபூத் தலர்வ தாமால். (௧௨)

புகழ்தரு மறைக்கு மேலோன் புடார்ச்சுன புரத்தின் சீர்மை
நிகழ்தர நிகழ்த்த வல்லே னீகொலென் றெனது நெஞ்சே
யிகழ்தர வெழுந்த நாணு மிச்சையுந் தினம்போ ராடி
யகழ்தர நாணைத் தோற்ற தாசையே வென்ற தம்மா. (௧௩)

தேக்கிய கடுவை மூக்கட் டேவனுக் கமுத மாக்கும்
பாக்கியச் செல்வி ஞானப் பாவைசெண் பகப்பூங் கோதை
யாக்கிய கருணை போற்றி யமலனைப் பரவ லாலென்
வாக்கினில் வழுச்சொ லெல்லா மங்கலச் சொற்க ளாமால். (௧௪)

செறிந்திலன் சிந்தை யேனுந் தெளிந்திலன் கல்வி கேள்வி
யறிந்திலன் புகலா நின்றே னுதியார் திரிகூ டத்து
மறிந்தவான் கங்கை திங்கள் வனைந்தபூ முடிமேல் வேழ
மெறிந்தநீர் தளிருங் கொண்டா ரென்பது தெளிந்து மாதோ. (௧௫)

கவையடி விலங்கின் வல்லூன் கண்ணப்பன் கனிவா யேறி
பவித்திரி னமிழ்தின் மிக்கா வமலனுக் காரூற் போலக்
குவிதரு நெறியோன் றில்லேன் குழைமொழி நிறைமேசான் மேலோர்
செவிபுகிற் றிரிகூ டத்துச் செல்வனுக் கினிய தாமால். (கசு)

வேலையில் வீழ்த்த கல்லு மென்குடம் புகுத்த வென்புஞ்
சாலையிற் கொளுவுந் தீயுந் தரங்கநீர் வைகை யாறுஞ்
சோலைபான் பனையும் வேதக் கதவமுந் தொழும்பு கொண்ட
வாலையாந் தமிழ்ப்பூஞ் செல்வி வளர்தமிழ்ப் பாண்டி நாட்டுள். (கஎ)

வேரிபஞ் சுரும்பூ டாடா வெயில்புகாக் காவிற் கோடி
சூரியர் திரண்டா லென்னச் சுடர்கள்விட் டெறிப்ப மன்றி
லாரிய னூடு சேர்த்தென் னாரிய நாடு சொல்வாம்
வாரிநீ ரருவித் தெய்வ வரநதி முதலா மன்றே. (கஅ)

ஆகத் திருவிருத்தம்-௩க.

## முதலாவது:—திருநதிச் சருக்கம்.

தேர்கொண்ட வசந்த வீதிச் சிவபிரான் றிருவெண் ணீற்றி
னேர்கொண்ட வடியார் சங்க மெனப்பரந் தேகி வேலை
நீர்கொண்டு தன்பால் வெண்பா னிறங்கொண்டு தரங்க மேகக்
கார்கொண்ட கடலின் மேனி கைக்கொண்டு மீண்ட மேகம். (க)

பைந்தரக் குரிவை பூண்ட பரமர்சித் திரப்பூ மன்றி
னந்தரப் பேரி போல வதிர்தர முழங்கி நீண்ட
சுந்தரச் சடைபோன் மின்னிச் சுகந்தர வரைமே லங்கை
மந்திரத் தபயங் காட்டி வரதம்போற் பொழிந்த மாரி. (உ)

கிரிமிசை மழைநீர்த் தாரை கிரீசனெம் பெருமான் றன்னை
யரியவா னவர்க ளாட்டு மமுததா ரைகளா மன்றிச்
சொரிமதத் தும்பி யாட்டுந் துதிக்கைநீர்த் தாரை போலுஞ்
சரிதரு மின்னுத் தோற்றந் தளிரருச் சனைபோ லாமால். (ங)

துளிதரு துளியா வானந் தூவுநீர் திரிகூ டத்துத்
தெளிபுனற் றிரள்கா லாறுய்த் திசைதொறும் பரந்த தம்மா
வொளிர்விடைப் பெருமா னெம்மை யுடையவ னடியார்க் கீயுங்
குளிர்பொரு ளொன்று நூறு கோடியா யனந்த மாம்போல். (ச)



முத்திரச் சிகரம் வானை முயங்கிநூண் டுளிச்சூற் கொண்டு
வைத்திரள் கொடிக ளென்னும் பசுநரம் போடி நீடி
யத்திர ளகடு விம்மி யாகமும் விளர்த்து வால
சித்திர கங்கை யென்னுஞ் செல்வியைப் பயந்த தன்றே. (ரு)

வேறு.

கோட்டனத்தும் பலகோடி நதிவருதல் பதினொருமுக் கோடி தேவர்
நேடரிய திரிகூடப் பரன்பணிக்கு வானிழிந்து சேறல் காட்டு
நீடருவி திசைதோறுங் குதிபாய்த லெண்டிசைக்கு நிருப ராவா
ராடல்பெறு சேனையொடு மண்ணலார் விழாக்காண வண்ணலுமோல் (சு)

மொய்யலைத்தெண் டிரைக்கடன்மேல் வானீட்டி முதுதரை மேற் படிவங் காட்டிச், சையமுடி தொடுத்தனந்த மணிமுடிகள் கவித்ததலை யருவி மேனுள், வையகந்தாங் கியசேடன் வானகந்தாங் குறநிமிர்ந்த வகையா மன்றி, வெய்யமருத் துடனிகலி மேருவின் மேன் முடிகவித்த விசைய மாமால். (எ)

போராளி வனத்தெறுழி புன்லாமை வாமனஞ்சேற் பொலிவு காட்டி, யாராம மபிராம மிசைந்துசங்கி ராமம்விளைந் தாயர் பாடிப் பேராவி னினந்தொடர்ந்து வாங்குநிரை யெனத்தாவும் பெருமை யாலே, சீர்ர்பத்தவ தாரச்செங்கணெடு மால்போலுந்தெய்வவாரி.()

பொருந்துபெரும் புண்டரிகப் பொகுட்டினிட மருவியரும் புவன மீன்று, பருந்திகிரித் தண்டுகமண் டலமுகந்து மூலமறை பலவு மோதி, யரும்பெறலுந் தியந்நடத்து வந்துதிசை முகமாகி யன்ன மூர்ந்து, விரும்புப்பா ரதிமேவிப் பூவிலயன் போலாகும் விமல தீர்த்தம்.

மாமலையின் மிசைப்பிறந்து திரிகூடச் சிவபெருமான் வலப்பான் மன்னித், தேமருவு மஞ்சனக்கண் களிகூரத் திருமேனி திளைத்து மேவித், தாமமிடு மணக்கோல முகந்தருளி யறம்வளர்க்குந் தகைமை யாலே, பூமலர்சென் பகவனத்து நடையாளு முமையாளைப் பொருவும் வாரி. (கo)

பொங்குமா கடலிடதீறுத் தெள்ளமுதிற் பிறந்துசெழும் பூமேலாகிச், சங்கமா நிதியினொடு மணியினொடுந் தருவினொடுந் தகவாய்த்

தோன்றி, யெங்குமே யடுத்தவர்க்கு வாழ்வருளி யாக்கமதா மியற்கையாலே, செங்கண்மா லுரத்துறையுந் திருமானி னுருமானுந் தெய்வ வாரி. (௧௧)

வெண்கமல மேவியுயர் வெண்படிக மணிந்துவெள்ளை மேனி வாய்ந்து, தண்குமுத வாய்ச்சிவப்புந் தடங்குவளைக் கண்கறுப்புந் தழைப்பத் தோன்றி, வண்கலைபோ தகம்பயின்று மாறுத சொல்வளர்த்து மலரோ டேந்திப், பண்குலவத் தாலமிசை நடித்துநா மகள் பொருவும் பரம தீர்த்தம். (௧௨)

வேறு.

ஆணிப்பொன் வயிர முத்த மைவனந் தோரை யேனன்
மாணிக்க நதுந்தே றலி வரைத்திர ளியங்க ளெல்லாம்
பாணிக்கே திரளா வேந்திப் பணிதலாற் குமர வேட்குக்
காணிக்கை குறிஞ்சி மாக்க ளெடுத்தது கடுக்கும் வாரி. (௧௩)

குயிற்றிய குரவஞ் சாத்திக் குமரிதாள் பணிந்து வேடர்
பயிற்றிய கணைவாள் கொண்டு பறிபொருட் சூறை யாடி
யெயிற்றியர் குறும்பு சாய வெழுந்தது செழுந்தண் கங்கை
தயித்தியர் குறும்பு சாய்க்குஞ் சதமகன் சேனை மான. (௧௪)

கொன்றைபங் குழல்வாய்க் கொண்டு கோவினந் தொடர வேகிக்
கன்றினல் விளவெ றிந்து பாலைமுன் கவர்ந்த வாற்றான்
முன்றில்வாய்க் குரவை யாடி முல்லைமா தரைம யக்கி
மன்றன்மா மருதத் தூடு மாலெனத் தவழ்ந்த தாறு. (௧௫)

மையுலாங் குவளைக் காடா யிடையிடை வனசம் பூத்து
மெய்யெலாம் விழியா நோக்கி வெள்ளைவா ரணந டாத்திச்
செய்யவா யரம்பை மேவிச் செழுந்தரு நீழன் மன்னிச்
சையமார் சிறைக ளீர்ந்த சதமக னிகர்க்கும் வாரி. (௧௬)

பரத்திய ருணக்கு மீனு மளத்தியர் படுத்த வுப்புந்
திரைக்கடல் கொழித்த முத்தும் பவளமுந் திரள்சேர் சங்கு
நரைத்திரைக் கரத்தால் வாரி நானிலப் பொருளு மீந்து
நுரைக்கடற் பொருள்கொள் வார்போ னுழைந்தது நுளையர் சேரி.



கொல்லையங் குறிஞ்சித் தேனுங் குடத்தியர் மிடவுப் பாலு
முல்லையார் தயிரு நெய்யு முதுபணைக் கரும்பின் சாறுந்
தொல்லுவர்க் கேணி நீருந் தொடுத்தெழு நீத்த மெம்மா
னெல்லைமா மதுரை யீட்டு மெழுகடல் பொருவு மாதோ. (௧௮)

நால்வகை மலர்சே ரைம்பா லதியெனும் பருவக் கன்னி
கால்வழிக் கலிங்க மார்ப்பக் கனதனம் பணைப்பப் பாங்கின்
பால்வளைத் திரைக்கை வீசிப் பன்மலர்த் தொடைகள் சூடிச்
சேல்விழி களிப்ப வேலைச் செல்வனை மணந்த தன்றே. (௧௯)

தம்பமீ னுப்புத் துப்புச் சங்குதண் டரளந் தன்பாற்
பைம்பொரு ளனைத்துங் கொண்டார் பான்மைவா னெறி நோக்கி
யிம்பர்மேற் றாவி பைம்பா லிடத்தபல் பொருளுங் கொண்டு
கம்பமார் கடல்போந் தென்னப் போந்தது கடவு ணீத்தம். (௨௦)

கோவிய மிடங்க ராகக் குரைதிரைத் துரகந் தூண்டி
வாளைவா ளாக வீசிக் கமடமாம் பரிசை வாங்கிக்
காளமா நாரை யார்ப்பக் கணைவரை விடுத்த சேனை
நீள்மார் கடன்மேற் சென்று பொருவது நிகர்க்கு நீத்தம். (௨௧)

அரிசனந் தகர மாஞ்சி யகிற்றுணி கோட்டஞ் சாந்தந்
திரிபலை கரிக்கோ டார மயிற்பீலி தேவ தார
மரகதம் பவள நீலம் வயிரநித் திலங்கண் மற்று
நிரைநிரை கூல மேற்றி வணிகரை நிகர்க்கும் வாரி. (௨௨)

வேறு.

திங்கள் சூடிய தேவ னொருவனே
பொங்கு புல்சம யப்பொரு ளாதல்போ
லங்கங் கேபகுத் தாயிர மாமுகக்
கங்கை போன்றது சித்திர கங்கையே. (௨௩)

பள்ளத் தாழ்வொடு மேடுறப் பாய்புன
லள்ளற் பாழிருங்கு மார்த்தது வார்கடல்
வெள்ளத் தூசினன் மேகலை யார்ப்பதாம்
புள்ளி னார்ப்பவன் போர்வையி னார்ப்பரோ.

நீடு கோபுர நீண்மதிற் கோயில்பூங்
காடு சூருங் கயல்வெடி தாவுவ
நாடு பல்வளம் பார்க்கு நதிமகள்
கோடி கோடி விழிபெறுங் கொள்கையாம். (௨௫)

கோலு மைந்திணை கூடி யொழுகியுங்
கால வர்சி கலக்க மருமையான்
மேலு மேலும் விளைபொருள் வாஞ்சைசேர்
சேலுண் கண்ணியர்க் குள்ளந் தெளியுமோ. (௨௬)

எங்கு மேவினு மீசனெம் மானரு
ளங்க மாமடி யாரிடத் தாதல்போற்
சங்க நீர்நதி யைந்திணை தாவினும்
பொங்கு சீர்மரு தம்பொலிந் தோங்குமே. (௨௭)

1.—திருநதிச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௨௭.

---

## இரண்டாவது:—திருநாட்டுச் சருக்கம்.

ஆறுதுறை தோறுநிரை யாயணை வகுப்பார்
சீறுகட லூடணைசெய் சீதர னிகர்ப்பார்
நேறுபுனல் வாவிகுளம் யாவையு நிறைப்பார்
வீறுகடல் வேறுசெய் வியன்சகர ரொப்பார். (௧)

கொம்புகிளை கோடுகுமு றக்குழுமி மள்ள
ரம்புநதி வாவிதட மாரகழி யாகத்
தம்படைசெ யுந்தொழில்கள் வென்றிநிலை சாரப்
பைம்பயி ரரண்புரி படைத்தலைவ ரொத்தார். (௨)

சைவவிசை யம்புரி சயம்புதிரி கூடத்
தெய்வநெறி யிந்திரன் முதற்பரவல் செய்து
கைவரு படைத்தொழி லுடன்களமர் சென்று
செய்வரு புனற்கழனி யேர்வளமை யொன்றே. (௩)



தேமடை மலர்க்கழனி தேன்வடிய மள்ளர்
மாமடை செறித்தவயல் வாய்மடை திறந்து
தாமடை வுளைக்குவை சரித்துமரை காவி
யாமடை மிதித்துழு படைக்கணி வகுப்பார். (௪)

உழ்வர்திர ளார்ப்பொலியு மோங்குபுன லார்ப்பு
முழவுகிணை யார்ப்பொலியு முத்தமிழ்செய் நாவோர்
விழவுமண மார்ப்பொலியு மேம்படலி னன்றோ
பழையகட லார்ப்பொலி பயப்படுவ தம்மா. (௫)

வேறு.

வேலையிற் செல்லும் போதும் வேலையுண் டெழீஇய போது
மாலையொப் புடைய சேவு மபிடமுந் திரளாய் வைகற்
காலையிற் பகலோ டெல்லி கலந்தெனத் தரைமான் பூண்ட
நீலநித் திலத்தின் கோவை நிரைவடம் புரையப் பூட்டி. (௬)

கார்நிறக் களம ரீட்டங் கவின்பெறு படைவாள் சேர்த்தி
யேர்பல நிரைத்து நாளிட் டிசைத்துழு சால்க டோறுங்
கூர்வலம் புரிசூன் முற்றிக் கொழிக்கின்ற தாள ராசி
பார்தனை யுழுத பண்டைப் பன்றியை நகைத்தன் மாலும். (௭)

பாலிகை பாத்தி யாக வுழுதெருப் பரப்பி யெங்குஞ்
சாலிவாழ் கெனவே மள்ளர் தண்முளை தெளிப்ப வாரி
போலெழு குரவை யீட்டம் புதுப்புனற் கொழுநன் வேட்ட
வேலிசூழ் பழனக் கன்னி விதிமணச் சடங்கு போலும். (௮)

முத்தென முளைத்துப் பொன்னின் முகிழ்தம் விளைத்துக் கால்கள்
வித்துரு மம்போ னீட்டி மரகதம் விரித்து நீல
மொய்த்தசீர் நாறு நாறு முறைகண்டு சேறு நாறச்
செய்த்தலை யுழுது சேர்ப்பத் தெளிசெய்து தெய்வம் போற்றி (௯)

அரித்தலும் பெயர்த்து வெவ்வே றமைத்தலு மமைத்த நாறு
பரித்தலுங் கழனி தோறும் பதித்தலும் புரியுமள்ளர்
பிரித்தலும் பிரிந்தார் தம்மைப் பேணலும் பேணிப் பின்னர்ப்
பொருத்தலுஞ் செயுமமைச்சர் போல்வர்மன் பொருவும் பண்ணை.

குவவுநீ றணிந்த தென்னன் கூனென நிமிர்ந்து மாணி
தவமென வளர்ந்து மூவர் தமிழெனத் தழைத்து வஞ்சர்
பவமெனக் கருவாய் நல்லோர் பலமென வீன்றி யாவுஞ்
சிவமெனத் தெளிந்தோர் முத்தித் திருவென விளைந்த செந்நெல். ()

நற்பொதி கருவாம் போது நாடகக் கணிகை மாரின்
முற்பட மறைந்து தோன்றி முகமெடுத் தாடிப் பின்னர்
விற்பொலி புருவங் கோட்டி விளைந்துநெட் டிலைமுக் காட்டின்
கற்புடை மடவார் நாணங் காட்டுவ கதிர்ச்செஞ் சாலி. (கஉ)

சீதர னயனு மானார் சிவதிரி கூடம் போற்றிக்
காதல்சேர் களமர் நன்னாட் கதிர்செய்து களித்துண் டாடல்
பூதர மெறிந்த செவ்வேள் புரந்தரன் மகளை வேட்கு
மாதர்மா மணத்துத் தெய்வ மகளிருண் டாட்டு மானும். (கங)

கூறுகள் பகுத்துச் சாலி கொய்யுநாட் செய்பிற் சேல்க
ளூறுநீர்க் கேணி தாவு முடனரிந் துணங்குங் காவி
பேறுகண் டுவப்பர் வாழ்வு பிரியுநாட் பிரிவர் சிறோர்
விறுநாட் கூடி வாழ்ந்து மெலியுநாண் மேலிவர் மேலோர். (கச)

வேறு.

வாள்வகுத்த படையிரும்பு வேர்சாயக் கிளைத்துழுது வளர்க்
குஞ் சாலி, யாள்வகுத்த கூனிரும்பு தாள்பணிதல் போலடியூ டரிந்த
வாற்றுற், கேள்படைத்த மனத்துயோர் பகைமைபா ராட்டுகினுங்
கேண்மை நீங்கார், தாள்பிடித்து முடிவணங்கித் தனதுபா ராட்டு
கினுந் தடிவார் தெவ்வர். (கரு)

வீறுகொண்ட கதிர்த்தொகைகள் வரைத்தொகைபோற் களத்
தினிடை வேய்ந்து மேதி, யேறுகொண்டு போர்சரித்துச் சிறைபோ
லும் வைகளையிந் திரன்போ லீர்ந்துங், கூறுகுன்ற மென்பொலிகள்
கயமுகனைத் தொழுதளந்து குவிக்குந் தோறு, மாறுகுன்று சிறை
யரிந்த மன்னனெதிர்ப் பாசறைபோல் வயங்கு மாதோ. (கசு)

முறைவகுத்த பொற்பொருப்போ பதுமரா கக்கிரியோ முத்
தார் வெற்போ, துறைகொழித்த செழும்பவளக் குன்றமோ நீலவ



ரைத் தொகையோ வென்ன, நிறைகளத்து நெற்பொலிகள் வகை
யுரைத்த லரிதுதொகை நிகழ்த்துங் காலே, புரையிடற்கு மாற்று
வாந் திகிரிவரை முதலாய வோங்கல் யாவும். (கஎ)

பேறுகண்டு களிகூரக் களமர்முத லோர்க்குதவிப் பெருமை
வேந்தற், காறிலொன் றுகடமைகொடுத் தைந்திலொன்று தேவரா
லயங்கட் கீந்து; கூறுகொண்டு நெல்லொருபாற் கொழித்தமணி முத்
தொருபாற் குவைகள் செய்வார், வீறுகொண்ட திருமகளு மருமகளு
மாசிருக்கும் விபுலம் போல. (கஅ)

திருவிருந்த வீடுகடை திறந்தெனக் கொட்டாரந் திறந்து
திங்க, ளொருவிருந்த சடைப்பெருமா னடியவர்நா வலர்மறையோர்க்
குதவி மேன்மேல், வருவிருந்து வழிபார்த்துச் செல்விருந்து முறை
யோம்பி வரையா தியார்க்குந், தருவிருந்த தெனவளித்துத் தங்கள்
கிளை தழைப்பவளந் தழைப்பர் யாரும். (ககூ)

வேறு.

சூல்குதிக்கும் வலம்புரிகள் முழங்குதொறுந் துறைதாவிக்
கால்குதிக்குங் கருமேதி மடைதிறக்குங் கடல்வாவிப்
பால்குதிக்குஞ் சிலைமதவேள் படங்குதிக்கும் படிகோடி
சேல்குதிக்குஞ் மலர்ச்சோலை தேன்குதிக்கு நான்குதிக்கும். (உ0)

வரம்புவயற் செந்நெலுக்கு வாழ்வேலி வான்கரும்பு
கரும்பினுக்கு நறுங்கதலி கதலிகட்குக் கமுகவன
மருங்கமுகுக் குயர்தாழை யணிவேலி யதன்புறத்துக்
குரம்பையுடை நீர்க்கரும்புங் கொங்குவளை செங்குவளை. (உக)

தாவிவனத் திடைப்பகற்பூந் தாதாடி வருவதனைக்
காவிமலர் கண்காட்டிக் கடிக்குமுதம் வாய்விள்ளப்
பூவனசங் கதவடைப்பப் பேட்டளிக்குப் புன்மாலை
வாவியிடைத் துனிதீர்ப்பான் வண்டிசைக்கு மெண்டிசைக்கும். ()

வானூறு தலைமடுக்கு மாளிகையுஞ் சூளிகையுங்
கானூறு குன்றம்போற் கார்மறுகுந் தேர்மறுகு
பானூறு கரும்பிசைக்கும் பணைநாறு கரும்பிசைக்குந்
தேனூறு கரும்பிசைக்குந் தேங்காவிப் பூங்காவி. (உங)

காமாரி திரிகூட வரைச்சாரற் கடுங்குளிரா
ஞமாரிங் கிருக்கவென நடுங்கோடுங் கொடுங்கோடை
தேமாரி புயல்பொழியுந் திக்கெட்டோறு மும்மாரி
பூமாரி தருமருவிப் பொன்மாரி தருமருவி. (௨௪)

முருந்துநகை யார்கூந்தன் முகிற்புகையு மகிற்புகையும்
விருந்துபுறந் தருவார்கள் விரும்புகையில் வரும்புகையுங்
கரும்புபா லடும்புகையுங் கடும்புரவி மகப்புகையும்
வரம்பிலாத் திசைதோறு மயிலாட மயிலாடும். (௨௫)

தேன்குளிக்குந் தேன்வாவி திரைகுளிக்குந் தூவியனங்
கான்குளிக்கும் பசுந்தென்றல் கரைகுளிக்கு மெறிதரங்க
மீன்குளிக்கும் புனல்யாறு மிசைகுளிக்குங் கருமேதி
வான்குளிக்கும் விரிபாளை மடல்குளிக்கும் வரிவாளை. (௨௬)

வண்டாடு மலர்க்கூந்தல் வாராடுங் களபமுலை
கண்டாடு மாதரிதழ்க் கனியாடு மதுரமொழி
விண்டாடுங் கிளிப்பிள்ளை வியந்தாடு மடப்பூவை
கொண்டாடுங் குயிற்பேடை கூத்தாடும் பசுந்தோகை. (௨௭)

வள்ளைப்பா டலின்மடவார் வளரிசையை மலர்க்குழன்மேற்
கள்ளைப்பா னஞ்செயல்போற் கற்குமளி யளியிசையைப்
பிள்ளைக்கோ கிலம்பயிலுங் குயிலிசையைப் பெருஞ்சோலைக்
கிள்ளைப்பே டைகள்பயின்று பூவையுடன் கிளக்குமால். (௨௮)

பண்ணுனு மொழியாரைப் பகர்நாணஞ் செயவேண்டிக்
கண்ணுன கொழுநர்புணர் கலவிமொழி குளறியதில்
விண்ணுண மஞ்ஞைபா தான் மிகநாணும் பசுங்கிள்ளை
பெண்ணார்தஞ் சின்னநடைக் கன்னநடை பேதுறுமால். (௨௯)

பிறங்காவித் திருமலரும் பிரிந்தார்வாய்த் திருமலரு
மிறங்காது பாசடையிட் டிருந்தாலும் பாலனங்க
ளறங்காவல் பூண்டிருப்பா ரகந்தோறு மகந்தோறு
முறங்காது மும்முரச மொருகாம னெழுமுரசின். (௩௦)



தேம்பழுக்கு முப்புடைக்காய் தேமாவின் மிசைத்தூங்கு
மாம்பழத்தின் குலைகனத்து வருக்கைநறுஞ் சுளைபிதிர்க்குங்
காம்பழுத்து முட்கனியாற் கமுகம்பாற் கழுத்தொசியும்
பூம்பழுக்காய்க் குலைசாய்ப்பத் தலைசாய்க்கும் பொற்கதலி. (௩௧)

அருந்தளவ மூரலிட வம்புயம்பா சடைவிரிப்பக்
கரும்புதீம் பால்வார்ப்பக் கதலிநறு நெய்வார்ப்பச்
சுரும்பினங்கள் விருந்தூட்டுஞ் சொலவரிதா மந்நாட்டில்
விருந்துபுறந் தருவாரே வியப்பாரைத் தருவாரே. (௩௨)

மெய்வளர்க்குந் திரிகூட மிசைவளர்க்கு மதுகங்கை
சைவமது கங்கைபல தடம்வளர்க்குந் தடவாவி
செய்வளர்க்குஞ் செய்கழனி பொழில்வளர்க்குந் தேம்பொழில்கண்
மைவளர்க்கு மைமேக மாரிதனை வளர்க்குமால். (௩௩)

கொல்லைவர் யேனலுக்குப் பொன்கொழிப்பர் குறயகளிர்
நெல்லிலா ரங்கொழிப்பர் நீலவிழிக் கடைசியர்கண்
மெல்லியூர் பாலளப்ப மீனளப்பர் நுளைமாதர்
முல்லைபார் மோரளப்ப முத்தளப்ப ரளத்தியரே. (௩௪)

பந்தரிடும் பொதுவியர்பூ முல்லைபசும் புனக்கொல்லைச்
சந்தனமேற் படருமது தாவிமலர் கொயுந்தோறு
நொந்தவிடைக் கொடிச்சியர்து மணியொடுவா னுழைந்தேறி
யந்தரமே லைந்தருவுக் காறுதரு வெனவளரும். (௩௫)

வேறு.

கோடைதோறு மாவிலொரு கோடிகுயில் கூவு
மேடைதோறும் வானமுகின் மேவமயி லாடு
மோடைதோறும் வால்வளை யுலாவிமணி யீனும்
வாடைதோறு மாடகொடி மாகநதி மானும். (௩௬)

கோபுர வுயர்ந்தநிலை கோபுர மிசைப்போய்
தூபுர மலம்பவிடை நோவவர மாதர்
மாபுர வலன்சபையில் வந்துநனி யாட
மீபுர மிசைந்தநட சாலையின் விளங்கும். (௩௭)

ஆறுபுனல் பாய்வனகண் ணுறுபணை தோறு
நாறுமலர் தேனொழுக நாறுநிறை சாலி
யூறுதட வாளைதெற வூறுபடு பாளை
சாறுகெழும் வீதிபல சாறுகெழு மாதோ. (௩௮)

வேறு.

முடிபுனைந்தசீர் மன்னவர் நெறியினுன் முன்னவர் தவத்தாற் பைந், தொடிமடந்தையர் கற்பினுன் மதிதொறுஞ் சொரிதரு மும்மாரி, வடிபெருந்துளி மாரியாற் பலபயிர் வளர்தரும் பயிர்தம்மாற் குடிவளந்தருங் குடியினுன் மன்னர்செங் கோன்முறை தழைத்தோங்கும். (௩௯)

முன்னி வானெலா மசுரர்கோ னழிக்குநா ண்முழுதினு மழியாத
கன்னி நாடுசெந் தமிழ்வள நாடெனக் கருதிவா னவர்கோமான்
சென்னி வான்றொடு முயர்திரி கூடத்துச் சேர்ந்தநாள் வளமேய
பொன்னி னுடுதென் னரிய நாடெனப் போந்தநா டிந்நாடு. (௪௦)

ஆட லாயிரம் விழியினு னருஞ்சிறை யரிந்திடப் புகுநாளி
லோட வேறிட மின்மையா லெம்பிரா னுறைதரு மிக்காட்டின்
மாட மாளிகை மண்டப முபரிகை மன்றநா டகசாலை
கூட கோபுர மெனக்குடி புகுந்தன குலவரைக் குலமெல்லாம். (௪௧)

செக்க லாரமே சிற்றிலாச் செழுஞ்சினைக் கமடங்க ளடுப்பாகக், கன்னன் மாமணி யரிசிதாய் வலம்புரிக் கடங்கள்பெய் துலையேற்றிச், சொன்ன மாமண லுமித்திரள் சொரிந்துசெந் துவர்கன லெனமூட்டி, யன்ன மார்வயற் பாவையர் பாவைகட் கருத்துவர் சிறுசோறு. (௪௨)

வேறு.

கொல்லையங் குறிஞ்சி யேனல் வரகின்மேற் குரல்க ணீட்டு
முல்லையின் முதிரை சாலி வேலிமேற் குலைதண் மொய்க்கு
மெல்லையங் கழனி வாழை பந்தரிட் டிலைக ளேந்தத்
தொல்லைநீர் நெய்தற்கைதை சோறுகள் சொரியு மாதோ. (௪௩)

குறிஞ்சியந் தினையுந் தேனு மெயினர்பாற் கூட்டி வேட்
ரெறிந்தவெஞ் சிலையைக் கோலா விடையர்கட் குதவி யாயர்



கறந்தபான் மள்ளர்க் கீந்து மள்ளர்கட் குடத்தி னூடு
மறிந்தவெந் குவளையை வாரி வலையர்கட் குதவும் வாரி. (௪௪)

ஆறெலாங் குதிக்கும் வாளை யலையெலாங் கொழிக்குஞ் செம்பொன்
சேறெலா முழக்கு மேதி செய்யெலா முகிழ்க்கு நீல
நாறெலாம் வளர்க்கும் பூந்தே னுடெலாம் வளர்க்குஞ் செங்கோல்
சாறெலாம் வளர்க்கும் வீதி தமிழெலாம் வளர்க்கு மன்றம். (௪௫)

மைந்தர்தம் புயமுந் தாரு மாதர்பூங் கொங்கை யார்க்குங்
கொந்தலாங் குழலு மின்னார் கோலமு மெழிலி லீட்டங்
கந்தமார் கழுநீர் வண்டுங் கமலமு மிரவி னுடும்
விந்தைசேர் முலையுங் கண்ணும் விரைதரு குழைக டாவும். (௪௬)

அன்னவா ரிசமும் யாறு மம்பொனு டரங்கங் காட்டும்
பொன்னனி மறுகும் வானர் புலமையுஞ் சங்கமேயு
மன்னுசீர் விழாவு மாதர் வதனமுந் திங்க ளார்க்கு
மின்னனார் தனமுஞ் சோலை வேலியு நாக நாளும். (௪௭)

காவிகள் கிளைக்கு மாலை கமழ்குழற் கிளைக்கு மாலை
யேவுநீர்ப் பழனத் தோட்ட மிடந்தொறும் பழனத் தோட்ட
மாவிவாய்க் கமட மேயு மறங்கள்வாய்க் கமட மேயுந்
தாவிய மடப்பா லன்னந் துறைதொறு மடப்பா லன்னம். (௪௮)

புயல்கள்கோ டரங்கு லாவும் பொழில்கள்கோ டரங்கு லாவுங்
கயல்கண்மா தரங்க மேவுங் கலங்கண்மா தரங்க மேவு
மியலிசை கொழிக்குஞ் சங்க மிணமணி கொழிக்குஞ் சங்கம்
வியலெலாம் பொருங்கா லாறு மவரெலாம் பொருங்கா லாறு. (௪௯)

அலைபடுங் கொடியும் யாறு மடுபடு முனையுந் தெவ்வு
முலைபடுங் கனியும் பொன்னு முடைபடுந் தழியுந் தாக
மலைபடு மலரு மஞ்சம் வலைபடுந் தனுவுஞ் செய்யுங்
கலைபடு மதியு மன்றுங் கரைபடுந் தடமுஞ் சாந்தும். (௫௦)

வேறு.

செய்காட்டுந் தாமரையாந் தேன்காட்டுங் கழுநீரா
மெய்காட்டு நறுந்தளவா முருகாட்டு மாந்தளிராக்

கைகாட்டி முகங்காட்டிக் கண்காட்டி நகைகாட்டி
மெய்காட்டித் திருமடந்தை விளையாடுந் திருநாடு. (௫௧)

பண்ணவருங் கடவுளரும் பரவுசரா சரமாகக்
கண்ணகன்சீர்த் திசைதோறுங் காதலா யுறைகுவரே
லண்ணலார் நன்னகர்த்தென் னாரியநாட் டணிபுகழ்நல்
விண்ணவர்க்கே யரிதாமேன் மேதினியோர்க் கெளிதாமே. (௫௨)

வேறு.

பூவினுக் கிறைவர் கஞ்சப் பூமகட் கிறைவர் தங்க
ளாவிகட் கிறைவர் வாழ்தென் னாரிய நாடு சொற்றும்
பாவினிற் பயனிற் சொல்லிற் பண்ணினிற் பயிலுந் தோறு
நாவினுக் கினிய தான நகரினைப் பகர்தல் செய்வாம். (௫௩)

2-திருநாட்டுச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-ககசு.

## மூன்றாவது:—திருநகரச்சருக்கம்.

அகில காரண னகிலமோ கமும்படைத் தளித்தரு ளிடமாகிச்
சகல காலமு மழிவிலாத் தலமெனுந் தகைமையாற் சதுர்வேதன்
பகலி ராத்தொறுந் தவிர்படு பலபருப் பதங்களுங் கடலியாவும்
புகலி டம்பெற வந்திடம் பிடித்ததாம் புரிசையு மகப்பாவும். (க)

பூமிக் கோரர சிருக்கைதென் புடார்ச்சுன புண்ணிய புரமாகு
நேமிக் குன்றமே நகர்ப்புறஞ் சூழ்தரு நெடுநிலைப் பெருஞாயில்
ஏமக் குன்றெலா மாடங்கள் வரைக்கொரு மருகனார் திருக்கோயி
லேமக் குன்றுசூழ் நாற்கிரி கோபுர மெண்குலக் கிரிமாதோ. (உ)

இஞ்சி சூழ்வது நாற்றிசைப் புறமெலா மிடந்தொறுந் துளிதூங்க
மஞ்சு சூழ்வது மணிமதிற் புறமெலா மங்கைய ரடிசேர்செம்
பஞ்சு சூழ்வது மைந்தர்பொன் முடியெலாம் பயிலுமங் கலநாத
மஞ்சு சூழ்வது மனையெலா மணிகொழித் தாறுசூழ் வதுமூதூர். (௩)

நாட்டம் போல்வது தரைமகட் கந்நகர் நாடொறு மளகேசன்
கோட்டம் போல்வது திரள்பெறு மிருநிதி திரிபுரை செழுங்காமக்



கோட்டம் போல்வது குளிரறச் சாலைநற் குறுமுனி பெரும்பான்மை
நீட்டம் போல்வது நிகழ்தரு பதிதொறு நிறைதரு பெருஞ்செல்வம். (௪)

நீல மாடமு நித்திலத் தெற்றியு நிரைத்தன தெருத்தோறுங்
கோல மோதிம மாகியோவ் வோருருக் கொண்டுபற் பலகால
மால முண்டவ னடிமுடி தேடுவா ரணிவிழாத் தொறுங்காண்பான்
றால மானபற் பலவுருக் கொடுநகர் சூழ்ந்துநிற் பதுமன்னும். (௫)

வேறு

முந்தை மாமறை யோர்முது வீதிவாய்
விந்தை நாரியர் மேடையின் மேற்கிளி
சிந்தை வேதச் சிறாரயர்ப் பாயினுஞ்
சந்தை சொல்லுந் தனித்தனி மாடங்கள். (௬)

நெரும்பு கைக்குல மேகத் துளியெலாங்
கரும்பு கைக்குங் கனிமொழி மாதரார்
குரும்பு கைக்கு மலர்க்குழல் சூட்டகில்
நெரும்பு கைக்குளிர் வாசனை வீசுமால். (எ)

வேறு.

விடமுந் தூயதேன் ளமுதமு மின்னனார் விழிகளி னிடைத் தோன்றுங், கடவு ளண்டமுங் கருணையு மனுநெறிக் காவல ரிடைத் தோன்றுஞ், சுடரிற் காய்வதுங் குளிர்துளி பொழிவதுஞ் சூரிய ரிடைத்தோன்று, மடைவு சேர்பெருந் தவத்தர்பாற் சாபமு மநுக் கிரகமுந்தோன்றும். (அ)

கறைகொள் கந்தரக் கடவுளைச் சேர்ந்தபின் கறைதவிர் மதி யோங்கிப், பிறைக ளாயிர கோடியாய்க் கிளைத்துமேற் பிறழ்வதோ பெருவானத், துறைகொள் கங்கையின் பெருக்கமோ புரந்தரன் சுட ர்ப்படை தனிலீந்த, சிறைகள் குன்றெலா முளைத்தவோ மாட மேற் செழுமணிக் கொடியீட்டம். (௯)

பின்னல் சேர்சடை வேணியார் முத்தலைப் பிறங்கலி லயனுக் முன்னை நாமிருந் துலகெலாம் படைத்தநாண் முகிலெலா மதியெல் லாம், பொன்னெ லாநவ மணிகளெலா மணங்கமழ் பூவெலா முயர்வா னின், மின்னெ லாங்கொடு சமைத்ததா மிந்நகர் மின்னனார் வடி வெல்லாம். (௰)

வேறு.

விளர்தரு மதியின் பாலோ வெள்ளிவள் ளத்தின் பாலோ
கிளர்வதென் றுணராப் பிள்ளைக் கிள்ளைகண் முகப்ப வேகித்
தளர்வது கனக மேடைத் தளந்தொறுந் தேய்ந்து திங்கள்
வளர்வது தவள மாடம் வடிம்புதோய் சுதையான் மன்றே. (கக)

பயிலுமே னிலைக டோறும் பந்தடித் தாடு வாரை
மயிலெனக் குயில்பின் காட்ட மழலைவா யிசையா லஞ்சிக்
குயிலென மயில்பின் காட்டக் குழைகளா லளகக் கொத்தால்
வெயிலொடு புயலுங் காட்டி மீட்டுமீட் டழையா நிற்பார். (கஉ)

பச்சையாற் பவளக் கொத்தாற் பதுமரா கத்தான் முத்தால்
வச்சிர வயிடூ யத்தான் மற்றுள மணிக ளாலு
மச்சினில் வார்த்தா லென்ன வணிகிளர் மாட வீதி
நச்சர வுச்சி யாட்கு நவமணி மாலை மாலும். (கங)

வேறு.

தெளிக்குமணி வளைபார்ப்பச் சிலம்பலம்ப வானுயர்ந்த
பளிக்குமணி மேடையின்மேற் பந்தாடல் பயில்வாரை
பளிக்குலஞ்சேர் பூந்தடத்தி லன்னமெனப் பொன்னாட்டுக்
களிக்கும்வர நதிக்கரையிற் கன்னியன்னஞ் சூழுமால். (கச)

வண்டாடுஞ் சோலைகளு மயிலாடுஞ் சாலைகளும்
விண்டாடு மேடைகளுங் கண்டுகண்டு மேதினிமான்
பண்டாடுங் கரங்களன்றிப் பயில்கோடி கரமெடுத்துக்
கொண்டாடு வதுபோலு மணிமாடக் கொடியெல்லாம். (கரு)

குவவுதம னியச்சிகரி கோலவட வரைகாட்ட
விவருமணி மேனிலைக ளெழுபுவன முறைகாட்ட
நவமணிக ளழுத்தியது நவக்கிரக நிலைகாட்ட
நவல்கணித நூலோர்க்கு நூன்மயக்கங் காட்டுமால். (கசு)

ஒண்மணிமண் டபந்தோறு முயர்கொடிகள் வானளவித்
திண்மையுற நின்றாடல் செங்கதிரோன் றேர்த்துகளும்
வெண்மதியிற் படர்மாசும் விண்மீது படராமே
மண்மகள்செங் கரந்தாகக் கொண்டுதுடைப் பதுமானும். (கஎ)



அரும்படிக நிலத்தாடு மணங்காரை யாடவர்கள்
விரும்படிக ளெனப்பரவ வியன்முடிமே லலத்தகங்கள்
வரும்படிகூன் டலிவிளைப்பார் வருகாலை மருமாலைச்
சுரும்படிக ளடிச்சுவடு தோன்றுமன் மறைத்திடுமால். (கஅ)

வேறு

பொதிர்படக் ககனந்தாவும் பொலன்மணி மாடக்கோடிக்
கதிர்கள்கண் வழுக்கித் திங்கள் கனககோ புரத்தின்மோதிப்
பிதிர்படு மதனு லன்றோ பிறையதாய்க் குறையா யெங்கும்
விதிர்படு நாளாய்க் கோளாய் மீன்களாய்ப் பரம்பும் வானம். (ககூ)

விண்டருங் கொடிஞ்சித் திண்டேர் விழாவரு வசந்த வீதி
யெண்டரும் புயத்தெம் மானை யென்றுமே நின்று போற்றுந்
தொண்டர்தங் குழாங்கள் போலுஞ் சுதைநெடு மாட மெல்லா
மண்டர்தங் குழாங்கள் போலு மம்பொனு டரங்க மெல்லாம் (உ0)

வேறு.

தாயின் மிக்கவன் றொடாழ முச்சகங்
கோயில் புக்கு வருபெருங் கொள்கையாற்
சேயின் மிக்குல குண்டுமிழ் சிதரன்
வாயின் மிக்கது கோபுர வாயிலே. (உக)

வேறு

வாடைவந் துலவிய படிக மாமணி
மேடையி லுடுக்குழாத் துலவும் வெண்பிறை
யோடைநீர்ப் பெருந்தட மதனி லோதிமப்
பேடைதன் பார்ப்பொடும் பெயர்தல் போலுமால். (உஉ)

ஏகமா மரகதத் தியற்று மாளிகை
மாகமார் குளிகை தொடுத்து மாடெலாம்
பாகமேற் பதிந்தொளிர் பதும ராகங்கள்
மேகமேற் பரந்தொளிர் மின்கண் மானுமே. (உங)

சேடக முயர்நிலை தீட்டுஞ் சித்திர
நாடகப் பத்திசேர் நடக்கை நாடொறும்

பாடகக் கால்களாற் பயின்ற தாலன்றே
வாடலி லுயர்ந்தன ரமரர் மாதரே. (உச)

பளிக்குமா ளிகையின்மேற் பவளத் தூவிகள்
குளிக்குநீர்க் குளங்கண்மேற் குமுதம் பூத்ததா
துளிக்கரு முகிலினஞ் சூழ்ந்து லாவரல்
களிப்புறு சிறையளிக் கணங்க ளேய்க்குமால். (உரு)

இந்திர நீலத்தி னியன்ற மாடமேற்
சந்திர காந்தத்திற் சமைத்த தூவிக
ளந்தர மதிக்குநீ ரளித்தல் வேனிலுங்
கந்தரம் பொழிதுளிக் காலங் காட்டுமே. (உசு)

வேறு.

சாந்தரைக்கு மடவார்கள் வீதிதொறுஞ் சவைதொறுஞ்சென்
மாந்தரைக்குங் குமச்சேறு மனுநாளும் வழுக்கிவிடுக்குந்
தேந்தரைக்கு ளுழவோர்க்குந் தெய்வநிலை போற்றுறுது
காந்தரைக்கும் பிடுவோர்க்குங் கைகூப்புங் கதிர்ச்சாலி. (உஎ)

வேறு.

காமர்பொன் மாளிகைக் கவினி ரண்டுபான்
மாமணி வயிரத்தான் முகப்பு வாய்ந்திட
லேமமால் வரையிரு பாலும் பௌவகாட்
சோமனு மிரவியுஞ் சுடர்தன் மானுமே. (உஅ)

திங்களை முகமெனச் செய்து நான்முகன்
பங்கய முகிழினைப் பதித்த தாலன்றே
நங்கையர் குவிமுலை நாளும் வெய்யவ
னங்கதிர் பரப்பினு மலர்ந்தி டாததே. (உகூ)

துன்னிய கொழுநர்பாற் சுரத நாரியர்
முன்னிய புலவியின் மொழியை மேடைமேற்
பன்னிய பசுங்கிளி பயிலும் பான்மைவான்
கன்னியைப் பயிற்றுவ காம நூலரோ. (௩0)



வேறு.

இருகாலை யட்டில்புக லருந்திப்புறச் சமைத்தல்கலை திருத்தி
யூட்டன், மறுகாலை யென்னுது விருந்தமைத்தன் மகப்பெறுதன்
மடநா ணச்சம், பெறுகாலை யின்புறுதன் முன்னுறங்கப் பின்னுறங்
கல் பின்னெழாத, லுறுகாலை தொழுதெழுதல் பன்னிரண்டு மங்கைய
ர்க்கற் புடையோர் செய்கை. (௩க)

ஓதுமறை யாற்பிரம முத்தழலாற் றெய்வமுனிவர் பலியாற் பூதம்
பேதமா னுடமதிதி பூசையாற் றருப்பணத்தாற் பிதிர்க்கள் யாக
மேதகுமை வகைவேள்வி யிவ்வகைசெய் தறுதொழிலுஞ் விதியா
லாற்றிப், போதநெறிக் கொருதுணையாய் மழைக்கொருவித் தாயு
றைவர் புரிநூற் செல்வர். (௩உ)

மூலமறை மனுவோதி முறைபெறுசை வாகமத்தான் முதல்வர்
பூசை, காலமுற நித்தியநை மித்தியகா மியங்களினுங் கருத்தி னு
ற்றி, பாலமுது ண்டபிரா னடியர்குழாத் திருந்தமுத மருந்தி நா
தன், சிலமல துணராதே யுணர்ந்திருப்பர் முப்பொழுதுஞ் சிவநூற்
செல்வர். (௩௩)

காலைதொறு முறையரோடு நூலாய்ந்து குடிமுதலாங் காப்புப்
போற்றி, மேலைநூற் பாவலர்க்கும் வேதியர்க்கு மீந்துபல வேள்வி
வேட்டுச், சாலைதனிற் சிவபெருமா னமர்களொடுந் தமர்களொடுந்
தகவா யுண்டு, மாலைதொறு மொற்றுய்த்து அபிலிடத்தும் பார்காப்
பர் மனுநூற் செல்வர். (௩ச)

புங்கமா மறையோதி வாணிகத்தொ டுறுதொழிலாற் பொரு
ள்க ளாக்கிப், பிங்கலத்துங் கருகலம் போலிருப்ப ரொருகலம் பிரி
யாச் செல்வர், கங்கைமர பினிலுதித்துங் கலையின்று பொருள்வள
ர்த்துக் கவிக ளாய, வெங்கலைகட் பொருகும வேளாண்மை புரிந்திரு
ப்பர் மேழிச்செல்வர். (௩ரு)

வேறு.

மருவுறுகன் னெறிநிலத்து வாய்மைபெறும் விதைவிதைத்துப்
பெருகுகுணை நீர்பாய்த்துப் பிறங்குறினைக் களைகடிந்து
தருமமெனும் பயிர்வளர்த்துச் சகலபோ கமும்விளைக்கும்
பொருவருஞ்சீர்த் திருநகரம் புடைச்சனபுரம் வியப்பரமே. (௩சு)

மாமணிமண் டபமாட மாளிகைக ளுறுப்பாகக்
கோமதிய முகமாகக் கொங்கைகோ புரமாகக்
காமருதே ரல்குலாக் கடிமதின்மே கலையாகப்
பூமகளா ராசிருக்கும் பொன்னகர மிந்நகரம். (௩௭)

இல்லறமுந் துறவறமு மிடைவிடார் வெறுக்கைவிடார்
பல்லுயிர்க்கும் யோகியர்க்கும் பதந்தொறுங்கொண் மூப்பொழியு
நல்லவரும் விளையாட்டு நயந்தவருஞ் சூதெறிவா
றல்லவரு மெல்லவரு மாதரிப்பா ரிரவலரை. (௩௮)

வேறு.

பன்னகர் பதியா மென்கோ பாதலத் தரசின் வாழ்வாற்
பொன்னக ரென்கோ புத்தேட் பொலிவினுன் முனிவர் சித்தர்
கின்னரர் பதியா மென்கோ வாங்கவர் கிளைக்கு மாத்தா
லிந்நகர்க் கிணையா வோரு நிசைக்கலாந் தகைமைத் தாமோ. (௩௯)

பன்னக சயன னாட்டிற் பங்கய னுலகிற் றேவர்
மன்னகர் சுவர்க்கந் தன்னில் வளமிகு நகரை யாரு
நன்னக ரெனவே யிந்த நகர்ப்பெய் ரிடுவா ராரு
லிந்நகர்ப் பெருஞ்சீர் கூற வெம்மனோர்க் கெளிய தாமே. (௪௰)

இந்தமா நகரை யாளு மிறையவ னிமய மீன்ற
செந்துவர்க் கனிவாய்ச் செல்வி செண்பக வல்லி பாக
னந்தமோ டாதி யில்லா னாயினு மெவர்க்குந் தாயாய்த்
தந்தையாய்த் தலைவ னானான் சரிதையைப் பரவல் செய்வாம். (௪௧)

3-திருநகரச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம், ௧௧௦.

---

## நான்காவது:—புராண வரலாற்றுச் சருக்கம்.

விரைசெய் தாமரை வியன்கலை மாதுடன் மேவி
முருகு யிர்த்துநால் வாயுற வாரண முழங்கி
பரச னைந்தபூந் தண்டுக மண்டல மரைத்தூட்
புரையி லாவனந் திசைமுகக் கடவுளைப் பொருவும். (௧)



துளவ னிந்துவே யிசைதந்து சுரப்புடைப் பாலுங்
களவு செய்துகாற் றளையுண்டு காவிளங் கன்றால்
விளவெ றிந்துநின் குருந்தமே லிவர்ந்துவின் னெடியோ
ரளவு செய்திலா வாழியால் பொருவுமவ் வனமே. (௨)

வேள்வி பற்பல புரிந்துவான் றருநிழன் மேவித்
தாழ்வி லாமுகி லூர்ந்துநீள் வச்சிரந் தரித்து
வாழ்வு சேரா மகளிரா டலினக மலர்ந்து
சூழ்கு லாவனம் பொன்னகர்க் கிறையெனத் தோன்றும். (௩)

துன்னு தாதணிந் தெழிலினீர் மஞ்சனஞ் சொரிந்து
வன்னி பாதிரி மாதவி கூவிளம் வகுளம்
பன்னு சூதமேற் றளிர்மல ரருச்சனை பயின்று
கன்னி நீள்வனஞ் சிவபிரா னடியவர் கடுக்கும். (௪)

முறைப முத்தமெய்ம் மனத்துடை முனிவரர் வேண்ட
மறைப முத்தவாய்த் திசைமுகன் குசையினால் வகுத்த
நிறைப முத்ததோர் நேமியி னகத்ததாய் நிரம்பி
நறைப முத்தது கங்கைசேர் நைமிசா ரணியம். (௫)

வாவி தாமரை வாண்முக மலர்ந்துநன் மருங்கிற்
காவி சாத்தியுற் பலமெனுங் கண்மலர் முகிழ்த்து
மேவி மாதவர் நிகர்ப்பது மின்னனார் குழல்போ
னாவி மாமணங் கமழ்வது நைமிசா ரணியம். (௬)

தேனுந் தும்பியு மெடுத்தபண் ணிசைசெவி மடுத்து
மானும் வேங்கையு மொருதலைத் துயில்வது மயில்கள்
கான நாடகம் பயிறரக் கானமா மறைகள்
ஞான யோகிகள் பயில்வது நைமிசா ரணியம். (௭)

ஆல முண்டவர்க் கன்பரா யறிஞரா யழியாக்
கால மூன்றையு முணர்ந்தவ ரிருப்பது கருதுஞ்
சீல மூன்றின்மேற் றெளிந்துமெய்த் தவங்கள்செய் வார்க்கு
ஞால மூன்றின்மேற் கதிதரு நைமிசா ரணியம். (௮)

வேறு.

அவ்வனஞ் செய்ப தாக வருந்தவ ருழவர் யாரு
மெய்வரும் விதியோர் கூட்டிச் சமிதைவித் தெறிந்து வேழங்
கைவரு பருமை நெய்யாம் புனல்சொரிந் தநேக காலஞ்
சைவவை திகவே ளாண்மைச் சத்திர மகங்கள் செய்தார். (௯)

பண்ணிய தங்க டானம் பரிவிறைற் புரிவார்க் கன்றிக்
கண்ணிறைக் கண்டி னார்க்குங் கதியெனும் விதியை யோர்ந்து
நண்ணிய கலைகள் யாவு நவின்றருள் சூத னென்போர்
புண்ணிய வேள்விச் சாலை புகுந்தனன் முனிவர் சூழ. (௧௦)

பொருந்தவர் சூதர் சூழப் புலன்மகத் தேர்ந்த டாவி
யிருந்தவச் சூதர் போலு மிருடியர் வருடி யேத்தி
வருந்தவச் சூதன் றன்னை மாதவ வியாத னென்னும்
பெருந்தவச் சூதஞ் சேர்ந்த பேரிசைக் குயிலைச் சூழ்ந்தார். (௧௧)

ஆசனத் திருத்தி வாழ்த்தி யருக்கிய முதல நல்கிப்
பூசனை புரிந்து யாங்கள் புரிமகந் தொடுத்த காலை
வாசனை முகூர்த்த மன்றோ வந்தனை பெரியோ யென்று
நேசனை வினவிக் கேட்பார் நிறைதரு புராண மெல்லாம். (௧௨)

பண்ணியல் பலபு ராணம் பகர்ந்தபின் பதிநா லென்ன
வெண்ணியல் சிவபு ராண மீரைந்தி னிலக்க மாக
நண்ணிய காந்தர் தன்னி னன்னகர்த் திருக்குற் றாலப்
புண்ணிய புராண மெங்கள் புந்தியி னுவட்டா தென்றும். (௧௩)

அன்னதைச் சுருக்க மாக வறைந்தனை யதுகேட் டிப்பான்
முன்னுமந் திரத்தை யோதி மூலம்வித் தறியார் போலப்
பன்னரும் பலநூல் கேட்டுத் தவிர்ந்திலம் பதிமேற் றூரு
கன்னகர்ப் புராண மின்னு நன்கெமக் கருள்வா யென்றார். (௧௪)

மோனநீ துறைப்படச் சூதன் மொழிகுவான் முக்க ணார்க்குத்
தானமே யனந்த மாகு மவைகளிற் றவப்பூ வின்பத்
தேனமர் திருக்குற் றாலஞ் சிவநக ரியமா மீது
ஞானபக் குவத்தார்க் கன்றி யாவர்க்கு நவிலொ ணாதால். (௧௫)



தன்மகன் மு[illegible]லோ ராறு தகையர்நாற் குரிய ரேனு
முன்னவர் க[illegible]ய ராதி மூவைந்து திறத்தார்க் கோதார்
சொன்னநா [illegible]ருவ ருள்ளுந் தூயவர் நால்வர் நம்பி
லன்னமே யன்னை ராணீர் பால்பிரித் தறிந்த வாற்றால். (௧௬)

அதிகாரந் தேவ ராது மறிவதற் கரிதா மென்மை
மதிவலி நலத்தி னாலே வினவுதல் வல்ல ரானீர்
பதிமுத லு[illegible]த்த மூன்றிற் பரமெனும் பொருளைச் சேரும்
விதிவலி [illegible]டையீர் நீரே யென்றுமேல் வியந்து சொல்வான். (௧௭)

வேறு.

சீர்பெருகு காந்தமெனுஞ் சிவபுரா ணச்செழுஞ்சங் கிதைக
வாறிற், கார்பெருகு குழலுமையாட் கெம்பிரா னுரைத்தருள்சங்
கரசங் கிதை, யேர்பெருகுந் திருமடிமே லிருந்தருளிக் குமரனே சக
னெங் கோமா, னேர்பெருக வுணர்த்துகும்ப சம்பவனுக் குபதேசித்
திகழ்த்தி னானல். (௧௮)

மாதவரி லுயர்மலய மாமுனிவ னதையுணர்ந்து வகைமை சா
லப், பூதலத்தி லுணர்த்தியதா லகத்தியசங் கிதையெனவும் புகல்
வர் மேலோ, ரீதலது சனற்குமார சங்கிதையுந் தருபொருளா மெழிற்
செவ் வான, மீதிலெழு மதியோனுங் குற்றால மகிமையெனா வியந்து
போற்றி. (௧௯)

திரிகூடக் கம்பகும்பக் கவிகுபிவி திடவுரித்து விரித்து வேங்
கை, புரிகூட வுடுத்தருளி நடித்தருளுஞ் சிவபெருமா னுலக மீன்
றாள், புரிகூடுந் திருமணத்தின் பொருட்டாகக் குறுமுனிக்குப் புகன்
ற காதை, திரிகூடத் தலமகிமை திரிகூட வரைமுதலாச் செப்பு
கின்றான். (௨௰)

௪-புராண வரலாற்றுச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—௧௮௰.

ஐந்தாவது:—திரிகூடமலைச் சருக்க

சீத யாழிசைக் கின்னரர் கானமுங்
காதல் விஞ்சையர் பண்ணிசை கானமுஞ்
சீத மால்வரைத் திங்குரற் கானமும்
வேத கானமு மிக்கது திக்கெலாம். (௧)

முழைக டோறு முனிவர் குழாங்களே
யுழைக டோறு முயர்மகிச் சாலியே
கழைக ளேவுங் கதிர்மணி முத்தமே
மழைக ளேவு மனுவியை மானுமே. (௨)

பந்தி பாய்முகில் பாய்மத மாவெனத்
தந்தி பாயுமத் தந்தியை வெற்பென
மந்தி பாயுமம் மந்திகள் பாய்தல்போ
லுந்தி பாயு முயர்வரைச் சார்பெலாம். (௩)

கான யாறுங் கடிமலர்ச் சோலைவாய்த்
தேன யாறுந் திசைபொரு கைமலைத்
தான யாறுந் ததைவன சோனையும்
வான யாறும் யமுனையு மானுமே. (௪)

செருவி லார்த்தெழு தேன்பொரத் தேனிரு
லருவி யார்த்திட வார்த்திடு மைவன
மிருவி யார்க்கும் புனத்தினு மெண்ணிலாக்
குருவி யார்ப்பக் குரல்பரந் தார்க்குமே. (௫)

குமுத மொத்த விதழ்க்குறக் கோதைமார்
கமுகி னெற்றிக் கறிபடர் முன்றில்வாய்
விமுதி னைக்கு விலையென நேர்க்குநே
ரமுதி னைச்சுர மாத ரளப்பரால். (௬)

வேறு.

சீர்மலி படிகப் பாறை பத்தியாச் செல்வான் மீனை
நீர்தரு கயல்போற் கொத்து நிறைதரு மடப்புள் ளீட்ட



சூர்மணிச் ச[illegible]டைகைப் பாந்த ளுற்கைபென் றாதி யூதிக்
கார்மலி குள[illegible]க்குத் தீப்போற் காய்வன கிழக்கூன் மந்தி. (௭)

நகிலெழும் [illegible]கைபோர்க் கென்ன நனிகெழு பொருப்பின் மாத
ரகிலெழும் [illegible]கையும் வேட ரடுபுனத் தகருச் சாந்த
மகிலெழும் [illegible]கையும் வேத வேள்வியின் புகையும் விண்மேன்
முகிலெழும் [illegible]கைபோன் மொய்ப்ப முகிழ்ப்பர்வா னவ்வரு நாட்டம். (௮)

ஆழப்[illegible]ளி யார்ப்பு மந்தண ரைந்து நாறு
வேள்விழி னார்ப்பு மேலை விண்ணவ ரார்ப்பு மாதர்
வாழ்புனக் கவண்கல் லார்ப்பு மணிவரை யார்ப்பு மாங்கே
யூழ்வலி கடக்கின் றூர்போ லுருமொலி கடக்கு மாதோ. (௯)

மழைதரு முத்தும் வான மதிதரு முத்து நீண்ட
புழைதரு பணைக்கை நீலப் பொருப்பின்மா மருப்பின் முத்துங்
கழைதரு முத்து மேனக் களிறுகோ டுகுத்த முத்தும்
விழைதர வொளிருஞ் சாரன் மீனொளிர் வான மே[illegible]ம். (௰)

வேறு.

சோலை காட்டுந் துளையிரு ளாவிரு
ளேலை காட்ட விலாமையின் மெய்த்தவர்
காலை காட்டுவ வாவிக் கமலங்கள்
மாலை காட்டு மலர்தரு காவியே. (௧௧)

மாக மேனகை மங்கை யுருப்பசி
மோக நாடகும் பார்ப்பதின் மொய்த்தெழார்
தோகை மாமயி லாடலைச் சோலைவாய்
மேக மேனின்று பார்ப்பர்வின் னோரெலாம். (௧௨)

மலைக டாவு மருவிகள் வானதித்
தலைக டாவுந் தலைமதி மானின்மேற்
கலைக டாவுங் ககனத்து மேடைமே
னிலைக டாவு நிரைவரை யாடரோ. (௧௩)

கோல மாங்குயில் காவினிற் கூவுத
லால முண்டவ னிக்குள னுதலாற்

மூலம் வானக் தடவப் பெருகிரெனெ
மால யன்றனைக் கூவுதன் மானுமே. (கச)

அருவி யாடிக் கரையுகு வார்கண்டர்
தருவி மானமொப் பாமலர்ச் சண்பக
மருவி மாருதத் தாவுகு மாமலர்
பொருவில் வானவர் பூமழை போலுமால். (கரு)

சால மாதரு வம்பணை சாதியே
சால மாதரு வம்பணை சாதியே
மேல மார மிலவங்க நாறுமே
மேல மார மிலவங்க நாறுமே. (கசா)

கானத் தும்பி கடாங்கவிப் பாலெழு
கானத் தும்பி கடாக்கவிப் பாலெழுந்
தானத் தும்பர் களிற்றெருடுந் தாக்குகைத்
தானத் தும்பர் களிற்றெருடுந் தாக்குமே. (கஎ)

சனமு ழுக்குவ கான மடங்கலும்
சனமு ழுக்குவ கான மடங்கலும்
வனமெ டுத்துறை மாகய மொன்றுமே
வனமெ டுத்துறை மாகய மொன்றுமே. (கஅ)

வண்டி னங்கண் மலர்வன ரம்மதில்
வண்டி னங்கண் மலர்வன மாதரார்
கண்டி னக்கு முகத்தலங் காட்டுமே
கண்டி னக்கு முகத்தலங் காட்டுமே. (ககூ)

மாவி ருப்பை மகிழ்தரு வன்னியே
மாவி ருப்பை மகிழ்தரு வன்னியே
நாவி னித்த நவிற்றுவ வாசகம்
நாவி னித்த நவிற்றுவ வாசகம். (உ0)

கோட ரங்குயி லுடுங் குலமரக்
கோட ரங்குயி லுடுங் குலமயி
லாட ரங்க மறையு மருவியே
யாட ரங்க மறையு மருவியே. (உக)



வானர ம்மையின் மாவிற் பலவின்மேல்
வானர ம்மையின் மாவிற் பலவின்மேல்
வானர ம்மையின் மாமயில் யாழ்செய
வானர ம்மையின் மாமயி லாலுமே. (உஉ)

பூண்ட வாது புணர்முலை யார்நகை
பூண்ட வாது புணர்முலை யார்படா
நாண்ட சோக மமாரு நீழல்வா
யாண்ட சோக மமாரு மெய்துவார். (உங)

வேறு.

மென்றலைபர் பெருவளங்க ளிவ்வகையால் வளர்ந்தோங்கி
மின்றலைய சடையார்க்கு முறைக்குமிய ருடரங்காய்த்
தன்றலையில் வந்திருந்தோர் தவம்வளர்த்துச் சிவம்வளர்க்குந்
தென்றலையும் வளர்க்குமது செண்பகப்பூங் காவே.

மற்றுரும் புகழ்கயிலை வடமலைவிட் டெம்பெருமா
முற்றுக களபமுலை முதல்வியுட னுறையுமிடங்
குற்றாலத் திருநகருங் குளிர்மலர்ச்செண் பகக்காவுந்
தெற்றுக வுடையமலை திரிகூடத் திருமலையே. (உரு)

பூவருக்க முதலாய புவனமெலாம் படைத்தளிக்கு
மூவருக்கு முளைக்குமிட மாதலான் முதுமறைகண்
மாவருக்கை யாய்முளைத்து மாதவஞ்செய் யகிமையினுற்
றேவருக்குந் தெரிவரிதாந் திரிகூட வரைமூலம். (உசா)

வேறு.

தெய்வ மூத்திரைக் காவென வளிபடாச் செண்பகப் பொழி
லென்றுங், கைவ ரப்படத் தகைந்துபைந் தாதினுற் கமழ்திரு நீறு
ட்டு, மைவ னத்துறை நாளின்மேற் கோளின்மேல் வானின்மேல்
வானேர்மேற், சைவ முத்திரை சாத்துமுத் தலைக்கிரி தண்டமிழ்த்
திரிகூடம். (உஎ)

ஈன்று காப்பது மழிப்பது மறைப்பது மிதற்குமேல் விளையாட்டு
யீன்ற பல்வகைக் காரண காரிய மனைவயெலா முறைதோன்றுத்.

தோன்று காலமுங் கணிதமுங் கடந்ததோர் சுடர்முளைத் திடுநாளின்
மூன்று காலமுந் தன்னிடை முளைத்திட முளைத்தது திரிகூடம். ()

தம்மை யேதமக் கறியொணு திருமோனச் சமைந்தரும் மலைமோடச்
செம்மை யேமுதன் முச்சுட ரெறிப்பது சென்னசத் சிதமேய
வெம்மையேதொடுத் திம்மையேமறுமையே புயங்குமுப்பவநோய்க்கு
மும்மை யேழுமணி மந்திர மருந்தென முளைத்தது திரிகூடம். (௨௯)

பின்னு செஞ்சடை யெம்பிரா னெத்தலம் பிரியினும் பிரியாதே
துன்னு கின்றமால் வரையெனத் தனைப்பிரி தொறும்பிரி வாற்றாமே
மன்னு மாடக வரையிர சதகிரி மந்தர மெனமூன்றும்
பொன்னின்மூவகைக்கொடுமுடி யாமெனப் பொலிந்தது திரிகூடம். ()

கவன நான்முக நாரணப் பிரளய கற்பகா லந்தோறு
மெவன மாகவித் தலத்திடைச் சிவபிரா னிருந்தலா லழியாமற்
...வனம் யாவையு மொருதலை யந்தர மொருதலை புரையில்லாப்
பவன ...ந்தலை யாங்கின் றெடுத்தருள் பழமலை திரிகூடம். (௩௧)

ஊற்றி ...ம்மலமே லுவரிமே லோங்கன்மே லனம்புள்ளே
...ற்றி ருந்துமுச் செயல்செய்வான் மூவடி வெடுப்பவர்க் கிடமாக
மாற்றி ருந்தபொன் மேகலை மூன்றுடும் வயங்குதெக் கணமேவி
வீற்றி ருந்ததோர் வடநெடுஞ் சயிலமே விரிதமிழ்த் திரிகூடம். ()

பொன்ம லைக்குமோர் முதுமலை புதுமையாற் புதுமலை கயிலாய
நன்ம லைக்கொரு துணைமலை யுவரிசூழ் ஞாலமேல் வளர்ந்தோங்கும்
பன்ம லைக்குமோர் தலைமலை திசைதொறும் பசுந்தமிழ் மணநாறுந்
தென்ம லைக்கொரு வடமலை சிவபிரான் றிருமலைத் திரிகூடம். (௩௩)

வேறு.

ஆமையெழுத் தாலுலகை யருள்செய்வார்க் கிடமாகி
மாமையெழுத் தாடாடா மறைநான்கின் முதற்கிடந்த
வோமையெழுத் துருவாகு முயர்சயில மவ்வெழுத்தின்
சேமவெழுத் தொருமூன்றின் வடிவமே திரிகூடம். (௩௪)

ஆடலொரு மூன்றாகி மூவுருவ மமைந்தார்க்குக்
கூடமொரு மூன்றாயுங் கூடமே யிருக்குமறைப்



பீடமொரு மூன்றாயும் பேரெழின்முத் தேவியர்க்கு
மாடமொரு மூன்றாயும் வயங்கியது திரிகூடம். (௩௫)

எக்குணமோ வெப்பொருளோ வெச்செயலோ வெனமறையு
மிக்குணரா வகையுணர்த்த யான்மாட்டேன் மெய்யடியா
ரக்குணமே யச்செயலே யப்பொருளே யானபிரான்
முக்குணமோ முச்செயலோ முப்பொருளோ திரிகூடம். (௩௬)

வேறு.

பொன்னின்மா மணியருவிப் பூமாலை கரத்தேந்தி
வன்னிசேர் கரத்தார்க்கு மணம்பூட்ட வருமிமையக்
கன்னிபோல் வதுகருணைக் காசினியா மடமகட்குச்
சென்னிபோல் வதுகனகத் திருமவுலி போல்வதால். (௩௭)

முந்தையார் நதிசூடி முத்தலைவே லையுமேந்தி
விந்தையார் கோமர மதிவனைந்து விடையேறு
மெந்தைபோல் வதுகுலத்தி லுலகீன்ற பெருமாட்டி
தந்தைபோல் வதுகருணைத் தாய்போல்வ துன்...ம். (௩௮)

வேறு.

பூமடந்தை தனமிசைந்து பாரிடந்து வானளந்து பொன்னை மேவி
மாமணியி னிறம்படைத்து வானரம்புள் ளேறியலை வாரி மேவித்
தாமரைமா மலரிலஞ்சி தனிற்பூத்துச் செழுந்திகிரி சங்க மேந்தி
நாமமா யிரம்படைத்த மால்போலுந் திரிகூட ஞானக் குன்றம். ()

உந்திமிசை வந்துதடப் பூணியாற் குவலையங்க ளுவப்பி னீன்று
விந்தைசே ரம்புவனம் பலபடைத்துத் திசைமுகங்கண் மேவி வாணி
யிந்திரற்கு மிடர்நீக்கி யெண்கிரியின் வாருமிகுந் திருந்த வாலை
முந்துபது மத்தயனை நிகர்காட்டுந் திரிகூட முருகார் குன்றம். (௪௰)

எத்தலமு மேகலிங்க முளதாகும் பஞ்சலிங்க மிசைப்பர் மேலு, முத்தாகா சியிற்பதிட்டை கோடிலிங்கம் வடவருவி யுவரி மேயந்து, மைத்துளியெய் திரிகூடச் சிலையெலாஞ் சிவலிங்க வடிவ மாகி, யித்துணையுஞ் சிவமாகி லெத்துணையென் றெடுத்துரைப்போ மெதன்சி றம்மா. (௪௧)

திரிகூடத் திருமலையை வலஞ்செய்தார் தீராத வினைக ளைந் தார், திரிகூடத் திருமலையைத் திசைநோக்கிப் பணிந்தவருஞ் சிவத் தைச் சேர்ந்தார், திரிகூடத் திருமலையின் கீர்த்தனங்கள் கேட்டவ ருந்தேவ ராவார், திரிகூடத் திருமலைசார்ந் திருப்பவர்களு மகிமை துதி செய்யற் பாற்றே. (௪௨)

வேறு.

என்றிவை யீசருங் காலை யிவ்வகை நான்கி னானு
நன்றிசேர் கதிகள் பெற்றார் நற்கதை நவில்வா யென்ன
வொன்றிய முனிவர் கேட்ப வுளமகிழ் சிறந்து சூதன்
குன்றினை வலஞ்செய் தான்சீர் முதற்கொண்டு கூறலுற்றான். (௪௩)

பொதியமே லிமைய நீங்கிக் குறுமுனி போதுங் காலை
யெதிர்தொழான் றவமால் பூண்ட விந்திரத் துய்ம்ம னென்னு
மதிகுல நிருபன் றன்னை முனிந்துநின் மதத்தி னாலே
யதிர்குரன் மதமா வேழ மாகெனச் சாபஞ் செய்தான். (௪௪)

நின்வர வுணரா வென்னை நெறிகொலோ சபிப்ப தென்ன
மன்னவன் வணங்கிக் கூற மலயமா முனிவன் முக்கண்
முன்னவ னடியார்க் காணின் முத்தற வெழுந்து தாழ்ந்து
பொன்னடி வணங்கார் யார்க்கும் புகல்வதிச் சாப மென்றான். (௪௫)

முனிவர சரணஞ் சாப மோசனம் புரிவா யென்னத்
தனிதொழு மரசைக் கும்ப சம்பவ னோக்கி யெங்கோ
னனிவரைத் திரிகூ டத்தை நண்ணிநீ வலஞ்செய் காலம்
புனிதமுற் றிடுவை தென்கீழ்ப் புறத்தொரு தடத்தி லென்றான். ()

பாயிர மறைதேர் கும்பப் பண்ணவ னருளாற் பின்ன
ராயிரங் கரிக்கு வேந்தா யடற்கயேந் திரப்பேர் பெற்றுப்
போயது குணியில் காலம் புனம்பல சுழன்று வேழ
மேயது தவத்தா லோர்நாள் வியன்றிரி கூடச் சாரல். (௪௭)

உலவுமிதன் றிசையிற் கொண்ட லுவாய்ப்பிடி யெனப்போய் மேல்பாற்
குலவுவெள் ளருவிக் குன்றைக் கோட்டுமா வெனப்போ ராடிச்
சுலவியுத் தரபாற் சோலை முக்கனி சுவைத்துங் கீழ்பா
னிலவைவெண் கவள மென்று சென்றது பனைக்கை நீட்டி. (௪௮)



வேறு.

சோதி மால்வரை சூழ்ந்துதென் குணதிசைச் சுனையின்
மோது தண்புனல் பருகையி லொருகையை முதலை
காதி வெங்கய மிழுத்திடக் கயங்கரை யிழுப்ப
வாதி னூசலொத் தாயிரம் யாண்டுபோர் மலைந்த. (௪௯)

தால மீதில்வின் னுயர்புடார்ச் சுனந்தனைச் சார்ந்து
சூல மேவிநின் றமர்செய்குஞ் சரங்குறை திரையி
னால மேயெனப் பொருவலி முதலையா லயர்ந்து
மூல மேயென வோலமிட் டதுதனி முதலை. (௫௦)

ஓல மென்றலு முயர்பெரும் புடார்ச்சுன புரத்தின்
மூல மொன்றதாய் மூவடி வெடுத்தருண் முதல்வ
னீல விண்டுவா யுறையுநா னேமியம் படையாற்
கால வெங்கரா மடர்த்துநீள் கடகரி காத்தான். (௫௧)

முத்த லைக்கிரி வலம்வரப் பெறுமுது தவத்தான்
மைத்த லைக்கரி வடிவுபோய் வானவ வடிவாய்
மெய்த்த லைப்பெருஞ் சுவர்க்கநா டெய்தினன் வேந்த
னத்த லைக்கிரி மகிமைகேட் டவன்கதி யறைவாம். (௫௨)

வேறு.

பார்குட ரண்டம் வேர்வாய்ப் பகர்தரு தோற்ற நான்கி
னேரெழு பிறப்பிற் றெய்வ மீரேழு மக்க ளொன்பா
னீரின விலங்கு புள்ளு பப்பத்து நிலைநா லைந்தாங்
கூர்வன பதினொன் றாக யோனியெண் பத்து நான்கே. (௫௩)

இன்னவா மிலக்க மியோனி யெய்திய வுயிர்கட் கெல்லாம்
பன்னுபுண் ணியமே பாவம் பாவபுண் ணியமுச் செய்கை
பொன்னகர் நிரயம் பூமி புவனமாப் பொசிக்கும் போக
முன்னது குறைவு மேற்ற முயன்றது பின்னு மாக. (௫௪)

தாங்கரும் பாவ மிக்கான் றருமமுஞ் சிறிது செய்தான்
பாங்குசெய் தரும பாவப் பயனுண்டு பாரை நீங்கி
யோங்குசீர்த் தரும போக முண்டனன் சுவர்க்க மேவி
யாங்கது தொலைவின் வானோ ரகற்றவுந் தரத்து வீழ்வான். (௫௫)

விஞ்சையர் திரிகூ டச்சீர் விண்ணிடைப் புரியுங் கான
மஞ்செவி குளிர்ப்பக் கேட்டா னகன்றது தொடர்ந்த பாவ
மஞ்சன மறலி தூதர் வருமுனம் வந்து வானோர்
தஞ்சென விமான மேற்றித் தமனிய வுலகஞ் சேர்த்தார். (௫௬)

வரைத்திரு நாமங் கேட்ட மகிமையாற் சுவர்க்க மேவித்
திரைக்கட லமுத மாந்தித் தேவரோ டிருந்தா னின்னம்
பருப்பதச் சாரல் சார்ந்தான் றிசைநோக்கிப் பணிந்தான் செய்கை
சருக்கமே லிக்குநாதன் சாற்றிய கதையிற் காண்மின். (௫௭)

ஒன்றெனப் பொருந்தா வேறு பிரிந்திடா வுற்ப வத்தி
னென்றுமுட் புகுதா நீங்கா விறையரு ளான்மா மூன்றுந்
தொன்றுதொட் டமைந்த சுத்த சொரூபமே வடிவென் றோர்ந்து
மன்றலுந் திரிகூ டத்தி லுறையுமா மறைகண் மூன்றும். (௫௮)

வெதிர்தரு தரள ராசி வெண்மையாற் கயிலை மானுங்
கதிர்மதி வலத்தாற் பொன்னூன் மேருவே கடுக்குங் கண்டோர்
மதிவலி யிரும்பைத் தன்பால் வலித்தலாற் காந்த வெற்பாம்
புதியசீர்த் திரிகூ டத்தை நிகர்வதோர் பொருப்பு முண்டோ. (௫௯)

வம்பருப் பதும ராகம் வளர்வெயில் விரித்த லாலும்
வெம்பரா மணியின் சோதி விரிதரு செக்க ராலு
மும்பரா லுகுத்த வேயி னொளிமணி நிலவி னாலு
மெம்பிரான் றிரிகூ டத்துக் கிராப்பக லில்லை மாதோ. (௬௦)

சித்தராய் விஞ்சை யோராய்த் தேவராய்த் திகழ்வோ ரெல்லாம்
பத்தராய்த் தருவாய் மாவாய்ப் பறவையா யுறைவர் மேன்மேன்
முத்தராய்க் கதிக்கெல்லா முதல்வராய் விடுவ ரானு
லத்தனார் திரிகூ டத்தி னதிசயம் விரிக்கற் பாற்றோ. (௬௧)

வேறு.

குகிப்பாக வுரைத்ததெனக் கூதனொடுத் தரைப்பமுனிக் குமரத்தோ ரெல்லாம், புகிப்பாக மறைவேள்வி தருமுன்னே யென்களுக்குன் புராண வேள்வி, யகிப்பாக மெனவளித்தாய் திரிகூட வரைமகிமை யமுத வாரி, செவிப்பாகம் பெறநுகர்ந்து தவிப்பாகுஞ் சென்னவிடாய் தீர்ந்தோ மென்றார். (௬௨)

5. திரிகூடமலைச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—௨௬௨.



# ஆறாவது:-திருக்குற்றாலத் தலமகிமைச் சருக்கம்.

ஆன்றுண்மை யுயிராகி யுயிர்க்கெல்லா முணர்வாகி யறிவுக் கெல்லாஞ்
சான்றாகி முப்பொருளுந் தானாகி வானாகிச் சகங்கள் யாவு
மீன்றானுக் கிடமாகுங் கயிலாயஞ் சிவலோக மிரண்டென் பார்க்கு
மூன்றாகுங் குற்றாலத் தலமகிமை மொழிகவென மொழிவான் சூதன்.

௧ரேறு மழுப்படையார் தலங்கண்மகி தலத்தனந்த கோடியவற்றுஞ்
சீரேறு மூர்த்திதலந் தீர்த்தமெனு மூவகையாற் சிறந்த தான
மீரேழு தலமாகு மெந்தையார்க் கதிகதல மிவற்றி னுள்ளு
மோரேழு தலமதிக மிவையிலொரு தலமதிக முணர்த்தக் கேண்மின்.

வரமேவு திருவாரூர் காளத்தி யருணை தில்லை மதுரை காஞ்சி, புரமாதி பலதலத்தும் பொருந்துறைத லொவ்வொருவர் பொருட்டே யாகும், பரமான தனிமுதல்வ னூழிதொறு முலகமெலாம் படைத்துங் காத்தும், நிரமாக வரசிருக்கும் பரமரக சியத்தானந் திருக்குற்றாலம். (௨)

வேறு.

பூதல விலாசந் தன்னிற் புதுமைசேர் தலங்கள் யாவும்
பேதமாங் கற்பந் தோறும் பிரளயத் தொடுங்கித் தோன்று
மாதலு மழிவு மில்லா வநாதியே திருக்குற் றாலங்
காதலி னறிவு மிக்கீர் காரண முணர்த்தக் கேண்மின். (௩)

பொருந்திரைக் கடல்க ளேழும் புடைபடு திவுந் தாவிப்
பெரும்புறக் கடலு ணேமிப் பிறங்கல்கால் சாயப் பாய்ந்து
வருந்திரண் மேரு வாதி வரைகளுந் திசையும் பாரு
மொருங்குற வொருக்கி மேல்கீ ழுலகெலாம் புகுந்து தாக்கி. (௪

பரந்தெழு புவன மெல்லாம் படர்ந்தபே ருகாந்த வாரி
பரந்தெழு மண்ட மூலத் தங்கியின் சுடரான் மண்ட
வுரங்கெழு சண்ட வாயுக் கனியெல்லா மொடுங்கி வான
நிரந்தரித் துலோகா லோக நெடுவெளி யாய காலம். (௫

ஆருநீர் கனல்கா லண்ட மழிக்குநா ளழியா தாகிக்
கூருமால் வரையும் யாறுங் குறிக்கொண்டு நிசைக டோறு
நேருறு குரோச மைந்தாய் நின்றது திருக்குற் றாலம்
மேருவி லேந்திக் கங்கை மிலைந்தநம் பரனே போல. (௬)

அப்பெரும் புவன மெல்லா மழியுநா ளழியா தாகி
யிப்புரங் கிரியும் யாறு மிருந்தவா றெவ்வா றென்னின்
முப்புர மொடுங்குங் காலை மூவர்வீ டென்ன மூன்று
மொப்புற நின்ற தென்று மொருவனே தருளான் மன்னே. (எ)

அரவணி சடையா னெங்கு மமர்கினு மருந்தேன் கங்கை
கரைபொரு திரிகூ டத்துக் கலையெலா நிரம்பா நிற்பன்
விரவுபே ருலக மெல்லாம் வெயில்விரித் தெழுந்த தேனு
மிரவிதன் கிரணங் காந்தந் திசைதரு பொலிவு போல. (அ)

தருமமே கருதித் தானந் தவம்பல புரிந்தா ரேனுந்
திருவளர் திருக்குற் றாலச் சிவபிரான் சன்னி தானந்
தருவினர் பணியார்க் கன்றித் தொலைந்திட லரிது பாவம்
பரிதிதன் னிதியி லன்றிப் பஞ்சிலாச் சுடுமோ காந்தம். (௯)

வேறு.

ஆல வாய்திருக் காளத்தி காசியண் ணாமலை திருவாரூர்
மேல மன்றகந் திருவிரா மீச்சுரம் விடையனைக் கவராகச்
சூல பாணியார் மற்றுள தலமெலாந் துணைத்தலைஞ் சினையாக
மூல மாகவே யுலகெலாந் தழைத்திட முளைத்தது குற்றாலம். (க0)

உடைய நாயகி திருமணக் குழுவின்மூ வுலகமு மொருங்கேறி
வடதி னிப்புலந் தாழ்ந்துதெற் குயர்ந்தநாள் வானவர் தொகைக்கே
கடமு னிப்பிரா னொருவனே நிலைபெறக் காசினிப் பெரும்பாரெல்லாஞ்
மெடைத வக்கொரு தட்டெதிர் நின்றதா லிறைதிருக் குற்றாலம்.

சங்க வீதிபொற் கந்தரந் திருமுகந் தமனியப் பெருங்கோயி
லங்க வார்குழல் சண்பகா டவிபெருஞ் சொர்க்கமே திரிகூடம்
பொங்கு மாகட லந்திபொன் மேகலை பொருந்துசித் திரகங்கை
நீங்க ணயகன் மருவுகுற் றாலமா ஞாலநா யகியார்க்கே. (கஉ)



மேவ ராவகி லாண்டமு மொடுக்கிமேல் விதிந்தரு மொருதேவன்
மூவ ராகவித் தலத்திடை முளைத்திட மூலமா நகராகி
யாவ ராகினு முணர்தர வரியதா லிந்நகர்ப் பெரும்பான்மை
தேவ ராகிய மென்பனோ பரமரா சியமென வுரைக்கேனோ. (கங)

வேத மாகிய குறும்பலா நிழலின் விரிஞ்சன்மால் வடிவாகிப்
பூத நாயக னெனவரு சிருப்பவன் புவனநா யகிகாண
நாத மாகிய விண்முரா சதிர்தர ஞானசித் திரமன்றிற்
காத லாய்த்திரு நடம்புரி வதுதல மகிமைபாற் களித்தன்றே. (கச)

இந்து வானிடை யிழிந்துகீழ் வழிந்தென வெழில்வரைத் திரிகூடம்
வந்து பாய்தரு திரையரு வித்துறை வரதன்மஞ் சனசாலை
நந்து வீதிகுழ் சினகரந் திருவுரு நண்ணுபா தலமாதி
யைந்து வாய்தரு மைம்பொறி வடிவமா மாடலம் பரனார்க்கே. (கரு)

ஆர்த்த மூலமு மீறுமில் லாதவ னண்டமு ழுமுந்தெருக்
கீர்த்தி மூலமே கிளர்ந்தென நன்னகர்க் கிரித்தலை யலைமோதுந்
தீர்த்த மூலமுந் தலத்தின்மூ லமுமுயர் சிவலிங்க வடிவான
மூர்த்தி மூலமு முணர்வரோ வுலகொரு மூன்றையு முணர்ந்தாரும்.

மனித ரோபெருந் தேவரோ வளர்மது கங்கையோ வானோரே
புனிதர் சண்பகச் சோலையோ கற்பகப் பொதும்பரோ புவிபோற்று
மினிய குன்றமோ சிவலிங்க வடிவமோ வென்றுமே தாமேதந்
தனியுணர்த்துவ தெம்மனோர்க் கெளியதோ சதுர்மறைக்கரிதாமேல்.

வேறு.

புத்தியுற நினைந்தார்க்கே யருணைகிரி தரிசனைக்கே புலியூர் பேறு
நந்துதவழ் திருவாரூர் பிறந்தார்க்கே பிறந்தார்க்கு நல்குங் காசி
யெந்தையார் திருவருளாற் பிறந்தார்க்கு மிறந்தார்க்கு மெதிர்கண்
டார்க்குஞ், சிந்தையுற நினைந்தார்க்கு மழியாத கதிகொடுக்குந் திருக்
குற் றாலம். (கஅ)

பிறந்தவர்க்கு முத்திதருஞ் சிவமுராசஞ் செவிகேட்கப் பெறலா
ற் காட்சி, சிறந்தவர்க்கு முத்திதரு மெய்வடிவுந் தெய்வவடி வாத
லாலே, பிறந்தவர்க்கு முத்திதரு மிறைதிருமன் றிரந்தெனியி லிசை
க்கு மாற்று, லிறந்தவைக்குங் குற்றால மறிந்தவினர் பவர்க்குமுத்தி
யரிதோ வம்மா. (க௯)

எத்தலத்தி லெவர்புரிந்த பாதகமு மித்தலத்தி லெய்தத் தீருங்
கைத்தலத்தின் மழுவுடையார் குற்றாலந் தனிற்புரிந்த கடிய பாவ
மத்தலைநால் வகையிலறு மித்தலம்விட் டகன்றீர லவனி யாதி
முத்தலத்திற் சென்றாலு முடியாது முடியாது முடியா தன்றே. ()

வன்னிதா னம்புகுமுன் மானததா னந்தோய மாட்டா ரேனுஞ்
சென்னிதா னந்தொடுத்துத் திகழுமிரு வகைத்தானந் தேவ தேவன்
சன்னிதா னமுனிரண்டு சதாட்டையத்தா லகன்றேடுஞ் சகல பாவ
மென்னிதா னமுநிதியும் பெற்றாலுங் குற்றால மிகவார் மேலோர். ()

உம்மையுறு பாதகங்கள் பஞ்சுபோற் பறக்குமந்த வூழை யாலே
யம்மைதரு மலச்சேறு கழுநீராக் கழுவும்வட வருவித் தீர்த்த
மிம்மைவினை யிருளோட்டுந் திரிகூடப்பாறுஞ்சடரையிறைஞ்சுவார்க்கு
மும்மையுந்தீர்ந்ததியத்திலருடருஞ்சன்னிதியழியாமுத்திசல்கும்.

மந்தமா ருதமீர வாளோச்சி வீசுநெடு வரைத்தண் சாரல்
சிந்துநீர் வடவருவி சிலைபூட்டி யம்பிறைக்குஞ் செழுந்தேன் பில்கும்
பைந்தளிர்ச்சண் பகச்சோலை பாரதண்டங் கொடுபுடைக்கும் படர்
திக்கெல்லா, மிந்தநக ருறைவார்மேல் வந்தவினை தரித்துநிற்ப
தெந்த வாறே. (௨௫)

வேதாளம் பாடவொரு வெளியிலா டியபெருமான் வேதம் பாடப்
பாதாள வாய்த்துறை பணியரசுங் குறுமுனியும் பணிசெய் தேத்த
மாதாள முமைபயிற்ற வரிபிரமர் முடிதாழ்ப்ப வானோர் பேரி
யாத்தாளி யுறநடிக்குஞ் சிற்பொதுவுஞ் சிற்பரையு மதன்பா லன்றே.

இந்திரனூர்க் காதாரங் கருவூர்க்கு நமனூர்க்கு மெட்டாத் தாரஞ்
சந்திரர்கு ரியர்முதலோர் பதங்களுக்குத் துருவபதந் தனிவேற்கந்தர்
கந்தமா தனமாதிக் கணபதிக்குக் காசிலாயங் கயிலை யார்க்குச்
சிந்தைசேர் சிவலோகந் தெளிந்தார்க்குப் பரமபதந் திருக்குற் றாலம்.

புவலோகத் திருப்பவர்கள் சுவர்க்கம் விரும்புவர்மேற் போ
கம் வேட்டுச், சுவலோகத் திருப்பவர்சத் தியலோகம் விழைந்திருப்
பர் தொலையா வேதன், றவலோகத் திருப்பவர்கண் மாலுலகம் விரு
ம்புவரித் தனைக்கு மேலாஞ், சிவலோகத் திருப்பவருந் திரிகூடத்
திருக்கும்வரஞ் சிந்திப் பாரே. (௨௬)



கயிலாயத் தினிதுறையுஞ் சீகண்ட பரமனுயர் கயிலை நீங்கி
மயிலாய சாயன்மட மங்கைகுழல் வாய்மொழியை மணந்து மேருச்
சயிலாதி பொதியிக்வரைத் தலங்களழி யினுமழியாச் சங்கக் கோயி
லெயிலாக விருப்பதனாற் பூலோக கயிலாய மிதுவே யன்றோ. (௨௭)

சிவமதுகங் கையுங்கடவுட் செண்பகத்த டாகமுமேற் சித்தர்
வானோர், தவமுனிவ ருவந்தாடும் வடவருவித் திரிகூடச் சயிலஞ்
சார்பு, நவநிதியுந் திரைகொழித்துக் கதிகொடுக்குஞ் சித்திரமா நதி
யுங் காண்பான், புவனமிசை பிறக்கவின்னந் தவம்புரிவர் பொன்
னுலகிற் புகுந்து ளோரும். (௨௮)

பொங்குமா கடலருவிப் புண்ணியதீர்த் தமுங்கடவுட் பூட்டா
வில்லுஞ், சங்கவீ தியுந்தானு மாலயத்தொட் டினுமாதி சத்தி
யான, நங்கைபீ டமும்வேதக் குறும்பலவு நன்னகரு நயப்பர் லன்
றே, வெங்கணு யகர்பிரமா வாகிநெடு மாலாகி யிருந்தா ரென்
றும். (௨௯)

பிதுர்கண்டந் தீர்த்தபுரஞ் சிவத்துரோ கந்தீர்த்த பெருமை மூதூர்
மதுவுண்டா னுயிர்மீட்ட புரம்பவர்க்க மீட்டபுரம் வசந்தப் பேரூர்
முதுகங்கை வந்தபுரஞ் செண்பகா ரணியபுர முத்தி வேலி
நதிமுன்றின் மாநகரந் திருநகர நன்னகர ஞானப் பாக்கம். (௩0)

வேடன்வலஞ் செய்தபுரம் வேழம்பூ சித்தபுரம் வேத சத்தி
பீடபுரஞ் சிவமுகுந்த பிரமபுர முனிக்குருகும் பேரூர் தேவ
கூடபுரந் திரிகூட புரம்புடார்ச் சுனபுரம்பொற் குறும்ப லாவி
சேடபுர மெனவிருபத் தொருநாமம் பெற்றபதி திருக்குற்றாலம் (௩௧)

வற்றாத வடவருவி படிந்துசங்க வீதிதனில் வலங்கொண் டேகிப்
பற்றாத பிறைமௌலிப் பரமனையுந் தேவியையும் பணிந்து போற்றிக்
கற்றார்க ளுடன்கூடிக் கண்ணுதல்சீர் பாடியொரு கடிகைப் போது
குற்றாலத் திருந்தவர்கள் கயிலாயத் திருப்பார்கற்ப கோடி காலம். ()

பாவரா கினுங்கொலைசெய் பழையரா கினும்வேதப் பலவி னீழன்
மூவராய் முளைத்தபிரான் குற்றால மென்றொருகா மொழிவ ராகி
லேவரா கினும்புவன வேந்தரா யுலகாள்வ ரிருகாற் சொல்வார்
தேவராய் வீற்றிருப்பர் முக்காலு மெடுத்துரைக்கிற் சிவமே யாவர்.

குற்றால மென்றொருக்கா னினைப்பவர்க்குப் பாவமொரு கோடி தீருங், குற்றால மென்றொருக்கா லுரைப்பவர்க்குப் புண்ணியங்கள் கோடி சேருங், குற்றாலந் தனிலிருந்து செய்யுமொரு தவமனந்த கோடி யாகுங், குற்றாலங் கண்டுதொழக் கூடினர்க்கே பரமபதங் கூடு மாதோ. (௧௪)

வேறு.

முத்தராய் விடுதி லாலே முக்கணர் திருக்குற் றாலம்
பத்தராய் மேவு வார்க்குப் பரிசன வேதி யாகு
மித்தரை தலத்திற் காண்போ ரியாவரு முயர்சங் கற்ப
சித்தராய் விடுத லாலே தெரிசன வேதி யாமால். (௧௫)

ஓரிடைப் பன்னி ராண்டே னுறக்கமற் றிருந்தான் பேறு
சீருடைத் திரிகூ டத்திற் சிவநிசி யொன்றே நல்கும்
வாரிசூழ் நிலத்திற் கோடி வளர்சிவ நிசியா லெய்தும்
பேரியற் பேறு மீங்கோர் பின்னுவாத் திங்க ணல்கும். (௧௬)

ஆதுலர் சாலை சோலை யாவின்வா யுறைகண் ணறு
போதுவார்க் குறைவு தன்னீ ருறுபந்தர் மடைத்த டாகங்
கோதிலா வழிஞ்சி சுண்ணங் கொலையுளார் விடுத்த லேறு
மாதலைக் கெண்ணெய் கன்றேய் மருந்துதன் மகப்பாலீசோறு (௧௭)

அறுசமை யத்தோர்க் குண்டி யழிந்தோரை நிறுத்த லட்டுசன்
பிறரறங் காத்த லையம் பெண்போக மகப்பே றாய்த்த
னறியதின் விலங்கூண் வண்ண றுவிதன் சிறைச்சோ றாதி
மறுதலத் தறமென் றன்கு மனையறத் திவ்வூர் நல்கும். (௧௮)

சிலபல தலத்தின் மாதப் பட்டினி விரதஞ் செய்வோர்
பலனெலாந் திரிகூ டத்திற் பகலுணா வொழித்தார்க் கெய்துஞ்
சலமறப் பிறவூர் மேவிச் சாந்திரா யணஞ்செய் தேழுக
ணாலமொரு நிசியூண் விட்டு நன்னக ருறைந்தார்க் கெய்தும். (௧௯)

ஒருபொழு தருந்தி யோரான் டொருங்குறைத் திருந்தார் பேறு
மிருபொழு தருந்தி யோர்கா லித்தலத் திருந்தார்க் கெய்தும்
பருவமொன் றயலூர் தோற்கும் பலபல விரதப் பேறு
தருமொரு சோம வாரந் தன்னிலித் தலத்தின் மாதோ. (௨௦)



காமர்பூங் கொடியார் மோகங் கடந்துடை காவி சாத்தி
மாமனத் துறவு பூண்டு மறுதலத் திருந்தார் பேறு
தேமலர்ச் சயன மேவித் தெரிவைய ருடனே யிவ்வூர்ப்
பூமனை வாழ்க்கை யெய்தும் புண்ணியர்க் கெய்து மாதோ. (௨௧)

ஐவகைக் கனலி நாப்ப ணைம்புல னடக்கி யோரான்
டுய்வகைத் தவங்க ளாற்றி யொருதலத் திருந்தார் பேறு
கைவரை மழுவ லாளன் கருணைபஞ் செழுத்தை யுன்னித்
தெய்வமாப் பலவி னீழற் சிறுபொழு திருந்தார்க் கெய்தும். (௨௨)

அடைதர வரிய காறு மருவரைப் புறமு தாடிப்
புடைபடப் பல்யாண் டோடிப் பூவலம் வருவார் பேறு
சடைமிசை மதியஞ் சூடுஞ் சண்பக வனத்தி லெம்மை
யுடையவன் சங்க வீதி யொருவலம் வருவார்க் கெய்தும். (௨௩)

பூதானம் பரிதேர் யானை பொன்வெள்ளி விளைவு கன்னி
காதானந் துயில மெள்ளுக் கலைபணி யடிமை யில்லங்
கோதான மன்ன தானங் கூறுமென் னிருதா னத்தி
னேதான பலனு மன்ன மிட்டுண்பார்க் கருளு மிவ்வூர். (௨௪)

சொரிதழ லங்கிட் டோமஞ் சோதிசேர் சோதிட் டோமம்
புரிதரு மிராச சூயம் பொங்கழற் சோம யாகம்
பரிமக முதல வேள்வி பலதலத் தியற்றும் பேறு
பெருகுமித் தலத்து மாதர் பிதுர்யாகஞ் செய்வோர்க் கெய்தும். ()

எண்பல வனங்க டோறு மிலைதின்றுங் கனிகாய் தின்று
முண்பன வொழிந்துந் தீமே லூசிமே லொருகான் மேலா
வண்பல கால மெல்லாம் வருந்தினர் தவஞ்செய் பேறு
செண்பக வனத்தி லோர்நாட் செயுந்தல வாச நல்கும். (௨௬)

பத்தராய்ப் பணிவார்க் கேனும் பலதவம் புரிவார்க் கேனு
முத்தர வயன மெல்லா மொருதலந் தருமே யிவ்வூர்ச்
சித்திரை விழவே நல்குந் தெக்கிணா யனப்பே றெல்லா
மத்தர்தந் திருக்குற் றாலத் தைப்பசி விழவே நல்கும். (௨௭)

அத்தனங் கிருந்து நீங்கா தகிலமு மியற்ற லாலே
யெத்தலம் வதிந்தார் பேறு மெத்தவம் புரிந்தார் பேறு
முத்தர கங்கை யாதி யுயர்நதி படிந்தார் பேறுஞ்
சித்திர நதிசூழ் சைவத் தெய்வமாத் தலமே நல்கும். (சஅ)

திருவளர் திருக்குற் றாலந் திரிகூட மென்னு நாம
மருவியங் கிரிக்கண் ணாகி யருட்பெருந் தலத்துக் காகி
மருவுபே ருலகை யீன்ற வல்லியா லெம்மை யாளு
மொருவனுக் குரிய தென்று முணர்த்துதற் கெளிய தாமே. (சகூ)

வேறு.

என்னனு மிந்நகர்க் கிசையு நாமங்கள்
முன்னர்மூ வேழென முறையிற் கூறினை
யன்னவை விரித்துரைத் தருளு வாயெனச்
சொன்னமா முனிவர்க்குச் சூதன் சொல்லுவான். (ருo)

தொன்மையாந் தீவினைத் தொடர்ச்சி யுவ்வதாந்
தன்மையாப் பொழிந்தெரி தழலுத் தாலமா
நன்மையா ரியந்தமிழ் நாமம் பெற்றது
சென்மநோ யறுப்பது திருக்குற் றாலமே. (ருக)

கடாக்கயம் பூசைசெய் கடவுள் வாழ்பதி
நடாத்துசிர் நற்கதி யெவர்க்கு நல்கலால்
விடாப்பெரு நன்னகர் நாம மேவுயாற்
படார்ச்சுன புரத்தியல் புகலக் கேண்மினோ. (ருஉ)

வேறு.

பராசர னருளாற் கந்தி பரிமள கந்தி யாகித்
தராதலம் புரக்கு நீதிச் சந்தனு ராசன் வேட்ப
வராதிப னரசுக் கேற்ப நன்மக வின்று ளன்னோ
னிராகமுற் றிருங்கு வேட்டா னம்பியம் பாலி தம்மை. (ருங)

பேட்டன நடையார் மக்கட் பெறுதன்முன் றலைவன் வீந்தான்
வீட்டும னரசு வேண்டான் வியாதனை வரித்தாள் கந்தி
கோட்டமின் முனிபா லன்னோர் குறைமுறப் புணர்ச்சி யாலே
நாட்டிழி லரசைப் பாண்டு வேந்தனை நல்கி னாரே. (ருச)



நோக்கிலான் மனைவி தாருத் தழுவினாற் றவரைத் தந்தா
ளாக்கமாம் பாண்டு பாரி யையவருக் கைவ ரீன்றாள்
மாக்குலத் துணைவ ராயு மகிதலம் புரக்கு மாசை
தாக்கினாற் றவரோ டைவர் தங்களிற் பகைவ ரானார். (ருரு)

வசுமக னாகி நந்தன் மனைபுகூஉப் புள்ளுஞ் சோகும்
விசைபெறு சகடு மாய்த்து வெறிமரு திடந்து வேழ
மசைவுற மல்லர் வீழக் கஞ்சனை யடர்த்த கண்ணை
னிசைவினாற் பாண்டு மைந்த ரிகலினு மினியா ரென்றா. (ருசா)

நாற்றுவர் சூதால் வென்று நாவலருங் கானி லேவச்
சாற்றுபன் னீராண் டைவர் தணந்துபின் வளநா டெய்தப்
போற்றலன் புயங்க கேது பொருந்தில னாத லாலே
யாற்றுதல் சமரென் றெண்ணி யண்ணல்பா சுபத முன்னி. (ருஎ)

செவ்வளர் திசைநா லங்கி சேணெழு சுடரோன் றாக
வைவனக் கனலி னாப்ப ணடியொன் றின் விரலொன் றூலே
குவ்விடை யூன்றி யோர்தாள் குறங்கிடைச் சேர்த்திப் பார்த்த
னவ்விழி துண்டந் தாக்கி யதிலெழு தீப நோக்கி. (ருஅ)

பூதமைம் பொறியி லாகப் பொறிபுலன் கரணத் தாகச்
சேதனத் தவையாய் மாரன் றேவர்கோ னிடரு மாற்றி
யாதவம் பனிகார் நீந்திச் சிதலரித் தாகம் புற்றாய்ப்
பாதவ முனைப்ப முக்கட் பரமனைப் பரவி நின்றான். (ருகூ)

மிக்கவன் றவஞ்சோ திப்பான் வேட்டுவக் கோல மாகித்
திக்கெலா மன்னங் கோலந் தொடருமோர் தேவ தேவர்
மைக்குழ லண்ணம் பின்னே தொடரமற் றொருகோ லத்தைப்
புக்குறத் தொடர்வார் போலப் புகுந்தனர் பொருவில் லேந்தி. (சாo)

வரிசிலைப் பரம வேடன் வலியுஞ்சிப் புகல்போற் பன்றி
குரிசிலை யடைந்தா லெம்மான் கொலைசெய்த தானை பார்த்த
னொருசிலை யுயிர்பெற் றென்ன வுருத்தன னிருவர் தாமும்
பொருசிலை குனித்துக் கார்போற் பொழிந்தன ரம்பு மாரி. (சாக)

அல்லினார் களத்து வேட னருந்தவ வேடன் வின்னாண்
கல்லினான் மல்லி னாற்கை கலந்தனர் வீழ்ந்தார் மேல்வீழ்
புல்லினா ரணங்கு பார்த்தன் புறங்கண்டு நகைத்தா னென்னேன்
வில்லினாற் புடைப்ப நாதன் விண்ணிடை மறைந்தா னன்றே. (சுஉ)

தேவியுந் தானு மாகச் சேணிடை மறைந்த தேவைப்
பாவியே னுணர்ந்தே னல்லேன் பழுதுகொல் விளைத்தே னென்னக்
கூவியே தொழுதான் முக்கட் குழகனே மழுவ லானே
யாவியே யுமையோர் பாகா வடியனேன் றனைத்துங் காணேன். (சுங)

தீர்த்தனை யருச்சித் தேத்தித் திருவடி காண்பே னென்ன
வார்த்தாமாந் தேவு மேவு மவ்வுளிச் சென்றான் கொன்றை
சார்த்திய மவுலி யானைச் சம்புடத் துடனுங் காணான்
வேர்த்துடல் சோர்ந்தா னவி விடிப்பனென் றெடுக்கு மெல்லை. ( )

சேணுயிர் விடைமேல் வந்து சம்புடந் திரிகூ டத்திற்
காணுக கடவுட் பஞ்ச தெரிசனத் தென்று காட்டித்
தாணுநா யகர்தாம் பாச பதங்கொடுத் தருளிப் போந்தார்
கோணிலா மனத்தன் போற்றிக் குறும்பலாச் சாரல்சேர்ந்தான்.

கோதிலாத் திருக்குற் றாலங் குறுகினன் பணிந்தான் சங்க
வீதிவாய்ச் சென்றான் முன்செய் வியன்குருக் ஷேத்ரந் தீர்
சோதிவெண் கதிர்பூ சித்த சோமசே கரனைக் கண்டா
னோதுபங் குனியாந் திங்க ளுத்திரத் தருச்சித் தானே. (சுசு)

மேற்றிசை முகமா மீசன் விநாயகன் சிகரக் குன்றத்
தேற்றுதே னுறே டைந்து தெரிசனம் பரிவாற் பெற்றுத்
தோற்றிய வைந்தோ டாறுச் சோதிசம் புடமுங் கண்டா
னாற்றற வெடுத்தா னாக மாவிநன் டெடுத்தா னென்ன. (சுஎ)

ஆதிநாட் சம்பு டங்கண் டருச்சனை யெடுத்த வாற்றாற்
பூதிசா தனத்தோர் போற்றும் புடார்ச்சுன புரமி யிவ்வூர்
மீதுவ காமச் செய்கை விளம்பு மச் சருக்கந் தேர்வுங்
காதைகள் விரிக்குந் தெய்வக் காரண வகையிற் காண்மின். (சுஅ)



பொருவருந் திரிகூ டத்துப் புடார்ச்சுன புரம்பே ரெங்கு
மொருதலம் புவனத் தில்லை யும்பர்வா னகத்து மாங்கே
பெருகுமித் தலத்தை நீங்கிப் பிறதலம் புகுவா ரில்லின்
றிருவிளக் கிருக்க வூரிற் சென்றுதிக் குழல்வார் மன்னே. (சுகூ)

பாயிர மறைந்த ளாலும் பகர்ரி தான சங்கக்
கோயிலுந் தலமுந் தெய்வக் குழாங்களின் பெருக்கு நானோர்
வாயினா லுரைக்கற் பாற்றோ மகிதலந் தாங்குஞ் சேட
னாயிர நாவி னாலு மசைக்கினு மசையா தென்றான். (எ0)

வேறு.

தில்லையிலுஞ் சேதுவிலுங் காசியிலும் வாசிபெறுந் திருக்குற்
றாலஞ், சொல்லையினு நாவூறுங் கேட்கையிலுஞ் செவிதிறக்குந் துற
க்கம் பேறாம், மெல்லையினில் வளர்தீர்த்த மகிமைகூ றெனமுனிவ
ரிளம்பூங் கன்னற், கொல்லையினின் மேய்ந்தசெழுங் கன்றுகள்போற்
சிந்தையவர் கொண்டார் மன்னே. (எக)

கனிமூல சாகமெனு மமுதநுகர் மாதவத்தோர் கருதிக் கேட்ப
முனிமூல நதிமூல முரைப்பதரி துலைத்நா லு முக்கண் ஞானத்
தனிமூலப் பொருளிருக்குஞ் சாரல்சூழ் திரிகூடச் சபிலக் கங்கை
நனிமூல முரைப்பதரி தவனருளா லுரைப்பனென நவில்வான் சூதன்.

6-திருக்குற்றாலத் தலமகிமைச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—கூசு.

## ஏழாவது:—வடவருவிச் சருக்கம்.

பரையிடத்தி லிருந்துபுடார்ச் சுனபுரத்தி னுலகமெலாம் படை
க்குங் கால, முரையிடத்து முணர்விடத்துங் கடந்தானை யுருத்திரமா
கணத்தோ ரெல்லாந், தரையிடத்தி லுலந்தாட்டப் புனல்வேண்டிப்
பரவுதலுந் தனிமுக் கோட்டு, வரையிடத்தி லவனருளால் வருமூல
தீர்த்தம்வட வருவித் தீர்த்தம். (க)

கடலேழு நதியேழுந் தோன்றுமுன் வரையிலெழு கடலாய்த்
தோன்றத், தடமேவு நதிமகிமை பாடியுருத் திரகணத்துத் தலைவ

ராடி, யுடன்மேவு நந்திகணத் தவராடிச் சிவகணத்தா ருவப்பி னுடி
யடலேறுந் திரிகூடப் பெருமையினை யுவந்தாட்டி யருள்பெற் றூரால்.

குடிலைதா மேவிவரு மாயைகா ரணமாகக் குளிர்வா னதி
கெடியபே ருலகனைத்தும் படைப்பதற்குக் கமண்டலநீர் நிகராய் முக்க
ணடிகளா டலுக்குரிமை யாதலாற் றிரிகூட வசலக் கன்னங
சடிலமேற் கங்கையினு நூறுமடங் கதிகமெனத் தக்க தாமால். (௩)

பவமதுகங் கையகலாச் சகசருய்யப் பகிரதனாற் பண்டு தோன்
றுங், சிவமதுகங் கையுஞ்சுருதி விரிகூடத் திரிகூடச் சயில மேவி
நவமதுகங் கைபிற்சொரிந்து நாதனைப்பூ சனைபுரிந்து நவைக டீர்ந்த
சிவமதுகங் கையுந்தனக்கோர் துறையாக வுடையதுசித் திரப்பூங் க
ங்கை. (௪)

மவுனநெறித் தாபதர்கண் மாறாது தவம்வேள்வி வளர்ப்ப தாலே
கவனவெறித் தானவராற் பிரளயத்தா லழியாமற் கற்பந் தோறுஞ்
சிவனயன்மா லானபிரான் றிருவருளால் வரைகாத்துத் தேவி வாலை
புவனைதிரி புரையாவா ளினிதுறைசண் பகத்தடமோர் புறத்த தா
மால். (௫)

கங்கைநரு மதையமுனை சிந்துகோ தாவரிகா வேரி யாதி, மங்
கலமா நதிகளெலாம் வற்றியகா லங்களினும் வற்றா தாகிச், சங்க
மறு குடையபிரான் றிருவருளாற் புதுவாரி சயில மீறிற், பொங்
கியெழு மாதலினாற் பொங்குமா கடற்றுறையும் பொருந்து மோர்
பால். (௬)

தடமாகு நதியாகுங் கடலாகும் வரையருவி தானே யாகு
மிடமாகுஞ் சேய்த்தாகு மெத்தலத்தும் வளர்தீர்த்த மிமைய மீன்ற
மடமாதி னிடத்தார்க்கு வலமாகி யணித்தாகி வானோ ராட்டுங்
கடமார்மஞ் சனம்போலுந் திரிகூட வடவருவிக் கடவுட் டீர்த்தம். ()

கூவறட்டொருகோடி கொடுத்தபலன் கொடுக்குமொரு குவளை வாவி
வாவிகளை யொருகோடி வழங்குபல மொருநதியே வழங்கா நிற்குந்
தாவுநதி யொருகோடி தருபலமோர் வரையருவி தானே நல்கு
மேவருவி யொருகோடி யுதவுபலன் வடவருவி விளைக்கு மாதோ. (௮)



கிரிகூடந் தொறும்பாயு நதிக்குயர்ந்த துத்தரவா கினியே யென்று
விரிகூட விரித்துமறைச் சுருதியிரு திகள்யாவும் விளம்பு மாறு
லரிகூட மயன்கூட ஞ் சிவகூட மெனமுனிவ ரமர ரார்க்குந்
திரிகூட வரைபாயும் வடவருவி மகிமைதுதி செய்யற் பாற்றே. (௯)

பாவமொடு புண்ணியத்தின் வகைபிரிக்க மாட்டாவாம் பலவாந்
தீர்த்தம், பூவைபுங்கின் ளையும்பாவின் புனல்பிரிக்க மாட்டாமை போ
ல மேலாந், தூவியனம் பிரிப்பதுபோற் சுகிர்தமெனும் பால்பிரித்துத்
துலங்கக் காட்டித், தீவினையைக் கழுநீராப் பிரித்தெறியுந் திரிகூடத்
தெய்வக் கங்கை. (௧௦)

மேலேறிச் சுவர்க்கபதம் புகுவார்க்கும் பிரமபத மேவு வார்க்கு
மாலேறு வைகுந்தம் பரமபதஞ் சேர்வார்க்கும் வரம்பில் காலங்
காலேறிச் செலவரிய பதந்தோறுஞ் செலுத்துதலாற் கதிகட் கெல்லா
நாலேணி நிறுத்தியதாந் திரிகூட வடவருவி நவலுங் காலே. (௧௧)

சத்தநர கினுந்தொலையார் புவிமீதிற் பிறந்துபா தகங்க ளீர்ப்ப
ரித்தரணி தனிற்பிறந்தார் பாவமெலாங் கங்கைதனி லெய்தித் தீர்ப்ப
ருத்தரகங் காநதியின் பாதகமு மீதுதீர்க்க வரிய தானாற் [றில்.
சித்திரகங் காநதியை யொத்ததொரு நதியுளதோ செகங்கண் மூன் ()

வேறு.

மொழிபடர் கலைநூல் வல்லீர் முழுதும்பா தகங்க ளெல்லாந்
கழிபடர் கழுநீ ராகத் தொலைத்திடுந் திரிகூ டத்தின்
செழிபடர் நதிக்கு நாமந் தெய்வமாக் கதைகள் கூறி
லொழிபடா வனந்த மாகு மவையிலொன் றுணர்த்தக் கேண்மின். ()

கணத்தினு மோரூர் வைகான் கடிநகர் பதியொன் றில்லான்
பணத்தர வனைகு லாரைப் பாவைபோற் பார்ப்ப தல்லான்
மணப்பதில் விரகில் லாதான் வறுமையாற் சிறுமை பூண்ட
குணத்தினன் சிகைநான் முஞ்சிக் குழியினன் மறையோ னேகன். ()

பக்தியாம் பதிதோ றேற்றும் பசிக்குண விலாது தேம்பிக்
கன்னதியே நதிலாச் சுற்றிப் புற்கலிற் றனைநூன் பூண்டு
சிந்தைவெட் டதற்கே மாந்து திரிந்தன னெனிவா னந்தா
மூந்தையே தவஞ்செய் யாதா ரிம்மையின் முயன்று முண்டோ. (௧௫)

கடுங்கதிர் வேனிற் காலங் கையினன் மெய்யைப் போர்த்தான்
குடங்கையுங் குளிர்கா லத்துக் குறங்கினிற் புதைத்தான் வாடை
யடும்பனிச் சிசிர கால மருங்குளிர்க் காற்ற னாகி
நடுங்கின னொடுங்கி யாங்கோர் நம்பரா லயத்துட் சென்றான். (௧௬)

தாலமே லடிச்சூ டஞ்சித் தழலிடைக் குதித்தான் போல
வாலும்வெங் குளிரா லஞ்சி யாலயத் திலிங்கஞ் சாத்துஞ்
சேலையைக் கவர்ந்து போர்த்தான் பாதகச் செந்தீ யுந்தக்
காலையில் விளைப்ப மேனி கருகிக்கன் மாட னானான். (௧௭)

அற்றைநாள் வரலா றீச னலயக் களவா லென்று
பிற்றைநா ளுணர்ந்தான் சோரம் பிறரிடைப் புரிந்தார்க் கெல்லாம்
பற்றுவ தொன்றே பாவம் பரனிடைப் புரிந்த வாற்றால்
ஊற்றதே சிவத்து ரோக மொன்றினுக் கிரண்டா யந்தோ. (௧௮)

திருந்திழை வாம பாகத் தேவிறை லன்றி யிந்தப்
பொருந்துபா தகங்க ளியாண்டும் போக்கரி தென்று தேறி
யிருந்தொரு தலத்தே முக்க ணிறைவனைத் தியானித் தேத்தி
வருந்தின னிரங்கு காலை வள்ளலா ரிரங்கி யாங்கு. (௧௯)

வானமே லெழுந்த வாக்கு வடபுலந் தொடுத்துத் தென்பா
லானதீர்த் தங்க ளாடி யகலுநின் பாவ மாங்கோர்
ஞானமா நதியி லென்று நவிற்றலுங் கவற்சி தீர்ந்து
கானமார் பொழில்சூழ் சிந்து கங்கைகா ளிந்தி யாதி. (௨௰)

நன்னரு மதையே கோதா வரிநறுங் கன்னா வேணி
பொன்னியே வையை சேது பொருனைமற் றுளவாந் தீர்த்தங்
கன்னியந் துறையு மூழ்கிக் கனவரை வலங்கொண் டேகிச்
சென்னியின் மதியம் பூண்டார் சிவதிரி கூடஞ் சார்ந்தான். (௨௧)

கன்னியங் கொன்றை வேய்ந்தார் கமழ்திரி கூடச் சாரற்
புண்ணிய நதியி லாடும் போதினின் மறையோன் செய்த
திண்ணிய பாவ மெல்லாந் தீர்ந்துடன் மாசு நீங்கி
விண்ணிருள் கிழியத் தோன்றும் விரிசுட ரொளிபோ லானான். (௨௨)



அருவியந் திரிகூ டத்தி லந்நதி படிந்து பாவ
மொருவினன் வறுமை நோயு மொழிந்தனன் மறையோன் வாழ்வும்
பெருகொளி வடிவும் பெற்றான் பெற்றவாச் சரியத் தாலே
திருநதி தனக்கு நாமஞ் சித்திர நதியா யிற்றால். (௨௩)

வேறு.

கங்கைபிர யாகைவட சிந்துகோ தாவரிகா வேரி வாணி
துங்கநரு மதையமுனை கண்ணைகவு தமைசரயு சோணை யாதி [வந்து
யெங்குமுள நதிகளும்புண் ணியநதிசித் திரநதியென் றிதன்பால்
தங்கியுவந் தாடுமொரு பாகமதி மாகமதி தன்னின் மாதோ. (௨௪)

முற்காட்டும் பலதலத்து மூன்றரைக்கோ டியதீர்த்த மூழ்கும்
பேறுங், கற்காட்டி யெறிதிரையின் கவண்காட்டிப் பாவமெலாங் கா
கம் போலப், பிற்காட்டி யிரிந்தோடப் பிறவியெனும் பகையோடப்
பெரிதாந் தெய்வ, விற்காட்டுந் திரிகூட வடவருவி நல்குமென விளம்
பும் வேதம். (௨௫)

பூநாறுங் கற்பகத்தின் போதாடிச் சண்பகத்தின் பூந்தா தாடி
வானாறு தலைமடுத்து மதிசூடுந் திரிகூட வரையெம் மானைக்
கானாறு மலர்சொரிந்து கங்கைபூ சித்தமது கங்கை யாறுந்
தேனாறு தனிற்படிந்தார் சென்றொருகா லழும்படியார் செனன வாரி.

வேறு.

*வாவிகட் கதிகங் கூடல் குடந்தைவண் புலியூர் வாவி
யோவிலா நதியிற் கங்கை யுறுதிரி வேணி சங்கந்
தாவுமூந் நீரிற் சேது தடவரை யருவிக் கெல்லாந்
தீவமாந் திருக்குற் றாலந் திகழ்வட வருவித் தீர்த்தம். (௨௭)

ஓர்நதி யிடத்தி லைந்து மொடுக்கிமூச் சடக்கி யென்றும்
வார்புன லிடையே நின்று மாதவம் புரிவார் பேறு
கூர்பனிச் சிசிர நாளிற் குலவுசித் திரப்பூங் கங்கை
நீர்படிந் தொருநாட் செய்யு நித்திய கரும நல்கும். (௨௮)

வேறு.

மாகமா மதிநீரா டும்பிரயாகை மாதீர்த்தம்
பாகமா மதியினராய்ப் பல்யாண்டு படிந்தபலம்

ஞாகமா மதிச்சடையார் வடவருவி நயந்தொருநாட்
சோகமா மதிநீங்கத் தோய்ந்தாரைத் தோய்ந்திடுமால். (௨௯)

தாமாக மூழ்கினர்க்குந் தாமொருவர் பொருட்டாலே
யாமாறு மூழ்கினர்க்கு மாசூச முடம்பழுக்குப்
போமாறு மூழ்கினர்க்கும் புனல்வழுக்கி வீழ்ந்தவர்க்குங்
காமாரி சித்திரப்பூங் கங்கைபர கதிதருமால். (௩0)

அனைத்தாகும் பிறநதிக ளாடினர்க் களவளவி
லெனைத்தானும் பலனுதவு மெதிர்ந்தார்க்கும் பணிந்தார்க்கு
நினைத்தார்க்கும் புகழ்ந்தார்க்கு நீரிலொரு துளியாக
நனைத்தார்க்குங் கதிகொடுக்கு நன்னகர்ச்சித் திரநதியே. (௩௧)

ஆலைநறுங் கழைதூர்தொட் டபில்வதெனக் காலைமுதல்
வேலைமர பினிற்கதிகள் வியந்துதவும் பலநதிகள்
காலையினு மாலையினுங் கடும்பகலும் வடவருவி
பாலைபடு கட்டிதருஞ் சுவைபோலப் பலன்றருமே. (௩௨)

வான்றொடருந் திரிகூட வரைச்சாரல் வடவருவி
தோன்றியொரு நாண்மூழ்கத் தொல்வினைகள் கழிந்தோடு
மேன்றநா ளிரண்டாடி லிவ்வினையவ் வினைதேயு
மூன்றுநாண் மூழ்கினவர் கருக்குழியின் மூழ்காரே. (௩௩)

அரிதான வடவருவி யாடுவார் வினைக்குழியி
யிருதான தம்மையறிந் தேற்றதலை வனையறிவா
ரொருதான மந்நதியி லுயர்மறையோர்க் குதவுமது
தருதானப் பெருக்கமதாய்ச் சந்தானம் பெருக்கிடுமால். (௩௪)

மித்திரரும் வளநாடு மெய்யுணர்வு மனைவாழ்வும்
புத்திரரும் பேரரசும் பொருள்பலவும் புரிந்தருளுஞ்
சத்துருவின் வலிதொலைக்குஞ் சகலபா வமுந்தீர்க்குஞ்
சித்திரமா நதிப்புனலிற் சிறுகாலை படிந்தார்க்கே. (௩௫)

வலவே விரும்பினவர்க் கறம்பொருளின் பமும்வீடுஞ்
சாலவே கொடுத்தருளி யெழுபிறப்புந் தவிர்ப்பதனுஞ்



ஞாலமே லுவந்தாடுந் தவத்தோர்க்கு நான்குவகைப்
பாலுமாம் வடவருவி மருந்துமாம் பவப்பிணிக்கே. (௩௬)

வேறு.

அயனநாள் விழுவி மூநா ளட்டமி பதினான் கண்ணல்
வியனமர் திருவா ராட்டு மேதகு மாத நாட்கள்
பயனமர் மூப்பான் மாகம் பகர்வட வருவி யாடி
நயனமூன் றுடையார் சேவை நண்ணினர் பிறவி நண்ணார். (௩௭)

முன்னுவாப் பின்னுவாநாண் மொழிந்தசங் கிராந்தி திங்கண்
மன்னுறு பின்னு வாநாண் மதிகதிர் பாந்தள் சேர்நா
ளின்னவை யொன்றி லொன்று சதமடங் கேற்ற மாகு
மந்நதி படிந்தார்க் கேற்ற மாயிர மடங்கு மேன்மேல். (௩௮)

பிறந்தநாண் மூழ்கி னார்க்குப் பிறப்பரி தாகும் யாண்டு
சிறந்தநாண் மூழ்கி னார்க்குச் சிறப்பெதி ரெடுப்பர் தேவ
ரிறந்தநா ளறிந்து மூழ்கி யிறந்தவர் மூழ்கார் கும்பி
மறந்தநா ளவரைக் காலன் மறக்குநாண் மறக்கு நாளே. (௩௯)

திருவளர் திருக்குற் றாலச் சிவபுரஞ் சேரும் போது
மருவிநீர் படியும் போது மமலனைப் பரவும் போது
மொருவரை யொருவ ருன்னி யிருவருங் கதிபெற் றுய்வார்
கருவரைப் பிறவி காணா ரவர்தமைக் கண்டு ளோரும். (௪0)

வேறு.

அந்தவுவாச் சங்கிரமம் விதிபாதம் வைதிருதி யைம்பானொன்று பந்தமனுப் பதினான்கு யுகநான்கு மாலையநாள் பத்தோ டைந்து தொந்தமா மட்டகைகள் பன்னிரண்டாப் பருவநாட் டொண்ணூற் றாறு, முந்துபுனற் றுறைபடிந்து தருப்பிப்பார் பிதிர்க்கடன்கண் முழுதுந் தீர்ப்பார். (௪௧)

தாம்பெற்றார் தத்தமகார் தந்துணைவர் பெறும்பாலர் தனையை பால
ராம்பற்றால் வளர்த்தமகா ரவனருளா லிவைபிறர்க் கருளும் பால
ரோம்புற்ற பரிசதனா லுயர்ந்தவரென் றிருநால்வ ரோதுங் காலை
யேம்புற்ற துயர்பிறந் தார்க்குத் திலநீரா லிறைக்கு நீரார். (௪௨)

வேறு.

சேணில்வைத்த மதிச்சடையார் சித்திரகங் கையின்மூழ்கிப்
பேணிவைத்த தினத்தொருநாட் பிதுர்ப்பலிவைத் திடுவாரே
லேணிவைத்தார் சுவர்க்கபதத் தெள்ளுடனீ ரிறைப்பார்கள்
காணிவைத்தா ரவர்களுக்கே கயிலாயஞ் சிவலோகம். (௪௩)

அந்நிலையே பிதுர்ப்பலிக ளமைத்திடுதற் கமையாதேற்
கன்னிநீர் வடவருவி கலந்தாடித் தருப்பணஞ்செய்
தின்னியன்மா மறைவாணர்க் கியன்றபொருள் வழங்கினார்
பன்னருந்தென் புலத்தார்க்குப் பரகதியை வழங்கினார். (௪௪)

பிள்ளையுஞ்சுற் றமுநீங்கிப் பிறநாட்டி லிறந்தார்க்கும்
விள்ளுமிரு நால்வர்களி லொருவர்விரைந் தேகியந்தத்
தெள்ளருவித் தடத்தொருநாட் சென்றுதருப் பிக்கிலவ
ரெள்ளினுக்கா யிரம்வருட மிருப்பர்சுவர்க் காதிகளில். (௪௫)

புத்திரில் லாதிறந்தோர் துன்மரணம் புக்கிறந்தோர்
சத்தகா ரிடையழுந்தித் தவிக்குநா ளெவரேனுஞ்
சித்திரமா நதிக்கருணைத் திரைக்கரந்தி லவருடம்பி
னத்தியளித் தாரவர்க்கே யரசளித்தார் வானுலகம். (௪௬)

வேறு.

முத்தனையார் வரம்பழித்தோர் முதுகுரவர்க் கிடர்புரிந்தோர்
முக்கண் ணனை, நத்தனைநான் முகத்தோனை யிகழ்ந்தோர்பல் லுயிர்
செகுத்தோர் நன்றி கொன்றோர், கத்தனைவிட் டமர்க்களத்தி லோடி
னோர் நம்பினர்க்குக் கபடஞ் செய்தோ, ரெத்துணைப்பா தகரேனும்
வடவருவி படிந்தவர்வீ டெய்து வாரே. (௪௭)

அந்தணர்கண் முனிவர்கடன் கழிப்பர்பிர மச்சரிய மேநிறைந்திச்
செந்தமிழி னலிசொரிந்து மகமியற்றித் தேவர்கடன் கழிப்பர் மேன்
மைச், சந்ததியை யினிதீன்று தங்கள்பிதுர்க் கடன்கழிப்பர் நரைமே
வித்தத், தொந்தமாங் கடன்மூன்றும் வடவருவி யாடினவர் தொலை
ப்பர் மாதோ. (௪௮)

அறியாம விளமையிற்செய் பாவமெலா நன்பகலி லாட்டத் திருஞ்
சிறுகாலை படிந்திடிற்போக் காளையராய் மனதறியச் செய்த பாவம்



வறிதான புன்மாலை படிந்தார்க்கு முதுமையிற்செய் மாபாவம்போம்
பிறியார்முப் பொழுதாடில்வடவருவியெழுபிறப்பும்பெயர்க்குமாதோ. (௪௯)

கள்ளாடு மைம்பொறிக ளடக்கலொரு நெறிநடத்தல் கரணங்
காத்த, லெள்ளாம லீகைநிடந் தன்னுயிர்போன் மன்னுயிர்கட் கிரங்
கன் ஞான், முள்ளார்வம் பொறைசமித மின்சொலுடன் வாய்மை
யென வுயரீ ராறுந், தள்ளாத மனத்தீர்த்த மதுபடியீர் புனல்படி
யிற் றவலை நேர்வார். (௫௦)

வளங்கொண்மா னததான மொழிந்துபிற நதியாடு மூர்ந்தர்க்
கெல்லாந், துளங்குமவர் புறத்தழுக்குத் தொலைவதன்றிப் பெரும்
பாவந் தொலையா தாகுங், களங்கமுறு மலமகற்றிப் பாவமெலாங்
கழுநீராக் கழுவு மாற்று, துளம்பெறுதா னப்பலனும் வடவருவிப்
புனல்படிந்தார்க் குளதா மன்னோ. (௫௧)

இத்தலத்து நதிமகிமை யெங்குமே கன்னுகி யெங்கு மான
நித்தனறிந் தியமனுக்குங் குறுமுனிக்கும் வாசுகிக்கு நெடியமாலாஞ்
சுத்தனுக்கு நவின்றபடி வியாதமினனக் கொருதொகையாச் சொல்ல
யானு, முத்தகமா வுமக்குரைத்தேன் விரித்துரைக்க வயனாலு முடி
யா தென்றான். (௫௨)

தேனுறு சித்திரமா நதிமகிமைத் தேனுறு செவிகா லாகப்
பானுறு மனத்தடத்துப் பாய்ந்துகவப் பயிர்தழைத்த படிவர் பின்
வானுறு திரிகூட வரையாறு தனிற்போந்து மழுவ லானைப் [னனும்
பூநாறுமதுச்சொரிந்துபோற்றுமாறுணர்த்துகெனப்புகல்வான்சூதன்.

7- வடவருவிச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௩௪௮.

## எட்டாவது :—சிவமதுகங்கைச் சருக்கம்.

இரவி தன்குலச் சகரனோர் பரிமக மியற்றப்
புரவி யைத்திசை விடுத்தலு மகனவான் புரப்போன்
கரவி லுய்த்தனன் கபிலன்வாழ் பிலத்தது காணன்
றிரையிற் றேடுபு மக்கள்மக னஞ்சுமான் சலித்தான். (௧)

அதனைச் சாகர ரறுபதி னாயிரர் துருவி
விதனத் தாற்புவி சூழ்வரத் தொட்டனர் மிசைந்தார்
பதனத் தோர்புடைக் கண்டனர் முனிவன்மேற் பாய்ந்தா
ரிதனைக் கண்டிலான் விழித்தலுஞ் சாம்பரா யிறந்தார். (௨)

சகரன் சாகரந் தொட்டவ ரிறந்தலுந் தகவான்
மகமு டித்தன னஞ்சுமான் மகன்றரு மகவாம்
பகிர தன்றவ மியற்றினன் விரிஞ்சனைப் பணிந்து
நிகரில் சாபத்தின் மாய்ந்தவர் நரகினை நீப்ப. (௩)

பங்கை யாசனன் மொழிப்படி கங்கையைப் பரவிச்
சங்கை யாத்தவம் புரிந்தனன் கங்கையைத் தரிப்பான்
மங்கை பாகனை வணங்கிநோற் றன்னவன் வரத்தாற்
கங்கை பாற்றவம் புரிந்தன னளப்பருங் காலம். (௪)

புரியுங் காலையில் வரநதி யதிர்த்துவான் பொதிர்த்து
விரியு மெண்டிசை நடுக்குற வண்டமும் வெடிப்பக்
கிரிவி லானையு மதித்திலள் குதித்தனள் கிளர்பார்
தரிப டாதென வமரரு முனிவருஞ் சலிப்ப. (௫)

மாக மண்டலத் துடுக்குலங் கயலென மறுக
மேக மண்டலம் பாசியா மிதப்பவின் கதிர்கள்
யோக மண்டலத் திருவகைக் கமலங்க ளுறழ
நாக மண்டலச் சடையில்விண் ணடுக்குறப் பாய்ந்தாள். (௬)

அடைய வாயிரம் பருவமா பிரமுகத் தடினி
யுடைய நாயகன் சடைமிசைப் பாய்தலு முலறிப்
புடைபி துங்குறு திரவிமுன் புற்பனி போன்றாள்
விடையி னார்புகழ் பாடினு ராடினர் விண்ணோர். (௭)

வானெ லாமுடைத் தெழுசுர நதிப்புனல் வரதன்
கான மார்சடைக் காட்டிடைச் சுவறலாற் கலங்கி
மீன லோசனை பாகனை யிறைஞ்சினன் வேந்தன்
ஞான நாதர்தாள் வீழ்ந்தனன் கங்கையு நடுங்கி. (௮)



இனிகொள் கங்கையை யமைத்தர னரசனுக் கிரங்கி
யொளிர்ப னிக்கிரி விடுத்தனர் துளியெழு வகையாய்
விளிகொள் சீதையுஞ் சுசட்டுவுஞ் சிந்துவு மேல்பா
னளினி பாவனி கலாதினி கீட்டிசை நடப்ப. (௯)

பெருகு கங்கைதென் பாலதாய்ப் பகிரதன் பின்போய்த்
திருகு சன்னுவின் வாய்ப்பெய்து செவிவழி விடப்பு
மருவு சானுவி சடலைபாய் தலுமவன் மரபோர்
நரகொ ழிந்துபொன் மானமேற் சுவர்க்கமா டைந்தார். (௧௦)

வேறு.

சுதியின்மேற் சகரர்தமை விடுத்தநதி கண்ணுதலார் கபிலை மேவி மதிகுலாஞ் சடையாயென் மாய்ந்தவருக் காட்டுகென வணங்க நாதர் சுதிசெய்பா தகந்தேய்க்குந் தருமமுரு வளர்க்குமந்தத் தருமபாவத் ததிகமாஞ் சிவதருமஞ் சிவத்துரோ கங்களென வருளிப் பின்னும்.

ஒத்திடுமெண் பத்தினு லெய்துவது சிவதரும முலைக்குங் காலைத், துத்தியம்பத் திமைபூசை புரியாமை புரிந்தவரைத் துதித்திடாமை, பத்திபுரிந் தவைமறத்தல் சிவநிந்தை யெனப்புகலப் படுவதாதும், வித்தெனவும் வேரெனவும் விளைதல்சிவத் துரோகத்தின் விளைவு மாதே. (௧௨)

அவையாதிற் சிவநிந்தை யதிகமதை யெளிதெனவி யடைந்தாயினு, தவமாகப் பலகோடி யுகங்கள்புரி யினுமுனக்குத் தவிராதென்று, ரிவைதீர வருள்புரிய வேண்டுமென விறைஞ்சுதலு மிறைவர் நோக்கிச், சிவபூசை யாயிரம்யாண் டிபத்தியிருந் தனையாகிற் றீரு மென்றார். (௧௩)

உன்னுடைய சன்னிதியைப் பிரிபிலெனக் கினியொருநா ளுகமா மென்று, பின்னுமவள் வணங்குதலும் பெரியபிரான் சிறிதிரங்கிப் பேதாய் பீல்யாண், டிந்நிலத்திற் றீர்ப்பரிய பாவமொரு தினம்வசித்தார்க் கெளிதாத் தீர்க்கு, மன்னுமொரு தலமுளது நமதுமாந் சியம்பிறர்க்கு வழங்கே மென்றார். (௧௪)

அன்னமலே யருளுகென வணங்குமவ ளதிக்கிரங்கி யமலர் நோக்கித், தன்னருவித் திரிகூடம் யாமிருக்குஞ் சபிலமந்தச் சபிலை

மீது நன்னுமோ ரிலிங்கமதை யருச்சித்தாற் பாவமொரு நாளிற்
றீரும், பெண்ணணங்கே மதுவினாற் பூசைசெயி லெல்லையறுகட்
பெறுவா யென்றார். (௧௫)

என்றுதிரு வாய்மலர்ந்து விடைகொடுப்பக் கயிலைகடந் திமைய
நீக்கிக், குன்றுதனைச் சிலைவனைத்தார் திரிகூடத் தருவிசொரி குவ
ட்டி னேகித், தன்றுசிவ லிங்கமதை மதுச்சொரிந்து பூசைசெய்து
துதிக்குங் காலை, யொன்றுநதித் திருமடந்தை விழிகளிப்ப மழுவி
டைமே லுதித்தா னன்னால். (௧௬)

பாதகமா மிருள்விடிய வுதயகிரி மேலுதிக்கும் பானுவேபோல்[ர்ப்ப
வேதநா யகன்விடைமேற் றோன்றுதலு மனங்களிப்ப விழி நீர் போ
வாதிநா யகசரண மமலநா யகசரண மருளா னந்தச்,
சோதிநாயகசரணஞ்சரணமெனக்கங்கைமங்கைதொழுது வீழ்ந்தாள்.

சரணமென விறைஞ்சுதலு மன்பர்தமக் கன்புடைய தம்பி ரானுஞ்
சிரணமற வினைநீக்கி வரநதிக்கு விதிகாணு வேணி யீந்தார்
பரமர்தமைக் கங்கைமங்கை மதுவினாற் பூசைபுரி பரிவி னாலே
பரணமா மத்துறையு மாதிசிவ மதுகங்கை யாய தென்றான். (௧௮)

கான்முகத்து முனிவர்கு தனைவாழ்த்தி யெமதுவினைக் கடுங்கோ
டைக்கு, வான்முகத்து முகில்போல வந்தருளி மதுகங்கை மகிமை
யென்னும், பான்முகத்து மாரிபெய்தாய் நன்னகரான் சருக்கரைப்
பூம் பந்தர் மீது, தேன்முகத்து மழைபோலுஞ் சிவபிரான் மகிமை
யினைச் செப்பா யென்றார். (௧௯)

ஆர்த்தமால் வரைதவத்தி னார்த்தமால் வரைநதிகட் கதிக
மான, தீர்த்தமான் மியம்பிறவி தீர்த்தமான் மியங்கருணைத் திருக்
குற் றாலங், கூர்த்தமா கதித்தான மிவைமூன்று முடையானைக்
கூறென் பார்க்கு, மூர்த்திமான் மியம்பெருக மொழிகின்றான் புரா
ணமெலா மொழிந்த நாவான். (௨௦)

சிவமதுகங்கைச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௩௮௯.



ஒளியாக வெளியாக வருவாக வருவாக வொன்றி னாலுந், தெ
ளியாத பெருமானைத் தெளிவார்க டெளிவானைத் திரிகூடத்தி; லளி
யானை யனைத்துலகுக் காரியானென் றுரைத்தமறை யடியார்க்கென் று
மெளியானென் றெடுத்தியம்பு மாதலால் யானுமெடுத் தியம்பு
வேனால். (௧)

கைத்தலத்து மழுவேந்திக் கயிலைமுதற் றலத்துறையுங் கடவு
ளோரின், முத்தலைவேற் பினிலுறையு மூர்த்தியே யுயர்கருணை மூல
மூர்த்தி, யெத்தலத்தும் பரமனுளனிவனதிக னெனவுரைப்ப தெவ
னென் பிரே, லத்தலத்தி னிறைந்திருப்ப னெத்தலத்து மோரோர்கூ
றமையா நிற்பன். (௨)

கடலேழும் புறக்கடலுங் திரைபெருகி யுவட்டெடுக்குங் கற்பாந் தத்தி
லடலாழி வரைசாய்ந்து மேருவரை நிலைகலங்கி யசல மெல்லாந்
தடுமாறி யடிக்கழிந்து புவனசரா சரமொடுங்கித் தரங்க வாரி
தொடராக மண்டியபின் படருழிக் கனலெழுந்து சுவற்றிற் றன்றே.

அண்டமூ லத்தெழுந்து புவனமெலாஞ் சுட்டகன லடங்க மேலே
சண்டவா யுப்பரந்து தாவியற வொடுக்கியபின் றரிப்பாய் நின்ற
விண்டலமும் விண்டலமேற் கடவுளரு மேலுளதத் துவமு மாங்கே
பண்டையுகந் தனிற்றோன்று முறையாக வொடுங்கவொரு பரனே
நின்றான். (௪)

பின்றாகி யளவிறந்த காலமெலாம் பிரிந்திடவும் பிரியா வண்ண
மொன்றாகி யெவ்வுயிர்க்கு முணர்வாகிக் குணங்குறிக ளொடுக்கந்
தோற்ற, மின்றாகி நின்றவனே யிறையாக வெழுந்தருளி யிருந்தா
னென்றும், பொன்றாத சிவபுரம்போ னின்றபுடார்ச் சுனபுரத்தும்
பொருந்தி மாதோ. (௫)

ஒருவடிவந் தனக்கெனவொன் றிலனாகிக் கருணைதிரு வுருவாக்
கொண்டு, திருமுகங்க ளாயிரமுங் கண்களா யிரமுமெனத் திகழுந்
சோதி, யிருமைபெறு முலகனைத்து மொடுக்குமுறை தோற்றுவிக்
கு மியற்கை பேணி, யருணாதற் றிகழ்க்கமல மலர்மேலந் தனாது
ருவமாகி னானே. (௬)

திசைமுகமு மொருநான்கு மறைவிகளு மிருநான்கு செம்பொற் றோளும், விசையநெடுந் தண்டமும்பொற் கமண்டலமு முப்புரிநூல் விளங்கு மார்பு, மிசையமலர்ப் பதுமபீ டத்திருந்து நாமகளா ரிடத்தின் மேனி, யசைவிலாப் புவனமெலாம் வான்வளிதீ நீர்பாரா லருளிச் செய்தான். (௭)

வானமுதி லோரேழுஞ் சூரியருஞ் சந்திரரும் வளர்கோ ளேழு மீனினமும் விண்ணவரும் விண்ணவர்கோ னுந்திசைக்கு வேந்தர் யாரு, மேனையராங் கட்வுளரு மிருபொழுது முக்காலு மிருது வாறு, நான்மறையா றங்கமுதற் பலகலையும் படைத்தருளி நயப்பான் மன்னோ. (௮)

ஓம்வேள் வியும்வேள்வித் திரவியமு முயர்காயத் திரியு நல்கித்
தாமரைவான் முகம்புயமார் பூருவினிற் சாதியொரு நான்கு மீன்று
நாயவா ரிதிபலவுந் தடம்பலவும் வரைபலவு நதிகள் யாவுந்
தேயலர்பூஞ் சோலைகளுந் திகிரிநெடுங்கானகமுஞ் சிருட்டித்தானே.

பிணிமருவு பரசமையக் குறையிற்பட் டுலகமெலாம் பிறழா வண்ணா, மணிபெருகுஞ் சிவசமய நெறிதருசெண் பகக்கானு மருளிச் செய்து, பணிவிடைவா னவர்புரிய மறைபரவு நான்முகத்தெம் பகவனுகிக் குணில்பொருமும் முரசதிருந் திரிகூடக் கோயில்குடி கொண்டா னன்றே. (௧௦)

பார்பூத்த வயன்வடிவாற் படைத்தருளு முலகமெலாம் பரிப்பான் மேனி, கார்பூத்து வாய்பவளக் கனிபூத்துக் கண்கரங்கால் கமலம் பூத்து, வார்பூத்த கொங்கையட மயிலிரண்டு மார்புபுய வரைமேற் பூத்துங், கூர்பூத்த வளையாழிப் படைபூத்த நெடியகுணக் குன்ற மானான். (௧௧)

கமலலோசனனாகிக் காத்தனன்முன் படை[illegible]லாங் காத்து முக்கணமலநா யகனாகக் குறுமுனிக்கா யமர்ந்த[illegible]லனிறவா மாதி
விமலையாம் பரைமருவி யிச்சைஞா னக்கிரியை மேனி யாகி
கிமலனே யந்தலத்து மூவராய் முத்தொழிலு நியமித் தானே. (௧௨)

முப்பாலாய் முப்பொருளாய்ச் சிற்பொருளாய்த் திரிகூட முதல்வனுனை, வொப்பாரு மில்லானுங் கொப்பாமற் றொருபொருளை யுரைக்கற் பாற்றோ, வப்பால னவ்வடிவ னக்குணத்த னென்றவனை யறிதற் கின்னா, மெப்பாலு மிருவருக்கும் பேறிலைநான் மறைக்குமெழுத் தில்லை மாதோ. (௧௩)



ஆரிடமா னிடந்தேவ மசுரமிராக் கதம்பதிட்டை யைந்து கூற்று
லெரினாங்கு தலமநந்த மியம்புசயம் புவுமநந்த மிவற்றின் மேலும்
பாரருணை போகலிங்கஞ் சைவலிங்க மதுரைபரா பரமத் தெல்லாஞ்
சீரிணங்கு குற்றாலச் சிவலிங்கம் பரமரக சியமே யாமால். (௧௪)

இமைப்போது கொன்றையிலோர் நொடிப்போது கூவிளந்தி விலிங்க நாடி, யமைப்போது நானுணர்ந்து தேவரெலா மித்தலத்தை யகலா வண்ணந், தமைப்பேணி யிருந்தருள வேண்டுமென வரம்வேண்டத் தந்தோ மென்று, நமைப்பேணி நாதனருள் புரிந்ததற்கு வேதமொரு நான்குஞ் சாட்சி. (௧௫)

பற்றுகப் பதஞ்சலிவெம் புலிபாவத் திருச்சிற்றம் பலமாத் தில்லைப்
பொற்றுன நடம்புரிவார் திருவேடு பிடித்தெழுதப் புராண மோர்ந்து
கற்றருங் கல்லாரு முருகுகவி வாதவூர்க் கருணை வள்ளல்
குற்றாலத் திற்குறியா யிருந்துமென் றுரைத்ததிந்தக்குறிப்பாலன்றோ.

அன்னவகை யாலகில தலங்களுக்குங் குற்றால மாதி யாகு
முன்னமுறை திரிகூட மூர்த்தியே மூர்த்திகளின் மூல மூர்த்தி
யின்னவனைப்பூசிக்கும்பூசையேயனைவருக்குமேற்கும்பூசை [போல.
மன்னுபுனன் முட்டில்விடர் கொப்பெலாந் தழைத்தோங்கு மகிமை

சாலைதொறு மெரிவளர்க்கப் புகவேண்டா தவம்புரிந்து தவிக்க வேண்டா, சோலைநறுஞ் செண்பகஞ்சூழ் சருதிநிறை குறும்பலவிற் சோதி நாத, னாலயத்தை நோக்கிவரி னடிக்கடியோர் பரிமகப்பே றமையு மாங்கண், மாலயனுக் கரியானை வந்துபரா வினர்பேறு மதிக்கொணுதால். (௧௮)

மணிசெய்பூண் செழுஞ்சாந்து மலர்மாலை தூசுகளால் வரதன் மேனிக், கணிசெய்வார் தம்மேனிக் கணிசெய்வார் வானுலகி லமரர் மாதர், கணிசெய்வான் பொழில்சூழுந் திரிகூடப் பரனுர்க்குக் கல்லாற் பொன்னாற், பணிசெய்வார் தமக்கேவற் பணிசெய்வார் சயமாதும் பதுமமாதும். (௧௯)

காமாரி தனக்கொருபூ வனஞ்செய்வார் கற்பகப்பூவனத்தில்வாழ்வார்
பூமாரி சொரிவார்மேற் சொரிவார்கள் வானோர்கள் பொற்பூ மாரி
கோமாரி பான்மாரி ததிமாரி நெய்மாரி கோதுதீர்ந்த
தேமாரி சொரிவார்கள் கடல்கள்கு மூலகாண்டு சிவமே சேர்வார். ()

குவிமாலை மதிவேணித் திரிகூடப் பரனார்க்குக் குளக மார்தி
கவிமாலை புனைந்தார்கள் கற்பகமா லையைப்புனைந்து கற்பம் வாழ்வார்
தவிராமுக் கனியானுந் தக்கவிள நீரானுஞ் சாந்தத் தானு
மவிடேக மாட்டுமவர்க் கவிடேகஞ் சூட்டுவர்மே லயனு மாலும். ()

மோனைவா கனமியற்றித் திருவிழாப் பொலிவுமுதன் முயன்றோர் வெள்ளை, யானைவா கனத்தார்க்கு மன்னவா கனத்தார்க்கு மதிகராவார், தானைகே தனக்குடைமேற் கட்டிபரி வட்டமணித் தரும்பு மோலி, யேனையா பரணமுத லியற்றுவார் திசைக்கிறையா யிறைபாற் சேர்வார். (௨௨)

கொடியாடு மணிமாட முயர்கூடத் திரிகூடக் கோயி லார்க்குக் கடிமாலை மலர்தொடுப்பார் கமழ்திருமஞ் சனமெடுப்பார் களபஞ் சேர்ப்பார், படதூபம் விளக்கிடுவார் பரிகலங்கள் விளக்கிடுவார் பணிவார் தெய்வ, வடிவாகிச் சிவபுரத்துத் தொண்டர்குழாத் தண்டர்குழாம் வணங்க வாழ்வார். (௨௩)

வேறு.

பானு வாரத்திற் பானு வுதித்திடத்
தேனு லாம்புனற் சித்திர கங்கைதோய்ந்
தானு லாவுமம் மானை வலஞ்செய்வார்
வானு ளார்தொழு மால்பதஞ் சேருவார். (௨௪)

திங்கள் வாரங் கதிர்படு செவ்விவாய்ச்
சங்க வீதிச் சயம்புவுக் கோர்மல
ரங்கை யாலணி வாரணி விப்பவ
ரெங்க ணாதர் சிவபுர மெய்துவார். (௨௫)

சேயின் வாரத்தி லங்கரன் செங்கைவேற்
சேயர் தாளதக்குச் செண்பகப் பொங்கர்வாய்ச்



சேய பாதத்திற் சேய்மலர் சாத்துவார்
சேய ராயிருப் பார்சிவ லோகத்தில். (௨௬)

அத்த மார்புத வாரத்தி லம்பிகை
யத்த மார்செண்பு காடவி யன்னலை
யத்த மார்தும்பைப் போதுகொண் டர்ச்சிக்கு
மத்தர் தாரகை வானுல காளுவார். (௨௭)

அம்பொன் வாரத் தருவி படிந்தெழீஇப்
பைம்பொன் வாசத் தலரிப்பைம் போதுதூஉய்
நம்பன் வார்கழல் போற்றினர் நண்ணுவார்
செம்பொன் மார்பகத் தார்திரு வைகுந்தம். (௨௮)

திருந்து நன்னகர்த் தேவுக்கு வெள்ளிநாட்
கரும்பின் கட்டி பருப்புக் கலந்திடும்
விரும்பு தோய்வை யமுதுசெய் விப்பவ
ரரும்பு பூவி னயன்பத மேவுவார். (௨௯)

காரி வாரத்திற் சித்திர கங்கையாங்
வாரி தோய்ந்து பிரான்வலம் வீதியைச்
சீரி னோர்வல மாகினுஞ் செய்குவார்
நாரி பாகர் கயிலையை நண்ணுவார். (௩௦)

ஆறு செங்க லணிவிரல் போன்றகன்
னீறு காசன வாகினு நீள்வினை
யேறு நன்னகர்க் கோன்பணிக் கிகுவார்
வீறு வெள்ளிக் கயிலையின் மேவுவார். (௩௧)

நீவு சாந்தமோர் நெல்லள வாகினு
மாவின் பாலொரு கையள வாகினும்
பூவொன் றாகினு நன்னகர்ப் பொன்னகர்த்
தேவின் பாலணி வார்சிவ லோகரே. (௩௨)

சிறுகாலை பணிவார்கள் சாலோகத் துறைவர்திரி கூடத் தேவை
யுறுகாலை பணிவார்கள் சாமீபத் திருப்பர்கதி ருச்ச மாகப்

பெறுகாலை பணிவார்கள் சாரூபம் பெறுவர்கதிர் பிறங்கல் சாயு
நறுமாலை பணிவார்கள் பரமசா யுச்சியமே நண்ணு வாரே. (௩௩)

திருநாளுஞ் சிவவிரதந் தருநாளும் வருடவழிச் சிவனி சேடம் வருநாளுந் திரிகூடப் பெருமானை யடியரவ வருவோர் யார்க்கு மொருநாளைக் கன்னமிட்டார் தருமமெலாங் கன்னமிட்டா ரொருநாட் கூட, விருந்தினைக் கன்னமிட்டா ரிருவரையுங் கன்னமிட்டா ரிடத்திற் சேர்வார். (௩௪)

தருமமே நிறைவேறுந் திரிகூடம் பணிவார்க்குத் தாங்கள்வேண்டும்
பொருளெலா நிறைவேறுங் குற்றாலத் தலமகிமை புகழ்கின் றோர்க்கு
மருவுவலம் புரிகிதி வலம்புரிவார்க் கின்பமென்றும் வளரு மேன்மே
லருள்குலாங் குறும்பலவ ரடியிணைகள் பணிவார்க்கே யழியா வீடு.

வில்வந்தான் றுதவிதான் கொன்றைதான் றிரிகூட விமலாக் கீவார், செல்வந்தான் பாகதிதான் செப்பவெளி தோவதற்குத் திறமிலாதார், புல்லென்று மம்மனத்தே ரிலையென்று மங்கிடைத்த பூவென் றாலு, மல்லென்று மம்பகலென் றாலுமெந்தை யார்க்களிக்கி லமர ராவார். (௩௫)

நஞ்சமுத நுகர்ந்தார்க்குப் பாலமுத நுகரவொரு நாட்செய் வாரே
அஞ்சமுதந் தங்கள்குழாத் துடனமுத நுகர்ந்திருப்ப ரூழி கால
மஞ்சமுத கதிர்முடித்தா ரடியவர்க ளடியவர்கட் கடிசி லீவார்
கஞ்சமுத லயனுகி யரியாகிப் பெரியசிவ கணத்த ராவார். (௩௭)

நேசிப்பார்க் கினியபிரான் குற்றாலச் சிவசரிதை நிகழ்பு ராணம்
வாசிப்பார் புகழெடுத்து வாசிப்பார் சிவபுரத்து வாழ்வோ ரெல்லாம்
பேசிப்பார் வானுலகம் புகழ்மகிமைத் திரிகூடப் பெருமான் றன்னைப்
பூசிப்பார் தேவரெனப் பூசிப்பார் தமைத்தேவர் பூசிப் பாரால். (௩௮)

கண்டத்தே கறைபூண்டா ரடியவரைக் காப்பதொரு கடன்பூண் டார்க்கு, மிண்டர்க்கே யானாலும் விசையம்வரு மவர்க்குறுகண் விளைப்பா ராகி, லண்டர்க்கே யானாலு மவசெயமா மறுவினவின்மல மூர்த்தி, தொண்டர்க்காந் தீணைவருக்குத் தீணையாவா ரவன் றனக்குத் துணை யாவார். (௩௯)



உலையெடுத்துத் தொண்டர்தமக் கமுதெடுப்பார் பெருமையெவ ரறைப்போ ருண்ட, விலையெடுத்தார் சென்றுசென்று தலையெடுத்தார் விஞ்சையரா யிமையோ ராகிச், சிலையெடுத்தார் வடவருவி யம்பெடுத்துத் தெளித்தாலுஞ் செம்ம னோய்போங், கலையெடுத்த தமிழ்முனிக்கா மாலெடுத்தார் தமைப்பணிவார் கதியென் சொல்கேன். (௪௦)

நெடிதான வல்கனைத்து மீன்றொரு மளத்தாரு நேடிக் காணக்
கொடியாடு மொருபாகன் குற்றாலப் பரன்மகிமை கூறப் பாற்றோ
பொடியாடுந்திருமேனித்தொண்டர்குழாந் தனைப்புகழப்புகுவோ மாலடியாருக் கடியவரு மருவருப்ப ரரியபன்மா லரசம் வாழ்வும். [௪௧

என்றுகலை பயில்சூத னியம்புதலு நிகைநோக்கி யிறைஞ்சி யேத்தி, நன்றுநன்று திரிகூடக் கடவுள்போ லருட்கடவுள் ஞாலத் தோன்று, மன்றுமிலை யின்றுமிலை யென்றுமிலை யதியமென்று பாடிப், பின்றுசடை மாமுனிவ ருடலெடுத்த வுறுதியின்று பெற்றோ மென்றார். (௪௨)

வேறு.

முனிவரர் பரவிப் பின்னு மூர்த்தியா லார்ந்த மான
புனிதமார் பரைபீ டத்தின் மகிமையைப் புகலென் றேத்தப்
பனிவரை யிருந்து தென்பாற் படருநாட் கும்ப யோனிக்
கினிதருள் பரம கிசை முறையினி யியம்புஞ் சூதன். (௪௩)

மூர்த்திவிசேடச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௪௩.

---

## பத்தாவது— பராசத்தி பீடச் சருக்கம்.

ஆதிபு நடுவு மீறு மளவையு மில்லா வொன்றின்
சோதியாற் குடிலை பெய்தக் குடிலையி னுநந் தோன்றி
நாதமேல் விந்து தோன்ற விந்துவி னுதித்து நாதங்
கோதிலாத் திரிகூ டத்திற் குணங்குறி கடந்து நின்றான். (௧)

அன்னநா தாதந் தன்னி லரிய விந்து சத்தி
தன்னிடை யுதித்துப் போகந் தழைத்தெழு தானை யாகி

நின்மலப் பரையாஞ் சத்தி நிகிலகா ரணத்தி னாலே
நன்னகர்ப் பரன்பான் மேவு மகிமையை நவிலற் பாற்றே. (௨)

சிவபெருங் கோண நான்கு சிற்பரை கோண மைந்தா
நவபெருங் கோணத் துள்ளே நண்ணுமீ ரிருபான் முக்கோ
ணிவர்தரு வட்ட மேன்மே லெட்டித ழீரெண் கோண
முவரிமு வட்ட மூன்று சதுரமு முளதோர் பீடம். (௩)

அப்பெரும் பீட மன்றே யருட்பரா சத்தி பீட
மொப்பீரும் பரம யோகத் துறைதலால் யோக பீடந்
தப்பிலா வகில மூலந் தரித்தலாற் றரணி பீட
மிப்பெரும் பீடத் துள்ளா ளிறைவர்பா லெம்பி ராட்டி. (௪)

நங்கைபா லாதி யிச்சை ஞானநற் கிரியை யென்னப்
புங்கவ னருளா லைந்து சத்திகள் பொலிந்து தோன்ற
வங்கவர் தம்மா லெம்மா னியற்றுவ னதிகா ரங்க
ளிங்கவ ருருவ மெம்மா லியம்பரி தியன்ற சொல்வாம். (௫)

நதிமதி புனையு மோலி நாட்டங்கண் மூன்று வாசச்
சததள மபயந் தானே செபவடந் தரிக்கு நாற்கை
மதிமுக மைந்து நான்கு மரபின்மூன் றொன்று நான்காம்
பதிவெண்மை பச்சை செம்மை பால்பொன்மை யைவர் மேனி. (௬)

இனியசத் திகளோ ரைந்தா லைந்தொழி லியற்று மெங்கோ
னனிதமில் பரையே யாதி சத்தியா யருளாற் றோன்றி
மனிதயாண் டொன்று சென்றால் வருதின மொன்றாந் தெய்வப்
புனிதயாண் டைந்நூ றுபொருந்துவள் கருப்ப மாக. (௭)

ஒருபெருங் கருப்பந் தன்னி லுயர்ந்தகற் பகப்பூங் கொம்பு
தருமிரு நிதிபோற் பொன்னைச் சதுர்முகத் தவனைத் தந்தாள்
கருதுமோர் கருப்பந் தன்னிற் கமழ்வல்லி சாத மொன்று
மரகத மிரண்டுடன் றென்ன மாலுட னுமையை யீன்றாள். (௮)

முற்றரும் புணரி யீன்ற முத்துநற் பவளம் போல
மற்றொரு கருப்பந் தன்னில் வாணியை யரனை யீன்றாள்.



வெற்றிநான் முகற்கு வாணி விண்டுவுக் கலர்மேற் செல்வி
யுற்றசீர்த் தார மாக்கி யுமைமணம் புணர்ந்தா னெம்மான். (௯)

நிமலனும் பிரம சாரி நின்மலை யென்னு ஞானக்
குமரிபா லகிலந் தோன்றக் குற்றாலங் கோவி தாரஞ்
சமருக மென்னு நாமந் தருவரை யாத்தி நீழ
லமர்தலாற் றிருக்குற் றால மானது மூலட் டானம். (௧௦)

முகின்முலை யாதி சத்தி மூவரைப் பயந்த தாலுந்
திகழுமூ விசேடத் தாலுந் திரிகூட மென்னு நாம
நிகழ்வது தலத்துக் கந்த நிமலைசன் னிதிக்கே நன்று
சகமெலாந் தொழுநின் றோங்குந் தானுமா லயப்பூந் தொட்டில். (௧௧)

பூவணி மருமத் தானும் பொன்னணி மருமத் தானு
நாவணி யொருகோம் பானு நனிமுகத் தொருகோம் பானுந்
தேவர்தஞ் சிறையை மீட்ட செவ்வேளுஞ் சிலைக்கை வேளு
மேவரும் விரவுந் தான மிவள்பெருஞ் சன்னி தானம். (௧௨)

வேறு

பராநுபவஞ் சிவாநுபவ மெனுநாழிக் கிருநாழிப் படிநெல் லாலே
தராதலத்தொட் டகிலாண்டம் வளர்த்தருளி யறம்வளர்க்குந் தாயா
யென்று, நிராமயசிற் பரனிடத்துஞ் சிற்பரையாய்த் திரைகடல்
போ லீங்கி நீங்காப், புராதனியைத் திரிகூடத் திரிபுரையை யலதெ
வர்க்கும் புகலிலை யுண்டோ. (௧௩)

செங்கதிரும் வெண்கதிரும் வலம்புரியும் பொலம்புரிசைத் திரி
கூடத்து, நங்கைபரா பீடமதின் மேடமதி தனிலாவி னறுநெய்
யாட்டி, மங்கலப்பொற் பதம்பணிவார் மால்பதமே லுரிய மதியின்
வாசம், பொங்கலர்செண் பகப்போதா லருச்சிப்பார் சிவபதத்திற்
பொருந்து வாரே. (௧௪)

வெள்ளிநிலாக் கொழுந்தோட்டுஞ் செழுந்தோட்டு மல்லிகையுமா
ன் மிதுனத் திங்க, ளள்ளியள்ளி யன்பதத்தி லருச்சிப்பா ரயன்
பதத்தி லனுகி வாழ்வார், தெள்ளியகற் கடகமதி கருப்புரசந் தனங்
கொடுசிற் பரைபீடத்தி, லொள்ளியமந் திரபதத்தா லணிபவரிந்
திரபதத்தி லுறைவா ரன்றே. (௧௫)

அவளவனு மதுவுமென வினைத்துயிரு மனைத்துலகு மருளிச் செய்தா
ளெவளவளாந் திரிகூடப் பரைபீடத் தலரியினு லியாவி மாதந்
தவளமலர் கனகமலர் சாத்துமவர் வாணிதிரு வருளிற் சார்வார்
பவளமலர் சாத்துமவர் பரையருளிற்பரமின்பசிவ பதத்திற்சேர்வார்.

கன்னிமதி சென்னிமதி குலவுதிரி கூடவரைக் கவுரி பீடத்
துன்னியுயிர் கிருதமுட னமுதமைப்பார் பரிதிவள ருலகிற் சேர்வா
ரந்நிலைது லாமதியிற் சந்நுறு தித்தபில மாட்டி னார்கள், சென்னி
நான் கெழில்படைத்துப் பொழில்படைப்பான் பெரும்பதத்திற் சே
ர்கு வீரே. (கஎ)

பெருகியநெய்த் தீபமிட்டு விருச்சிகத்திங் களிற்காண்பார் பிற
வி காணு, ரொருகனுவிற் பருப்பமுத மூட்டினர்வா னுட்டமுத மு
ண்டு வாழ்வார், மருவமர்சென் பகச்சோலைச் சிற்பரைபீ டத்தினி,
தா மகர மாதந், திருமலியுங கருப்பூர தீபமிட்டா ரமரகுல தீப மா
வார். (கஅ)

வடவருவித் திரிகூடச் சாரல்வளர் பரைபீடம் வணங்கி யேத்
திக், கடமதியி லரிசனபா னிதஞ்சாத்திற் சுடர்மதியின் கதியிற் சே
ர்வா, ரடல்பெருகுங் கயன்மதியி லேவகைய திரவியங்க ளமைத்து
வாசக், குடகறுநீ ராட்டினவ ரழிவிலாப் பரமபதங் கூடு வாரே (கக)

துப்பமலர்க் கரங்குவிப்பார் கையினுற் செய்தவினை தொலையு
நாவாற், செய்யபுகழ் வாழ்த்தினர்க்கு வாக்கினுற் புரிபாவஞ் சிந்த
புங் கண்ணு; ஐய்யவெதிர் காண்பார்க்கு விழியினு விளைத்தவினை
யொழியு ஞானத், தையல்பரை பீடம்வலம் புரிந்தாரைப் பிரிந்தோ
டுஞ் சகல பாவம். (உ0)

சென்றுபணி வார்புகழ்வார் திரிகூடச் சிற்பரையைத் தியான
ஞ் செய்வார், வென்றிமன முதலாக முப்பொறியாற் செயும்பாவம்
விரைவி னீங்கு, மன்றுடையார் குற்றாலம் பரவியருட் பரைபீடம்
வணங்கி யேத்தி, நின்றுதொழு மட்டிலன்றே பழவினைக ளவரிடத்
து நிற்ப தெல்லாம். (உக)

உயர்சாயத் திரிசெபிக்கிற் கற்பமா யிரம்பிரம் னுருவாய் வாழ்
வார், பயனுமெட் டெழுத்துஞ்சக்தி ஸரியுருவா யிரங்கற்பம் படைத்



து வாழ்வார், புயலாடுந் திரிகூடப் பரைபீடத் தஞ்செழுத்தைப்
புகல்வார் வெள்ளிக், கயிலாயத் தொருபதினு யிரங்கற்ப மிருப்பர்து
தற் கண்ண ராக. (உஉ)

இவ்வண்ணம் பலவுளவாந் திரிகூடப் பரைமகிமை யென்று
வாக்கான், மைவண்ணக் கந்தாத்தார் மறைவண்ணச் சதுரகவி யமல
யச் சாரன், மெய்வண்ண முனிக்குரைத்த படிசூத னுரைத்தருளி
மேலோர் வேண்ட, வவ்வண்ண மறைவடிவாங் குறும்பலா மகிமை
யினை யுரைப்ப தானுன். (உங)

10-பராசத்தி பீடச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—சருசு.

## பதினொராவது:—குறும்பலாச் சருக்கம்.

ஈங்கிது வென்னக் காட்டு மியல்பினுக் கெட்டா தாகி
யழுங்கன நினைவு வாக்குக் கரியதாம் பெரிய சோதி
பாங்கரு ளுருவாக் கொண்டு பரையரு ளிச்சை ஞான
மோங்குசீர்க் கிரியை மூன்று மலகெலா மருளிச் செய்தான். (க)

அந்திவா னனைய மேனி யரையிருள் புரையுங் கண்டத்
தெந்தையார் வீதன மைந்தி லாகம மெழுதாள் கேய்ந்த
பைந்துகிர்க் கனிவாய் வள்ளம் பரந்துதேன் வழிந்தா லென்னத்
தந்ததேழ் வதன நான்குஞ் சதுர்மறை விரித்த வன்றே. (உ)

மூலமா மறைக ளுன்காய் முன்னவ னருளாற் பின்னு
மேலவா மங்க மாறுய் மிருதிகள் பலவாய்ப் பேத
நூல்களாய்ப் புராண மாகி நுவன்றபல் கலைபா யென்றுங்
காலமுங் கணக்குங் காட்டிக் கதிக்கெலாங் கதியாய் நிற்கும். (ங)

காரணர் புவனங் காப்பு நான்முகன் படைப்பும் வெள்ளை
யாரண னரசும் வானோர் வாழ்க்கையு மந்த ணுளர்
காரண மகமு மேனைக் கடவுளர் தவமு மாதி
யாரண நடப்பா லன்றோ வகிலமு நடப்ப தம்மா. (ச)

அவரவர் குலமா சாரீ டூநாசாரங் குணங்கள் குற்றந்
தவர்படி துன்ப மின்பஞ் சத்திய மசத்தி யங்கள்

பவனமே பவர்க்கம் பாவம் புண்ணியம் பகுத்தி யார்க்குங்
கவர்படக் காட்ட லாலே கண்களே பொருவும் வேதம். (௫)

அன்னது மனுக்கள் வாழ்வு பகலிடத் தழியும் வேதாத்
தன்னது நிசிகா லத்திற் சகமெலா மழிவு நோக்கிப்
பன்னருங் கால மெல்லா மழிவிலாப் பான்மை மேன்மைப்
புன்னுதன் கருத்தா னுன்னி யுபநிடப் பொருளா லோர்ந்து. (௬)

கண்ணுறை கவின்சேர் நெற்றிக் கடவுளா லன்றி யிது
விண்ணவர் முதலோர் தம்மால் விலக்குதற் கரிதா மந்த
வண்ணல்பே ரருளை வேண்டி னறஞ்செயற் பால தாகு
மண்ணினி லறமுந் தானந் தவமிரு வகையா மன்றே. (௭)

தான்மே தவமே யார்க்குந் தருமமே யெனினு மேலை
வானமே யாதி யாய போகமே வளர்க்குந் தான
மோனமேல் விரதம் பூண்டு முற்றுமே பற்றி லார்க்குத்
தீனமே தவிர்த்து வீடு சேர்ப்பது தவமே யாமால். (௮)

என்றுப நிடத வேத மியல்பினு லுணர்ந்து நாளு
மன்றுமெய்த் தவமே தான நன்னகர்த் தலமே யென்று
நின்றது பனச மாக நெடிதுநாட் பரனைத் தேடிக்
குன்றுசூ ழுலக மெல்லாங் குலமறை தன்னைத் தேட. (௯)

சீலமந் திரவி லாசச் செண்பகா ரணிய மேவிக்
கோலமந் திரங்க ளெண்ணில் கோடிக்கு மேலாய் நின்ற
மூலமந் திரத்தை நோக்கி மூலமீ தில்லா மூர்த்தி
யாலயந் திரத்தை யேத்திச் சூக்க மந்திரத்தை யுன்னி. (௧௦)

பூங்கிளி மழலை பாகன் புடார்ச்சுன புரத்திற் சென்று
மோங்கெழு மறைக டாமே யுலப்பிலாத் தவங்கள் செய்து
தாங்கியு மிளைத்துந் தேடித் தளங்கியு மநேக கால
மேங்கின வம்மா முக்க ணிறையரு ளொளிதோ யார்க்கும் (௧௧)

ஆயிரஞ் சுருதி வேதந் தவம்புரிந் தமர ரான்ற
வாயிரப் பதிற்றுன் டெல்லா மெய்தில னுத லாலே



பாயிர முகஞ்சேர் கங்கை யணிந்தவ னடிகள் பேணி
யாயிரந் திருநா மங்க ளேத்தினின் றுரைத்த வன்றே. (௧௨)

வேறு.

கங்கை வார்சடை யோனே நமோநம கஞ்சன் மாலறி யாதாய் நமோநம, மங்கை பாமனை பாகா நமோநம மந்திர ஞானசொ ரூபா நமோநம, சங்க வீதிவி லாசா நமோநம சம்பு நாதவி னோதா நமோநம, செங்கை மான்மழு வாளா நமோநம செண்ப காடவி நாதா நமோநம. (௧௩)

வேறு.

நடமிடு பராபரா நமோநம நதிபொதி சடாதரா நமோநம
திடதப யபூதரா நமோநம திருமலை நிராமயா நமோநம
குடமுனி தயாபரா நமோநம குழன்மொழி மனோகரா நமோநம
வடவிட பகேதனா நமோநம வரதர் சிவாசிவா நமோவென. (௧௪)

வேறு.

கலைத்தழும் பிருந்த வேதங் கருதிமெய்த் தெய்வ நாதன்
சிலைத்தழும் பிருந்த தோளுஞ் செண்பகத் தொத்தை கொங்கை
மலைத்தழும் பிருந்த மார்பு மழுவினோ டிறையும் வாரேனார்
தலைத்தழும் பிருந்த கோலச் சரணமுந் தோன்ற நின்றான். (௧௫)

வேறு.

நின்றுவிடை யேறுங்கா டீசி கொடுத்தருளி யருணைக்கி னிமல ன்வாசத், தென்றலுட னியாமறையுந் தெண்பகக்கா வமர்ந்தருந்த வஞ்செய்த வாற்று, மென்னமுவந் தேமறைகா ளென்னுமக்கு வேண்டும் வர மியம்பீ ரென்ன, மன்னிலனா டியபெருமா னருளுதலுந் திருவடிகள் வணங்கி வாழ்த்தி. (௧௬)

நிற்பதற்க வேண்டுமெல நின்றனட்கு முனக்குநாற் றுமை யிந்தச், சிற்பரனை நமதிதலை திருக்கோயில் கொண்டருளிச் செய்தல் வேண்டும், தப்புமுறு பிரளயங்க டலைதூன் றைமுமழிக்குங் கால மேனும், தற்பரநின் றிரிகூடம் பேரலெனக்கு மழியாமை தருதல் வேண்டும். (௧௭)

மூர்த்தரவர பேருமிவ்வூர் தருமநின்ற பரவுதலு முக்கண் மூர்த்தி, பந்தவரங் கொடுத்தருளி யொருவடிவாய்ப் பலவடிவா ய

மரா நிற்பச், சொந்தமறை யொருநான்கு மொருவடிவாய்ப் பலவடி
வாய்த் தோன்றிற் றன்றே, யெந்தைபிரா னடியவரைத்தா னிருந்த
படி யிருத்துவது மியற்கைத் தம்மா. (௧௮)

ஆகையாற் சதுர்வேதந் தருவாக மூலமதன் மூல மாகப்
பாகையா னவையிரண்டின் கவராகச் சுருதியெலாம் பணைக ளாகச்
சாகையா னவைபசிய சாகையா வுபநிடதந் தவிராச் சுல்கொண்
டோகையார் தருமமுதப் பெறும்பலவுங் குறும்பலவே யுதவுமாதோ.

அப்பலவின் வடிவுசதுர் வேதவடி வாதலினா லதன்பா லாக
வெப்பணிதே வருமிருக்கு மியல்பினா லொருகுடநீ ரிதன்பால் வார்க்
கிற், செப்பரிய தேவருக்கு மூவருக்கு மபிடேகஞ் செய்த தாகும்
கொப்பலரு கீழவிடை யுருச்செயுமந் திரங்களொன் றுகோடி யாமால்.

ஓதரிய திரிகூடச் சாரலுறை குறும்பலவி னந்தி பூத்த
மாதவனை மம்புகழ்வார் வைகுந்த பதத்தினிலென் றும் வைகி வாழ்வார்
வேதபா ராயணஞ்செய் வேதியர்க ளரன்கயிலை வெற்பிற் சேர்வார்
யாதுமோர் மகம்புரிவா ரிந்திரன்போற் சதமகப்பே றெய்து வாரே.( )

ஒருமதிவெள் ளடைபாகு தானமிடி லிருமதிவா ழுலகிற் சேர்வார்
வருமதிதோ றங்கொடிப்பார் மகிமையுரைப் பரிதுமறை வருக்கைகீழ்
விருபடிநெல் விளையுநில மீவார்க ளெழுபடிக்கு மிறைவ ராவார் [பார்
கருதுபிதுர்ப் பலியிடுவார் தலைமுறைகள் மூவேழுங் கதியிற் சேர்ப்
நெல்லிடுவார் பொன்னிடுவா ரமுதிடுவார் மறைக்கருவி னிழலி
லாயின், புல்லிடுவார் தமக்கமரர் விருந்திடுவார் திருக்கோயில் பொரு
ந்த வோர்செங், கல்லிடுவா ருலகாள்வார். கருங்கலிடு வார்கடவுட்
கயிலை சேர்வார், சொல்லிடுவா ரஞ்செழுத்தைத் துதித்திடுவா ரிமைய
வருந் துதிப்ப வாழ்வார். (௨௰)

அந்தமா தியுங்கடந்தார் குறும்பலா மகிமையிவை யனைத்து மேனாள்
விந்தமால் வரைகடந்த முனிக்கருளிச் செய்தபடி யின்பிற் சூதன்
மந்தமா னததான நதித்தானத் தோயார்க்கு முத்தி நேர்பு
மந்தமா ருததான மகிமைமுனி வோர்கேட்ப வழங்கா நின்றான்.

11-வது குறும்பலாச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—௪௨௮.

## பன்னிரண்டாவது:—மந்தமாருதச் சருக்கம்.

கல்வி யாதனுஞ் சனகரும் புகழ்வது கவில்வோர்
தொல்வி யாதியும் பாவமுந் தொலைப்பது சுருதிக்
கல்வி யாவையு முணர்வையுங் கொடுப்பது கருதிற்
செல்வம் வீடுபே றளிப்பது செண்பகா ரணியம். (௧)

ஐந்து நூற்றுவ ரந்தண ருமகச் சாலை
சிந்தை யாய்முது தவம்புரி தேவராச் சிரமஞ்
கொந்து பூங்குழற் பரையுடன் பரனுறை கோயில்
சந்த நூடவி வேலிசூழ் சண்பகா ரணியம். (௨)

பிரச மாமலர்ச் செண்பகப் பொதும்பரிற் பிறந்து
திரவு பூஞ்சினைத் தொட்டிலாட் டயர்ந்துதே னருவிப்
பரம வாரியிற் படிந்துகீள் பணிலமாக் கோதிற்
குரவன் முன்றில்வாய்த் தவழ்வதோர் தென்றலங் குழவி. (௩)

அன்ன தென்றலின் மகிமையா லருந்தவ குறையு
நன்ன கர்ப்புடார்ச் சுனபுரத் தெல்லைநற் றிசையுள்
மன்னி யின்னுயிர் விடுத்தனர் பாதக மறையோன்
கின்ன நீங்கிமேற் கதிபெறு மகிமையைக் கிளப்பாம். (௪)

வேறு.

விண்டலைத் தெங்கின் பாளை மிடறுடைத் தொழுகு வானை
கொண்டலைக் கிழியப் பாயக் குழவியைத் தருவந் தாய்போற்
கண்டலைக் கழுகை மாவைக் கதலியைக் கடந்து தேமாந்
தண்டலைச் சென்னி நாடு தாங்கீர்ப் பொன்னி நாடு. (௫)

பாரிடை நீதி நீராப் பல்குடி பயிர்க ளாகச்
சேரியர் செங்கோல் வேலி கோலிய நெடுஞ்சோ ணாட்டுப்
பேரிய லந்தணாளர் பெருங்குடித் தலைமை பூண்டோ
னாரிய மறைநூ லாதி யருங்கலை பயின்ற நாவான். (௬)

அருமகம் புரியுங் காட்சி யத்திரி கோத்தி ரத்தான்
பெருமகத் தவஞ்சேர் கல்வி யத்திரி யெனும்பே ராளன்
வருமகத் துணையாள் கற்பின் மடக்கொடி வயிறு வாய்ப்ப
வொருமக னுதித்தி சேய வுதித்தன னுருவின் மிக்கான். (௭)

சீர்பயில் குடிக்கோர் செல்வத் திருமக னுதலாலே
பார்பயின் றறியான் மூன்று பருவமு மருமைத் தாயர்
தார்பயின் முடிமேற் கைமேற் றந்தையார் மடிமேற் கோல
மார்பின்மேல் வளர்ந்தான் றருப் புல்லுரீஇ வளர்வ தேபோல். (௮)

தாலமேற் பயிலுந் தோறுந் தன்குலத் தரும மஞ்சி
யோலமிட் டரற்றல் போல வொலிமணித் தண்டை யார்ப்ப
ஞாலமேற் கிடந்தீ பாவ நடைகற்ப நடைகற் றன்வேள்
கோலுமைம் படைநாண் பூணக் குலவுமைம் படைநாண் பூண்டான்.

ஒருபிறப் பினியில் லாத வுயர்பிறப் பினில்வந் தானை
யிருபிறப் பாள ரெல்லா மிலங்குமுப் புரிசேர் முந்நூல்
பெருகுநான் மறைபி னாலே பிராயமோ ரைந்தி றாந்தப்
பருவமோ ரகன்ற வேழிற் பல்கலை பயிலச் செய்தார். (௰)

ஒருபதோ டிரண்டாம் யாண்டு மோதினு னெறுங் கலைச்
சுருதிநூல் பயிலுந் தோறுஞ் சொற்பயில் கிள்ளை போல்வான்
றருபுனல் படியுந் தோறுந் தாவுநீர்க் கரண்டம் போல்வா
னருநெறி நியாசந் தோறு மவிரப் பாவை போல்வான். (௧௧)

அருங்கலை பயிலுங் காலை யறம்பொரு ளின்பம் வீடா
மிருங்கலை நான்கின் முன்னை யிரண்டும்பின் னொன்று மோரா
னெருங்குசே ரின்பத் தேனு மொழிபெருந் திணையே யன்றி
விரும்புமைந் திணையுந் தோரான் விதிவழி மதிபோ மன்றே. (௧௨)

புருவமு முகமுங் கண்ணும் புயங்களு முந்நூன் மார்பு
முருவமுங் கண்ட மாத ருள்ளமுங் கலையுஞ் சோரப்
பருவமும் பதினு றகிப் படைமதன் வடிவ மாறு
மருவமோன் றெய்தா னுகி லவனிவ னென்ன லாமால். (௧௩)

தன்னுடைக் கொழுநன் மேனி தாமெனதிர் நோக்குந் தோறு
மின்னிடை யிரதி யார்க்கு வேறுபா டறிய வேண்டித்
கன்னலஞ் சிலையில் லாமற் காமனைப் பொருவா னின்றே
னன்னவெஞ் சிலைபி னாலே யனங்கனும் பொருவான் மன்றே. (௧௪)



அளப்பருக் வடிவின் மிக்கா னுதலா லணங்க னாரும்
விளக்கில்வீழ் பதங்கம் போல விருப்புட னவனைச் சூழ்வார்
துளக்கறும் விகாரத் தாலே யவனுமத் தோகை மார்பா
லுளத்தினிற் காதல் கூர வொட்டில்வீழ் பதங்கம் போல்வான். ()

கிளர்பொருள் கல்வி செல்வங் கிளைகளும் படைத்து நீங்கா
விளமையும் பெற்றுள் வாழ்வோர்க் கிளைகளி லொன்றே போதும்
விளைபொரு ளைந்துங் காம விடரிடை வீழ்ப்ப தானுன்
வளர்குடிப் பிறந்தா ரேனும் வாழ்வுண்டோ மதியற் றார்க்கே. (௧௬)

பேய்மொழி கேட்கும் பாமம் பிறன்கடை திரிவா னின்ற
தாய்மொழி கேளான் மற்றுந் தந்தைதன் மொழியுங் கேளா
னையுமேற் குலத்தே வந்து மிழிகுல விடர்பாற் கூடி
யாயுரு காத்தைச் சேர்ந்த வானிளங் கன்று போன்றான். (௧௭)

வேறு.

மாவேட்டி லெழுதாது மறைசொல்வார் தமைநீங்கி
மாவேட்டி லெழுதாது மலர்கொய்வான் மாதருக்காத்
திவேட்ட முறைபுரியுஞ் சிலதருப்பைய பேர்த்துதல்போய்த்
திவேட்ட முறைபுரியுஞ் சிலையேந்தித் திரிகின்றான். (௧௮)

பெருக்காயத் திரிகுலத்துப் பிறந்துமே பிறமாதர்
செருக்காயத் திரிகுலத்தார் பிறரோடுஞ் சென்றுழல்வா
னிருக்காயத் திரிவாரை யிகழுவா னிமையில்போ
லுருக்காயத் திரிமயக்கா லுயர்காயத் திரிமறந்தான். (௧௯)

அஞ்சுமக மஞ்சுமக மாயினு னுயர்குலத்து
விஞ்சுசி றறுதொழிலு மறுதொழிலாக் கைவிட்டான்
பஞ்சணையிற் கலவிநலம் பாராட்டிச் செவிக்கோதும்
வஞ்சியர்கள் சதுர்மறையே வழங்குசதுர் மறையானன். (௨௦)

சந்தியா னதுமறந்து தரித்தாலும் பொதுச்சேரிச்
சந்தியா னதுமறந்து தரித்திடான் சந்திதொறு
முந்திய தொடுமிடங்கண் முன்றுமறந்து பொதுமாதர்
முந்திய தொடுமிடங்கண் முறைமறவா தொழுகினன். (௨௧)

பிரமமா தன்மனமும் பிராசாபத் தியமனமும்
விரவுபிர மச்சரியம் விட்டமையால் விட்டொழித்தான்
சரதமக பிறந்ததனுந் தெய்வமணஞ் சடங்கொழித்தா
னருமறையி னெறிதவறி யாரிடமும் விழித்தனனால். (உஉ)

பாசரத்தி லெழுதரிய பாவையரை வழிச்செலவின்
மாசரத்தில் விழித்துயிலிற் பைசாச மணம்புரிந்தான்
பூசுரர்க்கு முறையல்லாப் போரேறு போய்த்தழுவி
யாசரத்திற் கோவைசிய ரணங்காரை மணந்துசெய்தான். (உங)

மாபுதனி லேழைமையோன் மடமகளை வலிதாக
விரவுதனிற் கொண்டேகி யிராக்கதமா மணம்புணர்ந்தா
னரவினைய வல்குலார் மூவகையா ரல்லாமற்
கரவுதனிற் சிலமாதர் கந்தருவம் போற்புணர்வான். (உச)

கோமளஞ்சே ரிவ்வகையாற் குணமுமின மடவாரை
மாமனையிற் சாரிகைபோன் மாறுதகி றைப்படுத்திக்
காமவெறி மூட்டுகின்ற கலைகளிழிக் கணிகையரைப்
பூமலர்மே லன்னமெனப் பொன்றாவி நிறைவித்தான். (உரு)

வேறு.

தூவிய லன்னம் போல்வார் புலவியே நிலம தாகத்
தாவிய பொருள்கள் யாவுந் துறைமுனை வித்த தாகக்
காவியங் கண்ணார் மோகக் கலப்பையே கருவி யாக
மேவிய சுரத போக விரகவே ளாண்மை செய்தான். (உசா)

அந்தியும் பகலு மாய வரும்பொழு திரண்டு மென்று
சந்தியு மறந்து நான்கா மொழுக்கமுந் தவறி வேத
மந்திர விளக்க மெல்லாம் வரவர மாதர் மோக
முந்திய குறைக் காற்று லவித்தன வொழிவொன் ருக.

அடிமுறை நடந்து செல்ல வறிவுகன் னிலனாய் மோகச்
செடிவழி சுழன்று காமத் திரள்புவி தொடர வோடிக்
கொடியிடைக் கணிகை மாதர் கொங்கைவெற் பிடறி வீழ்ந்து
கடுத்தட வாவி தாவிக் கலவியங் கயத்து ளாழ்ந்தான்.



கொம்பெலா மன்னோன் காமக் கொடுந்தளிர் தளிர்த்துச் சாதி
பம்பிய வாம்பு தோறும் பழிமொழிக் காடு பல்கி
யம்பலஞ் சந்தி தோறு மம்பலா யரும்பி யெங்கும்
வம்பலர் பெருகப் பூத்து வடிக்கனாய்ப் பரந்த வன்றே. (உகூ)

ஆனவை செவியிற் கேளா வவன்குலத் தரிஞ ருவான்
ஞானநூ லவனுக் கோதி நன்னெறி புணர்த்தச் சென்று
ஊன்முனம் பயிற்றுங் கல்வி தன்னையு மயர்த்த தோராசன்
மேனெறி செறிவி லானை வேறிடத் திருத்திச் சொல்வான். (கூ0)

வேறு.

எறும்புகடை யானைதலை யென்பத்து நான்கிலக்க யோனி பேதம்
பிறந்துழலு முயிர்க்கெலா மனிதராய்ப் பிறப்பரிது பிறந்தா ரேனும்
பறம்பர்சோ னகர்முனை யினர்கா னவர்துளையர் பழைய சாதி
யறைந்ததீழ்க் குலநீங்கி மேற்குலத்தி லவதரிப்ப தரிது மைந்தா.()

தாழ்குலத்தோர் கோடிசென்மந் தவம்புரிய வேண்டுமுயர்
சதுர்த்த ராகக், கேழுடைமர் கோடிதவஞ் செயவேண்டும் வணிகர்செ
ன்மங் கிடைக்க வேண்டிற், சூழ்வணிகர் கோடிசென்மந் தவம்புரியி
னரசரெனத் தோன்று நிற்பர், வாழரசர் கோடிசென்மந் தவஞ்செ
யினுங் கிடையாது மறையோர் சென்மம். (கூஉ)

அந்தணராய்ப் பிறந்திடினுங் குருடுசெவி டூமைமுட மகன்று
மேனி, சந்தவடி வுடன்பிறப்ப தரிதுபிறக் கினும்பாலைத் தான மாறு
கந்தவனம் புனமொருவி நீர்நாட்டில் வரலரிது கண்டாய் பார்மேன்
முந்துறவித் தனைக்குயர்ச்சி பெற்றனைபெத் தனைதவமோ முயன்றாய்
முன்னாள். (கூங)

இதுபிர மச்சரிய மொழித்தவா றப்பிரத்த முயர்சன் னியாச
நீதியிலே பெறுகரிது கத்தியமா மாச்சிரம நெறிக ளைவிற் [யாலே
கோதிலா மூவர்நெறிப் படர்ப்பயிர்க்குக் கொழுகொம்பாங் கொள்கை
மேதினியில் யாவருக்கும் பயன்தரு கத்தியமே விசேட மாமால்.()

முனமாக நைகனீப்போ தெழுந்தாசவு சாதிமுதன் முடித்து
வாச்ப், புனலாடிச் செய்தலிக்கன் முயன்றுகட வட்பூசை முயன்று

முப்பா, லனலோம்பி வைவகைவேள் வியுமியற்றிக் கிளைஞருட னடு
த்தோர் தம்மைத், தினமோம்பி நுகர்ந்துகலை பயின்றிருத்த லெல்ல
றத்தோர் செய்கை யாமால். (௩௫)

பூமரமா யூர்வனவாய் மிருகமாய்ப் புட்குலமாய் மனித ராகிப்
பாமரராய்ப் பண்டிதரா யொழுக்கத்தா ருயர்ந்தோனிப் பழுப்போர்
வேறித், தேமறையோ ரொழியினமேற் சுவர்க்கபதத் துறையபதஞ்
செலுத்தற் பாலாய், காமமெனு மந்தரத்தே தாவியினிக் கீழ்வீழல்
கடனோ வையா. (௩௬)

கிதியான நிறைநீருக் குடைகுளமிக் கானகுல நெறிக்கோர் தீன
மதியான மதிவிழுங்கும் கோளரவு பவத்தாறு வளர்க்குங் கானங்
கொதியான நரகிழுக்குங் கொடும்பாச முரிருக்கிக் குடிக்குங் கூளி
கதியான வழியடைக்குங் கற்பெருங்க படாமன்றோ கடிய காமம்.

சுருடஞ்சேர் பரிமகநா றியற்றிவா னரசுகன்னற் சுவைபோழ்
பெற்றான், சுருடம்போ லவன்மனதிற் சசிகாமம் பிடித்தலைப்பத்
தலைகீழாக, மகுடம்போய் வானகம்போய் வையகம்போ யரசுபோ
ய் மலைப்பாம் பாக, நகுடன்போய் வீழ்ந்தகதை யறியாயோ கிறி
யாயோ நவினத் தாரோய். (௩௮)

வேறு.

மனைவளர் குலஞ்சேர் கற்பின் மங்கையர் வருந்த நீபோய்ப்
புனையிழைப் பரத்தை மார்க்குப் புதுநலம் பெருக நல்கல்
சினைதரு பருவப் பைங்கூழ் செந்நெலின் பொதிகள் வாடக்
கனைகுர லெழிலி விண்போய்க் கானலிற் பொழிவ தென்றான். (௩௯)

கொழுந்துவிட் டறிவு தோன்றக் கொளுத்திய குரவன் வாய்மை
கழுந்தனை யானுங் கேட்டோ கட்டறிவை யிழந்து வீழ்ந்த
வழுந்தெனத் தகைய வாக வுருத்துமே லுரைப்ப தானு
மனமுஞ்சுடர் விளக்கிட் டாலு மிருளன்றோ குருடர்க் கம்மா. (௪௦)

மணிநகை யாரே தெய்வம் வாக்குப தேசங் கொங்கைத்
துணைகுரு பீடம் பாதத் துணைவரு நிவேத பூசை
யணைவது முத்தி யாசா னின்னமு மறியாய் போலுங்
கணிகையர் முகத்திற் கூறுங் காமனு கமங்க ளென்றான். (௪௧)



மருள்மொழி பொருளாக் கூறும் வஞ்சக மறையோன் றன்னை
யருள்மொழிக் குரவன் சீறி யகன்றனன் றருக லாலே
திருவொடு கிளையும் வாழ்வுந் தொலைந்தனன் சிறிது நாளிற்
குருமொழி யிகழ்ந்த மூடர் குவலயத் தெவ்வா றுய்வார். (௪௨)

தனமெலாங் கணிகை மாதர் தன்னிலைக் காற்று வாகி (ஆக்
மனைபுல பொருள்போய்ப் பார்ப்பான் மற்றுள பொருளுந் தோற்
கனைகடல் போய் மெலிவா யூரிற் கடப்படுங் கடப்படாதே
வினைபயிலவர் வறுமை பூண்டா னினியதோ கொடிய காமம். (௪௩)

கானக வேட்ட மாடிக் கடுங்கொலை காவு செய்து
வானமு மழிந்து மானந் தவறியுந் தவறுங் காமந்
தானமங் கையர்பா லுறுந் தவசமங் கையர்பாற் கன்று
மீனமங் கையர்பா லுறும் போகமு மிசைவ தாகுங். (௪௪)

தாரியர் மயக்கில் வீழ்ந்து நாற்குல நடைவிட் டனர்
சேரியிற் புகுந்தான் செய்கை தெரிந்தன ரந்த ணாள
ரூரினிற் புகுதா வண்ண மொழிந்தனர் பழித்து நீக்கி
வாரியின் மூழ்கிச் சாந்தி புரிந்துவா லொளமை தீர்ந்தார். (௪௫)

கீழ்குலந் தாழ்ந்தான் வேறு கிளைவேறு தாரம் வேறாய்
வாழ்வுபோய்க் குனிந்தின மைமைமுழ வகையின் மாய்ந்தார்
சூழ்தரு நரம்பு தண்டஞ் சுரைமூன்று மிசையில் யாழாம்
வீழ்படில் வேடர் கன்னி விழுங்கும்வெம் பசியோ டன்றே. (௪௬)

அந்தணர் தந்த பால்போ லருங்குலப் பெருமை விட்டுத்
தந்தனக் கிளைகை விட்டுத் தாரமோ டொரை விட்டுக்
கந்தனைக் கைதுயார் மோகங் கைவிடா னறிந்தே விட்ட
கொந்தனைந் தில்லாள் வைக்கக் காதகங் குதவப் புக்கான். (௪௭)

வேறு.

நீர்நாடி நிங்கியுமே நீங்காது பின்தொடரும்
போர்நாடு காமவெள்ள நித்தமொரு புனையின்றித்
சீர்நாடு மாதர்கீழை தொட்டேகுந் திரிவாற்கு
வார்நாடுக் கடைதீர்த்த மலைநாடு வாய்த்ததுவே. (௪௮)

மலைநாட்டில் வருந்தூர்த்த மறையோனை மடக்கொடிமார்
முலையானை மதமுட்டி முரிபுருவச் சிலைகுனித்துக்
கலையாளி தேர்நிரைத்துக் கட்டெழிலி னுற்பகைத்த
சிலைமாரன் போர்விடுத்த சேனையெனப் புடைவளைந்தார். (சக)

காவிநெடுங் கண்வலையான் மடுப்பவருங் காரிகைமா
ராவிமருண் டிருமறையோ னழகுவலைப் புகுந்தவனை
தூவியனம் போற்றொடர்ந்தார் தூர்த்தமா மறையோனும்
பூவையர்தம் பிடிச்சுழல் புகுந்தமதக் களிறானான். (ருo)

ஆம்பதிதன் குலம்வாழ்வும் பறிகொடுத்து மவர்மோகம்
போம்பரிசி லுவர்துவிடான் பொய்களவாற் பொருள்கவர்ந்து
காம்புறழுந் தோளியராங் கணிகையர்பாற் கருத்தழிவான்
வேம்பரிசி லட்டில்கரிந்தும் விளக்குவிடாப் பதங்கம்போல். (ருக)

சிலமாதர் செங்கையொடுஞ் சிலமாதர் கொங்கையொடும்
பலமாதர் புலவியொடும் பலமாதர் கலவியொடு
கலமேறி யுவட்டெடுப்ப நாளுபோ கம்பொசித்துத்
தொலைபாத கனிபழுத்துச் சொரிசோலைக் குருகானான். (ருஉ)

வேறு.

மான மின்றிய வல்லியர் மாமுலை
யானை வாய்க்கரும் பாகியுங் கள்வலை
மீன மாகியு மல்குல் வியாழத்தின்
பீன வாய்ப் பெருந் தேரையு மாயினான். (ருங)

தைய லாரிடைத் தாகம் விளைந்ததும்
பொய்யெ லாநிறை போகம் விளைந்தது
மையன் மோகம் விளைந்தது மற்றவன்
மெய்யெ லாம்வினை யாக விளைந்ததே. (ருச)

நாணி லார்நய னப்பெருந் தும்பியே
துணை மாமுட லெங்குந் துளைத்ததோ
காண லாமதன் பூங்கணைக் காயமோ
பூண லாய்ப்பிணி பூண்டபுண் ணாயினான். (ருரு)



வீண் குலாவுயர் விண்ணவ ராயினும்
பெண்கள் காமம் பிடித்தவ ருய்வரோ
புண்க ளாகிப் புரந்தரன் மெய்யெலாங்
கண்க ளானது காமத்தி னலன்றே. (ருசா)

பருகி ருக்கு மலர்க்குழல் சோரவே
யுருகி யிந்த முடன்புணர் மாதரார்
பெருவ ருத்தமுற் றன்பிணி காண்டலு
மருகி ருக்க வருவருப் பாயினார். (ருஎ)

வேறு.

முன்பெலாங் களிகூர மோகநல மநுபவித்து
வன்பிணியா லுடல்கால மறுகினிடைத் தள்ளினு
ரென்பெலாங் கசிந்துருகு மிற்பிறந்தா ரல்லாம
லன்பிலாப் பொதுமாத ரபத்துக் காவாரோ. (ருஅ)

தலைநாடு புறந்தள்ளச் சாரன்மலை நாடேகி
மலைநாடு புறந்தள்ளப் பாண்டிவள நாடணைந்தான்
கலைநாடுங் குலநெறிபோய்க் கைப்பொருள்போய் நோய்பூண்டு
புலைநாடு காழுமெனுந் தேக்கிலையிற் புனல்போல்வான். (ருகூ)

ஊடபரப் பசிபிடிக்க வுறுப்பெலா நோய்பிடிக்க
வாடைதுணி போர்த்துடல் வீப்பிடிக்க வருந்துவான்
பேடைமயி லார்விரகப் பிணித்துடைத்து புறங்கடைபோய்
வாடையேற் றயர்வானேல் யாரைவிடு வார்மதனன். (௬0)

சாதநெறி மணவேட்டைத் தன்மனையாள் மனங்கொதிப்ப
வீர்கொடும்பாய்ப் பிறர்மனையின் மிதித்தகால் விரலழுகி
மரபழிய முத்திதொட்ட மணிக்கரங்க ளுடைழுகிப்
பரமனையார் தமைத்தழுவும் படிவமெலாம் புண்ணானான். (௬க)

தலைமைநாற் குலமறுகு சார்கிலான் கிழிழாபுக்கால்
விலைமாதர் மறுகணையான் மேனியுரு வழிந்தமையால்
உலையர்சே ரியிலுன்னு மன்னர்சே ரியின்மறுவும்
புலையர்சே ரியிலிருந்திப் புறங்கடையி லிறக்கின்றான். (௬உ)

அம்மையிலே பலிக்குமென்பர் செய்தவினை யாங்கொருசார்
செம்மையிலா மறையோன்செய் தீவினையெல் லாமிவனுக்
கிம்மையிலே பலித்ததனை யிவையறிந்து விலகாதார்
வெம்மையுறு கொடும்பிணிக்கு நரகினுக்கும் விருந்தாவார். (௬௩)

வருநாளின் முகம்பார்த்தோர் மறுநாட்கண் பாராரா
யொருநாளி லுறைபதிமற் றொருநாளி லுறையாமற்
பெருநாடு பலகழித்துப் பிறநாடு சேர்வதற்குத்
தருநாடு மிருள்வனத்து வினைதன்னைத் தனிபோனான். (௬௪)

ஆகத்தி லெழும்புபசிக் கருத்துவலி தானன் றில்லாமற்
றாகத்தா லுலர்ந்து தண்ணீருங் கிடையாமற்
சோகத்தா லயர்ந்துகொடும் பாலையிடைச் சுழல்கின்றான்
பாகத்தாற் பகுத்துண்ணார் படும்பாடி திதுவன்றோ. (௬௫)

கூண்டுவரு நெறிதவறிக் கொடுஞ்சுரம்புக் கயர்காலைப்
பூண்டகுல நெறிதவறிப் புலைபுகுந்த மறையோனைத்
தீண்டலுறும் வாலாமை தீரவோ செழுங்கதிரோன்
காண்டலுறு மாபாவங் கழியவோ கடற்குளித்தான். (௬௬)

உழிக்கொண்ட புள்ளொளிப்ப வுயர்வனமுங் கண்முகிழ்ப்ப
விழிக்கொண்ட சுரமடைந்தா யினியெங்கே போவதெனப்
பழிக்கொண்ட மறையோன்செய் பாவமெலாங் கூடியொரு
வழிக்கொண்டு வளைந்ததுபோல் வந்துவளைந் ததுகங்குல். (௬௭)

வேறு.

அன்றுமோ ருணவில் லாமலதற்குமுன் னிரண்டு நாளா
வொன்றுமே பசியு மின்றி வெம்பசி யுடற்ற வோய்ந்து
கன்றினன் சைவ மல்லாக் கடும்பர சமயம் போலச்
சென்றுசேர் நெறியொன் றில்லாக் கானிடைத் திகைத்து நின்றான்.

வேறு.

வாட்டானை விழிபார்க்கு வருந்துவா னனத்திலுயிர்
வாட்டானை புலிபார்க்க வருந்தினான் பூதர்முலைக்
கோட்டானைத் துணைமேவிக் குழறுகுரல் கேட்டிடப்பான்
கோட்டானைத் துணைமேவிக் குளறுகுரல் கேட்டயர்ந்தான். (௬௯)



சனக்கள் ளிகல்பாலு மிடுஞ்சோறு மிதழ்க்கனிவாய்ப்
பானக்கள் ளுடனேந்தப் பரிவாயுண் டுறங்குவான்
கானக்கள் ளிகல்பாலும் பொரிசோறுங் கடிமலர்வா
யூனக்கள் ளுடனேந்த வுண்ணான்மற் றுறங்கானால். (௭௦)

விங்கிவளர்க் கதுதிமிரம் விருத்திரா சுரனெய்ப்ப
வோங்குமுடிக் கண்ணாக விக்கிரனைத் ததுவான
மாங்கசுரன் போயொளிப்ப வந்தரநூ தன்கரத்தில்
வாங்குமொரு வச்சிரம்போல் வானிலெழுந் ததுபரிதி. (௭௧)

வேறு.

வடிக்கிடத் திமிர வெள்ளம் வளர்ந்திடப் பரிதி கானிற்
படிந்திடு மாத்தி ரேயன் படருறு வினையோ நோயோ
முடிந்தநா ளதுவோ வென்று முடிவிலாப் பிறப்போ வெல்லாம்
விடிந்தது விடிந்த தென்ன விடிந்தது கங்குற் காலம். (௭௨)

விடிந்தபின் னெழுந்து போவன் மெய்களைத் தயர்ந்து சோர்வ
னடர்ந்தகல் லிடறி வீழ்வ னடியிடச் சுவியி னாதே
முடங்குவன் மரங்க டோறு முட்டுவ னெட்டி யேகி
கடந்தனன் றிருக்குற் றால நகர்க்குமோ சனைக்கு நான்கா. (௭௩)

வேறு.

கடிக்கொண்ட பூங்கோதைக் கணிகையர்க்கே காதலனாய்க்
குடிப்பண்பின் மடவாரைக் கொடுஞ்சிறைசெய் பாதகத்தான்
மிடிக்கொண்டு வெறுங்கனியாய் வெயிற்கானற் பரல்வீழ்ந்து
பொடிக்கொண்ட தழல்வீழும் புழுப்போலத் துடிக்கின்றான். (௭௪)

உண்ணாது பசிதூரப்ப வுடலெலாம் பிணியுலைப்பப்
புண்ணாக மெய்யயர்காற் போற்றவொரு துணையின்றி
யெண்ணாத பலவெண்ணி யிளைத்திருமி வாய்குழறிக்
கண்ணாரு மொழியிருண்டு கீதிலா சையுமடங்கி. (௭௫)

கருணாநிலை தடுமாறிச் சாக்கிரஞ்சொப் பனஞ்சுழுத்திக்
கருவிகா ணங்களெலாஞ் சைகடந்து மெய்யயர்ந்து
துரியவவத் தையில்வீழ்ந்து துரியாதீ தங்கடந்தே
யுரியதொரு சூக்குமத்தா யுயிரொடுங்கு மந்நேரம். (௭௬)

அறநெறிமுற் றவப்பயனே வத்திரிகோத் திரமறையோ
ருறுகதிமெய்த் தவப்பயனே யுயிர்விம்மே வியதனுடலிற்
குறுமுனிக்கன் புடையபிரான் றிரிகூடக் குலவரைவாய்ச்
செறிமலர்ச்செண் பகச்சோலைத் தென்றற்கால் பாய்ந்ததுவே. (எஎ)

மால்பாய்ந்த மறையவன்மேற் றிரிகூட வரைவசந்தக்
கால்பாய்ந்த தென்கேனே கவுணியன்வாய்க் கவிமுலைப்
பால்பாய்ந்த தென்கேனே பவக்கடலிற் குகப்பெருமான்
வேல்பாய்ந்த தென்கேனே யாதெனயான் விளம்புகேன். (எஅ)

இந்தவகை யிறந்தானை யியமபட ரெதிர்முடுகி
வந்துகெடு வலைவீசி வளைந்துபெரும் பாசத்தாற்
பந்தமுறக் கட்டியொரு பட்டமரந் தளிர்த்ததெனச்
சிந்துதிர மெழப்புடைத்துத் தென்புலத்துக் கொடுசெல்வார். (எகூ)

செல்லுகின்ற வேலைதனிற் சிவபிரான் கணநாதர்
நில்லுமெனத் தூதர்தமை நிராகரித்து மறையோனை
வல்லுநிரக் கறைதுடைத்து வன்பாச மறுத்துயர்ந்த
சொல்லுவன பலசொல்லிச் சூட்டுவன பலசூட்டி. (அ0)

அரமகளிர் கவரியிட வந்தரபல் லியங்கறங்க
வரிபிசைக்கின் னரர்பாட வானவர்பூ மழைபொழியப்
புரிசடைப்பண் ணவர்புகழப் புட்பகத்தின் மீதேற்றிக்
கரியுரிவை தரித்தபிரான் கயிலைதனிற் கொடுபோனார். (அக)

வேறு.

செம்மான மிசையிலிருந்து சென்றுமறை யோன்கயிலைச் சிகரமேவிப், பெம்மானை யடியின்மிசை முடிபணிந்தா னந்தவெள்ளப் பெருக்கிலாடிக், கைம்மானுஞ் சுடர்மழுவுங் கறைமிடறும் புரிசடையுங் கண்கண் மூன்று, மெய்ம்மானுந் திருவடிவுங் கண்டிருகண் களிப்பவுடல் விதிர்ப்ப நின்றான். (அஉ)

சென்றுதொழு மந்தணனை யருளுக்கிற் கயிலைவள்ளல் சிவனார், நன்றுநீ யுயிர்விடுங்கா லமதுசெண்ப காடவிசேர் கறும்பூக்



தென்ற, லொன்றியுன தாகமிசைத் தைவரலாற் பாவமெலா மொழிந்தோங் கண்டா, யென்றுமழி யாமலினி யெமதுகணத் தவர்பதத்தி லிருப்பா யென்றார். (அங)

வேறு.

அன்று நாதன் றிருவருள் செய்ததான்
மன்றன் மாலயன் வாழ்வு மூவர்ப்புறச்
சென்று செல்வச் சிவ்கணத் தாருட
னென்று நீங்கலாப் பேரின்ப மெய்தினான். (அச)

யாமி யந்தனி லெய்திய தூதுவர்
சாமி யந்தகன் றாளிணை போற்றியே
காமி யந்தனன் கண்ணுதல் பாலுற்றான்
பூமி யந்தரம் போற்றிடப் போயென்றார். (அரு)

வெய்த வாறுடை வினைத் தென்புல
மெய்த வாறுகொண் டேகலு மேதடை
செய்த வாறுஞ் சிவபெரு மான்றொண்டர்
வைத வாறும வளர்செவி சாற்றினார். (அசு)

செறிவு சேர்மனத் தென்புலக் கோமகன்
குறிகொள் சித்திர குத்தனைக் கூவியே
வெறிகொள் விப்பிரன் மேற்கணக் காலுள
பொறிகள் யாவும் புகலுதி யென்றனன். (அஎ)

சாத்தி ரம்பல தான்கற்று மத்திரி
கோத்தி ரத்தி லுதித்துங் குலநெறி
நேத்தி ரத்தொழி வீக்கி வைசியர்க்குஞ்
சூத்தி ரர்க்குங் கடைஞரி றேன்றினான். (அஅ)

கற்பு மங்கையர் கட்டழித் தான்பொரு
ளற்பு மாகத ரடைக்கலம் வெஃகினான்
பொற்பு மாதர் புறங்கடை நின்றுளா
ரற்பு மாந்தர்க்கு நல்கிய தீமையான். (அகூ)

சாலே சந்திரன் தன்ம மலைத்துளா
ராலே யத்தின் களவுகை யாட்சியான்

மாலை காலையுஞ் சந்தி மறந்துளான்
வேலை தோறு மதுரகர் வேட்கையான். (௯0)

குருவுந் தெய்வமு நிந்தைசெய் கோளினன்
கருவு நோன்புடைக் கன்னியர் காமுகன்
தருமயோகர் தவங்க ளழித்துளான்
பொருவின் யோகப் புலைச்சியர் போகத்தான். (௯௧)

அந்த ணர்க்கோ ருங்கனி சூலைகைச்
செந்த முற்குந் தெறும்புனல் நிந்தைசெய்
மந்தி ரத்தின் மறவி பிறரெலா
நிந்தை செய்பு நிரக்கர குக்கியான். (௯௨)

பிறந்த நாட்பிறர் நாள்வரு டாதியிற்
சிறந்த நாட்சிவ ராத்திரி யாதியா
வறைந்த நாள்விர தாதிமுச் சந்தியு
மறந்செய் வாள்விழி யாரை மறந்திலான். (௯௩)

அலைவி லாத குடிக ளலைத்துளான்
பலர்செய் காவின் மரங்கள் குறைத்துளான்
புலைசெய் பான்மையும் பொய்க்கொ லாதியுங்
கொலைசெய் பான்மையுங் கூறத் தகாதவால். (௯௪)

இரும்பு போலு மிதயத்தன் கன்னெறிச்
சுரும்பு போல்பவன் சோமச் சுடரொ
டொருங்கு பாவத் துடன்பிறந் தானெ
மிருந்த வூரி லிருந்தறி யானென்றார். (௯௫)

கரண வீரர் கணக்கிவை கூறலு
நரக வீரனை நல்லதி சேர்த்திடும்
வரவி யாதென மாமனத் தெண்ணினன்
திரம தாகிச் செய்யுஞ்செயல் கொளினன். (௯௬)

அரவ மாலை யவிர்சடை யாரிடைப்
பரம ராசியம் யாது பயந்திடா
பிரமன் மாலறி யாத பெருமுடன்
விரைவில் விண்ணப்பஞ் செய்திட லெண்ணிமால். (௯௭)



செப்பு மேல்வைச் சிவபெரு மான்முறை
தப்பு மேல்வைத் தகல்வது தாக்கெறு
வெப்பு மேல்வைத்த வெம்பக டேறினன்
கப்பு மேல்வைத்த சூலமுன் கைக்கொண்டான். (௯௮)

வாசந் தண்ட மெழுக்கர் பத்திரம்
வீசுங் கைவலை யெஃகம் விறன்மழு
மூசு சம்ப முசலங் கணையம்வாட்
பூசல் வீரர் கொடிபுறஞ் சுற்றினர். (௯௯)

கால னும்பெருங் காலமிருந் துவுங்
கால வுக்கிரன் அன்முக ருதியா
நீல மேனி நிரைத்தெழு தூதரு
மோல மென்ன வொருபுடை சுற்றினர். (௧00)

விளங்கும் வைவளைச் சித்திர மேவினர்
துளங்கி யோர்புடை சூழ்ந்தனர் சூழ்நிறை
யளந்து போற்றினர் தானவ ராதியோர்
வளர்ந்து கிங்கிரர் மல்லரா வாடினர். (௧0௧)

பெருவி யாதி முயல்வலி பிணியுங்
குருமை கோதரங் குட்டங்க ளாதியா
மருவு சேந்தும வாதபித் தங்களும்
பொருவு சேனை யொர்ப்புடை சூழ்ந்தவே. (௧0௨)

வெட்டி வைத்துவிப் பார்மிரு பாவரைக்
கட்டி வாரப் பாதர காதியர்
கெட்டி வார்பனி கேட்பன சாபமன்
மட்டி வார்கழல் வந்து வணங்கினர். (௧0௩)

ஆய சேனைக் கடலிடை யந்தனார்
தூய சாமரைத் தென்புரை துன்னுறப்
பாய மோர்நிழற் பல்லிய மார்த்தெழ
மேய ஆர்த்திபென் வந்தது மேவினன். (௧0௪)

சொந்த வைவைச் சுதபுர நீங்குபு
வந்து சேர்ந்தனன் வைதர் ணித்துறை
புந்து தானையை நோக்கின னென்கயல்
பந்தி சேர்தரு பல்சினை நோக்கல்போல். (௧0௫)

பாங்கு சேர்பரி வாரத் தொகையெலா
நீங்கு மென்ன நிறுத்திவெங் காவலை
யாங்கு கூவி யமைச்சினொ டேகியே
வீங்கு சோதிக் கயிலையை மேவினான். (௧0௬)

நீல மால்வரை நின்றிழி கொண்டல்போற்
கோல மேதி யிழிந்துசெங் கோற்கிறை
கால னோடு கயிலையஞ் சாரல்வாய்ச்
சூல மேந்திக் தொழுதெழீஇப் போயினான். (௧0௭)

வேறு.

சென்று வெள்ளியந் திருமலைத் தென்றிசை காத்திடும் வட் மேருக், குன்று போலுயர் கோபுர வாய்தலிற் குறுகினன் னவ ரெல்லா, நின்று போற்றுபொற் படிமிசைத் தென்புல நிருபன்வெம் மனக்கோட்ட, மன்றி நின்றுதன் வரவினை யருங்கடை காவலர்க் கறிவித்தான். (௧0௮)

கடைக ளேழினு மொருவர்பா லொருவராய்க் கழறமற் றவர் பூதப், படைகள் காவலர்க் குணர்த்திட வன்னவர் பணிவர வணி கோலச், சடைகு லாமுடிச் சுடர்மழு நந்திநந் தலைவனுக் கமைந் தோத, வுடைய நாயகன் சன்னிதா னத்தலு னுணர்த்தலுங் கொணர் கென்றான். (௧0௯)

நந்தி நாயக னருண்முறை சிவகண நாதர்கள் கூறுந்தாய்ப்பப் பந்தி யாம்பல திருக்கடை கடந்துமேற் படர்ந்துதென் றிசைவேந் தன்றி புந்தி யார்ப்புறக் கண்டனன் சிவபிரான் பொன்னணி திருக் கோயின், முந்தி யாரணர் நாரணர் பெறவொணு முறைமைபெற் றனனென்றான். (௧௧0)

வேறு.

கின்னரர்கின் னரமிழற்றத் தந்திரர்தந் திரிமீட்டிக் கீதம் பா டப், பன்னகர்கின் னரர்கருடர் சித்தர்வித்தி யாதரர்தம் பணிசெய்



தேத்தப், பொன்னகரிந் திரன்பரவ வானவர்பொன் மாரிபுட்ப மாரி தூவப், பின்னயபந் திகளசைய விரம்பையர்கண் மணிக்கவரி பிடிப்ப மாதோ. (௧௧௧)

புவலோகர் வலம்புரியப் பாதாள லோகர்மணிப் பொற்பூ ணோக்கத்
தவலோகர் சனலோகர் சத்தியலோ கரும்பணிந்து தவப்பேறெய்திப்
பவலோகங் கடந்தேற மாலோகத் தவர்பரம பதமே யான
சிவலோகந் தனைவேண்டி யடிபரவச் சிவகணங்கள் சேவை செய்ய.

அணிமாதி சித்திகள்குற் றேவல்செய விசான னடைப்பை தாங்க
மணிவாரி யோரேழுந் திறையளப்பப் பகல்வேந்தர் மாருத் தீபம்
பணிமாற மதிபடிமக் கலமேந்த மழைதெளிப்பப் பவனன் றார்ப்பதி
தணியாத தழற்கடவுள் பரவியா லத்திசுற்றத் தருமம் வாழ்த்த. ()

அறுசமைய மைம்பூத நான்மறைமுக் காலமிரண் டறங்கள் யூரவு, மெறுழ்வலிகள் வேண்டியொரு கோடிவர மந்திரங்க ளொண் ணில் கோடி, மறுவறுசின் றிருகோடி புகழ்ந்தேத்த வரிபிரமர் மகுட கோடி, செறிகமலத் தாள்வருடப் பதினெருமுக் கோடியாந் தேவர் போற்ற. (௧௧௪)

கங்கைசர சோதிசிந்து யமுனைகோ தாவரிநன் மதைகா வேரி மங்கலமா நதிபலசா மரையிரட்ட விமையவரை வயிறு வாய்த்த நங்கையொரு பாலிருப்பப் பொருப்பெறிந்த வேற்குமா னடிவன் மேவ, வெங்கயனை யமர்சாய்த்த விசையமதக் களிறொருபால் விளை யாட் டெய்த. (௧௧௫)

மாணிக்க மரகதங்கோ மேதகமுத் தப்பவளம் வயிர நீல
திணிக்க மணிபுருட ராகம்வயி டூரியங்க ளிழைத்த தூவி [ம்பூ
ணணிப்பொன் மேருவென வுயர்மணிமண் டபத்தரியா சனத்தின்
வேணிச்செவ் வானபடா மதிதவழு மொருபவள வெற்பு மான. ()

ஒருமருங்கு பிருசருமத் துகி லுடையு மூன்றுகண்ணு முயர்தோ ளான்குங், கருணைபொழி திருமுகமு மைந்துபணு டவிமுடிமேற் கங்கை யாறும், புரிதிரியமு வெயிலெறிக்கு மவுலியும்வெண் ணீஸ் வெறிக்கும் பணிலத் தோடும், பொருமுரக குண்டலமு மண்டலமுங் கண்டவழும் பொலிந்து ளானை. (௧௧[illegible])

கரதலமு மான்மழுவு மபயவர தமுஞ்சுருதி கனிந்த வாயு மரவணியு முரககணை கங்கணமுங் காண்டொறுமகப் புசமேற் கொண் டான், றிருவடியுங் குரைகழலு மிடம்வலங்காண் டொறும்பயமுங் கிடமும் பூக்தான், பிரமன்மால் கிரமாலே நுயல்வருதின் புயநோக் கிப் பிரமை பூண்டான். (௧௧௮)

மூதிப்வா னவர்கணமாம் பரவையிடை முழுமணியா சனமென் றேங்கு, முதயவரை தனிலகந்த கோடிகதி ரோருருக்கொண் டுதித்தா லென்ன, வதியுமுயர் பரஞ்சுடரைக் காண்டொறுங்கண் வழுக்கியன்பின் வழிக்கொண் டேகித், துதிபரவி யெழிற்கடலி னருட்டுறைவீ ழெழிலியெனத் தொழுது வீழ்ந்தான். (௧௧௯)

ஆதியாய் சரணமநு பூதியாய் சரணமகி லாண்ட மீன்றாள்
பாதியாய் சரணமறை வேதியா சரணமருட் பரமா னந்தச்
சோதியாய் சரணமென வீழ்ந்தானை யெழுகவெனச் சுருதி நாதன்
மேதியான் முகநோக்கி வந்தகா ரணம்யாது விளம்பா யென்றான். ( )

என்றுமுதல் வன்றிருவாய் மலர்ந்தருளப் பெற்றேனென் றிரு கை கூப்பிச், சென்றுதுணை யடிவணங்கி வணங்குதொறு முடல்வி திர்ப்பச் சிலிர்ப்ப ரோமம், நின்றுசெழுந் துகிலொதுக்கி வாய்புதைத் து நடுநடுங்கி நிமல மூர்த்தி, யென்றுளதென் னேறுவின் னைப்ப மென வுரைத்தருளா லுணர்ந்து மின்றான். (௧௨௧)

பாரின்மேன் மறைக்குலமாம் பயிர்க்குமுது களையாகப் படர்ந்தா னந்த, வூரின்மே லுதிக்குமுனம் பாதகத்தி னுடனுதித்தா னெழுக் கங் தீர்த்தா, னீரின்மேற் குளித்தறியான் மாதர்முலைத் தடங்குளிப் பானீச மாதர், காரின்மே னியுந்தின்டி யவர்மனைபுக் கூனருந்திக் கள்ளுண் பானல். (௧௨௨)

தானமறி யான்முன்று சந்திபறி யானலது சாம வேத
கானமறி யானோமக் கனலுமறி யான்மானுநூற் கல்வி கேள்வி,
மானமறி யான்செபமு மந்திரசித் தியுமறியான் மவுன யோக
ஞானமறி யானிவனே நாங்களறி யாப்பதத்து நண்ணு வானே. ( )

கோடுபொரு முலையார்கள் காமத்தாற் புலைபுரிந்த கொடியோன் றன்னை, வாடுபெருந் துயர்நீக்கிக் கயிலைதனிற் சிவகணத்தார் வரித்



தா னன்றோ, ராகிவது திருக்கூத்தா யதுதானே யலங்கார மாகு மா னால், வீடுபெறு சுவர்க்கமென்று நரகமென் றுமெங்களுடன் விகற் பிப் பானேன். (௧௨௪)

கைப்பொழுது பாவமெலா மினிப்பொழுக நடந்தானைக் காட்டும் போது, தப்பொழுகக் கணநாதர் தன்னிறு நெனிற்பாவந் தருமமே து, பொய்ப்பொழுது கழிப்பாரை யலைத்தநாகா னெழுவிவதினிப் போ து மெந்தா, யெப்பொழுதுங் கயிலையினுன் னடியவர்க்கே பணிவி டைசெய் திருப்பே னென்றான். (௧௨௫)

தக்கவே தியன்றவமுஞ் செய்ஞனூர் மறையவன்பா தகமும் பூ, சைபுக்கமறைப் பாலகன்வா னுளதிவு முப்புரநாட் பொலிவு மாற்று மிக்கதிருச் செயல்களினும் விதிமுறையை நிலைநிறுத்தும் விளையாட் டாலே, முக்கணு யகர்தருமன் முகநோக்கிக் கருணையுடன் மொழிவ தானர். (௧௨௬)

முந்தக்கால் சிவதலத்துத் திரிகூட மான்மியங்கண் மொழியு நாளிற், சந்தக்கா னெடுவேலிச் சண்பகக்கா மகிமைசொன் னோந் தனி த்தக் காலே, மந்தக்கான் மகிமைசொல வைத்திருந்தோ மினியத னை வழங்கு வோம்யா, மந்தக்கான் மகிமையைநீ யறிந்தக்கா லிவன் மகிமை யறிவா யென்றும். (௧௨௭)

விளையாடுந் திரிகூடக் கடவுண்மால் வரைத்தோன்றிக் கிரிந்தே ன் கங்கை, யளையாடிப் பொங்குகடற் பாலாடி வடவருவி யமிழ்த மாடித், தளையாடி மடலவிழ்க்குஞ் சண்பகா டவிதவழ்ந்து சங்கக் கோயில், விளையாடி யெம்மருகில் விளையாடுந் தென்றலங்கால் விளை யாட் டேயோ. (௧௨௮)

மலையாறு கடலுலைந்து மண்டுபுடார்ச் சுனபுரத்து மாய்வோர் நீறும்
மலையாம முமிருந்து மறைப்பொருளை வலக்காதில் வழங்கும் போது
மலையாட்டி கவுரிகுழல் வாய்மொழிசெங் கையிலணைத்து மடிமேல் வே
மலையாம விளைப்பாற்றி வீசுவது திரிகூட வசந்தக் காலே. [௧௩

தீர்த்தமகி மையிலதிகந் திரிகூட வடவருவி திருக்குற் றால மார்த்தலஞ் சிவலிங்க மூவரு மாஞ் சிவலிங்க மருளா னந்த, மூர்த்

திகளி லதிகமிவை சாலோக முதன்மூன்று முறையே நல்குங், கூர்த் துரைக்கி லிவைமூன்று மந்தலத்தி லுலவுதென்றல் கொடுக்கு மாதோ. (கூ0)

மஞ்சுதோய் முதுகுடுமித் திரிகூட மலைச்சாரல் வசந்த வூதை துஞ்சுபோ தைபின்மேனி தைவரலால் வானெழுந்த குலைறக் காற்றி ற், பஞ்சுபோன் மறையவன்செய் பாதகம்போய்ச் சிவதருமம் பலி த்த தாலே, தஞ்சமா முயர்கயிலை வரைமேவி யெமதுபதஞ் சார்ந்தா னன்றே. (கூக)

ஆதலா லெமதுபுடார்ச் சனபுரத்தி லெழுதிரைத்தே ஞறு பாயுங், காதலா மைந்திணைநாற் றிசைமூன்றி யோசனையுங் கலந்து வாழ்வோர், சாதலாம் பொழுதிருபா லுயிரிடத்து மொருநாளுந் தருமவேந்தே, போதலா வதுதவிர்தி தூதர்பா வருக்குமீது புகல்வா யென்றார். (கூஉ)

இன்னபடி கயிலைமலை யெம்பிரா னருளியவா றியமன் கேளா முன்னமிதை யறியாது செய்தமையை நினைந்திரங்கி முருந்த ஞூம், பன்னரிய மறையாலுந் தெரிவரிய பரமாசி யத்தின் பான்மை, மன்னுபெருந் திரிகூடத் தென்றலங்கான் மகிமையென மகிழ்ச்சி கூர்ந்து. (கூங)

பின்னலணி பிறைமவுலிச் சடையிரு ரடிபரவிப் பெம்மா னெம்மான், சொன்னபணி விடைதலைமேற் கொண்டனன்கொண் டனனெனவே தொழுது போற்றிக், தன்னகர்க்கு நம்பெருமான் விடைகொடுப்பப் பகடேறித் தருமன் போந்து, தன்னகர்மந் தாநிலத்து மகிமையே யனைவருக்கு நவில்வ தானான். (கூச)

தருமமே தங்குபுடார்ச் சனபுரத்து மூன்றியோ சனையின் மேலும், வருமமே மறந்திடுமின் னாதர்கா ளவணுறைவோர் வருவோர் யாருங், கருமமே தியற்றுகினுந் தருமமே குறிக்கொண்மெனக் கணக்கர் யார்க்கும், பருமமே திசையுகைக்கு நடுநெறிச்செங் கோற்கடவுள் பகர்ந்தான் மன்னோ. (கூரு)

பாராது மறையவன்செய் பாதகந்தீர்த் தருள்புரிந்த பரிசி தென்று வீராத வழிகாட்டு மந்தமா ருதமகிமை வழங்கிச் சூதன்



தீராத சிவத்துரோ கந்தீர்த்த மகிமையுரை செய்வா யென்னு மாராமை முனிவரர்க்குத் தக்கன்மகம் புரிதன்முத லறைவ தானான்.

12-மந்தமாருதச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - கூகச.

---

## பதின்மூன்றாவது:—தக்கன் வேள்விச் சருக்கம்.

அலர்க்கமல நறும்பொகுட்டி லயன்றலைநா ளுலகமெலா மளிக்க வேண்டி, மூலத்தலத்தி லறத்திறைவன் மார்பினிடைப் பிருகுவைத் தின் முதுமரீசி, புலத்தியனத் திரிகிருது வங்கிரா சனபதிமேந் புலகன் றோன்ற, வலப்பதத்திற் றக்கன்முத லாயதசப் பிரமரையுமரிவி னீன்றான். (க)

அன்னவர்ம் பதின்மர்களிற் பின்னவனாந் தக்கனெழுந் தயன்பா லேகிப், பின்னமிலா துயிர்க்குயிராய் நிற்பவனுஞ் சிற்குணனும் பெருந்தே வர்க்கு, முன்னவனு மிறுதியிலா முதல்வனும்யா ரெனக்கேட்ப முளரி மேலோ, னுன்னரியா னுணர்த்தரியா னிருவர்களுந் தேடநின்ற வொருவ னென்றான். (உ)

படைப்பதுவுங் காப்பதுவு முன்னர்நீர் புரிந்திருப்பப் பரிவாற் பின்னர்த், துடைப்பவனை முதல்வனெனச் சொன்னவா றென்னையெனச் சுதன்வி னவ, வுடைப்பிரம மாமவனே யுலகொடுக்கு நாளைமையு மொடுக்கா நிற்பன், விடைப்பரன்பின் னருளியன்றோ யாங்கள்படைப் பதுங்காப்பு மென்றான் வேதன். (ங)

காரணனை யுனைப்பூத வகையையுயிர்த் தொகையையெலா நான்கு வேதம், பூரணமாம் பிரமமெனப் புகல்வதெவ னென்றுதக்கன் புகல வேதா, வாரணங்கம் பரமனுரை யுண்மைமொழி யவற்கேமற் றவர்கட் கெல்லாங், காரணமா முகமனுரை வேந்தனையு மீசனெனல் கடுக்கு மென்றான். (ச)

ஆங்கவனோர் செயலுடையன் வடிவுடைய னுதலிறு லவனுக்கென்றும், பாங்குபெறுந் தோற்றமீ றெய்தாதோ வெனுஞ்சேய்க்குப் பதுமத் தண்ணல், யாங்குமுள னியாங்குமில னுருவுமில னருவுமில னெம்மா னம்மா, வோங்குலகின் பொருட்டாகச் செயல்புரியக் கருணைதிரு வுருவாக் கொள்வன். (ரு)

உயிர்கள்புரி வினைக்கீடா யுருவகுக்க வேண்டியெலன திருவ மீர்வன், செயிரறவே வினைப்பயன்க ளூட்டுதற்கு மாலாவன் சிதைப்பான் வேண்டி, னயில்பெறுமுத் தலைச்சூலத் தரனுவன் யாவுமறைத் தருளும் பான்மை, பயின்மகே சனுமாவன் சதாசிவமா யருள்புரிவன் பரம மூர்த்தி. (௬)

விள்ளாமை யருவாகி யருவுருவ மாகியுரு மேவா நிற்பன்
றன்னாமை யுருவகத்தும் யாங்களிரு வருமாகித் தான்வே றுவ[னே
னெவ்ளாருந் தயிலமும்பூ மணமுமணிச் சோதியும்போ லெங்குந் தா
யுள்ளாகிப் புறமாகி யகம்புறமு நீங்காத வொருவ னுவன். (௭)

மாதவனே பிரமமென்றும் யான்பிரம மென்றுமறி மயங்கா வண்ண, மீதெலா மெம்போல்வார் வெண்டலைமா லைகள்புனைந்தான் விமல மூர்த்தி, யீதெலா முணர்ந்துணரா மாலாகி மாறுடன்யா னிக ழுங்கால, காதலெனதிர் விலக்கியன்றோ நாங்களடி முடிதேட நடுநின் றானே. (௮)

மூவரா நினைந்தரியை யென்னையரன் றனக்கிணையா மொழிவார் யாரும், பாவராய்த் தாந்தமைமே கெடுப்பதன்றி யெமக்குமவர் பகைவ ராவார், சேவிலு னரம்பரன நினைப்பவர்க்கே யாங்களருள் செய்யா நிற்பே, மேவரா னும்பரனை யிறைவனென விறைஞ்சன் முக்க ணிறைக்கே சாரும். (௯)

கவ்வைநீர்ப் பலகோடி நதிகளுக்குஞ் சாகரமே கதியாம் போல வெவ்வகையா கியசமய நெறிக்கெலா மிறைவன்முக்க ணெம்மா னன்றே, யவ்வகையா யிரமறைக ளுரைத்தும்பா னுணர்த்தியுகீ யறியா யையயா, கவ்வியணி கரத்தானைப் பரவியருள் பெறுகவென்று னளினத் தானே. (௧௦)

வேறு.

கதியின் மேற்பெரு விதிமொழி செவியிற் கருதா
முதிய நாயக னரனெனிற் பணிந்துமான் முதலோர்க்
கதிக னாகெனும் வினையமுள் ளமைத்தருந் தவஞ்செய்
துதிய தானம்பா தென்னலு மலரில்வாழ் பரத்தேசன். (௧௧)



அந்த மானதுங் குணர்வரு மெருவி னனித்தா
நந்த மானத தடம்புனன் மூழ்கிதம் பரனை
முந்த மானத வருச்சனை முதற்றவ முயன்று
சொந்த மானதற் பரனடி சேரெனச் சொற்றான். (௧௨)

வேறு.

பூந்தவிசி லயனுரைத்த போதுமா னதனடைந்துப் போந்து அக்க, ணேந்தவமோ ராயிரம்யாண் டியற்றுதலு முயர்விடைமே லாதி தோன்றிக், கூர்ந்தபெருந் தவமுவந்தே மிங்குனக்கு வேண்டும்வரங் கூறு யென்னப், பாந்தளணி செஞ்சடையார் பவளவாய் மலர்ந்தருளப் பணிந்து போற்றி. (௧௩)

மேகபத முதலாய விசும்புலகு மால்பதமும் விரிஞ்சனூடு, நாகருல கமும்புவியு மெண்டிசையு மெனதாணை நடப்ப நாளும், பாகசா தனன்முதலா வினைப்பணிவோர் யாவருமென் பணிகள் கேட்ப, மகனகற் றமும்வாழ்வு மக்களுஞ்செல் வமுமழியா வரமும் வேண்டும். (௧௪)

சுந்தரியுன் னிடத்துறையுந் தோகையுமென் மகளாகத் தோன்ற நீயே, சுந்தனன்போல் வந்தருளி மணம்புரிய வேண்டுமிவை யருளா யென்னப், புந்தியுற வனத்துகது மும் புகன்றவரை மனிதத்து மருள் புரிந்து மேலுஞ், சிந்தையுற நன்னெறியி நிற்கிலிவை நிற்கு மென்றான் றேவ தேவன். (௧௫)

வரமனைத்து மறுவிடைபா ரருளியெழுந் தருளியபின் மறங்கூர் தக்கன், பிரமனைத்தன் னிடத்திலவா வன்றுதலு மகனுவைத்து பெருஞ்சீர் முத்திப், பரமனைக்கண் டிவ்வாறு பெற்றனன்யான் பணித்தலிகாண் பரின்று னல்லன், றரமனைக்கு மூதாட்டி வனர்த்தாறுங் காளமன்றித் தருமோ நாகம். (௧௬)

சிற்றறிவற் கினிதுரைக்கு நன்மொழிகள் மென்முனைபோற் சிதையா மென்று, முற்றுமிந்த நான்முகன்போய் மைந்தனவை யகத்திசைத்த முகமன் கூற, மற்றவனைக் கம்பியன்போல் வளர்த்துமுறை பதியும் வகுப்பா யென்றான், பெற்றவரைப் பெரியவரைத் தெளியுமோ சிறியவர்க்குப் பெருக்கம் வந்தால். (௧௭)

தாலமிசை யயன்வகுத்த தக்கனா புரியிடத்துத் தக்கன் மேவி மாலயனு முறைபுரிய வாசவனும் பணிகேட்ப வானோர் போற்ற நீலவிழி யரமகளிர் கவரியிட கிரைமணிப்பூண் மகுடஞ் சூடி, மேல ரியாசனத் திருந்தான் வேந்தர்வேந் தாய்விதிக்கு விதியாய் மாதோ. (௧௯)

வேறு.

அரசுசெய் காலந் தன்னி லயன்மலர்ப் பதத்துத் தோன்றும்
விரைசெறி குழலாள் வேத வல்லியை விரும்பி வேட்டுத்
தரைதனிற் புதல்வ ரீரா யிரவரை யிருகாற் றந்தா
இரைசெய்நா ரதனு லன்றே யொழிவிலா முத்தி சேர்ந்தார். ()

பாலரை முத்தி சேர்த்த பான்மையான் முனிவைத் தக்க
ஞாலமீர் புவனந் தோறு முழன்றிடச் சபித்துப் பின்னர்
நீலவார் கூந்த லைம்பா னேரிழைக் கனத்தை யீன்று
சால்புசேர் சுபுத்தி யாதி பதின்மூவர் தருமற் கீந்தான். (௨௦)

அரிவையர் பதின்மர் தம்மிற் பிருதியங் கிராவுக் காக
மரிசிசம் பூதி வேட்ப வூர்ச்சையை வசிட்டன் மேவக்
கிருதுவே கமையை வேட்பக் கியாதியைப் பிருகு மேவப்
பொருகனல் சுவாவை நன்னப் பிரீதியைப் புலகன் வேட்ப. ()

புத்திரை சனதி மாதைப் புலத்தியன் மணப்ப வாய்மைத்
தத்தையா மனசூ யைக்குத் தலைவனத் திரியே யாக
வித்தகக் கியாதி மைந்தன் விதாதாவே சுவதைக் காக
வத்திரி மகவாஞ் சோம னசபதி முதலோர்க் காக. (௨௨)

தார்முடிச் சுவதை யீன்ற விருவரித் தரணி தன்னை
மேருவே மணப்ப வாட்கண் மேனையை யிமவான் வேட்ப
வார்முலைத் தரணி யீன்ற மேலையை வருணன் வேட்டா
ராமு தனையா ரீன்ற மக்களு மகேசர் மாதோ. (௨௩)

வேறு.

இக்கிவரிற் காசிபனை யீன்றனன்ம ரீசிபுலத் தியன்சீர் மைந்தர் யோகிராக் கதர்கவிகள் கின்னரர்கிம் புருடர்முதற் புலக னன்றே



ரங்கிரா சனபதிகள் கந்திருவர் வசுக்கடமை யளித்தா ரங்கே வெங்கவியைத் திருவையவு ணரைப்பயந்தான் பிருகுவென விளம்பு மேலோன். (௨௪)

அன்னவரிற் காசிபன்பின் றக்கனருள் பதின்மூவ ர[illegible]கார் தம்மை, முன்னர்வேட் டன்னவரி லதிதியா தித்தர்தமை முறையி னீன்றாள், பின்னரிர ணியன்ரணி யாக்கனையுந் திதியீந்தாள் பிரக லாதன், பொன்னவன்சே யவன்மகன்வி ரோசனன்மா வலியவன்சேய் புதல்வன் வாணன். (௨௫)

காலகே யரைப்பயந்தாள் காலையா யுவுமகரர் கணத்தை யீன்றாள், மேலையோர் நால்வரொடு கலுழனை யருணனையும் வினதை யீன்று, ளாலவிழி யரம்பைமுதற் பன்னிருவர் தமைப்பயந்தா ளரிட்டை மூவாக், கோலரா குலைப்பயந்தாள் சிங்கியைக் தருநாகக் குலத்தை யீன்றாள். (௨௬)

சம்பரனை முதலாய பன்னிருவர் தானவரைத் தனுவு மீன்றாள், கொம்பினிலங் கிளைகபிலை யிருவருமே கந்திருவக் குலத்தை யீன்றார், வெம்பரிதி யிந்திரியம் பாரிமுக் கினில்விடுப்ப விரண்டு கோடி, யும்பர்மருத் துவர்பிறந்தார் பிறந்தனசு ராசரங்க ளலப்பில் கோடி. (௨௭)

எண்கிளையா வான்மகப்பெற் றென்பெற்று ளயிரத்தி னிரட்டி யோரும், விண்கிளையா விடுபெற்றார் மீட்டுமக விரைப்பயந்த வியப் பா லோங்கி, யொண்கிளையாய் மலைகடலும் பாதலமும் பூதலமு முயர்வா னும், பெண்கிளையாற் சிறுவிதிக்குப் பெருங்கிளையா னது தவத்திற் பெரிதொன் றுண்டோ. (௨௮)

வேறு.

அத்தனை வாழ்வு மீச னருளென வுணரான் றன்பாற்
சித்தென வகந்தை யேறிச் சிறுவிதி பெருமால் பூண்டா
னெத்துணை கற்றோ ரேனு மிருவினைச் செருக்கால் யார்க்கும்
மத்தனோ யறுமோ முக்கண் மருந்தையுட் கொள்வார்க் கன்றி. (௨௯)

மதக்குழாத் திருபா னேழ்பெண் மக்களை மணந்துசெய் சோமன்
முகத்தெழி லரல் பாகு முலையெழி லுரோணி பாலு

முகப்பினு லெனை யோரை யொருவின னதனைக் கொணாத்
தகைப்பெரு மதியைத் தேய விதிமகன் சாபஞ் செய்தான். (௩௦)

புதியவா னெழுந் தீந்து புலவரை வளர்ப்பான் மேனி
திதிதொறுந் தெய்வ தானுன் சிறுவிதி சாபந் தீரா
னதிபொதி பவள வேணி நாதனு ரடியா ரன்றி
விதிதனை முநிபி ஞலே வெல்லவும் வல்லா ருண்டோ. (௩௧)

பான்மதி தேய்ந்து மேனி பழுதுபட் டுழன்று வானோர்
கோனவை குறுகிக் கூறக் கொழுங்கனல் கரியா வேட்ட
தேனோர்க் கோரஞ் செய்த சிறுமையாற் பெருநோய் பூண்டாய்
மேனெறித் தக்கன் சாபம் விலக்குதற் கெளிதோ நம்மால். (௩௨)

முதிரைமோ தகவி முரவின் முதுகய முகத்தெம் மான்முன்
னதிகவி றுறைத்து நீச னுயிவை யந்தச் சாபஞ்
சதுமுக னவனை வேண்டச் சதுர்த்திபி னமைத்து நீத்தா
னிதுவுமங் கவனுந் தீர்தி யென்னது மயன்பாற் சென்றான். (௩௩)

விபன்மதி யுலகி னொன்றும் விண்ணிடை நான்கும் விப
வயிரவாட் படையான் முன்னர் வளர்கலை நான்குந் தேய
வயன்முனர்க் கலைமுன் றேக வவன்வழி விடுப மேவி
யுயர்பிரான் கயிலை வெற்பி லொருகலை யொடும்போய் வீழ்ந்தான்.

மறைகளின் முதல்வா வோலம் வானவ ராவி காத்த
கறைகெழு மிடற்று வோலங் கன்றுதற் பெருமா னோல
மிறைவனே யோல மோல மென்னது மிரங்கி நாதன் [டான்.
பிறையையோர் காத்தால் வாங்கிப் பிறழ்சடை முடிமேற் கொண்

அருகுறை மதிமேற் சாப மபாவின்று பணிவி னுவ
முருகுறை பிலிற்றுங் கொன்றை மோலியான் முடித்த திங்கட்
கொருகுறை யிலதாய்த் தன்பா லுற்றதில் வளர்வு மந்நாய்
வருமுறை யதனுற் றேய்வு மதிதொறு மதிக்கு வைத்தான். (௩௫)

இன்னவை யுணர்ந்து தக்கன் யான்புரி சாபந் தீர்ப்பான்
இன்னவே னியுமோ வென்னப் பெருக்குமும் புலக ளேக்கிச்



சன்னிதி யடைந்தோர் காத்துன் சாபமும் நிறுவி நின்சீர்ப்
பொன்னனூர் வாழ்வுங் காத்தான் புரையிதோ வென்னத் தீர்ந்தான்.

சாதனைத் தவமும் வீறுந் தக்கனூர் மிக்க வாழ்வு
மாதரா ரறுபான் மூவ ராகிய மக்கட் பேறு
மோதுதல் புரிந்தா மப்பா லுயர்புகழ்ச் சதியை யீன்று
நாதனுக் கீந்து வாறும் வேள்விசெய் நயப்புஞ் சொல்வாம். (௩௮)

இரசத சிகரி மீதி விறைவர்பா லெம்பி ராட்டி
யதசவிற் றிருக்கு மேல்வை யடிதொழு தகில மெல்லாம்
வரதனீ நடத்தும் பான்மை வகுத்தெனக் குணர்த்தா யென்றான்
முரகரிக் கரிய நாதன் முறுவல்கூர்ந் தருளிச் செய்வான். (௩௯)

சகளநிட் களமே யாகிச் சகலமு மொடுக்கந் தோற்ற
நிகழ்தரப் புரிவோ மென்று நிகழ்த்தலு நிமலை மேனி
யகளமா முனக்கே தென்று ளருளுரு வாவ தென்றான்
புகலுநின் னருள்யா னெல்லா மெனதென்றாள் புவன மீன்றாள். ()

அகிலமா முணர்வை நாத னம்பிகை யுரையான் மாற்ற
நிகிலமு மயங்கிப் பானு நிலாவொளி திறம்பி யேனைச்
சகமுளோர் சடமாய் வீழ்ந்தார் சதுமுகத் தயன்மா லானுன்
முகில்வண்ணன் பிரம மானுன் மூவுல கிருளா யிற்றால். (௪௧)

யாவுமே மருளாய்க் கன்ம மிகந்துமா சுறலா லஞ்சிப்
பூவையென் மடமை யாவும் பொறுத்தியென் றடியில் வீழ்ந்தா
டேவிமெய்த் துளக்க நீங்கத் திருவுள மிரங்கி யண்ணை
லாவியாய் நிறைந்து நின்று னகிலமு மெழுந்த வன்றே. (௪௨)

உணர்ச்சிமீண் டிறைவ னல்க வுலகுயிர்த் தெழுந்த தம்மா
கணத்தினி லுகம்பல் கோடி கழிதலாற் கன்ம மாற்றுப்
புணர்ப்புறு தன்மேற் குற்றம் போக்கெனக் கவுரி போற்றத்
தணப்பிலாப்பிறவியெய்தித்தவஞ்செய்துதவிர்ப்பாயென்றான். (௪௩)

வள்ளலைப் பிரிந்து தேவி வலம்புரி யெனக்கா ளிந்தி
வெள்ளமேன் மிதந்தும் பூமேல் விரதமுற் றுழன்றுந் தக்கன்

பிள்ளையா யூழி காலம் பெருந்தவ முயன்றும் பாவந்
தள்ளுதற் கரிய தானுற் சகத்துளோர்க் கெளிதோ வம்மா. (௪௪)

மணந்தனன் மறையோ னாக மழுவலான் மாதை வேட்டுத்
தணந்தனன் மறைந்தா னன்றே தக்கனுந் தகமேற் கொண்டா
னணந்தரும் வருந்தி நோற்ப வாசமுற் றெய்தி நாதன்
கணந்தொழு விடைமேற் கொண்டு கயிலைமால் வரைமேற் போந்தான். ( )

தந்தைதா யுணரா வண்ணந் தன்மகட் கொடுசென் றானென்
றெந்தையார் தமையென் னாம விகழ்வது தொடுத்தான் றக்கன்
சிந்தையா மைர றன்னிச் சிறுவிதிக் கிதனுற் றீமை
வந்திடு நமக்கு மேதம் வருமென வெருவிச் சூழ்ந்தும். (௪௬)

ஆதியார் வரத்தாற் பெற்ற வரசிறு லவன்பால் யாமும்
போதரா திருத்தல் கூடா தாதலாற் புனல்சேர் வேணி
காதர்பா லிவனை யுய்ப்ப நவையறு மென்று தேறி
மாதுநின் மருகற் காண்பான் வருகென வவனுந் சென்றான். (௪௭)

கவளமால் வரையைக் கர்த்தோன் கமலத்தோன் குலிசத் தாகே
துவளமால் வரைக ளீர்த்தோன் சுரர்களுக் கிறைவாய் வெள்ளித்
தவளமால் வரையை நோக்கித் தக்கனோ டெழுந்து முக்கட்
பவளமால் வரையைக் காண்பான் பரிவினால் விரவிப் போந்தார். ( )

போந்தனர் வானோர் வெள்ளிப் பொருப்பினை செம்பொற் கோயில்
சார்ந்தனர் வாயில் பூதர் தடுத்தனர் விழியுந் தானுந்
சேர்ந்தனை யகங்கா ரத்தாற் சிறுவிதி கின்றான் செல்வி
காந்தனைப் பணிவா றெல்லாங் கடைதடை யின்றிச் சென்றார். (௪௯)

எரிமணி யிமைக்குங் கோயி லிமைப்பிலா விமையோர் புக்கு
வரிவிழி மடந்தை யோர்பான் மருவிவீற் றிருந்தான் றன்னை
யரிபணி யனுகித் தாழ்ந்து பணிந்தன ருகாந்த வாரி
கிரிசனெம் பெருமான் வெள்ளி கிரிமுனர்த் தாழ்ந்த லெய்ப்ப. (௫௦)

சொல்லினு லரிக்கு மோனித் தனக்கினுல் விதிக்கு மூரல்
வில்லினாற் குலிசத் தாற்கு விழியினு லமரர்க் கின்ப



ல்கினன் சமயந் தோறு நண்ணிய கடவு ளாகி
ல்கலி லுயிர்கட் கெல்லா மளவினுக் களவாய் நிற்பான்: (௫௧)

ளப்பது கடனுக் கொண்ட கண்ணனை யினிது நோக்கி
மாப்புவ னங்கள் யாவும் வளவிதே யென்று னன்னோன்
பூப்பவன் றனக்கும் யாவும் புரக்குமென் றனக்கு மேத
நீப்பவ னுனிநீ யாக நிறைவலாற் குறைவே தென்றான். (௫௨)

கரியுரி யாடை போர்த்த கண்ணுதற் கருணை மூர்த்தி
யரிபிர மாதி யோரை யவரவ ரதிகா ரத்துப்
புரிவன புரிந்து வாழ்மின் போதுமி னென்று வாக்கால்
விரிதரு குறிப்பா னோக்கால் விடைகொடுத் தருளப் போந்தார். ( )

படையினர் வணங்கு நேமிப் படையினு னாதி வானோர்
விடையினர் சரணம் போற்றி விடையினன் மீளுங் காறுங்
கடையினர் முகனர் கோயிற் கடையினி லமர்ந்தான் றக்கன்
புடையினர் பரவக் கொங்கைப் புடைப்பினர் கவரி யேந்த. (௫௪)

திருமலைக் கோயில் வாயில் செறிந்தசா ரதரை நோக்கி
மருகனை மகளைக் காண்பான் வருமெனைத் தடுத்தென் னேவ
லரிதனை யயனை வானி லமரரை விடுத்திர் நீரென்
பெருகடித் தொழும்ப ராயும் பேதமே புரிந்தீ ரென்றான். (௫௫)

வணங்குநி யாகிற் சேறி வள்ளல்பா லென்றார் பூத
ரணங்கினை யவனுக் கிந்தே னடியர்போல் வணங்கே னென்னைக்
கணங்களீர் தடுத்த வாற்றாற் காண்பினுங் கடவுள் பூசை
தனைந்திட வுலகம் யாவுந் தடுப்பனென் றுருத்துப் போனான். (௫௬)

அன்றுதொட் டயனை மாலை யமரர்கா வலனை மேருக்
குன்றுதொட் டன்பொற் கோயில் குறுகுநிர் பணிதி ராகின்
மன்றுதொட் டரசும் வாழ்வு மாற்றுவ னெனவு மன்னோர்
நன்றுநின் பணியே நிற்போ நம்பிநீ முனியே லென்றார். (௫௭)

பூமனுங் கண்ணன் றானும் பூமனும் புனிதத் தெய்வக்
காமனும் போய பின்னர்க் காமனு கெறிதீர் தக்கன்

சோமனை முடித்துத் தோலைச் சோமனென் றுடுத்தா னென்னை
மாமனென் றுரையான் றனை மாமனென் றிருந்தா னென்று. (ருஅ)

தீர்த்தனைப் பரவு வாரைத் தீர்த்தனன் றிராக் குற்றம்
போர்த்தனன் பிரமன் யாகம் புகுந்தனன் பரம பாக
கீர்த்தன னந்தி சாப நிறுவிட வேள்விக் குண்டத்
தார்த்தனன் கங்கை செல்வத் தரவினைத் தார்ப்ப தோரான். (ருகூ)

திருநந்தி சாப மஞ்சிச் செய்கலர் யாரும் வேள்வி
தருமமாந் துணையை நீங்கித் தவித்தன வுலக மெல்லாம்
வெருவுபே ரவையை நோக்கி வேள்வியான் புரிவே னென்று
னெரிபெருஞ் சாபத் தீமூன் னெதிரும்வைத் தூறு போல்வான். ()

தெருண்டவா னவரைக் கூவிச் செப்புவான் கயிலை யாற்று
மருண்டபுன் காடு நாடு மலர்க்கையி லெடுப்ப தோடு
சுருண்டபூங் குழலார் வீடு தொறும்பலிக் குழல்வான் கண்ட
மிருண்டது வயிறுற் றும லெழுகடல் விடமுண் டன்றே. (சுக)

விதியெனு மெனது தாதை விதியிலாத் திரங்கி யென்பாற்
சதியெனு மகளை யன்னான் றனக்கரு ளென்ற வாற்றாற்
பதியென வவனுக் கேநேன் பாக்கிய மவளாற் பெற்றான்
மதியினு மதியா னென்னை மாதுல னெனவு மோரான். (சுஉ)

தாயிலான் றமரு மில்லான் றந்தையு மில்லான் காடு
கோயிலா னூரு மில்லான் குலமிலான் குடியு மில்லான்
தீயிலா டரங்க மாகத் திக்கெலா முடைதொட் டாடும்
பேயிலா திருந்தா னுண்டோ பேரிலான் றனக்கோர் சுற்றம். (சுங)

கொற்றவ னல்லன் வேணிக் கோலத்தாற் குருவி லாதான்
கற்றவ னல்லன் மாதர் கற்பினை யழித்து லாலே
நற்றவ னல்ல னீம நடத்தினு லொழுக்க மில்லான்
மற்றவன் றனையே சூழ்ந்து வணங்குதிர் வானோர் நீவிர். (சுச)

பொன்மையா ரிருவர்க் காக மற்றுள புதல்வி யோரை
யுன்மையா யலைத்தான் றன்னை யலைத்தனன் சாபத் தியான்



மென்மைசேர் மகத்தி யொன்று வேட்டினிச் சதியை வேட்டான்
வன்மையும் பணியுந் தேவர் மடமையுந் தவிர்ப்பே னென்றான். (சுரு)

என்றன னிருந்தா ரும்ம வெழுந்தன ரமர மாதர்
பொன்றுணைக் கவரி யேந்தப் புள்ளிடை தட்பப் போகிச்
சென்றனன் கங்கை யோர்பாற் றிசைமுக னுதி தேவர்
மன்றனன் மகளி ரோடும் வருநிகன் விடுத்தா னேலே. (சுசு)

கனகல வனத்துத் தெய்வக் கம்மிய னிறைஞ்சிப் புக்குப்
புனைமணி வாயின் ஞாயில் பொன்னெடுஞ் சிகர மன்றஞ்
சினகர மணங்கார் கோட்ட முனிவரர்ச் சிரமந் தெற்றி
யுளமடஞ் சாலை சோலை யறப்புறம் வேதி யாதி. (சுஎ)

ஏறுயோர் சனையோ ரைஞ்ஞூற் றிரட்டியின் யாக சாலை
நூறுயோர் சனைவி சால நிவலநும் வேள்விக் குண்டங்
கூறுயோ சனையான் மேருக் குன்றமு மலையா நிற்ப
வீறுசேர் கடனு மேங்க விண்ணவர் வியப்பச் செய்தான். (சுஅ)

வேறு.

இந்தமகச் சாலையுறித் தக்கனு ரோலைவழி யெழுந்து போந்தார்
கந்திருவர் கின்னரர்தா னவரியக்கர் கிம்புருடர் கருடர் போக
ரந்தரசா ரியரமரர் வித்தியா தரர்பூத ராக்கர் மாந்தர்
முந்துதா ரகணத்தர் பாதாளர் வேதாளர் முனிவர் சித்தர். (சுகூ)

பன்னிருவ ராதவர்கள் பதினொருவ ருருத்திரர்மேற் பதின்மர் தேவர், மன்னுநவ மணிமகுடி மனுவேந்த ரெண்டிசையின் மகுட வேந்தர், கன்னதிக ளோரேழு மொழுதாறு தருக்களெந்து நான்கு வேத, முன்னருவ் கொருமூன்று மிருமருங்கு நிறைந்தனரான் முகுர்த்த மொன்றில். (எ0)

பொன்னுலகி லரம்பையர்கள் பொருப்பிலுறை யரமகளிர் புயங்க நாட்டுக், கன்னியர்க ளியக்ககுலப் பூவையர்விஞ் ஞசையர்மகளிர் கருப வேந்தர், பன்னியர்கள் கந்திருவப் பாவையர்க ளுடுமகளிர் படுவ மாத, ரின்னன்மே னகையரம்பை யுருப்பசிதி லோத்தமை மேவிந்தி ராணி. (எக)

வேறு.

வந்துகுழு மினர்மகவான் முதலோ ராக வானவர்கு ழாத்துடன் பால் வாரி மீதி, லுந்திபூத் தவனிடம்போய்த் தக்கன் வேண்டி யுயர் மகநீ காத்தருளென் றுரைப்ப மாமான், முந்தவெழுந் தொருகருடத் தூரங்க மேறி முளரிமலர்த் திருவினொடும் வந்தான் பூமே, லந் தணனோர் புறத்தணைந்தா னதனைக் காணு வறுபத்து நாற்கலையோ டொருமான் வந்தான். (எஉ)

வேறு.

புக்காட் செல்வம் போலும் புகலுண் டோ புகலா முன்னர்த்
தக்கனுர் வேள்விச் சாலை தன்னிலெவ் வுலகத் தோருந்
தொக்கனர் புவன வேந்தர் தொகையிலீ சான னல்லார்
மக்களிற் சதியே யல்லார் மருகரிற் பரம னல்லார். (எ௩)

மவுனரிற் பராச ரன்சீர் வசிட்டனத் திரித தீசி
சுவனுயர் கும்ப யோனி துருவாசன் பிருகுத் துங்க
னிவர்களெம் மானை யன்றி யெய்திலி ருந்தார் மற்றைத்
தவமுயன் முனிவர் யாருஞ் சார்ந்தனர் யாக சாலை. (எச)

பதுமநா பனுக்கு மேனைப் பண்ணவர் தமக்குஞ் செய்பு
முதன்மையாஞ் சிறப்புச் செய்து முறைமுறை வரிசை யாவும்
புதல்வியர் மருகர்க் காற்றிப் பொருவரு நெடுங்க டத்து
மதகயம் புகுந்தா லென்ன மகப்பெருஞ் சாலை புக்கான். (எரு)

ஆகவ னியங் காரு கபத்தியந் தென்பா லங்கி
யாகனற் கொழுந்து வீச வடவரைத் தறிவா னேங்கப்
பாகமாங் காம தேனு பரந்தனி சொரியா நிற்ப
யாகமார் பொருள்கள் யாவு மீந்திடப் பாரி சாதம். (எசு)

திரவியங் குன்று குன்றாத் தேவர்கள் குவிப்ப வானோர்
புரவலன் பணிப்ப மோனைப் புங்கவர் திசைகள் காப்ப
விரதமார் வருக்க மெல்லா மிந்துவே கொடுப்ப வேனை
மருத்தோ டதிதி யாதி மக்கள்கைக் கரும மாற்ற. (எஎ)

இருபுறத் தமர மாதர் கோடிக மேந்திச் சூழத்
திரு தளிர்க்கி ராணி செயும்பணிக் குறைக ளர்ப்பக்



கருணையா லுலக மெல்லாங் காப்பவன் வேள்வி காப்பப்
பொருவரும் யாகத் தெய்வம் பொலிவுற நடிப்ப மாதோ. (எஅ)

தருமனே குரவ னாகச் சதுமுகப் பிரம னீன்ற
பிரமரி லொருவன் மேவிப் பிரமதா னத்தில் வைகக்
கருநிறக் கலைத்தோல் போர்த்துக் கைத்தலம் வெண்ணெய் பூசித்
திருமகப் பொலிவு பூண்டு சிறுவிதி யிருந்தான் மன்னோ. (எகூ)

மடுத்துச்சொல் லுரையா வாணி மறையுரைப் பவளாம் யாவு
மெடுத்துக்கை நீட்டு வாளா மெழிற்பெருந் திருவாஞ் செல்வி
விடுத்துங்கைம் மறுப்பா ருண்டோ தக்கனார் வேள்விச் செல்வங்
கொடுக்கக்கை சடைப்பா ரில்லை கொள்ளக்கை சடைப்பா ரின்றி. ()

இன்னவை நிகழ மேல்வை யீசனெம் பெருமா னன்றிப்
பன்னரு மகத்தின் சாலை படருவான் மடமை நோக்கிச்
செந்நெறி விளைப்பா னுன்னிச் சென்றனர் முனிக்த ழாத்துத்
துன்னுசீர்ச் சுவனுத் துங்கன் றுருவாசன் றதீசி மாதோ. (அக)

சிறுவிதி முகத்தை நோக்கிச் செப்புவான் றதீசி யார்க்கு
முறுதியே யறங்கள் செய்த வுயர்பல வறத்தின் மேன்மை
பெறுகதி மகமே மிக்காம் பிறங்குசீர் மகத்தி லுன்போன்
மறுவறு முயற்சி வல்லார் வழங்குமு வுலகிற் காணோம். (அஉ)

நிச்சமார் தருவும் வானோர் நிருபனு மேவல் கேட்பப்
பச்சைமால் வேள்வி காப்பப் பண்ணவர் வினைநே ரேத்த
விச்சையா மகஞ்செய் கின்றாய் விதிமகன் விதிநீ செய்யு
மெச்சமென் பதற்கோ ரெச்ச மீசனில் லாத தென்றான். (அ௩)

தேசமர் முனிவன் கூறச் சிறுவிதி யொருவர்க் கிங்கே
யீசர்பன் னொருவீ ருள்ளா ரென்றன னிவரோ கேர்வா
ரோசைவிந் துவுமா மூல வுருத்திரர்க் கென்றான் யோகி
யாசறு மனைத்தன் மீட்டு முருத்திர ரவரே யென்றான். (அச)

உமையொரு பாகர்க் கேது முருத்திர நாமஞ் சொல்வார்
தமதுருப் பெற்றோ ரங்கி சம்புவின் கணத்தோர்க் கெல்லாஞ்

சுவையுறு தாது வைகும் பொன்னெனிற் சுவண மாமோ
வமரரோ புலவ ரென்று ளாடினோர் பாடி னோரும். (அரு)

கடைநடு முதலிலாமுக் கண்ணனே கடவு ளென்று
சடைமுடித் தலைவன் கூறச் சாற்றுவான் முனிந்து தக்க
னிடையினிற் சடையின் மாத ரிருவரை வைத் தவனோ யோகி
விடையினிப் பரியா வேறி வீதிபோ மவனோ வீசன். (அசா)

நஞ்சினை யமுதன் பானோ நாணிலா நக்கன் றானோ
குஞ்சிதப் பவுரி யாடுங் கூத்தனோ தீர்த்த னவான்
வெஞ்சினப் பன்றிக் கோடு மீன்விழி யாமை யோடு
கஞ்சுகி பிறவும் பூணுங் கருத்தனோ கருத்த னவான். (அஎ)

கழிதலை மாலை யானோ கையிலோ டேந்து வானோ
சுழிபுலி கரித்தோ லாடை சுற்றிவெண் ணீறு பூசி
யழிதரு மயானந் தன்னி லலைகையோ டாடு வானோ
விழியில்வெந் தருவு காட்டும் விகிர்தனோ விமல னென்றான். (அஅ)

முறையிலான் முனிந்து கூற முனிவிலான் மொழிவான் மூல
மறையெலாங் கற்றுங் கல்லா மனத்தராய் மதத்தா லுன்போ
லிறைவனை யெண்ணா ராகி யிருந்தவம் புரிந்தார் மன்னோ
கறைகெழு மனத்தார் தாரு காவன முனிவர் முன்னாள். (அகூ)

ஈங்கிவர் தவத்தை மாய்ப்ப மாயனை யேவி யெம்மான்
றீங்கனி மொழியார்க் கெல்லாந் திகம்பர னாகிச் சென்று
ஆங்கவர் மருங்கு நெஞ்ச மாசையே யுடைய ராகி
நீங்கருந் தவமுங் கற்பு நிறைகளுந் தோற்றா ரன்றே. (கூ0)

அவ்வவ ராபிசார முயன்மதித் தாடி வேங்கை
வெள்வரி யுடுத்து நாக மிலேந்துகூர் மழுவுந் தீயு
மவ்வியுந் துடியு மேந்தி கருதலை முடித்துப் பூதம்
வெவ்வடர் படையா நாதன் விரதர்வீ றடக்கி யாண்டான். (கூக)

உலகமீன் றருளும் பெண்பா லுகந்தனன் மலர்ந்த நாட்டம்
இலகவா ணுதலாள் பொத்தச் செங்கைவேர் வெழுந்த வாரி



புலமெலா மழித்தல் கண்டு புவனமூன் றுறு வுய்த்தான்
பலகதிப் பரப்பி லொன்றே பகீரதற் கேந்து கங்கை. (கூஉ)

வீறுசீ ருகாந்தம் பொங்கி யெரிதெற வெளியாங் காலை
மீறிலா மையினு மீச னிவ்வெளி மயானத் தந்த
நீறணிந் தாடல் செய்வா னின்மலை யொருத்தி காண
வூறிலாத் தருமஞ் சேவா யுகந்தொறு மொருதா டேக்கும். (கூங)

மீனமாய் மறையை மீட்டுக் கமடமாய் வெற்பைத் தாங்கி
வானவர்க் கமுத மீந்து மகிதலம் விழாமற் கோட்டா
லேனமா யெடுத்து மாமா வெய்துமா லடக்கி மைந்தர்
ஞானநா யகன்பா லுய்த்தார் நாட்டமு மோடுங் கோடும். (கூச)

கயமெனு மவுணக் குன்ற முயிர்க்கடல் கலக்குங் காலம்
வியமுறு முலக முய்ய வென்றுமே தா வுரித்துப் போர்த்தா
னயன்மிதஞ் சிரத்தா னீக்கி யதுபலிக் கலமாச் சூலம்
வயிரவற் கீந்து விட்டான் மாலாதி சுரர்மான் மாற்ற. (கூரு)

வாசவன் மதமோர் கால மாற்றவேற் றருவா யெங்கோன்
பூசல்வெங் கதத்தி லுய்த்த சலந்தரன் புவன மூன்றிற்
கேசவன் முதலோர் சாயக் கிளர்சமர் விளைத்தான் வெற்றி
வீசனைத் தனன்போ லுய்த்த கேடியா னிருகூ றானான். (கூசா)

விந்தவ னுருவிற் புக்கு விறலரி விருந்தை யென்னுங்
காந்தையைப் புணர்தற் சோரங் கண்டவள் சபித்துத் தீயின்
மாய்ந்தனள் மயானத் தாடு மயங்கலு முமையோர் வித்தாற்
பூந்துழா யருள வன்றே புனைந்துமா லொழித்தான் மாலும். (கூஎ)

அகிலகா ரணமா வாடலாடலுக் கிசைந்த கோலஞ்
சகலமு மங்கமீ தாகத் தரித்துவன் விடுப்ப னல்லாற்
புகலரு முருப்பேர் செய்கை பூண்படை யுடையூண் மற்று
மிலநா யகனுக் குண்டோ நிகழ்த்தது நிகழ்த்து ஞாலம். (கூஅ)

சாமனைத் தசதி யெல்லாந் தந்தையாய்த் தாயாய்த் தந்த
பிரமனைப் பணிந்தே நீயும் பண்ணவர்க் காசா யுந்தை

பிரமனைப் பிறரை யாண்டாய் பின்னுநாக் கவியும் பெய்து
சிரமனைச் செல்வ மெய்தித் திறம்பெற வாழ்தியென்றான். (௯௯)

ஆக்கவன் பொருட்டா லென்று மறுதின்றி விடமுண் டாற்குப்
பாக்கினாற் பலியேற் றுண்ணப் பரிகலங் கொடுத்தா னெங்கை
நீங்கலா வறுமை நீக்கி நேரிழை சதியை யானே
யோக்குசீர் மனத்தா லீந்தே னுயர்மனை வாழ்வு பெற்றான். (௧௦௦)

துன்னரும் புலித்தோன் மாற்றித் துகில்சுற்றி மகுடஞ் சூட்டி
மன்னுபொன் னணிகள் பூட்டி மணவாளக் கோலஞ் செய்த
வென்னையோ ரறுவா வென்று விகழ்ந்தன னதனு லீசன்
றன்னையு மருகா வெண்ணேன் சதியையு மகளா வெண்ணேன். ( )

பற்றில னென்னவே தக்கன் பகர்தலு முனிவ னோக்கி
யுற்றுநீ புரியும் வேள்விக் குறுபய னளிப்பார் யாவர்
பெற்றமா மறைகள் யாரைப் பிரமமென் றுரைக்கும் பேதாய்
வெற்றிகொண் டெழுமோ சேனை வேந்தனை யின்றி யென்றான். (௧௦௨)

முனிவனீ துரைப்பத் தக்கன் முயற்சியே பயனை நல்கு
மெனவுரை வழிப்பப் பின்னு மிறையின்றிச் சடமா மூக்க
கனிபயன் றருமோ வென்ன நற்றவன் மறுப்ப மற்று
முனதுரை கேட்பார்க் கன்றோ வுரைப்பதென் றுருத்துச் சொன்னான்.

அவனது பகர்த லோடு மடன்முனிச் சீயஞ் சீறிச்
சிவனரு ளின்றிச் செய்கை சிவகோ டிகளுக் குண்டோ
விவனையென் னுதுநீயு மியலுமட் டியற்றும் யூபங்
கவனவெங் களத்தி லாவி கழியுமட் டாமெய் யூபம். (௧௦௪)

விறலணி சடையா னன்றி வேள்விநீ யியற்றுஞ் செய்கை
மதுமலர் குழலிற் சூட்டி வனமுலை யாரம் பூட்டிக்
கதிர்மணிக் கலாபஞ் சாத்திக் கன்னிகை யொருத்தி தன்னைப்
புதுமணக் கொழுந னின்றிப் புரிமணக் கோலம் போலும். (௧௦௫)

கண்ணனென் பவனு மெங்கள் கடவுள்பாற் சத்தி மற்றை
விண்ணவர் பசுக்க ளன்றே வியன்பசு பதியை நீக்கிப்



பண்ணமை பசுப்படுத்துப் பயனுநீ யெய்து வாயேற்
பெண்ணொரு பெண்ணைக் கூடி மகவினைப் பெறலு மாமே. (௧௦௬)

வசுக்களே யாதி வானோர் காசிபன் மற்றோ ராய
முசுக்கள்போன் முனிவ ராலு முடிவதொன் றிலையாற் கவ்வை
புசுக்கள்போ லிரிப்பக் கூடி யுயிரளித் திருத்தி நும்மைப்
பசுக்கள்போற் படிப்பன் வந்து பசுபதி யவனே யின்னும். (௧௦௭)

உகம்பல கடந்த முக்க ணொருவனை மழுவ லானை
யகத்தையா ளிகந்த நீயு மழிகுதி னாக சாலை
புகுந்தவர் சிதைக வேள்வி பொன்றுக வென்று சாற்றித்
திகந்தரும் புகழும் யோகி முனிக்குழாத் தெழுந்து சென்றான். ( )

ஆங்கவன் போய பின்ன ரமரரோ டிருந்து தக்கன்
வீங்குதீ வேள்வி செய்தான் மேல்வருங் கருமமோரான்
யாங்குமே நிறைந்த முக்க ணிறைவனை யறிவித் தன்றித்
தீங்குநன் கெய்தும் பான்மை தேவர்க்குந் தெரியொ ணாதால். (௧௦௯)

இருநிலப் பரப்பும் வானு மேலவுங் கேட் டிறைஞ்சத் தக்கன்
றிருகுசெய் மகத்தின் கோப்புந் திங்கள்கா சிபனை யாதி
மருகர்தஞ் செருக்கு மன்னோர் மனைவியர் களிப்பும் வானோர்
பெருமையுங் கண்டு வெள்ளிப் பிறங்கல்வாழ் முனிவன் சேர்ந்தான்.

திருமலைக் கோயில் வாயிற் றிருக்கடை பலவு நீங்கி
மருமலர்த் திருவோ லக்க மண்டபங் கடந்து போகி
யருளினாற் கண்டான் சிற்றூ தகிலமு மாகின் னையாற்
கருணைகம் பரமனோர்பாற் கவறெறிந் தாடு வானை. (௧௧௧)

சடைமுடி தாளிற் சூட்டித் தாழ்ந்தவிழ்ந் திறைஞ்சி முக்க
ணுடையநா யகனைப் போற்றி யுலகெலா மீன்ற தாயைப்
புடையுற வணங்கி வாழ்த்திப் போந்தவாய் புதைத்துத் தக்கன்
விடையமார் வேள்வி மார்க்கம் விரைவின்வின் னப்பஞ் செய்தான்.

கேட்டனள் கவுரி தூதுங் கிடத்தினை யிறைமுன் றுதை
விட்டிய மகத்தி னர்வத் தெழுந்தனள் பணிந்து வீழ்ந்தாள்

வேட்டகத் தெவர்க்கு மெய்தா வியன்சிறப் பெய்தி னாலும்
பேட்டன நடையி னார்க்குப் பிறந்தகத் தாசை போமோ. (௧௧௧)

அன்னைதான் பணிந்து கேட்ப வையர்தா முறுவல் பூத்து
நின்னையு மழைபா னெம்மை நினைகிலு நினையான் சென்று
னுன்னையே மதியான் போத லொழியென மறுத்துந் தாயர்
தன்னையர்க் கண்டு மீள்வே னென்றுபொற் சரணில் வீழ்ந்தாள். ()

வல்லியங் கொம்பு வேண்ட வரதன்மேற் கரும மோர்ந்து
சொல்லிய வண்ணா நேர்ந்தா னாயபொன் விமான மேறிப்
பல்லியங் கொம்பு பம்பப் பனிமொழி யணங்கார் சூழச்
செல்லியற் கணங்க ளார்ப்பச் சிறுவிதி சாலை சார்ந்தாள். (௧௧௩)

தநிநிலக் குண்டங் கண்டு சமிதையா மூரந்தாடீய்ச் சாலி
முதிரைவித் தெறிந்து நெய்யா முறுபுனல் சொரிந்து காளுந்
திதியொடு கோளுஞ் சூழத் தீவினைப் பயிர்செய் வான்முன்
புதியநல் வினைபோற் சென்று புகுந்தனள் புவன மீன்றாள். (௧௧௪)

வன்சுதை தீற்றுஞ் சாலை வாந்தசையின் வருகின் றாளைத்
தன்சுதை யெனவும் பாரான் றகவிலன் வருகன் றாட்டாப்
புன்சுதை யனைய னாகிப் புறக்கணித் தகலா நின்றான்
மென்சுதை தனைக்கண் டாலம் விலங்குதல் வழக்கே யன்றே. (௧௧௫)

திவ்வ னிருந்த மார்க்கந் திருவுளந் தனிலெண் ணாம
லையங் கடந்தா ளுள்ளே கடத்தலு மவன்கா ணாது
தாயருந் துணைவி மாருந் தழுவினர் மகிழ்ச்சி கூர்ந்தா
ராயிழை பாச வர்க்க மகற்றினு மகலு மேயோ. (௧௧௬)

பயந்தனள் சிறப்புச் செய்யாப் பயந்தனள் பதக னாலே
வியந்துடன் பிறந்தார் யாரும் விருப்பினர் வெறுப்பார் போன்று
நயந்தன ளகன்றாள் செல்வி யணங்கனார் குழாத்தை நீக்கிப்
புயங்கலே புரிவை போர்த்தான் புரிமக முன்னர்ப் போந்தாள்.

கண்ணாகின மலரு ளானைக் கற்பக வனைந்து ளானை
யன்னவர் பிறரை வானில் வெண்மதிக் கடவு ளாதி



யென்னரு மருகர் தம்மை யாகத்தில் வரித்தாய் முக்க
ணண்ணலெம் பரனை யெந்தா யயர்த்தனை போலு மென்றாள். (௧௨௦)

அலைகட லமுதப் பாய லண்ணலு மமுத முண்ணும்
புலவரும் புலவர் கோனும் புலவருக் கமுத நல்குங்
கலைநிலா வொளிருந் திங்கட் கடவுளும் வளர்பொற் சாலை
கலமிலா விடத்தை யுண்டா னன்றுநற் குரித்தோ வென்றாள். ()

ஆரணன் வெறுவி யோட வமரர்க ளோட வோடா
நாரணன் வெளிய மேனி கரியதாய் நடுங்கி யேங்கிப்
பூரண முறையோ வென்னப் புகறலும் விடத்தை யெங்கோன்
பாரணஞ் செயலா லன்றோ பருகின ரமுத மென்றாள். (௧௨௨)

மன்றினை நிருத்தஞ் செய்து மனைதொறும் பலியேற் றுண்டு
குன்றனைக் குலமி லானைக் கூட்டலன் வேள்விக் கென்று
னுன்றனி மகவை யன்றோ நுதவினை குலமென் சொல்வா
யென்றன னதனை னீசி ரிருவருந் தவிர்க வென்றான். (௧௨௩)

அக்கண யகனை முக்க ணகிலநா யகனை மூக்கன்
பங்கமா விகழ்த லாலே தந்தைமேற் பழைய காதன்
மங்கைநா யகியான் முற்று மறந்தனள் மடவார்க் கெல்லாந்
தங்கண நாயகனை யன்றித் தந்தைதாய் யாவே றுண்டோ. (௧௨௪)

மந்திர மறைகள் பாய்பட மகத்திலென் புகைகள் காக்கு
மிந்திரன் முதலோர் தாம் ரிமையவர் முனிவர் தொண்டர்
சந்திரன் கதிரோ னங்கி தம்பிரான் விழிகள் பூப
வந்தர மனைத்து மேனி யவனலா துலக முண்டோ. (௧௨௫)

சிரமக முனக்கே தீண்டிச் செயுமிட மேனு நீதான்
பரமகன் மக்கள் தாயர் பரவரென் றனராய் போலும்
பேரமழ விடையார்க் கன்பு புரிந்தமெய்த் தவத்தா லன்றே
தாமக பதியே யாதி தலைவர்க்குந் தலைமை பூண்டாய். (௧௨௬)

செறியுளார் செல்வம் பெற்று னெறிநின்று நீடு வாழ்வர்
சறிவிலார் செல்வம் பெற்று விளிவிலா வகந்தைப் போயும்

பிறிதுகன் டெரியா நோயும் பிடித்திடு மவையை மாற்ற
வறுமையே தண்ட மென்னு மிரண்டுமா மருந்து மன்றோ. (கஉஎ)

சிட்டரைப் பரிக்குந் தேவ தேவைநீ யிகழ்த லாலே
துட்டநிக் கிரகஞ் செய்யத் தோன்றலார் தோன்று கிற்ப
ரிட்டமா முனிவர் சொல்லு மெம்மனோர் மொழியுங் கேளாய்
மட்டறு செல்வ மந்தோ வைத்திறு லழிக்கின் றுயால். (கஉஅ)

யாவரே மழுவ லானை யிகழ்வரே லுடனே யந்தப்
பாவரை யடுதல் வேண்டும் படாதெனிற் பழிமேல் வைத்து
விலகே வேண்டு மாவி விந்திடா ரவ்வூர் விட்டுப்
போவதே வேண்டும் வேண்டார் பொருந்துவர் சிவத்ந ரோகம். ()

என்றனள் கவுரி மானத் திவர்ந்தன ளளங்கார் குழச்
சென்றனள் கயிலை வாழ்வைத் தெண்டனிட் டிறைஞ்சி யோர்பான்
மன்றலங் குழல்பின் சோர மனத்தொரு வேகந் தூண்ட
நின்றனள் கமலம் வேர்ப்ப நீலங்கள் சிவப்ப நாணி. (கங0)

அணங்கெழுந் தருளும் பான்மை யறிதலா லமரி லேற்ற
கணங்களைத் துரந்திட் டன்னோன் களன்மகத் தாபி சாரத்
திணங்கெழு தறுகட் பூத மொறுத்தநும் பிறவு நோக்கி
மணங்கெழு கொன்றை யார்முன் சென்றனன் மகதி யாழோன். ()

வேறு.

மமதை யான்மதி யழிந்திடு தக்கன்மா மகளா
முமையை யென்னல னுனதரு ளென்னல னுமையோ
டமைப வேகுநின் கணங்களை யடர்த்தன னமலா
விமைய வர்க்கவி சொரிந்தனை யிகழ்ந்தன னென்றான். (கஙஉ)

முனிவன் வாசகந் திருச்செவி புகுதலு முதல்வன்
புனித வாயிதழ் துடித்தது நெறித்தது புருவ
நனிகொள் வாணுத லிவர்ந்தது சிவந்தது நயன
மனில மங்கியு மொடுங்கின நடுங்கின வகிலம். (கஙங)

மார னிங்கிலை விழிக்கடை சிவந்திட லறிதா
ஞூரல் வந்திட முப்புரங் கனுகிலை முழுதும்



வீரம் வந்திடக் கடையுக மிலையென விமலன்
பார மெங்கத மடக்கியோர் குறிப்பொடும் பார்த்தான். (கஙச)

13-தக்கன் வேள்விச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - எசஅ.

---

## பதினான்காவது:—தக்கன் வேள்வியழித்த சருக்கம்.

பார்த்த திக்கினிற் கொடுமுடி யாயிரம் பரப்பிச்
சூர்த்த தின்புய வரையிரண் டாயிரந் துலக்கிப்
போர்த்த தாள்களி லண்டமு மகண்டமும் பெயரா
வேர்த்தெ ழுந்தனன் வீரரில் வீரரில் வீரன். (க)

அண்ட கோளகை முகடுறு நெடுமுடி யனந்தஞ்
சண்ட பானுவோர் வடிவெடுத் தெனவொளி தழைப்பக்
கண்ட கங்குதி நெறிப்பவோர் கனகமால் வரைமேன்
மூண்ட கங்களா யிரமுகிழ்த் தெனக்கர முகிழ்த்து. (உ)

காற்று மொன்றுதீ யொன்றவை யிரண்டிலை கட்பக்
கூற்று மென்புது மொன்றலா யிரண்டிலை குழைப்பத்
தோற்ற மன்சிரங் கான்கலா லெத்திலை துடிப்ப
வேற்றெ ழுந்திசை யெட்டலா றெட்டிலை பிறப்ப. (ங)

குலரப் புறக்கட லொன்றலா லிரண்டிலை குடிப்ப
வரைசெய் மேருவு மொன்றலா லிரண்டிலை வளைப்ப
வுரைசெ யண்டமேற் பித்திகை யிரண்டிலை யுடைப்பப்
பரசு பாணியா யழைத்தெனன் பணிக்கெனப் பணிந்தான். (ச)

பெருண்ப ரூப்பத மண்டமென் டிசைகள்யாம் புரிந்து
மென்ப ரப்பலா மழிப்பது குறித்திடேல் வீர
வன்ப கத்திலாச் சிறுவிதி பெருமக மழித்து
வஞ்சி ரக்கையுந் தணித்திவண் வருகென்றான் வரதன். (ரு)

என்ன லும்பணிந் தேகின னிறைவிபாற் றோன்றி
யன்ன பத்திர காளியல் கணத்தொடு மணைந்த

டன்னி டைப்பல கோடியர் வீரரைத் தந்தான்
பின்னர் முன்னரு மருங்கினு நெருங்குறப் பெயர்ந்தான். (௬)

ஆனை தந்தமீப் போர்வையு மடற்புலி கொணர்ந்த
தானை யும்பெருந் தானையங் கடற்புவி தாங்கு
மேன மாமருப் பணியுட னொறிகடற் கிடையே
போன்மீ மாமறை மீட்டசேற் கன்களும் பொலிய. (௭)

உரவு மார்பிடைச் சிங்கவேற் றரிவையுந் தரிகம்
விரவு மாகணைக் கங்கணம் விரிபுறு மணிகள்
கரத லந்தொறுங் கதிர்தரக் கலைமதிக் கணம்போற்
பிரமர் மால்சிர மாலைகள் புயந்தொறும் பிறங்க. (அ)

ஆயி ரம்பணு நெடுமுடி புடையகச் சரைய
வாயி ரங்குரோற் கழலொலி யுருமொலி மடிப்பச்
சேயி ருந்திரு முகந்தொறுந் செறிதரல் விழியாற்
காய கங்கைமும் புறக்கடல் கருங்குடர் கலங்க. (௯)

வடிநெ டுங்குடை கொடிகள்வான் கதிரொளி மறைப்ப
விடைநெ டுங்கொடி நிலவுமே கிருமொலாம் விழுங்க
வடிபெ யர்ந்திடும் விசைதொறுந் திசைதொறு மதிரத்
தொடிநெ டும்பணி கதிர்மதி மண்டலந் துரப்ப. (க0)

அடல்செய் திண்புய மெண்டிசா முகவெளி யடைப்ப
வுடைய பொன்முடி யண்டகோ ளகைமுக டுடைப்பப்
படைகள் கண்டகர் மனந்தொறுங் கொடுங்கனல் பரப்பத்
தொடையன் மார்பமுந் துடித்ததோள் கரும்பலந் துடிப்ப.

கண்க ளிற்பொறி யூழிவெங் கனலையுங் கனற்ற
விண்க ளிப்புறு முடிக்கண்போன் மலர்த்தொடை மிடைய
மண்க ளிற்பில மதிர்தர வரும்பெருஞ் சேனை
யெண்கு லப்பெருங் கிரிகளை விசைகளா லெடுப்ப. (கஉ)

சன்னி காவுயர் கயிலையின் றழிந்தொரு கோடி
துன்னு பூதமொவ் வொன்றுமே ரண்டமுஞ் சுமப்பத்



துன்னி வாங்கிய வுபர்மணிக் கொடிஞ்சியந் தேர்மே
லென்னை யாள்பவ னேறின னுலகமீ டேற. (கங)

வேறு.

கப்பணம் பிண்டி பாலங் கணிச்சிமுட் கரங்கோ டாரி
வைப்பெருஞ் சுரிகை தோட்டி வச்சிரம் வெதிரைந் தண்டக்
துப்புடை முசலங் கைவாள் சூலமே கிரி யாதி
வெப்புடைப் படைகார் கால் மின்னெனப் பரந்து மின்ன. (கச)

முருடுசெல் லரிகள் பேரி முரசமத் தலித டாரி
கரடிகை திமிலை மொந்தை கைமணி படகம் பம்பை
திரடரு பணவந் தக்கை திண்டிம நவுரி காளம்
வருடகா லத்துத் தோன்று மாமுகி லொலிபோ லார்ப்ப. (கரு)

வேறு.

நந்தி பல்கணத் திரளொடு நவிபுறங் காப்ப
வந்து சண்டனும் வலத்துற விடத்துற மனிமான்
முந்து பல்கண நாதரும் பூதரு முரணிச்
சிந்து ரக்குழாந் திரிந்தெனச் சாரிகை திரிய. (கசு)

புலிமு கத்தன கலைமுகத் தனவயப் புலிமா
னெலிமு கத்தன கொய்யுளை யுத்தரி முகத்த
கலைமு கத்தன கரடியின் முகத்தன கணங்கள்
மலைமு கத்தினு மறிகடன் முகத்தினும் வாவ. (கஎ)

அடித்த லங்களி லலைகடல் கலக்குவ வனந்தன்
முடித்த லங்களு முளைக்கநின் றுடுவ முகிலோ
டிடிக்கு லங்களைப் பிசைவன மிசைவன விமையோர்
செடிக்க வஞ்சுறக் கணமன் டலங்களைக் கிழிப்ப. (கஅ)

மேற்றி சைச்சரி கிட்டுசைக் களிற்றின்மேல் விடுப்பக்
காற்றி னைக்கொடு சுழற்றுவ கனலைவாய் மடுப்ப
போற்று பாரிடஞ் சூழ்தரத் தேர்மிசைப் போந்தான்
கூற்றி றுக்குமோர் கூற்றெனும் வீரகோ ளரியே. (க௯)

கிளி யஞ்சனி காடுகொள் கடற்படை களலக்
கூளி சிந்துவெங் குறள்புலிப் பறவெனக் குழும
வாளி சென்றெனச் சென்றன ரடற்கண நாதர்
தூளி சென்றது சிறுவிதி மகக்குழி தூர்ப்ப. (௨0)

மலைய திர்ந்தன மாதிர மதிர்ந்தன வான
நிலைய திர்ந்தன வீரர்க ளதிர்தலு நெடுநீ
ரலைய திர்ந்தன மகஞ்செயு மயன்மகன் குடுமித்
தலைய திர்ந்திட வதிர்ந்தன வானவர் தகுதி. (௨௧)

காலை வானுடுத் தெரிந்தன கதிர்தனை நோக்கிக்
கோல ஞாளிகள் குரைத்தன நரிக்குழாங் குழுமிச்
சாலை யூடவி கவர்ந்தன தக்கனு திபர்க்கு
மேல வேமன மடித்தன துடித்தன விடமே. (௨௨)

தக்க னனவன் றன்மகங் கடிந்துதான் புரிவான்
மிக்க னவுது காண்டுமென் றயனின்ற விரிஞ்சன்
முக்க ணாயகன் சேனைகண் டெளம்வெரீஇ மூதுவான்
புக்கு காமினி யுய்ந்தன மெனப்புறம் போனான். (௨௩)

தொகைத்த டங்கடல் வீரன்மாப் படைவருந் துழனித்
தகைக்கு மாலுமா லாகினன் முனிவருஞ் சடைத்தார்
திகைக்கு மன்னரே யாகினர் தேவர்கோன் முதலோ
ரகைத்து மாமக மபருமவா னவர்களு மயர்ந்தார். (௨௪)

ஞால மேழையு மீன்றநா யகியையு மிகழ்ந்து
மால யற்குயர் தேவையு மறந்துளான் மகஞ்செய்
சாலை புக்கதே யவலமென் றமரருஞ் சலித்தார்
மேலி னிச்செயல் யாதென முனிவரும் வெருண்டார். (௨௫)

ஆதி நாயகன் புதல்வனை முன்னிடா தமிர்த
மோத வாரியிற் கடைந்துமுன் பட்டபா டுணர்வோ
மாது பாகனை யிகழ்ந்தவன் மகத்திடை மதிகேடாய்ப்
போதன் மேயினம் புரிந்தனம் பிழையெனப் புகல்வார். (௨௬)



துன்று திக்கெலாந் துந்துபி யதிர்தலுந் துளங்கிக்
குன்ற டர்த்தவன் முதலினோர் மாலொடுங் குழுமி
யின்றி னிச்செயல் யாதென வெருவுவார்க் கெதிரே
சென்று தாக்கின பாரிடப் பெரும்படைத் திரள்கள். (௨௭)

ஓல மிட்டெழு கூளிக ளும்பர்மே லுதிரக்
கோல மிட்டெனக் கிழித்தன வாய்வழி குருதி
கால விட்டன வானவர் மகளிர்கா தரித்து
நால விட்டன புரந்தரா தியர்சபை நாப்பண். (௨௮)

மன்மு ருத்தெழு குறட்படை மகப்பெருஞ் சாலை
யனல்கொ ளுத்தின யாகமேற் கொழுங்கனி லவித்த
கனக நற்சுவ ரிடித்தன வுடைத்தன கடங்கள்
சினைம லர்த்தருப் பிடுங்கின நடுங்கின திசையே. (௨௯)

சாலை யிற்கனல் கொளுத்துசா ரதர்தமை நெருக்கி
யாலை யிற்படு கரும்பென வலைத்தன ரமரர்
பாலை யிற்பெருங் கிழத்திசென் றமரர்தம் படைமேல்
வேலை யிற்கலங் கலக்கிடுஞ் சுறவென மிடைந்தாள். (௩0)

மிடைந்து முத்தலைப் படையினு லதிர்க்குவாள் விதிர்த்துத்
தடிந்து சென்னியு மூளையுந் தகர்படத் தநியைக்
கடைந்த மத்தெனத் தண்டினு லலைத்தனள் காளி
யுடைந்து விண்ணவ ரோடினர் துரிபடா துலைந்து. (௩௧)

அமரர் தாக்கிய கோடிப்படை நெரிதலு மறன்று
நமனு மங்கியு நிருதியும் வருணனு நலங்கூர்
தமனி யப்பெருந் தலைவனும் பாகசா தனனுந்
திமில முற்றெழு பவனனு மெதிர்ந்தனர் செருவில். (௩௨)

வலம ழுப்படை நந்திதே வனுமணி மானுஞ்
சூலவுபல் படைச் சண்டனுஞ் சாரதர் குழுவுங்
கலக விற்கொடு வாள்கொடு கதைகொடு கலந்தார்
புலவு மைச்சடன் மேல்வட வனற்றிரள் புகல்போல். (௩௩)

இந்தி ரன்பொர நந்திபல் கணத்தொடு மெதிர்ந்தான்
முந்து செங்கதிர் தழன்முதன் மூவர்மேற் சண்டன்
வந்தெ திர்ந்தன னெறுழ்வலித் தடம்புய மணிமா
னுந்து மாமதி வருணனு நியருட னுடன்றான். (௩௪)

பம்பை யார்த்தன படலிகை யார்த்தன பணைபேர்க்
கொம்பு தாரைகள் குழறின பிளிறின வேழ
மம்பு வார்சிலை முட்கர மெறிமழு வடல்வாள்
சம்ப மாதிய படைகொடு தாக்கினர் சமர்மேல். (௩௫)

தாள்க ளைப்பெருஞ் சிரங்களைக் கரங்களைத் தடிந்து
தோள்க ளைச்சிறு புறங்களை யுரங்களைத் துமித்து
வாள்க ளிற்பொரு சாரதப் படைகளை யடுத்துக்
கோள்க ளைப்பொரு கோடின்ன வானவர் கொதித்தார். (௩௬)

சித்த ரைப்பெருந் தேவரை யியக்கரின் சையரை
மொய்த்த கின்னரர் கருடர்கிம் புருடரை முரணிக்
கைத்த லத்தினும் புடைத்தவெங் காலினு முதைத்துத்
தத்த வானிடத் தெறிந்தனர் பாரிடத் தலைவர். (௩௭)

கருதி றத்தெழு காரெனக் கார்முகந் தாங்கி
யுருமெ னச்சிறு நாணொலி திசைதொறு மொலிப்பத்
தரும ழைப்பெருந் தாரைபோ லமரர்கோன் சரந்தூய்ப்
வருக ணப்படை தூரத்தெதிர் நந்திமேன் மலைந்தான். (௩௮)

ஒன்று பத்துநூ றாயிர மெனப்பொலிந் துலவாத்
துன்று பத்திர மாயிரம் வாசவன் றூப்ப
நின்று நந்திதன் கணிச்சியா லடிதலு நீறாய்ப்
பொன்றி விட்டன விளக்கில்வீழ் பதங்கமே போல. (௩௯)

நிரைநி றைப்பொரு கணைபெலா மவ்வண நிகழ
வரைபெ னப்பெருங் கதைகொடு மலைந்தனன் மகவான்
புரைத விர்ப்பவன் மழுவினாற் பொயது பொடியாய்த்
தரைக ளிற்சினத் தெறிந்தமட் கலமெனத் தகர்ந்து. (௪0)



குலிசம் வாசவன் பிடித்தன னிடித்தெதிர் குமுறு
மொலியி னற்பெருஞ் சாரதர் மலைந்தன ருலைந்தார்
வலியை யேவினி நில்லென வள்ளன்மேல் விடுத்தான்
கலக லார்த்தென வார்த்தனர் வானவர் கணமே. (௪௧)

எரிய ழப்பியென் டிசைகளும் புகைத்துரு மேறுங்
கரிய டப்படர் புரந்தரன் வச்சிரக் கதிர்வாள்
விரிச டைப்பெரு நந்திதன் கணிச்சியின் மிடலா
லெரிக னற்கிடுஞ் சமிதைபோ லடலையா னதுவே. (௪௨)

காயும் வச்சிரப் பொருபடை நெரிதலுங் கன்று
மாயி ரந்தடங் கண்ணினா னடற்பெருங் கரியைப்
பாய விட்டெதிர் படர்தலுங் களிற்றைவால் பற்றிச்
சீயமொத் தவன் றிசைதொறுஞ் சுழன்றெனத் திரித்தான். (௪௩)

கறைய டிப்பெருங் களிற்றொடுஞ் சுழற்றலுங் கலங்கிப்
பறவை யின்குயி லுருக்கொடு வாசவன் பறந்தான்
மறைபு காதுவின் மறைதலு மழுவினான் மலையைச்
சிறை யரிந்தவன் சிறையையு மரிந்தனன் செய்யோன். (௪௪)

இயம னங்கியை நிருதியைப் பரிதியைச் சிகியை
யயம னங்கியேழ் கரங்களிற் சிலகர மரிந்து
வயம னங்கிபல் லுருதது வானவரைவான் மடுத்துச்
சயம னங்கிபோர்த் தாடின னெறுழ்வலிச் சண்டன். (௪௫)

வருணன் வாயுவைத் தனதனிற் றுவைப்பொரு மணிமான்
றருணை வேந்தனைச் சேனையைத் தானையைத் தடிந்து
கருணை வாழ்கென விருந்தாறும் பருக்கொடு காக
மருண மண்டல மறைத்திடும் பந்தரி லார்த்தான். (௪௬)

அடித்து மார்பிடை யுதைத்துமேற் கதுப்பிடை மறைந்து
மிடித்து மெற்றியுந் துகைத்துமேற் பற்றியு மீர்த்துங்
கடித்தும் வின்னசையர் விண்ணவர் தானையங் கடலைக்
குடித்த கையெயுற் குறாமெனத் திரிந்தனன் கூளி. (௪௭)

சூழு மெண்டிசைக் காவலர் தொலைதலுந் தொலையாப்
பூழி மொய்த்தெழச் சாலையுட் சாரதர் புகுந்தா
ரூழி யண்டங்க ளுடைப்பபோ லவிக்கட முடைத்தா
ராழி மால்பெரு வேள்விகாப் பவனெதி ரடர்ந்தான். (சஅ)

தக்க னெங்குளான் சாலையெங் குளதவன் சாலை
புக்க வானவ ரெங்குளார் போதுமின் புகுமின்
சிக்க யாத்திவட் கொணர்மினென் றமரிடைச் சினவி
முக்க ணாயக னருளலுஞ் சாரதர் மொழிவார். (சகூ)

வெற்றி யானைவிட் டோடின னிந்திரன் மேதிச்
சிற்றி யானைவிட் டேகின னந்தகன் றேவர்
மற்றி யாவரு மிரிந்தனர் வேள்விகா வலனா
யெற்று போர்செயப் புகுந்தனன் முகுந்தனே யென்றார். (ரு0)

எந்தை யார்பதம் பணிந்துகண் ணிடந்துசாத் தியதும்
வந்தை யாவருள் புரிகெனத் திகிரிவாங் கியது
முந்தை யார்திரு வருளினான் மோலிபெற் றதுவுஞ்
சிந்தை யாலுற மறந்தன னேகொலாந் திருமால். (ருக)

யாங்கு ளானவன் யாங்குளா னெனப்புகா வெதிர்ந்து
தாங்கு நின்னுழைத் தக்கனைத் தருதியோ சமர்மே
லூங்கு நின்றெதிர் பொருதியோ வென்னலு முருத்து
வாங்கு வெஞ்சமர்க் கெழுந்தனன் கலுழன்மேன் மாயன். (ருஉ)

ஓறுத்து மால்சிறு நாணொலி யுருமென வொலிப்ப
மறுத்து வில்லிடு முகிலெனச் சரமழை வரதன்
குறித்த தேரின்மேற் காளிமேற் கூளிமேற் குறண்மேற்[தான்.
பொறுத்த நந்திமேற் சண்டன்மேற் கணங்கண்மேற் பொழிந்

மாத வன்கணை கணங்கண்மேற் சொரிதலும் வரதன்
மோது தானவர் தயித்தியர் சேனைபோன் முகுந்தற்
பூதர் மாப்படை யெளிதென நினையலை பொருபோர்
பேது றுமெனிவ் வருகென வொருசிலை பிடித்தான். (ருச)



வேறு.

பிடித்தன னமலன் சாபம் பிறந்தன பகழிக் கூற்றங்
குடித்தன செறுந ராவி குவிந்தன குறைபக் குன்றந்
துடித்தன வுடல்கள் சோரி சொரிந்தன கணங்கள் பாட
நடித்தன கவந்த பந்தி நடுங்கின திசைக ளெங்கும். (ருரு)

சேனையைத் துமிக்குஞ் சில்லித் தேர்களைச் சிதைக்குந் தேவர்
தானையைத் தொலைக்குந் தானைத் தலைவரைத் துணிக்குந் தாவி
யானையை யுருட்டும் வாசி யடர்த்தெழு மமலன் பாணம்
வானமுங் கடலுந் திக்கும் வரைகளும வரையா தேகும். (ருசு)

கரங்களைக் கடிந்து நீண்ட கால்களைத் தடிந்தும் வீர
ருரங்களைப் பிளந்துந் தாவி யுயிர்களைக் குடித்து மோதிச்
சிரங்களைத் துணித்து மூளை தெறிபடத் தகர்த்தும் வானோர்
வரங்களைப் புகுந்து குறை யாடின வரதன் வாளி. (ருஎ)

நீடின விகடர் சேனை நெரிபட வுரங்கள் கீறி
யோடின வுலகந் தோறு முலவின வொருவன் வாளி
வீடின ருடலந் ஊன்றி மெய்ந்நிணம் பருகி யாவி
தேடின திசைக டோறுந் திரிவன பொருவு மாதோ. (ருஅ)

அமரரா யுடனுண் டார்க ளல்லையா யுடனுண் பாராய்ச்
சமருளார் படைகண் மாய்ந்து தம்பிரான் படையாய்ச் சூழக்
குமரியா னல்லைக் கூட்டங் கூளிகள் குரவை யார்ப்பத்
திமிலையார் களத்திற் காகப் பந்தரிற் சிர்வேட் டன்றே. (ருகூ)

வேறு.

கொடிக்கு ளண்டமு மகண்டமும் வெடிபட நொறில்போர்
முடிக்கு மாயினு முடிவிலான் விடுகொடுஞ் சரங்க
ளிடித்தெ ழுந்தல கைவயினு மெண்ணல ராவி
குடித்து மீள்வன பரவுவார்க் கின்னருள் கொடுத்து. (சுo)

வெய்ய வோர்பசு விதிமகன் வியதற்றன் விரவார்
கையு மெய்களும் யூபமாக் களமமர்க் களமா
செய்க வேவிகாய் நெருப்புமிழ்ந் தவியுண நிரப்பி
யையன் மாப்படை யனந்தமாம் பசுப்படுத் தன்றே. (சுக)

ஏறு வெஞ்சம ரிமையவர் தொலைதலு மெதிர்போர்
வீறு வெஞ்சிலை மாதவன் வளைத்துவெங் கணைக
ளாறு நூறொரு தொடைதொடுத் தனனதை யுமலை
யூறு நூறென நூறினு னொருகணை நுதியால். (௬௧)

ஆயி ரம்படை காந்தமால் விடுத்தலு மனகன்
பாயி ரும்படை காந்தகே ரொருகணை பணித்தான்
மாயு வன்பதி னாயிரங் கணையிருண் மலைந்தான்
றாய வன்கணை யாயிரங் கதிரெனத் துரந்தான். (௬௨)

மாரி யிற்சர மாரிபெய் தனன்மழை வண்ணன்
மூரி விற்சரஞ் சூறையின் விடுத்தவை முருக்கிப்
பாரி டத்தவன் முராரிதேர்ப் பரியினைப் பதித்துத்
தேரி டத்தவன் பாரிடத் தலைவனைச் செய்தான். (௬௩)

சேமத் தேர்மிசைக் குதித்தன னெதிர்த்தனன் றிருமால்
வாமத் தானையின் வலம்படு கணைகளான் மலைந்தான்
சோமத் தாரவன் சரமொரு தொடையினாற் றளவத்
தாமத் தான்விடு கணையொடு சிலையையுந் தடிந்தான். (௬௪)

புதைய வெஞ்சரஞ் சிலையொடு தொலைதலும் புழுங்கி
யிதைய மண்டுறத் தண்டமொன் றெடுத்தரி யிறைமே
லுதைய மால்வரைக் கிழுதிமால் வரையென வுய்த்தான்
சதைதயி னூற்கதை யிலையெனக் கடிந்தனன் கடவுள். (௬௫)

குல்லை மாலினித் திகிரியே படையெனக் குறியா
வெல்லை யண்டமும் புவனமு நடுக்குற வெடுத்து
வல்லை யேவினிற் றாங்கென வலியினல் விடுத்தா
னொல்லை யவை யார்த்தனர் சாரதருலைந்தார். (௬௬)

நேமி யம்படை நேமிமால் விடுத்தலு நெரிந்து
பூமி யுந்தர நெருப்பெழக் கொதித்தெழும் போதின்
மீமி சைத்தவுங் காரமொன் றிசைத்தனன் விமலன்
றாமி யுந்தனைப் பசுவின் மடிப்பது கடுப்ப. (௬௭)



அலைகள் வற்றுறக் குடித்துமூ வுலகுமு மதிர்த்து
மலைக ளைப்பொடித் தெதிர்வரு திகிரிமாப் படையை
மிலைத ரப்புயப் பொருப்பின்மே லேற்றனன் வீரன்
றலைவர் போற்றலை மாலையிற் கடைமணி தயங்க. (௬௯)

சண்ட நேமிபோய் வாள்கொடு குரைகடற் சயனன்
கொண்டன் மின்னொடு வருதல்போல் வருதலுங் குழறி
யண்ட மெண்டிசை வெடிபட வார்த்தன னையன்
விண்டு வாய்வெரீஇ யுருமொலிக் கரமென வீழ்ந்தான். (௭௦)

வீழ்ந்த வன்றனைத் தடிந்தில னருளினால் விடுத்தா
னாழ்ந்த தண்கட லரண்புகுந் தொளித்தன னவனுஞ்
சூழ்ந்த தின்குர லிடித்தலுந் துடித்துவீழ்ந் தனனே
போழ்ந்து டும்படை தொடுத்திடி லாற்றுமோ புவனம். (௭௧)

சண்ட னுந்திரு நந்தியுந் தனிமணி மானு
மண்டு மேதிமேற் சண்டனைத் தனதனை மடுத்துக்
கண்ட கால்கனல் வருணனை நிருதியைக் கடைநாட்
கொண்ட லாமென வாய்வழி கறையுகக் குமைத்தார். (௭௨)

ஒருவ னைச்சிவ பரமனைக் கருதலா வுதய
னொருவ னைத்தனி விழிகுறைத் தனர்மதி யுருவா
மொருவ னைத்தலை நிலத்தொடு தேய்த்தய முகைக்கு
மொருவ னைக்கரங் களைந்தனர் நாவையு மொறுத்தார். (௭௩)

குடர்ச ரிந்தனர் தாள்குறைந் தனர்கரங் குறைந்தார்
முடிசி தைந்தனர் விண்ணவர் விஞ்சையர் முதலோர்
படிக ளத்தனிற் கிடந்தன ருடல்பதை பதைத்தா
ருடைய நாதனை யிகழ்ந்தவர் யாவரோ வுய்வார். (௭௪)

கணையுங் குந்தமுஞ் சுரிகையுங் கயமினங் கடுப்ப
விணையில் குஞ்சர மிடங்கர்மா வெனவெடுத் தேகித்
திணைநெ டுங்களக் குருதியா றயர்பிணத் திரளா
மணைக டந்துதேர்க் களிங்குமுன் சுழித்துபாய்ந் ததுவே. (௭௫)

அண்டர் சேனைக டொலைதரு மமர்க்கள மகன்று
மண்டு சாரத ரிருபுடை வலம்புரி முழக்க
விண்ட வேள்வியஞ் சாலையிற் புகுந்தனன் விமலன்
கண்ட பல்வகைக் கணங்கண்மேற் புகுந்தன கணங்கள். (௭௬)

தூண்கள் பற்றிய பசுக்களை விடுத்தனர் தூரப்பா
ரூண்கள் பற்றிய வமரரை முனிவரை யொறுப்பார்
சேண்கு டத்தவி முனிவர்தஞ் சிரங்கண்மே லுடைப்பார்
வீண்கு வைப்படு திரவியங் கடல்புக வீழ்ப்பார். (௭௭)

தீர்த்த னெம்பிரான் றனையிகழ் வேள்வியைத் தேவர்
பார்த்த கண்களைப் பறிப்பன கேட்டவர் செவியை
யேர்த்த கைகளை யவிறுகர் நாவினை யீர்த்துக்
கூர்த்த வாளினா லரிந்தன கிரிந்தன கூளி. (௭௮)

வாணி யிந்திரை யுண்டமுஞ் சசிவன முலையுஞ்
சேணை ரம்பைய ரதிதிமற் றவர்குமின் சிமிழ்
காணி ரம்பவோ கண்ணொச்சில் கழியவோ நடுவே
காணு முன்பிடித் தரிந்தனள் சொரிந்தனள் காளி. (௭௯)

திக்க னைத்தையும் யாகதண் டந்தமர் செலுத்தி
யிக்க னைத்தவர் பணிசெய முனிவரைத் தெடுப்ப
முக்க னைத்தழன் முருக்கெனப் பூத்துமுன் னிருந்த
தக்க னைச்சிகை பிடித்துவாள் பிடித்தனன் றலைவன். (௮௰)

மக்க டாரமு முலைகண்மூக் கிழந்தமை மதியாய்
திக்க டாமல்விட் டோடிய தேவரைத் திருப்பாய்
மிக்க டாவினை விடிந்ததோ முடிந்ததோ வேள்வி
யக்க டாவுனக் கெளியனோ மழுப்படை யமலன். (௮௧)

வேறு.

செற்பரா பரைமகளாச் சிவபெருமான் மருகாக
முற்பராய்த் தவம்புரிந்த முறைமையா லுலகாண்டாய்
தற்பரா பரனைமறுத் திகழ்ந்துதனித் தாய்பாவ
மற்பரா னவர்முடிமேற் றங்குமோ வபிடேகம். (௮௨)



உனையய வ மறடுத்தவனே யுயர்மவுலி தேடவவன்
றன்னையின் றெடுத்தவனே தாட்கமலந் தேடநின்ற
வென்னையின் றெடுத்தபிரான் றன்னையுதத் தாலிகழ்ந்து
சொன்னவாய் சிரத்தினொடுந் துணிக்கின்றே னெனத்துணித்தான்.()

எச்சகா யத்தவரு மிடைந்துமாய்ந் தனர்போத
னெச்சனுஞ் சிறுவிதியு மிமைப்பொழுதில் வீடினு
னெச்சநா மல்லதிலை யெனவிரலை யாலெழுந்த
வெச்சனு மவன்றலையும் வாளினா லறவெறிந்தான். (௮௪)

மந்திரத்தின் முறையறியார் பூசைபோன் மகவேள்வி
யிந்திரற்கு மிமையோர்க்கு முடியாம லிருந்ததாற்
சிந்திரத்த மொடுதக்கன் சிரமறுத்தா குதிபுரிந்து
தந்திரத்தி னொடுமுடித்தா னொருகணத்திற் சகநாதன். (௮௫)

வேறு.

அமர ராகவே மகத்திடை யவியுணப் புகுந்தா
ரமர ராகவே களத்திடை யவியுண்டா ரதனாற்
றமர வாரிதி விடமுண்ட தம்பிராற் பரவுந்
தமர லாதவர் நினைத்தவா முடிப்பரோ சகமேல். (௮௬)

உகம ழிப்பவ னனையபோர் வீரனென் னலரைக்
ககம ழித்திடப் பொருதுபோய்க் கணத்தொடு கயிலை
யிகன்ம ழுப்படை யெம்பிராற் றொழுவவ னீந்தான்
மகம ழித்ததோர் நாமமு மழிவிலா வரமும். (௮௭)

நன்னு வீரனு நந்திபல் கணமுநா ரதனுங்
கன்ன னும்புடை பரவவீற் றிருந்தருள் கயிலைப்
பண்ண வன்றனைப் பணிந்தன னெழுந்தனள் பகர்வா
ளண்ணல் யாகமு மாகமும் பிரிகலா வணங்கு. (௮௮)

வேறு.

எவரும் பரவு நின்னை யெண்ணலா திருந்த தக்கன்
பாவையென் றென்னைக் கூறும் பரிபவ மொழிப்பா யென்று
தேவிநின் றுரைப்ப நாதன் றிருவுள மகிழ்ந்து நம்பா
லாவல்சே ரிமவான் செல்வி யாகென வருளிற் போந்தாள். (௮௯)

சிறந்தகான் முகத்தோன் போற்றிச் செகங்களின் குறைபா டோதி
யிறந்தவ ருயிரை மீட்பா னெம்பிரா னருள்பெற் றேகி
யறுங்கைகால் சிரங்க ளாதி யவயவம் பொருத்து மேல்வை
யுறங்கினர் விழித்தா ரென்ன வெழுந்தன ரும்ப ரெல்லாம். (கூ0)

அத்தலை யூபந் தோறு மவரவர் முடிபெற் றுய்ந்தார்
நெய்த்தலை யூபத் தூடு நிணத்தலை பறிபோய்த் தக்கன்
மைத்தலை யூப மேவி வானவர் தலைமை தீர்ந்தான்
மெய்த்தலை விதியே வந்து விலக்கினும் வினைவி டாதால். (கூக)

யாகத்தின் வினையாய்த் தக்க னெடுத்தகல் வினையே யென்றுஞ்
சோகத்தீ வினையாய் வந்து சூழ்ந்திடத் துயரி லாழ்ந்தான்
மேகப்பூங் குழலோர் பாக னருளன்றி வினைக ளாலே
பாக்கிதி னுயிர்கட் கெல்லாம் பயனறிந் தூட்டற் பாற்றே. (கூஉ)

சிவநெறி யோர்ந்து மோராச் சிறுவிதி செயலின் மாய்வுங்
குவவுறு திணிதோள் வீரன் கொற்றமு மூரைத்தாம் பின்னர்த்
தவநெறி யில்லான் வேள்விச் சாலைபுக் குழன்ற வானோ
ரவநெறி யடைந்து பாவ மடைந்தமை தொடர்ந்து சொல்வாம். (கூங)

14-வது தக்கன் வேள்வியழிந்த சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம்—அசுக.

---

## பதினைந்தாவது:—தேவர்கள் சிவத்துரோகமடைந்த சருக்கம்.

மோலியிற் பிறைவைத் தானை முறையிலா திகழ்ந்த தக்கன்
சாலையிற் புகுந்து வேள்வி சமைத்தநீ வினையி னாலே
மேலைவி ளிமையோர் தம்மை வெண்மதி விரவி லாத
மாலையி னிருள்போல் வந்து வளைந்தது சிவத்து ரோகம். (க)

தீளர்மதி முடித்தார் நேயந் தவிர்தலா லமரர் பாவக்
களர்நிலத் திடைக்கா லாழ்ந்த கயக்குழா மென்னத் தாழ்ந்தார்
கிளர்சமத் தஞ்சி யோடிக் கீழ்ப்படு மவுண ராகிக்
வளர்நிதிக் கணம்போற் றுக்கி வளமெலாங் கவர்ந்தார் மன்னே. (உ)



பல்லவ முயிர்க்கும் பாரி சாதமும் பசும்பொன் னாடுஞ்
செல்வமுஞ் சுரபி சிந்தா மணிகளுந் தெய்வ மாதர்
நல்லெழிற் புணர்வு நீங்கி நல்குர வடைந்தார் கல்லாப்
புல்லர்தம் மருங்கிற் சேர்ந்த புலவர்போற் புலவ ரெல்லாம். (ங)

கவிகையு மரசும் வாழ்வுங் கடவுள்வா ரணமுஞ் செம்பொற்
சிவிகையு மிழந்து காலா லுழந்தனன் றேவர் வேந்த
னவியமு மறியு மேந்து நம்பனை நம்பார்க் கென்றும்
புவிதனிற் பிலத்தில் வானிற் பரப்பினிற் புகல்வே றுண்டோ. (ச)

இந்திர பதத்தை நீத்த விந்திரன் முதலோ ரெல்லா
மந்திரக் கிழவர் கூற மதிநெறி முறையிற் சூழ்ந்து
தந்திரக் கலைக ளாவான் சதுமுகத் தலைவ னென்று
சுந்தரப் பதுமத் தண்ண லுன்னகர் நோக்கிச் சென்றார். (ரு)

வேறு.

பேர்வை யாரமு தனைவுபோய் வாழ்வுபோய்ப் பனிநா
ளிரவு தாமரைக் காடுபோன் முகம்புலர்ந் திமையோர்
குரவ னான்முகன் கோயிலின் றிருக்கடை குறுகிப்
பரவி பூண்டதே யிரவிமுன் கமலமே போன்றார். (சா)

நாவி ரண்டுகட் கமலமு மதிமுக நான்கு
மேனி ரண்டிரண் டருமறை விரிக்குநாத் தடமும்
பாவி ரண்டினு நாலிரு தடம்புயப் பணைப்பு
நூலி ரண்டையு மரும்புறத் தரித்தகோன் மார்பும். (எ)

மீதி லங்குநான் மகுடகோ டிகள்வெயில் விரிப்புங்
காதி லங்கிய குண்டல மொளிவிடு கதிர்ப்பும்
போதி லங்கிய கரங்களுங் கமண்டலப் பொலிவுந்
தாதி லங்கிய தாமரைத் தாமமுந் தயங்க. (அ)

நாவின் மாடத்து நறைவிரி நளினபீ டத்துத்
தேவி பாரதி மகிழ்வொடு சிறந்துவீற் றிருப்ப
வாவி பேதக மனந்தகோ டிகளுமங் குறிப்பத்
தாவில் வேதமு மகமுங் கலைகளுந் துளிர்ப்ப. (கூ)

மடன்மு றுக்கவிழ் வனருக மண்டப நாப்பட்
சுடர்வி ளக்கென வுறைதரு சுருதிவா னவனைக்
கடல்கொ ழித்தன கருணையங் கடவுளைக் கண்டா
ரிடர்த விர்த்தன மினியென விறைஞ்சின ரிமையோர். (க0)

வான மாதியா வுயிர்க்குடல் கரணங்கள் வயக்கி
யேன போகமும் புவனமும் வினைவழி யிசைத்து
மேன காலமுங் கருமமு நடைபெற விதிக்குந்
தான பங்கயாச் சிரமனே பரமனே சரணம். (கக)

வான நாதனே மண்பொதுத் தந்தையே மறைதேர்
கான வேதியர் கனகனே கருதுவார் தனியே
ஞான பாரதி நண்பனே நாற்பெருங் கோணிற்
பானு வாயொளிர் பகவனே சரணெனப் பணிந்தார். (கஉ)

எந்தை யேயென விறைஞ்சுவார்க் கெதிர்முகங் கொடுத்து
நொந்த வானவ ரெழுமெனத் திசைமுக னோக்கி
வந்த காரணம் யாதெனப் பவளவாய் மலர்ந்தா
னந்த ராதிபன் பரவிவாய் புதைத்துநின் றறைவான். (கங)

சேம மாநிதித் திறைகொண்டு வந்தெமைப் பரவு
நாம வாளுடைத் தானவர்க் குடைதந்து நலிந்தோங்
காம தேனுவுங் கற்பகக் கானமு மிழந்தோஞ்
சோம சூரியர் வழங்கிடாத் திசைதொறுஞ் சுழன்றேம். (கச)

வான மாநதி வைகறை யாடலு மறந்தோந்
தான பானமுஞ் சந்தியு நியதியுந் தவிர்ந்தோம்
பீன மார்தனத் தரம்பையர் முயக்கமும் பிரிந்தோங்
கான மாமறை யுறுதிபோய் வறிதுநாட் கழித்தோம். (கரு)

வசைக்க லம்புனை யவுணராஞ் சுறவின மடுப்ப
விசைக்க லங்கவிழ் வணிகர்போ லிடர்க்கடல் வீழ்ந்தோ
நசைக்க லந்தன நறுஞ்சுவைக் கலந்தன நல்யா
ழிசைக்க லந்தன மெமக்கிவை புகுந்தன வென்றார். (கசு)



மிக்க நான்முகன் விளம்புவா னென்மகன் விலக்கித்
தக்க னவ்வ னல்லதற் கோமகஞ் சமைத்தா
னக்க பேரவி யுருத்திர பாகமு மொழித்தான்
முக்க ணாயகன் றன்னையு மிகழ்ந்தனன் முடிவால். (கஎ)

தகவின் மக்களை யழைத்தன னழைத்திலன் சதியை
யகில முற்றவு மீன்றரு ளன்னையென் றுணரான்
வகையு ணர்த்தவு முணர்ந்திலன் மதத்தினு லிழிந்தான்
புகலி னுங்கெடு மதிகள்கண் டோற்றுமோ புலவீர். (கஅ)

அறிவி லானவ னப்படி யாகுக வானுற்
பொறியி லீருங்கள் புத்தியும் வெறுவிதாய்ப் போமோ
வெறிம லுப்படை யிறைவனை யாவரோ விகழ்ந்த
நெறியில் யாவரு நிற்பரோ நீவிரே நின்றீர். (ககூ)

ஆதி யார்விட முண்டதா லமரசா யமர்ந்தீர்
காதி முப்புரம் வென்றதாற் கனகநாட் டுறைந்தீர்
மாது பாகர்செய் நன்றியை மறத்தலின் மகத்தா
லோது நல்வினை தீவினை யானதா லுமக்கே. (உ0)

உந்தி நாயகன் முகுந்தனைப் படைப்பநூ லவன்ற
னுந்தி மாமலர் மிசையவ னருளினா லுதித்தே
னந்த நான்முக னென்னுமா திருந்தன மதனா
லெந்தை யாரலா லெமக்குமோர் களைகண்வே றுண்டோ. (உக)

அனந்த சாமியும் யானுமேத் தமலனை யரவம்
புனைந்த வேணியெம் புனிதனைப் பொருளெனப் போற்றீர்
மனங்கொண் மாமறை யோதியுஞ் சுவர்க்கமேல் வதிந்துங்
கனங்கொண் மெய்ந்நெறி கடந்தனிர் நவையுறக் கடவீர். (உஉ)

பாவ மேதரும் பழிதரும் பகைவராற் படுக்குந்
தாவ சோபமே விளைத்திடுங் குலத்தையுந் தாழ்க்கு
மாவ தாம்பொரு ளழித்திடு நரகிடை யழுத்துந்
தேவ ராகிலும் விடுத்திடு மோசிவத் துரோகம். (உங)

க்றைய ணிந்திடுங் கண்டனைப் பழித்திடுங் கயவோ
நிறைசி வாகமஞ் சிவபுரா ணங்களை யிகழ்வோர்
முறைமை யன்பரை யன்பர்வே டங்களை முனிவோர்
மிறைசெய் கும்பிபா கக்கொடு நரகிடை வீழ்வார். (உச)

எழுந்தி டாநர கழுந்திபு மியமதண் டத்தின்
கழுந்தி னுலடி யுண்டுமே கற்பங்கள் கழிவார்
செழும்பு னற்சடை யெம்பிரான் சிவநெறி யகன்று
பழங்க ணெய்திடப் பரமதம் புகுந்தபா தகரே. (உரு)

ஆதை யாலுமைச் சிவத்துரோ கம்பிடித் தலைப்ப
வாதை தானவர்க் கிந்துமா சுணைப்படங் கிழிக்குந்
தோகை கோம்பியாற் சுழல்வதொத் திரது தொலைந்து
போக யான்முத லெந்தையா லியற்றவும் போமோ. (உசா)

வேறு.

வேதநெறிக் கடங்காத பாவமியான் போக்குவனென் விதியிற் றீராப், பேதமுறு பாவமெலா மாலொழிப்ப னவனாலும் பிரியாப் பாவந், தாதவிழ்கொன் றைச்சடையான் போக்குவிப்ப னவனரு ளாற் றவிராப் பாவஞ், சீதரனர் தம்மாலு மெம்மாலு மெவராலுந் தீர்க்கொ ணாதால். (உஎ)

ஓராத கோகத்தி பிரமகத்தி கிரிகத்தி யொன்றொன் றேற்றஞ்
சாராத குருத்துரோ கஞ்சனத்து ரோகஞ்சா மித்து ரோக
நேராக வொன்றிலொன்று நூறுமடங் கதிகமிவை நீங்கு மேனுந்
தீராது தீராது சிவநெறியிற் பிழைத்தவர்தஞ் சிவத்து ரோகம்.

என்றுதிசை முகனுரைத்து நின்றமுறை யிடுவானோர்க் கிரங் கிப் பின்னுந், தொன்றுசே ரகிலாண்டந் துள்ளசிவா லயங்களெலாந் தொழுவீ ராகி, லன்றுபோ முமதுவினை யல்லதெனில் வகைநான்குண் டவைக ணன்கி, லொன்றுசெயத் திருமேனத் தொகையுணர்த்தி வுதைவினவ வுணர்த்து கின்றான். (உஅ)

வேறு.

பூதலமே லோசனையோ ரிலக்கம் பானுப், புந்தமதியோ ரிலக்க மூடு மேலோன், ருகு, மேனதபுகர் செவ்வாய்பொன் சவுரி தானு



மேன்மேலே யிவ்விரண்டா விளங்கித் தோன்று, மாதிமுனி வோரே ழுவர் தான மேலோன் றப்புறமோ ரிலக்கமென்பர் துருவ தான மேதினியி லிருந்துபுவ லோகங் காணும் விலக்கரிய தொகைமூலவந் திலக்க மாமால். (ஙo)

சுவலோக மிலக்கமெண்பத் தைந்து மேலே சொல்லரிய மகலோ க மிரண்டு கோடி, நவமேவு சனலோக மிருநாற் கோடி நண்ணுதவ லோகமும்பன் னிரண்டு கோடி, யிவைமேற்சத் தியலோக மீரெண் கோடி யெம்பதமுக் கோடியரி பதமுக் கோடி, சிவலோக நாற்கோடி யித்தி கோடி செப்புதொகை யுரைக்கிலைம்பான் கோடி பார்மேல். ()

பூதலத்தின் கனமிலக்க மெண்பா னாகும் புயங்கமேட்டுஞ் சேட னுமென் கனிறுங் கீழாய், மாதலத்தைத் தாங்கிநிற்கு மதன்கீழ்க் கோடி மற்றிருபா னிலக்கமா டகர்தங் கோயின், மேதகுபன் னகரா த்க ரவுணர் சூழ்வோர் விடுத்ததல முதலேழு மேழான் பானுஞ் சோதிபெறு கூர்மாண்டர் பதங்கீழான்பான் றொண்ணூற்றொன் பானிலக்க மதன்கீழ்க் கும்பி. (ஙஉ)

இருணிலமு மெழுநான்கு கோடி யாரு மிலக்கமிரு பத்தொன் பான் கிழ தாக, வொருகமட மிருக்குமிட மொருகோ டிக்கீ ழுயங்கு நெடும் புகைப்படல மைந்து கோடி, மருவுறுமக் கினிச்சுவலை பதின் கோ டிக்கீழ் வயங்குகா லாக்கினியின் வரதர் கோயில், பெருகுபித்தி யொடியுதன் கனமோர் கோடி பெரும்புவிக்கீ மூலகமைம்பான் கோடி யாமால். (ஙங)

வேறு.

கோவலைப நடுமுதலா காவலொடு மேக்கு குவைகவுஞ்ச மிலவி றலி புட்கரமே யாகப், பாவலவர் புகழ்தீவு மேழாகு முப்பு பாற பிர்நெய் கரும்புமது நீர்க்கடலே ழாகு, நாவலந்தீ வோரிலக்க மிரட்டி மேன், மேனு கரலையுப்பு முதலேழு மன்னவே யாகு, மேவுதிரைக் கடலேழுந் தீபமோ ரேழு மிருகோடி யையம்பதினைன் கிலக்கம்யோ சனையே. (ஙச)

சூழ்கனக பூமிபதின் கோடி யப்பாற் சுடர்த்திகிரி வரையதனைச் சூழா நிற்கும், வாழ்வரையின் பெருங்கன்மோ ரயுத மாகும் வரைந

தபுறங் கடல்கோடி யிருபத்தே ழிலக்கம், பாழிருண்ட பூமிமுப்பா னைந்து கோடி பத்தொன்பா னிலக்கமுட னயுத நான்கா, வாழ்கன யித் திசைகோடி யாக மேரு வரைக்குநிலக் திசைகடோ றைம்பான் கோடி. (௩௫)

வாசனையம் பதுகோடி நிசைதோறுன மகிதலந்தூழ்ந் தால யங்கள் விணங்கு வீரோ, யோசனையைம் பதுகோடி வான்மே லேறி யுயர்விடையார் பதம்பரவித் திர்க்கின் றீரோ, தேசனையைம் பது கோடி யிறங்கிக் கீழ்போய்ச் செறிந்தபா தலங்கடந்து காண்கின் றீரோ, விசனையே நினைக்கொருபாற் றவஞ்செய் வீரோ விவைகா ன்கி லுமதுகருத் தியம்பி ரென்றான். (௩௬)

மேலான சிவபதத்தி னுயர்ச்சி தானு மேதினியோன் படைபர ந்த விரிவுங் கீழ்மைப், பாலான பாதலமு நாகின் வீறும் படர்புகை யுங் கனற்சிகையும் பரிந்து காணிக், காவாங்கி யுருத்திரரைக் காணு மாறுங் கருத்தி லுன்னி நடுநடுங்கிக் கரங்கள் கூப்பி, நாலான நிசை முகத்துக் கமலத் தேவை நனிதொழுது புத்தேளிர் நவில்வ தானார். ()

முன்னமே விரன்வலிக் குடைந்து போனோ முழுதுமே சிவபத் தந்து முயன்று செல்லு, மின்னமே யிவைகாத்தார் பொறுப்ப ரேனு மிகவும்வலி யவர்குலத் திடைய மாட்டோம், பின்னர்மேற் புகனிவ லம் புரிந் வாற்றேம் பிலத்திறங்கி யுருத்திரரைக் காண மாட்டோந் தன்னமே தனியிருந்து சிவபி ரானைத் தவம்புரிந்து காணும்வகை சாற்று மென்றார். (௩௮)

வேறு.

வானவ ருரைப்பச் செந்தா மரைமலர்த் தவிசின் மேவு
ஞானநான் முகத்தோன் சொல்வா னற்றவம் புரியுந் தானம்
பேனமாப் புணரி சூழ்ந்த பெரியபூ தலமே யாகு
மானதோர் திவிரி லெற்றி னகமனாற் புடமு மாகா. (௩௯)

மற்றையேழ் தீவின் வேந்தர் மனுமகன் விரத னென்பான்
பெற்றசீ ரங்கி தீரன் பெரியமே தாதி புட்டு
வுற்றசீர்ச் சோதிட் டென்பா னுயர்தரு துதிமான் மற்று
முற்றமிழ் சிறப்பின் மிக்க வார்வலிச் சவனன் மன்றே. (௪௰)



அவரினுஞ் சம்புத் தீவி லங்கிதி ரனுக்கு மைந்தர்
புவிபுகழ் பார தன்கிம் புருடனே யரியே கேது
தவறில்பத் திராச்சு வத்தன் றனியிளா விரதன் மேலு
நவிலிர மியனே பொன்னன் குருவிவர் நவகண் டத்தோர். ()

வீறுசேர் சம்புத் தீப நடுவுற விளங்கு மேரு
கூறுநாற் றிசையுஞ் சூழக் குலவுநாற் குன்ற மப்பான்
மாறிலாத் தென்பான் மூன்று வடதிசை மூன்று மேல்பா
லூறிலா வொன்று கீழ்பா லொன்றுசூழ் குன்ற மெட்டாம். ()

ஈரெண்ணா யிரமே கீழும் பக்கமு மெண்பா னான்கு
மேருமே லுயரம் பாதி மிக்குள வரைகட் காகுஞ் [றுஞ்
சேருமெண் கிரிச்சா ரெட்டுஞ் செம்பொன்மால் வரையின் சுற்
சாருமே கண்ட மொன்பா னவ்வகை சாற்றக் கேண்மின். (௪௩)

வடகடல் சிருங்க நாப்பண் வளர்குரு வருட மிப்பா
லிடவிய சுவேதங் காறு மிரமிய வருட மேனைத்
தடவரை நீலங் காறுந் தனியிர ணியமாங் கண்டஞ்
சுடர்வரை மேருச் சூழ்ந்த திளாவிர தப்பேர் சொல்லும் (௪௪)

கந்தமா தனமே மேல்பாற் கடலிடைக் கேதுமாலம்
வந்தபத் திரியே கீழ்பால் வாரிமா லியவான் மட்டு
மந்தமா நிடதத் தென்பா லரிகண்ட மேம கூடத்
துந்திய தென்பா லாகு முயர்ந்தகிம் புருட கண்டம். (௪௫)

பனிவரை சேது நாப்பட் பாரத கண்ட மாகு
நனிதரு மிவைவ யோன் பானி னன்னுபத் திரியே சேறு
வினியமுப் பதிற்று நாலா யிரமென்ப ரேனை யாறு
மனையயோ சனைக ளொன்பா னாயிர நாப்பண் மற்றே. (௪௬)

தருமமே தரும பாவந் தகவிலாப் பாவ மூன்றுங்
கருமபூ மியிற்செய் வோர்கள் கதிதரு சுவர்க்கம் பூமி
யிருணில மூன்றும் போக மெய்துவ ரிவைகண் மூன்றிற்
பொருவருஞ் சுவர்க்க சேடம் பொசிப்பது போக பூமி. (௪௭)

ஓதிய பரத கண்ட முழுவுவா ணிபங்கள் வித்தை
காதல்சேர் வரைவு சிறப்பங் கருமத்தாற் கரும பூமி
மீதுறைப வர்க்கு செல்லுன் மேனியு முழநா லெட்டுக்
கோதறு பருவ காறு முகந்தொறுங் குறையா நிற்கும். (சஅ)

கருமசே டங்க ளுண்பார் கதிகண்மேல் விளைவார்க் கெல்லாந்
தருமமுந் தவமுஞ் செய்யத் தக்கது கரும பூமி
புரிதவ மதிக்கக் காலம் போகபூ மியிற்செய் வார்க்கு
வருமான் கரும பூமி வளரொரு தினத்தே நல்கும். (சகூ)

வேறு.

ஒன்றோடியோர் பாகனிட முரைப்பி னண்டத் தச்சியுருக் கி
ந்திகோயி லதனிற் பூரு, மன்டர்பிரான் சிவலோக மண்ட மூலத் த
மர்வதுகா லாக்கியுருத் திரர்தங் கோயின், மண்டமோ டகர்கோயி லத
ன்மே லாக மதிதலைத்தி னிருகோடி கீழா மன்னும், விண்டகுடிக் குட
திசையின் கிழ்பா லாறு மேருமே சுகேதன்றில் விமலன் கோயில். ( )

வேறு.

பொன்மயிழுத் தத்திலண்டச் சுவரணவும் வடகிரியும் மே
ருப்புக் கோடும், பன்மதிலு மிமப்பரிய வருத்திரர்தா ராயனவும்
பறுமந் தேருக், கொன்மலி மேற் கந்தர்கனா பதிகள்சா ரதர்சாந்த
குழுனி ஞரப்பு, நின்மலச தாசிவமுந் தெய்வதக்கு முழுமெலாம்
விளக்கிதொ றுதால். (ருக)

பொன்னிமய மால்வரைக்கு வடமேல்பான் மந்தரத்தின் பு
கடமேர் தென்பாற், கன்னிநெடுங் கயிலைவரை கற்பகோ டிகளமை
ந்த கனகத் தானிச், சென்னிமதி யாறணிந்த தேவனே யன்றிமது
தேவ ரெல்லா, மன்னிமேவிட் டிறப்பதுவும் பிறப்பதுவுங் கண்டுகவலி
ணகையா நிற்கும். (ருஉ)

வேறு.

அங்கவட கயிலாய முதலா வைந்து தலமேவிச் சிலதொண்ட
ரவ்வா காட்டிடனுறைந்து, தக்குறு காட்டிருபத் திரண்டு பொன
ணிதல நாற்றுத் தொண்ணூறு, மலநாட் டொன்று, கொங்கேழு
சிங்காத்தி லிரண்டுளவைக் கொழிசமிழ்நாட் டிரேழு முதலாஞ் சு
லச், செங்கையார் தலமிருநாற் றெழுபா னைங்கிற் சேக்கிழார்
கரியாய்த் திருக்குற் றாலம். (ருங)



அம்புவிமி லித்தகையா லுரைத்த வெல்லா மாதிதலம் பிறதல
ங்க ளனந்த மாகுஞ், சம்புநிலப் பரதகண்ட மடாதல் லாட்குத் தானீ
ட்டு வடதிசைதென் றிசையே சென்னி, நம்புசீர்ப் பருப்பதங்கே
தாரங் கொங்கை நளினவயற் றமிழ்நாடு வதன மாகக், கொம்பலர்
சூழ் செண்பகா ரணியஞ் சூழ்ந்த குற்றால மபிடேகத் தான மாமால்.

புவனகெடும் பரப்பெலாந் திணையைந் தாகப் பொன்னிமய
கிரியடியா ருந்த போகக், கவனவரை யிமயமுதற் கன்னி காறுங்
கண்டபெரு நிலமுழுதங் கழனி யாகுஞ், சிவனுறைகே தாரமுதற்
கருப்பந் தோட்டஞ் சென்னிவள நீர்நாடு கன்னற் சாறு, குவளைவ
யற் றமிழ்நாடு வடித்த பாகு குற்றாலஞ் சருக்கரைவட் டாகுமன்றே.

வேறு.

தற்பரையெம் பெருமாட்டி யகிலாண்ட சிற்றிலெனத் தனி
நின் றாடு, முற்பதியா புயர்தாறு மாலயப்பூந் தொட்டிலுக்கோர்
மூலமிடார்க், கற்பமெனுங் கடல்கடத்துந் தோணியாய்க் குன்றங்
குறிகள் கடந்த ஞானச், சிற்பரைவா ழிடமான பரமரக சியந்தா
னந் திருக்குற் றாலம். (ருசு)

சிறக்குமிடஞ் சிற்பரைக்கும் பரமனுக்கு மூவருக்குந் தேவர்
யார்க்கும், பிறக்குமிடங் கவுரியறம் வளர்க்குமிடம் பிறந்தோர்கள்
பிறவி பின்னை, மறக்குமிடம் வடவருவி யெனுங்காம தேனுவளர்
பாலக ளைந்துங், கறக்குமிடம் பராசத்தியே காட்டுமிடந் திரிகூடக்
கடவுட் டானம். (ருஎ)

அன்பெறி ஞாயிரமோர் புண்ணியமாத் தலந்தரும்பே றனைத்
தங் காசி, கண்டுதவு மோராண்டு வயனமொன்றிற் கேதாரங் கொ
டுக்குங் காஞ்சி, புண்டுதவு மிருமதியி லொருமதியிற் பெரும்பற்றப்
புலியூர் நல்குஞ், சென்றுருமைப் பயன்கலைர் டொருநாளிற்
கொடுக்குந் திருக்குற் றாலம். (ருஅ)

வேறு.

தாயபசிக்கத் தொண்டைபரித் திருக்கக் கண்போர் தங்கள்தாற்ற
மனைவியொ டிருக்கத் தாங்கள் வாழ்வெவர், செப்பசிக்கத் துக்கமிருக்
கன்போர் தாஞ் சென்றிருந்திப் பதாரம் விரும்பிச் செல்வோர்

வாய்பதைத்துப் பிறர்குடிக்குத் தீங்குசொல்வோர் மன்றிருந்து வழக்கோரஞ் சொல்வோர் பொல்லா, நாய்வளர்த்துக் கொலைபுரிவோர் பாவமெல்லா நன்னகரே தவிர்க்குமெனு மிருக்கு வேதம். (கூ)

அடுத்தார்க்கு நன்குசெய்யா திடுக்கண் செய்வா ரந்தணரை யுயிர்செகுத்தா ராவைக் கொன்றார், கொடுப்பாரை யகந்திருந்து தடுப்பார் கற்பின் குலமாதர் வரம்பழித்தார் குருவைப் போற்றார், கெடுப்பார்க்குத் துணையாவா ரறஞ்செய் வார்க்குக் கேடுசெய்வார் பாவமெலாங் கிரிக்கோ தண்ட, மெடுப்பீர்க்கு வளம்பதியாந் திருக்குற்றால மிமைப்பொழுதி லொழிக்குமெனு மிரண்டாம் வேதம். (கO)

அன்னமிட்டார் தமக்கிரண்டு நினைக்கின் றாரு மடைக்கலத்தை வயிறெரியத் தொடுகின் றாரும், பின்னமிட்டுக் கிளைக்கூட்டம் பிரிக்கின் றாரும் பெரியாரைப் புறம்பழித்துப் பேசு வாரும், அன்னமிட்டுக் களவாடிக் கன்றுண் பாருங் காமத்தா லழிவாரு மெய்து பாவ முன்னவர்க்கு முன்னவர்குற் றால மென்று மொழிந்தா னுந் திருமொழி மூன்றும் வேதம். (கக)

உலகிடத்துத் தொலையாத பாவமெல்லா முயர்தருபுண் ணியதலத்துத் தீர வேண்டும், பலபலபுண் ணியதலத்துத் தீராப் பாவம் பரமனுறை சிவதலங்கள் பலவுந் தீருந், திகைமெனுஞ் சிவதலத்துஞ் சென்றார் பாவந் தீருமே தீராது சிவத்துரோக, மலமலிசீர்த் திரிகூடத் திருக்குற்றால நன்னகரே தீர்க்குமெனு நான்காம் வேதம். ()

வேறு.

இன்னபடி மறைநாலுந் தாமறைந்தோ தாமுழங்குதலா லிமையோர் நீவிர், தன்னகர்ச்சென் பகவனத்துச் சென்றுதவம் புரிந்து மதுநிலைக் கரந்து, சின்னமதி புனைவேணிச் சிவபிரான் றிருவருளாற் றெய்வக் காவும், பொன்னுலகு மரம்பையர்பாற் புதுநலமும் பெற்றுமுற்றும் பொலிவீ ரென்றான். (கங)

விண்ணிலுறை சதுர்முகத்து வேதியனீ துரைத்தருள விடைகொண் டேகிக், கண்ணியவா றுரைத்ததனைக் கனிகூர்ந்து களிக்குரும்பின் கனம்போல் வானோர், மண்ணியமணி யலைகொழித்துங் கடல்



வாவிக் குவலையமா மலர்ந்த பூமேற், புண்ணியமா மதுவூறி யிருக்குந் திரிகூடப் பொருப்படிற் சேர்ந்தார். (கச)

பிரமனைக்கண் டுறுதிபெறும் பேறுரைத்தாந் திரிகூடப் பிறங்கன் மேலாச், சிரமமிசைத் தவம்புரிந்து சிவத்துரோ கந்தவிர்ந்து திங்கள் சூடும், பரமனைச்சென் பகவனத்திற் பண்ணவனைக் கண்டபோதம் பரவி வானோர், புரமனைத்துங் குடியேறக் கரையேறு மகிமையினைப் புகறல் செய்வாம். (கரு)

15. தேவர்கள் சிவத்துரோகமடைந்தசருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—கஉச.

---

## பதினாறாவது:—தேவர்கள்சிவத்துரோகந் தீர்ந்த சருக்கம்.

வற்றாத தேனருவி வானருவி மானை
நற்றால மேழுதுறை யாடுகனி வானோர்
குற்றால மேயதிரி கூடமிசை வந்தார்
பொற்றால மேல்வினைவு புந்தியி லொழிந்தார். (க)

விண்பக வுயர்ந்தகிரி மேவுசிலை யெல்லா
மெண்பகரி லிங்கவடி வென்றதி சயித்தார்
சண்பக வனத்ததி சயத்தையெதிர் கண்டார்
வண்பகல்செய் கற்பக வனத்தையு மயர்த்தார். (உ)

கானவர்க ளோனல்வினை காணிலெதிர் மேவித்
தானவரை யீறுபுரி சாரதரை யெய்தி
ஞானவரை யோகியர்க ளண்ணுகுகை நண்ணி
யேனவர்கண் மாதவ மியற்றுமிடை சென்றார். (ங)

வேறு.

சந்தகில் குரவ வேலிச் சண்பகச் சோலை சார்ந்து
புந்தியின் மகிழ்ச்சி கூர்ந்து பொன்னக ரமரர் முன்னா
ளந்தமார் தக்கன் வேள்வி யழலினாற் காய்ந்த மேனி
மந்தமா ருதத்தி னாலே வயவரக் குளிர்ந்தார் மன்னோ. (ச)

பானையஞ் சடைகள் பின்னிப் பழுப்பிலைக் காவி தாங்கி
நீளவு மொருதா ணின்று நெய்பரிச் சிறை சாத்தித்
தாளினீர் சிரத்தி லேற்றுத் தவத்தர்யோ கியர்கள் போலு
நாளிகே ரங்கள் கண்டார் நலம்பெறு மகிழ்ச்சி கொண்டார். (௫)

கன்னியம் பசிய பாளை கமழ்தரு பருவத் தெங்கின்
மன்னிய குரும்பை காய்த்து மழைமுகில் பொதிந்த தோற்ற
மன்னிய வுலகிற் றெய்வ வாடவர் வந்தா ரென்று
அன்னுபார் மடவார் கொங்கை துகிலினுன் மறைத்தன் மானும். (௬)

புண்ணிய தருக்க ளாகப் பொலிந்தபூஞ் சோலை வேலித்
திண்ணிய கதலி நின்று தென்றலா லசையுந் தோற்றம்
விண்ணினி லரம்பை மாரை வேட்டவர் வந்தா ரென்று
மண்ணினி லரம்பை யால வட்டங்கள் சுழற்றன் மானும். (௭)

திருக்கமா மலரில் வீழ்ந்து சுரும்பின நறவை மாடி
மருக்கமழ் தாதி னூலே வடிவுமே வுறமைந்த தோற்றந்
திருக்கிளர் தழலின் மூழ்கித் திருநாளைப் போவார் மேனு
ளுருக்கிளர் சைவத் தெய்வ வுருவுபெற் றெழுந்த தாமால். (௮)

பன்மலர் துளிக்குந் தேறல் பைம்பொனு டளிந்தே மென்னுங்
கொன்மலி தாரை யன்றிக் குளிர்மழைத் தாரை போலுஞ்
சன்மலிச் சினைக டோறுஞ் சண்பக மலர்கள் வானம்
பொன்மழை பொழிவ தன்றேற் பூமழை பொழிவ தாமால். (௯)

இலவிதழ் விரியுந் தோற்ற மிவர்கொலோ தக்கன் வேள்வி
நலனவி தகர்ந்தா ரென்ன நவிலவாய் திறத்தல் போலும்
புலனுற வடைந்தார் தம்மைப் புறஞ்சொலத் தகுமோ வென்ன
வலருமாந் தளிர்கள் கையா லமைந்துவாய் புதைத்தன் மானும். ()

தேவர்கள் வந்தா ரென்னச் செண்பக வனமாங் கன்னி
மாவடு விழியா னோக்கி முருக்கின்வாய் மலர்ந்து முல்லைப்
பாவனை முறுவல் பூத்துப் பாடல்வண் டிசையா லேத்தி
யாவல்சேர் தளிர்க்கைப் பூந்தே னருக்கிய மளித்த தன்றே. (௧௧)



கண்டன னமரர் வேந்தன் கண்களா யிரத்தின் பேறு
கொண்டன னிமையா நாட்டங் கொண்டபே றமைந்தார் விண்ணோர்
தண்டலைக் கமுக வேலிச் சண்பக வனச்சீர் நோக்கி
லண்டர்தங் குரவன் வாய்மை யாயிரத் தொன்றே யென்றார். (௧௨)

பூவின்மேல் வண்டோ டாடாப் புதியசண் பகக்கா வெங்குந்
தேவரே பூவின் மேவிச் செழுந்தவத் தென்வண் டானார்
மூவராய்ப் பரம மூர்த்தி முத்தொழில் புரியுந் தானம்
யாவரே வலஞ்செய் யாதார் யாவரே தவஞ்செய் யாதார். (௧௩)

சந்திர வருடஞ் சேர்ந்தான் கமழ்புனற் கிறைவன் வாரி
யிந்திர தனுவைச் சார்ந்தா னிந்திர னெழிற்பூஞ் சோலை
மந்தமா ருதத்தைச் சார்ந்தான் மருத்துமா முனிவர் வேள்விச்
செந்தழ லதனைச் சார்ந்தான் செழுங்கனற் கடவுண் மாதோ. (௧௪)

அந்தகன் றரும வேட மாகின னிருதி யாவான்
முந்துவேட் டுருவ மானான் முதுதவம் புரியு மேனைத்
தந்திரர் யாழோர் சித்தர் தவத்தர்வி ஞ்சையர்புத் தேளிர்
வந்தகிம் புருடர் மற்றோர் வண்மையை வகுத்துச் சொல்வாம். (௧௫)

மனிதராய் வடிவு கொண்டு மாக்களாய்ப் புள்ளாய் வாசப்
புனிதமார் தருக்க ளாயும் புயல்கெழு திரிகூ டத்து
முனிவராய்ப் புதலாய்ப் புல்லாய் முற்றும்வே றுருவம் பூண்டுந்
தனிதராய்த் தவங்கள் செய்தார் தானவர் பயத்தான் மன்றோ. ()

ஆலயச் சங்க வீதி யண்ணலை யுன்னி வானோர்
நால்வகைச் சங்கத் தோரு நளினங்கோ முகஞ்சொத் திகஞ்
சால்புசேர் வீரஞ் சிங்கா சனமுத்தஞ் சுகாச னங்கள்
பீலிபத் திரமா மொன்பான் பெரியவா சனத்தி ருந்தும். (௧௭)

ஆறுடற் பகையை யோட்டி யைம்புல னடக்கி யாண்டு
மேறுநாற் கரணங் கட்டி யியலுமுக் குற்ற மாற்றி
யூறுகால் வளியி ரண்டு மொருக்கியோர் வழிக டாவி
மாறிலா யோகு நீராற் றவப்பயிர் வளரச் செய்வார். (௧௮)

இயமமா சனந்தி யானந் தாரணை பிராணா யாம
நியமமே சமாதி நீண்ட பிரத்தியா கார நிட்டை
யுயருமட் டாங்க யோக முளுற்றிபு மாறு தாரத்
தியல்பெறு பாந்தண் மூலத் தெழுப்பிமே லாடல் கண்டும். (கசு)

காய்பல தின்றுங் கானிற் கனிபல நுகர்ந்தும் வாவிப்
பாய்புனல் பருகா நின்றும் பச்சிலை கறித்துங் கல்லிற்
சாய்பல கிழங்கசித்துஞ் சருகினைப் புசித்துங் காங்கா
வாயுபக் கணங்கள் செய்தும் வசிவறப் பசியைத் தின்றும். (உ0)

சாந்திரா யணமு டித்துங் கருதிங்க ளுபவா சித்து
மாந்திபு மயனத் தோர்நாள் வருடத்தி லோர்நா ளுண்டுங்
காந்தியின் வெயில்சேர் பஞ்சக் கனலின்மத் தியிலே நின்று
நீந்துத லிதாம் வாரி நீரிலே நிலையா நின்றும். (உக)

கல்லெனக் கிடந்து நீரிற் கயலென வாழ்ந்தும் பாரிற்
புல்லெனப் பொருந்தா நின்றும் புற்றென வளர்ந்து மேனி
வில்லென வளைந்து மாலின் வீழ்பூனச் சடைகள் வீழ்ந்துஞ்
செல்லெனக் கலங்கு றுறாங் தியென்ப் பயமு றுதும். (உஉ)

ஊசிமே லொருகால் வைத்து மொருவிர லூன்றிக் கண்ட
ஞசிகா மூலம் வைத்து நன்னிலத் தொருகை யூன்றி
யாசுவாய் முடிகீ ழாக வடியிணை மேலா நின்றும்
வீசுகை சிரமேற் கொண்டும் விடாதுமெய்த் தவங்கள் செய்தார். ()

அப்பரி சமரர் யாண்டி லாயிரப் பதிற்றுண் டெல்லா
மெய்ப்பெருந் தவங்கள் செய்து மெய்யெலாம் வருந்தித் தேம்பிச்
செப்பருங் கவலை கூர்ந்தார் தேவரே யாகி லம்மா
விப்பெருஞ் சிவத்து ரோகம் யாவரே தொலைக்க வல்லார். (உச)

அத்தனை கால மெல்லா மருந்தவம் புரிந்து மாதி
கத்தனை விடஞ்சேர் நீல கண்டனைத் திரிகூ டத்து
நித்தனை வரவு காணார் நின்றனர் திகைத்து வாடிச்
சித்தநைந் துலைந்த வானோர் சிந்தையில் வருந்திச் சொல்வார். (உரு)



வேறு.

உருகினே முடலெலா முளமெலா மறுகினேம்
விரவினே மனமிலே வெயிலிலே கருகினேம்
வருகிலா ரருள்கிலார் மயூவலா ருலகெலா
மருளுமோர் பரமனு ரருளிலா தவர்கொலோ. (உசு)

வரமெலா முதவுமோர் வரதனார் கருதலார்
புரமெலா மெரிசெய்தே புவியெலா நிலைசெய்தார்
பரமனார் நமதுபாற் பரிகிலார் வருகிலார்
பிரமனார் மொழியுமே பிசகுமோ பிசகுமோ. (உஎ)

வேகமே யிடையறு வேழமே யுரிசெய்தா
ராகமே லணிசெய்தே யாதிநா ளருள்செய்தார்
நாகமே யணிகுவார் நாமெலா மெலியவே
யேகநா யகர்வரா ரேழையேம் வினையிதோ. (உஅ)

செங்கைமான் மழுவினார் சென்பகா டவியினா
ரெங்குமாம் வடிவுளா ரெக்குமாம் விழியுளார்
கங்கைவார் சடையினார் கண்டிமே வருகிலா
ரங்கமே புகழ்ந்துநா மென்றுவா ளவரெலாம். (உகூ)

வேறு.

புவரவர்கண் மனக்கோது மறிவென்றுஞ் சுடர்துண்டப்
வரமர்செஞ் சடைக்காட்டிப் பசுங்கனகத் தனிக்குன்றைக்
கவரமருந் திரிகூடக் கனவரைவாழ் கற்பகத்தைத்
துவரமரு நறுங்கனியைத் தோத்திரஞ்செய் தேத்தெடுத்தார். (௩0)

தேவருக்கும் பெருந்தேவே திரிகூடப் பரஞ்சுடரே
மூவருக்கு முதற்பொருளாய் முளைத்தருளுந் தனிமுதலே
மேவருட்கண் வழிதியே மேலான குணக்குன்றே
யேவருக்கு முனையல்லாற் புகலுண்டோ வெம்பெருமான். (௩க)

தாயார்க்குத் தோன்றாத துணையாவா யனைத்துயிர்க்குஞ்
சேயாவா யனித்தாவாய் சென்பகப்பூங் காவுடையாய்
தாயாவா யொருரிமைத் தந்தையா வாய்பரவார்
நோயாவாய் பணிவார்க்கு நோய்தீர்க்கு மருந்தாவாய். (௩உ)

மண்ணுடையாய் நீருடையாய் வன்னியுடை யாய்மருத்து
விண்ணுடையாய் சங்கநெடு விதியுடை யாய்பாகம்
பெண்ணுடையாய் சென்னிமிசைப் பிறையுடையாய் கண்களின்மேற்
கண்ணுடையா யெங்கடியர் காணுவா றென்னேயோ. (௩௩)

திரிகூட வேடனுக்கு நந்தாத பதமளித்தாய்
பரிகூட நரிகடத்தும் பரமகா ரணமூர்த்தி
யரிகூட வயனறியா வண்ணலே யிரங்காயுன்
றிரிகூடங் கண்டவர்க்குந் தீராத வினையுண்டோ. (௩௪)

புகழ்வார்க்கு நல்குதியோ புட்பகந்த னூர்முதலா
விகழ்வார்க்குங் கதிகொடுத்தா யல்லையோ வெங்கோமான்
றிகழ்வார்க்கு வினைதீர்க்குஞ் செண்பகா டவியுடையா
யகழ்வாரைத் தாங்காத நிலமுண்டோ வச்சோவே. (௩௫)

ஈயறியாப் பூந்தேனே யெழுந்தறியா மறைப்பொருளே
காயறியாச் செழுங்கனியே கற்பகத்தின் பசுங்கொழுந்தே
தாயறியாக் கருவிருந் தழுதாட்டுந் தாய்த்துணையே
நீயறியாச் செயலுண்டோ நிமலபரம் பரமூர்த்தி. (௩௬)

கங்கைதனைச் சென்னிமிசைக் காதலாற் றாங்கியதும்
பங்கயப்பொற் றாள்பரவும் பகீரதனுக் கான்றே
சங்கையற நொந்தேமைத் தாங்காயோ மானையொரு
செங்கைமிசைத் தாங்குந் திரிகூடத் தம்மானே. (௩௭)

அன்றுநர காசுரனை யந்தகனை யீடழித்துத்
துன்று முலகெல்லாந் துயர்தவிர்த்தா யல்லையோ
வின்றுநீ வாராயோ வேழையே மெய்த்துயர்
குன்றுந் திரைக்கடலுங் கொள்ளாது கொள்ளாதால். (௩௮)

நஞ்சம் பொறுத்தாய் நகுபார வெண்டலையின்
வஞ்சம் பொறுத்தாய் மழுவேந்துங் கையுடையாய்
அஞ்சந் திரிகூடத் தானுமே யெங்கள்பிழை
நெஞ்சம் பொறுத்தருள வின்மேற் கடனன்றே. (௩௯)



நாரா யணனுமொரு நான்முகனுங் காண்பரியா
யாரா வமுதே யருக்கைநிழ லம்மானே
வாரா யிதுசமையம் வந்தருளி நின்னருட்கண்
பாராயென் றும்பர் பரிதபிக்கு மந்நேரம். (௪௦)

வேறு.

குளிர்புனற் கொழுந்தும் வில்வத் தழைகளுங் கொன்றைப் போது
மிளிர்மதிப் பிஞ்சுங் காயும் விரிசடைப் பவளக் காடு
நளிர்மறை பழுத்த வாயு நாட்டங்கண் மூன்றும் வானோர்
தெளிதர விடையேல் வந்தான் சிவதிரி கூடத் தம்மான். (௪௧)

வாடிய பயிர்கள் கண்ட மழைமுகம் போல வாடித்
தேடிய வறியோர் கண்ட திரவியம் போலக் கங்கை
சூடிய கனகக் குன்றைச் சித்திரச் சுருதி மன்றி
லாடிய பெருமான் றன்னைக் கண்டன ரமர ரெல்லாம். (௪௨)

கண்டனர் விழியு நெஞ்சுங் களித்தனர் களியாந் தேற
லுண்டனர் திருக்குற் றாலத் தொருவனைப் பரவி வாழ்த்து
விண்டனர் பரமா னந்த வெள்ளத்துட் டிளைத்து வானோர்
தெண்டனிட் டாடிப் பாடிச் சென்னிமேற் கரங்கள் கூப்பி. (௪௩)

ஒன்றாகி யிரண்டு மாவா யொன்றிரண் டாவாய் மற்று
மின்றாகி யென்று மாவா யிலதுள தாவா யெல்லா
மன்றாகி யனைத்து மாவா யாதியா யந்த மாவாய்
குன்றாகி யணுவு மாவாய் குறும்பலா வுடையாய் போற்றி. (௪௪)

படைப்பவ னீயே யாவும் பரிப்பவ னீயே முற்றுந்
துடைப்பவ னீயே மூன்று தொழிலன்றித் திரோப வங்க
ளடைப்பவ னீயே யாவு மநுக்கிர கிப்பாய் நீயே
யுடைப்பெருந் திரிகூ டத்தா யுனையலா லுலகு முண்டோ. (௪௫)

கருவியாய்ச் செயல்க ளாகிக் காலமா யிடமாய்ச் செய்யும்
பொருள்களாய்ப் புரிவா னாகிப் புவனகோ டிகளுஞ் செய்வாய்
மருவியே கலந்து நிற்பாய் மற்றுநீ யவைக ளெல்லா
மொருவியே பிரிந்து நிற்பா யுன்னையா ருணர்தற் பாலார். (௪௬)

காணவுந் தொழவுந் தொண்டர் கருதவுந் திரிகூடத்துப்
பூணவு முழியாய் நின்னைப் புலப்படத் தேடிக் காணச்
சேணதோ நிலமே தேயோ சிவப்பதோ கறுப்ப தேயோ
வாணதோ பெண்ணா தோவென் றறிகில மறைக ளின்னம். (௪௭)

அரும்பிய பொருள்க ளாவா யல்லையு மாவா யன்பர்
அரும்பெனிற் றரும்பு மாவாய் தானெனிற் றானு மாவா
யிரும்பெனு மனத்தார் காணா வெளியையோ திரிகூடத்துத்
திருந்திழை பாகா வேகா சித்திரக் கூத்தா வென்றார். (௪௮)

வேறு.

நின்றுபுகழ் வானவரைத் திரிகூடப் பரன்கருணை நிறைந்து நோக்கி, யொன்றுபெரு மாதவமுந் தோத்திரமு மினிதுவந்தோ முமக்கு வேண்டும், வென்றிவரங் கேண்மினென வருளுதலு மெங்களுக்கும் வெளிநின் றாயை, யென்றுமெழு தாவேத மன்பருக்கே யன்பனென விசைப்ப தென்றே. (௪௯)

முன்னாளி லூனிகழ்ந்து சிறுவிதிதி யகத்தடைந்த முரணு லன்றே, பன்னாளு மரசிழந்து பதியிழந்து வறுமையினாற் பதைக் கின்றேம்யா, மந்நாளி லெமைத்தொடர்ந்த சிவத்துரோ கந்தனை யின் றகற்றல் வேண்டு, மெந்நாளு மெங்கள்பதம் யாங்கள்பெற வேண்டுமென விறைஞ்சிப் பின்னும். (௫0)

சந்துகா ரகில்வேலிச் சண்பகா டவியொருநாட் டங்கி னோர்க்கு, மந்தமா ருதக்கொழுந்து வந்தொருகான் மெய்தீண்ட வரப்பெற் றோர்க்கு, முந்துநீர்த் திரிகூட வடவருவி யொருபொழுது மூழ்கி னோர்க்கு, மந்தவான் பிரயாகை மாகமா யிரந்தருபே றளித்தல் வேண்டும். (௫௧)

என்னபா தகம்புரிந்தா ரென்றாலு மிந்தலத்தி லெய்து வாரே
லன்னபா தகமவரையா தவன்முன்பனிபோல்விட்ட கறல்வேண்டும்
பொன்னகர மழிந்தாலு மழியாமை வேண்டுமிவ்வூர் புலியூ ராதிப்
பன்னகரம் பிரியினுநீ நன்னகர நீங்காமற் பதிதல் வேண்டும். (௫௨)

புல்லெனினு மரமெனினுங் காயெனினுங் கனியெனினுந் திரிகூட புரத்துண் டேர்பாய், நெல்லெனினு மழுதெனினு முண்டவர்க்குங் கண்டவர்க்கு



நிலத்தில் வாய்ந்த, கல்லெனினு நிதியெனினும் பூண்டவர்க்கும் பரகதியே காட்டல் வேண்டு, மெல்லெனினு மிரவெனினும் யாங்கள்பணி செயவேண்டு மென்றார் வானோர். (௫௩)

அவ்வரங்கள் கேட்டலுமே யமுதரங்க வாய்முறுவ லரும்பநோக்கி, யிவ்வரங்கள் குற்றாலத் தியற்கையே தந்தரங்க முமக்களித்தச், செவ்வரங்கள் வெளியரங்கம் பெறத்தந்தோ மினிப்புலவீர் சேறு டெய்தி, மெய்வரங்கள் பெறுகவென் றாரெழுதரங்க மிசைநடிக்கும் விமல மூர்த்தி. (௫௪)

அந்திப்பான் மதியணிவா ரவ்வரங்க ளருளிவிடை யருளப் போந்து, சிந்திப்பாம் பொன்னுலகு செல்வமும்பெற் றனர்வானோர் சிவமி ராகை, நிந்திப்பார் படும்பாடு நினைதோறுந் தக்கன்மக நினைவார் நாளும், வந்திப்பார் பெறும்பேறு வாழ்த்துதோறுந் திரிகூடம் வாழ்த்து வாரால். (௫௫)

வேறு.

சிலம்புரி திருக்குற் றாலஞ் சேர்ந்துபா தகங்க டீர்ந்து
பொலம்புரி வானோர் செய்கை புகன்றபின் றவர்க்குச் சூதன்
சலம்புரி சிலைக்கை வேடன் சம்புவைத் தொடர்ந்து மேனாள்
வலம்புரிப் பணில வீதி வலம்புரி மகிமை சொல்வாம். (௫௬)

16. தேவர்கள் சிவத் துரோகந்தீர்ந்த சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—௯௯௨.

## பதினேழாவது—வேடன்வலம்வந்த சருக்கம்.

தரையி னுலையம் வலமுறத் திருப்பணி சரியை
கிரிச னெம்பிரா னருச்சனை புரிவது கிரியை
யொருமை யுள்ளுறத் தியானமுற் றிருப்பது யோகம்
பொருவி லானுட னிரண்டறக் கலப்பது போதம்.

அன்ன நால்வகைச் செய்கையு நாற்பத மளிக்கும்
பன்னு நான்கினும் பணிபணி பரமர்பொற் கோயில்
முன்னி யேவலம் வருவது சரியையன் முறையின்
மன்னு மோர்வகை யன்னது விரிக்கிலேழ் வகையாம்.

மதிலி னுட்புறம் வலம்வரல் புறம்வலம் வருதல்
விதியி னற்கரங் குவித்தன்மெய்த் தோத்திரந் தியான
மெதிரி னைந்தசாட் டாங்கமெய் வலமென வேழு
மதிக மொன்றிலொன் றுயிர் மடங்கென லாமால். (௩)

நகர நாமொரு தேயநற் கண்டநற் றீப
மகர வாரிசூழ் புவனமெண் டிக்குவா னுலகம்
பகரு மன்னராய்ப் புரந்துபின் னெழுவகைப் பணியோர்
சிகர வில்லியா ருறைசிவ லோகமே சேர்வார். (௪)

கான வேடுவன் கொலைபுங்கோ மாயுவின் களவு
மான வேரடிய வலமொரு வலமெனும் பிழையு
மேன பாவமு நீக்கியெம் பரமர்குற் றால
மோன மாக்கதி கொடுத்தவா கேண்மென மொழிவான். (௫)

காலத் தாம்பிரக் கனிகள்பந் தாடுதெண் டிரைக்கைக்
கோலத் தாம்பிர வன்னியாங் கொழித்திரை நதியாய்
ஞாலத் தாம்பிரக் குன்றம்வா ரிசந்தமிழ் சுருதி
மூலத் தாம்பிர மன்பெருந் தவக்குறு முனிவன். (௬)

போத நல்விதி யாப்பெரும் புடார்ச்சுன புரத்து
வேத நாயகர் விண்டுவா யிருத்தலான் மேவ
காத னார்திரி கூடமால் வரையொடு நறும்பார்
மாத ராண்முலை யிரண்டெனத் திரண்டது மலையம். (௭)

நடக்கும் யாவரும் வடதிசைக் குழுமலான் ஞால
முடக்கு நீக்கிடத் தென்றிசைத் தோன்றிய முனிவன்
குடக்கு நோக்கிய மதியணி வார்திரி கூடம்
வடக்கு நோக்கிமெய்த் தவம்புரி தமிழ்மலை மலயம். (௮)

இந்த மால்வரைச் சாரலின் சிறுகுடி யிருக்கும்
விந்தை வார்சிலை வீரனும் வேடுவன் றனக்கு
மைந்த னும்வல னென்பவன் கொலைத்தொழில் வலியான்
சந்த னுடவிச் சுற்பமா மென்த்தலை யெடுத்தான். (௯)



வேறு.

செருப்புங் கானமுந் தேய்த்ததின் காலினன்
பொருப்பி னோங்கி வளர்ந்த புயத்தின
னெருப்பி னீர்பெய் நிறத்தினன் செங்கடா
மருப்பு மான முறுக்கும்வன் மீசையான். (௰)

மைய னுங்கொடும் பாவமும் வஞ்சமும்
பொய்யு மோருருக் கொண்டன புன்மையான்
வெய்ய வூனுணத் தந்தங்கண் மேனியுங்
கையுங் காலு மொய்த் தன்ன கவடியான். (௧௧)

முயலு மான்களு நரிக் கலைகளுங்
கயலுஞ் சேல்களுங் கானமுஞ் சேனமுங்
குயிலும் வீட்டுங் கொலைத்தொழி லேகடை
பயிலுங் காலத்தின் முன்பயில் பான்மையான் (௧௨)

தேயும் வாடை யெடுத்துச் சுவடுபோய்
காயு கான கடக்குந் திடத்தினன்
காயுஞ் சிந்தைக் குழிநரிக் கள்ளத்தான்
பாயும் போர்க்குப் பதுங்கும் புலியனான். (௧௩)

கோப மின்றிச் சிவக்குங் கொடுங்கணன்
தீப மென்ன வெரிசிகைப் பங்கியான்
றாப மாகி யெழுமுயிர்த் துண்டத்தான்
பாப மன்றிப் பழிக்கும் பயப்படான். (௧௪)

உடலை யேவளர்த் தானுண்டு பல்லுயிர்ச்
சுடலை யேயெனத் தோன்று முதரத்தா
னடலை யேயெனு நஞ்சுறை நெஞ்சின
னடலை யேயறி யாமுழு மூண்டத்தான். (௧௫)

மாலுந் தென்றலுஞ் சேர்மலை யாசலங்
கோலு நீள்வரைக் கொல்லி மயேந்திர
மேலும் போகி விலங்கொடு புள்ளெலாங்
காலந் தோறுங் கருவறுத் தானரோ. (௧௬)

அங்கண் வேட்டமெய் காதயல் சூழ்வரை
யெங்கும் வேட்டம் புகுவதற் கெண்ணியே
மங்குல் வேட்ட மலைபத்து ளார்க்கெலாந்
தங்கு வேட்ட மெனப்பறை சாற்றினான். (௧௭)

வெள்ளி வாரத்தில் வேலினை முன்புகூஉய்த்
தெள்ளி தாம்வரைத் தெய்வதம் போற்றுபு
துள்ளி யாடித் தொழுது வணங்கின
வள்ளி யிந்தன லேவன மாதியா. (௧௮)

முதுபு னத்தினை யும்முளைத் தோரையு
மதுவுங் கந்தமு மற்றவுங் கொண்டவன்
கதுமெ னச்சுனை மூழ்கிக் கடிகமழ்
புதும லர்ப்பெய்து பொங்கவி தூவியே. (௧௯)

பரவி யேத்திப் பலிவைத்த சேடமும்
வரவி சேடமுஞ் சொல்லி வழங்கலும்
விரவு நல்ல நிமித்தென வேடர்கோன்
சுரவு தாங்கி யொடுதொடு தோலிட்டான். (௨௦)

அம்ம லைக்குரி யானவ னாதலால்
வெம்ம லைப்புற வேடுவர் யாவருஞ்
செம்ம லைப்புடை சூழ்ந்து செருமினார்
கைம்ம லைக்குலங் கார்மலை சூழ்தல்போல். (௨௧)

அங்கு நின்றவர்க் காதி முதியவன்
வீங்கு பல்குர லாய்வை விளித்தனுந்
தீங்கு காட்டிய சேதமென் றுன்மறுத்
தோங்கு மாக்கமென் றுன்மற் றொருவனே. (௨௨)

வேறு.

பரிசையுடை வரிய தனாற் பரியபுலிப் போத்தான
னரவுரிகள் முதலசக்கி யடற்கவளி யெனநின்றான்
சரிகையெனும் படைதாங்கி யிடிப்பனெனத் தோன்றினான்
றடியுரிக் கஞ்சுகத்தாற் கார்மேக மெனப்பொலிந்தான். (௨௩)



வளைதடியர் வளைகோட்டுப் பகடுபோன் மருங்கேற
முளைதடியர் மூரிமருப் பிரலைபோன் முன்னடப்பக்
கொளையுடுத்த கொடுமரத்தர் வரையாட்டின் குலமேய்ப்பத்
திளைதிளைத்து நடுவருமோர் சிங்கமெனத் தோன்றினான். (௨௪)

ஆளெழுந்த திரண்முழக்க மலைசுருட்டுங் கடலேய்ப்ப
வாளெழுந்த வயப்படைகள் மகரமச்ச நிரைமானத்
தூளெழுந்த படலம்போய்ச் சுடர்மறைப்பப் பட்டிருளால்
வேளெழுந்து தன்கரியா மெனத்திகைப்ப வெளிக்கொண்டான்.

தளிர்வேபு மோலைகளும் பாளைகளுந் தாளையராய்க்
கிளைகிளைவல் லயக்தரித்துத் தருக்குலம்போற் கிட்டினார்
நிளையர்கா ளையராய விறவுளரும் வனசரரும்
பழையர்களுஞ் சூனர்களும் பறம்பருங்கி ராதருமே. (௨௬)

வேறு.

கொடிபி டிப்பக் குழல்கொம்பு தொண்டகந்
துடிமு ழக்கந் துவைத்தெழ ஞாளிகள்
செடிகள் சுற்றுபு வாடை தெரித்தெழுந்
தடமெ டுத்து வலைநேர்பில சாரவே. (௨௭)

சென்று கானுஞ் சிலம்பும் பதுக்கையுந்
துன்று சாரலுஞ் சூரலங் கானமுங்
குன்றும் யாறுங் குவடும் வளாகமு
நின்று மோடியு நீடினர் தேடினார். (௨௮)

காடு முற்றக் கலைத்தெழு வார்சிலர்
மாடு சுற்றி வலையெறி வார்சில
ரோடி பற்றி யொடியெறி வார்சிலர்
கோடு பற்றிக் குமுறிநிற் பார்சிலர். (௨௯)

வேடு பாய்வ குழுவையை வேழத்தின்
கோடு சாய்தரக் குத்தவர் மேல்வரா
யாடு பாய்வ ரிறைபாய்வர் சூகர
மோடு பாய்வர் முயன்மறித் தோடுவார். (௩௦)

அழுங்கு கிரி யணில்கவு தாரிபுள்
ளொழுங்கு காடை யுடும்புபுல் வாய்கலை
யெழும்ப நாய்கலைத் தேறிய இக்கெலாங்
கழுந்து போல்பவர் கைசெயுங் குழல்வாய். (௩௧)

நீல மொன்றிய குன்றினை நீள்சரற்
கால மேகம் வளைந்தெனக் கானராத்
தூல மொன்றிய மெய்யெங்குஞ் சுற்றலா
லோல மென்றதோர் மும்மத வோங்கலே. (௩௨)

தந்தி கூப்பிடச் சக்கரத் தானென
வந்தெ திர்த்தனன் வென்றி வலனென்பான்
முந்து தாவிமுன் சேகினர் யானையு
மந்த மாசுண மள்ளி விழுங்குமால். (௩௩)

கட்டு நாகங் கராமென கேமியாத்
தொட்ட வாளியி னற்றிருகைத் தானையை
விட்ட மாலின் விடுத்தனன் மீனவ
னிட்ட கார்தனை விட்டது மென்னவே. (௩௪)

வல்லை பார்த்தலின் விட்டபின் வாரணஞ்
செல்லும் வேடரைச் சீறித் துரந்ததால்
வெல்லும் வல்லிட மீட்ட சகாயனைக்
கொல்ல வேகுங் கொலைவரி வேங்கைபோல். (௩௫)

ஆனை தாக்கலு மாங்கெதிர்க் தான்வல
னேனை வேட ரிரிந்தன ரேகினார்
தானை வேந்தைச் சமரில்விட் டோடிடுஞ்
சேனை யேயன்றித் தெவ்வரும் வேண்டுமோ. (௩௬)

சேனை யொத்த சுடுசர மாரியால்
வேனில் விட்டென வேழம்விட் டேகலும்
வானி றைத்து வெறித்தது மானவே
தானொ ருத்தனுஞ் சாபமு மாய்நின்றான். (௩௭)



சேனில் வேடரைத் தேடனுங் காண்கிலா
னூனி லாம லொருபகல் கொம்பினன்
வீனி லோடும் விலங்குபுட் காண்டலும்
பான மொன்றிலன் பற்கறித் தேகின்றான். (௩௮)

கான மெங்கு முழுந்தொரு கார்முயல்
கூன விற்றுணி லாகக் கொலைசெய்தான்
மான வேடுவன் வண்பசிக் குண்ணவே
யூனை வாட்ட வுறுகனல் காண்கிலான். (௩௯)

கொம்பு தேடிக் கடைந்து கொடுங்கனல்
வெம்ப வீழ்த்தலும் வெண்ணெய் படாமுனம்
பம்பு தாழி யுடைந்தெனப் பாய்ந்தொரு
சம்பு வூனைக் கவர்ந்தது தாயதே. (௪0)

சம்பு வோடித் தசைதனைக் கவ்வியே
சம்பு நீண்மரக் காவுந் தனிவரைச்
சம்பு வோடையுஞ் சாரலுந் தாவிப்போய்ச்
சம்பு வாழ்திரி கூடத்தைச் சார்ந்ததால். (௪௧)

ஓட வோடிப் பலகட சித்தவோ
ரோட மேறுதல் போலுயர் மேற்கதி
கூட வோர்வழிக் கூடுத லாய்த்திரி
கூட மால்வரைச் சாரலிற் கூடினான். (௪௨)

வேறு.

ஆனைய வூனை நுகைந்தபின் வினைபிரித் தகன்று
தனையும் வேறுறப் பிரித்தவ னெனத் தனித்தான்
வினைபி ரித்தபின் சம்புவைத் தொடருமெய் யனைப்போற்
றுனைவி லான்கவர்ந் தேகிய சம்புவைத் தொடர்ந்தான். (௪௩)

ஊரை நோக்கல னுறுபசி நோக்கல னுடலின்
சோர்வு நோக்கல னடித்தழும் படுத்தரு முரவம்
பார்வை நோக்கல னிகலன்மேற் பார்த்தவன் புரியான்
பூர்வ நாடியுன் னேக்குமோக் யோகியே போன்றான். (௪௪)

வீரிய டற்பொறி மாசுண வாய்ப்படு மதம்பாய்
கரிய மீட்டவன் வகப்படை தொலைந்தது வெந்து

நரியின் வாய்த்தசை மீட்கவும் வலியின்றி நலிவான்
பரிய கூகையை வெல்லுமே காகமும் பகலில். (சரு)

சிவந்த கானெலா நேடியு மோடியுந் தவித்துங்
கவர்ந்த வூனைவாய் விடுக்கில தோரியுங் காக்கால்
சிவந்து மெய்யெலாங் கருகியும் வேடனுந் திரும்பா
னுவந்த வூன்பொருட் டுயிரையு மதித்திடா ருலகோர். (சசு)

தொடர்வ னெட்டுவன் வாடுவ னோடுவன் றுடிப்பன்
படப டத்துடல் சோருவன் பொறியெழப் பார்ப்பன்
குடர்கொ திப்பதும் பார்க்கல னிகலன்மேற் கொதிப்பான்
மிடல்கு றித்தபின் றமதிடர் பார்ப்பரோ வீரர். (சஎ)

முன்பு தெவ்வர்தந் திறையின்மேற் றிறைகொளு முனைவன்
பின்பு தானைவிட் டேனைவிட் டோரியின் பெயர்வா
னின்ப மெய்துநா ளின்பமே யின்பமா மெவர்க்குந்
துன்ப மெய்துநாட் டுன்பமேற் றுன்பமே தொடரும். (சஅ)

விரைவிற் சம்புவைத் தொடர்தலால் வியன்றிரி கூட
வரையைக் கண்டனன் வரைபொரு கடல்வட வருவித்
திரையைக் கண்டனன் சித்திர நதிப்பெருந் தீர்த்தக்
கரையைக் கண்டனன் பிறவியங் கடற்கரை காண்பான். (சகூ)

இருவ லம்புரி நந்தன வனம்புகுந் திமையோர்
தருவ லம்புரி சண்பகத் தண்டலை தாவித்
திருவ லம்புரித் திரளொடு சித்திர நதிசூழ்
வருவ லம்புரி மதிற்சூழ்ந் தனன்வினை மறுக. (டுo)

ஒன்று முத்தலை யருவிபாய் முத்தலைக் கிரியின்
வளரு முக்கணா ரமுதுறை கோயில்சூழ் வரலா
லுளரும் வெம்பசி யொழிந்தது பகைமையு மொழிந்தான்
றளரும் வெவ்வினை தணந்தபோ லிகலினைத் தணந்தான். (டுக)

தணந்து தத்தம திடங்குலாய் முடிவின்மா தவரும்
வணங்க மானமேற் கயிலையி லேகினன் வேட
னணங்கு பாகர்மெய் யருளினாற் சிவகண மானா
னிணங்கு சம்புவுஞ் சித்திர னெனப்பொலிந் ததுவே. (டுஉ)



தலைவர் சங்கமா மறுவினை வலம்வரு தலத்தாற்
சிலைவல் வேடனுஞ் சம்புவுஞ் சிவகதி சேர்ந்த
நிலைமை கூறினன் சூதன்மா தவர்க்குமே லிகழ்த்து
முலைவில் யானைசெய் பூசையை யாசையா லுரைப்பாம். (டுங)

17 வேடன்வலம்வந்த சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் கoகங.

## பதினெட்டாவது—யானைபூசித்த சருக்கம்.

மூன்று மெண்வகைப் பத்தியித் தியமுதன் மூன்று
லான்ற சுத்தியா லாகம விதியினு லாவின்
மந்தி ரத்தினல் வருபுனல் போதமற் றனையாற்
புந்தி வைத்துமுக் குறியினிற் புரிவது பூசை. (க)

அந்த மெய்ந்நெறி யறிகலா வடுகொலை வேழ
மிந்த வார்சடை நன்னக ரிறைவனை யோர்நாள்
வந்து பூசனை புரிந்துநற் கதிபெறு மகிமை
சிந்தை யன்பினுற் கேட்பவ ருயர்கதி சேர்வார். (உ)

அருமைப் பேடைகண் களிப்புறக் களிமயி லகவும்
பெருமைக் காரெனும் பருவமுங் குருகினம் பெடைக
ளொருமைச் சேவலி னூடலுக் கூடல்கூர் குளிரும்
பருமைக் கூதிரி னிடைவிடா துன்றிச்சேர் பனியும். (௩)

பாங்கு தங்கயப் பங்கயத் தலர்முகம் வாட்டுந்
தூங்கு பின்பனிக் காலமும் வண்டுதா வோட்டத்
தாங்கு சிரிள வேனிலுந் தொலைந்திடக் கடமோன்
வீங்கு வெய்யில்வா னெதிர்த்திகழுந் தகைமுது வேனில். (ச)

மாறு மண்டலம் படர்கதிர் தெறுதலாற் பரவை
நீரும் வேலெறு நீரினை வேட்டுமின் னேங்கு
மூறு வாவுதன் மதியுமோர் மதியைவேட் டுருகுங்
காருங் காரினை வேட்டுடல் விளர்க்குமோர் காலம். (ரு)

துன்று தெண்டிரைப் புலவுநீர் சுலவிய நிலமேல்
வென்றி வீறுடைக் கன்றுணி யானையால் வெதும்பித்

கள்ளி பாலறப் பொரிந்தது கரிந்ததா வரையும்
வள்ளி யோர்கொடை மறந்திடிற் கயவரோ வளர்ப்பார். (௬)

வருந்து கானிடை வானிடைச் சுழல்வன பருந்து
பருந்தி னீழலி லொதுங்குவ விரிபணப் பாந்தள்
கரிந்த பாந்தளின் படநிழ லொளிப்பன கருப்பை
பொரிந்த கானெரி தளிரெனப் புகுவன புனமான். (௭)

மத்தி யானமொத் திரவினும் வெதுப்பும்வன் கோடை
மத்தி யானபல் லுயிர்களை விடுக்குமோ மதம்பா
யத்தி யாயருந் தோலதாய்த் தூங்கலா மசல
மத்தி யாயருந் தோலதாய்த் தூங்கலா னதுவே. (௮)

இன்ன காலையிற் பன்னமு மிரைபெறு திரங்கிப்
பன்ன காதிகள் போற்பவ னசனம் பழகித்
துன்னு நீரென வானலை கானலைத் தொடர்ந்து
தன்ன மாமெனச் சுழன்றதோர் மும்மதச் சயிலம். (௯)

கடவு ளிக்கெலாங் கனல்வது புனலெனக் காட்டித்
தொடர்த ரத்தர வகன்றுபோய்த் தொலைதருங் கானல்
வடவ ரைச்சிலை வரதனைப் பொருளென மதியா
துடலும் பொய்யினை மெய்யெனுஞ் சமயமொத் ததுவே. (௧௦)

பருகு நீரின்றி யுணவின்றிக் குஞ்சரம் பசியா
துருகு தாகத்தா லுலக்குமுன் னூழிநாட் புரந்த
தருமம் போலவந் தடுத்தது சண்பகத் தடங்காக்
கருது மெய்யின்முன் பொய்யென மறைந்தது கானல். (௧௧)

பற்ப வாவியு நதிகளும் வறந்துபா ருலகிற்
பற்பல் காவெலா முலர்ந்தகா லமுங்குளிர் பயிராய்க்
கற்ப காடவி நிகர்த்தது சென்பகா டவியே
கற்ப காலமுந் தானழி யாதமை காட்டி. (௧௨)

கான வாரணம் பேடைசேர் பதுக்கையுங் கமஞ்சூற்
கூன வாரண வாவியுங் குளிர்மரக் காவு
மோன வாரணங் காப்பயின் முத்தலைப் பொருப்புந்
தான வாரணங் கண்டதோ ரதிசயந் தழைப்ப. (௧௩)



அடுத்தி டச்சுடுங் கடுவெயிற் கானம்விட் டகன்று
மடுத்த டங்குளிர் சென்பகப் பொதும்பரில் வரலுந்
தொடுத்த சூக்கும மெய்துபு தூலமாஞ் சுமையை
விடுத்த வாவிபோ லயர்வுயிர்த் ததுமத வேழம். (௧௪)

முன்னெ லாம்பசிக் குலைந்ததோர் மும்மத வோங்கல்
பன்னெ டுங்கவிப் பாணனூர் பாணியைப் பரிவாற்
சென்னி வைத்தவர் திருமுகங் கொடுத்தொரு சேரன்
பொன்னின் மாளிகை புகுந்தெனப் பொழில்புகுந் ததுவே. ()

வாழை யிற்குலை மறுகரித் தலையெனத் திருகிக்
கூழை முக்கிமாங் கனியுண்டு கொழுநிதிக் குவைசேர்
பேழை யைத்திறந் தெனப்பல வினிற்சுளை பிதிர்த்துத்
தாழை முப்புடை நறுங்கனிச் சாறொடுந் தாக்கி. (௧௬)

ஆக மான்மத முவட்டுற நுகர்ந்ததா ளசலந்
தாக மானது கொடுபசி தபித்தலுந் தவத்தோர்
போக மேகரும் யோகமே நிகர்த்தது பொருப்பின்
மாக மாநதி வருதல்போல் வரும்வட வருவி. (௧௭)

தூபம் போன்முகில் படர்வயிரச் சுடர்மணி கொழித்துந்
தீபம் போலொளி ரருவிகாண் டலுந்தழை செவிமாத்
தாபம் போய்த்துயர் தவிர்ந்தது படிந்தமெய்த் தவத்தோர்
பாவம் போய்விடப் பலத்துயர் பறிபடும் படிபோல். (௧௮)

அப்பெ லாநக ராவலாற் கரத்துமொண் டருந்தி
வெப்பெ லாமறக் குளித்துமெய்ப் புறமெலாம் வீசி
வைப்பெ லாம்புக வலையமிட் டிறைத்தது மதமா
வொப்பில் கோளரா மதியையுண் டுமிழ்வது கடுப்ப. (௧௯)

இருமை நாகமே யிந்திரன் வயிரவா ளெடுப்ப
வொருமை நாகமே யெனப்புனல் படிந்தயர் வுயிர்த்துப்
பருமை நாகநீள் பணிக்கையே லெடுத்தது படர்கோட்
கருமை நாகமென் றிருமதி யொருமதி கலங்க. (௨௦)

சத்த மோர்மருப் பிருபிறை மும்மத நால்வாய்ச்
சித்த மைந்துடைச் சிந்துர மெடுத்தெடுத் தேந்தி

முத்த வாரிமொண் டெறியுநீர் நிகர்த்ததான் முழங்குஞ்
சத்த மாமுகி லெண்டிசைப் பொழியுநீர்த் தாரை. (௨௧)

கந்த ரத்தெழிற் கறையடிக் கவுண்மதக் கலுழிச்
சிந்து ரப்பெருஞ் சிந்தூர மெடுத்தெடுத் தெறியச்
சுந்த ரத்தன துடல்வழிச் சொரியு நீர்த்தாரை
மந்த ரத்தட வரையில்வீ ழருவியை மானும். (௨௨)

மூரி வாரண முதுபனைக் கரத்துமொண் டெறியும்
வாரி நீர்தொறும் வரையின்மா மணிகிடந் திமைப்ப
நாரி பாகர்மெய் யன்பரா நமிநந்தி யடிக
ணீரின் மேல்விடு நிரைசுடர் விளக்கினை நிகர்க்கும். (௨௩)

தூங்க லாமெனத் துறையில்வீழ் வாரணந் துயர்நீத்
தோங்க லாமென மதர்த்தெழுந் ததுகிழ வுருவாய்த்
தேங்க லாரநீர்த் தடம்படி இல்லைவேட் டோவர்
நீங்க லாதபே ரிளமைபெற் றெழுந்தது நிகர்க்கும். (௨௪)

குளிர்த டம்புன லருவிதோய்ந் தகன்றகைக் குன்ற
மளிய தண்டலை வண்டலைத் துருத்ததா தாடித்
தளிர்ப ரிந்துபைம் போதுதாஉய்த் ததைபல சிதறி
களிர்த டஞ்சினைக் கனிகளு நனியுகுத் ததுவே. (௨௫)

அறும்ப லாபல மரிகலா மதகயஞ் சொரிநீர்
றும்ப லாதிபூத் தளிரெலா நன்னதித் துறைவா
யுறும்ப லாயிர வண்டகோ டிகளுயிர்க் குயிராய்க்
குறும்ப லாவுறை குழகர்பா னிறைந்தன குழுமி. (௨௬)

இமில வாரண முமிழுநீர் இன்னணம் பரனூர்க்
குமிழு நீரதாத் தழையெலா மவன்சிலை யுருக்குங்
கமழும் பூவதாச் சிதறிடுங் கனியவன் கனிவா
யமிழ்த மாகமென் றளித்திடு மவிகள்போன் றனவே. (௨௭)

கருது முற்பவச் சுகிர்தமோ செண்பகா டவிசேர்
தரும மோவட வருவிநீர் படிந்தபெய்த் தவமோ
பருமை வேழமுய்த் தனவெலாம் பழமறைப் பலவி
னருமை நாயகர்க் கற்புத மாயின வம்மா. (௨௮)



பருகி விட்டெறி புனலபி டேகமாம் பனைக்கை
சருகு திர்த்ததுந் தழையுதிர்த் ததுமருச் சனையா
மருகி லுக்ககாய் கனிநிவே தனங்களா மயன்மா
லிருவர் பத்திசெய் யொருவர்தம் பூசையா மிதுவே. (௨௯)

இருகை*மஞ்சன மாகினு மொருகையா லெடுத்துப்
பருகு தண்புன லாகினும் பச்சிலை பசும்புற்
சருகை யாகினு நன்னகர்ப் பரமர்தாள் சாத்தி
யொருமை யெய்திலார் பேதைமை யாதென வுரைக்கேன். ()

வேறு.

கவளக்கார் மதவேளங் கானிடை வைகியநாட்
பவளக்கான் முத்தளப்பார் பாண்டிவள நாடனைத்துந்
திவளக்காய் கோடையெலாந் திரிகூடஞ் சேர்ந்தார்க்குத்
துவளக்காய் கொடியவினை தொலைந்ததெனத் தொலைந்ததால். (௩௧)

அந்நெறிக்கட் சிவபெருமா னருள்போல முகில்சுரந்து
செந்நெறித்தண் டமிழ்நாடு திங்கண்மும்மா ரியும்பொழிந்து
பொன்னுமுத்துந் துறைகொழிப்ப வெங்கும்வளம் பொருந்தியதா
லென்னெறித்தந் தாவளமு மேயகதந் தாவளமே. (௩௨)

திரிகூடப் பெரியபிரான் சிவபணிசெய் மெய்யடியார்
தரிகூடப் பெரும்புவனந் தனில்வாழ்வு தழைத்தோங்கி
யரிகூட லயனறியா வரன்பதமே சேர்கவென
விரிகூட விரித்துரைக்கும் வேதவாக் கியந்தழைப்ப. (௩௩)

நன்புலத்து மதவேழ நனிபோகம் பொசித்தவைமே
லன்புலப்பப் பூதலத்தி லநுபவம்விட் டொழிந்தநாட்
டென்புலத்தா னூதர்வரச் சிவகணத்தா ரெதிரேற்றார்
புன்புலத்தின் கொலைவிலங்கு புரிதருமம் யாதெனவே. (௩௪)

கடுவன்றூ துவர்வினவ நம்பர்கணத் தவர்நோக்கிக்
கடுவன்பா லுவைச்சிவந்த கனியாகத் தனிதாவு
நெடுவன்சீர்க் குறும்பலவி னேசனைப்பூ சனைபுரிந்து
கொடுவன்பா தகந்தவிர்ந்த குஞ்சரங்கா ணிதுவென்றார். (௩௫)

அற்பேறும் பூசனைக்கோ விளையாட லருச்சனைக்கோ
நற்பேறு பெறுவதெனு நமன்படர்க்குச் சிவகணத்தார்

கற்பேறுங் கொடிபாகன் கழல்கண்டோ தழைசொரிந்து
முற்பேறு பெற்றுயர்ந்தான் முசுகுந்த னெனமொழிந்தார். (௩௬)

எங்குளா ரறிந்தறியா தியற்றுகின்ற பூசனைக்குங்
கங்கைவே ணியருளே கதிகாட்டு மென்பார்மு
னங்கசா தனமாக வரும்பாவக் கடல்கடத்தும்
வங்கமாய்த் தோன்றியதால் வானிலொரு புட்பகத்தேர். (௩௭)

கூற்றினார் விடுத்தகலக் குஞ்சரத்தைப் புட்பகத்தே
ரேற்றினா ரேற்றுதலும் வேதிசே ரிரும்பதுபோன்
மாற்றினன் கரியுருவ மாதங்க வுருவானன்
போற்றினன் கயிலையிற்போய்ப் போதநா யகனடிக்கீழ். (௩௮)

சென்றடியிற் பணிதலுமே திருவருட்கண் பார்த்தருளி
யன்றுகமைத் திரிகூடத் தருச்சனைநீ புரிந்தமையா
னன்றுகெச கருணையென நந்திகணத் தினுமுயர்ந்து
முன்றிலிடைக் கிங்கரர்க்கு முதல்வனென வாழ்கென்றார். (௩௯)

மைகொடுக்கும் பழவினைபோய் வளர்பூசைப் பலன்கிடைத்துப்
பொய்கொடுக்கும விலங்குருவம் புத்தேளா யெவ்வுயிர்க்குங்
கைகொடுக்கும் விடையார்க்குக் கைகொடுக்கும் பணிபூண்டான்
மெய்கொடுக்குந் திரிகூட மகிமையார் விளம்புவார். (௪௦)

சிந்தைசெயா கரிவேடன் சென்றதே வலமாகத்
தந்திசெயும் விளையாட்டே தருபூசை முறையாக
விந்திரனு மேத்தரிய திரிகூடத் தெம்மானைப்
புந்தியுடன் வலம்வருவார் பூசிப்பார் பேறெளிதோ. (௪௧)

இன்னகரி செயும்பூசை யியம்புதலு நயந்தேத்திப்
பொன்னகமா மிமயவரை போந்தருளம் பெருமாட்டி
தன்னருமைப் பெருந்தலமுந் திருமணமுஞ் சாற்றுகெனப்
பின்னருமா தவர்வேண்டப் பேசுவா னுயர்சூதன். (௪௨)

18-யானைபூசித்த சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௧௦௫௭.

முதலாவது தானவைபவகாண்டம் முற்றுப்பெற்றது.

---

௨

கணபதி துணை.

சிவமயம்.

## இரண்டாவது சிவரகசியகாண்டம்.

### காப்பு.

பெருமதத்தி னொருகரத்து மாருதமெவ் வுயிர்க்குமுயிர்ப் பிறக்கங் காட்ட, விருகரத்தங் குசபாசம் பரமதத்தி னிடைவிழா தெடுப்ப விரங், தருகரத்து மருப்புவினைத் துரிசறுப்ப மோதகக்கை சைவத்தெய்வ, வொருமதத்தின் சுவைநிறைக்கு மும்மதச்செவ் பகக்களிற்றை யுளத்துள் வைப்பாம்.

### முதலாவது:--உமைதிருவவதாரச் சருக்கம்.

தேகமார் மன்னுயிர்கள் சுவர்க்காதி போகமுண்டுசேட முன்னும், போகபூமியின்வரம்பு தருமமெனும் பயிர்வளர்க்கும் பொழிற்கோர் வேலி, யோகமா தவர்தவத்தின் விளைவுபனிக் காலயமு வுலகுக்காணி மாகமார் கடவுளரும் வரநதிபு னல்லாறும் வளரத் தாணி. (௧)

காருதிக்கு மணியுதித்தும் பொன்பூத்தும் புவிமடந்தை தரிக்கு மோலி, காருதிக்குந் தொறுமவட்கு வாருதிக்குங் களபமுலை கலையாய்ச் சூழ்ந்த, வாரிதிக்கு நீருதிக்கு நாலுதிக்கும் வரைகடவா மான வேலி, தேறுதிக்கு மழுத்தகிரைச் சிதமதி யாக்குபனிச் சிகரக்குன்றம். (௨)

பொன்னிறு வயன்கமலப் பொகுட்டாகும் பசந்தழையாற் பொதுளுஞ் சோலை, துன்னொற் றிசைநிரம்பி மால்வளர்பச் சால்போலுந் துகினத் தோய, மன்னலாற் பரமனுறை வடகயிலை வரைகிக்கும் வடிவு மூன்று, முன்னினார் பனிச்சிமைய வுயர்வரைமுத் தேவியரு முறழு மாதோ. (௩)

வேறு.

அறைகு திக்கும்வெள் ளருவியை யானைமத் தகமேன்
மிறைவ ருத்தும்வா ளரியெனக் கரியினம் வெருவும்
பிறைவ ளைப்பெருந் துண்டத்துப் பெரும்புயல் வரையைச்
சிறைவி ரித்தசிம் புள்ளென முழைபுகுஞ் சீயம். (௪)

யாவ ரம்பையர் கன்னினர் நன்னின ரிவரைத்
தேவ ரம்பையர் பணிவது சிற்குடிச் சிறார்பாற்
காவ ரம்பையில் கனியளித் திமையவர் ககனத்
தாவ ரம்பையின் கனிகொரு கனிகொண்மாச் சயிலம். (௫)

சமைய மந்தர மத்திம தாரம்வன் மறைக்கு
மமைய மந்தரத் தகணமோ வலமரு மடவிச்
சிமைய மந்தரத் தவருறை குலவரை தெரிப்போ
ரிமைய மந்தர மென்னலா ன முதல்வரை யிதுவே. (௬)

வேறு.

மேருவார் மந்தர நிடத மெற்புளார்
பாருளார் திசையுளார் பாதலத்துளார்
ஆருளார் கற்பகச் சோலையார்முதல்
யாருளா ரவர்தவத் தெய்து மால்வரை. (௭)

கடும்புலி முழையிடைக் கலைகள் காற்பிடித்
தொடுங்குமே யரிகளுங் கரியு மோருழைப்
படும்பணி மயிற்சிறை யடையும் பாந்தளு
நடுங்குறப் பொழிபனிச் சிசிர நாட்டினல். (௮)

அகலிடம் விசும்புதொட் டறன்று காய்கதிர்ப்
பகலவன் றேர்ப்பரி பச்சை யாயது
முகநிகர் மதிக்கலை முடங்கு மான்மையுஞ்
சிகரவெம் பனிவரைச் சிறந் தாலன்றோ. (௯)

தடவரைத் தென்றிசை சார்ந்த வெய்யவன்
வடபெருந் திசையினும் வருந்திச் செல்வது
குடமுறு பனிவரைக் குளிர்பொ றுதபோய்
மிடல்வட வனலின்மெய் வெதுப்ப வேகொலாம். (௰)



கற்பக மிசைப்படர் காம வல்லிகள்
வெற்பக மெறிபனித் திவலை வேய்ந்தன
கற்பகக் கொடிச்சியர் நாணிற் கோத்திடும்
பொற்பக நித்திலக் கோவை போலுமால். (௧௧)

தமையறு மடந்தையர் தணப்ப வானவ
ரமையன தோள்பிரிந் தலக்க ணெய்துவார்
சிமையமார் தவத்திறைச் சேர்வ ராதலா
லிமையவர் துதிசெயு மிமய மால்வரை. (௧௨)

வேறு.

அந்தமலைக் கரசானு னிலான சிற்றுதரக்
கந்தமலை மலர்க்குழலாண் மேனகா வலன்வானேர்
வந்தமலை புரிகோட்டு மைந்நாகன் றனைமகவாய்த்
தந்தமலை தனைப்பெறுவா னெடுங்காலந் தவம்புரிந்தான். (௧௩)

அக்கன்னை யொருகண்ணை யடிசாத்த வருள்புரியு
முக்கண்ணன் முடிசாத்து மறுகண்ணான் முளரியத்தான்
மெய்க்கண்ணன் புறநோக்கி விரதமுயல் வெற்பனுக்கே
யெக்கண்ணு மெய்தாத தவப்பயன்வந் தெய்தியதால். (௧௪)

வேறு.

மன்னவன் றவமதோ மண்ணும் வானமு
முன்னர்செய் சுகிர்தமோ முதல்வெற் போர்சனைப்
பொன்னவாங் கமலமென் பொகுட்டி லீன்றதா
யின்னமே லுலகெலா மீன்ற செல்வியை. (௧௫)

சேயிழைக் கவுரியைத் தெய்வப் பங்கயக்
கோயிலிற் காட்சிகள் குளிரக் காண்குற
வாயிர நயனமோ வளர்ந்த நாட்டமோ
மேயினன் றந்தைநா ளிமய வேந்தனே. (௧௬)

அடுத்தன னுவாமதி கண்ட வாழிபோ
லெடுத்தனன் பொன்னையின் றெடுத்த வாரிதி
கடுத்தனன் கயிலையார் வாழ்வைக் கண்ணுறீஇக்
கொடுத்தனன் மேனையாங் கொம்ப னுள்ளையில். (௧௭)

வாங்கினள் செல்வியை வாங்கி வாழ்வுபெற்
றோங்கினள் பால்சுரந் தாகன வார்முலை
வீங்கினள் களித்தனன் மேனை வானெலா
மேங்கின குரவைக ளெழுந்த பல்லியம். (௧௮)

வேறு.

இச்சை கூர வெடுத்தனன் மார்பினைத்
துச்சி மோப்பப் பசுகரம் போடியே
கச்சை மீறு கனகவள் ளத்தின்பால்
பச்சை வல்லி பவளத்திற் பாய்ந்ததே. (௧௯)

புவன கோடியைப் போக்கு வரவெனுங்
கவன வூசலிட் டாட்டுங் கவுரியைப்
பவன வானவர் தச்சன் பணித்ததோர்
சுவண மாமணித் தொட்டிலிட் டாட்டினன். (௨௦)

சிலம்பு தண்டைகள் சில்லரிக் கிண்கிணி
யலம்பு கின்றதை யன்றடி நோமெனக்
கலம்பு லம்புற வோகடுந் தானவர்
தலம்பு லம்புற வோதவழ்ந் தாளரோ. (௨௧)

இறைய ளந்த படியிரண் டாற்சக
முறைய ளந்து வளர்ப்பவண் முந்துசெய்
யறம்வ ளர்ந்தது போலருண் மாமணப்
பொறைவ ளர்ந்தது போல்வளர்ந் தாளரோ. (௨௨)

வேறு.

வானநாட் டன்னமு மருள மால்வரைக்
கானமாப் பிடிகளுங் கண்டு நாணுறத்
தானமுந் தருமமுந் தவமுஞ் சைவமு
ஞானமு நடைபெற நடைகற் றாளரோ. (௨௩)

ஆற்றிய புவனங்க ளனைத்தையும் பேரண்ட
முற்றிலுஞ் சிற்றிலா முறையி லாடுவா
ளெற்றிலு மமைவதோ ரியைபு காட்டவோ
சிற்றிலு மாடினள் சிறைய முன்றில்வாய். (௨௪)



பாவையுங் கழங்குபொற் பந்துங் கிள்ளையும்
பூவையும் பயிற்றுதல் புந்தி செய்கலாள்
யாவையும் படைத்தளித் தழிக்குஞ் செய்கைதன்
றேவையும் பயிற்றுதல் சிந்தை யுன்னியே. (௨௫)

வேறு.

பேதையார் பருவந் தன்னிற் பேருல குடையார் கொன்றைக்
கோதையார் சடில ஞானக் கொழுந்தையார் வத்தான் மேவ
மேதையார் விரதம் பூண்டு மேனையார்க் குணர்த்த மேனை
தாதையா ரலங்கன் மோலித் தந்தையார்க் குணர்த்தி னாளே. (௨௬)

அழகின துறையுள் போல்வா யருந்தவங் கூடு மோநின்
மழலையம் பருவத் தென்று வழங்கின னிமவான் முக்கட்
குழகனை நினைவார்க் கென்று நினைத்தவை கூடு மென்றாள்
பழமறைக் கிழவி நோற்பப் பசும்பொனாற் சாலை செய்தான். (௨௭)

இலைகமா மலைக்கு வேந்தன் றிருமக ளொருபெண் வாலை
மலர்கொய்யாள் சுனைபந் தாடாள் வல்லியர் குழுவிற் கூடாள்
குலமெலா மிறும்பூ தெய்தக் கொழுந்தவத் தனிமை பூண்டா
ளுலகெலாம் பரவு முக்க ணொருவனைத் தனிமை நீக்க. (௨௮)

சங்கநீர் படியுந் தோறுந் தவளமெய் வாணி போல்வாள்
பங்கயா சனத்தின் மேவிற் பதுமையை நிகர்வாள் சூலச்
செங்கையார் தம்மை நீங்காச் சிந்தையாற் கவுரி யாவாள்
மங்கைமெய்த் தவஞ்சேர்சிந்தை வயிரத்தால்வரைப்பெண் ணாவாள்.

அலைபுனற் றடஞ்சேர்ந் தன்ன மாகுவாள் கூல மேவி
மலையிசைப் பிடியை நேர்வாள் வனத்திடை நிற்குங் காலை
நிலைமலர்க் கொம்பு போல்வா ளிட்டையி லிருந்தா லம்பொற்
சிலையினை நிகர்ப்பா ளன்றிச் சித்திரம் போல்வா ளன்றே. (௩௦)

வேறு.

புலன்களைந் தையும் பொருத்திநாற் கரணமேற் புகட்டி
யலங்கு நாற்கர ணங்களை யுள்ளமே டமைத்துப்
பலஞ்செய் யுள்ளத்து ஞானமாம் விழியினைப் பதித்தாங்
கிலங்கு சோதியை நோக்கியேற் கண்முகிழ்த் திருந்தாள். (௩௧)

மேனை யாரும்வெற் பரசனும் வியப்பவின் னவரோ
டேனை யார்தொழ வெம்பிரான் றிருவுள மேற்ப
மோனை யார்வமே கொளுகொம்பா முறுதவப் பயிரை
வானை யோங்குற வளர்த்தனள் பனிமலை வல்லி. (௩௨)

வேறு.

உன்னிலா வியப்பே ரன்பா லுளமெலா நிரம்பி ஞானக்
கண்ணிலா னந்த வெள்ளக் கடல்பரந் திமய மீன்ற
பெண்ணிலா ரமுதார் செய்யும் பெருந்தவப் பெருக்க மேறித்
தெண்ணிலா மதியம் வேய்ந்தார் திருவுள நிறைந்த தன்றே. (௩௩)

உடையநா யகியார் செய்யு முயர்தவப் பரிவு காண்பான்
சடையினின் மதியஞ் சூடித் தடக்கையின் மழுமா னேந்தும்
விடையினார் கயிலை யாதி வெற்பினர் போற்றி ஞறிப்
படையினர் முதலோர் சூழப் பனிவரைச் சாரல் சார்ந்தார். (௩௪)

வந்தவா னவரை யெல்லாம் வரைப்புற நிறுவித் தாமோ
ரந்தண முதியோ ராகி யணிந்தமா மதிபோற் கூனுஞ்
சந்தமா நரையுந் தோன்றத் தவப்பொறை சுமந்து மேனிப்
பைந்தளிர் வாட நின்றாள் பணிதவச் சாலை சார்ந்தார். (௩௫)

சென்றபி னெழுந்து தாழ்ந்து செம்மறை யவரைப் போற்றி
யன்றவர்க் கியைவ நல்கி யாசனத் திருத்திக் கீழ்போய்
நின்றன ளிமயப் பாவை நேரிழை வதன நோக்கி
மன்றலங் கோதாய் மேனி வருந்திய தென்னை யென்றார். (௩௬)

தோழியர் பரவித் தூய வுணவொடு துயிலு நீக்கி
வாழியங் கயிலை மேய வரதனை மருவ லானை
யூழியு முலகு நீத்த வொருவனைக் கருத்தி லுன்னி
யாழியி னமுத மன்னா ளருந்தவ முயன்றா ளென்றார். (௩௭)

பிடியன நடையும் வாலப் பிறையன நுதலும் வாய்ந்த
கொடியன விடையாய் மேனி குழைந்தபூங் கொம்பு போல்வாய்
வடிவமு மழகுந் தேம்ப வண்ணமும் விருந்த நோற்றல்
கடிஞ்ஞுபி லைய மேற்றுக் கடிதுகாந் தார்க்கோ வென்றார். (௩௮)



வியன்மறைத் தலைவர் கூற மெல்லியர் மொழித லாற்றார்
சயிலமா னருளான் மற்றோர் தலைமையாம் பாங்கி நோக்கி
யயன்முத லமரர் வீறு டற்பலி கொண்டா ரண்ட
ருயிர்நிலை திறந்த வன்றே வுண்டனர் விடத்தை யென்றாள். (௩௯)

அலைபொரு தடக்கட் பேதா யருமணம் புரிந்தா லம்பொன்
மிலைதரு நகர்நா டின்றி வெற்பிலே புகுவா ளென்றார்.
கலைதெரி மறைநூல் வல்லீர் கல்வியின் பெருமை யீதோ
மலைமக ளாகத் தோன்றி யிகழ்வதோ மலையை யென்றாள். (௪௦)

இப்படி யநேக கால மிமையவர் தவங்கள் செய்தார்
மைப்படி விழியா ளீசன் வந்திலன் வருமோ வென்று
ரப்படி யிரங்கா ரல்ல ரடியவர்க் கெளியார் சித்த
மொப்பிலா தொழிந்தா ரேனு மொழிகல முயிரோ டென்றாள். (௪௧)

மறைவலீர் போந்த வாறு வழங்கினீர் போமி னென்ன
வறைநதனு மமலர் நோக்கி யணங்கியாம் போந்த வாறு
பிறைநுதற் கருங்கட் செவ்வாய்ப் பெய்வளைத் தையலாளை
நறைமலர் மாலை சூட்டி நன்மணம் புரிதற் கென்றார். (௪௨)

கறையணி கண்டத் தண்ணல் கவ்விதன் பொருட்டாற் கொண்ட
மறைவடி வென்னான் சொல்லு மறைமொழி யென்ப தோரா
விறைமக ளிதய மாழ்கி யிருசெவி புதைத்து வெட்கி
நறைமலர் வதனங் கோட்டி நாணமுற் றகன்று போனாள். (௪௩)

மடவர லகன்ற காலை மற்றுமோர் விளையாட் டாக
விடமணி மிடற்றக் கங்கை வேணியுங் கரந்து போந்த
கடவுள்வே தியனார் தாமுங் கரந்தனர் திகைத்தாள் வல்லி
யிடம்வலந் தேடிக் காணா ளிறைவனென் றிரங்க லுற்றாள். (௪௪)

வேறு.

ஒன்றே பலவே யுலகெலா மோங்குகுணக்
குன்றே கடலே கொழுங்கருணைப் போரேறே
நன்றே யரிதேடு ஞானமலர்த் தாள்சிவப்ப
வின்றே தமியேற் கெழுந்தருள வேண்டிற்றே. (௪௫)

பொன்னே மணியே பொருளே பொருண்மறையின்
முன்னே நடுவே முடியா முழுமுதலே

மின்னே யெனத்தோன்றி விண்ணிலே போய்மறைந்தா
யென்னே தமியே னியற்றும் பிழையேயோ. (சஅ)

காரா யழகொழுகு கந்தரத்தா யந்தரத்தா
யாரா வமுதேயென் னுனந்த மாகடலே
நீராய் வெளியாய் நெடுங்காலாய் வெங்கனலாய்ப்
பாரா யொளியாய்ப் பரந்தாய் பரமேட்டி. (சஎ)

என்றாள் புகழ்ந்தா ளிமயவரைப் பூம்பாவை
நின்று ளயர்ந்தா ணெடுநிலை முத்துகுத்தாள்
சென்றாள் பலதிசையுந் தேடி யலமருங்கான்
மன்றாடும் பாதர் மழவிடைமேற் றோன்றினார். (சஅ)

பனகமணி திருமார்பும் பவளம்போற் படர்சடையுந்
தினகரோ தயவடிவுந் திருநுதலின் மேல்விழியு
மனவரத நடம்புரிவா ரபயவர தமுங்காட்டிக்
கனவரையின் திருமகளார் கண்களிப்ப முன்னின்றார். (சீக)

பூணார் நகிலவரைப் பூம்பாவை நோன்பிருந்து
நாணாளு மேனி நலிந்தாண் மெலிவகலச்
சேணார் கயிலைச் செழுந்தேனை மாலயனுங்
காணாத தெள்ளமுதைக் கண்ணான் முகந்துண்டாள். (ருo)

தாராற்றுங் கொன்றைச் சடையா யெனையுடையா
யாராற்று வார்நின் னடியா ருனைப்பிரிந்து
காராற்றுங் கண்டா கரையேற்றாய் நின்காதற்
பேராற்றில் வீழ்ந்தேன் பிரிவாற்றேன் யானென்றாள். (ருக)

வேறு.

கோந்துதா ரிமயச் செல்வக் கோதையாள் பயந்த தோதாய்
முந்துநீ தவங்கள் செய்த முறையெலா முவந்தோ நின்னை
வந்துநாம் வதுவை செய்வோம் வருந்தலென் றயன்மால் சூழ
விந்துநா தாந்த மானார் வெள்ளியங் கிரியிற் போனார். (ருஉ)

1 - உமைதிருவவதாரச் சருக்கம் முற்றிற்று.

---



தனிவரைச் சாபத் தார்சொற் சாபத்தா ரெழுவ ராய
முனிவரை வரித்து நோக்கி முகிழ்முலை யிமய மாதை
கனிவரை வதுவை சூட்ட நயந்தனம் விரைவி னீவிர்
பனிவரை வேந்தன் முன்போய்ப் பகருதிர் வருதி ரென்றார். (க)

ஆங்கவ ரிமவான் பக்க லணைதலு மெழுந்து போற்றித்
தேங்கமழ் மலர்க ளேவிச் சிறந்தவா சனத்தி ருத்திப்
பாங்கெழு வரையைச் சூழும் பரிதிபோல் வலம்வந் தேத்தி
யீங்குமெய்த் தவத்தி ரெய்த வெத்தவம் புரிந்தே னென்றான். (உ)

பின்னரு மவரை நோக்கிப் பிரமனை முருக்கொண் டன்னீர்
பொன்னகர் கழிப்பி யீண்டுப் போந்தவா றென்னே யென்னக்
கன்னலங் கனியை நின்பாற் கற்பக்கொழுந்த னானை
தன்னர்பூங் கயிலை யார்க்கு நல்குதி நயப்பா லென்றார். (ங)

தந்தையா மிமவா னிற்பத் தனையன்மைந் நாகன் போந்து
முந்தையார் குலமே தென்ன மொழிதலு முனிவர் நோக்கி
யெந்தையா ருலக மெல்லா மீன்றுகாத் தழிப்பர் யார்க்குந்
கொந்தையார்கொன்றைவேய்ந்தார்கொடுத்ததுகுலங்காணென்றார்.

மேனையா ரதனைக் கேளா வியன்மகட் கொடுத்தார் தம்மைத்
தானையா லறிந்து ளார்க்கோ சம்பந்த மெனலு மோனர்
தேனையார் மொழியாய் தத்தந் திகழ்மனைத் தீப மேனு
மோனையாய் முத்தங் கோடற் கிசையுமோ மொழியா யென்றார். ()

தன்பெரு மனைக்குஞ் சேய்க்குந் தகவுரைத் திமய வேந்த
னென்பெருங் குலத்தில் வந்த வெழின்மலர்க் கொம்ப னானை
நன்பெருங் கயிலை யாதி நாதனை வேட்ப தானன்
முன்பெருந் தவமே யென்றான் முனிவரர் மகிழ்ந்து நோக்கி. (ரு)

பூனையார் கரந்தை வேணிப் புனிதர்க்கும் பொருப்ப னீன்ற
வானைநேர் விழியி னட்கு மங்கலத் திருநாள் வாரம்
வேனையே யோரை யாவும் விதிமுறை யுரைத்து மேலோர்
தானையே முகுர்த்த மென்ன நயந்தனர் நவின்று போனார். (எ)

போந்தனர் முனிவர் வெண்பொற் பொருப்புறை செம்பொற் கோயில்
சேர்ந்தனர் நந்தி யுய்ப்பச் சிவபிரான் சந்நி தானஞ்
சார்ந்தனர் நிகழ்ந்த வாறு சாற்றின ரிமவான் செல்வி
மாந்தளிர்ச் செங்கை பற்றி மணக்குநா ளிஃதே யென்றார். (அ)

பன்னவ ருரைப்ப நாதர் பசுந்துழாய் முகுந்தன் வேதா
விண்ணவர் தலைவன் மேலை யுருத்திரர் முனிவர் சித்த
ரெண்ணரு முலகத் தாரு மேந்திழைக் குழாத்தோ டிங்கு
நண்ணுதற் கருள நந்தி நம்பிரான் மனனஞ் செய்தான். (கூ)

அங்கவ ரிமயம் மீன்ற வமுதனை யானை நாளைத்
திங்களங் கண்ணி வேய்ந்த தெய்வங்கண் மணாளர் வேட்கு
மங்கல மென்று தோன்ற வகைபெறும் புவனந் தோறும்
பொங்கொலி முரச மார்ப்பப் பொருக்கென வெழுந்தார் மன்னோ. ()

வேறு.

பங்கை யாசனத் திருவுறை மார்பினன் பங்கையா சனச்செல்வ
னங்கை வாரணத் திந்திரன் பாவக னந்தக னிருதேசன்
பொங்கு வார்கடற் கிறைபவ னுதிபன் பொருவிடை யீசானன்
திங்கண் மாதங்கள் வருடங்கள் வாரங்க டிதிகணாள் கரணங்கள். ()

அண்ட மூலகா லாக்கினி யுருத்திரர் பதின்மர்மற் றவர்போல்வார்
கொண்ட பூதகாற் கணத்திர ளாடகர் குறட்படைக் கூர்மாண்டர்
மண்டு நாலெழு கோடியா மிருணிலம் வளர்க்குமட் டகராவார்
கண்ட பாதலம் புரக்குமா மணிமுடிக் கணபணத் துரகேசர். (கஉ)

அண்ட கோளகை யுச்சிய ருருத்திர ரைந்துநூற் றவராவார்
கொண்டல்வண் ணனை விரிஞ்சனைப் பணிகொள்வார் குரூதமா சாத்தர்
சண்ட மால்விடைப் பசுபதி யுருத்திரர் தரிக்குமீ ரைந்நூறுங்
கண்ட பேரனி கத்திர ளுருத்திர கணப்பெரும் படைவீரர். (கங)

நூறு கோடியர் பதினொரு கோடியர் நூற்றுவர் நூதற்கண்ணை
ரேறு கோடியி னிரட்டியர் நடத்துதே ராதவ ரவர்மேலும்
வீறு கோடியி னிரட்டியர் மருத்துவர் வசுக்களாம் விழுச்செல்வர்
கூறு நாலிரு கோடியர் மூன்றிரைக் கோடிய பெருத்திர்த்தம்.



மூல நான்முக னடங்குற வவன்முரி புருவத்தி னிடைத்தோன்று
நீல லோகிதர் முதலினோர் மூவிலை நெடியவேற் கங்காளர்
சூல பாணியர் கேத்திர பாலர்மெய்ச் சுவாமினர் திருவாணைக்
கோல மேயவர் பச்சிளங் கஞ்சுகக் கொற்றவ ரிருநால்வர். (கரு)

கருது பாற்கட லுண்டுதன் னருட்கடல் கண்ணனுக் கருள்செய்தோ
னரிய மாமறை வியாதமா முனிசுகன் றதீசியத் திரியென்பான்
பிருகு ரோமசன் கண்ணுவன் பராசரன் பெருந்தவத் துருவாசன்
சரத நாரதன் கபிலன்மா சத்தியன் சதாநந்தன் பரத்வாசன். (கசு)

சித்த மாதவர் தந்திரர் கருடர்கிம் புருடர்கின் னரர்போகர்
வித்தி யாதரர் சாலக டங்கடர் நிசிசரர் வேதாளர்
சித்தர் விண்ணவர் மாகசா ரியர்தமித் தியர்கட வுளர்யோகர்
சத்த ரூரிய ரட்டமா சித்திகள் சத்தமா முகில்வேந்தர். (கஎ)

அனக நீள்சடை யகத்தியன் புலத்திய னங்கிரா மார்க்கண்டன்
மனநி லைப்பெரும் காசிபன் கவுதமன் வசிட்டனு மெழுவோர்கள்
சனக னேசனற் குமாரனே சனந்தன் சனந்தனென் பவர்நால்வர்
பனக நீண்முடிப் பதஞ்சலி காஞ்சையிற் கண்பெறு புலிப்பாதன். ()

ஒருதி னம்பொழு திரண்டுமுக் காலநான் குயர்மறை யைம்பூத
மிருது வாறுட னெழுபெரு நதிக்குல மெண்கிரி நவகண்ட
மருமை யெண்டிசை யெழுகடம் புவனமா றங்கமைம் புலனான்கு
கரண முக்குண மிரண்டற மொருபெருங் கதிர்மதி விதிமாதோ. ()

சரிதை யாதிய சதுட்டய மந்திரந் தத்துவம் புவனங்கள்
வருண பேதங்கள் கலைகள்வன் பதங்களா மத்துவா வகையாறுந்
திரும டந்தையா ரதிபுலோ மசைமுதற் றெய்வமங் கையர்யாரு
மிரத மூர்திக ளுகைத்தனர் கயிலையி லெய்தினர் விசும்பாறு. (உ௦)

புவனம் வானமும் புதைபட மீமிசைப் புடைபரந் தாகாய [ர்
கவன ரேமுதல் யாவருந் தாழ்ந்தெழீஇக் கயிலைமால் வரைசூழ்ந்தா
குவலை யங்கொடுத் தண்டகோ ளகையெலாங் கோத்தெழு முகவாரி
சிவபிரான்பெருந் திருமலைபணிந்துபோய் வலஞ்செயுஞ்செயன்மாண.

ஒத்தே ழும்பதி னொன்றுபே ருலகமு மொருமுகங் கொடுபோந்து
மத்து ணைக்கெலா மவரவர்க் கிடங்கொடுந் தண்ணலார் கயிலாயம்
பத்தி முத்தமிழ்ப் புலவருக் கருள்சங்கப் பலகையொத் ததுமேலுந்
தத்தி யண்டமும் பூண்டதோர் பாரிடத் தலைவனைத் ததுமாதோ

எயில்சி தைத்தவில் லாதலா லெம்பிரான் றிருக்கடை யினின்
மேருச், சயில நிற்றல்போ னின்றபொற் கோபுரந் தனைத்தொழு தெ
ழுந்தேகிப், பயின்ம ணப்பெருங் குழுவெலா நிறைதலாற் பரம்பர
னுடன்மேவிக், கயிலை நற்கிரி யுலகெலா மீன்றருள் கவுரியு நிகரா
மால். (உங)

உவரி மாலய னுருத்திர கணமுத லுயர்ந்தவர் குழுவெல்லாஞ்
சிவபி ரான்றிரு வாய்தலின் மொய்ந்தனர் தேன்குடத் திரளீப்போ
லவர்கள் பூதர்பா லவர்கண நாதர்பா லறிவிப்ப லவரேகி
மவுன நந்திபா லுணர்த்தலு மாங்கவன் வள்ளலார்க் கறிவித்தான். ()

தருகவென்றென வருளலும் வேத்திரத் தனிப்பெரும் படையோர்சி
வருக வென்றவன் மரபினு லுய்த்திட வந்திறைஞ் சலும்வாக்கா
லருமை நோக்கினு லருட்குறு முழுவலா லவரவர்க் கருள்செய்தா
ளொருவ னுகிமற் றுலகெலா மாகிநின் றுயிர்க்கெலா முயிராவான். ()

எம்பி ரானிடத் திவ்வண நிகழ்தலு மிமயமால் வரைவேந்தன்
கொம்ப னன்மண வோலையுய்த் தனுங்குல வரைக்கிறை யவர்யாரு
மம்பு ராசிகட் கதிபர்தங் கணங்களு மருண்முனிக் கணம்யாவும்
பம்ப மால்வரைத் தெய்வதக் குழாங்களும் பூரவைபோற் பரந்தன்றே.

கமலை பூமகள் பாரதி வயினவி காடுகாள் பிரமாணி
குமரி வீரிமக் காகினி யோகினி கொற்றவை யயிராணி
யமல மேனகை யுருப்பசி திலோத்தமை யரம்பையர் குழுவெல்லா
முமையை வந்தடி தொழுதெழீஇத் திங்கள்சூ ழுடுக்குல மெனச்சூழ்ந்தார்.

நகர மாடங்கள் கூடங்கள் கோயில்கண் ணுரயில்கள் செய்குன்றந்
சிகர கோபுர மாளிகை சூளிகை தெற்றிசித் திரகூட
மகர தோரணங் காவணம் பூவண மன்றநா டகசாலை
யகர மாயிர கோடிகள் வகுத்தன னமரர்கம் மியன்மேலும். (உஅ)



மேடை மேனிலை யுபரிகை வேதிகை விரவுசா ளரங்கோடி
மாடை மாமதி மணியினு லாயிய மலரினுன் மணப்பந்த
ராடை நீள்கொடி படங்குசா மரைகுடை யணிகொள்பூ ரணகும்ப
மோடை மாகரி யாளிகண் மிளிக ளுருக்கள்பற் பலகோடி. (உகூ)

இரச தத்தபூ தகம்வயி ரியத்தொழிலாம் கடிகுறட்டி
மரக தத்தினுற் பாசடை காய்க்குலை வகுத்துநற் பசும்பொன்னுல்
விரவு மென்பழுக் காய்பழத் தாற்வெண் ணித்தில விரிபாளை
புருட ராகத்தாற் பவளமா மணியினுற் பூங்கொத்து மமைவித்தான்.

மண்ட பங்களு மாளிகைப் புறங்களு மாடகூ டமும்வான்மேற் [றம்
கொண்ட கோபுர நிரைகளும் வரைகள்போற் குழுமலாற் பனிக்குன்
பண்டை யாதியம் பானைவேட் டவ்வுறை பரைதிரு விளையாட்டா
லண்டம்யானையுமெடுத்தெடுத்தடுக்கியசிற்றில்போன்றதுமாதோ. ()

தெருக்கள் பற்பல வமைத்தன புவனமாத் திரள்வகுத் தன
போலு, முருக்கள் பற்பல வகுத்தன வுயிரெலா மொருங்குகிக் கன
மாலும், பொருப்பி லிங்கிவை வகுத்தவான் கம்மியன் பூவின்மே
லயன்போன்று, வருத்த வீதியி லணியினுக் கணிசெய்வா ரயன்
கொடித் திரள்போன்றார். (ஙஉ)

வல்லை தோரணந் தழைகொடுத் தியற்றுவார் மாத்தழை வன
மாக, முல்லை மல்லிகை சண்பக நாற்றுவார் மொய்ம்மலர்ப் பொழி
லேய்ப்ப, வெல்லை மொய்த்தெழு கொடிபல நிரப்புவா ரெங்கும்வா
னதிமானத், தொல்லை மீனொளிர் தூய வானகமெனச் சுடர்விளக்
கணிசெய்வார். (ஙங)

அரிய நான்மலர்த் தேன்களாற் குறிஞ்சிமேற் குறிஞ்சியா ன
துசாந்தான், மருத மானது முல்லையே நிகர்த்தது மாதர்மெய் விளை
யாட்டாற், பரவு மாமணித் திரள்களாற் பரல்படு பாலையொத் தது
பன்னீர், நிரவி விசலா னீர்வளர் நெய்தலே நிகர்த்தது பனிக்குன்
றம். (ஙச)

மலரி னுற்கரும் பாற்கரும் பான்மட மாதரா னடைக்காவாற்,
குலவு தென்றலாற் கொடிநிரைத் திருண்டதாற் கோமத னுயிர்மீட்

பான், சிலைபு நாலும்வெங் கணைகளும் வேழமுஞ் சேனைதேர் படைவீடு, மூலக நாயகி திருமணச் செவ்விபார்த் தொருங்குநிற் பனமாலும். (௩௫)

இறைத்த சுண்ணமுஞ் சிதறும்வெண் பொரிகளு மெடுத்தெறிவிடுபூவு, நிறைத்த மாலையி னுகுத்ததண் மலர்களு நிரைத்துவிழ் பூந்தாது, நறுக்கி யொப்பிடு சரங்களிற் சிதறிய நவமணி களும்பொன்னுங், குறித்த குப்பையாற் பனிவரை யனந்தமாங் கோடிமுடி யுடைத்தம்மா. (௩௬)

இமகிரி தெய்க்கிரி காவல னின்னண மெழில்வரை யணிசெய்யக் கமழ்ப சந்துணர்க் கொன்றையந் தொடைபுனை கயிலையம் பெருமானைத், தமனி யப்பணி கொடுமண வணிசெயச் சதுமுக னெதிர்வேண்ட, வமரர் தம்பிரா னணிந்தமை காண்கென முறுவல்பூத் தருள்செய்தான். (௩௭)

புலவு நாறுகோட் டாம்பல்வெம் புலிதரு போர்வையு முஞ்சாத்துங், கலிகொள் பாரெலா மொருபணத் தேந்திய கணபணு டவிககச்சு, மொலிய லாகிமே லொளிருமி தாம்பர வுத்தரி கமுமாகி, வலிய காஞ்சனப் பட்டிகை யாகவு மலிந்துதோன் றிபவன்றே. (௩௮)

காதிற் குண்டல மார்பணி சரப்பணி கண்டிகை திருத்தோளின்
மோது பொன்வலை கங்கணம் பவித்திர மோதிரங் கணையாழி
போதிற் பொங்கிய வாசிகை கரோடிகை புனைதிரு வரைநாண்கள்
பாத நூபுரப் பொற்பணி யாயின பணைமுடிப் பணியெல்லாம். (௩௯)

தூம ருப்பொடு மீனமோ சனம்புடை தொடுத்தவெண் டலைமாலை
தாழும் பொன்னணி சன்னவீ ரம்பல காசணிப் பணியாக
பீம யானத்து வெண்டிரு நீறுவெண் கருப்புர நறுஞ்சாந்தா
வாமை யோடுபொற் பதக்கமா வென்பெலா மாரமா யினமாதோ. ()

கன்னின் மேற்றிகழ் கண்ணெனிர் தருங்குறி கவினுதற் குறியாக, வண்ணன் மேற்குழை மகரகுண் டலத்தொடு மணிவளைத் திருத்தோடும், விண்ணின் மேற்பொலி கதிரென நிலவென விளங்குமே பொரொளிவீச, வண்ண மாமணித் திருமுடி யானது வளர்சடைமுடியம்மா. (௪௧)



வேறு.

மணிப்பணி யங்கதப் புயமும் வாய்ந்தபொன்
னணிப்பணி யகலமு மகலங் காண்குறத்
தணிப்பணி தகைமையாற் சலித்திட் டான்சகம்
பணிப்பணி யகிலமும் பார்த்த பார்வையான். (௪௨)

பூதநா யகன்முடி தொடுத்துப் பூணெலாம்
வேதநான் முகன்விழி குளிர்ப்பக் கண்ணுறீஇப்
பாதமேற் பணிந்தெழீஇப் பண்டு தானுந்தன்
றாதையும் பெறவொணாத் தவம்பெற் றேகினான். (௪௩)

வேறு.

கொம்ப னாள்பெரு மணநின்ற வேறவா னிமையவர் குறைதீர
வெம்பி ராமெனழுந் தருளுக தருணமென் றிமயவெற் பிறைமேயிந்
தம்பி ரான்றனக் குணர்த்தலுங் கயிலையஞ் சயிலநின் றடலேற்று
நம்பி ரான்புறத் திவர்ந்தன ருயர்கண நாதர்போற் றியநாதர். (௪௪)

நீல லோகித ராடக ரட்டகர் நிமலர்நூற் றுவரண்ட
மேலை யுச்சிய ரண்டமூ லத்துறை விமலருத் திரர்யாரு
மாலும் வேதனுஞ் சயசய சயவென வரதனைப் புடைசூழ்ந்தார்
கோல மேருமால் வரையினைச் சூழ்தரு குலவரைத் திரண்மான. ()

பிந்து பல்கண நாதரும் பூதரும் பெருந்திரைக் கடலேய்ப்ப
வைந்து பல்வகை வாத்திய முழக்கொலி யந்தர வெளிபோர்ப்ப
விந்து வைத்தவர் திருமணப் பெருங்குறா மெண்டிசைக் கடங்காதே
தந்த மைத்தெளிந் தவர்பிரா னருளெனச் சகமெலாங் கடந்தேக. ()

மோத கம்பனைக் கோடபா சாங்குசங் தரித்துமே டிகமேறித்
தாதை தன்மணந் தங்குர மெனமுனைத் தந்திமா முகனேக
வேத பாரகர் வாழ்த்தொலி முழங்கிட விஞ்சையர் புகழ்பாடக்
கீத கின்னரர் தும்புரு நாரதர் கிளரிசை யமுதூற்ற. (௪௭)

இந்தி ரன்குடை நிழற்றிடப் பாவக னெடுத்திட நறுந்தூப
மந்த கன்படை தாங்கவீ சானனு வந் தடைப்பைகைக் கொளவூதை
முந்து மாலவட் டங்கொடு சுழற்றமுந் நீர்க்கிறை துளிதூவச்
சிந்து பல்கொடைத் திரவிய மெடுத்தெறிந் தேந்திட வளகேசன். ()

நிருதி பர்துகை சுமப்பமா நாகங்க ளிரைமணி விளக்கேந்தப்
பரிதி சோமர்தீ வர்த்திகை பிடித்திடப் படிவர்பல் லாண்டோதச்
சுருதி யாயிர நாமமேத் தெடுப்பவான் சுரர்கள்பூ மழைதூவ
விருது நாள்களுங் கோள்களு நிமித்தமு மேவிய பணிகேட்ப. (சகூ)

புனிவ ரைக்கிரி பொழிதல்போ லிமசலம் பண்ணவர் புடைதூற்றக்
கனிமொ ழித்திர ளரம்பையர் தமனியக் கவரிகா லசைத்தேக
வினிய மாலய னிருபுடை காப்பமற் றிமையவர் புறங்காப்பப்
புனித நந்திதன் கணத்தொடும் வேத்திரப் படையொடு முன்போத.

அருமை நாயகன் வருகின்று னடிமுடி யரியய னறியாத
பெருமை நாயகன் வருகின்று னுலகெலாம் பெற்றருள் பெருமாட்டி
திரும ணஞ்செய வருகின்று னுதல்விழித் தெய்வங்கண் மணவாளன்
வருகின் றுன்வள நிறைவொடு குறைவிலாவாழ்விறைன் வருகின்றுன்.

அமரர் நாயகன் வருகின்று னுலமுண் டமரர்தே வியர்க்கெல்லாந்
தமது மங்கலந் தத்தமக் கருளிய தனிமுதல் வருகின்று
னிமல நிட்கள நிராமயன் வருகின்று னினைப்பவர் மலமாயைத்
திமிர பாற்கரன் வருகின்று னெனப்பல சின்னங்கள் பணிமாற. ()

புடவி சூழ்தரு பெருந்திரைக் கடலெலாம் புறக்கட லொடுந்தாவிப்
படரு காந்தநாள் வெள்ளியங் கிரியின்மேற் பானுவா யிரகோடி [ளத்
சுடர்தழைத்திடத் தோன்றியதெனமணத் தொகுதியாம் பெருவெள்
ளிடைநி றைத்துமால் விடையின்மே லெம்பிரானெழுந் தருளியவேலை.

வடபெ ருங்கிரிக் காவலன் மந்தர மன்னவன் வடவிந்தத்
தடவ ரைக்கிறை கந்தமா தனத்திறை சக்கரக் கிரிவேந்த
னிடத வெற்பின னேமகூ டத்திறை நீலவெற் பினனாதி
யடல்வ ரைக்குல வேந்தரு மெழுகடற் காசரும் புடைசூழ. (ருச)

அம்ம லைச்சிலை வளைத்தவர் புயமலை யதிசயத் தனைக்காண்பா
னம்ம லைக்குலங் களுமெதிர் போந்தென விமயமா மலைவேந்தன்
மைம்ம லைப்புர வலரொடு மருகனுக் கெதிர்கொடு மலர்தூவிச்
செம்மலைப்பணிந் தினியனமொழிந் துதன்செழுமலைப்பதி சேர்ந்தான்.



ஈசர் நற்றிரு மருமக னாகவந் தெய்துறத் தவஞ்செய்தான்
பாச னத்தொடு மெதிர்பணிந் தேகலும் படர்விடைக் கொடியாட
நாச மில்லவ ரிமவரை வீதிவாய் நகர்வலஞ் செயப்போந்தார்
வாச நற்பதி யில்வகைப் புவனமுந் தமைவலஞ் செயமாதோ. (ருசு.

வேறு.

பண்க ளித்த பனிமொழிச் செய்யவாய்
வண்கி ளிக்குலம் போல்பவர் வள்ளலார்
விண்க ளிக்கு மிடற்றெதிர் நோக்கினர்
கண்க ளித்தனர் கார்கண்ட தோகைபோல். (ருஎ)

கார்த்த பூங்குழல் கட்டழ குக்கெலா
மோர்த்த பேரெழி லாள ரிவரென்பார்
நீர்த்தன் மேனியுஞ் சேயிழை மேனியும்
பார்த்த கண்கள் பறிப்பரி தாமென்பார். (ருஅ)

அண்டர் நாத ரருகினுக் கோர்குறை
கண்ட மீது கறுப்புள தாமென்பார்
வண்டு வார்குழன் மாதெழில் பார்க்கினு
முண்டு சிற்றிடை யாற்குறை யொன்றென்பார். (ருகூ)

மண்ணின் மேற்புனன் மேல்வன்னி மாருதம்
விண்ணின் மேலடங் காவுரு மேவினர்
பெண்ணின் மேலவள் பேரெழில் காணவோ
கண்ணின் மேலொரு கண்படைத் தாரென்பார். (சு0)

சங்கு சோர்வதுந் தாழ்குழல் சோர்வதுந்
தொங்கல் மேகலை சோர்வது நோக்கலா
ரங்க ணானெழி லாரா வமுதினை
நுங்கு வாரென நோக்குவர் நோக்கினல். (சுக)

காய்த ரும்பிறை மாமுடி காட்டியே
மோய்த ரும்பெரு மோகத்தை நல்கினர்
சாய்த ருந்தொடி கொண்டனர் தக்கவோ
வாய்தி றந்தொரு வார்த்தைசொல் லாரென்பார். (சுஉ)

சுழிக்கு லாமுந்தித் தோகையன் னீர்நமைக்
கழிவி லாதுயிர் காத்தலு மோனமோ
விழியி னன்மத வேளையும் வென்றுளார்
மொழியி னற்சக மூன்றும்வெல் வாரென்பார். (சுங)

தூய சோதி யருள்சுரக் கின்றகண்
காயு மோவிவர் கட்டெழில் காணவே
போய மாரன் பொறுமையின் மாய்ந்தனன்
வேயுங் கண்ணழல் வெந்தமை போலென்பார். (சுச)

ஆர மாதவஞ் செய்ய வயர்கின்றோம்
வீர மாதவிர் வெம்புயத் தண்ணலைச்
சார மாதவன் றங்கைநற் கங்கைபோற்
சேர மாதவஞ் செய்திலம் யாமென்பார். (சுரு)

அதலைக் கண்டு நுடங்கிய கூன்மதி
மதலைத் தார்முடி வல்லிதமைக் காயுமான்
முதலைச் சேர்ந்து கனுழனை மோடனாம்
விதலைப் பாந்தள் வினைத்தமை போலென்பார். (சுசா)

வஞ்சி கைவளை போம்வழி மற்றுமோ
ரஞ்சொ லாளை விளைவ வவளுந்தன்
னெஞ்சு போம்வழி தேடவு கேடிப்போய்த்
அஞ்சல் போக்கிநின் றுளொடு சொல்லுவார். (சுஎ)

போது சாந்தமும் பூரண கும்பமு
மாதர் தாங்குபொன் பாடம்பு காமலே
மீது நாதனை யுங்கொடு வீதிபோ
மீது மால்விடை யென்பது மெய்யென்பார். (சுஅ)

அஞ்ச லென்ற கமலமெய் யாருட்
கஞ்ச மாம்பொதுக் காட்சியைத் தம்மனை
யுஞ்ச லாட வுமக்கெமக் கென்னவே
விஞ்ச பூசல் விளைத்தனிற் பார்சிலர். (சுகூ)



அகிலுண் கோதையா ராயிர கோடியர்
துகிலு மாரமுஞ் சோர்வது கண்டுநீர்
முகிலுண் கூந்த லொருத்திமுன் னேகுவார்
நிகில நாதர்க்கு நீதியி தோவென்பார். (எ0)

பரவு மால்வரை வீதியிற் பாவைமார்
சுரத வாள்விழி வண்டினஞ் சூழ்வர
விரத யோகர் விழித்தும்பி யார்தலால்
வரதர் மேனி மதாரத்தின் மானுமே. (எக)

வேறு.

உரகர் தானமுங் கீழ்ப்பட வெண்மர்வா ழுலகமுந் திகைத்தேங்க
விரவி மாமதி புகர்குரு வாதிய ரிடங்கள்கோ ளிடமாக
விரவு கின்னரர் தந்திரர் வாழிடம் வீணையெய் திடவோங்கிப்
பரமர் மாமணப் பெருக்கொடும் பொலிந்ததாற் பனிவரை வளமூதூர்.

விந்த வானவர் வருதலாற் பவனமும் வெறுக்கையெய் திடவாணி
யந்த ணாளனுங் கணத்தொடு வருதலா லவனுலக லெரய்தப்
பைந்து ழாயனுங் கமலையு மேவலாற் பாற்கடல் சலமேவ
நந்தி நாயகன் வருதலாற் கயிலையு நனிவிளர்த் ததுமாதோ. (எங)

மேவு விஞ்சைய ருலகமென் பார்சிலர் விரிஞ்சன்வா ழுலகென்பார்
தேவ லோகமா முலகமென் பார்சிலர் சிவபுர மிதுவென்பார்
தாவி லேழுட னெழுமைப ருலகமுந் தந்ததிந் நகரென்பார்
யாவு மீன்றவ டன்னையின் றருள்பதிக் கிதுகொலோ வரிதென்பார்.

வேறு.

பூதர் சங்கமும் வானவர் சங்கமும் புவன
நாதர் சங்கமு முருத்திரர் சங்கமு நான்காம்
வேதர் சங்கமு மாமுனிக் குலத்தொடு மிடைந்த
மாதர் சங்கமா மின்னெடும் பொலிவன மறுகு. (எரு)

கொடிக ளும்பெருங் குடைகளு நிரைத்தகோ வேந்தர்
தொடிக ளுந்திரண் முடிகளு முகுத்தபொற் சுண்ணப்
பொடிகள் சிந்திட மிசலச் சேறுகால் புதைந்து
மிடிக ளுந்துடி யடிகொளுங் களிறுநி மிளிரும். (எசா)

தெருவ டங்கலாப் பெருந்திர ளாகினுஞ் செகத்தோர்
பொரு வினைப்பயன் பொருத்திடு நியதியே போல
மருவு ஞாயிலின் றிருக்கடை நெருக்குற வருவோர்
பெருமை கீழ்மையி னமைத்திடு நந்திகைப் பிரம்பு. (எஎ)

குன்று ளார்திசை வேந்தரு நாரியர் குழாமும்
வென்றி மாலய னுருத்திர கணத்துமே லவரு
மன்று ளார்மழ விடையுமா முனிவரு மல்லா
வின்று ளார்பதம் பெயர்த்திலர் மறுகெலா நிரம்பி. (எஅ)

தவமு னிக்கண மரசிலை தருப்பைநீர் தெளிப்ப
வவர்தி ருக்குல மாதர்நீ ராஞ்சன மமைப்பத்
துவச நற்குட மணிகொடி முரசுபூந் தோட்டி
கவரி தீபமா மெண்வகை மங்கலக் கலங்கள். (எகூ)

எண்கு லக்கிரி மடந்தைய ரிவைமுறை யெடுப்ப
வண்க ருப்புர தீபமோர் மேருமால் வரையிற்
பெண்கை யிற்கொடு வலஞ்செயத் தெய்வதப் பிணைக்கள்
கண்க ளிப்புற வேந்துமா லத்திகள் கருல. (அ0)

வேறு.

முருகையார் தழையா னீரான் முதுவரைத் திரிகூ டத்தி
லொருகையாற் பதம்பூ சித்த வுயர்கய கருணை னென்பா
னிருகையாங் கமலம் பற்றி விடையினின் றிழிந்து நந்தி
தருகையா லமரர் மோலி சாத்துபா துகைதாள் சாத்த. (அக)

இடம்வல மயனுமால் செங்கை பற்றிமுந் தொழிலுக் கென்று
முடைமையோன் றிடவ சுக்கள் சுவத்திக முரைப்ப தூதார்
நடைபடம் விரிப்ப வானோர் நாண்மல ரிறைப்பச் சென்றார்
வடவரை வளைத்த வள்ளல் பனிவரைக் கோயில் வாயில். (அஉ)

ஈசனே மருகா வெய்த வேழுல கின்று டன்னை
வாசமா மகவாப் பெற்று மரபெலாம் புனிதம் பெற்று
ளாசறு புனலா லன்ன லடியிணை விளக்கிச் செய்யும்
பூசனை நீரா லுள்ளும் புறத்தினும் புனிதஞ் செய்தான். (அங)



அந்நிலை கடந்து போகி யாயிரம் பவளச் செங்காற்
பொன்னின்மண் டபத்து நாப்பட் புருடரா கத்தின் வேதி
மன்னுபொற் பதும ராக மடங்கலா சனத்தின் மேவிப்
பன்னெறி யமரர் போற்றப் பரஞ்சுட ரிருந்தார் மன்னோ. (அச)

இருந்தபின் பிரமன் மாமா லிந்திர னெழிற்கூர் மாண்ட
நெருங்கம ராட கேச னுருத்திரர் முதலோர் யார்க்கு,
நெருங்குபொற் றவிசுந் தூசு நிரைத்தகம் பலமு நாதர்
தரந்தர மிருக்கை காட்டித் தடங்கணு லருளிச் செய்தார். (அரு)

பாருளார் விசும்பி னுள்ளார் பாதலத் துள்ளார் பார
மேருவா ரிமய மாதி வெற்புளார் புவன வேந்த
ராருளா ரவர்கட் கெல்லா மண்டப மமைந்த தம்மா
சேருவார்க் கெல்லா நாதர் திருவடிக் கமலம் போல. (அசு)

வேறு.

மன்றி னின்குழு நிறைதலாற் றாழ்ந்தது வடபெருந் திசையாவு
நின்ற தெக்கணம் வானுற வுயர்ந்தது நெளித்தன னுரகேசன்
றென்றி சைக்கடல் வடதிசைக் கெழுந்தது திகைத்தது வடமேரு
மென்ற னிர்க்கரம் விதிர்த்தனள் பார்மகள் வெருவின வுலகெல்லாம்.

மனிதர் மாதவ முனிவர்பா லுரைத்திட மாமுனி வரரேகிப்
புனித வானவர்க் கியம்பவா னவர்விரைஇப் போந்துபொன் னுலகாளு
நனிகொள் வாசவற் குணர்த்திட வாசவ னான்முகற் குரைசெய்ய
வினிய நான்முகன் மாதவற் குணர்த்தின னெழுந்தன ரிருவோரும்.

உவண வூர்தியுந் திசைமுகக் கடவுளு மும்பருந் திரண்டேகிப் [மற்
புவனமூன்றுமோர்பொருப்பின்மேற்படர்தலாற்புவிபொறை யாற்று
கவன மேம்கொடு வடதிசை தாழ்ந்துதெக் கணதிசை மேலாகிப்
பவன நோக்கியே தெனவுயர் கயிலையம் பரமர்பா லறிவித்தார். (அகூ)

உம்பர் யாவரு முறையிடு தலுந்திரு வுளத்திடை யருள்கூர்ந்து
கும்ப சம்பவ முனிவனைத் திருமணக் குழாத்திடைக் குறிப்பாக
வெம்பி ரான்றிருக் கடைக்கணோக்கலுமிறைஞ்சினனெழுந்தேகிச்
சம்பு நாயக சரணென நின்றுவாய் புதைத்தனன் செவிதாழ்த்து. ()

தாழ நின்றெது பணியெனப் பரவுவான் றனிமனங் களிதூங்க
வாழ்பெ ருங்கட லமுதுகுத் தெனத்திரு வாய்மலர்ந்தருள்செய்வார்
சூழ்பெ ரும்பதி னெல்வகைப் புவனமுந் தொக்கபே ரவைகாட்டி
யேழ்பெ ருங்கட லெழுபெருந் தீபமு மெடுத்துமே லிசைக்கின்றார்;

மகர வாரிதி நடுவுறை மரக்கலம் வளைந்தநா வலந்தீபம்
பகரு மாடகக் கிரியொரு பாய்மரந் துருவசக் கரம்பாயல்
சிகர வெண்குலக் கிரிகளு நங்கூரத் திசை கல்லாகு
நிகரில் பல்லுயிர்த் தொகைகளேவகைபெறநிறைத்திடும்பலபண்டம்.

மன்றல் சேர்பெரு மங்கலக் குழுவினுன் மகிதல மெனுநாவாய்
தொன்றி சைப்புற முயர்ந்திட வடதிசை சென்றுதாழ்ந் ததுபாராய்
நின்று நீள்கட லமிழ்ந்திடா தினியிலே நிறுத்துதற் கியாம்வேண்டு
மின்றி யெம்மையே யிடைவிடா துளத்தினி லிருத்திய நீவேண்டும்.

சந்தி ராதித்தர் வலம்வரு முலகெலாந் தழைத்திட மனைவாழ்வு
மிந்தி ராதியர் சுவர்க்கமு நிலைபெற விமயமீன் றருண்மாதை
மந்தி ராகமப் படிமணஞ் செயமணம் வைத்தநம் பொருட்டாக
நந்தி ராவிட முனிவநீ தென்றிசை நயப்பொடுஞ் செலவேண்டும்.()

வேறு.

சென்று நீதெக்கணபான் மெலிவகற்றித் தென்மலைக்கே செறிந்து வாழ்தி, துன்றுகதிர் முதல்வானோர் நெறிசெலுத்தி மேருவில்வாழ் அருவன் போல, வென்றுபரம் பரனருள வேருவின் னைப்பமென விறைஞ்சி யேத்தி, யொன்றுதமிழ்க் குறுமுனிவ னிரண்டுவரம் வேட்டருளா இணர்த்து கின்றான். (கரு)

முன்னதுநீ யிமயவரைச் செல்விதனை மணம்புரியு முறைமை காணப், பின்னதுநின் றிருநடனங் காணவெறு மாசையுறைற் பெரிது காலம், பொன்வசலத் திருந்துதவ மியற்றியொரு காட்சிபெறப் போந்தே னிப்பா, லின்னமுமொன் றதாக விரண்டுமெனக் கெய்திடு நா ளெந்நா ளென்றான். (கசு)

பனகவரை நானுடையார் குறுமுனிபா லருள்கூர்ந்துபரிவா[டி னெக்கிக், கனகவரை யாயிரயாண் டெழுபல ஞாறுண்டிற் காமக்கோட்



சனகவரை கொடுக்குமந்தத் தவப்பயனை யோராண்டு தனிலேநல்கு மனகவரைத் தெக்கணபாற் கேதார முதலுளவென் றருளிப் பின்னும். (கஎ)

தென்பாலி லொருதலத்துக் கோடிநா ளுதவுபலன் சிறிது நாளின், முன்பாகக் கொடுப்பதொரு தலமுளதங் கதுபிறர்க்குமொழி யோநம்பா,லன்பாக வினவுமவர்க் கருள்செய்வோ மெனவுரைப்ப வருளாயென்று, மின்பாவுஞ் சடைமுனிவன் பாதமலர் சூடுதலும் விளம்பாநின்றார். (கஅ)

பொன்மலைக்குங் கயிலையெனும் வடமலைக்குந் தென்மலைநின் பொதிகை வாசத், தென்மலைக்கு வடமலைநந் திரிகூடத் திருமலைமேற் செம்பொன் னாட்டு, மின்மலைக்கு மணிகொழிக்கும் வடவருவிக் குற்றாலம் விபுல மீன்ற, நின்மலைக்கு மெமக்குமொரு பொதுத்தான மூவருக்கு நியமத் தானம். (கக)

புண்டரிகத் தயனுரைப்ப வத்தலத்துப் புரந்தரா தியர்கள்போந்து, மண்டுபெருந் தவம்புரிந்து மாருத பாதகங்கண் மாற்றுந் தானம், விண்டலத்தோர் மகிதலத்தோர் வினைதீர்க்குங் கங்கைவினை தீர்க்குந் தானந், தண்டமிழ்ச்சொன் மாமுனியே தருமமொன்று கோடியெனத் தழைக்குந் தானம். (௨00)

செல்வம்வேண் டினார்க்கருளத் திருநமைக்காத் திருப்பதனாற் செங்கண் மாலுங், கல்விவேண் டினார்க்கருளக் கலைவாணி யுறைதலினாற் கமலத் தோனும், வெல்விசையங் கொடுப்பதற்குக்கொற்றவையு மகப்பொலிவால் வேள்வி வேந்து, நல்வடுகச் செம்மலுங்காத் துறைதானந் தமிழ்ச்சுருதி நடிக்குந் தானம். (௨0௧)

முத்தகைய ரமகளிர் முலைத்தடத்து வானவர்கள் முயங்குந் தோறு, முத்திரிகந் துயல்வருவா னவர்புயத்தி லவர்முலைக்கோ டுழக்குந் தோறு, மித்தலத்தின் மகிமையெனக் களிகூர்ந்து திசைநோக்கி யிறைஞ்சுந் தானஞ், சித்தர்சா ரதரியக்கர் கின்னரர்கிம் புருடர் தவஞ் செய்யுந் தானம். (௨0௨)

பந்தாடல் கழங்காடல் கற்பகப்பூம் பீந்தரிடைப் பசும்பொன்னூசல்
வந்தாடல் கங்கைநதி விளையாடல் பூங்காவின் மலர்கொய் தாட
லிந்தாடன் முகமலர விந்திரனோ டாடுதொறு மிந்தி ராணி
சந்தாடன் முலைதடிப்ப விதழ்துடிப்பப் பாடியசிர் தழைக்குந் தானம்.

வேறு.

கலைப்பெருங் கடல்க ளெல்லாங் கருத்தினி லடக்கிக் கைபி
லலைக்கட லடக்கி நம்பா லருட்பெருங் கடலி லாடு
நிலைக்கட முனிவ கேண்மோ நின்மலப் பரையும் யாமுங்
கொலைக்கட கரிசெய் பூசை கொண்டினி திருக்குந் தானம். ()

அந்நகர்க் கணியா யூழி யாழிதாங் கெயிலா யோங்கு
முன்னதத் திரிகூ டத்தி னுத்தர பாக மாக
நன்னர்சித் திரப்பூங் கங்கை நமதரு ளாகத் தோன்றி
முன்னின ரெவர்க்கும் பாவ மோசனஞ் செய்யா நிற்கும். ()

தேனமர் திரிகூ டத்திற் சித்திர நதிதோய் வார்க்குத்
தானமுந் தவமும் வேறு தருமமுஞ் செய்ய வேண்டா
ஞானமும் புகழுங் கல்வி நலங்களும் பொருளு மெய்தும்
வானவர் பதமும் வேண்டும் வரங்களுங் கொடுக்கு மாதோ. ()

உத்தர முகம தாக வுயர்திரி கூடந் தோன்றுஞ்
சித்திர கங்கை நம்பாற் றிருமணங் காண வேண்டி
பித்தலை போந்த தங்க ளைய்துதற் கருளு கின்றோ
மதலை யந்தி ராதி யருந்தவம் புரிதி யென்று. (கOஎ)

வேறு.

வேடனொரு பன்றிதொடர்ந் தொருதுறையில் வீழ்ந்துபெற்ற வீடு பேறுந், தேடருமெய்த் தலமூர்த்தி திரிகூட வடவருவித் தீர்த்தஞ் சத்தி, பீடமதி மையும்வேதக் குறும்பலா மான்மியமும் பிறவு நாளு, மாடல்பெறுஞ் சிற்பொதுவி னதிசயமுந் திருவாக்கா லருளிச் செய்து. (கOஅ)

ஓதியபே ருலகனைத்து மொடுக்குமுறை யொடுங்கியநா ளொடுங்கா தாகி, நீதிபெற நமதருளா னின்றபுடார்ச் சுனபுரத்து நின்றி யாமே, சேர்திபெறு திருமுகமா யிரம்படைத்துந் திரும்புவனத் தொகைக ளெல்லாம், போதிலுறை யயனுதி வகுத்தருளித் திருமா லாய்ப் புரக்கின் றேமால். (கOகூ)

மாலாகி யிருக்குநமைப் பணிந்துசிவ வடிவாக்கி மகுட மென்னு
நூலாதி யாகமத்தாற் பூசைசெய்து நவனுமனைக் கோலங் காண்டி.
மேலான திரிகூடச் சாரலிடை யைந்நூறு வேள்வி செய்து
நாலான மறைபரவு நம்பெருஞ்சித் திரசபைக்கே நடனங் காண்டி. ()

மூந்தமலை யொடுநாமு மினிதுறையுங் குற்றால முறையிற் போற்றிச், சந்தமலைத் தடங்கோட்டி ஆறைதியென வருளுநமுந் தம்பிரானை, வுந்தமலைக் கடலடக்கு மலர்க்கையாற் பரவிநின்று வரம்வே றொன்று, விந்தமலை வாதாவிக் கிடந்துடிப்ப வலம்புரிந்துவேண்டிப் பின்னும். (ககக)

தொழுதுபுனல் வேண்டுதலும் பொன்னிநதி சென்னியுறீத் தொடையார் நல்க, வொழுகுதிறைப் பெண்டகைமா ராண்டகைபின் றனித்தேக னிர்த்தோ வென்றான், கெழுதகைநம் பன்பனிவ னிருவினைவென் றவனெனவே கிளப்ப மீளும், பொழுதுகுறித் தருளு கெனப் புலியிலவன் கைகாட்டும் பொழுதே யென்றார். (ககஉ)

நம்பரருள் கொண்டுவிடை கொண்டேகித் தென்புவியி னனைய கண்டு மாற்றிக், கும்பமுனி தன்பொதியத் தென்பொதிய மாமலைமேற் குறுகுங் காலை, யும்பர்வட திசைபோலத் தென்றிசையு மொத்ததுகோ வனைத்தா லோர்நா, ளெம்பெருமா னமர்ந்தி யுவந்தேழு மொருதுலையி னிருதட் டேபோல். (ககங)

வேறு.

அருநிலம்புகழ் கோமற நிற்றவி [illegible]ரெல்லாம்
வருகபென மாலிம யத்தை வனைந்தி யார்த்தா
திருமஞ்சுநீ ஞெறியை யோ[illegible] நின்ற பொன்னைத்
திருமங்கையர் பொற்பினை [illegible] செய்வ நாறுர். (ககச)

அகிலாண்டமு மீன்றமு முக்கமு [illegible]
திகழ்பெரிதி லக்கெமில் செய்ய[illegible] செய்ய [illegible]

விகமேனுறு பேதைமை மாத ரியற்கை யாலோ
சகமேலனா வுக்கள வாமவ டன்மை தேர்ந்தோ. (ககரு)

ஆலத்தை யவர்க்கமு தாக்கி யகண்ட மெல்லாஞ்
சாலப்பெரு மங்கல மாக்கிய தைய லாட்குக்
கோலத்திரு மேனியை மங்கலக் கோலஞ் செய்யக்
காலத்தின்முன் னெண்ணிய பூசைக் கடன்க மைந்தாள். (ககசு)

கங்கைப்புன லாட்டி மணிக்கலை நீறு சாத்தி
யங்கைத்திரு மாமலர் செய்த வருந்த வத்தான்
மங்கைக்கணி செய்வது போன்மலர் மாம டந்தை
செங்கைப்பல செம்பொ னணிக்கணி செய்வ தானாள். (ககஎ)

காராடு கருங்குழ லாகிய கங்குன் மீதே
தாராகண மொய்த்த தெனப்பல தார்கள் சூட்டி
யேராடிய கொண்டையின் மின்றளை யிட்ட தேபோற்
சீராடு தலைப்பணி யுத்தி திருத்தி னாளே. (ககஅ)

கருமைக்குழல் விண்டெளி தண்டெளி காட்டு மாபோற்
பருமுத்தணி தொங்க லசைத்தொரு பட்டம் விக்கி
யொருமைப்பிறை மேலிரு பானு வுதித்தன் மான
விருமைத்தில தந்திரு நெற்றியி லிட்டு மாதோ. (கக௯)

குமிழ்முத்த மணித்தனள் கொவ்வை முகிழ்க்கு முத்தி
னமரத்தவ ரூசியி னிற்குமோ ராய மேபோற்
கமழ்பொற்குழை யிற்குழை சாத்தினள் கால நீல
மூமிழ்கட்கட லிற்புடை பாய்சுற வொத்த வாவ. (கஉ0)

வயிரப்பணி தங்கிய கொப்பு வயக்கு கின்றுள்
பயில்பொற்குழை யூடுரு விக்குழல் பாய்கண் வாளி
கயிலைத்தனி நாயகர் சிந்தை கவற்று மென்றே
வெயிலைப்பொரு வாளி தனைப்பொரு மென்று தாளே. (கஉக)

வருமங்கல நாணணி மல்கு வளம்பு ரிக்கே
திருமங்கல நாணணி தாங்கம தாணி சேர்த்தித்



தருமங்கல மாண தடங்கை தனைத்தி னைஞ்சும்
பெருமங்கல மார்கட கஞ்சரி சங்கு பெய்தாள். (கஉஉ)

மதர்வைத்த விழிப்பொரு காழை வலஞ்செய் கார்போ
லுதிக்கெழு நஞ்செனை வஞ்சன மொன்று தீட்டி
விதுவைத்தன வெள்ளி வளைக்கு முகிழ்த்த கஞ்சங்
கதிர்வைத்து விரித்தன பொற்கழை பாழி யிட்டாள். (கஉ௩)

எழுமுத்தல மீன்றவை முற்றுவ தின்றி முற்றுஞ்
செழுமுத்த முலைத்தலை முக்கணர் செவ்வி யெய்தக்
கெழுமுத்தவ மெய்தினை யென்று கிளைத்து வைம்பூண்
முழுமுத்த மிடற்கிலை முத்தணி யார மிட்டாள். (கஉ௪)

பொருகுன்றின் முளைத்த கரும்பொடி வல்லி போல
மீருகுஞ்சொலில் குங்கும மான்மத மொண்டு தீட்டிப்
பருமம்பெரு மேகலை தந்து பனிக்க வாய
மருமென்கலை சுற்றி மருங்குலை வாட்டி நின்றாள். (கஉ௫)

போதுங்கல னுந்திரு மேனி பொதிந்து நின்றீ
ரேதின்று செயுங்கொன் மருங்கென வேங்கு மாபோற்
பாதங்கள் புலம்பு சிலம்பொடு பாத சாலம்
பீதம்பொலி கிண்கிணி தண்டை யிணர்த்தி யிட்டாள். (கஉ௬)

வேறு.

பொருப்பினுக் கரச னீன்ற பூமலர்க் கொம்ப னாளை
யருத்தியால் வலங்கொண் டேகி யணிமணிக் காப்புச் சாத்திக்
கருப்புர தீபஞ் சுற்றிக் கண்ணெச்சில் கழித்து நின்று
திருப்பதம் பரவி முன்னே திருப்பதம் பெற்ற செல்வி. (கஉ௭)

முனிவர ரெழுவர் போந்து முகூர்த்தம்வந் துற்ற வாற்றுப்
பனிவரை யரசை நோக்கிப் பாவையைக் கொணர்வா யென்ன
வனியவ னருளாற் போந்து வளர்வதூக் குலத்து மாதர்
புனிதநா யகிமுன் கூறப் பெருக்கென வெழுந்தாண் மன்றோ. ()

செல்வியு மதனை யெண்ணி நேயமு மெழுந்து போற்றி
மெல்விரற் றளிர்க்கை யேந்த வியன்வல மிடப்பால் பற்றி

செல்விரி காலை மாலை யேத்துவார் தமக்கே செல்வங்
கல்வியுங் கதியு நல்குங் கரதலத் தியற்கை காட்டி. (௧௨௯)

அலத்தக முறுத்து தாளி லயிராணி மலர்க வேப்
புலப்பல சிலம்பு தண்டை பயப்பயப் பயவென் றார்ப்பத்
திலத்தமை தூசு தாங்கச் செயமகண் மருங்கு காப்ப
நலத்தருங் கங்கை யாதி நங்கையர் கவரி காட்ட. (௧௩௦)

உருப்பசி களாஞ்சி தாங்க யோகினி யடைப்பை யேந்த
விருப்புறு நடைப்பா வாடை மேனகை விரிப்ப யாண்டும்
பருப்பதக் குலத்து மாதர் பனித்துளி தெறிப்ப வேதங்
திருப்பலாண் டிசைப்பத் தெய்வச் சிலதியர் சுண்ணந் தூவ. (௧௩௧)

கின்னர மகளிர் பாடக் கிரியர மகளிர் வாழ்த்தப்
பன்னகர் குலத்து மாதர் பன்மணி விளக்க மேந்த
வன்னமென் பெடையு நாண வணிமலாக் கொம்பர் நாப்பட் [றான்.
பொன்னிளங் கொடிபோ லொல்கிப் பொருப்பிளம் பிடிபோற் சென்

குலத்திரள் கொங்கை காட்டக் குணத்திரள் வடிவு காட்ட
நலத்திரள் சுமந்து தொய்யு நான்மலர்க் கொம்பு போல
நிலத்திடை யிறைஞ்சி யேகி நீளிக் கவிசி லெம்மான்
வலப்புறத் திருந்தாள் வல்லி மதியுடன் விதிசேர்ந் தென்ன. (௧௩௩)

மண்பெற்றார் சுவர்க்கம் பெற்றார் வரைபெற்றார் திசைகள் பெற்றார்
விண்பெற்றார் புவன மூன்று மிகப்பெற்றார் மகப்பெற் றாரிற்
பெண்பெற்றார்க் கெய்தாப் பேறு பெற்றன னிமய வேந்தன்
கண்பெற்ற றன்று பெற்றார் காட்சியாற் பெறும்பே றெல்லாம். ()

இன்னண நிகழு மெல்லை யிமயவெற் பரசி மேனை
மின்னனார் தசும்பி லேந்தும் விசும்புதோய் கங்கை நீராற்
சின்னவெண் பிறைசேர் மோலித் தேவதேவனாம் பெருமான் கஞ்சப்
பொன்னடி விளக்கிச் சாந்தாற் பூவினாற் பூசை செய்தாள். (௧௩௫)

அந்நிலை யிமய வேந்த னருந்தவக் கொழுந்தின் செங்கைக்
கூன்னியும் புயத்தை முக்கட் கருணையங் கடலின் பாணி



மனனுற வமைத்துப் போற்றி மங்கலச் சொல்லால் வாழ்த்திப்
பன்னெடும் புவன வாழ்க்கைப் பயிர்தழைத் திடநீர் வார்த்தான். ()

முழங்கின முரசு பேரி முழங்கின துடிது டாரி
முழங்கின சுருதி வேத முழங்கின பணில நாத
முழங்கின முனிவ ராசி முழங்கின நடன கீத
முழங்கின குரவை யோதை முழங்கின திசைக டோறும். (௧௩௭)

ஆடினர் பவுரி மேன்மே லார்த்தனர் சிரமேற் செங்கை
சூடின ரனந்தா னந்தத் துறைபடிந் தாடி யாடிப்
பாடினர் பரமகீதம் பரவின ரழியா வின்பந்
தேடின ரகில நாதன் றிருமணங் கண்டோ ரெல்லாம். (௧௩௮)

தாமரை யுழவன் வேதச் சடங்கெலுந் திரளோர் பூட்டி
யோமகன் னிலஞ்செய் யாக வுயர்திர வியங்கள் வித்திக்
காமரு தேனு நெய்யாங் கமழ்புனல் வார்ப்ப வார்ப்ப
மாமகப் பயிராஞ் செந்தீ வலஞ்சுழித் தெழுந்த தன்றே. (௧௩௯)

குணின்முர சியம்ப வொற்றை வலம்புரி குளிற வாணி
துணைவனே சடங்கு செய்யச் சுருதிமங் கலநாண் சாத்தி
யிணையிலி முக்க ணெம்மா னிமயமான் மலர்க்கை பற்றி
மணவறை கோலங் காட்டி வானவர் வாழ்த்த நின்றார். (௧௪௦)

மிலத்துறை வேந்த னோரா யிரப்பெருந் தீப மேந்த
மலர்த்திரு மகள்கொண் டாட வாணிமங் கலங்கள் பாடக்
குலக்கிரி மகள்பின் னேகக் கொழுந்தழல் வலங்கொண் டேகி
நலத்தகு பொரிக ளேவி நயம்பெறு வேள்வி யாற்றி. (௧௪௧)

செப்பொடு பணைத்த கொங்கை திருப்புயங் காணுந் தோறுங் [டக்
கொப்பொடும் பொருவாட் கண்ணாள் குலத்தொடு பணைப்புக் காட்
கைப்பிடித் தருளுங் கையாற் கால்பிடித் தம்மி சேர்த்தி
மெய்ப்புகழ் வசிட்டன் றேவி விண்ணிடைப் பரவக் காட்டி. (௧௪௨)

மருமலர் விதான வெள்ளி மண்டபங் கடந்துள் போகித்
திருமண வறையின் மேவித் தேவியுந் தாமு மாக

வருண்மணக் கோலக் காட்சி யருளியீற் றிருந்தார் மன்றே
கருதுவார் கருதும் வண்ணங் காட்சிதந் தருளும் வள்ளல். (கசங)

வருக்கையின் சுளையும் பாலும் வாழைமென் கனியும் பாகு
மருந்திமாம் பழமுந் தேனு மமிழ்தெனத் திருத்தி யன்பாற்
பருப்பதத் திறைவன் செம்பொற் பாசனத் தமைப்ப நாதர்
திருக்கைதோட் டுவந்தோ மென்றார் செகமெலா நிறைந்த தம்மா. ()

வாசனைச் சுகந்தம் பன்னீர் மணங்கெழு தெய்வச் சாந்த
மீசனெம் பெருமான் முன்ன ரியற்றின னுவப்பப் பின்னர்ப்
பாசன நிமல சேடம் பரிசனத் தவர்க ளேந்தத்
தேசன் றருளா லுய்த்தான் றிருமணக் குழுவுக் கெல்லாம். (கசரு)

நிமலர்பாற் கழித்த சேட நின்மல வுணவைத் தேவ
ரமரர்கோன் முனிவர் பூத ருருத்திர ரயன்மா லாதி
யிமவரைக் கிறைவன் மேனை யேனைய சுற்றத் தாருந்
திமிலமுற் றருந்திச் சென்னி தெளித்தனர் களித்தார் மன்றே. ()

சொல்லற நின்றார் வீடுந் துறவறத் திருந்தார் பேறு
மில்லறம் புரிவார் தம்மா லியைவதா மிதுவே யார்க்கு
நல்லற மெனவே வானு ஞாலமுந் தெளியக் காட்டி
மெல்லற லனைய கூந்தன் மணந்துவீற் றிருந்தா னெங்கோன். (கசஎ)

மாமனு ரபரவத் தெய்வ மலையாட்டி மகிழ வைகிச்
சோமனும் புனைந்த வேணித் துங்கனு மமரர் வேண்டக்
காமனு ராவி மீட்டுக் கவுரியுந் தாமு மாகப்
பூமனு மனனும் போற்றக் கயிலையம் பொருப்பிற் போந்தார். (கசஅ)

திருப்பொலி மழுவா ளங்கைச் சிவபிரான் கயிலை மேவி
மருப்பொலி குழலுந் தாமு மடங்கலா சனத்து வைகி
யுருத்திர ரயன்மா லாதி யும்பர்மா முனிவர்க் கெல்லாம்
விருப்பொடு சிறப்பு நல்கி விடைகொடுத் தருளப் போந்தார். (கசகூ)

கயிலைமால் வரையின் மேய கண்ணுதற் கருணை மேகந்
தயிலையின் றெருபான் மேவித் தண்ணளி பொழிதலாலே



பயில்வன வூர்வ திற்ப பறப்பன நடப்ப வாதி
யுயிரெலாம் பயிரா யீரே ழுலகெலாந் தழைத்த வாறே. (கரு௦)

மவுனநான் மவுன முற்றார் மடந்தையை மணந்த ஞான்றே
புவனமேல் விண்மேன் மண்மேற் பாந்தபா தலமேன் மற்றைப்
புவனமே லுள்ளோ ரெல்லாம் புவனபோ கங்கள் பெற்றார்
சிவனது செயலே யல்லாற் செயலுண்டோ வுலகுக் கெல்லாம். ()

சூரினு லலக்க ணெய்தித் துயர்பெரி தாற்று ராகி
மேருவின் மறைந்து வைகும் விரிஞ்சன்மா முதலாம் விண்ணோர்
காரியல் கண்டத் தண்ணல் கயிலையின் முறையிட் டார்க்கு
நேரிழை யொருபால் வைகு நின்மலன் கருணை கூர்ந்து. (கருஉ)

முந்திரா சியமு மாக முவிரு முகமாய்த் தோன்றிச்
செந்தழற் பொறிக ளாறு தந்தனர் தேவ ருய்ய
வந்தமாப் பொறியைக் காலு மங்கியுங் கங்கை சேர்ப்ப
வந்துவா னதிகொண் டேகிச் சரவணத் துய்த்த தன்றே. (கருங)

இமயமேற் சரவணப்பூந் தடத்தினி லெய்தி வாசக்
கமலமேற் பொறிக ளாறுங் கண்ணுத லருளி னாலே
யமர்தரு குழவி யாறா யாறுமீன் முலைப்பா லுண்டு
தமரநீ ருலகும் வானுந் தழைத்திட வளருங் காலை. (கருச)

எந்தையா ருடன்பூ வாவி யெய்தினு ளிமயச் செல்வி
மைந்தரென் றெடுப்ப வாறு வடிவமும் படிவ மொன்று
யந்தமார் முகங்க ளாறு மம்பிகை முலைப்பா லுண்டு
கந்தவே ளெனப்பேர் கொண்டு கயிலையின் வளர்ந்தான் மன்றே. ()

அன்னவ னண்ட கூட மலைத்தெழு தகர்மேற் றுவி
நன்னவ வீரர் சூழ மேடமேன் ஞாயி றென்னப்
பொன்னமர் பொருப்பும் பொன்னாட் டிறைவனும் புத்தேள் யாரும்
வென்றிடக் ககிக டாத்தி விதிசிறை யமைத்து மாற்றி. (கருசு)

மிறைபுரி கொடுஞ்சூ ரிட்ட விண்ணவர் சிறையை மீட்பான்
முறையிடு மகவா னுதி முதல்வர்பா லிருந்தி முக்கட்

கதைமிடற் றண்ணல் லேவக் கண்களா யிரத்தோ னுள
சிறைமயி லூர்ந்து செந்திச் செல்வனுஞ் சேவ லேந்தி. (கருஎ)

உருத்திரர் கொடுத்த தானை பதிணொரு கரத்து மோங்க
வருத்தியா லகில நாத னருளும்வே லொருகை தாங்கிக்
கிருத்திமத் தானை வெள்ளங் கிளர்தரத் துணைவர் சூழ
மருத்துவர் முதலோர் நோய்க்கு மருத்துவ னெனவே போந்து. ()

வன்கடல் சுவற்றிக் குன்ற மெறிந்துவல் லசுரர் சேனைத்
தென்கட லினைத்துஞ் செவ்வேல் வடவனற் கீந்து சூத
நன்கடல் புரிந்து வீழ்த்து நனிகட வுளரை மீட்டுப்
பின்கடன் மிசையோர் பானுப் பிறையுட னுதித்தா லென்ன. ()

மரகதக் கலாப துங்க மணியணி விழிம யூரக்
குரகத முகைத்து வெண்பாற் குக்குடத் துவச மேந்திச்
சுரர்குழாத் தேகிச் செந்தூர்த் துறையெழீஇத் திரிகூ டத்துத்
தரணிபி டத்து நீங்காத் தந்தையார் பாதம் போற்றி. (கக0)

புரந்தரன் மகளை வெற்பின் புள்ளிமான் மகளை வேட்டுப்
பரங்கிரி தணியன் மேவிப் பயவருன் றிடங்கோ ளூடி
வரங்கெழு கயிலை நண்ணிக் கந்தவெற் புறைதன் மான
வரன்றிரி கூடம் போற்றி யிலஞ்சியி லமர்ந்தா னையன். (ககக)

தேவர்தந் தேவர் தேவன் றிருமணப் பொலிவீ தென்று
தாபதர்க் குணர்த்தப் பின்னுந் தமிழ்முனி தென்பாற் சென்று
மேவரும் புதுமை யாவுந் தொகையுற விளம்பா நின்று
யார்வலின் விரிவா யெங்கட் கருளென வறைவான் சூதன். (ககஉ)

## உ- திருமணச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - உகச.

---

## மூன்றாவது:— திருமால் சிவபிரானான சருக்கம்.

ஐந்துநாற் றிரட்டியுட னிருநா லண்ட மரசுசெயுஞ் சூர்மாப்ப
ப வடல்வே லேந்திச், செந்தின்மா நகரில்வரு குமர வேட்குச் செங்
கண்மா லயன்றேவர் சபையுளி னூடே, விந்தைவான் சுரர்குருவாய்



புதைத்துப் போற்றி விண்ணப்பஞ் செய்ததெனத் திருக்குற் றாலத்
தெந்தைமால் வடிவுசிவ வடிவ மாக விருந்தருளு மகிமையெடுத்
திசைப்ப தானுன். (க)

கற்றாரும் பலகலைநூற் கவிவல் லாருங் கதிபுகன்முத் தமிழுவ
டையீர் கயிலைச் சாரன், மூற்றுவி னுயர்ந்தகுறும் பலவின் மேவு
முதலைப்போ லுயர்கருணை முதலு மாதிக், குற்றாலம் போலுயர்ந்த
தலமுஞ் சைவக் குறுமுனிபோன் மாதவனுந் திரிகூ டத்து, வற்
றுத வடவருவி நிகர்க்குந் தெய்வ வரைநதியுந் திரிபுவன வரையி
லுண்டோ. (உ)

மூவுலகும் பனிவரைமேன் மொய்த்த தாலே முதியதிசை தெ
ற்குயர்ந்து வடபாற் றாழ்ந்த, பூவுலகின் பெருங்கோட்டந் தவிர்க்க
வேண்டிப் புரந்தரன்மா லயன்முதலாம் வானோர் சங்கம், யாவுமெதி
ர் நிற்கவுநீ போதா யென்ன வெம்பிரான் சிறைமவுலித் தம்பி ரானுந்
தேவன்பிரான் றிருவாக்கா லருளிச் செய்தான் சிறியதொரு குறுமு
னிவன் பெருமை யம்மா. (ங)

திரிகூட விரித்ததமிழ் முனிக்கு நாதன் மிக்கபுடார்ச் சுனபுரத்
து மாலா மெம்மைப், புரிகூட முடித்தசடைப் பரம னுக்கிப் பூசை
செய்து வதுவைநடங் காண்பா யென்ன, வரிகூட வயன்றேடிக் கா
ணொணுத வண்ணலார் திருவாக்கா லருளிச் செய்த, திரிகூட வரை
நோக்கிச் சிந்தை கூடச் செய்தவமுங் கைகூடச் செல்லு கின்றான்.

வேறு.

வரதனரு ளாலிமய மலைகடந்து கலைநடந்த மலைய யோகி, பரத
னுறை கருமகண்ட மொன்பதுபா கத்திலெண்மர் பாக நீக்கி, விரத
நெறிக் குமரிகண்ட மாயிரம்யோ சனைக்குள்வந்து விசையத் தண்
டங், கரதலத்து மணிவிளக்காக் கவுஞ்சவரை யிருட்படலங் கடந்து
போகி. (ரு)

எந்தைகும ரப்பெருமா னேவுநெடும் படைவேலா லிமைப்பி னீருச்
சிந்திடுதிலெனச்சாபம்வரைக்கமைத்துக்குடுமிதொறுந்தெய்வச்சாபக்
கந்தரஞ்சேர் கேதார வரையணுகிச் சிவபெருமான் கழல்கள் போற்றி
மைந்தனுந்தன் றேவியும்வாழ் விதர்ப்பநாட டணைந்துவளர்காசி மன்னி.

மேருவுடன் பணைப்பாகி யாழ்முனிவன் புரைப்பதனால் விந்த
ஞ் சோம, சூரியரை மடுத்துலகி னெறிதடுத்துக் குறுமுனியுந் தான்
ஞ தோங்கி, நேரியர்க்கும் பூரியர்க்கு மூன்றிரண்டோன் றெனக்கே த
ரு நெறியுந் தீர்த்துச், சிரியரல் லார்க்குவந்த செல்வம்போ லிறுமாந்து
திமிர்த்த தன்றே. (௭)

கரவிந்த வரைவளர்ந்த தெவ்வளவோ வவ்வளவுங் கையை நீட்டி
யரவிந்த மசலமிசைக் கவித்ததெனக் குடுமிபற்றி யவனி தாழ்ப்பத்
தரவிந்த ருறைமனத்தா யுய்வதருளென்று சென்னி தாழ்த்த தம்மா
வரவிந்த முறையெனமேல வர்முன்னே யறிவர்வந்தா லறிவர் கீழோர்.

செம்புவரை தனிமேலகி வெள்ளிவரைக் கிவ்வழிநான் செல்லுங்
காறும், வெம்புவரைக் குடும்பபடிந் திவ்வாறு கிடத்தியென விளம்பி
யார்திச், சம்புவரை நாண்டுகிலாஞ் சாதியிரு காதிகள்சஞ் சரிக்குங்
கான்போய், நம்புவரைச் சலம்வருத்தும் வில்லவன்வா தாவியென நன்
னி ஞைல். (௯)

உருத்திரா வணந்தனக்கு வருவதுணர் நான்வருவ துணர்ந்து மே
னென், விருத்திரா சுரனெனுநம் மேலோனை முடிப்பதற்கா வேலை
யுண்ட, குருத்திரா விடமுனியை வெல்லவிது தருணமெனக் குறிப்பி
னோர்ந்து, உருத்திரா வணமிருண்ட வில்வலன்மெய்த் தவவேடங்
கரவிற் பூண்டான். (௰)

குறுமுனிமுன் போய்விருந்து விளம்பியொரு சாலைபுய்த்
துக் குறைதி ரன்ன, மறுமுனிதன் மெலத்தமைத்துக் கருணைவா
தாவிதனை மறிசெய் தாக்கி, புறுமுனிவ் விருப்பகன்று ஹுண்டதற்பி
னியன்வரீத்தா லொருகாற் கூவக், குறுமுனிமுன் கறியானென் மறி
யாகி முனியுதரங் கலக்கா நின்றான். (௧௧)

அன்னவன்வஞ் சனையோர்ந்து பரமன்வரத் தான்முனிவ னக
ங்கை யாலே, தன்னகடு தைவராஞ் தலைவனுண்ட காளமெனச் சமி
த்தான் பின்னேனென், முன்னவன்வெஞ் செருப்பயில முன்னுதலுந்
தருப்பையினென் முடித்து விட்டித், தன்னுபுனற் கோதமியிற் படி
ந்தாடி மல்லிகார்ச் சுனமும் போற்றி. (௧௨)



ஆனதுங்க பத்திரிநன் னதிபடிந்து காஞ்சிநக ரருணை போற்றி
ஞானதுங்கர் முத்தாறு திருமுதுகுன் றமுப்பாவி நயப்பா லேகும்
பினகும்ப சம்பவனை வில்வலன்வா தாவிகொடும் பிரமச் சாயை
கானமெங்குந் தொடர்ந்துதொடர்ந் தலைத்ததா லாறலைக்குங் கள்வர்போல.

அங்கிருந்து மறைச்சிறுவ ரிருவர்போ லுருவெடுத்து மடுக்கு
நீங்கு, மெங்கிருந்து மிகல்விளைக்கும் பழிகுறிக்கும் வழிமறிக்கு மி
வவக டீர்ப்பான், கொங்கிருந்து சிவபரனைக் குறுமுனிபூ சனைபுரிக்
தான் குலிச வேந்தன், பொங்கிருந்தன் காவிரிக்காப் புகலிதனிற்
கயமுகனைப் பூசை செய்வான். (௧௪)

வேறு.

ஆவினை லேந்து பலோதக மைந்தோ டைவகைத் திரவிய மைவ
கை யமிர்த, காவி மதங்கமழ் சாந்தமு மாட்டி நற்கலை பூண்மலர் மா
லை யணிந்து, தூவிய பாலித பாயச மன்னஞ் சுவைதரு மோதகம்
வடையவல் கன்னல், மேவிய பண்ணிய முப்பழ மப்ப மிக்கதி வே
தன் மொக்கவ மைத்து. (௧௫)

தூபமு டன்பல தீப மியற்றிச் சோதி தரும்படி மக்கல மேந்
தி, மாபல சந்திர சாமர மேந்தி மறைபயி லாயிர நாமமு மோதித்
தாபன மந்திர மோம மியற்றிச் சயசய சயவென வானவர் வாழ்த்
தத், தீபமெ னுங்கய மாமுக வாழ்வைச் செஞ்ச ரணிற்சர ணென்று
பணிந்தான். (௧௬)

படலையின் மலரறு கணிபவ சரணம் பனிவரை மகள்பெறு
தனிமுதல் சரண, நடமிடு பரிபுர பதயுக சரண நதிபதி நிதிபதி
யதிபதி சரணங், கடன்மடை யெனவரு மதமலை சரணங் கயமுக
நிசிசரன் வயவரி சரணங், குடநிகர் தடவயி றுடையவ சரணங்
குணதர சிவசுத கணபதி சரணம். (௧௭)

முடிப்படி தெரிவரு முதியவ சரண முறைதெரி மறையவ ரிறை
யவ சரணம், வடிவினி லுயரிய பெரியவ சரணம் வலவையை மரு
விய புயதர சரண, நெடியவன் விழிதரு நெடியவ சரண நினைபவர்
பவமற நினைபவ சரண, மடியவர் வினைகெட வருள்பவ சரண மர
கர சிவசுத கணபதி சரணம். (௧௮)

வேறு.

எனவருச் சனைசெய் வான்முன் னெழிற்கர மைந்து நான்கு
கனவரைப் புயமுந் தோன்றக் கடகரி முகத்தெங் கோமான்
றினகரோ தயம்போல் வந்தான் றேவர்கோன் விழிக ளெல்லாம்
வனருகக் காடு போல மலர்ந்தனன் வணங்கி வீழ்ந்தான். (௧௯)

பாகசா தனனை யன்பா லங்குச பாசச் செங்கை
யாகுவா கனத்து முக்க ணைங்கரத் தானை நோக்கி
யோகையா லுனது பூசை தோத்திர முவந்தோம் வேண்டும்
வாகைசேர் வரங்கள் கேண்மோ வென்னலும் வணங்கி வாழ்த்தி. ()

பந்தன முலையாள் பாகப் பரன்றிருப் பள்ளித் தாம
நந்தன வனங்கள் வாடி நலிந்தன தழைக்கும் வண்ணஞ்
சந்தன வனங்கள் சூழுந் தனிவரை முனிவன் கைமேல்
வந்தனள் பொன்னி யீண்டு வரப்பணித் தருள்வா யென்றான். (௨௧)

காண்டகை யண்டங் காக்கை யெனக்கய முகத்தோன் செல்லச்
சேண்டகை யண்டங் காக்கைத் தேவனென் றுணரான் கும்பன்
கூண்டகை நீட்டி யோச்சக் கும்பநீர் துண்டத் தாலே
யாண்டகை கவிழ்ப்பப் பொன்னி யருள்வழிப் பார்மேற் புக்காள். ()

புக்கபா ரிடந்து பாரப் பொருப்பினை யெடுத்து வாரிச்
சக்கரஞ் சங்க மேந்தித் தடம்பணை மருத முந்தி
நெக்கநீர்ப் புள்வாய் போழ்ந்து நெடியபே ரம்பி னாலே
மைக்கடல் கிழித்து நேமி வளருமால் பொருவும் பொன்னி. (௨௩)

பொன்னியைப் பிரித்த பிள்ளை பூசுரப் பிள்ளை யாகச்
சென்னியிற் செங்கை தாக்கச் சேறலு மஞ்சி னன்போ
லன்னிய னனிய னாகி யாசைக ளோடு மோடிப்
பன்னிசை முனியோ டாடல் பலபல புயின்றா னையன். (௨௪)

பாரின்மேற் படர்ந்து மேழு பரவைமேற் கடந்தும் பார
மேருமேன் மிதித்துந் தாவி விண்ணின்மேற் குதித்தும் வேண்டுஞ்
சாரிமேல் விளைத்தா னையன் றமிழ்முனி விளைத்தா னம்மா
வாரியன் மகிமை பார்க்கி லாதியம் பரனே யென்றான். (௨௫)



குறுமுனி மெலிவு நோக்கிக் குஞ்சர முகத்தெங் கோமா
னறுதனிப் பிறைவெண் கோடு முப்பபா தமுமுக் கண்ணுஞ்
செறிதிருப் புயங்க ணான்குஞ் செழுமலர்க் கரமோ ரைந்து
மறுகனி முடியுந் தோன்ற வருளொடுந் தோன்றி நின்றான். (௨௬)

நம்பியோ வீதம்கா வந்தா னனிநோ கொடுமை செய்தே
னெம்பிரான் சென்னி தாக்க வெடுத்தகை யிதுவோ வென்று
பம்புதன் சென்னி செந்நீர் பரிபட நின்று தாக்குங்
கும்பமா முனியை நோக்கிக் கும்பமா முகத்தெங் கோமான். (௨௭)

மாதவ வஞ்சேல் சென்னி வருந்தநின் செங்கை தாக்கு
மீதுவந் தனையாக் கொண்டோ மிவ்வணம் புரிவார்க் கெல்லாங்
கோதிலாக் கதிகள் செல்வங் கொடுக்கின்றோ நினக்கு வேண்டுங்
காதல்சேர் வரங்கள் கேண்மோ கருதின தருது மென்றான். (௨௮)

நீகமண் டலத்து நன்னீர் நிறைத்தரு ளெனலு நாதன்
மேகமண் டலத்து முந்நீர் மிசைந்தெனத் துதிக்கை நீட்டி
மாகமண் டலத்து வாரி மானுகா விரிநீர் வாரிக்
காகமண் டலத்திற் சாய்த்த கரகமண் டலத்திற் பெய்தான். (௨௯)

கரகநீர்ப் பெருக்கும் பார்மேற் காவிரிப் பெருக்கு நோக்கிப்
புரகர னருளின் மிக்காம் புதல்வன்மெய் யருளென் றேத்திச்
சிரகர கம்பஞ் செய்து தெண்டனிட் டிறைவ னருக்
குரகதம் வடபாற் செல்லக் குறுமுனி தென்பாற் சென்றான். (௩௰)

சுழியெறி தரங்கப் பொன்னித் துறைகெழு குடந்தை யாரூர்
வழிபுனற் றிருவை யாறு வலஞ்சுழி மருதூர் மாயன்
விழிதுயி லரங்கங் காவை வெண்காடு மறைக்கா டேத்திச்
செழுமறைப் பொருளார் தொல்லைத் தில்லைமா நடனம் போற்றி. ()

தருபுனற் செழுங்கா வேரிச் சங்கமத் துறைநீ ராடிக்
குரைகடற் சேது மேவிக் கொடுங்குன்றங் கானை புத்தூர்
பரமரே டகமா டானை பரங்கிரி மதுரை நெல்லைத்
திருநகர் பரவிப் போந்தான் றென்றிசை தழைக்க வந்தான். (௩௨)

இருஞ்சிவ லிங்க மாக்கி யிடந்தொறு மருச்சித் தேத்தி
வருந்தமிழ்ப் பொதிய மேவி வடதிசைக் கனமுந் தென்பாற்
பெருந்திசை மெலிவுந் தீர்த்தான் பிறவியாம் பிணியைத் தீர்க்கு
மருந்திரு மருந்தைக் காண்பா னணிகிரி கூடஞ் சார்ந்தான். (௩௩)

கவனவெங் கான நீங்கிக் கடவுளர் திருக்குற் றாலம்
புவனமார் குரோச மைந்திற் புகுதலும் புனிதத் தென்றல்
சிவமணம் வீசக் கண்டு தெய்வமா முனிமுன் செய்யுந்
தவமினிப் பலித்த தென்று தடம்புயந் தடிப்பச் சென்றான். (௩௪)

நாற்கடல் கடந்த மேலோ னுவலருந் திரிகூ டத்து
மேற்கடு விடமுண் டாரே விண்டுவா யிருந்தா ரென்று
நாற்கட வுளரும் போற்ற நன்னகர்த் திசைகள் சூழ்ந்து
பாற்கடல் கிடந்தா லென்னப் பங்கயத் தடங்கள் கண்டான். (௩௫)

அறத்துறை முனிவன் வாவி யருந்துறை யணுகுங் காலை
நிறைப்புனல் கரைமேற் றாவி நெடுந்திரை சுருட்டுந் தோற்றம்
புறத்துறு சமயத் தோரைப் போகெனப் புறங்கை யோச்சி
விறற்சிவ சமையத் தோரை விரைவுட னழைத்தன் மானும். (௩௬)

செறிதடங் கரையின் மீதே செழுந்திரை கொழிக்கு முத்த
நறியபூந் திருவெண் ணீற்று நாயன்மார் வருதல் போலு
மெறிபுனற் றிரைபி னூடே யெழுகயன் மறையுந் தோற்ற
மறுபுறச் சமையத் தோர்கள் வயின்வயி னொளித்தன் மானும். ()

உரவுநீர்த் துறைமண் டுகே மொலிப்பது முனியைக் கண்டே
யரவெனும் பரப்புந் தொண்ட ரார்ப்பொலி நிறைத்தல் போலும்
விரவுநீ ரமுத தாரை விண்மிசைப் பொழிதன் முக்கட்
புரகரன் கருணை மாரி பொழிவது போலு மாதோ. (௩௮)

காஞ்சிசூழ் கழனி தோறுங் கமுகுகள்கண் வெடித்த முத்தந்
தாஞ்சிலர் வருவார் போவார் தமத்திசை கணிகை மார்போற்
பாஞ்சரத் திரிக டம்மைப் பழித்திடு நகையைப் போலும்
வாஞ்சைசேர் சைவர்க் கண்டு மகிழ்தரு முறுவல் போலும். (௩௯)



அரத்தமெட் டிலையாங் காவி யணிந்தாரித் திலகீ ரூடிச்
சிரத்தினிற் றதிர்க ளாய செஞ்சடை பின்னிச் சென்னி
தரத்துற வளர்ந்த செந்நெல் சைவமா முனியை யின்றி
வரத்தவம் புரிந்தோ மென்ன வணங்குமா முனிவர் போலும். (௪0)

வருபுனற் புகலி வேந்தர் வழுதிமே லொழித்த காலை
யிருமனத் தருகர் போலு மிடையறும் பழுத்த வாழை
விரிகனற் புனலில் வேடு வென்ற நீள் விருப்பாஞ் சைவத்
தொருமனத் தவரே போலு மொளிறுசெம் பழுக்காய்ப் பூகம். (௪௧)

ஊறிடு மலர்த்தே றூடி யுவந்துகா தாடுந் தும்பி
யாறிடு தடத்தி லீச னன்பராய் முழுகித் தெய்வ
நீறிடு வாரைப் போலு நிறனி தொண்டர்க் கெல்லாஞ்
சோறிடு வாரைப் போலு மகரந்தஞ் சொரியுங் கைதை. (௪௨)

புண்டரீ கத்தின் காவிப் புடார்ச்சனை புரத்தி னெல்லை
கொண்டவு முனிவன் செல்ல வுதயவன் மறைந்த தோற்றம்
பண்டுசேர் தக்கன் வேள்விப் பயத்தினற் சமைய பேதங்
கொண்டவர் குழாத்து நின்றான் குன்றுடக் கொளித்தல் போலும். ()

ஒழுகுநீர்த் தடங்க டோறு மொக்குசேர்ப் பழனத் தோறுஞ்
செழுமுகை யுடைந்து நீலந் திசைதொறு மலர்ந்த தோற்ற
மெழுபெரும் புவனி யுண்டான் குறுமுனி யிவனோ வென்னப்
பழுதிலா விரும்பூ தெய்தப் புனன்மகள் பார்த்தல் போலும். (௪௪)

தேம்பிய துயிலை நீக்கிச் செங்கழு நீர்க்கண் ணோக்கி
யாம்பல்வாய் மலர்ந்து வண்டால் வருகென வழைத்து நீலப்
பூம்பொடிச் சுண்ணந் தூவிப் புனிதமா முனியைக் கண்டு
கம்பல்சேர் கமலச் செங்கை குவித்தது சிறுபுன் மாலை. (௪௫)

எண்பல விதித்தன் வானி லெங்கணு மிமைக்குந் தோற்றந்
தண்புவி மடந்தை வாட்டந் தவிர்த்திட வந்தான் றன்னை
விண்புல மடந்தை காண்பான் விழிபிறன் டமைமா தென்று
கண்பல கோடி பெற்றுக் களிப்புறக் காண்டல் போலும். (௪௬)

மிக்கசெஞ் சடைகள் சூடி மேனியில் வெண்ணீ றூடித்
தக்கமா முனிக்கு மூத்தத் தமிழ்முனி வருதல் போல
மைக்கடல் வரைப்புக் கெல்லா மாலையி னிருள்விட் டோடச்
செக்கர்வா னுடுக்கள் சூழத் திங்கள்வந் தெழுந்த தன்றே. (௪௭)

ஆங்கன மமர்ந்து வைகி யந்திவந் தனைக ளாற்றி
யோங்குசீர் நீறு சாத்தி யுண்மையஞ் செழுத்தை யுன்னிக்
கோங்கரும் பனைய கொங்கைக் கோதையோர் பாகன் றன்னைப்
பூங்கழல் வணங்கி யேத்திப் பூசனை புரிய வெண்ணி. (௪௮)

செல்விழிச் சடமாம் பாவை திரைக்கையாற் கொழித்து வீசும்
பால்வலை வாளு கந்தாற் பரிவுட னிலிங்க மாக்கி
நால்வள மலருந் தூவி நம்பனை யருச்சித் தேத்தி
வால்வளை முழங்கி யார்ப்ப வைகறை யெழுந்து போந்தான். (௪௯)

கூனவா ரணஞ்சூழ் வானி குறுமுனி யகலுங் காலைக்
கானவா ரணங்கண் முல்லைக் கானிடைப் பறந்து கூவன்
மோனவா ரணத்தான் சைவ முனிவரு கின்றா னென்று
தானவா ரணத்தைக் காத்தான் சமையத்தார்க் குணர்த்தன் மானும்.

தேந்துணர் பூத்த கொன்றை திருப்பள்ளித் தாம நல்கக்
காந்தள்செங் கரத்தா லீச னருச்சனை புரியக் காதன்
ஏந்தளிர் கரங்கள் கூப்ப வரிக்குயில் பல்லாண் டோதப்
போந்தளி பயில் புராணப் பொழில்பல கடந்து போனான். (௫௧)

பம்பிய புளின மெல்லாம் பாவபுண் ணியங்க ளோதுங்
கும்பியுங் கொலைசெய் யாது குழகனைப் பூசை செய்யுஞ்
சம்புவும் வலஞ்செய் தேகுஞ் சைவநன் னெறியால் வண்டுந்
தும்பியுங் கள்ளுண் ணாத சோலையிற் காலை சேர்ந்தான். (௫௨)

திங்களா றிரண்டுஞ் சூழ்ந்துத் திங்கள்செங் கதிரு டாடப்
பொங்கரி னிருள்க ளெல்லாம் புரையற விழுங்க வேண்டி
யங்கியு மதியு மாங்கோ ருருவுகொண் டணைந்த தென்னத்
தங்குசெஞ் சடில மேனித் தவளநீ றிலங்கப் புக்கான். (௫௩)



தலைமொரு சடில மாகச் சதுமுகன் வரத்தால் வந்து
நிலங்கலை யமுத முண்டு திரைக்கட லாச மிந்த
பவர்சடை முனிவற் காகப் பண்டைமால் வடிவு நீங்கிச்
சிவவடி வுதித்த தென்னச் செங்கதி ருதித்த தன்றே. (௫௪)

மாதவ ரிடங்க டோறு மறையவ ரிடைக டோறு
மோதுவார் கழகந் தோறு மும்பர்வாழ் சூலங்க டோறும்
வேதமு மங்க மாறு மிருதியுஞ் சுருதி ஞான
போதமு மொருமு வாறு புராணமும் பரந்த மாதோ. (௫௫)

பெருகிய சுருதி மூலம் பேசிய வினிக ளோர்பா
லொருபசு வினிக்கோர் வினை யுபநிட முரைப்ப தோர்பா
லருபானற் பொருள்கள் சைவ வாகம மனைக்க ளோர்பாற்
சுருதியை யருந்தி சொற்பார் தவமன்னங் கமழ்வ தோர்பால். (௫௬)

கரசுமா முனியைக் கண்டு கமலமேற் பிரம னீன்ற
வரமக னிவனே யென்று மழலையக் கிள்ளை யோர்பாற்
பிரமன்மு றசுபத் தானே பின்னுதித் தவனே முன்னிப்
பரமுறைந் தவனே யென்னப் பூவைகள் புகலு மோர்பால். (௫௭)

சந்திர பதத்தை யுன்னிச் சாந்திரா யணஞ்செய் வாரு
மந்திர பதங்க ளாதி மந்திர முருச்செய் வாரு
மந்தரத் தமரர் போக மவாவியே யறஞ்செய் வாரு
மிந்திர பதத்தை யெண்ணி யாகங்கள் புரிகின் றாரும். (௫௮)

கொற்றவ னங்கி வாயு குபேரனீ சான னாதி
மற்றவர் பதங்கள் வேண்டி வரதனை வலஞ்செய் வாருங்
கற்றவிஞ் சையர்கள் சித்தர் கருடர்கிம் புருட ராதி
நற்றவ ருலகம் வேண்டி நான்முறை வகிக்கின் றாரும். (௫௯)

பூதலத் தரசை வேட்டுப் புண்ணியம் புரிகின் றாரும்
பாதலத் தரசு வேண்டிப் பன்னகர் போற்றுகின் றாருஞ்
சாதலும் பிறப்பு மென்றாச் சரியையர் கிரியை யாருங்
காதலும் வெறுப்பு நீங்கிக் கதிவிழைந் திருக்கின் றாரும். (௬௦)

நாகமா மனித ராயுட் டசமுறை சரிக்குங் காகங்
காகமா முறைகள் பத்தாக் கழித்திடுங் கழற்கட் கூகை
கூகையின் முறைகள் பத்தாங் கொடுவிட நாக மந்த
நாகமே யனந்தங் கண்டு ஞானயோ கிருக்கின் றாரும். (௬௧)

வேண்டுவார் வேண்டிற் றெல்லாம் வேண்டுமோ அதவு மெங்கோ
னீண்டசெண் பகப்பூங் காவி லதிசய மனைத்து நோக்கா
வீண்டுமெய்த் தவஞ்செய் யாமன் மேருவி னிமயச் சார்பிற்
பூண்டுமுன் கழித்த காலம் போனதை நினைத்து நோவான். (௬௨)

மரமெலாம் பறவை யெல்லா மாவெலா மனித சாதி
சரமெலா மசர மெல்லா மமரராய்த் திரிதல் கண்டான்
புரமெலாம் பரமன் மேனுஞ் சிவபுர மாகக் கண்டான்
கரமுகான் குவிக்க வானன் கடுக்குநா ளடுக்கு மென்றான். (௬௩)

அலைகட லடக்குங் கையா னவ்வன மகன்று வெள்ளி
மலைமிசை மனைத்தாற் போந்து வந்தசித் திரப்பூஞ் சங்கை
நிலைபெறத் திரிகூ டத்து நெறிபுரா வனைத்தான் மேருச்
சிலைவலார் முடிமேற் சாத்துந் திருப்பள்ளித் தாமம் போல. (௬௪)

மலைதரு நெறிகள் கண்டான் மயிரமா வுயிர்கள் யாவு
மலைதரு நெறிகள் காணுன் வாளரா முறையி னாடு
கலையொடு மானைச் சேர்ந்த ககனத்தம் புலியுங் கண்டான்
கலையொடு மானைச் சேர்ந்த ககனத்தம் புலியுங் கண்டான். (௬௫)

அளிவிருப் புடைய சோலை யனைத்துமே யமல மூர்த்தி
யொளியினைச் சேர்ந்தார் போல வோங்கொளி யொருமை யாலே
வெளிவிருக் கங்க ளென்றும் விண்ணவர் தருக்க ளென்றுந்
தெளிவிருக் கங்க மோர்ந்தான் றெளிவிலன் றிகைத்து நின்றான். ()

கல்லெலா மிலிங்கமாகக் கனமெலாம் புனல்க டேவ
வல்லுலாஞ் சோலை போதா லருச்சித்துக் கனிக ளாலே
யெல்லையி லமுத மேற்ற வினமணி விளக்க மேந்தச்
செல்லெலா முரச மார்க்குஞ் சிவநெறிப் பெருக்கங் கண்டான். (௬௭)



பிரமனை யென்னு தாரும் பிரளய மென்னு வாரு
நரைதிரை யறியா தாரு நடுவினைப் பிறியா தாரும்
வரவொடு போக்கி லாரு மறப்பொடு நினைப்பி லாரு
மிரவொடு பகலி லாரு மிரவியெங் கெழுமென் பாரும். (௬௮)

பிங்கலை யிண்டையி லோடிப் பிரிதரு பிராண வாயு
வங்கலர் சுழுனை நாடி யசைவையற் றடங்கு வாரும்
பொங்கலார் மூல நாடிப் புதுவழி திறந்து மேலாய்ச்
சங்கரன் கமல பாதத் தனிநடங் காண்கின் றாரும். (௬௯)

நனவிடை நாடு தோறு நாடாது நாடி மேலாங்
கனவிடைச் சரிக்கின் றாருங் கவலைதீர் சுழுத்தி மேவி
மனநிலை யடக்கு வாரு மனமறத் துரியம் பற்றித்
தனையுணர்ந் ததீத மேவித் தலைவனைத் தேர்கின் றாரும். (௭௦)

இருமையே யொருகோ ணத்தி லெரிதனைக் கானாங் மூட்டிப்
பரிதிமண் டலத்தை முட்டிப் படிகடந் தப்பா லேறித்
திருவிமே வனந்த கோடி சுடர்கள்விட் டெறிக்குஞ் சோதி
யருநிலா மண்ட பத்தி லமுதமுண் டுறங்கு வாரும். (௭௧)

சித்திக ளெட்டும் பெற்றுச் சித்தராய்த் திரிகின் றாரும்
பத்தியான் முத்தி வேண்டிப் பரமயோ கிருக்கின் றாருஞ்
சத்திநி பாத மென்னுஞ் சலுட்டய வழிச்செல் வாரு
நித்தியா காய சித்தி நிரம்பியிற் றிருக்கின் றாரும். (௭௨)

இரும்பையுஞ் செம்பொன் னாக்கி நகைநரை யினைநா மரக்கிக்
குரும்பைமா முலையா ரோடுங் குகைதொறு மிருக்கின் றாரும்
புரந்தர னளகை வேந்தன் போகமு முவர்த்துப் பொன்னுந்
துரும்புமே ராக வெண்ணித் துறவின்பந் துய்க்கின் றாரும். (௭௩)

பங்கயத் தவனே யாகப் பலயுகம் பயில்கின் றாருஞ்
சங்கையே கரத்தி லேந்திச் சக்கரந் தரித்துள் ளாரு
மங்கையின் மழுமா னேந்தி யமலமுத் திறைகின் றாருங்
கங்கையார் சிவபு ரத்தார் கயிலையார் வருகின் றாரும். (௭௪)

அப்படி யென்னி லாதா நமர்தரு ஞானங் கண்டா
லிப்படி யேழுத் தாங்க ளிவர்களி லொருவர் போது
மைப்படி கண்ட னென்னை வளர்த்ததிம் மகிமை யெல்லாங்
கைப்படி நெல்லி போலக் காட்டியான் றருள வன்றே. (௭௫)

அம்மவோ திரிகூ டத்தி லதிசய மனந்த கோடி
யெம்மனோர் தமக்குள் யானே யெதிர்கொளப் பெற்றே னென்று
விம்மிதப் புளகம் போர்ப்ப மெய்யெலாம் விதிர்ப்பப் பொங்கிச்
செம்மன்மா முனிவன் கையுஞ் சென்னியுந் தளக்கா நின்றான். ()

கானவர் புனமுந் தெய்வக் கடவுளர் வனமும் வேட
ரானவர் சீறூர் வைப்பு மருவியங் கிரியுஞ் சூழ்ந்து
தானவர் முனிவர் சித்தர் சாரத ரியக்கர் பூதர்
வானவர் கணங்க ளார்க்கும் வரிவளை வீதி சார்ந்தான். (௭௭)

வேறு.

குற்றாலத் திருமடந்தை யணிபோது மணிமாட மறுகு ஞானச்
சொற்றாலத் திருமடந்தை யனையவரு விந்துறையுந் துறைகுழ் வெற்
பும், பொற்றாலந் தமரர்களும் பொன்னகரும் பூதலத்துப் போந்தா
லன்ன, குற்றாலத் திருநகருங் கோயிலுங்கோ புரமும்வெற்றிக் கொ
டியுங் கண்டான். (௭௮)

கண்டலங்கள் களிகூரப் புண்டரிகக் கண்ணனையே போற்கா
ளிட்டி, விண்டலமு மண்டலமு மளந்தசயந் தம்பமதின் விசேடங்
கண்டான், கொண்டல்கவி தண்டலையு மண்டபமுங் கோயிலுங்கோ
புரமு நோக்கி, யண்டகூ டமுங்கூடத் தழிக்கியபொற் குலவரையு
மாகக் கண்டான். (௭௯)

ஒருவாயி லுண்டுமூன் றுருமிழ்ந்தானை யுள்ளடக்கி யுலக மூன்
றுங், திருவாயி லொருகாங்கா லுண்டுமிழுந் திருக்கோயிற் செல்வங்
கண்டான், கருவாயில் கடப்பவர்க்குங் காட்சியிது போதுமெனக் கர
ங்கள் கூப்பி, யிருவாயும் பொன்சொரிய வேத்தினு னொழுகடல்செ
ன் றிறங்கும் வாயான். (௮௦)

ஒருகத்தி லயனுநி யொருகத்தி லரியாகி யுடையதேவன்
பெருகத்தி லரனாக வீற்றிருக்குந் தலமிதுவோ பிரமன் மாயு



ருகத்து மழியாத குற்றாலத் தலஞ்சேர வயனு மெர்தை
பூருவத்தின் புண்ணியமோ யான்புரிந்த மாதவமோ புகுந்த தம்மா.

மருவாய மலர்மாரிச் சண்பகா டவிவளமும் வானந் தாவிக்
குருவாய மணிகொழிக்கும் வடவருவித் திரிகூடக் குவட்டின் சீருந்
திருவாணி யுமைபிறந்த சத்திபீ டமுஞ்சிவத்தின் செயலு மென்றொ
ரொருவாயிற் சொல்லுவதோ மறைகளா யிரம்வாயா லுரைக்கற் பா
ற்றே. (௮௨)

மேருவரை யகத்தனிலும் வெள்ளிவரைப் புறத்தனிலும் விடை
யெங் கோமான், பாருலகிற் பலகோடி தலமிகைமை மறைநாலிற் பயி
லுந் தோறுங், காருலவுந் திரிகூடக் குற்றாலந் தனிலெனக்குக் கரு
த்தி லாசை, தாருலவு மதிச்சடையா னறிந்தன்றே குறித்தவரந்
தந்தா ரிந்நாள். (௮௩)

ஊலம்பொருதோள் வானவர்க்கா வயர்தருநின் றிசைபுருவேற்
கூழி தோறுஞ், சிலம்பலம்ப நடம்புரிவார் குற்றாலங் குளித்துறையிற்
சிதட ரோங்கு, வலம்புரியின் மணிகிடைத்த வாறுகிடைத் ததுதமி
யன் வறிஞ னாகி, யிலம்புகுந்து பலிபெடுப்பா னெய்துநிதி யியம்
போது மெய்தி னேனால். (௮௪)

மாலோக முதலாகச் சுவலோகந் தவலோக மற்றும் வேண்டே
னுலோகந் தவிர்த்த பிரான் சிவலோகந் தனக்குமினி யாசை பூனேன்
பூலோக கயிலாயங் குற்றாலங் கிடைத்ததினிப் போது மீதே
சாலோக சாமீப சாரூப முதலாய்மேற் சாரும் வீடும். (௮௫)

என்றுமனங் களிப்பேற விழிவழியா னந்தவெள்ள மேற மேருக்
குன்றுபோற் பூரித்தடிப்ப வுடல்புளகம் போர்ப்பவுரை குளற வாங்கு
நின்றுபர வசமாகி முக்கணர தமுதில்வைத்த நிலைவிருவே [தான்.
மன்றின்மா மறையோரை மதமடக்கும் விளையமென மறந்து போந்

நிலைகிளர்ந்த கோபுரங்கள் பலசிகர மெனநிரைத்து நெடிய மே
ரு, மலைகிளர்ந்த தெனக்கிளர்ந்த வலம்புரிச்சங் கனிக்கோயில் வரு
ங்கால் வேதக், கலைகடந்த பெரியதமிழ்க் குறுமுனியை வடதிசை

யிற் கடைகாப் பாளரா யிலகிடந்த சூலத்தா னடியார்க்குத் தடையொ ழிவுந் தெரிந்தார் மன்னோ. (அஎ)

தின்னுகடை காப்பவரோ மறையவரோ தடுத்தமெனச் சொல் லா முன்னர், பன்னுமறை வேதியரே பார்ந்துதடுப் பதுநோக்கிப் பரிவி லீர்காள், பின்னுமதிச் சடையார்க்கும் பெருந்திகிரிப் படை யார்க்கும் பேதம் யாதோ, மன்னுறுபத் தவதாரத் தநுக்கிரக நிக் கிரக மறந்தீர் கொல்லோ. (அஅ)

களபமெதிர் காத்தபிரான் கண்ணிடந்து சாத்தியகாட் கயிலை யாளி, யளவறுசீர்ச் சலந்தரனை யடர்த்தபடை கொடுத்தவரு ளறிந் தி லீரோ, தளவநிகர் குறுமுறுவல் விருத்தையைமற் பிணிநீங்கத் தம்பி ராட்டி, துளவநறும் பச்சிலைமா மருந்தளித்து மாற்றியதுந் தோற்றி டாதோ. (அகூ)

பாரோடும் விண்ணோர்கள் பரந்தோடப் புரந்தரனார் பதிவிட் டோடத், தேரோடுங் கதிரோட மதியோட விதியோடத் திருமான் மேனி, காரோடத் தொடர்ந்தோடுங் கடல்விடத்தைப் பரமனுண்டு காவா விட்டா, லாரோடி நீரிருப்பீ ரெங்கேகொடி யுயிர்பிழைப்பீ ரறி வி லீர்காள். (கூ0)

ஒன்றுபல நாலுணர்ந்து முணர்வில்லீ ருமக்குவிரித் துணர்த்தி னாலு மென்றுமுணரீருமது கேயியா னறிவெனெங்க ளிறைவன் சிர்த்தி யன்றியுட லுயிர்போல மாலுமீ சனுமிருப்ப தறியீ ரின்று மன்றுளா ரடியரையோ தடுக்கின்றீர் மாயனையே மறக்கின் றீரால்.

கோதமன்கண் ணுவன்பிருகு துருவாசன் புரந்தரற்குக் குலிச மீந்த, மாதவனே முதலோர்கள் சாபத்தாற் பகுத்துணரீர் மடவீ ரென்று, போதமிலா மறையவர்கள் கடைதடுப்பப் புறம்போனான் புவன மூன்றி, லாதிபரா மமரரொரு கட்டுநிற்பத் தானொருகட் டமைய நிற்பான். (கூஉ)

ஆக்குதவ நிட்டைகளில் வலியரோ யென்னுமரா னடியார் தம் மை, நீக்குமவர் தமைமுழுது நீக்குவனென் பதுகருதி நீங்கிப் போகத் தான், காக்கரிய வைம்பொறிநாற் கரணமுந்தன் வசத்தடக்கிக் காக்



கு மேலோ, னாக்கமுடை யவனெடுக்கக் காக்குதன் பின்வாங்கு மொடுக்கம் போல. (கூ௩)

சுத்திரமாம் பரசமயக் குறும்பெறிந்து சிவசமயக் கொ ளுகொம் பாகிச், சத்திவடி வேல்பிடித்த சரவணசம் பவனிருக்குந் தலம்வி னவிச், சித்திரகங் காதியா முத்தரவா கினிகமலத் திரைக் கை காட்ட, நத்திரைந்து மணிகொழிக்கும் பொன்னிலஞ்சித் தென் னிலஞ்சி நகர்மேற் செல்வான். (கூ௪)

மல்லிகையும் பித்திகையு மாதவியுந் தாதகியு மகிழு மரவுங் குல்லைகளு முல்லைகளும் பாதிரியுந் தாதிரியுங் குரவுங் கோங்கும் வில்லுவமுஞ் சந்தனமும் புடைசெறிநந் தனவனங்கள் விடலின் தோ ளும், பல்லவமென் கரங்கூப்பித் தொண்டர்போன் மலர்சொரிசெண் பகப்பூங் காவில். (கூ௫)

வச்சிரத்தின் காணியிர்த்து மரகதத்தின் கழுத்துவைத்து மடன் முத் தீன்று, நிச்சவயி டூரியமும் புருடரா கமும்பூத்து நீலங் காய்த் து, முச்சிமிசைக் கோமேதம் விளைந்துபவ ளம்பழுத்து முழுத்த பூகம், பச்சைபணி வேய்ந்ததெனப் பாசடையால் வெளிமேய்ந்த பந்த ருடே. (கூ௬)

சுறவுற்றின் வரிக்கயல்கள் சோலைதொறுங் குதிபாயத் தாவிந் து வீழ, முற்றுற்றின் கனிமுருகக் கடவுள்சரம் பாயசுரர் முடிகள் காட்ட, மற்றுற்றி னிரிந்தேகும் பவளவாய்த் தூவியனம் வன்று ரிட்ட, பற்றுற்றுஞ் சிறைவிடுப்ப வாறுற்றி னமரர்குழாம் படர்தல் காட்ட. (கூஎ)

மீனவா ளைப்பகடு வெடிதாவப் புடைபோழ்ந்து வீழ்மாங் கொம்பு
தானவா ரணத்திளைய நம்பிவேல் சூர்மாவைத் தடிதல் காட்டக்
கானவா ரணமுமெழிற் கார்மயிலுங் கலந்துவருங் காட்சி யாட்சி
மானகே தனமொருபா லேனைவா கனமொருபால் வருதல் காட்ட. ( )

மந்தமா ருதந்தவழ்ந்து வழிகாட்ட வுபசரித்து வருகென் பாரி போலும், சந்தவிசை குயில்காட்டக் கிள்ளைகளா றெழுத்தோதிச் சமை யங் காட்டச், செந்தளிர்கள் கைகாட்டு மந்தார மலர்போதளித்

தீபங் காட்டக், கந்தமே லிடமிதுவென் றுறுபசாய் திரைக்கயல்கண் காட்டச் சென்றான். (௯௯)

விண்படர்சண் பகச்சோலை விண்கிழிப்ப விண்ணிழிவி மானம் போந்து, வண்புவனத் திருந்தனைய சிகரசின கரத்துறையும் வானோர், தேவைத், திண்கொடிவா ரணமுயர்த்த சேவகனைக் குறமடந்தை தெய்வ யானைப், பெண்கொடியா யிருமிதிக்கு நடுவணூர்சிந் தாமணி போற் பிறங்கு வானை. (௧௦௦)

தானவர்கு லாந்தகனைச் சைவநெறி வைதிகத்தின் றாய்போல் வானை, வானவர்கற் பகக்காவை வானரச மகுடசிகா மணியை மானக், கானவர்கள் சிறுகுடிச்சம் பந்தனைக்கந் தனைவேதக் கனியை முக்கண், ஞானமால் வரைத்தோன்று ஞானவா ரியைக்கருணை ஞான வாழ்வை. (௧௦௧)

பன்னிரண்டு பெருங்கதிரு மொருங்குதிக்கு முதயபருப் பதங்கள் போலத், தன்னிரண்டு பொற்குழைமேற் குண்டலங்கள் குலவுதடம் புயத்தி னானைப், பொன்னிலங்கு திருமயவட பூதரத்தி லருவியன்ன புரிநூ லானைத், தென்னிலஞ்சிப் பெருமானைச் சகலகலைக் கொருபெருந்தே சிகனைக் கண்டான். (௧௦௨)

வாகைவேல் கணைகுலிச மங்குசங்கே தனமபயம் வலங்கோ தண்ட, மேகமா மணிமழுத்தண் டிலங்கியவங் கியம்வரத மிடப்பாலாக, யோகமா மலர்க்கரங்க ளீராறு மவிர்களோ டாறுந் தோன்றக், தோகையா மணிவரைமேற் பரிதிநிகர் பரஞ்சுடரைத் தொழுது வீழ்ந்தான். (௧௦௩)

விண்குளிர்செய் மதிமுகங்க ளோராறுங் கருணைபொழி விழியீராறும், பண்குளிர்மா மறைபழுத்த கனிவாயும் பரிபூரச்செம் பதுமத் தாளுங், கண்குளிரக் கண்டுகளி வாய்குளிர வாழ்த்திமலர்க் கரங்கள் கூப்பி, யெண்குளிரத் தமிழ்முனிவ னிதயமெலாங் குளிரமகிழ்ந் தேத்து கின்றான். (௧௦௪)

வேலைநெடுங் கடல்குடித்து வீரநெடுங் குன்றடித்த வேலினானே, காலைவரு செங்கதிரை மாலைமதி யேகபிலைக் கடவுள் வாழ்வே,



வாலரவுந் தரிகவுரி திருவயிறு வாய்த்தமுழு மணியே யென்பாற் பாலெயுந்தே னையுமதுரப் பாகையும்போன் மறைப்பொருளைப் பாலித் தானே. (௧௦௫)

விஞ்சையர்க்கு விஞ்சைபொழி மேகமே யவுணவிருள் விடியக் கூவுஞ், செஞ்சேவற் கொடியுயர்த்த சேவகனே தெய்வமடப் பிடியோ டாடுங், குஞ்சரமே வள்ளிபடர் குன்றமே சூர்ப்பெருங் குலத்தை மாய்ப்ப, வஞ்சமுக மமையாதென் றறுமுக மாகவெழுந் தருளி னானே. (௧௦௬)

வேறு.

செங்கைவே லுழவா போற்றி தேவர்தந் தலைவா போற்றி
கங்கையாள் புதல்வா போற்றி கார்த்திகை சிறுவா போற்றி
பங்கயத் தடஞ்சூழ் செம்பொற் பணிமதி லிலஞ்சி மூதூர்க்
கொங்கவிழ் கடப்ப மாலைக் குமரதே சிகனே போற்றி. (௧௦௭)

போற்றியென் றிறைஞ்சி ரோமம் பொடிப்பமெய் துடிப்ப மேனி
மாற்றிலாப் புளகம் போர்ப்ப வாய்தழு தழுப்பப் பாடல்
சாற்றினின் றேத்து ஞானத் தமிழ்க்குறு முனியை நோக்கி
யேற்றமாங் கருணை கூர்ந்தா னிலஞ்சிவாழ் குமர மூர்த்தி. (௧௦௮)

ஆதிநல் மூவந்தோ ணிந்தத் தோத்திரம் பயில்வோர்க் கென்றுங்
கதிநலப் பொருள்பே ரின்பங் கருதின வருளிச் செய்வோ
மதிவிலாய் நினக்கு வேண்டும் வரமினிக் கேண்மோ வென்னப்
பொதியவிழ் கடப்ப மாலைப் புங்கவ னருளக் கும்பன். (௧௦௯)

வேறு.

உடல்பொரு ளாவிகட் குடைய தேசிகக்
கடவுளை கண்ணுதன் மணஞ்செய் காட்சியு
நடநவில் காட்சியு நயந்து காணநான்
வடவரை யிசைந்தவம் வருந்தி யாற்றினேன். (௧௧௦)

ஆற்றுறு தவத்தினு லகில மீன்றருள்
கோற்றொடி பெருமணக் குழாத்தி லேகினேன்
போற்றுமுன் புவிமகள் பொறுமை யாமெனா
யேற்றனைப் பசுமைதென் றிசையி லேவினார். (௧௧௧)

ஏவிய காலையி லிறைவர் நன்னகர்
மேவிய மாயனை விமல னுக்குபு
பூவினாற் பூசனை புரிந்து மாமணச்
சேவையு மடனமுந் தெரிசிப் பாயென்றார். (கக௨)

அன்னவா றுலயத் தடையுங் காலையிற்
சன்னிதி மறையவர் தடைசெய் தார்த்தனர்
நின்மலன் றிருவரு ளஞ்சி நீங்கினே
னின்னதற் குறுதிநீ யருளென் றேத்தினன். (ககங)

வேறு.

அஞ்சமென மாமுனி தயங்கிமொழி போதி
லஞ்சலிது கேண்மதி யமைந்தவுப தேசம்
வஞ்சமறை யோரையவர் வஞ்சவுரு வாலே
செஞ்சமுற வேறல்செய மென்றமரர் தேவன். (ககச)

கூறுமவர் கோலமொடு கோயிலிடை யேகி
வீறுதமி ழாலரியை வேதமனு வாலே
யாறுபுனை வேணியர னாதல்புரி பூசை
யேறுமகு டாகம மெனவருள்செய் தானால். (கக௫)

அத்தகை யயிற்கடவு ளற்புத முரைப்ப
வித்தக முனித்தலைவன் மெய்ப்புளக முற்று
முத்தனை யருச்சனைசெய் முற்கலை யனைத்து
முத்தம வெனக்கரு ளெனத்தொழு துரைத்தான். (ககசு)

நீதமுறு முனிக்குயர் சிவாகம மனைத்து
மோதுகலை மற்றுமுப தேசமுணர் வித்தா
னாதிபரன் வைத்தருளு மப்பொருளை முன்னாள்
மாதுமை கையிற்குழவி யாயுணரும் வள்ளல். (ககஎ)

ஓத்தவயன் மாலுமுணரா தவுப தேச
மத்தன்முரு கேசனரு ளுதியொடு பெற்றான்
மத்தமலை யாசல மகாமுனிவ னம்மா
மெய்த்தவ மலர்ந்தலகின் மிக்கபொரு ளன்றோ. (ககஅ)



நாதனரு ளுதிகலை ஞானநிறை வேறி
மாதவ புராதன மகாமலைய யோகி
யாதியுப தேசகுரு வானமுரு கேசன்
போதனைய தாடொழுது பூசனைசெய் வானால். (ககக)

வேறு.

ஐவகையாஞ் சுத்திமுறை கந்ததயி லங்கவிய மமுதைநீ றாட்டி
நெய்பொழிந்து தயிர்தேன்பால்கன்னல்கனிச்சாரமிள நீர்தன் சார்ந்த
மெய்வளர்மந் திரகலச முதலாய வபிடேகம் விதியாற் செய்து
கைவருமந் திரபுட்ப மந்த்ரான நிறைவேற்றிக் கலைகள் சாத்தி. ()

பொருத்துபுரி நூல்புனைந்து மான்மதங்குங் குமங்கலவை புழு
குசாத்தித், திருத்துமணிப் பூணணிந்து தார்சூட்டிச் சுந்தரன்னஞ்
சிறப்புபசூட்டிக், கருப்புரதீ பங்கொடுத்துப் பண்ணியங்கண் முக்கனி
கள் கருனைநிம்பால்,வருக்கவகை யமுதேதற்றிச் சோடசத்தாற், பணி
மாறி மலர்க டூவி. (கஉ)

வேறு.

எந்தாய் போற்றி பரங்கிரியி லிறைவா போற்றி செந்தூர்வாழ்
செந்தா போற்றி பழனிமலைத் தேவே போற்றி தேவேசன்
மைந்தா போற்றி யோகத்தில் வாழ்வே போற்றி சோலைமலைக்
கந்தா போற்றி திருவிலஞ்சிக் கடவுள் போற்றியெனத்தொழுதான்.

தொழுது வணங்கித் துதித்தருகுஞ் சுருதித் தமிழ்மா முனிக்கிரங்கி
முழுதுங் கருத்து நினைத்தவெலா முடிக்கும்படிக்குவரங்கொடுத்தா
னிழுதுங் குடருந் தசைநிணமு மிறைஞ்சா வவுண ருடல்குடைந்து
கழுதும் பருந்தும் விருந்தருந்தக் கைவேறுரந்த குகப்பெருமான். ()

குருவாங் குகவே ளருள்பெற்றுக் கும்ப முனியன் றிரவிலொரு
திருவா லுகத்தாற் சிவபூசை செய்து மறுநாட் சிறுகாலை
யொருவா லுகத்தாற் பூசனைசெய் துபய வடிவு மொன்றாக்கி
யிருவா லுகமா யகனெனவே யியற்றி யாரா தனைபுரிந்தான். (கஉச)

வேறு.

வாலுக மிருவ ரானர் வடிவினை யொருவ ராக்கிப்
பாலுகந் தருச்சித் தேத்தும் பான்மையே பரிவா யுன்னி

மேலுக முயன்மா லான விமலனை விமல னுக்க
நாலுகம் படைத்தான் மைந்த னனிவிடை கொண்டு போந்தான். ()

நாதனே திரிகூ டத்து நான்முகன் முருந்த னுனை
னுதலா லவனைப் போற்று மன்பர்க்கும் வழக்கா மென்று
வோதமா மறைக ளெல்லாம் விரித்தருள் விரிஞ்ச னின்ற
மாதவன் கணைத்திற் கொண்டான் மாதவன் கணைத்தர் கோலம். ()

மட்டவிழ் துளப மாலை பவுத்திர மாலை பூண்டு
பொட்டணி நுதன்மே லூர்த்த புண்டரந் துலங்கச் சாத்திப்
பட்டவர்த் தனர்கள் சூழப் பரமபா கவத னாகி
யெட்டெழுத் தோதி யுள்ளே யுண்மையெட் டெழுத்தை யுன்னி. ()

காதிடைத் துளவ வேடங் கனகருண் டலங்கள் சாத்தி
யாதியச் சுதன்கோ விந்த னுலமர் கடவு ளென்ன
வோதிய பொதுநா மங்க ளுரைத்துநம் பெருமான் சங்க
வீதியிற் புகுவான் போந்தான் வேதியர் சங்க வீதி. (௧௨௮)

வரநதி படிந்து சந்தி வந்தனை புரிந்து தேவை
விரைவொடு பணிகு வான்போன் மேவனும் பனவ ரெல்லாங்
குரவனென் றெழுந்து வீழ்ந்து குடமியஞ் சென்னி தாழ்த்துப்
பரவுவார் பணித லெல்லாம் பகவற்கே யாக வென்பான். (௧௨௯)

பொருவிலோ யாண்டு நின்று போந்தனை யென்பார்க் கெல்லாந்
திருமலை முளரிக் கண்ணன் றிருப்பதி யிருந்தோ முன்செய்
பரிவுறு தவத்தா லீண்டுத் திருமுற்றம் பரவ வந்தோ
மருவுபூ சனைக்கு வேண்டும் வகையெலாங் கொணர்மி னென்று. ()

அருமறை பயில்வோர் வீதி யகன்றுநம் பெருமான் வெற்றித்
திருநெடுங் கொடிநின் றுடுஞ் செயத்தம்ப மிறைஞ்சி யேத்தி
மருமலர்க் கரங்கள் கூப்பி வயிணவர் கணங்கள் சூழ
வொருநெடு வசந்த வீதி யுயர்வலம் புரிந்து போந்தான். (௧௩௧)

வேறு.

பொருவில்சின கரங்கடவுள் வடிவாக வாயிலெந்தும் பொறிக ளாகத், திருநெடுமால் வலம்புரியே மருகாகத், திகிரிமணிச் சிகர மாக,



மிருதிபதி னெட்டுமுயர் திருவாயிற் படியாக விளம்பு மூலச், சுருதி குறும் புலவாக விளங்குமதி சயம்பரவித் தொழுது போந்தான். ()

வடபெருங்கோ புரவாயில் புகுந்துவயி ரவிருக்கை வணங்கி மேருத், தடவரைசூழ் கதிரவன்போற் கோயில்வலம் புரிந்துசன்னி தானம் போற்றிக், குடைதிசைவா யிலுக்கிறைவன் விற்றிருப்பும் பிறதெய்வக் குழாமும் போற்றிப், படலைமதி புனைசடிலச் சோமீசற் பணிந்துபரை பீடம் போற்றி. (௧௩௩)

வேறு.

பொருவரு மாடக் கோயில் புகுதலுந் துவார பால
ரொருவர்நேற் றடைந்தா ரென்ன வொருவர்நா மறியோ மென்ன
விருவரை யமைத்துள் போகி யிணைவிழி களிப்பக் கண்டான்
றிருவளர் துளபமார்பிற் செம்பொன்மா மவுலி யானை. (௧௩௪)

கருணையங் கடலாய் மேனி பாசடைக் காடாய்க் கண்வாய்
திருமுகங் கரங்கா லுந்தி பங்கயத் திரள்கள் பூப்ப
வொருகரம் பணில மேந்தி யொருகரந் திகிரி தாங்கி
யிருசுட ருதய நீலத் தடவரை யெனநின் றானை. (௧௩௫)

கண்டுதன் மனமுங் கண்ணுங் களிபெறப் பரவ முன்ன
ரண்டர்தம் பெருமான் பூசைக் கந்தணர் கொணர்ந்த யாவுங்
கொண்டன னகத்துள் ளாக்கிக் குழுவெலாம் புறத்துப் போக்கித்
திண்டிறற் கோயில் வாயி றிருக்கடைக் காப்புச் செய்து. (௧௩௬)

பச்சைமால் வரைபோன் மேனி பவளமால் வரைபோ லாகு
விச்சைகூர் மனத்தாற் கூர்ம வேட்டுவத் தியானஞ் செய்து
செச்சைவெண் ணீறு சாத்தித் திருவக்க மாலை சூட்டி
யிச்சையி லொருமை கூர விருமையால் வழுத்தல் செய்வான். ()

முத்தனே முளரிக் கண்ணு மூலமென் றழைத்த வேழப்
பத்தியி னெல்லை காக்கும் பகவனே திகிரி யானா
கத்தனே யருள்கூற் கொண்ட கந்தரக் கறுப்பி னானே
நத்தணி செவிய கோவ நாடுதற் கரிய நம்பி. (௧௩௮)

அண்டர்தாம் பிழைக்குங் கட்டா லமர்கறைக் கண்ட மேயா
யண்டர்தாம் பிழைக்குங் கட்டா லமர்கறைக் கண்ட மேயாய்
வண்டுளை வலங்க லார்க்கு மருமதத் தேனிதழி யுள்ளாய்
வண்டுளை வலங்க லார்க்கு மருமத்தே னிதழி யுள்ளாய். (கநகூ)

ஆழியும் வளையு மேற்பா யணிமணிப் பணிகள் பூண்பா
யாழியும் வளையு மேற்பா யணிமணிப் பணிகள் பூண்பாய்
வாழியந் தரங்க மாக மருவுமா திரையை யாவாய்
வாழியந் தரங்க மாக மருவுமா திரையை யாவாய். (கசo)

முத்தலை வரையாய் போற்றி முண்டகக் கண்ணா போற்றி
யத்தனே போற்றி யென்றென் றங்கையைப் பங்க சாதக்
கொத்தென முடிமேற் சாத்திக் குடுமியங் கயிலைக் குன்றி
லுத்தம னருளிச் செய்த வுண்மையைக் கருத்தி லுன்னி. (கசக)

வேறு.

முறுகுவலம் புரிக்கரத்து மான்குறுகப் பெரியவுமாய் முடியின் மீது, சிறியமதிக் கலைகுறுகத் திலகநுதல் விழிகுறுகச் செழும்பூண் மார்பி, னிறையரவப் பணிகுறுக நெடிலவல கமுநிறைந்து நீண்ட மேனி, குறுகுகுறு கெனப்பரவித் திருவடிக்கீழ்க் குறுமுனிவன் குறுகுங் காலை. (கசஉ)

தவம்பெருக வறம்பெருகப் பொருள்பெருகத் தெருள்பெருகச் சைவ மோங்கிச், சுவம்பெருக மனுநீதித் துறைபெருக நிறைபெருகச் சுருதி வாய்மை, நவம்பெருகச் சரியாதி சதுட்டயங்க ளனிபெருக ஞால மெல்லாஞ், சிவம்பெருகக் குறுகியருள் பெருகினன் குற்றாலத் தேவ தேவன். (கசங)

வேறு.

சித்தினாற் கரும்பொன் மேனி செம்பொனும் படிபோற் கும்பன்
பத்தியா லுருகி மாலாம் படிவனே பரம னானா
சத்துட னசத்து மாகிச் சதசத்து மான ஞான
நித்திய நிமலா னந்த நிட்களா சகளா மூர்த்தி. (கசச)

ஆர்த்தன சுருதி வேத மதிர்ந்தன தெய்வப் பேரி
தூர்த்தனர் சுரர்பூ மாரி தொழுதன வடியார் சங்கந்



சீர்த்தன வுயிர்க ளெல்லாந் திரிகூடப் பெருமான் சீர்த்தி
போர்த்தன வுலக மூன்றும் பொலிந்தது திருவெண் ணீறு. (கசரு)

கடுக்கையஞ் சடிலக் குன்றைக் கருணையங் கடலைக் கானூட
நடித்தனை முனிவன் பாத நயந்துகூச் செறிந்து ரோமம்
பொடித்தன புளக மேனி போர்த்தன புயமு மார்புந்
தடித்தன மனமும் வாக்குந் தளிர்த்தன தமிழ்ச்சொல் வேதம். ()

ஆனந்த வாரி மூழ்கி யநுபூதி விபூதி சாத்தி
ஞானந்தன் வடிவ மான நன்னகர்ச் சிவபி ரானைப்
பூநந்த வனத்திற் பூவாய்ப் பூவினாற் புனித நீரான்
மோனஞ்செய் தியான பூசை முனிவரன் முடித்துப் பின்னும். ()

அங்கையா லருச்சித் தேத்த வந்தனர் கொணர்ந்த வெல்லாஞ்
செங்கையாற் கரக நன்னீர் தெளித்துநற் சுத்தி செய்து
கங்கைநீர் செழுந்தேன் கன்னல் கனிகளுஞ் சுரபி யைந்துஞ்
சங்கைசே ரமுத மைந்துந் தமிழ்தரு மலையச் சாந்தும். (கசஅ)

தக்கவா ரமுத மாதி சதவுருத் திரத்தி னாலே
முக்கணா ரமுதை யாட்டி முருகுமான் மதங்கற் பூர
மிக்கபூங் கலவைச் சேறு மெழுகிவெம் புலித்தோ லாடை
திக்குடை கழித்துப பொன்னந் திருவுடை மருங்கிற் சாத்தி. (கசகூ)

பனகமா மணிகள் பூண்டு தலைமாலை பரித்து ளார்க்குக்
கனகமா மணிகள் பூட்டிக் கடிமலர் மாலை சாத்தி
யனகமா மனுவா லட்ட பாலமு தருத்தி யைந்தா
மினமுறு வாசஞ் சேர்த்திப் பாகிலைச் சுருள்க ளேற்றி. கருo

செழுமணிச் சங்கக் கோயிற் றிருக்கடைக் காப்பு நீக்கி
யெழுமணிச் சங்க நாத மியம்பல முழங்கி யார்ப்பத்
தொழுமணிச் சங்க மெல்லாந் துதிசெய்து பரவி யேத்தக்
கொழுமணிப் பஞ்ச வாசங் குயிற்றிய தூப மேற்றி. (கருக)

உய்வகை யியற்றுந் தீபஞ் சோடச வுபசா ரங்கள்
செய்வகை முறையி னாற்றி யைவகைச் சைவச் செந்தீ.

செய்வகை புரிந்து பூசை நிரப்பியா யிரத்தெண் வில்வ
மெய்வகை விளங்கும் வேத விதிதரு மனுவாற் சாத்தி. (கருஉ)

நீலமென் மலர்க ளேவி நிமலனை யுவப்பச் செய்து
சாலுமஞ் சனத்தாற் பூவாற் சாத்துமந் திரத்தி னாலும்
பாலமார் விழியார் கையிற் பூசனைப் பயனை நல்கி
மேலைகங் குழையக் கண்கள் களிப்பமெய் விதிர்ப்ப நின்றான். (கருங)

கானமார் பலவின் முக்கட் கனிதனைத் தேனைப் பாலைத்
தேனொடு நெய்பா லாட்டித் தெரிசிக்கத் தித்தி யாதோ
மோனவா னந்த யோகி முழங்கியேத் தெடுப்ப தானன்
வானமு மடங்காச் சீர்த்தி மனங்கொண்டு வாய்கொள் ளாமல். ()

பராபரா பரம யோகி பராங்கதா பரசு பாணி
நிராமயா நிமலா நித்தா நின்மலா திரிகூ டத்திற்
சராசர மனைத்து மீன்ற தற்பரா சிற்ப ராவென்
றோராயிர கோடி நாம மெடுத்தெடுத் தோதி யோதி. (கருரு)

பிரமனே போற்றி போற்றி பிரமனு மாலுங் காணாப்
பரமனே போற்றி போற்றி பண்ணவா போற்றி வானோர்
சரமச ரங்க ளான சண்பகா டவியாய் போற்றி
மரகதக் கொடிசேர் முக்கண் மாணிக்க மலையே போற்றி. (கருசு)

அன்பருக் கன்பா போற்றி யயனுமா யரியு மாகித்
தென்புலக் குறைவு நீங்கச் சிவமென நிறைந்தாய் போற்றி
முன்பிலா நடுவு மில்லா முடிவிலாப் பிரம மான
வின்பமே திருக்குற் றாலத் திறைவனே போற்றி போற்றி. (கருஎ)

போற்றியென் றேத்தி யேத்திப் புகழ்ந்துசாட் டாங்க மாகத்
தோற்றிநின் றிறைஞ்சு வானைச் சூழ்ந்தமா மறையோ ரெல்லா
நீற்றொளி பழுத்த மெய்யு நீண்டபொற் சடையுங் காணா
மாற்றல னிவனோ சோர்வு வந்ததென் றுன்னே யோர்ந்தார். (கருஅ)

பருவளை யாழி யேந்திப் பங்கயக் காடு பூத்த
கருணையங் கடலைக் காணார் கனவயைத் திரிகூ டத்தி



லொருவொரு வடிவாய்ப் பூமி யந்தர சுவர்க்க மூன்று
மருவியே ரொளியா முக்கண் மாணிக்க மலையைக் கண்டார். (கருகூ)

வரதனே கரிய மாலாய் வளர்ந்துசெம் பவள மேனிப்
பரமனே யாதல் கண்டு பணிந்திலர் மறையோ ரெல்லாங்
குரவனா முனிமேற் கோபங் கொண்டன ரிருளே யன்றிக்
கரவுசேர் மனத்தி னார்க்குக் கதிரொளி பகையே யன்றோ. (கசுo)

மந்திர வடிவாய் நின்ற மாயனை யிலிங்க மாக
விந்திர சாலஞ் செய்தான் யார்கொலோ வென்பார் யாது
தந்திரம் விளைத்தா னென்பார் சைவன்போ னேற்று வந்த
வந்தண னிவனே யென்பா ரறிந்தில மச்சோ வென்பார். (கசுக)

நாமமோ குறியோ விட்டு ஞானமோ நெறியோ பேசித்
தாமமோ துளவஞ் சூடிச் சார்ந்ததும் புணர்ப்போ வென்பார்
காமமோ குறுகிற் றெல்லாங் கள்ளமோ வென்பார் பூசை
யோமமோ செய்மோ பாரீ ருண்மையி லானுக் கென்பார். (கசுஉ)

திருமலை முளரிக் கண்ணன் றிருப்பதி யிருந்தோர் மென்ன
விருமலை வாகக் கூறி யேத்தினு னெம்மை யென்பார்
கருமலை யனைய மாலைக் கண்ணுத லாக்கி நம்பாற்
பொருமலை விளைத்து நின்றான் பொம்மலைப் பாரீ ரென்பார். (கசுங)

நறுமணித் துளவ மாலை நம்பியை நம்ப னாக்குங்
கறுவுகொண் மனத்தி னானைக் கடைகடந் தேகா முன்ன
மிறுகுறப் பிணிப்போ மென்ன வெழுத்தண்டு பாசத் தோடு
குறுகினர் வலியூன் முன்னர்க் கொக்கினத் திரள்போற் கூடி. ()

ஒல்லெலன வருதை நோக்கி யொருகையிற் றருப்பை வாங்கிச்
செல்வனைத் திருக்குற் றாலத் தேவர்நா யகனை யுன்னி
யல்லெனத் திரண்ட காக மாயிரங் கோடிக் காங்கோர்
கல்லென விடுத்தான் முந்நீர்க் கடலினை யடக்குங் கையால். (கசுரு)

விடுத்ததோர் தருப்பை போந்து வேதிய ரடர்ந்து தாக்கும்
படைக்கெதிர் படையாய் மோதிப் படர்தலும் பனவ ரோங்கும்

தொடிக்கரம் வியாதன் மேனுட் சூளுறுங் கரம்போ னறப
வடைக்கலம் பரம யோகி யருளுனக் கபய மென்ருர். (கசுசு)

போக்கிலா தலமந் தோடிப் புகலென்ருர்க் கஞ்ச லென்று
தாக்குமந் திரத்தால் விட்ட தருப்பையைச் சாந்தி யென்னு
நோக்குமந் திரத்தா லாற்றி நூல்புனை மணிறயோர் தம்மைக்
காக்குமந் திரத்தாற் கர்த்தான் கட்டுண்டு மலையங் காத்தான். ()

அனகர்தாள் பரவி யேத்தி யாடகச் சங்கக் கோயின்
மணவுரைத் தமைத்தா லன்ன மதிற்புறம் வலஞ்செய் காலைப்
பனவர்தங் குழாங்க ளெல்லாம் பனிமதி தொடர்ச கோரத்
தினமெனப் பின்செல் வாரை யியற்றமிழ் முனிவ னேக்கி. (கசுஅ)

நாதனுர் சங்க வீதி நயந்துறை தென்மேல் பாலின்
மாதவன் றனைப்பூ சித்து வாழுமின் வாழுங் காலைச்
சீதரன் சமைய மென்றுஞ் சிவபிரான் சமைய மென்றும்
பேதநீர் புரிவீ ரல்லீர் பெருமறை வல்லீ ரென்ருன். (கசுகூ)

அன்னதே புரிது மென்ன வந்தணர் பரவிச் செல்ல
நன்னகர்ப் பரமர் மாலாய் நண்ணிய நாளி லீச
னென்னவு மீசா னத்தி லிருந்தருள் கூத்த னெம்மான்
செந்நெறிப் பூசை செய்யுஞ் சிவமறை யவரைக் கூவி. (கஎ0)

ஆங்கவர் மகார் சிருர்க ளனைவர்க்கும் வேத நூல்கள்
பாங்குற வுணர்த்தி நாலே ழாகமம் பயிற்றிப் பண்பா
லோங்குறு சிவபு ராண முணர்வித்துச் சைவ பூசை
தாங்குசீ ரொழுக்கஞ் சொல்வான் றத்துவ முதலா மன்னே. (கஎக)

3 - திருமால்சிவபிரானுன சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௩அ௫.

## நான்காவது :—சிவபூசைவிதியுரைத்த சருக்கம்.

குதமேலங் குலியிரண்டி லடப்பம் பூப்போற் குலவுமூ லாதாரங் குறிசேர் நாற்கோ, ணிதமுறுசு வாதிட்ட நாபித் தானத் திளம்பிறை போன் மணிபூர மினயபு முக்கோண், விதமுறும நாகதமே மார்பு



கண்டம் விசுத்திபாக் கினைபுருவ நடுவில் வட்ட, மதகயமா மூலன் முதலோ ரறுவர் தேவர் மண்முதலாம் பூதமிவை யாரு தாரம். (க)

சோதிசிவஞ் சத்திசுதாக் கியமே யீசஞ் சுத்தவித்தை யெனச் சிவதத் துவமைந் தாகு, மாதிகலை காலம்வித்தை நியதிமாயை யராகமே புருடனென வித்தை யேழாம், பூதமைந்து பொறியைந்து புலன்க ளைந்து புகல்கருமேந் திரியமைந்து கரண நான்கும், பேதவுயிர்த் தத்துவமா மிவையா ருறும் பிறங்கியவுட் கருவியெனப் பேசு நூலே. (உ)

வானிடமாய் நின்றுசெவி யறியுஞ் சத்தம் வளியிடமா யுடல் பரிசந் தெரிக்கும் வன்னி, தானிடமாய் விழியுருவந் தன்னைக் காணு, ந் தண்புனலா வருந்துசுவை தெரிக்குந் தானு, நானிலத்தால் வருமணத்தை யறியு நாசி நண்ணுவாக் காதிகள்வா ளுதி யாலே, மேனிரலே வசனமொடு கமனந் தானம் விசர்க்கமா னந்தமிவை விளைக்குந் தானே. (௩)

நினைப்பொடுசஞ் சலமருந்தாற் புரியு நெஞ்சு நிகழ்கரும நிச்சயிக்குங் கனலாற் புந்தி, புனற்செயலாற் சித்தநினைத் தழியும் பாராற் புடைத்தெழுமாங் காரமிவை போக்ய காண்டம், வினைச்செயலின் மிகுதிகலை வித்தை ஞான மிகுதிநிசஞ் செயுநியதி யராக மிச்சை, கனத்தபலஞ் செயுங்கால மறைக்கு மாயை கருவிசுற்றும் புருடனிவை போக காண்டம். (ச)

சுத்தவித்தை சத்தமுந்தல் விடய மூட்டுந் தொழின்மூட்டு மீசுரனோர் செயுஞ்சு தாக்யஞ், சத்தியது ருசுப்பிக்குஞ் சிவமே யான்மாத் தற்செயல்செயீ விக்குமிவை பிரேர காண்ட, மொத்தசிவ முதலைந் துஞ் சுத்த மாயை யுயர்கலா திகளேழுஞ் சுத்தா சுத்த, மொய்ந்தயார் முதலறுநான் கசுத்த மாயை முந்துபதி பசுபாசு முறையிற் காண்மின். (ரு)

தோலெலும்பு நரம்புமயிர் தசைபார்க் கூறு சோரிசுக்கு மேதை மச்சை நீர்நீர்க் கூறு, மாலுறுநித் திரைபயமா காரஞ் சோம்புமைதுனம்வன் னியின்கூறு நடத்த லோடல், சாலுநிலை யிருத்தல்

கிடைத் காற்றின் கூறு சலமதமாற் சரியமொடு மோகலோப, மேனு யர்வான் கூறின்வக விருபா னைந்தும் வியன்பூத காரியமென் றியம்பு றாலே. (௭)

பத்தியெழுத் துள்ளொளிருக் குமைதி யானம் பைசந்தியுரையா ம இரைத்தல் பாரின், மத்திமையாம் வைகரிமற் றெவருங் கேட்ப வசனித்த லிவைநான்கும் வாக்கா மத்தம், புத்திரவே டணையுலகே டணைமூன் றுகப் புகலரிய சாத்துவிக மிராச தத்தோ, டொத்ததா மதமுமெனக் குணமூன் றுரு முத்தமமத் திமமதம முறையி னுமே.

உதானனனை நிறைக்குமெங்கும் வியானன்வியா பிக்கு முறுச மைந்த மூனன்மலம் விடும பானன், சதாவுயிர்க்கும் பிராணனிவை யெய்வ வாயுத் தருகேவ தத்தன்வியர்ப் பேர்ட்டல் கோபம், விதானங் கிரி கரன்றும்மன் மயிர்புளகங் கூர்மன் மிகநீட்டன் மடக்குதல் கொட் டாவி நாக, னதாவுயிர்போய்த் தனஞ்செயன்மேல் வெடிப் பித் தேகு மைந்து கன்ம வாயுவென வாயுப் பத்தாம். (அ)

வலப்பாலின் சுழுனையையுய்த் திடப்பர்ன் மாறி மண்டலமூன் றிடைபின்டமா றுடி மேலேத், தலத்தேறிச் சிரத்துநின்று வலப்பா ஞசித் தலத்துறும்பிங் கலையிடையு மிடப்பா லற்றே, தலைப்பான் மை மூலநடு நாடி யாகிச் சடாதார மேடுருவி மேலா தார, நிலத்தே றிப் பிரமரந்த ரத்தை முட்டி நெடுநாசி யிரண்டிடனுறுஞ் சுழுனை நாடி. (௯)

மூலமுதற் கண்ணளவாம் புருடன்காந் தாரி முதுசெவியி னளவா கு மத்தியலம் புருடன், றுவிற்சிங் குவைநாடி நாபியிடைத் தோ ன்றிச் சங்கினியே குய்யமுழுங் குருகுதத்தி னளவா, மேனுமிவை க்சநாடி தசவாயுக் குணமூன் றேடணைகண் மூன்றுபூ தியமிருபத் தைந்து, போ னுநால் வாக்குவச னுதியையந்தோ டறுபான் புறக்கரு வி யாகவுந்தத் துவந்தொண் ணூற் றுறே. (௧௰)

நரம்புதிரந் தோலெலும்பு விந்துமூல நாறுதசை யெனவோதுந் தாது வேழாம், வரம்பறுமோ கங்காம மதங்கு ரோத மாற்சரிய மூலோபமென் றுட் பகைக ளாறு, மருந்து மன்னம் பிராணன்மனம்



விந்ஞா னத்தோ டானந்த மயமெனவுங் கோச மைந்தாம், புரத்தவ ன்சேனையைக்கடைந்தோ றிருத்தி யுள்ளே புகுதல்போற் புகும்புரு ட னவத்தை யைந்தே. (௧௧)

மாத்திரைகள் பத்துடனிந் திரியம் பத்தும் வாயுவி ரைந்துமந் தக் கரண நான்கு, மேத்துபுரு டனுறுதலின் முப்பத் தைந்தா வி யையவதுசாக் கிரங்களத்திந் திரியம் பத்துந், நீர்த்ததுசொப் பனமன த்திற் புருடன் வாயு சித்தமுறல் சுழுத்தி சித்த மொழித்திரண் டோ, டார்த்தவுந்தி நிலைதுரிய மவைவிட் டேகி யனுமூல மலத்து றல தீத மாமே. (௧௨)

அவ்வகைய தத்துவங்க ளனைத்து மாயை யருங்கன்ம மிரண் டாகு நன்மை தீமை, யெவ்வமுறச் செம்பினுறு களிம்பாய் முன்னே யியலறிவை மறைத்தலா ணவமா மந்தத், தவ்வனூறு மும்மலத்தி னழுந்து மான்மாச் சகலங்கே வலஞ்சுத்த வவத்தை யெய்தும், வவ் வனூறுங் கருவியெலாங் கடந்து மூல மலத்தழுந்தித் தனியுறல்கே வலமா மன்றே. (௧௩)

கருவிகர ணங்கள்சில பிரிந்துஞ் சேர்ந்துங் கவனமுற்று நரகு சொர்க்க புவன மூன்று, மிருவினைப்போ கம்பொசித்தல் சகலா வத் தை யிவையிரண்டும் பிறவிகட்கு வித்தே யாகும், பொருவரிய திரு வருளா லவத்தை யைந்தும் பொருந்தியதீ தத்துறுதல் சுத்த மாகு ம், பெருகிடுமிவ் வழியகனைப் பூசிப் பார்க்கே பிறங்கியிடும் பூசைவிதி பேசக் கேண்மின். (௧௪)

## வேறு.

பத்தியும் பயமு மன்புநன் னெறியும் பண்புமா சாரமு மொரு மைப், புத்தியுஞ் செனன வாசனை யுடையார் பூசனை புரிவதற் குரி யார், சித்திரப் பொதுவி லாடுமெம் பெருமான் சேவடி யருச்சனைக் கமைந்த, சுத்தியைந் துளவா மவையினிற் பூத மானத சுத்திதத் து வத்தால். (௧௫)

கடிகையோ ரைந்து விடிவதற் கெனவாங் காலையிற் கறையினி லெழுந்து, சடுதியி னியன்ற சுத்தியா னீறு தரித்துருக் கிரஞ்சதா

சிவனை, வடிவுற நினைந்து தொழுதெழீஇப் புறம்போய் வடகுண
லலாத் திசையி, னெடியபொற் சிகரந் தெரிகலா விடத்து நீர்க்கரை
பசுநிலை மடங்கா. (௧௬)

விளைநில மறுகம் பூமிரன் னீழல் விடுத்துமேற் சுத்தமே மயா
னஞ், களர்நில மகன்று மதிபசு மறையோர் கதிர்நிகை பிறவுநோக்
காது, கிளர்தரு நாசி நுதியினை நோக்கிக் கிழொரு திருணமிட் டொ
லியல், படர்சிரஞ் சேர்த்தித் தென்றிசை யிரவும் வடதிசை பகலு
ம்பார்த் திருந்து. (௧௭)

கருத்துறை யகற்றி மலங்கழித் தேமண் செங்கல்காட் டாதியா
ற் சுத்தி, வருத்திநின் றிடக்கை குறிகழீஇத் நிர்த்த மலாதநீர்க் கொ
ருமுழம் வதிந்து, பொருத்துகா ரல்லா விருதுவி லெடுத்த பூவின்மண்
குதத்தினி லைங்கா, வுரைத்திடுங் கோசத் தொருதர மிடக்கைக்
கொருபதின் காலென வுரைத்து. (௧௮)

இரண்டுகைக் கெழுகா லிரண்டுதாள் மூலத் தொருதர மேனைக்
கொடு கழுவி, யொருங்குறச் சவுச முடித்தபின் பேன முறுப்புனல்
கொண்டுநன் னிலத்து, ளருந்திஞ்ச வடக்குக் குணக்கிவை நோக்கி
யாசம னத்தொழில் புரிந்து, நரந்தமா விருப்பைக் கடுமகிழ் கடுக்கை
காவல்பூ விறலிநா யுருவி. (௧௯)

சங்குமா தவியே தாதகி செயலை சண்பகம் வன்னியிக் கழிந்தி
ல், பொங்கெழிற் கடம்பு முதலவும் பான்முட் பொருந்திய தருவுமா
மவையிற், பங்கமா நற்பாண் மரந்தொடு தில்லை பயிர்முதற் கழி
ப்பநாண் மரத்தி, லங்குல மெட்டுத் துறவியேற் கிருகிக் காறிரண்
டொருவிரற் பருமை. (௨௦)

அறுதொழி லாள ரல்லவர்க் கொவ்வோ ரங்குல முறையினிற்
குறைத்துத், துறவியர் வடக்குங் கிருகியர் கிழக்குஞ் சொல்லிய திசை
களிபார்த் திருந்து, முறுவன்மா கொழிப்பர் நவமிசங் கிராந்தி முற்
றிதி மூவிரண் டுவாக்கள், பெறுவிதி பாதங் கழிப்பர்மா றைக்கர் பிற
ந்தராக் கொள்வர்பற் கொம்பு. (௨௧)

தந்தகாட் டாதி தருபவ ரில்லாத் தலத்தினும் விலக்குறு தினத்
து, மந்தமார் புனிதத் தழையினல் விளக்க வன்றெனி லுதகம்வாய்



வார்த்து, வந்துபன் னிருகா லுமிழ்ந்திட வுநறுன் மணிநகைச்சுத்தி
யா மதற்பின், முந்தியா சமன முடித்துநல் விதியான் முறைபெறத்
துறையினீ ராடி. (௨௨)

சந்திவந் தனைகள் புரிந்துநீ றணிந்து தக்கசீ ரக்கமா மணியைக்
கந்தரத் தறங்கள் கைக்கணி யருக்கர் கரோடிகை தத்துவ மார்பிற்
பைந்தொடை பரியூர் வடமெழுத் தாகப் படிகந்துப் பாரமூ வகை
பொன், வந்கோத் தணிக சிரத்தினி லகை மணிகுழை யங்குலி ச
மையம். (௨௩)

சந்திர மவுலி விழிமணி யதிகந் தரிப்பதிற் சகத்திரம் விசேட
ஞ், சிந்தியா வைந்து பதஞ்சொலிப் புனைந்து திருக்கடை துறந்துபொ
ற் கோயில், சுந்தரத் தூபஞ் சுடர்விளக் கியற்றிச் சுத்திசெய் தெம்
பிரான் பூசை, முந்துறு தருப்பை சமிதைமஞ் சனம்பூ முதற்றிர
வியமெலாங் கொண்டு. (௨௪)

வேறு.

நித்தியநை மித்திபங்கா மியமாக மூன்றினுநித் தியமாம் பூசை
யத்திநிமே பதினம்வாரம் பிரதோட மயனம்விழுச் சங்கிராந்தி
யொத்திருமண் டலமெனவோ ரொன்பதுநை மித்தியநான் குனர்ந்
வைத்தசா னித்தியம்வற் சரபூசை மாதவிழா மாத பூசை. [துங்காலே

தவனபூ சனைகிருத்தி காதிபந் தீபவளி சங்கபூசை
கவனைவே தனமெனவுங் காமியமோ ரைவகையாய் நடப்ப தாகு
மிவைகளின்ம காசந்தி காலையுச்சி மாலையுடன் யாம நான்கா
முவகால மருணசந்தி யுழக்காலஞ் சிறுகாலை நிசியோர் நான்கே. (௨௫)

இன்னவையிற் பூதசுத்தி யிலிங்கசுத்தி மானதமுன் னியற்றும் யாவு
மன்னதினீ ரத்திரத்தாற் புரோக்கித்துக் கயமுகனை யருச்சித்தே த்தி
முனனுறவா சூரியன்சொன் மந்திரத்தாற் சங்கற்ப முறைமை போற்றிக்
கொன்னுமாசந் தனத்தோயங் கங்கைமுதன திமேழாற் குடம்பூரித்து.

மந்திரத்தாற் புண்ணியயா கம்புரிந்து நவகலச மருங்கு சேர்த்துக்
கந்தநீர்க் கும்பமுதன் முறைசெபித்து நறியபஞ்ச கவியங் கூட்டி
யந்தமுற நெய்தயிர்பால் சர்க்கரைதே னைவகையா லமுதஞ் சேர்த்தி
யுந்துசிவ மந்திரத்தா லமைத்துவிதி முறைசாந்தி யோமஞ் செய்து.

காந்தமிப்பா கீனைப்பரவிச் சந்தனு நிந்தபிலங் கவிய மாட்டித்
தீதறுகம வகையமுத நறுநெய்பா லினியதயிர் செழுந்தேன்கன்னன்
மீதுபல கனிச்சார மிளநீர்சந் தனத்தோயம் விதிநீர்க் கும்ப
மாதியபி டேகமிவை யாறிரண்டு மனுவினுவந் தாட்டுங் காலை. (௨௯)

கந்ததயி லத்தின்மிசை நெல்லின்மாக் கவியமிசை கனிச்சம் பிர
மைந்தமுத மீதுநெல்லி துப்பின்மேல் வெந்நீரக் காரம் பான்மேற்
பைந்தயிர்பின் சிறுபயறு தேன்மீதிற் புட்பசலம் பரிவாங் கன்னற்
பிந்துகழு நீர்க்கொட்டம் பஞ்சவில்லம் பலோதகத்தின்பின்னராகும்.

இன்னவகை மாவிலங்கு கொச்சிவிளா வில்வமது கிவையா லாட்டி
யன்னதற்பின் பாயசமா மமுதேற்றி யரும்புகைகர்ப் பூர தீப
நன்னெறிநீ ராஞ்சனதி பங்கொடுத்து நனிபெருகு நாளிகேரப்
பின்னர் கந்த தோயமதிற் பின்னரன்ன வபிடேகம் பெரிதி னாட்டி.

தூபமொடு கருப்புரதீ பங்கொடுத்து வில்லுவநீர் சொரிந்து பின்னர்
மாபணில நீராட்டி நவகும்ப வபிடேக மனுவாற் செய்து
மீபொலிமந் திரபுட்பஞ் சாத்திமந்தி ரானமுயர் வியப்பா னாட்டித்
தாபனப்பூந் திருமேனி சூழ்ந்துதிரு வொந்தாடை சாத்தி மாதோ.

பொன்னுடை யுத்தரிக மிசைச்சாத்தி யுபவீதம் புனைந்து சாந்தம், பன்னீர்குங் குமக்குழம்பு புழுகுமான் மதமெழுகிப் பமூரந் தூவிக், கொன்னுரு மணிமகுடங் கேயூரங் கண்டிகைகுண் டலம் பொற் கோவை, முன்னுர வடம்பலவு மணித்துமரு மலர்மாலை முறையிற் சாத்தி. (௩௩)

பொருட்கலத்திற் சுத்தான மமைத்துநிவே தன்முறையிற் புரிந்து தீபங், கருப்புரத்தா லியற்றியபின் பண்ணியங்கஞ் முக்கனிகள் கருனை தீம்பால், வருக்கவகை யமுதேற்றிச் சுருளெடுத்து மணித் தூய தீப மேற்றி, யருட்கவிகை கண்ணாடிசா மரைமுதல பல்லியங்க ளார்ப்ப வேந்தி. (௩௪)

மூற்றுமறை தமிழ்ச்சுருதி பாடலொடு திருச்சின்ன முழங்கத் தேவி, சிற்பரைக்கு மிவ்வகையே யருச்சனைசெய் தாலயந்தழ் தே



வுக் கெல்லாம், பற்பலராற் பூசனைக ளியற்றிவினி யோர்க்கிடல் படிமைப் பூசை, மற்றுள்ளி சேடபூ சனையுமா கமத்துரைத்த வகையாற் செய்மின். (௩௫)

அகமகிழ்ந்து சுத்தசல மபிடேகந் தொறுமிடையி லாட்ட வேண்டு, நிகழுமதுக் குளவளவை ததிபாலிவ் விருமடங்கு நெய்நாற் பாகந், நிகழுறச்சேர்த் துவ்வமிர்த மைந்தாகு முயர்திருமஞ் சனமேந் நாளும், பகலெடுத்த திரவினுமா மிரவெடா நெடும்பர்கனல் பசும் பொன் காட்டி. (௩௬)

வேறு.

முருகல ரலரி வில்வ மூவிதழ் வில்வம் பற்ப
முருவநாற் றிதழ்ச்செங் கஞ்ச மூயர்ந்தநா யுரிஇ தருப்பை
சுருள்விரி தள்வஞ் சாதி தும்பைவெள் ளாக்க ணைஞ்சிர்
பெருகும்வெள் ளெருக்கம் வாசப் பெருந்தும்பை கழுநீர் நீலம். ()

உரைத்தமூ வைந்தி லொவ்வொன் றுயிர் மூயர்ச்சி நீல
மருத்தமா மலர்போ லென்றுங் கழுவியுஞ் சாந்த லாகுந்
தரித்தபத் திரங்கட் செல்லாஞ் சதமடங் குயர்ச்சி சாலு
மருக்கொழுந் ததன்மேல் வில்வ மாயிர மடங்கு மாதோ. (௩௮)

காமியம் பதங்க ளோக்கால் யோகச மசிதஞ் சானு
வாமங்கா ரணந்தி பத்தங் குறங்குருக் குமம்லாழ் குய்ய
மாமியற் சிந்தி யந்தா னங்குலம் விமல நாற்கை
தூமுது கஞ்சு மானே சுப்பிர பேத முந்நி. (௩௯)

விசையமே வயின்சு வாயம் புவ்ந்தனம் வீரங் கண்ட
நிசுவாசந் துண்ட மார்பு சந்திர ஞான நெற்றி
வசையறு சித்தம் விம்பம் வதனங்க ளாக்கி னேய
மிசைபுரோற் கீதமே நாவு ரவுரவ மிலங்கு கன்னம். (௪௰)

திரலளி தங்க போலஞ் சென்னியே மகுட மேலைப்
பாமேசந் தரள மாலை பரிவட்டம் வாது ளஞ்சிர்க்
கிரணமா பரணங் காலோத் தரங்கிளர் சாந்த மென்பர்
தருசரு வோத்த மந்தான் பூணூல்சந் தனங்கள் ளப்பூண். (௪௧)

எங்குமே நிறைந்தோர்க் கிவ்வா றுகம மிருபத் தெட்டு
மங்கமே யவைகட் கெல்லா மகுடமே யுத்த மாங்கந்
சங்கமே மறுகு சூழ்குற் றாலமே தலங்கட் கெல்லாந்
துங்கமே மகுட பூசை தொன்றுதொட் டமைந்த தன்றே. (௪௨)

பரவுமா வாக னந்தா பனமுயர் சன்னி தான
நிரோதன மவகுண் டஞ்சீர் முத்திரை நிகழ்பாத் தியம்
பொருவிலா சமன மேயர்க் கியம்விரி புட்பந் தூவல்
வரதனைப் பூசை செய்யுந் தேசிகர் வகையி ரைந்தே. (௪௩)

வேறு.

தாபிலமா ரோக்கியமாத் திருமகளைக் கம்விசையர் தருஞ்சம்பிர, மியன்மகப்பே றுச்சியமைக் தமிர்தமிரா சதநெல்வி யினிதாஞ் செல்வம், பயமதுசத் துருநாசந் ததிக்குமகப் பெருகும்வெந்நீர் பல்கும் வாழ்நா, ளுயர்குளோ தகம்பயற்றின் பொடிக்கிராச் சியத்தோட மொழியு மாதோ. (௪௪)

தேனிரா சதங்கருப்பம் பாலினுக்குத் திருமடந்தை சேருஞ் சீதப்
பானீயஞ் செங்கழுநீர்க் கொட்டமிவை பிறவிதெறும் பலோதகங்க
ளினபா தகந்தீர்க்கு மியல்பெறுசந் தனத்தோய மிளநீர் தம்மா
லானராச் சியத்தினுக்கு மரசருக்கும் பெரிதுசுக மாகு மன்றே. ()

அன்னமபி டேகமன்ன சமிர்த்திகூ விளத்தோய மதனு லென்று, நன்னர்பெறும் புத்திமுத்தி யுண்டாகுஞ் சருவசித்தி நத்தின் னேயஞ், சன்மலிசீர் நவகும்ப மிராசசுகம் புவனிசுகஞ் சாந்தி யோமம், மென்மலர்மந் திரபுட்ப மந்த்ரானங் கொள்ளையதி விருட்டி நீங்கும். (௪௬)

வூத்திரம்வந் திரலாப மலர்மோக்க முபவீத மகத்தின் பேரு
முத்தமசந் தனுக்குழம்பு பெருஞ்செல்வ மமுதேற்ற வுயர்சா ரூப
மெய்த்தூப மாசமன மருக்கியஞ்சா னித்தியமாம் விமல மூர்த்தி
மொய்த்தமணி யொலிக்கிராக் கதநிவிர்த்தி தீபமுயர் மோக்க மாகும்.

அக்கரா லத்தியுயர் சித்திதரு மமலகருப் பூர தீபஞ், செக்கமலை
கோத்துறு நாஞ்சனைஞ்சத் துருநாசந் திருவெண் ணீறு, தொக்கபு



வி யாட்சிதரும் பூமடந்தை யருள்பெருகுஞ் சுருள்கொண் டேத்த
முக்கணன்முன் னுறநடிப்பன் சத்திரஞ்சா மரஞ்சுருதி முதற்பா
டற்கே. (௪௮)

மத்தளந்தா னியவிருத்தி கரடிசயம் வளர்படகம் பாவநாச
மெய்த்திமிலை தொடர்காமி யம்பலவு நல்விருத்தி விதித்த யாவு[லை
நித்தமெனி லொருமடங்கு பிரதோடஞ் சதமடங்கு நிகழ்த்துங் கா
யித்துணையுந் திரிகூடத் தியற்றலாயிரமடங்கென் றிசைக்கும் வேதம்.()

வேறு.

என்னவா கமங்கள் யாவு மியன்றசி ரொழுக்கம் யாவு
முன்னுற வுணர்த்தி மூன்று தீக்கையு முறையின் முற்றி
யன்னவர் தமைப்பொற் பீடத் தமைத்தபி டேகஞ் செய்து
நன்னகர்ப் பெருமான் மூல நாமமந் திரங்க ளோதி. (௫௦)

நித்திய முதல மூன்று நிகழ்சரி யாதி நான்குஞ்,
சுத்தியோ ரைந்தும் பூதி சாதனத் தொடர்புந் தொண்டர்
பத்தியெண் வகையு மைந்து பதமுநாற் கதியு மேலை
யத்துவா வாறுங் கூறி யருச்சனை புரியி னென்றான். (௫௧)

மன்பெருந் திரிகூ டத்து மாயனைப் பரம னாக்கித்
தென்புவிக் கோட்டந் தீர்த்துத் தேவர்மா முனிவர்க் கெல்லாங்
கொன்பெருந் தகைமை பூண்டான் குறுமுனி யம்ம விசு
னன்பர்தம் பெருமை தன்னை யாவரே யறிதற் பாலார். (௫௨)

புரிசடைத் திரிகூ டத்தெம் புனிதனை யின்ன வாறே
தெரிவுறப் பூசை செய்யுஞ் சிவமறை யவருட் டானு
மொருவனென் றிருந்து பூசித் தோங்குசீ ரலவ னாதி
வரிசிலைத் திங்க ளீரு வதிந்தனன் மலைய யோகி. (௫௩)

இதுதமிழ் முனிவன் செய்கை யென்னனு மவனுக் கோது
மதிசயப் பரம சிதை யெட்டினு ளசலந் தீர்த்தம்
பதிசிவம் பரைய லாவும் பகர்ந்தனை யிரண்டி லேனைக்
கதிதொடர் வேடன் செய்கை கழறெனக் கழறுஞ் சூதன். (௫௪)

4-சிவபூசைவிதியுரைத்த சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௩௩௧.

மருவி மாலை யிருத்தகை வாரணம்
வெருவி மாலைமென் காந்தளைத் தீயென
வொருவி மாலையின் மேற்பிசைந் தூற்றுநீ
ரருவி மாலை யணிதடங் குன்றமே. (க)

கூரல் வேலிச் சிறுகுடித் தோகைமார்
வேரல் வேலியில் வேட்டஞ்செய் வேடர்மேன்
மூரல் வேலியிட் டாலென முத்தமார்
சாரல் வேலியுங் கோல்லிச் சயிலமே. (உ)

வேறு.

அத்த லைப்பெருங் கிரியினை ரரியினை முறழ்வோர்
மைத்த லைக்கருங் கடல்புரை மேனியர் வடவைக்
கொத்த லைத்தன குஞ்சியர் கொடியபா தகங்கள்
வித்த லைப்புரி வினைப்பெருஞ் சிலைக்கைவே டுவரே. (ங)

ஐவ னத்தினை யரிதல்போ லகிலொடு சாந்த
மெய்வ னத்தினை யெறிந்தனர் முறைமுறை தெளித்துக்
கொய்வ னத்தினை யழித்திடுங் கிளிக்குலந் துரப்பத்
தெய்வ நத்தினைப் பொருகளக் கிளியினஞ் செறித்தார். (ச)

மருமல ர்க்கொரு தாளென நீத்தவஞ் சியரை
யருகி லத்திரு தாள்பெறு மிதணின்மே லமைத்துப்
புருவ விற்களும் பொருவிழிக் கணைகளும் போதா
திருக ரத்தினிற் கற்களுங் கவண்களு மீந்தார். (ரு)

இருஞ்செ விக்கிடை யேனலங் கொடிச்சிய ரிசைத்தே
னருந்தி டத்திரி வாரமு தரசன ரவர்க்கு
மருந்தி டத்தினந் தேடுவ ரரம்பையர் வரைமேல்
விருந்தி டத்தினந் தேடுவர் வேள்விவே தியரே. (சா)

குன்றின் மேற்சரு கருந்தியும் வருந்தியுங் குகைவாழ்
தென்று மேயினை யாரெனு முனிவரோ விளையார்
முன்ற லோதியர் கிளிகடி மழலைவாய் மொழியி
னொன்று தேனிசைக் குருகியே யிளைத்தன ருடலம். (எ)



கனத னத்தியல் சிவந்தவாய்க் கருங்கணி செயரை
வனசு ரப்படர் வளர்புனங் காக்கவோ வைத்தார்
புனம ழிக்கவும் பொருப்பில்வாழ் முனிவர்தந் துறவுந்
தனைய ழிக்கவுந் தவத்தினை யழிக்கவு மன்றோ. (அ)

கொங்கை யாற்கரி நடையினாற் பிடிகுளிர் புனத்து
மங்கை யார்விழி யாற்பிணை சாயலான் மயில்கள்
பொங்கு மின்னிசை யாற்கிளி யினமெனப் புகுந்த
செங்கை மேற்கவண் கல்லொலா மிசையினாற் சிதைந்த. (கூ)

கூன லங்குர மகிழ்தரு கோதைய ரோச்சும்
பான லங்குர லோசையே பசுங்கிளி யழைப்ப
வேன லங்குர லழிந்தன விழிந்தன புனமுங்
கான லங்குர லடிகளும் பிடிகளுங் களுல. (க0)

கிருப்பு றம்புன மழிதரு முழிதர விரவிப்
பொருப்ப ரானவர் கானவர் கணத்தொடும் பொதுளிச்
செருப்புந் தோல்களுஞ் செறித்துவார் சிலைகணை பிடித்து
நெருப்புங் காலுமொப் பாமெனத் திசைதொறு நிறைந்தார். ([illegible])

வேறு.

கொம்பு கோடுடை வேடுவர் கூர்வலை
யம்பு வில்லெறி வல்லைய மாடல்வாள்
பம்ப மூசினர் பைம்புனப் பாவைமார்
வெம்பு மூரம் விழிப்படை மொய்த்தல்போல். (கஉ)

மானை யுங்கட மானையுந் தாக்குவா
ரானை யும்பிடி யானையுஞ் சூழுவா
ரேனை மாக்கள் சுவடெடுத் தேகுவார்
பூனை போல்வர் புலியெனப் பாய்வரால். (கங)

வேறு.

வெடிகு ரற்குல மதகய மெதிர்தலும் வீர
ரடிவ யிற்றிடை மலைமழை யசனிபோ லுழைந்து
துடிய டிக்கிடை யோடிப மருப்பினைத் துமித்து
நெடிய மாலெனக் குத்துவர் மத்தக நெரிய. (கச)

கொல்லு குத்திர வேங்கைமேற் குதித்தலுங் குதியார்
வில்லு குத்திடு கொடுங்கணை விடுத்துவாய் கிழித்துப்
பல்லு குத்துகிர் காலொடுந் தணித்துடல் பதைப்பச்
செல்லு குத்தெனச் செறிபடை வாளினாற் சிதைப்பார். (௧௫)

கரீடி யைப்பெருங் காரெதிர் குறைபோற் கதையான்
முரடி ருத்திய முசுண்டியாற் சிரமதின் முருக்கி
யொரடி முற்புகுந் திரடி பின்னிழுத் துலைத்துப்
பரடி ருத்திவெங் காலினா லுதைப்பர்மெய் பதைப்ப. (௧௬)

பன்றி யைப்பிறை மருப்பொடுங் கீழிடும் பார்வை
துன்றி நிற்றலி னெதிர்செலா திடம்வலஞ் சுலவி
வென்றி வட்டமு நீளமுஞ் சிலம்பங்கள் விளைத்துச்
சென்றி ருட்கிருண் மலைந்தெனச் சாரிகை திரிவார். (௧௭)

தடறு ரீஇக்கொடு வாள்விதிர்த் தெதிர்தலுந் தரியா
மிடறு டைத்ததிர் குரலொடு திசைதிசை விரவக்
கடறு கட்டினர் கைவலை வீசினர் கலந்தா
ரிடரு பட்டொரு புவனமுன் குதித்ததோ ரெறுழி. (௧௮)

குடபு லத்தினர் வடபுலத் தினர்குண புலத்தோ
ரிடம்வ லத்தினும் விலகினர் விலகுறு திவனே
வடபு லத்தெழு கனலியைத் தென்றிசை மறித்தான்
கடவு மஞ்சினைப் பஞ்சவன் வளைத்தமை கடுப்ப. (௧௯)

புண்கி ளைத்திடப் பல்படை யோச்சினன் பொருவான்
மண்கி ளைத்தெதிர் வருதலும் பொருதல்பின் வாங்கான்
விண்கி ளைக்கிலும் விடானெனச் சூகரம் வெருவிக்
கண்கி ளைத்திடாத் திசைதொறு நுழைந்துபுக் கதுவே. (௨௦)

மலைந்த சாரியிற் சரியையர் போல்வலம் வருவா
னலங்கு பூச்சரஞ் சொரிதலிற் கிரியைய ராவான்
சிலம்பு கான்புகுந் தொளித்தலிற் பொறிபுலன் சேர்த்தி
யுலைந்தி டாதொளி யிருத்தலின் யோகிய ராப்பான். (௨௧)



வேறு.

காணுமுன் சகலரைப்போற் சுவடுகண்டாற் பிரளயா கலர்போற்
கண்டுஞ், சேணுகில் விஞ்ஞான கலரைப்போன் மலந்திரியத் திரிய
வேடன், மாணுக்க னெறிபார்க்கும் பாவனையாற் பரிசத்தால் வன்
கட் கேழல், கோணுர்ந்த குண்டமண்ட லாதிகளா னெறிவருத்துங்
குரவன் போலும். (௨௨)

இனமானின்கணங்கூடிப்பிரியுமிடந்தொறும்பிரியாதேகும்வேடன்
வனமான தத்துவம்விட் டகன்றேறு மகலாத மலமே போன்றன்
புனமேறிக் கான்வரைதாய்த் திரிகூடம் புகுமேனம் புகுதாச் சுத்த
நனவேறிக்கனவகன்றுசுழுத்திபோய்த்துரியமதைநணுகுவான்போல்

வேறு.

தாவு நீர்ச்சிவ மதுகங்கை சண்பகத் தடாகம்
வாவி மேற்றடா கத்துலாய் மந்தமா ருதஞ்சூழ்
காவி லெங்கணுஞ் சுலவலாற் கமழ்திரி கூடத்
தேவர் தேவனைத் தேடுமோர் சூகரஞ் சிவனும். (௨௪)

நிலைய ழிந்துபோய்ப் பள்ளியங் கானிடை நெரிந்து
வலைசு ழிந்துகை வாள்விசை மடுத்துவல் வேடன்
சிலைபி லம்பொரீஇ வளாதடி பிழைத்தொரு செழுங்கா
ரலைப டிந்தென வருவியந் தடத்துவீழ்ந் ததுவே. (௨௫)

வெருவி வீழ்தலும் வேடனுங் கயத்திடை வீழ்ந்தா
னருவி யந்தடம் புகலென வடைதலா லதுவே
செருவி லேற்றெனச் சென்றெதி ரேற்றதோர் வன்மீன்
பொருவில் சூகர நீந்திநீர் கடந்துபுக் கதுவே. (௨௬)

வால றைந்தெதிர் வாய்மடுத் திடங்கர்மா வலிப்பக்
கோல வெஞ்சிலைப் புனவனுஞ் சினவிமேற் குதித்தா
னேல வெங்கர வாளினாற் கிழிக்குமுன் னிவன்றன்
மூல மேனியை யெயிற்றினாற் கிழித்தது முதலை. (௨௭)

நிலத்தி லோடுதேர் நீர்புக லரிதுநீள் கயமாஞ்
சலத்தி லோடமுந் தரைபுக லரிதெனுந் தகைத்தால்

வலத்து வேடுவ னிடங்கராற் புனலிடை மாய்ந்தா
னிலக்கு ளார்தமை யெளியரும் வெல்வரே யிடத்தால். (௨௮)

கொலைசெய் பாதக னாகியு முயர்திரி கூடத்
தலைசெய் சித்திர நதியினின் மாகநா ளடைந்த
தலைமை யாலுயர் வானமேன் மானமேற் றாவிச்
சிலைசெய் வில்லியார் கயிலைமால் வரையின்மேற் சேர்ந்தான். (௨௯)

மந்த மாருதந் தவழ்திரி கூடமும் வீரதன்
சந்த வார்பொழிற் கயிலையும் வேறெனத் தகுமோ
விந்த மால்வரைத் தடத்துவீழ்ந் திறந்தவ னியல்பா
யந்த மால்வரைச் சிகரமே லமர்ந்தன னதனால். (௩௦)

சிந்தை யார்கொலை வேடுவ னருவிநீர்த் தடத்து
வந்த யாமொழி மகிமையை யுரைத்து மாதவர்காண்
முந்தை யோதுசித் திரப்பொது மகிமையை முனிக்கா
வெந்தை யார்நடங் காட்டலிற் காட்டுது மென்றான். (௩௧)

வேறு.

என்றலு முனிவர் வாழ்த்தி யெழுபவக் கலைகண் மாயத்
தென்றலம் புலிபாய் சாரற் சிவகிரி கூடத் தானை
மன்றன்மா மலர்த்தாள் போற்றி வரங்கொண்ட வானோர் பூசை
நன்றுறப் புரிந்த வாறு நவில்கென நவில்வான் சூதன். (௩௨)

5-நதிவீழ்வேடன்கதிபெறு சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௪௱௭௧.

## ௬-ஆறாவது:—வானவர்வழிபடு சருக்கம்.

நறுமலர் விரிஞ்ச னாகி நாரண னாகி வெண்கோட்
டேறுவிடைப் பரனு மான வொருவனை யிருவர் தேடிக்
கறுவினாற் காண்கி லானைக் கனிந்துபூ சனையிற் காணப்
பெறுபொருள் கருதிப் போந்தார் பெரியவன் றிரிகூ டத்தில். (௧)

தம்பெருஞ் சிவத்து ரோகந் தவிர்ந்துவான் பதங்க ளீந்த
நம்பனைத் திருக்குற் றால நாதனைப் பூசித் தேத்த



விம்பரில் வர்முன் வேண்டு மெண்டிசைக் கடவு ளோரு
மும்பரும் விசும்பா றாக வொருவழி விரவிப் போந்தார். (௨)

கோலமால் வடிவாய் நீண்டார் குறுமுனிக் குருகி மேனா
ளாலமர் கடவு ளாகக் குறுகுமற் புதத்தைக் காண்பான்
காலமோர் முனிவர் சித்தர் கருடர்கிம் புருடர் யாரோர்
மேலமர் புவன மூன்றில் விபுதரு மெழுந்தார் மன்னோ. (௩)

அரவணைத் துயிலு மாய னம்புயத் துறைவோன் வானோர்
புரவலன் முதலோ ராய தலைவரும் புலவோர் யாரும்
விரவிமுச் சிகரத் தாலே விதிபதம் விண்டு லோகஞ்
சுரருறை சுவர்க்க மூன்று மொத்தது சுருதிக் குன்றம். (௪)

விண்பக வெழுமுக் கோட்டு விமலவே தண்ட மேவி
யொண்பக லுறிக்குங் காலை யுயர்மது கங்கை யாடிச்
செண்பகத் தடாக மூழ்கித் தேனிறால் கிழியக் கோட்டால்
வண்பக டுழக்குஞ் சாரல் வடமுகத் தருவி தோய்ந்தார். (௫)

அருவியந் தரங்கக் கங்கை யாரமு மகிலும் பொன்னுங்
குருமணித் திரளு முத்துங் குவைகளாக் கொழித்து வீசத்
திருவல கிடுவார்க் கென்றுந் திருப்பணி யிடைய றாத
பொருவருஞ் சங்க வீதிப் புறம்வலம் புரிந்து போந்தார். (௬)

அகமதி லுருவா வாயி லைந்துமைம் பொறிக ளாகச்
சிகரிநாற் கரண மாகச் செழுந்திரு வீதி மூன்றுந்
தகுதிமண் டலங்கண் மூன்றாத் தரணியம் பதும பீடந்
திகழ்பரஞ் சோதி யான சிவலிங்க வடிவங் கண்டார். (௭)

துதித்தனர் பாடி யாடித் துள்ளினர் வெள்ளிக் குன்று
மதித்தனர் திரிகூ டத்தை மணிமதிற் கோயில் வாயில்
குதித்தனர் கருணை மூர்த்தி குரைகழ லடிக்கீழ்ச் சென்னி
பதித்தன ரின்ப வாரி படிந்தனர் வானோ ரெல்லாம். (௮)

சேண்மிசைக் கங்கை நீருந் தேவதா ருத்திற் பூத்த
நாண்மலர்த் தொடையுந் தாரு நறுஞ்சிலை விசர் தூசும்

பூண்முந்தற் காம தேனுப் பொழிதரு பாலுந் தெய்வ
நீண்மணி வடமும் வாரி நெடுந்திரை யமுதும் வாரி. (கூ)

மருத்தினுக் கிறைவன் றூர்ப்ப வருணனீர் தெளிப்ப வீதி
யருக்கர்பல் விளக்க மேந்த வமரர்பூ மாரி தூவத்
திருக்கிளர் திசைக டோறுந் தேவதுந் துபிக ளார்ப்ப
விருக்கினல் வசுக்கள் வாழ்த்த விந்திர னேவல் கேட்ப. (க0)

மற்றுள திக்கு வேந்தர் மரபினல் வரயில் காப்பக்
கற்றையங் கவரி தெய்வக் கன்னிய ரிரட்ட வேதா
முற்றுள சாந்தி வேள்வி முறைமுறை யியற்றச் செங்கண்
வெற்றியந் திகிரி யானே விமலனைப் பூசை செய்தான். (கக)

சீதா னருச்சித் தேத்தத் திசைமுகத் தவனுந் தெய்வப்
போதினு லாரா திப்பப் புரந்தரன் முதலோ ரெண்ம
ராதவர் வசுக்க ளாதி யமரரே முதலா யுள்ள
மாதவர் புரிந்தார் பூசை வரதனைத் திரிகூ டத்தில். (கஉ)

தெளிதரு பசும்பொன் னூட்டுத் தெய்வதப் பொருளால் விண்ணோர்
களிதரு பூசை செய்து நாள்பல கழித்து மீசன்
வெளிவரா வகையாற் பண்டு வேழம்பூ சித்த காவி
லளிபடாப் பூவா னீரா லருச்சனை புரிவ தானார். (கங)

பூசனை திருக்குற் றால புரந்தனிற் பொருளாச் செய்து
வாசவ னயன்மால் வானோர் வழிபடா நின்ற காலைத்
தேசமர் திருவெண் ணீறுஞ் செங்கைமான் மழுவும் பச்சைத்
தூசணி மருங்குந் தோன்றத் தோன்றினன் மறைக்குந் தோன்றான்.

கையிலஞ் சலிகள் பூப்பக் கருத்தெலாங் குளிர்ப்ப வானோர்
மெய்யெலாம் புளகம் போர்ப்ப விழிதுளி பொழிய நோக்கித்
தெய்வநீர்த் திரிகூ டத்துத் திரைபொரு சங்கக் கோயிற்
சைவமா மணியைக் கண்டு சரணெனச் சரணம் பூண்டார். (கரு)

பூண்டுமா லயனும் யாங்கள் புரிதரு செயல்க ளோர்ந்தோ
நீண்டநின் மவுலி பாதந் தேடரீ டேழி கால



மீண்டுநீ படைத்துக் காத்தா யெமக்குமோ காட்சி தந்தா
யாண்டகை கருணை வாழி வாழியென் றருளிப் போந்தார். (கசு)

வந்தனை புரிந்து வானின் மாலயன் போன பின்னர்ச்
சிந்தனை யமரர் பூசை தினஞ்செயப் பணிப்பா யென்ன
நந்தணி குழையா னோக்கி நன்பகற் புரிந்தீர் நீவிர்
சந்ததங் கங்குற் காலந் தமிழ்முனி புரிக வென்றான். (கஎ)

பன்னக ரியக்கர் சித்தர் படிவர்விஞ் சையர்மற் றுள்ளோ
ரிந்நகர் விடைமேற் காட்சி யெமக்கரு ளென்ன நாதன்
மன்னுசீர் விழாக்க டோறும் வருகென வருளிச் செய்தா
னன்னவர் பரவி யேக வருச்சனை தொடுத்தார் விண்ணோர். (கஅ)

வேறு.

தையயனம் வேட்ட வுவாத் தருபூச மகமாகச் சிவனி ராத்ரந் [வம்
துய்யபாற் குணத்திருநாண் மேடவிழுப் பரணிதுவட் டாநாட் பௌ
வைகாசி மாகவிழா வளரானி முக்கனிகண் மாத பூசை
செய்யபிர தோடமுவாச் சங்கிரமந் திதிவாரந் தினங்கள் யாவும் (ககூ)

தெறும்பலா தவன்மறுகித் தேரோடும் வழிவிலங்கத் திங்கண் மேனி
கறும்பலா வுயர்குவடு முகடுதொடுந் திரிகூடக் கடவுட் சாரற்
குறும்பலாச் சுருதிநிழ லுறைவானைச் சுருதிமொழி கொண்டு பூசை
யுறும்பலா கமவிதியான் மதியாறும் புரிந்தமரரு ரும்பர்ப் போந்தார். ()

வேறு.

அர்ராவடம் புனைந்தார் பூசை யமரர்செய் முறையீ தென்று
பராவட நிழலிலெம்மான் பாலுணர்ந் தவன்பாற் பெற்ற
விராவட கலைநூல் வல்லான் வியாதன்மா ணாக்கன் கூறித்
திராவிட முனிசெய் பூசை செப்புவான் முனிவர் வேண்ட. (உக)

6 - வானவர்வழிபடு சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-சஉ.

---

## ஏழாவது:—குறுமுனிவழிபடு சருக்கம்.

சந்தனத்தென் பொதியமுனி சண்பகத்தின் பசுந்தாது தனைத்
தந் திங்கள், கந்தரத்தி னரமகளிர் முழைதோறு நுழைதோறுந்

கலவி கூடி, யந்தரத்தி னுடுமகளி ரிரிதல்போன் மணிசொரியு மருவிச் சாரன், மந்தரத்து மேருவினும் விரிகூடத் திரிகூட வரைமேற் சென்றான். (க)

வேறு.

உம்பரம ரேசர்தொழு தும்பர்புக வரன்மேற்
கொம்பரம ராடல்செய் குறும்பலவில் வாழு
நம்பரமர் பூசைசெய நன்மலைய யோகி
யிம்பரமர் மாதவ ரெழுந்துதொழ வந்தான். (உ)

சிந்தைகளி கூர்தர வணங்கியெதிர் சென்று
வந்தணர்கள் சைவரொடு வந்தருவி யாடி
மந்திரவெண் ணீறுசிவ சாதனம் வனைந்து
நந்துமுக வீதியுயர் கோயில்வல நண்ணி. (௩)

மூன்றுவடி வானவன்முன் னான்மறை முழங்கத்
தோன்றியுய ரைந்துவகை சுத்திகள் வருத்தி
யேன்றநெறி யாறுணரு மெண்வகைசெய் பத்தி
யான்றமறை யோருட னருச்சனை தொடுத்தான். (௪)

முந்துமகு டாகம மொழிந்தமனு வாலே
கந்ததயி லங்கொடு சொரிந்துகளி கூர
வைந்துகவி யங்களொடு மைந்தமுத மாட்டி
யுந்துமுவர் வாரிதி யடக்குமொரு கையால். (௫)

மேயுகட லாறையு மடக்கிவிடு மாபோ
னேயமொடு பாறயிர் மதுக்கனிறை கன்னற்
றேயுமும் விதிப்படி சொரிந்துபல சார
மாயுசுவை யிற்சுவை விளைக்குமுறை யாட்டி. (௬)

மூவகையு சீதவிள நீர்முருகு சாந்தம்
பாவனைசெய் தண்ணளி பயிற்றுமுறை பெய்து
தேவநதி கண்டவட தேசநதி யெழுந்
கோவொடு மணிந்தபடி கும்பசல மாட்டி. (௭)

மாலையுமா னக்குமவன் வாழ்பரனை மாமால்
கோலமுமை வித்தபடி பொன்னுடை குயிற்றி



நால்வகைய சாந்துபனி நாண்மலர்கள் சாத்திப்
பாலமுத மேற்றிநிறை பல்லிய முழங்க. (௮)

பேரொளிமுன் னின்றுபல பேதவொளி யெல்லாஞ்
சீர்பெற நடிக்கும்வகை தீபமுறை யேந்தி
மூரிமறை நாலுமுயர் முத்தமிழு ஞான
வாரிபடி கின்றவென வந்துதுதி சாத்தி. (௯)

வேறு.

திருவாடி யயனமுவாப் பூரஞ் சோதி சிறப்பைந்தா வணிமூலம் பானு வார, முருளோணஞ் சதுர்த்திபுரட் டையிற்கே தாரமுயர்நவராத் திரந்தசமி திருவி ழாக்கள், பெருமானைப் பசிவிழுத்துலாஞ்சேர் மாகம் பிறிதுளநித் தியமுதலா வருச்சித் தேத்தி, வருகாலக் குறுமுனிசெய் தொழும்பு மன்பும் வள்ளலார் திருவுளத்தி னிறைவு தோன்றி. (௧௦)

இடப்பாலி னிறைவிதிரு மூலட் டானத் தெழுந்தருளித் தவவடிவா யிமையோர் போற்றக், குடப்பாலிற் பவித்திரங்கொண் டருளிப் பூரங் கொண்டபெருந் தவக்கோல முவந்து வெற்பின், மடப்பாவைக் கருள்புரிந்து வலப்பால் வைத்து மலர்வேதன் சடங்கியற்றவுந்தி பூத்தோன், குடப்பாலிற் புனல்வார்ப்பக் கருணை மூர்த்தி கடமுனிக்கு மணக்கோலக் காட்சி தந்தான். (௧௧)

வேதவிருக் கந்திருக்கா வணம்ராம் வேதன் விதிச்சடங்கு விதிப்பவனு முதகஞ் செய்வோ, னாதியுல களந்தவனு முலகுக் கெல்லா மாக்கமா னவள்வரிசை யியற்று வாளா, நீதிநகர் நன்னகராந் தெய்வக் காவு நிதியிரண்டும் பணிசெயுமாங் கும்ப னாதி, மாதவரு மமரருங் காண் பவரா மிந்த மணக்கோலக் காட்சியெவர் வழுத்த வல்லார். ()

பொன்னூசல் பாராட்டுந் திருவா ராட்டும் பொங்குதீ பாவளியும் பூசித் தேத்தித், தொன்னூலோர் கார்த்திகையிற் சோம வாரந் துலங்குவிருச் சிகச்சுடர்கார்த் திகைமா தீப, மன்னோங்கு திருப்பள்ளி யெழுச்சி பாவை மார்கழிவி ழாத்திருவா திரைவி சேட, மின்னூசல் விளக்காதி வருட மாத விசேடமுத னித்தியபூ சனைக ளெல்லாம். (௧௩)

வேறு.

மனமுதற் பொறிகண் மூன்றும் வழிபடக் கடக மாதி
தனுவெனுந் திங்க ளீருந் தருக்கிப் பூசை யாற்றிச்
சினகரம் வலஞ்செய் தேகிச் செண்பகச் சோலை நோக்கி
முனிவரன் றென்பாற் சென்றான் முதுகதிர் வடபாற் செல்ல. (கச)

மேவிய கடவுட் சோலை விரிமகச் சாலை யாக
வாவியே குண்ட மாக மடன்முறுக் கவிழ்ந்த பூகத்
தூவிய பொறிகள் போர்ப்பத் துறுமலர் நறுநெய் வார்ப்பக்
காவியே புகையாக் கந்தசங் கனலெரி காட்டக் கண்டான். (கரு)

நின்றவர் பாவச் செந்து நிலையறக் கரிந்து வீழ
மென்றருச் சோலை நீழல் வெயிலெனக் காய்தல் கண்டான்
மன்றல்யோ சனைமூன் றுள்ளோர் வல்வினைத் துளிரெல் லாமோர்
தென்றலங் கன்று மென்று நின்றுநின் றழித்தல் கண்டான். (கசு)

கனிவரை யருவி நன்னீ ரொருதுளி நனையப் போந்து
பனிவரை யனைய பாவம் பறிகொடுப் பவரைக் கண்டான்
மணிதரைத் தேவர் கண்டு வணங்கிய தானங் கண்டான்
முனிவரை யினிதிற் கூவி முதுமகத் தானஞ் சார்ந்தான். (கஎ)

அன்னதோர் காலை தென்ன னணிபெறும் வேள்விச் சாலை
தென்னணி சம்புத் தீபஞ் சிறிதெனப் பெரிதாச் செய்து
பொன்னணி யூப மேருப் பொருப்பென நிறுவி யாங்கண்
மன்னுறு திரைகள் போல வரைகள்போற் பொருள்க ளுய்த்தான். ()

மேனவில் பொருள்கண் முற்றும் விண்ணவர் தருக்க ளிய
வானவர் துதிப்ப வோம மறையவ ரியற்ற மேலோ
ரானவர் பிரமத் தான மமைவுற முனிவர் போற்றத்
தானவர் குலங்கள் பாறச் சதமக னிறும்பூ தெய்த. (கசு)

ஓதிய சோதிட் டோம மத்திய மங்கிட் டோமஞ்
சோதிசேர் வாச பேய மத்திராத் திரகஞ், சோமஞ்,
சாதுரங் காட கஞ்சீர்ச் சிவகாமக் தருமை யேத்ர
மாதிய சவித்தி ரஞ்சே ரணிமணிப் புண்ட ரீகம். (உ0)



அச்சுவ மேத மாதி நரமேதம் பிரம மேதம்
விச்சுவ நித்தோ டங்கி சசன்மிகு மிராச சூய்
மெச்சுமிப் பதினெட் டுள்ளு மியன்மறை விதியோர்ந் தோங்கு
முச்சகம் புகழ வைஞ்ஞா றியர்கமு முறையிற் செய்தான். (உக)

கொழுமக முகத்துத் தோன்றுங் குரூஉப்புகை யண்ட மூலத்
தெழுபுகைப் படலம் போலும் வலஞ்சுழித் தெழுந்தீ யாங்குக்
கெழுமுதிச் சுடர்கள் போலுங் கிளர்தவக் கும்ப னென்பா
னெழுகுதீ வினைகட் கூழி யுருத்திரன் போலு மாதோ. (உஉ)

சோலைவாய்த் திரிகூ டத்துச் சுருதிவேள் வியரு லாவுஞ்
சாலைமு விருகாற் றேர்க்குச் சாய்ந்தன்றே வொற்றை யாழிக்
காலைவாய்க் கதிரோன் றேருங் கடல்புகு மலையில் வீழு
மாலைவாய் மதியின் றேரும் வானமேன் மான மாமால். (உங)

வேறு.

ஒருமகம்வா னவர்போகஞ் சதமகமிந் திரபதமா முணராத் தூக்கன், றருமகமொன் றினிற்கழிந்தான் சகார்தொண்ணூற் றென்பதுஞ்செய் தவர்நா றுனர், பெருமகமைஞ் ஞூறியற்றித் திரிகூடத் தரனருளை பெற்றான் கும்பன், பொருமகந்தை யற்றாக்கு முற்றுதகரும் முண்டோ புவனமூன்றில். (உச)

வேறு.

குறைவறுதெக் கணவயன மதிக ளாறுங் கும்பமுனி பூசித்து வேள்வி யாற்றிப், பெறலருஞ்சீர்த் தவம்புரியுஞ் சாலை சேர்ந்தான் பேனிருத் தரவயனப் பூசை வானோர், முறையிருவா மென்றுணர்த்திச் சவுன காதி முனிவர்குழாம் புகழ்ந்துகனி வேண்டச் சூதன் விறல்கெழுசித் திரப்பொதுவத் தரங்கக் கூத்து வெளியரங்கம் பெறநடித்தல் விளம்பல் செய்வான். (உரு)

7-வது குறுமுனிவழிபடு சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-ருகஎ.

---

## எட்டாவது:—வாசுகிதவம்புரிந்த சருக்கம்.

போதவடி வர்கியொரு பூதாதி யாத
நாதவெளி விடுதனி லாடுமொரு நாத

ஞதிபரை காணவரு ளாகநட மாடுந்
திதில்பர மானசபை சிற்சபைய தாமால். (௧)

ஆழிதிரை மண்டுபுன லண்டமிசை தாவ
வூழியுல கெங்கணு மொழிந்துமொழி யாத
வாழிதிரி கூடவரை மன்றிலர னாடல்
வீழியிதழ் மாதலது வேறொருவர் காணார். (௨)

ஆதலின் மகாபரம ரகசியம தன்றே
காதன்மறை யோதுமது காணவெகு மாலாய்
மாதவனு நான்முகனு மாதவ முயன்றார்
தாதளவு போதுகமழ் சண்பக வனத்தில். (௩)

மாமகர மாதிமதி யாறுமுயர் வானோர்
பூமக வருச்சனை புரிந்துதம திசர்
தாமவவு சித்திர சபைத்திரு நடத்தே
யாமக விருப்புட னருந்தவ முயன்றார். (௪)

வேறு.

உந்திபூத் தவனும் பூமே லொருவனு மகவா னாதி
யந்தரத் தவருங் கும்ப முனிமுத லறவோர் யாரும்
புந்திசேர் தவத்தி லாசை பூண்டனர் திரிகூ டத்தி
லெந்தையார் நடன பாதத் தியாவரே யாசை பூணார். (௫)

சிவமது கங்கை மூழ்கிச் செண்பகத் தடாகந் தோய்ந்து
நவமது கங்கை வேய்ந்தார் நனிவட வருவி யாடிப்
பவமது வண்டு வீழாப் பசியசெண் பகக்கா வெங்குந்
தவமது வண்டு போல மொய்த்தன தவத்தோர் சங்கம். (௬)

அன்னவா றயன்மா லாதி யருந்தவக் குழாங்க ளெல்லா
நன்னகர்ப் பரனை வாழ்த்தி நற்றவம் புரியு மெல்லை
பன்னவில் காள கூடப் பணிநிலைப் பருவாய்ப் பாந்தண்
மன்னவர் பரவு மன்னன் வாசுகி யென்பான் மன்றோ. (௭)

மதுகையி லறிவின் மிக்க மணிமுடி யனந்த னென்னு
முதுதவத் துணைவன் மேனன் முக்கணார் தொல்லைத் தில்லைப்



பொதுநடம் பணிந்தா னென்றும் பலமுறை தானும் போற்றுங்
கதியினை விழைந்து சென்றான் கயிலைமால் வரையின் மீதில். (௮)

பொன்னுயர் பொருப்பு நாதன் புயவரை தனக்கு நாணக்
கொன்னுயர் புரங்கண் மூன்றுங் கோபிப்பக் குனைம தானான்
பின்னுமோர் கடலில் வேற்பைப் பிணிசெய்து மருந்துஞ் செய்தான்
மன்னுசீர் வெள்ளிக் குன்றில் வரதனை வணங்கி யேத்தி. (௯)

பொறியுடற் பாவை செய்து புலன்கள்சூத் திரங்க ளாக்கிக்
கறுமனப் பாசம் பூட்டிக் கலாதியேழ் தாளந் தாக்கி
யறிதரு பிரேர கங்க ளைந்தினு லசைத்துப் பேதங்
குறியிரு தருவா லாட்டுங் கூத்தனை சரண மென்றான். (௧௰)

வேறு.

பணியும் பணியின் குலவேந்தைப் பணியின் பணியா றருளேந்தி
மணிவெங் கூட்டுப் பலவேந்த வரலா றென்னை யெனப்பிறவிப்
பிணியின் மருந்தே யுனைக்காணும் பெற்றி யதனன் மற்று மொரு
தனியில் காத லொடும்போந்தே னருளாற் சாற்றத் தகுமென்றான்.

நாத னுரையா யென்றுரைய நடுங்கி யொடுங்கி வாய்புதைத்துப்
பூத நாதா கங்காளா புனித மறைகள் காணுநின்
பாத நடனந் தனைக்கண்டு பணிந்தா னந்தக் கடலாடுங்
காத லுடையே னெனவுரைப்பக் கவுரி முகம்பார்த் தெம்பெருமான்.

சடைமே லிருக்கும் பிறைக்கொழுந்து தளிர்த்த தெனப்புன் னகைகூர்ந்து, கடைநோக் கருளி னமுதொழுகக் கனிவாய் மலர்ந்தங் கருள்செய்வார், விடைமேற் காட்சி யடியவர்க்கு வேண்டும் வகையாற் புரிந்தருள்வோ, நடமேற் புரியும் பெருங்காட்சி நவில்வோ ஞான காரணத்தால். (௧௩)

அனந்த னென்பா னெமைநோக்கி யனந்த முகங்க ளருந்தவங்கண் மனந்தன் வயமாப் புரிந்தமையான் மற்றோ ருகத்தில் வந்தெய்துஞ் சனந்தன் முதலோர் புகழ்தில்லைத் தலத்து நடனந் தொழப்பெற்றான் கனந்தங் கியமெய்த் தவமவன்போற் புரிநீ யூழி காலமெலாம். (௧௪)

பொருப்பின் சிலையா ருரைப்ப வந்தப் புனிதச் சிலைக்கு நாணுனன்
பெருக்க யுகங்கள் பலவுமுனைப் பிரிந்து தவங்கள் புரிந்தாற்றேன்
றிருக்கண் கண்டார் தீவினையுங் காண்பார் கொல்லோ சிவபெருமா
னருட்கொண் டடிமை படைத்தனையா லாளக் கடனே யெனப்பணிந்தான்.

கிட்டாப் பதவி நடங்காணக் கிடைக்க வேண்டு மெம்பெருமா
னெட்டாக் காலந் தவம்பற்ற வியலா தென்பான் றனுக்கிரங்கிக்
கட்டா நிரைந்த பலகரும்பு கறியாக வண்ணஞ் செறிபாகின்
வட்டாத் திரட்டி வழங்குதல்போற் றிருவாய் மலர்ந்து வழங்குவார்.

பாடும் பூதம் பணி செய்யப் பயில்பாண் டரங்க மன்றினிடத்
தாடுங் கூத்துங் காளிமத மடக்குங் கூத்துங் கொடுமுயலைச்
சாடுங் கூத்தும் பிறரறியத் தக்க கூத்தா மினைத்தலகுந்
தேடுங் கூத்து நன்னகர்நந் தேவி யறியுந் திருக்கூத்து. (௧௭)

அந்த நடனங் காண்பதற்கா வரிய மயனும் வானோருங்
கொந்து சடிலப் பெருமுனிவர் குழாமும் பொதியிற் குறுமுனியு
முந்தை யுகங்கள் பலதலத்து முயன்றார் முயன்று முற்றும
விந்த யுகத்துந் தவம்புரிந்தா ரெமது திரிகூ டத்தணைந்து. (௧௮)

பற்று யிருந்து பிறதலத்துப் பல்லா யிரம்யாண் டியற்றுபலன்
குற்றா லத்தி லோரர்ண்டிற் கொடுக்கு மெனுமா மறைமொழியா
லுற்று ரயன்மான் முதலோர்க ளுலப்பில் குளிகை கனலிலிட்டு
வெற்று யலைந்த வாதியர்கள் வேதிக் குளிகை யடைந்தாற்போல். ()

சந்து மகிலுந் திரைசுருட்டித் தரள மெறிந்து பொன்கொழித்து
நந்து திரட்டுஞ் சித்திரமா நதித்தண் கரையி லிருப்பாலும்
வந்து தவஞ்செண் பகச்சோலை மருவி யிருந்து தவம்புரிவார்
சிந்தை நினைந்த வரமெல்லாஞ் சித்தி யாகுஞ் சத்தியமே. (௨0)

பனக வேந்தே தென்கூடற் பதியின் முதிய வெள்ளிமன்றுங்
கனக சபையாம் வெளிமன்று மாலங் காட்டின் மணிமன்று
மனக நிறைதாம் பிரப்பொதுவு மார்க்கும் பொதுவாந் திரிகூடச்
சனகர் புகழ்சித் திரமன்றந் தனிநம் பரம ரகசியமே. (௨௧)



வேறு.

ஞாலமே னதிகளெலாம் படிந்தபலன் சித்திரமா நதியே நல்குந்
தாலமே லுயர்புனிதத் தலங்களெலாந் தரும்பேறு தருங்குற் றால
மூலமா லிலிங்கமெலாம் பரவுபலன் றிரிகூட மூர்த்தி நல்கும்
வாலிதா மத்தலத்தை நோக்கிவரி லடிக்கடியோர் மகப்பே றெய்தும்.

வேறு.

உருக்கன் புடையா யறிந்தறியா தொருநா ளவ்வூர் வைகிடினும்
பொருகண் டகமாம் வினைநீங்கப் புகுவார் கயிலை யெனப்புகன்று
மிருகண் டுவின்சீர்க் குலமகற்கா வெங்கூற் றுதைத்த பெருமானா
ரருகண் டகசே தனன்சரிதை வாக்கா லருளி விடைகொடுத்தார். ()

நஞ்சங் களிக்கும் விழிபாகர் நலஞ்சேர் கருணைக் குருகிமனா
நஞ்சங் களிக்கும் விடைபெற்று நயப்பா லேகி நதித்தடநீ
ரஞ்சங் களிக்கு மணிகருவா வான்பால் பிறித்துண் டடைகிடக்கு
மஞ்சங் களிக்குந் திரிகூட புரத்தி லணைந்தா னரவேந்தல். (௨௪)

இந்து முடிசேர் திரிகூட மீசர் வடிவென் றேபணிந்தா
னுந்தி பூத்தும் பாரிடந்து முயர்வா னளவு நீண்டதனு
லந்த நெடுமா லெனத்தொழுதா னலர்பூ மேலாய்த் திசைமுகத்து
வந்து மறைகண் முழங்குதலான் மலரோ னென்ன வணங்கினான். ()

கூட முயர்வா னகடுரிஞ்சுங் குவட்டி லிருந்து குதிப்பதனு
லாட லருவித் தேனாறு வானா றெனவே யதிசயித்தா
னீட லரவப் பஃறலையா னிரைத்த மணியா லருவிதுணைச் [தான்.
சேட னெனவே சிறிதயிர்த்தான் சிலையான் மகவா னெனத்திகைத்

அண்ட ரகலா துறைவதனு லளியாப் பொருளு மளிப்பதனால்
வண்டு படாத செண்பகக்கா வளர்கற் பகக்கா வெனமருண்டான்
பண்டை யறங்கள் வளர்ப்பதனாற் பச்சை நிறத்தாற் பரைவடிவாக்
கண்டு பணிந்தான் றவப்பள்ளி முனிவர் கணத்தைக் கண்ணுற்றான்.

வேறு.

தொழுந்தகை பணைக ளாகத் துணர்ச்சடை வீழ்து வீழ்த்துப்
பழுமர மெனநிற் பாரும் பரந்துசெல் லெறிப்ப மேனி

முழுதும்வன் மீக மாகி வான்மீகி முனியொப் பாரு
மொழுகுடல் பங்கி போர்ப்ப வுரோமச னெனநிற் பாரும். (௨௮)

ஒருபத மூன்று காலா லொருபத மெழுகா லாக
வருபத மூன்று மோர்ந்து மாதவம் வளர்க்கின் றாருந்
தருபதந் தலைமே லேற்றித் தரையின்மே லிருக்கின் றாரு
மிருபத நிலையே யன்றி யியக்கமற் றுறைகின் றாரும். (௨௯)

ஊசிமே லொருதா ளேற்றி யொருவிரன் மேனிற் பாரு
நாசிமேற் பிராண வாயு நடைதப விருக்கின் றாரும்
வாசிமே லேறி வீதி வலம்புரி மகிமை யாருங்
கூசிமேற் சுடரு மஞ்சக் கொழுஞ்சுட ரெழுப்பு வாரும். (௩௦)

சருகிலை யருந்து வாருந் தண்புனல் பருகு வாரும்
பரிதியின் கதிருண் பாரும் பவனனைப் பொசிக்கின் றாரும்
வருகனி காய்தின் பாரும் வனத்திடைக் கிழங்கு மூல
மிருபொழு தொருபோ துண்டு மின்றியு மிருக்கின் றாரும். (௩௧)

இருக்களாய் நிற்கின் றாருந் தழலிடைச் சரிக்கின் றாரு
முருக்கள்போ னிற்கின் றாரு மூணுட னுறக்க மின்றிச்
செருக்குற வடங்கிக் கல்லாய்ச் சிலைகளா யமர்கின் றாருஞ்
சுருக்கிய வுண்டி யன்றிப் படிவமே சுருங்கா தாரும். (௩௨)

மேருவி லிமயந் தன்னின் மிக்குள கிரிக ளெம்மிற்
பாருள வனங்க ளாதி பற்பல தலங்க ளெம்மி
லோருகந் தவஞ்செய் தாருஞ் சதுர்யுக முனூற்றி னூறு
மேருவா மனுவின் வாழ்க்கை யெழுபத்தோ ருகமின் றாரும். (௩௩)

மாயிரும் புவனங் காக்கு மனுக்களீ ரெழுவர் வாழ்க்கை
யாயிரஞ் சதுர்யு கங்கண் டயன்பகல் கழித்திட் டாரு
மேயினர் திரிகூ டத்து விரிதவம் புரிகின் றாரைச்
சேயுயர் பாந்தள் வேந்தன் கண்டனன் றிகைத்து நின்றான். (௩௪)

இன்னணம் புரிவார் முன்யா னெத்தவம் புரிகேன் முக்கண்
முன்னவன் பணியாற் செய்வேன் முற்றினு முற்றா தேனு



நன்னகர் வனத்துப் புல்லாய் நனிமர மெனநின் றாலும்
பன்னகப் பிறவிப் பாவம் பறிபடு மென்று தேர்ந்தான். (௩௫)

அந்தமா வனத்து மேவி யருந்தவ வேள்வி யாற்றுஞ்
செந்தமிழ் முனிதாள் போற்றிச் செம்மையஞ் செழுத்தும் பெற்றுச்
சந்ததந் திருவெண் ணீறுஞ் சைவசா தனமும் பூண்டு
நந்தணி குழையார்ப் போற்றி நனிதவக் கிழமை பூண்டான். (௩௬)

வனமிசைப் பாந்தள் வேந்தன் வருடமா யிரத்தி ரட்டி
யனிலமா கார மாக வாயிரத் திரட்டி யாண்டு
புனலிலா யிரத்தி ரட்டி பொருப்பினு மவ்வா றாற்றிக்
கனலிலா யிரத்தி ரட்டி கடுந்தவம் புரியுங் காலை. (௩௭)

தேவர்தந் தேவர் தேவன் றிருவுள மிரங்கி மைதோய்
மாவடு வனைய வுண்கண் மலைமகள் வதன நோக்கிப்
பூவலர் திரிகூ டத்தெம் பொதுநடங் காண வேண்டி
மேவிருந் தவஞ்செய் கின்றார் விரிஞ்சன்மா லாதி விண்ணோர். (௩௮)

கன்மலை மரமாய்ப் புற்றாய்க் கழிந்தனர் முனிவர் வானோர்
சன்மவி பாந்தள் வேந்துந் தவித்தனன் வேள்வி யாற்றித்
தென்மலை முனியுந் தீராத் தவஞ்செய்தான் வாரா யென்ன
நின்மலை யுடனே வெள்ளித் திருமலை நீங்கிப் போந்தான். (௩௯)

8-வாசுகிதவம்புரிந்த சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்—௫௫௯.

## ஒன்பதாவது:—திருநடச் சருக்கம்.

அற்பினு ளுறையும் போது மகலுறும் போதும் வெள்ளி
வெற்பினை யகலா னென்ன விடையின்மேற் கொண்டு நாதன்
முற்பெறு தனயன் பின்னு முருகவேண் முன்னு மேகச்
சிற்பரை யுடனே போந்தான் சிவகிரி கூட நோக்கி. (௧)

நடித்தரு ளெம்பி ரானார் நன்னகர் நணுகுங் காலைப்
படித்தல மிருள்போய்ச் சோதி பரந்தது தவத்தோர்க் கெல்லாந்
துடித்தன வலப்பாற் றிண்டோ டொழுகின சிரமேற் செங்கை
பொடித்தன வுரோம மேனி போர்த்தன புளகப் புள்ளி. (௨)

ஞானநாயகனார் தோன்று நற்குறி யிதுவென் றோர்ந்து
தானமால் வரவு பார்க்குஞ் சாதகத் திரள்கள் போலும்
பானுவி னுதயம் பார்க்கு நேமியம் பறவை போலும்
வானவர் முனிவர் நின்றார் வடபெருந் திசையே நோக்கி. (௩)

கருமணி மிடறு மூன்று கண்களும் புயங்க ளொன்குங்
குருமணி வடமுஞ் செம்பொற் கொன்றைமா லையுமுந் நூலு
மருமமும் பணிலத் தோட்டு மாசுணக் கம்பிக் காது
முருவமும் பொலிந்து தோன்றத் தோன்றினா னுமையோர் பாகன்.

உருக்கிளர் விடைமேற் றோன்று மும்பர்தம் பிரானார் ஞானத்
திருக்கிளர் வடிவங் கண்ணிற் காண்டலுந் திரளா னந்தப்
பெருக்கெனும் வாரி தாவிப் பிறவிவேர் மறிந்து வீழுந்
தருக்குலம் போல வீழ்ந்து பணிந்தனர் தவத்தோ ரெல்லாம். (௫)

இறைஞ்சினர் பணிவார் தம்மை யெழுகவென் றருளா னோக்கி
நறுஞ்சினை மலர்ப்பூஞ் சோலை நன்னகர்த் திரிகூ டத்துக்
குறிஞ்சியஞ் சூரற் சாரற் குறும்பலாச் சுருதி நீழற்
பிறங்குமுத் தரபாற் சென்றான் பிரணவத் துருவாய் நின்றான். (௬)

தாங்கநீ ருலகுக் கெல்லாந் தவமலாற் பொருள்வே றுண்டோ
புரந்தர னயன்மா லாதி புலவர்மா முனிவர் காணத்
திரம்பெறு திருக்குற் றாலச் சித்திரப் பொதுவாந் தெய்வ
வரங்கினி லாடப் போந்தா னகிலமு மாடல் காண்பான். (௭)

வேறு.

துங்க வாணனோ ராயிரங் கரங்களிற் றுவைக்குமண் முழவோசை
கங்கை மாநதி யாயிர முகம்பொரு கனைகட லெனவார்ப்பச்
செங்கை யாயிரத் திரட்டிபா னுகம்பனார் திரட்டியூ தியசங்கம்
வங்க வாரிதித் திரைகரத் தாயிரம் வலம்புரி முழக்கேய்ப்ப. (௮)

திவவி யாழ்பயி லிருவரே ழிசைதிருச் செவிதொறு மமுதூற்ற
நவவி யாபகச் சுருதிக ளாயிர நாமங்க ளெடுத்தோத
வுவவி வாழ்புனற் சுரநதி திரையலைத் துக்கசி கரந்தூற்றத்
தவவி யாளமுந் தமிழ்முனிச் சங்கமுந் தனித்தனி களிதூங்க. (௯)



ஒருக ரந்தனிற் படர்கனல் சுடர்விட வொருகரந் துடியார்ப்ப
விருக ரங்களில் வரதமு மபயமு மெவ்வுல கமுங்காப்ப
வருள்ப ரந்தெழு திருவுளக் கருணையா லகிலமுங் குளிர்தூங்கச்
செருகு கொன்றையங் கண்ணியே னூற்றிடச் செழுமதி நிலவூற்ற. (௰)

மங்கை யாழினை யிருவிழி களிப்புற வொருபத மலர்தூக்கிக்
கங்கை வாய்விட வொருபதங் குறளன்மேற் கதிகெழு சதிதூக்கிப்
பங்கை யாசனன் றுதிசெயு நெடியமாற் கதிசயம் பரந்தேறச்
சங்கை யேந்திய குழைநிலாப் புயவரைத் தடந்தொறுந் தவழ்ந்தேற

வேறு.

புவன நாயகி தாளமாம் பொற்கலம் பிடித்துத்
திவளம் பாணியாற் பண்ணொடுந் திரளமு தாக்கிப்
பவள வாயினு லின்னிசைச் சுவையரி மாறத்
தவள வாணிநாற் கவிவள நவரசந் துளிர்ப்ப. (௧௨)

கருணை மேனிநா லாயிரம் பகலொளி கதுவ
வுருவ வான்முகச் செழுமதி நகைநிலா வொழுக
விரும்ப ரும்பொழு தணர்தலா தியாவருந் திகைப்பக்
குரும ணிக்கழ லடியவர் வினையறக் குமைப்ப. (௧௩)

திருவி ழிக்கரு ணைக்கட லருண்மடை திறந்து
கருதா வார்மனக் கால்வழி கனாபுரண் டேறிப்
பருவ முற்றவர் பக்குவ முறைமுறை பாய்ந்து
சருக சித்துலர் தவமுனிக் காடெலாந் தழைப்ப. (௧௪)

இடம்வ லங்களுந் தெரிந்தில ரிமைப்பிலா விமையோர்
நடமு நிற்றலுங் குறித்தில ரெட்டமா யிரத்தோ
னடைவு சாரிபார்த் தசைவிலன் றிசைமுகத் தவனுங்
கடவு ளோவியப் பொதுவிலே வேறியங் கடுப்ப. (௧௫)

வேறு.

கண்டலப் பொலிவான் மண்டல மூன்றே கடிமலர் தழைத்தெழு
முடியாற், றண்டலைத் திரளோ சங்கணி குழையாற் றன்மதி
மானமோ மிடற்றாற், கொண்டலைத் தரித்த மேருவோ புயத்தாற்
குலவரைத் திரள்களோ வெனயால், விண்டலத் திந்திர சாலமோ
வெனவும் விண்ணவர் மண்ணவர் திகைப்ப. (௧௬)

அலர்மதிப் பிளவுந் தும்பையந் தொடையு மறிகலா தனியினஞ்
சுழலப், பொலிதிருச் சாந்து புயல்பொரப் புரிநூல் பொன்னொளி
மின்னொளி பொதுள, விலகிவில் லுமிழுந் தொடியணி புயத்தில்
வெண்டலை மாலைகண் மிளிரக், கலைமதித் திரளென் றெழுந்துசெங்
கரத்துக் கணபண கங்கணங் கலிப்ப. (கள)

எண்டவ விருவர் சிவசிவ சிவவென் றேத்திட விருவரி லொரு
வன், காண்டக வரிய சரணநூ புரங்கள் கலின்கலின் கலினெனக்
கலிப்ப, வாண்டகை யமரர் சயசய சயவென் றார்த்திடச் சித்திர
சபைக்கே, தாண்டவம் பணிவார் தமக்கெலா முத்தி தருந்தருந் தரு
மென நடித்தான். (கஅ)

துடித்திர ளமரர் துந்துபித் திரளாஞ் சோபனக் கவரிபொற்
றுளம், பிடிப்பளாஞ் சுருதி சுருதியா யிரமாம் பேரிசை வாச்சுநா
மகளே, படிப்பளா மயன்மா லிமையவர் பரவிப் பார்ப்பரா மகிலநா
யகனே, நடிப்பனும் பொதுவோர் சித்திரப் பொதுவா நடநவில் காட்
சியார் நவில்வார். (கசு)

வேறு.

அங்க ணவுன தெிசயத் திருநட மனந்தமாம் விழிவேண்டு
நங்க ணுந்தற் கெளிவரு காட்சிநீ நவின்றரு ளெனப்போற்றிச்
செங்க ணன்முதற் றேவரேத் தெடுத்தலுந் தெரிதர நடங்காட்டி
யெங்க ணாயக னெழிலரி யாசனத் தினிதுவீற் றிருந்தானே. (உ0)

கவரி யேந்தின ரரம்பையர் சனகருங் காசிபன் முதலோரும்
பவரி ருஞ்சடைக் கும்பனும் புயங்கனும் பங்கயத் தயன்மாலு
மேவரு மேபிராற் பரவினர் திருப்பலாண் டிசைத்தனர் திசைத்தேவ
ருவரி போற்பரந் தார்த்தனர் தூர்த்தன ரும்பர்மா மலர்மாரி. (உக)

வேறு.

ஈசனை யயனு மாலு மிமையவர் முனிவர் யாரும்
பூசனை புரிந்தார் மன்னோ புடார்ச்சுன புரத்து மூன்று
யோசனை யிடமும் வீரி காத்திட வயர்பொற் கோயில்
வாசமாம் விசைய காப்ப மணிமதில் வடுகன் காப்ப. (உஉ)

அம்பிகை யிசைமா தங்கி யாதியம் பரனே கூத்தன்
பைம்பணி யரசு மம்பொற் பாதல வாசல் பேரான்



தும்பனே பொதியில் வாசன் குரவர்மால் பிரம னுவா
ரும்பர்தூந் தூபியி னோசை யொலியுறுத் தெய்வ மன்றம். (உங)

சலிலநீர்த் திருக்குற் றாலந் தன்னிலற் புதங்கண் டாழிக்
தாயிலைநீத் திருக்கு மாயன் றன்மைதா னுணரான் போலக்
கயிலைநீத் திருக்கு மாறு கூறெனக் கருதிக் கேட்ப
மயிலைநீத் தறியாப் பாகன் மணிநகை துளக்கிச் சொல்வான். (உச)

மாதுமை யிடத்து மீன்ற மழகளி றிடத்தும் வைவேற்
காதல னிடத்தும் வெள்ளிக் கயிலையி னிடத்து மிக்க
வாதரந் திரிகூ டத்தி லமைந்தன முகுந்தா வித்த
வேதரா சியத்தைக் கூறே முனக்கினி விளம்பக் கேண்மோ. (உரு)

அண்டமு மகண்ட மியாவு மழிவுற வொடுக்கி நாளும்
வண்டணி துளவத் தாரோய் வரன்முறை வகுக்கு நாளு
மொண்டொடிப் பரையும் யாமு முறையிட மாக லாலே
தண்டலி லுலகுக் கெல்லாந் தாயகந் திருக்குற் றாலம். (உசு)

பாரினுக் கநாதி யாறும் பாரொடு ககனந் தாவு
நீரினுக் கரிய தாறு நெருப்பொடு சண்ட வாயுப்
பேரினுக் கடந்த நாறும் புகைபிரா வெமக்கு மெம்பரா
சூரியம் பரைக்குந் தான நன்னக ரல்லா துண்டோ. (உஎ)

ஆதலா லாழி தோறு மானந்த நடஞ்செய் தானம்
போதருஞ் செயல்கண் மூன்றும் புரிதரு மூலட் டானங்
காதலா லுறைவுந் தானங் கயிலைபோற் சிவலோ கம்போ
லேதலாற் பிறிதொன் றில்லை யிதுராக சியமே யாமால். (உஅ)

புலந்தரு தலங்கட் கெல்லாம் புடார்ச்சுன புரமே மேலா
நலந்தரு தலமா மென்று நவிற்றலுங் கமலக் கண்ணன்
விலங்கலிற் காசி யாதி நிகழ்த்திய தலங்கள் யாவும்
பலந்தரா துலவோ வென்னப் பகர்தலும் பரம மூர்த்தி. (உகூ)

அருணைகே தாரந் தில்லை காளத்தி யாரூர் காசி
திருமறைக் காடு காஞ்சி செங்காடு வெண்கா டாதி

யொருதலத் தோரோர் கூறே யுறைகுவந் திரிகூடத்து
நிருமல வடிவாய் ஞானக் கலையெலா நிரம்பா நிற்பெம். (௯0)

மெய்வளர் நதிகட் கெல்லாஞ் சித்திர நதிவி சேடஞ்
சைவமா தலங்கட் கெல்லாஞ் சண்பகா ரணிய மேலாந்
தெய்வமுந் தலைவெற் பெல்லாஞ் சிவலிங்க வடிவ மெந்தக்
கொய்மலர்த் தருவுந் தேவர் குறும்பலா வேத மூலம். (௯௧)

வேறு.

ஒருதலத்தி லாயிரம்யாண் டுதவுபல னோராண்டி லுதவுங் காசி
யருணைதரு மோராறு திங்களின்முத் திங்களிலே யருளு மாரு
ரிருமதியிற் கேதார மொருமதியிற் கோகருண மேழு நாளிற் [றாலம்.
றிருவளர்நெல் வேலிதரு மொருநாளிற் கொடுத்தருளுந் திருக்குற்

பொங்கேறு சுருதிபயில் குற்சரகோத் திரத்திலொரு புதல்வன் மேனா, ளிங்கேறி வடவருவி படிந்தொருநாட் பலனளிப்ப வீன்ற தாதை, பங்கேறிப் பவர்க்கமெலாங் கடந்தேறிச் சுவர்க்கமெனும் பதம்பெற் றானாற், சங்கேறு தடம்புயத்தாய் சித்திரமா நதிப்பெருமை சாற்ற லாமே. (௯௨)

பூவுலகில் வாழ்ந்திருக்குங் காலமெலாம் பாதகமே புரிந்தா ரேனும்
பாவனையா லச்சத்தால் விளையாட்டா லெங்கிருந்தும் பரவியோர்காற்
றேவரக சியமான திரிகூடந் திசைநோக்கிச் செங்கை கூப்பி
நாவினா லுரைப்பாரேல் வினையொழிந்து நமனுபத நண்ணு வாரே.

அப்பரிசு திசைநோக்கிப் பணிந்துபுட்ப கந்தனெம தருகிற்சேர்ந்தான், செப்பரிது நெடுமாலே திரிகூடத் தலமகிமை செகமே லெங்கு, மிப்பதிக்கோ ருவமையிலை யென்பவர்மன் பதைக்கிறையா யிமையோ ராவ, ரொப்புளதென் றுரைப்பவர்கள் கருப்பம்வீழ்த் தினர்பாவத் துறுவா ரன்றே. (௯௩)

ஒப்பரிய திரிகூட வுயர்தலத்துக் கொருதலத்தை யுவமை யாகச்
செப்புவோ ரித்தலத்துச் சிவனின்மா லியமிகழ்ச்சி செய்யுந் தீயோ
ரிப்பதியி லென்றுமெமைப் பூசிப்பார்க் கிடர்புரிவோர் யாவ ரேனுந்
தப்பிலா தவனிதனிற் புலையராய்ப் பிறந்துழலத் தருவா ரன்றே. ()



விரிவாக முத்தொழிலும் புரிந்துநா மினிதிருக்கும் விமலத் தானம்
பரிவாகக் காண்பார்கள் பணிவார்கண் மகிமையினைப் பகர்வார் தம்பாற்
வரியாரா மெத்தலத்தி லுறைவாருந் தமியெழுநா ளொருகா லேனுந்
திரிகூடங் குற்றால மெனநாவி லுரைத்திடுவார் சிவமே சேர்வார்.

இன்னணமித் தலமகிமை யாதலாற் கழிவிலிடுந் தெந்த காரு நன்னகர்ச்சின் மயப்பொதுவி னன்றுதுப்பா மெனப்பரமர் நவின்று ராகப், பன்னகசா யியுமயனும் பணியாகக் குறுமுனியும் பணிவிட் டேகார், பொன்னகரின் முதலோரு மகர்களுமுந் திருநடமும் பொலிவா மென்றும். (௯௮)

ஆதியாம் பரையவனது நன்னகர்ச்சிற் பொதுநடன மாருங் காலுறற் [தே
காதலாற் சுரர்முனிவர் பலகாலந் தவம்புரிந்து கண்ட வாற்றும்
போதினன் முகன்முதற் பரைபரம னியந்திரங்கள் பொறித்தா னன்
னாதரா யனன்முதலோர் சித்திரமன் றெனுநாமம் வழங்கி னாரால்.

வேதநாத் தமிழ்முனிக்குத் திரிகூடக் கிரிமுதலா வெள்ளி வெற்பின்
பூதநா யகருரைத்த வகைகளெட்டுந் திருநடமும் புகன்றே மேலரு
ருதன்மா தவர்க்குரைப்பக் கண்டகசே தனன்சரிதை சூதமுனி வாய்மை
ஞ்சூர்வா சகிக்குரைத்த கதைவிரித்து நவிலுவேனக் கவின்ன தாலுன்.

9-திருநடச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம்-௫௪௪.

---

## பத்தாவது:—கண்டகசேதனச் சருக்கம்.

கந்தநறுங் குழல்போலுங் கமழ்சோலை காசினிமான்
வந்தனஞ்செய் மருங்கேய்க்கும் வல்லிசா தங்கமெலாம்
பைந்தனமே நிகராகப் பணைத்தோங்கிக் காசினுஞ்
சந்தனமுங் குங்குமமுந் தண்பொதியுந் தென்பொதியம். (௧)

திரையமுதம் வானுடு சேர்ந்தெனச் செந்தமிழ்த்தேன்
வரைநெடிய குறியிறுவல் வான்கிழிப்ப வதன்வழியே
தரையின்மிசைப் போந்ததெனச் சாய்ந்தருவி பொன்கொழித்துக்
கரைகிழிப்பப் பொருதகடற் கன்பொருந்துந் தன்பொருந்தும். (௨)

கரகமா முனிகரத்துக் கவிண்டமேலோ தகமாகிப்
பரமர்வாழ் முக்களவிற் பாவவிநா சம்புரிந்து
முரகரிக யேந்திரற்கு முத்திதருந் தடந்தாவி
விரகெறிந்த சித்தனுக்கா மெய்சாய்ந்தார் பதிசூழ்ந்து. (௩)

விஞ்சுதச ரதராமன் பூசனைசெய் மெய்த்தலமு
மஞ்சுதவழ் சிவசயிலம் வளர்வன்னி யீச்சுரமுஞ்
செஞ்சவா லீச்சுரமுஞ் சேர்கடனை யொருபாங்காய்ப்
பஞ்சலிங்கம் பொலிந்தோங்கும் பச்சாறு மொருபாங்காம். (௪)

சிவகயிலா யப்பெருமான் செங்கணன் பதிபிறவுஞ்
சுவகயிலா யங்குளிக்குந் துறையாகி நிறையாழி
யுவகையினர் திருப்பதிக மொன்பதினு நம்பருறை
நவகயிலா யங்களினு நடைபெறுந்தாம் பிரபன்னி. (௫)

வேறு.

பொருநைமா நதிப்பூம் பாவை வலம்புரிக் குழிசி பூசி
யுருமணி யரிசி வாரி யுலைப்பெய்து துவர்த்தி மூட்டிக்
கரைகெழு சிறுசோ றாக்கிக் கனைதிரைப் பாவைக் கூட்டித்
திரண்மணற் சிற்றி லாடுஞ் சிந்துபூந் துறையின் பாங்கர். (௬)

நிச்சநீர்ப் பொருநை யாறு நெடியபாற் கடலா வெற்பு
நச்சர வணையாச் சென்னி நனிவைத்துக் கடற்கா னீட்டிப்
பச்சைமால் கிடந்தா லன்ன பசியதண் பழனச் சாலி
யிச்சைசேர் கமலச் செல்வி யிருக்கையாந் திருநெல் வேலி. (௭)

கீற்றொளி மதிபோ னெற்றிக் கௌரிகூ றலது மற்றைக்
கூற்றொளி கரந்தா லென்னக் குலவுபச் சுருவாய் மேனி
நீற்றொளி தனைப்போல் வேணி நிலவொளி தனைப்போற் கங்கை
யாற்றொளி தனைப்போன் முத்தி னழகுவேய் நிழலில் வாழ்வோன்.

பரசமை யங்க ளென்னும் பகைகடிந் தலகிற் சைவந்
திரசமை யத்தை நாட்டுஞ் செயவிடைக் கொடிநின் றூட
முரசுகண் டயிலா வாயின் முகிலினந் துயில்பொற் கோயி
லரசுசெய் முக்கட் பெம்மா னுறுங்கீழ் வேம்ப நாட்டில். (௯)



இஞ்சிசூழ் சாலி வாடைச் சீரத்துநேர் குடபுரா லாகச்
செஞ்சியர் தஞ்சை நாடர் செழுந்தமிழ் வழுதி நாடர்
வஞ்சிய ரீழ நாட ரெனவரும் வணிக மாக்க
ளெஞ்சுதே யத்து ளார்க்கு மாவணப் பொதுவோர் மூதூர். (௧௦)

நீதிசேர் பதியில் வாழு நிறைந்தகால் வருணத் தாரி
லோதலா னினங்கள் காத்த லுழவுவா ணியமே வேட்ட
லீதலே யாதி யாறு மியற்றுசீர் வைசியர் தம்மிற்
காதல்வா ணிபங்கள் செய்யுங் கவிப்பர்தங் குலத்து வந்தோன். (௧௧)

ஈட்டுதல் பகுத்தல் யாவு மிறுவதிற் சிறிதஞ் சாமை
காட்டிய தனிமை யாற்றல் காலத்தோ டொழுகல் கோப
மோட்டுத லிடரிற் றேற லுறவது தெரித லென்னும்
வாட்டமில் குணங்க ளெட்டு மருவுமா தத்தன் மைந்தன். (௧௨)

நகரமேற் பொருள்கள் யாவு நாட்டின்மேற் பொருள்கள் யாவுஞ்
சிகரமேற் பொருள்கள் யாவுந் தில்லைமேற் பொருள்கள் யாவு
மகரநீர்ப் பொருள்கள் யாவு மலிதலால் வணிக மாக்கள்
பகர்கரு கூலம் போலும் பரதவன் பண்ட சாலை. (௧௩)

வேறு.

துகிரும் பொன்னுங் கருப்புர தூளமு
மகிலுஞ் சாந்தும் வயிரமு மாரமு
முகிலுஞ் சூழ்மனை முன்றிலின் மாதரார்
நகிலு நெஞ்சு நடம்புரி தோளினான். (௧௪)

ஈறி லாநிதி யெய்தின னாயினும்
வீறி நாளும் பொருள்கவர் வேட்கையான்
சூறி யாரு மிகழச் சிறுவிலை
கூறி நாடொறும் விற்குங் கொடுமையான். (௧௫)

கண்ட மாற்றிக் கருப்புரஞ் சந்தனத்
தண்ட மாற்றித்தண் டேன்கலப் பாற்றியுங்
கொண்ட மாற்றுக்கு நன்மடி கூறியும்
பண்ட மாற்றிப் படைக்கும் பொருண்மையான். (௧௬)

பேய்ப சிக்குப் பெருவிருந் தாமுட
னேய்ப சிக்குற நுங்குவ தோர்கிலான்
சேய்ப சிக்கவுஞ் செல்விருந் தேங்கவுந்
தாய்ப சிக்கவு முண்ணுந் தறுகணன். (௧௭)

மூவர்க் காகினு முன்னவர்க் காகினுந்
தேவர்க் காகினுஞ் சென்னி வணங்கலான்
கோவர்க் காகக் கொடிறுடைப் பார்க்கலால்
யாவர்க் காகினு மீர்ங்கை விதிர்க்கலான். (௧௮)

தாப முன்னித் தனம்பல தேடவெந்
தீப மெங்குஞ் சிலசரக் கேற்றுவான்
றூப மன்ன வுடற்கல மீதினும்
பாப மென்னும் பலசரக் கேற்றினன். (௧௯)

விண்ட காணியிற் கோடி விளைக்கினுங்
கொண்ட கோடியிற் காணி கொடுக்கலான்
மண்ட வான்பொருண் மண்ணிடை தாழ்க்கவே
கண்ட சேதனன் கண்டக சேதனன். (௨௦)

வேறு.

நாற்றிசைப் பண்ட மென்று திசையினு நடாத்தித் தானோர்
மேற்றிசைக் கொடுபோய் விற்பான் விடைமிசைத் திரளாக் கொண்டு
சேற்றிசைப் பழனஞ் சூழ்ந்த சித்திர நதியாங் கங்கை
யாற்றிசைக் கீழ்பாற் சென்றா னருக்கனு மேல்பாற் சென்றான். (௨௧)

ஆக்கிய பொருளுக் கேற்ப வைப்பசி விழுவென் றாங்கே
வாக்கியம் விதிப்பான் போல மறுதினத் துதித்தான் வெய்யோ
னாங்கினும் வறியோர் கூழுக் குப்பரி தாகுஞ் செல்வர்
பாக்கியக் கலத்தில் வீழும் பால்பழம் பஞ்ச தாரை. (௨௨)

வடக்கரைத் தென்பா லாருங் கங்கையில் வடபா லாருங்
கடக்கரை மலைநாட் டாருங் கடற்கரைச் சேது வாரு
மக்கரை யுதய காலத் தறமெனுங் கரும்பிற் சேர்ந்த
சக்கரை வட்டாந் தெய்வச் சண்பகா ரணியஞ் சார்ந்தார். (௨௩)



அந்தணர் கவிப்பர் செங்கோ லரசர்வே ளாள ரன்பால்
வந்தவ ருயர்ந்தோர் தாழ்ந்தோர் மற்றைமா னிடரே யன்றி
முந்தைவா னுலகத் தாரு மொய்த்தனர் திரிகூ டத்துச்
சிந்துமா மழைநாள் வாரி திசைதொறும் பரந்தா லென்ன. (௨௪)

சிவமது கங்கைத் தானஞ் சேர்ந்தனர் வானோர் சித்தர்
மவுனர்சென் றகத்த டாகம் வதிந்தனர் புவியின் மாந்தர்
தவவட வருவித் தானஞ் சார்ந்தன ரதனு லவ்வூர்
புவனமந் தரமு மேலாஞ் சுவர்க்கமும் பொருவிற் றன்றே. (௨௫)

சிந்துநீர்த் தரங்கந் தோய்வார் திரைக்கடன் முகுந்த னோர்வா
ருந்திநீர்ச் சுழிபோய் மீள்வா ருந்தியி னுதித்தோ னெப்பா
ரிந்திர தனுவிற் சேர்வா ரிமையவர் தலைவ னேய்ப்பார்
மந்திரத் தருவி தோய்வார் வரநதி தரித்தோன் போல்வார். (௨௬)

நதிபல துறைதோ றாடி நன்னெறி நியதி யாற்றி
முதியவே தியர்க்குத் தாகுண் முழுமணிக் கடகம் பூமி
நிதிபசு விளைவு கன்னி நித்திலம் புரவி யானை
துதிபல தானஞ் செய்தார் சுவர்க்காதி போகம் வேட்டார். (௨௭)

எம்பிரா னிமயச் செல்வி யானைமா முகன்வேற் கந்த
னம்புயக் கண்ண னாதி தேவரா லயங்கள் பூசை
நம்பன்மெய் யடியார் பூசை நலம்பெறப் புரிந்தார் மன்றோ
வெம்புவிப் பிறவி வேண்டார் மேற்பதம் வேட்டா ரெல்லாம். (௨௮)

கொண்டனர் கொள்வோர்க் கெல்லாங் கொடுவிலை கூறி மாறிப்
பண்டமார் பொதியெ லாம்பொற் பலபொதி யாகச் செய்தான்
கண்டக சேத னப்பேர்க் கயவன்கோள் காண வஞ்சி
மண்டுற வொளித்தான் போல வரைதனின் மறைந்தான் வெய்யோன்

அற்றைநாட் கங்குல் வில்லா வரும்பண்ட மிருந்த வெல்லாம்
பிற்றைநாட் கொடிகா விற்றுப் பிறர்க்கனு வியூான் வைகி
மற்றைநாள் விடியா முன்னம் வளம்பதி சேர்ந்தான் யார்க்கு
முற்றகா னுதவாச் செல்வ முவர்நீர்ப் பெருக்கம் போல்வான். (௩௦)

கோடிநட் டவஞ்செய் தார்க்குங் குறுகொணாச் சங்க வீதி
நாடினா னல்லன் றெய்வ நதிக்கரை யிருந்து மந்நீ
ராடினா னல்லன் றன்னா ரனுகினான் பொருளே பின்னுந்
தேடினா னிருந்தான் மன்னோ திரவியங் காத்த பேய்போல். (௯௧)

வேறு.

நாட்கடோறு மூன்சுவைத்து நனிவாயிற் பற்குறுகத்
தாட்கடிய நடைகுறுகித் தளர்ந்துபோ யுடல்குறுக
வாட்கடியன் பாம்புடல்போ லாயுகமுங் குறுகினான்
றோட்கடிய தண்டேந்தித் தூதுவருங் குறுகினார். (௯௨)

தாளாண்மைத் தனம்படைத்தாய் தானமே கொடுத்தறியாய்
கோளாண்மைத் துடைப்பம்போற் குவித்தனையிங் கார்க்காகக்
கேளாண்மைத் தருமமிலாக் கெடுமதியோய் வாவென்றார்
நாளாண்மைக் கொடுவாளா லுயிர்குறைக்கு நமன்றூதர். (௯௩)

அந்தகன்றூ துவரலைப்ப வாவிசோர்ந் தலமருவான்
புந்திகொடி தறத்தேடும் பொருள்களையு மப்பொருள்கள்
வந்ததன துயிர்க்குதவா வாதலையுந் தனக்குவந்த
நிந்தனையுங் குறித்தெண்ணி நினையாதெல் லாநினைவான். (௯௪)

வேறு.

கொடுமையாய்ப் பொருளைத் தேடிக் குவித்தனன் குவித்த கங்கைச்
சடிலநா யகற்கென் றானுந் தந்திமா முகற்கென் றானும்
வடிவுடை யுமைக்கென் றானும் வாகைவே லவற்கென் றானு
நெடியமா தவற்கென் றானுந் திருப்பணி நிறைத்தே னல்லேன். (௯௫)

நசையறு வேனிற் கால நடைசாலை தண்ணீர்ப் பந்தர்
திசைதொறும் வைத்தே னல்லேன் செருப்புநற் குடையு மேலோர்க்
கனைவுறக் கொடுத்தே னல்லே னன்னசத் திரங்கள் கட்டி
மிசைபவர்க் கெல்லா மன்னம் வேண்டுமா றளித்தே னல்லேன். (௯௬)

நந்தன வனங்கள் வைத்து நாதரா லயங்கட் கெல்லாஞ்
செந்திருப் பள்ளித் தாமஞ் சேர்வுறச் செய்தே னல்லே
னந்தளிர்ப் பனச நெல்லி யாம்பிர நாளி நேரம்
பைந்துணர்ப் பூக மாதி பன்மரம் வைத்தே னல்லேன். (௯௭)



வாழ்ந்தநா ளடுத்த வீடு வாழ்வுற வாழ்ந்தே னல்லேன்
சூழ்ந்துள கிளையை யூட்டிச் சுற்றமும் வளர்த்தே னல்லேன்
றாழ்ந்துள குடும்ப மேனுந் தாங்கினே னல்லேன் முன்னாள்
வீழ்ந்துள தரும மேனு மேலுற வளர்த்தே னல்லேன். (௯௮)

ஓலத்தண் மழைக்கார் கால மொதுக்கிடங் கொடுத்தே னல்லேன்
காலத்திற் பொருளில் லார்க்குக் கன்னிகா தானஞ் செய்யே
னாலத்தை யுண்டார் கோவில் விளக்கிட்டே னல்லே னூற்றிற்
பாலத்தை முடித்தே னல்லேன் படித்துறை செய்தே னல்லேன். ()

தேசிகர்க் கீந்தே னல்லேன் சிவபிரா னடியார்க் கேனும்
பூசுரர் தங்கட் கேனும் போசனங் கொடுத்தே னல்லேன்
பாசநோ யொழிக்குந் தில்லை குற்றாலம் பாவ நாசங்
காசிசேதுவிற்செல்வார்க்குக் கைப்பொருள்கொடுத்தேனல்லேன். ()

தூசிலார் தமக்குத் தூசு சொன்னமில் லார்க்குச் சொன்ன
மாசறப் பசித்தோர்க் கன்ன மாகிலு மளித்தே னல்லே
னாசியில் வாசி பார்த்தே னொருபிடி யமுதென் றானும்
பேசுமென் மனது கூடிப் பிச்சையிட் டென்றே னல்லேன். (௱௧)

கட்டினே னல்லே னேனுங் கடவுளா லயங்கள் போற்றி
யொட்டியோர் வலம்வந் தில்லே னுண்ணுநீர்க் குளங்கள் கூவல்
வெட்டினேனல்லேன்பொல்லேன்வீண்பொருள்விளைத்தே னிப்பால்
முட்டினேன் குனிந்தென் செய்கேன் மொழிபகா வெழும்பாதக்கேதா.

நிலையிலா வுடலும் வாழ்வு நிச்சய மென்றே யெண்ணி
யலகிலாக் கொடுமை செய்தே னவத்தைவந் தடுத்த தந்தோ
விலகவோர் தரும மென்னு மெய்த்துணை யில்லாப் பாவி
பலபடச் செய்த பாவம் பலித்ததென் றயர்ந்து சோர்ந்தான். (௱௩)

வேறு.

ஏங்கினான் கடுகளவு மீயாதான் மலையளவும்
பாங்கினர் பொருள்கவரப் பார்த்திருந்து பதைத்தாவி
நீங்கினா னுயிர்க்குறுதி நீங்காத துணைகாணான்
றாங்கினான் பாவமெனுந் தாங்கரிய பெரும்பாரம்.

மன்கிடக்கை யூர்கிடப்பப் போர்கிடப்ப மனைநிறைந்த
பொன்கிடப்பத் தேடிவைத்த பொருள் கிடப்ப மனைமாதர்
முன்கிடப்ப வொருவருக்கு முதவாத முடையுடலம்
பின்கிடப்பத் தனிபோனான் செய்தவினை பிடர்பிடிப்ப. (௪௫)

வீக்கினார் பெரும்பாசம் வெருட்டினார் பொருபடையாற்
றாக்கினார் நெருப்பாற்றிற் றள்ளினார் மயிர்ப்பாலம்
போக்கினார் கொடியமுள்ளிற் புரட்டினார் முரட்டுடல்புண்
ணாக்கினார் கொடுந்தூத ரந்தகன்முன் கொடுபோனார். (௪௬)

காலபட ரலைப்பதனைக் கண்டிரங்கிக் கையமைத்து
மேலசைத்த கொடும்பாசக் கட்டவிழ்த்து வியந்திருத்திக்
கோலநகை யமுதளித்துக் குறைநிறைசெங் கோற்கடவுள்
சூலமொடு பாசமொடு நின்றதூ துவர்க்குரைப்பான். (௪௭)

பன்னாளும் பாவியிவன் பாவமே புரிந்தாலுங்
கொன்னாரு மதிச்சடையார் குற்றாலந் தனிலேகி
முன்னாளிற் பெற்றிருந்தான் மூன்றுநாட் டலவாச
மெந்நாளிற் புண்ணியமோ விமையவர்க்குங் கிடையாதால். (௪௮)

நன்னகர்வை கியமூன்று நாளிலொரு நாட்பலனே
முன்னமிவன் செய்தபெரும் பாவமெலா முடித்ததாற்
பின்னரொரு நாட்பலன்றான் பிரான்கயிலை தனிற்சேர்க்கு
மின்னமொரு நாட்பலனு மிறைவன்மேற் கடனாமால். (௪௯)

என்றியம னியம்பியகா லெண்ணரிய கணநாதர்
மன்றலுயர் விமானமொடுந் தோன்றினார் மலர்மாரி
நன்றிவா னவர்பொழிந்தார் நமன்றூத ரதிசயித்தார்
றென்றவனுஞ் சிவபெருமான் கயிலைவரை தனிற்சேர்ந்தான். (௫௦)

இந்தவகை தலவாசத் தியற்கையென வியர்சூத
னந்தணருக் குணர்த்திவட வருவியொரு தினப்பலனூற்
றந்தைநர கினைப்புதல்வன் றவிர்த்தகதை யவர்கேட்ப
முந்தைநா ரணர்க்கரனார் மொழிந்தபடி மொழிகுவான். (௫௧)

10-கண்டகசேதனச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௩௬௭.

## பதினொராவது:—கவுற்சனச் சருக்கம்.

கொண்டையுறு நீலவிழி கொண்டையுறு நீலங்
கெண்டையொடு பாணிபுகு கேணிசெறி சோலைக்
கண்டையல ராடுகிளி கண்டையலர் சொல்வாய்த்
தொண்டைவள நாடுமுயர் தொண்டைவள நாடு. (௧)

நாஞ்சிலுழ வர்க்கெதிர் நடந்துவெடி தாவி
மாஞ்சினை கிழித்துவரி வாளைவிரி பாளைப்
பூஞ்சினை திளைத்துமது தேசர்கொடி போலுங்
காஞ்சிநக ரத்திலழ காஞ்சிநக ரத்தில். (௨)

ஆரமுண்த முக்கணழி யாதிநிறை மாவின்
சீரமுத வைப்பையிரு செங்கைகொ டணைத்து
வார்பொரு முலைக்குறி வளைக்குறி யமைத்த
வோர்பரை யறஞ்செயு நகர்க்கொரு மருங்கில். (௩)

வேறு.

ஆனக மொலிக்கும் வீதி யணிகெழு நாட்டி லங்கோர்
தேனகன் சோலை மாலைச் செழித்தசெந் சாலி வேலிக்
கோனக ரந்த ணாளன் குற்சர்கோத் திரத்தில் வந்தோன்
மானகஞ் சுகத்தான் வேதம் வடகலை பயின்ற நாவான். (௪)

மரபுசேர் குற்ச னென்னு மறையவன் றனக்குப் பாப
ரிருவரு முச்ச மேறச் சுபரெலா நீச மெய்த
வுரகருங் காரி சேயு முதித்திட வுதித்தான் மன்னோ
கரவடன் கவுற்ச னென்பான் கரும்பினி லரும்பு போல்வான். (௫)

மடமெலா மொன்றாய்ப் பாலன் வடிவெடுத் தெனவே தோன்றிப்
புடவியி லொழுக்க மாதி புண்ணிய நெறிகள் யாவுங்
கிடைபடக் கடந்து பாவங் கிளர்வுறத் தவழ்ந்து பொல்லா
நடலையுங் கொலையுஞ் சூது நடைபெற நடைபெற் றானே. (௬)

அழுதொறுஞ் சிவ கோடி யழுதிட வழுவா னஞ்சொன்
மொழிதொறும் படிறுங் கோளுங் குறளையு மொழியாக் கற்றான்
பழிபுரிந் துயிர்கள் வீட்டும் பயிற்சியே பயின்றான் மாரி
மழைவளர் விழல்போற் காமம் வளர்ந்திட வளர்ந்தான் மன்னோ. (௭)

முப்புரி நூலுந் தாங்கி முன்சிகை நடர்போற் பூண்டு
குப்பமக் கிரங்க வெல்லாங் குமந்திரம் புகல்வ தானான்
விப்பிர ரோதும் வேதக் கிடையெலாங் கிடையா விட்டான்
செப்புநூல் சிறிது கற்றான் சிறுபுலி கொலைகற் றாற்போல். (௮)

குரவர்நா லுணர்த்துங் கோலை தருமமார் குலநூல் விட்டுக்
கரவடம் பயிக்குங் காலங் கணித்தமே லறிய வேண்டிப்
பரவுசோ திடமே பன்னிப் பயின்றன னாத லாலே
புரவலன் போதத் தானிப் புரோகிதத் தலைமை பூண்டான். (௯)

தேர்ச்சிபோற் பிறன்கோள் கூறித் திரவியந் திரளா யீட்டுஞ்
சார்ச்சியி லரசன் றன்னைத் தன்வயப் படுத்துத் தானுஞ்
சோர்ச்சிசேர் மடவார் சேரித் தூர்த்தர்தம் வயத்த னானான்
கூர்ச்சிவா யரவம் வீழ்த்திக் கோம்பிவாய் வீழும் புட்போல். (௧௦)

வளர்ந்தநாட் பிரமசாரி யெனும்பெயர் மறுக்க வேண்டிக்
கிளர்ந்தடங் கயத்தின் மீதிற் கிளருமா வடுவை நேரே
பிளந்தனைத் தனைய வுண்கட் பேதையோர் மறையோன் மாதை
யிளம்பிடிக் கயம்போற் பற்றி யிராக்கத விவாகஞ் செய்தான். (௧௧)

வேட்டகு மதுவே காம வேட்டஞ்செய் காரண மாக
நாட்டக மணஞ்செய் கோல நாடுவான் புகுந்த மாதர்
கூட்டமான் குலங்க ளாகக் குவைநிதி வலையாத் தானோர்
காட்டக வேட னாகிப் படுப்பதோர் கலையு மானான். (௧௨)

மனுவுக நாளு வாநாண் மாளயஞ் சங்கி ராந்தி
வினவுமட் டகைகண் மேலை விதிபாதந் திருதி யாய
புனிதநாட் டொன்னூற் றாறும் புணர்முலைத் தடமே யன்றி
யினியதீர்த் தடமுந் தோயா னியன்றதென் புலத்தோர்க் கீயான். ()

பிறந்தநாண் முன்னு வாநாட் பெருநிசி பகலீ ரந்தி
யுறந்தரும் விரதநாட்க ளட்டமி தந்தை தாய
ரிறந்தநா ளிருவ ராய விறைவர்நாட் பதினொன் காதி
லிறந்துபுண் ணியநா ளெல்லாந் தேனனார் புணர்ச்சி நீங்கான். (௧௪)



தையலார் புணர்ச்சிக் கேகுஞ் சந்தியே சந்தி யாக
மொய்யமை விலங்கு புள்ளின் முறைகளே முறைக ளாக
மையுநுண் ணிடையார் யார்க்கு நலங்களே குலங்க ளாக
மையலே நியம மாக மதனமே யொழுக்க மானான். (௧௫)

சந்திகண் மறந்து சாந்தித் தருமங்க ளொருவி வேதச்
சிந்தைய மொழிந்து காயத் திரிமுத லயர்த்து மாத
ருந்தியந் தடத்து மூழ்கி யுயர்முலைச் சாந்தம் பூசி
மந்திர மவர்பா லோதி வணங்குவான் மதனத் தெய்வம். (௧௬)

காலையிற் புனலின் மூழ்கிக் கடன்கழித் தனலு மோம்பி
மேலையிற் கரும முற்றி விதிமுறை தருமம் பேணிச்
சாலையில் விருந்து போற்றித் தன்கிளை யூட்டி யுண்டு
மாலையில் வளர்வார்க் கெல்லாங் களையென வளர்ந்தான் மன்னோ. ()

வேந்தனைச் செங்கோல் செய்யும் விரகினைக் கரவான் மாற்றி
மாந்தர்மேற் கொடுங்கோல் செய்ய மந்திரக் குடிலஞ் செய்துங்
காந்தனைப் பிரியா மாந்தர் கற்பினைப் பிரித்துந் தன்பாற்
போந்தமா மறைச்சி றார்க்கும் புன்மைபோ திப்ப தானான். (௧௮)

பூவையர் செய்யும் பாவம் புருடர்மேற் புருடர் பாவங்
கோவின்மேற் சுமையா மந்தக் கொற்றவன் புரியும் பாவ
மேவுமே புரோகி தன்பால் வீண்புரோ கிதத்தா லின்னோன்
மூவர்பா தகமுந் தாங்கு முழுச்சுமை தாங்கி போன்றான். (௧௯)

வேறு.

மனத்தி லொன்றவ னுரைப்ப தொன்றினை மறுத்து மொன்றி
னை நடத்துவா, னினைத்து மங்கையர் முறைத்தி றம்பின னிழித்த
வஞ்சியர் கலப்பினான், முனைக்கொ டுஞ்சமர் மறக்கு லம்புகண் முடி
த்து நின்றுயிர் வதைத்துளா, னினைத்து நம்பினர் தமக்கு வஞ்சக
நிகழ்ச்சி தங்கிய விகழ்ச்சியான். (௨௦)

வருத்து தம்பன விதத்தி னும்புலை மருத்தி னும்பிறர் மனைக்
குள்வாழ், பருத்த கொங்கையர் முயக்கி னன்பகை பழிக்கு நெஞ்சி

டை பயப்படா, னருந்து தண்புனல் குளித்த றிந்தில னலந்த கங்க ளின் முழுக்கருன், முருக்கி லங்கிதழ் மதுக்க ளன்றியு முதுக்கு டங் களின் மதுக்கொள்வான். (உக)

அடுத்தி டுங்குடி கெடுக்கும் வஞ்சக னருக்கி யம்பலி கொடுத் துணு, னெடுந்த தன்குல முறைக்கு முன்சொ லு மியற்கை யொன் றினு நடப்பிலா, னடிச்சொ லஞ்சனை வழக்க மிக்கிடைநடந்து கிங் தனை யிடத்திருன், மிடுக்குடன்கணஞ்சிவந்த வங்கனை மிருந்த தொ ண்டரை யலைத்துளான். (உஉ)

வேறு.

கொலைபுரி பாவங் கோடி குருநிந்தை முதல கோடி
புலைமது நுகர்ந்த பாவம் பொய்கள வனந்தங் கோடி
நிலையிலான் காமக் கொள்ளை நிகழ்த்திடில் விண்ணின் மீனை
யலைகடன் மணலை யெண்ணி யறியினு மறியொ ணுதால். (உ௩)

தரும்பெரும் பாவ மன்றித் தருமமே யறியான் வேட்ட
மருந்துபோன் மனையா டன்னை மணந்தநாட் கண்டா னேனு
மருந்ததிக் கற்பின் மிக்கா ளரும்பெருந் தவத்தி னாலே
பொருந்துகாற் றடிப்பத் தாழை பூத்தென வயிறு வாய்த்து. (உச)

ஓதமா ருவர்நீர் வேலை யொலிசங்கி னுதரம் வாய்ப்ப
மேதகு குலத்துத் தோன்றும் விலையிலா முத்தம் போலப்
பாதகன் றனக்கோர் சேயாச் சுசுற்சனைப் பயந்தாள் வேறு
மாதவம் வேண்டுங் கொல்லோ தாரமுங் குருவும் வாய்த்தால். (உரு)

மைந்தனைப் பயந்தா ளென்று மனைக்கொளான் மனையா டன்னை
நிந்தனை புரிவா னன்றி நேர்படான் பரத்தை மாதர்
சிந்தனைத் துவட்சி நீங்கான் சுவைதரு கரும்பின் மேலுஞ்
சிந்தனை புரிவ துண்டோ வேம்பினைத் தின்னுங் கீடம். (உ௬)

கற்புடை மாதர் தம்மைக் கண்ணினாற் பார்த்த பாவ
நற்பொருள் கவர்ந்த பாவம் பிறர்மனை நயந்த பாவம்
மற்பல குடிக்குந் தீமை நாவினாற் பகர்ந்த பாவ
மிற்பிழை புரிந்த பாவ மிவையெலா மனைந்து சுற்றி. (உஎ)



மாமனைக் குரிமை யாட்டி மனங்கொதி கொதித்த வெல்லாந்
தீமையோ னுடலாம் பஞ்சிற் செந்தழற் பொறியாய்ப் பற்றிக்
காமமே வினையாய் முற்றி நாளிலே கழிந்து மேனி
தேமுரம் புழுவார் நாஞ்சிற் கொழுவெனத் தேய்ந்து மாய்ந்தான். ()

ஆங்கவ னிறந்த காலை யந்தகாட் டுள்ள மாந்தர்
தீங்கறு பாலின் மூழ்கித் தீவினை தீர்ந்தார் மாதர்
தாங்களு நறுநெய் யாடிச் சருக்கரை வழங்கி யார்த்தா
ரோங்கின வறங்கள் யாவு முயர்ந்தது தாழ்ந்த பூமி. (உகூ)

அன்னவன் றன்னைக் கால னடுங்கொலைத் தூதர் தாக்கிப்
பின்னுற வலையால் வீசிப் பிடித்தன ரிடித்துத் தண்டான்
முன்னுறப் புடைத்துச் செங்கை மூட்டொடும் பொருந்தச் சேர்த்துப்
பன்னெடும் பாசம் வீக்கிப் பரட்டிடைக் குணிலாற் கொட்டி. (௩௦)

நடந்தன னிருகால் சோர நலிந்தனர் நூறு காதந்
தொடர்ந்தனர் வெருவி யோடத் துரந்தனர் நூறு காதங்
கிடந்தன னுருண்டு வீழக் கிளர்முடி செடிதொட் டீர்ப்ப
விடந்தொறும் புரியிட் டீர்த்தா ரீரிரு நூறு காதம். (௩௧)

ஈர்த்தன்வா யெறும்பு மீயுந் துதைந்திடப் பரதா ரங்கள்
பார்த்தகண் குடைந்து காகம் பருந்தினங் குருதி மாந்த
வேர்த்துட லயர்ந்து சோர மெய்யெலா நிணங்கள் சோர
வீர்த்தனர் கொணர்ந்து தாதரியமமா புரத்தி லுய்த்தார். (௩௨)

வரைபொரு புயமும் பாரத் தண்டமும் வடவை போல
நிரைதரு சிகையுஞ் சீறி நெருப்பெழ விழித்த கண்ணும்
பொருகழற் காலும் வீர தந்தமும் பொலியச் செங்கோ
லரசுவீற் றிருக்கை கண்டா னச்சமுற் றயர்ந்து வீழ்ந்தான். (௩௩)

விழுந்தவன் சிகைதொட் டீர்த்து விடுத்தனர் தொழுதார் நிற்பத்
தொழும்பரைத் தரும ராசன் சுறுக்கொள் வெறித்து நோக்கி
யெழும்படர்க் கொடியோன் றன்னை யெற்றுமி னெறிமின் வாளா
லழுந்துறத் தடிமி னென்ன வசனியே றஞ்ச வார்த்தான். (௩௪)

சண்டனீ துரைப்ப வோடித் தருக்கினர் கொண்டு போந்தார்
கொண்டல்போ னிறத்தார் பாரக் கூளிபோன் முகத்தார் தீப்போல்

விண்டெரி சிகையார் விண்போல் வெடித்தெழு குரலார் கோபங்
கண்டக ருறுக்கும் வாயார் கனற்பொறி பறக்குங் கண்ணார். (௩௫)

கொட்டுகோல் கட்டு பாசங் குணில்பெரு முசலந் தண்டம்
வெட்டுவா ளிழுக்குந் தோட்டி தெறிக்கும்வில் குறைக்கு மீர்வாள்
கிட்டிமத் திகைவெஞ் சூலங் கிழிபட வெறியுங் குந்தங்
கட்டழ விருப்புப் பாவை கப்பண மழுக்க ளன்றி. (௩௬)

ஆட்டிய செக்கும் பூட்டி யரைக்குமெந் திரமுங் குத்தி
நாட்டிய கழுவுங் கவ்வு ஞாளியுங் கடிக்கும் பாம்பும்
பூட்டிய வடமுந் தூக்கும் விட்டமும் பொறியுந் தீயில்
வாட்டிய குறடுங் கோக்குந் தூண்டிலும் வலையுஞ் சூழ. (௩௭)

உறுக்குவார் பதகர் தம்மை யுடலிடைப் பாசம் வீக்கி
யிறுக்குவார் சினப்பா ரவ்வா றெற்றுவா ரெறிவார் செங்கை
முறுக்குவா ரடிப்பார் தண்டான் மோதுவார் கந்து கந்தர
நொறுக்குவார் கொடுமை யெல்லா நோக்குவான் புலம்ப லுற்றான். ()

இத்தனை கொடிது கால தண்டமென் றுணர்ந்தே னல்லேன்
கொத்தலர் குழலார் மோகக் குறும்பனேன் குரவன் வாக்குஞ்
சித்தமென் றுணரேன் றீமை செய்தன னென்னில் கோடி
யத்தனை பாவ மல்லா லறஞ்செய்து மறியே னந்தோ. (௩௯)

கழுவுக்கோ முறுக்கி வீசுங் கவணுக்கோ தறிக்குங் கோர
மழுவுக்கோ துணிக்கும் வீர வாளுக்கோ நரக வாதைப்
புழுவுக்கோ படைக ளோச்சிப் பொருக்கென வளைத்த தூதர்
குழுவுக்கோ வைய கோவென் னுயிர்ப்பலி கொடுப்பே னென்றான். ()

சிந்தனை கலங்கி யேங்கித் திடுக்கிடக் கையுங் காலும்
புந்தியும் பதறக் கண்ணீர் பொழிதரப் புடைநின் றோரை
யுந்தினர் பதைப்பத் தாளா லுதைத்தன ரடுக ளோச்சி
முந்தின ருறுக்கி மீசை முறுக்கின ரொறுக்கு நீரார். (௪௧)

அந்தணர் குலத்தே வந்து மரும்பலி கொடுத்துண் ணுமற்
பொந்தெனப் பொசித்தான் வாயிற் புழுக்களை வாரி யிட்டார்
சந்திகள் குளியான் மேனி தழலிடைக் குளிக்கச் செய்தார்
மந்திர மோதா வாய்க்கு மட்டறாப் புலம்பம் வைத்தார். (௪௨)



குலமனை மாதர் நெஞ்சங் கொதிகொதித் தயர வோடிப்
பலர்மனை தொறுஞ்சென் றோரைப் பழுமனைக் குழுவில் வைத்தா
ருலகினிற் றந்தை தாயர் பசித்திட வுண்ட வாயின்
மலமொடு புழுவும் வாரி வயிறெலா நிரம்ப விட்டார். (௪௩)

வரைநிகர் கற்பு மாதர் வடிவினை நோக்குங் கண்ணி
னிரைநிரை யூசி யூசி நிறுத்தினர் பெரியோர் தம்மை
யுரையிலு மிகழ்ந்த வாயி லுதைந்துபல் லுகுத்தார் பின்னுங்
குறைதரு குருதி சோரக் கொடிறுகள் கிழித்தார் மன்னோ. (௪௪)

பிறர்மனைக் கேகுங் காலைப் பிணித்தனர் துணிந்து வீழ்த்தார்
மறுமனைக் கொடியைத் தீண்டு மலிக்கரந் துமித்தார் மாதர்
முறைகெடத் தழுவு மெய்யை முசலத்தால் வயிரத் தண்டா
லிறவிற வடித்து வீழ்த்தி யென்பொரு நொறுக்கி னூரால். (௪௫)

வேறு.

எறிவ னாக்கை யெளியவன் பாரியை
முறிய டுத்தி முயங்கிய மூடனைத்
தறித றித்துத் தசைதசை யாகவே
தெறிவில் விட்டுத் தெறித்தனர் திக்கெலாம். (௪௬)

மறுவில் காவலின் மாடத்துக் கன்னியை
வெறிம ருந்திட்டு மேவிய பாவியைக்
குறிது ணித்துக் குருதியும் வாய்ப்பெய்து
கறியும் பானமும் போற்கலந் தாட்டினார். (௪௭)

அத்தி ரத்தைப் பொருவிழி யக்கலார்
நித்தி ரைக்குட் கபடஞ்செய் நீசனைப்
பத்தி ரத்திற் பதைப்ப வுறுப்பெலாஞ்
சித்தி ரத்துணி யாக்கினை செய்வித்தார். (௪௮)

வருகை பார்த்தயன் மாதரைச் சேர்வுங்க
டிருகை போச்சித் தழீஇயவன் யாக்கையைச்
சரிகை யாற்கண்ட துண்டங்க ளாக்கியே
திரிகை யன்றியுஞ் செக்கிலிட் டாட்டினார். (௪௯)

அநித்த போக மெனுநயன் மாதரைத்
தனித்த கானிற் றழீஇயிதழ்த் தேனுணா
மனித்த னான விருகனை வாய்கொளீஇத்
துனித்த மீனெனத் தூண்டிவிட் டாட்டினார். (௫௦)

நம்ப ருக்கடி யாரைநல் லோர்தமை
யம்பி ருக்குநண் ணாரைமற் றாரையும்
வம்பு ரைத்த கொடியவன் வாயிடைச்
செம்பு ருக்கிச் சொரிந்தனர் தீயெழ. (௫௧)

கண்ட வூர்மனைத் தீயிட்ட கள்வன்மெய்
துண்ட மாக்கித் துகில்சுற்றி நெய்கவேய்
மண்டு கார்த்திகை வான்பனைத் தீபம்போற்
கொண்ட மேனி யெரியக் கொளுத்தினார். (௫௨)

நடுக்கு மூப்பிய நாவரிந் தார்சிலர்
வடுக்கள் பேசிய வாய்கிழித் தார்சிலர்
கொடுத்து ணாத குடர்நுமித் தார்கொடை
தடுத்த கையைத் தறித்தெறிந் தார்சிலர். (௫௩)

புண்ட ரும்பொறிப் போகத்தைப் பொய்யெனக்
கண்டி டாது கணிகையர் காமத்தின்
மிண்ட னாகி வெறிமது வுண்ட
னுண்ட வாயிற் சிலரெரி யூட்டினார். (௫௪)

தாயுந் தந்தையும் போற்பர தாரத்தை
யாயு மாறின்றிச் சேர்ந்தா னவாவறக்
காயும் வெங்கனற் பாவைகள் காட்டினார்
தோயுந் தோறும் பொறியெனத் துள்ளினான். (௫௫)

உறுப்பு றுப்பென வீர்ந்து முடலெலா
மறுத்த றுத்துத் துணித்து மவலனை
மறுத்து மேனி யிசைத்தும்வன் றூதுவர்
கறுத்து மோய்ந்தனர் கன்மங்க ளோய்ந்தில. (௫௬)



கண்டஞ் செய்யுங் கருவிக டேய்ந்தன
தண்ட கால படருஞ் சலித்தனர்
மிண்ட னாவியை மீளவுய்த் தாரரோ
கொண்ட நாலெழு கோடி நரகர்பால். (௫௭)

மண்ட வெற்றி மறலிதன் னேவலால்
விண்ட பத்திரன் வெம்பாச பாணியுந்
துகளி லுக்கிரன் றன்முக னாதியா
முகடு முட்டிய தூதுவர் முன்னினார். (௫௮)

கோடி கோடி நிகாதக் கொடுமையு
மாடி யோடித் தவிப்பவ ராவியுந்
தேடி யோடித் தருமஞ்செ யான்கண்டு
வாடி யோடி மறுகலுற் றானரோ. (௫௯)

நம்பி னோரைச் சதித்துநல் லோர்களை
வம்பி யற்றி யடைக்கலம் வஞ்சித்தான்
பம்பி யாவி பதைக்கப் பதைக்கவே
கும்பி பாகத்திற் குப்புறத் தள்ளினார். (௬௦)

சிவத்த லந்திரு மால்வள ராலயக்
தவத்தர் வாழ்மடம் புண்ணிய சாலைக
ளவத்த மாக வலித்தவ னாவியைக்
கவற்று பாழ்நர கத்திடை வீழ்த்தினார். (௬௧)

தேவ தாயங்கள் வேதியர் செய்கண்மேற்
கோவி னாவிறை கூட்டிக் கொடுமைசெய்
பாவி யாவி பதைபடக் குத்தியே
யேவி னாரெரி வாய்நர கத்திடை. (௬௨)

அச்சி வாலய மாறு படித்துறை
மச்ச வாவிகள் சார மலம்விடுத்
துச்ச னாவி துடிக்கத் துடிக்கவே
பிச்சில் வாய்நர கத்திடை வீழ்த்தினார். (௬௩)

ஆரும் வெந்துர்க் கதிதிக ளோதிய
மீள மீளக் குடிக்கிறை மேல்லைத்துங்
கோளு நெருத்துங் குறும்புசெய் கோளனைத்
தாள கூட நரகிற் கவிழ்த்தனர். (௬௪)

கூட நின்று குளிர்தரப் பேசியே
கூட்ட கத்திதாழில் செய்யுங் கொடியனைக்
கூட சன்மலிக் கும்பியிற் றள்ளியே
கூட மத்திகை கொண்டறைந் தாரரோ. (௬௫)

முழுக்குஞ் சுத்திய மோனமு மந்தண
ரொழுக்க முந்தவிர்த் தூனுண்ட மூடன்மெய்ப்
புழுக்கள் சோர்தரப் புள்ளினங் குத்தவே
நழுக்கு கோர நாகி லழுத்தினர். (௬௬)

வீழும் புள்ளும் விலங்குங் கொலைசெய்து
வாழுங் காவின் மரங்குறைத் தான்றனை
யாழுங் கும்பி யசிபத் திரமெனும்
போழும் பூழி நரகிடைப் போக்கினர். (௬௭)

வேறு.

விரகினற் பிறர்பொருள் வலிதின் வெஃகிய
கரவடக் கவடனைக் கால சூத்திர
நரகிடை வீழ்த்தினர் நன்றி கொன்றநா
விருளெனு நரகிடை யெறிந்திட் டாரரோ. (௬௮)

வேறு.

மட்டறுத் தண்டந் தோறு மாமுனைக் கழுக்க டோறு
நட்டது வவரு மோய்ந்தார் நரகமுஞ் சலித்து தன்றிச்
சட்டமார் நமனுங் கூற்றுஞ் சலித்தனர் சுவுற்ச னென்பான்
மட்டபா டெளிதோ வம்மா பாவமுஞ் சலித்த தன்றே. (௬௯)

இங்கிவை நிகழுங் காலை யிவன்பெறு சுகுற்ச னென்பான்
யாங்குறு மன்னை பிரார் பழமறைக் குழாத்திற் சார்ந்து



தேங்குநீர்ப் பழனஞ் சூழுந் திருநகர்க் காந்தி நன்னி
யாங்குல வொழுக்கம் பூண்டா னலரிபி னரும்பு போல. (௭௦)

மானமா மறைக ளோதி மறைக்கிறார் கனைத்து நால்கண்
ஞானமார் சுகுற்ச னென்பா னவில்கின்ற நானி லவ்வூர்த்
தானமா மனுகு தோறுஞ் சவைதொறுந் தீமை செய்து
வினைமாம் பழிபா வங்க ளிருசெவி யுறையக் கேட்டான். (௭௧)

கோதிலா மறையோ னிக்குற்சர் கோத் திரத்தில் வந்தும்
பாதகம் புரிந்தா னந்தோ பாற்கடல் விடம்போற் றோன்றித்
தாதைமுன் புரிந்த பொல்லாத் தவநெலாங் கெட்டி லென்றன்
காதையும் வெதும்பச் சுட்டுக் கருத்தையுங் கருக்கு மாதோ. (௭௨)

பகருரும் பாவஞ் செய்தான் பவர்க்கம்வீழ் படைமை மாற்றச்
சகர்தூர் மீட்ட செய்போற் றவஞ்செய வல்லே னல்லேன்
முகவென வவன்பாற் றோன்றும் வன்பழி கழுவ வீதே
திகழ்று நெறியென் றுன்னித் தீர்த்தயாத் திரைமேற் சென்றான்.

குளிப்பவர் பாவஞ் சிக்குங் குறைநிரை வார ணசி
தெளிக்குநீர்ச் சோணை வாணி சிந்துநன் மதையா விந்தி
விளித்தெறி தரங்கக் கோதா வரியுநா விரிபு மாடி
யளிப்புனற் சேது வைகை யரும்பெறற் பொருனை மூழ்கி. (௭௩)

தவமது கங்கை யெய்திச் சதாசத மான வாறேனற்
பவமது கங்கை நீத்த பாடிமையு மாகத் திங்க
ளைவமது கங்கை யாதி நதிகள்சேர் கதிபு நோக்கிச்
சிவமது கங்கை பொங்குந் திரிகூடச் சாரல் சார்ந்தான். (௭௪)

கருமமே முதல நான்குந் தருணியில் வேட்டோர் யாரும்
வருகெனத் திரைக்கை காட்டி வந்தவர் பவங்க ளோடப்
பொருசிலை யம்பு பூட்டிப் புன்னியத் திரிகூடத்தி
லருளொரு வடிவாய்த் தோன்று மருவியன் குளிரக் கண்டான். ( )

வேறு.

நாடினன் வடவருவி நன்னீரி னுறுபெருமை நயந்து பாடி
யாடினு னைந்துளிர்ந்து வஞ்சலித்தான் விஞ்சுதவ மனந்துங் கோடி

தேடினான் மதுமலர்கள் சிந்தினான் கரமலர்கள் சென்னி மீதிற்
சூடினான் றிரிகூடச் சிவக்கொழுந்தைத் தொழுதாடித் துள்ளி னானால்.

அங்கமறை பலவோதி யங்கமுறை பயில்கேள்விச் சுகுற்சனென்பா, னங்கமர்ந்து வடவருவித் துறையாடி வருநாளி லவனை யின்றோன், பங்கமுற நரகிடைப் படுந்துயரு மவனையீட்டர் படுத்துந் துாதர், தங்கள்பெருஞ் சலிப்புமெதிர் கான்டோறும் யாழ்முனிவன் சலித்து நோக்கி. (எஅ)

மானமார் புலனொடுக்கிக் கண்முகிழ்த்து யோகிருந்து மனதுக் கெட்
ஞானமார் விழிதிறந்து பார்த்திடலு மவனமுந்து நரக வாதை [டா
யானமா பிரமகற்பக் தொலைந்தாலுந் தொலையாதா லதுவா னாலு
மீனமார் மறையவனோர் மகவின்று னரவமணி யீன்ற தேபோல். ()

சிவநாமம் புகழ்ந்தமரர் திரண்டாடுந் திரிகூடஞ் சென்று சேர்ந்து
புவனதி களிலுயர்ந்த புடார்ச்சுனமா புரமேவிப் புனித ரோடு
நவநாத சித்தரொடும் பத்தரொடுஞ் சித்திரமா நதிதோய்கின்றான் [ன்
னவனையலேபிவன்பாவமகனுமெனத்தெருள்கூர்ந்தா னருளான் மிக்கா

பெரியபிரான் றிரிகூட மிவனாலே யாமுமெய்தப் பெறுவோமென்று, புரிசடிலம் புறத்தசைய மகதியாழ் பிடித்தமுனி போதலோடுங், குருநிலைமைக் குற்சர்பெருங் குலதீபங் கண்டுமனங் குழைந்து தாழ்ந்து, பரிவினுட னருக்கியபாத் தியங்கொடுத்து மலர்தூவிப் பணிந்தான் மன்னே. (அக)

எம்பிரா னெழுந்தருளி வந்தவா றென்னையென வியம்பு மேல்லை, நம்பியீ யினிதிருப்ப வுந்தைநர கிடைக்கிடக்கை நன்றோ வென்று, தும்புருவி னெதிர்பாடற் சுருதியாழ் முனியுரைப்பச் சுகுற்சன்போற்றி, வெம்புபெருந் தாதைதுயர் தீர்க்குமா றருளுகென விளம்ப மேலோன். (அஉ)

யாகமா மறைப்புதல்வ நரகம்விடுந் துந்தைகரை யேற வேண்டிற்
பாதமாம் வடவருவி படிந்தவோ ராண்டிலிரு பாகந் தன்னில்
யோகமா முத்தரயா னயனத்தின் மதியாறி லுயர்ந்த மாசி
மாதமாதி யபலனிற்பன்னிரண்டாந் திதிப்பலனைவழங்காயென்றான்.



என்னநா ரதனுரைப்பச் சுகுற்சனெனும் பாலனெழுந் திதயங் கூர்ந்து, கன்னகர்ச்சித் திரநதிதோ யோராண்டு விரயன நடப்பில் வானோர், மன்னுமுத்த ராயனத்தின் மதியாறின் மாகமா மதியின் மூன்றும், பன்னிரண்டாந் திதிப்பலனைச் சனகனுக்கென் றுதகமுடன் பரிவா லீந்தான். (அங)

வேறு.

சுமுக வேதியன் சித்திர நதியிலோர் தினப்பலன் சொரிதாரை
சமர பாதகக் குழும்பெறி புன்னிய தாரையோ வவன்றுதை
திமிர தாரைதீர் செங்கதிர்த் தாரையோ தீவினை விடத்தீர்க்கு
மமிர்த தாரையோ வாருயிர்த் தாரையோ யாதென வுரைமால்.

சுவர்க்க நாடரும் விமானமோ டெழுந்தனர் சுகுற்சனைப் பயந்தானைப், பவர்க்கம் யாவையுங் கரையிசை விடுத்தன பயந்தனர் நமன்றூதர், கவுற்ச னாகிய வேதியற் கொணர்கெனக் காலனுய்த் திடவோடி, யவற்கொணர்ந்தனர் தூதுவர் தருமனு ரனிவட திசைமார்க்கம். (அரு)

தந்தை தாயரைப் பூசனை புரிந்தவர் தனையரைப் பயந்தோர்கண்
முந்தை மாதுலர் முன்னவ ரியம்பிய முறைமையி னெறிநின்றோர்
சிந்தை வாக்கினுந் தீமையி லாதவர் தெய்வத மிகழாதோ
ரந்த மில்பெருஞ் செல்வரா யுறைதரு மரசவி திகள்கண்டான். ()

கனவ னைத்தினந் தொழுதெழு மடந்தையர் கணவனோ டுறைவாருந், துணைவன் மாய்தலி னவனுட னிறந்தவர் துணைவனோ டுறைவாரும், பிணையி யம்பியுந் துணைவரா யுதவியும் பிறர்பயந் தீர்த்தாரு, மிணையில் செல்வராய் மாடகூ டந்தொறு மினிதுறை தெருக்கண்டான். (அஎ)

தடங்கள் கூபங்கள் கல்வினோர் பலன்படு தருக்கள்சோ லைகள்வைத்தோ, ரிடங்க ளில்லவர்க் கில்லிடங் கொடுத்தவ ரெழுமழைக் குளிர்காலம், படங்கள் போர்வைக ளளித்தவர் கோடைநாட் பாதுகை குடையிந்தோர், மிடைந்த செல்வரா யுபரிகை தொறுந்தொறும் விற்றிருப் பனகண்டான். (அஅ)

மன்னந் காந்தவர் ஆன்பிறை பொருத்தவர் மறையவர்க் கிடர்
தீர்த்தோர்; நின முழுவர்க் கஞ்சலென் றுதவிநேர் செல்வக்கர
சிறைமீட்டோர், பான பாத்திரங் கொடுத்தவர் நிறை நன்னீர்ப் பந்
தர்பா தையில்வைத்தோர், சேனை காவல ராய்வளர் மன்றமுஞ் செ
ச்சையும் பலகண்டான். (கூ0)

தடந்தொ றுந்தமர் பிதுர்ப்பலி யிடுதலிற் றழைப்பவர் பதங்
கண்டா, னிடந்தொ றும்பொலி வுறத்திறல் யமபுர மிருகொலோ
வெனச்சென்று, னடர்ந்த மாநகர் வீதிகள் பலகடந் தந்தகன் றிருக்
கோயின், மடங்கள் சாலைகள் வைத்தவர் தலைமைசெய் வாய்தலின்
வழிக்கொண்டான். (கூக)

அன்ன தானமிட் டையமிட் டுண்டவ ராதுலர் பிடிதீர்த்தோர்
சொன்ன தானமுந் துலங்குகோ தானமுஞ் சருநிலை தியர்க்கீந்தோர்
ரென்ன தானமு மேற்பவர்க் களித்தவ ரிமையவர் பதமெய்க்கும்
பொன்னின் மண்டபத் தொறுந்தொறுந் தலைவராய்ப் பொலிந்திருப்
பனகண்டான். (கூஉ)

தருமம் வாழ்த்திட முறைமுறை யிருவின் றகுதிகள் பணி
கேட்பக், காண மேலவர் புண்ணியம் பகர்ந்திடக் கானவிஞ் சையர்
பாட, வரம டந்தையர் கவரிகா லசைத்திட வமரர்தா னவர்சூழ
திருபர் போற்றிடத் தென்புலக் கோமக னிறைந்தபே ரவைகண்
டான். (கூ௩)

தேவர் தாபதர் சயசய சயவெனத் திரள்புயத் தடமேருத்
தாவுங் குண்டலங் கதிர்செய முகமதித் தளிர்கை நிலவூரப்
பூவின் பொன்னரி யாசனத் துறைதமன் புண்ணிய வுருநோக்கிக்
காவிலென் றனக்கிது கொலோ வடிவெனக் கண்களிப் புறுகின்றான். ()

பாவர் சங்கமும் பாவர்வே டமுங்கொடு பாவர்தன் டனஞ்
செய்வான், றேவர் சங்கமுந் தேவர்வே டமுங்கொடு செம்மையோ
ர்க் கருள்செய்வான், யாவர் பண்பினு நடுநெறி பிறழ்வலாற் றரும
னென் றிவனும, மாவ தென்றனர் றாதவர் துதிசெய வடிசெயித்
தெதிர்சென்றான். (கூரு)



கண்டு போற்றனு நமன்முக மலர்ந்துளங் களித்தவின் மகவர்மேலே
தண்ட நீங்கினை சித்திர நதிப்பலன் றருசையா லெனுமேல்லை
யண்ட ரார்த்தனர் துந்துபி யார்த்தன வார்த்தன மலர்மாரி
கொண்டபொன்மணிமானமேலேற்றினார்குஞ்சர்கோத்திரத்தானை. ()

வேறு.

புகழ்பெற்ற நரகமெலாங் கரைவிடுப்பத் தென்புலத்தார் புகழ்
திங்கி, திகழ்பெற்றான் மறலியும்பின் சென்றுவழி விடப்பெற்றா னிரா
மாப் பெய்தி, புகழ்பெற்றான் றிரிகூட மெதிர்தோயப் பெற்றான்மறை
யோ னுணர்வான் மிக்க, மகப்பெற்றார் பெறும்பேறு மற்றொருவர்
பெறுவாரோ வைய மீதில். (கூஎ)

அண்டரொடு வானமிசை மானமிசை வருவானை யவன்சீர் மைந
ந்தன், கண்டினா ரதற்பரவித் தென்றிசையி னுதிக்குமொரு கதிரோ
னென்ன, வொண்டொடிக்கற் புடையவள்வா யுமைப்பெற்றா னனை
க்குநீ யுவப்பா வீந்த, மண்டுபுனற் சித்திரமா நதிப்பலனின் மகிமை
யதோ வருவ தென்றான். (கூஅ)

அந்தமொழி நிகழாமு னந்தரவி மானமிழிந் தந்த ணாளன், வந்
தாமுனி தான்பணிந்தான் மைந்தனைமுழி இந் தந்தையடி வணங்கி வீழ்
ந்தான், சந்ததியை யெடுத்தணைத்து வலந்தடிப்ப மொளிந்தபுயந்
தடிப்ப மேலும், புந்தியெலாங் களிகூர வுச்சிமோந் துடலமெலாம்
புளகம் போர்த்தான். (கூகூ)

துன்னுதுயர் நெடுங்கால மியமபுரத் துழந்தவெலாஞ் சொல்லி யாங்கு
நின்றுசகரை யேற்றியதுந் தருமனுப சரித்ததுவு நிகழ்த்தி யேகி
யன்றுரிமைப் பாலனொடு சென்றருவி படிந்துகட னினைந்து முற்றி
மன்றுளார் திரிகூடத் திருக்கோயில் வலமாக வணங்கிப் போந்தான்.

தொந்தனைசேர் நரகவா தனையொழிந்துந் தொலையாத சுவர்க்க
போகந், தந்தனையே வடவருவி படிந்தபலன் றந்தெனச்சீர் தழை
ப்ப வாழ்த்தி, மைந்தனைவாழ் கெனநிறுவி யாழ்முனிவன் றனைப்பரவி
மான மேற்கொண், டந்தரபல் வியங்கறங்க வருமறையோன் கற்பக
நா டணைந்தான் மன்னோ. (௱க)

பெட்பகந்தன் வயமாரு மொருமைநா ரதனுரைப்பப் பெருமை
பேணிக், கொட்பகந்த நிரையமெலா புகன்றதை தனக்கொழித்த

கொள்கை கூறித், தட்பகந்த மலர்ச்சோலைத் திரிகூடந் திசைநோக்
கித்தாழ்ந்து வாழ்ந்து புட்பகந்தன்சீர்கேட்ப வரிக்கரன்போன் முனி
க்கணத்துப் புகல்வான் சூதன். (க0உ)

## 11-கவுற்சனச் சருக்கம் முற்றிற்று.

ஆத் திருவிருத்தம்—௭௪௬.

---

## பன்னிரண்டாவது:—புட்பகந்தச் சருக்கம்.

ஆடக மாட வீதி யணிகள்பே ரணிக ளாகக்
கோட்டணை முரச மார்ப்பக் கொடிகொடிப் படையாக் கோலி
நீடல்வா ளரசைத் தன்பா னிருபனை வென்றொன் று
வீடமாம் பொன்னி நாட்டை வென்றது கன்னி நாடு. (க)

மாகமார் மாட கூடம் வரைத்திரள் சேனை மான
மேகமார் கொடிக ளீட்டம் விசைத்தெழு சிறக ராக
நாகமார் படங்கு நாட்டி ஞாயிலாஞ் சிகரி வேந்தன்
பாகசா தனன்மே வீட்டும் பாசறை போலு மூதூர். (உ)

பொற்கையார் புலிமா னேந்திப் பொருகையார் குருகை யார்க்கும்
விற்கையார் புறகை யாராய் விடவடன் மீன மேந்தி
நிற்கையார் நடத்துஞ் செங்கோ னிருபன்வாழ் போரத் தாணிக்
கொற்கைவா ழுந்த ரூளன் குசலனென் றொருவன் மாதோ. (ங)

ஆறங்க மைந்து வேள்வி யொழுக்கதின் கனன்மூன் றோம்பி
நூறங்கு பிருமை பூண்டு நவல்கருத் தொருமை வாய்ந்த
பேறங்கி குலத்தோ ரோடும் பிறங்குநூல் பயில்வ தானு
ளூறங்க மறிபா லூட்ட நாகமுங் குநட்டு மாபோல். (ச)

உயர்தரு மறைநூ லோதி யோங்குசீர்ப் பிரமஞ் சைவம்
வயினவங் காந்த மாதி வகைபல புராணம் பன்னி
யயநகர் குளகு போல வத்திரி மனுவா சிட்டப்
பெயர்தரு சிலநூல் கற்றுச் சமையநூல் பிதற்ற நின்றான். (ரு)

வேறு.

மாவிரதம் பாசுபதம் வருகாளா முகஞ்சைவ
மோவில்வயி ரவம்வாம மேனவாறு புட்சமைய



மேவுநூல் பயின்றேயு மெய்யொழுக்க நெறியஞ்சித்
தாவுபர மதம்பூண்டான் வைதிகமுந் தழுவானால். (சா)

புறச்சமைய நூல்பொருந்திப் பொருந்தாவை சேடிகமும்
பறத்துமீ மாங்கிசமும் பவுத்தமா ருகமதமு
மறத்துலோ காயதமும் வரையறுகை யாயிகமும்
பிறர்க்கெலாம் வகைதெரியப் பேசுதற்குங் குருவானான். (எ)

வேறு.

நூல்பல பயின்றோனு நவையறு பொருளைத் தேரான்
மேலுறு சமய நோக்கான் மெய்ப்பொரு ளிதுவென் றோரா
னல்வகைப் பண்டஞ் சேர்ந்த நனிகரு கூலம் புக்கும்
பாலனை கரும்பு வீழ்த்தி வேட்புகொள் பாலன் போன்றான். (அ)

ஓதிய நூணர்ந்து மேனோர்க் குரைத்துந்தா னுணர்க லாத
பேதையுட் பேதை யாகி மறைக்குலப் பெருமை தீர்ந்தா
னீதிநூ லுணர்ந்தோ ரோது நெறியினு நில்லா னாதி
வேதவாக் கியங்கள் சொல்லு மெய்யெலாம் பொய்யென் பானால். ()

பூதலம் மன்றி வேறோர் புவனமு மில்லைப் பூமேல்
யாதுமங் குதிக்குஞ் செய்கை யியற்கையே படைப்போ னில்லைத்
தீதற நிற்ற றானு மியற்கையே திருமா லில்லைச்
சாதலு மிதுவே யன்றிச் சம்புவு மில்லை யென்பான். (கO)

இங்கிவன் கிழக்கு வேறு யெனக்குமேற் காத லாலே
யங்கமர் திசைவே றில்லை யத்திசைத் தேவு மில்லை
துங்கமுன் வினையு மில்லை தோற்றிடுஞ் செயல்க ளிங்கே
பங்கமாய்க் கழித லாலே பாவபுண் ணியமு மில்லை. (கக)

இறந்தபான் முலைப்பு காது கழிகனி மரம்பு காதா
லிறந்தவர் பிறப்ப தில்லை யிறந்தவ ருயிர்கள் கீழ்மேற்
பறந்திடக் காண்ப தில்லை பவர்க்கமு மதனு மில்லை
சிறந்ததோர் சுவர்க்க மில்லை தெய்வமு மில்லை யென்பான். (கஉ)

அந்தணர் முதலோர் நால்வ ரவர்களிற் றாழ்ந்தா ரென்ன
வந்தபல் குலமவே றில்லை யடிவு மவை றிலைநா லாறும்

தந்தமக் கிசைந்த போகந் தாமதா பவித்தன் முத்தி
யந்துறத் துறவு பூண்டொழிவது நரக மென்பான். (கங)

அறநெறி யுடலுக் கேற்ப வண்டுடுக் தருப வித்தன்
மறநெறி பசியா லாகம் வருந்திநோன் பிருத்த லென்று
திறநெறி போலக் கூறிச் செந்நெறித் தலைநின் றுரைப்பப்
புறநெறி யந்த காரம் புகுந்துதல் கருமமானான். (கச)

பெருங்குல மறையோர் தம்மைப் பெருமைசேர் தரும நீதி
யருங்கலைப் பயிற்சி மாற்றி யரங்கநூல் பயிலச் செய்தும்
பரந்துநீர் காலை மாலை படிந்துநீ றணிவார் தம்மைத்
திருந்திள வெந்நீ ராடிச் சாந்து புனையச் செய்தும். (கரு)

ஓமமேற் சொரியு நெய்யை யுண்டிமேற் சொரியப் பண்ணி
யாமன வருந்தச் செய்து மாடவர் மடவார்க் கென்றுங்
காமமே விளையா மூட்டிக் கன்மமு நெறியு நீக்கித்
தாமவே தியரை யெல்லாந் தான்விழும் படுகர் வீழ்த்தான். (கசு)

அங்கணர் செங்க ணார்தம் மாலயத் தேவர் கோட்ட
மெங்கணும் பரவச் செல்வார்க் கெதிரெதிர் தடையாச் செல்வான்
கங்கைகோ தமிகா விந்தி கன்னிதன் பொருநை யாடத்
தங்களின் விரும்பிச் செல்வார் தம்மெதிர் தும்மா நிற்பான். (கஎ)

எந்தையார் திருக்குற் றால மிறைஞ்சுவா னேகு வாரை
யந்திகள் சந்தி தோறு மரும்பெருந் தினங்க டோறுஞ்
சந்திக ளியமந் தோறுந் தடுப்பது நியம மானான்
புந்திமே லறிவாம் பாலைப் புலனெனுங் கமரில் வீழ்த்தோன். (கஅ)

பாவனை செயலி ரண்டிற் பத்தியாற் பயத்தான் மற்று
மேவிரும் வினையாட் டாலு மேலவர் கீழோ ரேனுந்
தேவர்கோன் திரிகூ டத்தைத் திசைநோக்கிப் புகழ்ந்து போற்றில்
யாவரு முத்தி சேர்வ ரென்றுநா னுணர்ந்து மோரான். (ககூ)

புக்குள நகரத் தாரை விலக்குறல் புரிவா னன்றி
மிக்குள புறநாட் டுள்ளோர் வின்னுளார் மண்ணி லுள்ளார்
திக்குளார் திரிகூ டத்திற் செல்வது விலக்க லாற்றான்
கைக்குவார் மறைக்க வல்லார் ககனமேற் கதிரோன் றன்னை. (உ0)



புரிதரு சந்தி யோமம் புண்ணிய வொழுக்க நீக்கிப்
பரிவொடு வினவு வாரைப் பரமத நூலாற் வென்று
திரிதலா லெதிர்வே றின்றித் தீமையோ னவ்வூர்க் கெல்லா
மொருவனா யுயிர்கட் கெல்லா முறுகண்செய் கலியோ லானான். ( )

வாரணி தனத்தார் மோகு மடைமையோ ரெவ்வா றுகக்
காரணி பொழிற்சோ ணாட்டுக் காவிரி வடபா னத்துத்
தாரணி புகழு மேன்மைச் சைவமா மறைவல் லாள
ஞான மிருதி யங்க மாகமம் புராண மோர்ந்தான். (உஉ)

தவனமார் மக்கள் மாதர் கைப்பொருள் சுற்ற மாதி
புவனமேல் வாழ்க்கை யெல்லாம் பொய்யென வுணர்ந்த மெய்யான்
பவநெறி யுலக மாயைப் படரிரு ளொதுங்க வுண்மைச்
சிவநெறி விளக்கு ஞானச் செங்கதி ருதயம் போல்வான். (உங)

காயிலம் வாசி கந்தசீர் கருதுமா னதமென் றோது
மாயமும் பாலுண் மேலா மரும்பெறற் செயல்க ளுன்னிப்
பாயுநீர் நதிக ளாடல் பரமனைப் பணிதல் வாழ்த்தல்
மேயசீர்த் தியான மென்னும் விதிமுறை மதியி னோர்ந்து. (உச)

கஙகையே முதலாந் தீர்த்தங் கடவுளா லயங்கட் கேக
லங்கநிச் சயமி லாதா ளரிதென வுணர்ந்து ஞாலந்
தங்குமெய்த் தீர்த்த மெல்லாந் தருபலந் திரிகூ டத்திற்
றோங்குசித் திரப்பூங் கங்கை தருமெனும் புராண முன்னி. (உரு)

தக்கசீர்ப் புதலாய்ப் புல்லாய்த் தருக்களாய் விலங்காய்த் தேவாய்
மக்களாய்த் தவங்கள் செய்யு மாதலந் திருக்குற் றால
முக்கட வுளரு மான மூர்த்தியே பலவின் மூர்த்தி
யொக்கமூ வகையி னாலு முயர்ந்தநற் றலமே யென்று. (உசு)

புனிதமார் தலத்துக் கேகும் புண்ணிய விரதம் பூண்டு
கனிபுனற் பொன்னி யாடிக் கடவுளைப் போற்றி வையை
குனிதிரைச் சேது மூழ்கிக் குமரவேள் செந்தூர் போற்றி
மனுநெறிக் கொற்கை மேவி மறையவர் வீதி சார்ந்தான். (உஎ)

சார்தலுஞ் சைவ வேடந் தனைப்பொருட் டுசல னென்பான்
வார்தரு வெண்ணீ றுடி மணியக்க வடங்கள் பூண்டாய்

கூர்தரு மறையோன் போல்வாய் கோலமே றெடுத்த வாற்று
லோர்தரு சுருதி யங்க முணர்ந்திலே யோது மென்றான். (உஅ)

நீதிநா லுணர்ந்தார் செய்கை நிகழ்த்திடல் வெளியா மென்ன
வோதினன் சைவ வேத னோதலுங் குசலன் சீறி
வாதியேல் வருதி யென்றான் வருமவர் தருக்க நோக்கி
வேதியர் திரண்டா ரங்கோர் விசாலமண் டபத்து நாப்பண். (உ௯)

நாதனைப் பரவா வண்ண நாதனை நெறியே ளுக்கும்
போதனைக் குசலன் வாய்மை புகல்வது புணர்ப்போ மென்பார்
சாதனைக் கள்வர் சோரந் தனைவெளிப் படுத்த வந்த
சோதனைக் கணிதர் போலத் தோன்றினன் மறையோ னென்பார். ()

காதிய மறையோன் கல்விக் கடலென்பார் குசல னென்பா
னோதிய நாவாய் விரின் றடக்கவு முரியோ னென்பா
ராதலி னிரண்டு மின்றே யவையகத் தறிவோ மென்பார்
நீதிநா னெறியில் வென்றார் நெறியில்லா திற்போ மென்பார். (௩க)

அந்தண ரிவ்வா றாக வருமறைச் சைவ வேதன்
வந்தன னிருந்தா னோர்பால் வைதிகச் சபையி னூடே
கொந்துசேர் சமைய வாதக் குழாத்தொடுங் கங்குற் கூட்ட
மிந்துவை யெதிர்ந்த தென்ன வெதிர்ந்தனன் குசலன் மாதோ. ()

இயம்புதற் கெளிதா கிட்டா னென்னிலா மதத்தோர் தம்மை
நயம்பெறு சைவ வேத னென்கிளை வலவனைக் கடிச்
சயம்பெறு மறைநூ லாலே சமையநூல் பலவும் வென்று
வியன்பெறு மறிவி லாதீர் வெறுவிதி னெழுக வென்றான். (௩௩)

ஆங்கவ ரெழுந்த காலை யரியமா மறையோ ரெல்லாம்
பாங்குசேர் சைவ வேதன் பரிசெ முரையி னாலே
தாங்குபீ டேசம் பெற்றுச் சைவனைத் திகங்கள் சார்ந்தார்
வாங்குசீர்த் தமிழ்நா டெல்லாம் வாய்மையா லுயர்ந்த வன்றே. ()

வளர்ந்தது திருவெண் ணீறு வஞ்சகர் வெருவி யோடத்
தளர்ந்தது சமைய பேதஞ் சைவனை திகங்க ளோங்கிக்
கிளர்ந்தது மேலோர் சங்கங் கிளைத்தது நியதி நீதி
யளந்தது புவன மூன்று மன்னனைந் தெழுத்தின் செல்வம். (௩௫)



அன்னண ரிவ்வா றாக வறிவிலாக் குசல னென்பான்
கண்ணிறற் கண்டா லன்றிக் கடவுளைக் கருதே னென்றான்
புண்ணிய நூலாற் காணப் பொருளிலாய் மறலி தூதர்
கண்ணுதி வினையிற் காண்டி நாளையென் றெழுந்தான் மேலோன். ()

சைவமா தவர்கள் சூழச் சங்கமா மறையோர் போற்ற
மெய்வளர் சுருதி யார்ப்ப விறற்சிவ மறையோ னேகிப்
பொய்வளர் மனத்தார்க் கெட்டாப் புனிதனைத் திரிகூ டத்துத்
தெய்வநா யகனைப் போற்றித் திருவருள் பெற்றுப் போந்தான். ()

வேறு.

கேழ்பெருகுஞ் சிவமறையோன் மனைவளாகுங் கேள்வியினோர்
வாழ்வுபடைத் தினிதுயர்ந்தார் வணக்கவணங் காக்கழைபோற்
றாழ்வுபடைத் தான்குசலன் செல்வம்போய்த் தடுமாறி
யாழ்கடலிற் கலங்கவிழ்ந்த நாய்கன்போ லமைந்தான். (௩அ)

எழுதான் மறைப்பொருளைத் தெய்வத்தை யிகழ்ந்துரைத்த
வாயிலுறு சுவைக்கலந்து வறுமையாற் பசியுழந்து
நோயினா லுருவழிந்து நோக்குவார் புறம்பழிப்பத்
தாயனார் புறத்தள்ளச் சந்தியிற்பத் தாயினான். (௩௯)

எற்பதற்கோர் சுவியின்றி யையமிடு வாருமின்றி
யூர்ப்புறமா மம்பலத்தி லுழன்றாயினி யாற்சுழன்று
தீர்ப்பதற்கோர் செயலின்றித் தென்னீரென் றேதனித்துப்
பார்ப்பதற்கோ ரணையின்றி யாவிபதை பதைத்திறந்தான். (௪0)

இறந்தானைக் கூடுடை யிரும்பாசத் தாலிறுக்கிப்
பறந்தாடக் காலதண்டங் கொடுபுடைத்துப் படிவமெலாங்
கறந்தாட மூவிலைவேல் கொடுகழற்றிச் சுழல்விழியை
மறந்தாவுங் கருங்காகம் வனைத்துகுத்தக் கொடுபோனார். (௪க)

இவ்வாறு கொடுபோங்கா லிவன்புரிந்த கொடுவினையு
மவ்வாறு மறையவன்சொற் குறுநினைத் தயர்காலைச்
செவ்வாறு திரிகூடத் தெல்லையிதோ வடுத்ததென
வெவ்வாறு கொடுதிருப்பி நமன்றூதர் விலக்கினரால். (௪உ)

அருண்மறையோன் மொழிக்கிணங்கா னலைத்திடுந் தூதுவர்மொழியாற்
பொருவிலா மையிற்பயின்ற காந்தத்தின் பொருளுணர்ந்து
கருகரியார் திரிகூடங் கதிதருமென் பதுகுறித்தான்
குருமொழியை யிகழ்ந்தார்க்குத் தண்டமே குருவாமால். (சங)

கூறுங்கிறைப் பணிவதற்கோ தூதர்வரிந் திடுகயிற்றி
னிறுக்கினால் விழிபிதுங்கி யிருகரமுங் கூடாதா
லுறப்பயர்ந்து வீழ்வார்போல் வீழ்ந்தொருக்காற் றிரிகூடங்
குறிப்பினாற் றிசைநோக்கிக் குற்றால மெனத்தொழுதான். (சச)

குற்றால மென்றொருக்காற் கூறுதமிழ்ச் சுருதிமொழி
கற்றலைந்தணிற்பெருகு நாலுதிக்கி னும்பரந்து
பொற்றாலந் தனைநிறைத்துக் கயிலாயப் பொருப்புறைய
முற்றால நிழலமர்ந்தார் திருச்செவியின் முழங்கியதால். (சரு)

ஒருக்கான்முன் பணிவதற்கா வீழ்ந்தானை யுடனுறக்கி
யிருக்காலும் வீழாம லெழுவயிரங் கொடுபுடைப்பார்
செருக்கான்முன் பிணித்தவடந் தெறித்தோடச் சிவபெருமா
னருட்பாலின் முழங்கியதா லந்தூதுந் துயிரோகை. (சசா)

தேவமுர சதிர்தலுமே தென்புலத்தார் விடுத்தகன்றார்
பாவமெலா மெங்கோடிப் பறந்ததோ பதகனுக்கு
மேவரிய புண்ணியங்கள் விளைந்தவா றென்சொல்கேன்
யாவரே திரிகூடத் தெந்தைபிரா னருளறிவார். (சஎ)

தாசினாற் பொன்னணியாற் றாழ்மலரான் மறையோனைத்
தேசினா லலங்காரஞ் செய்தார்கள் சிவகணத்தார்
வீசினா ரரமகளிர் வெண்கவரி சாமரைக
ளாசிகூ றினர்முனிவோ ரண்டர்பூ மழைபொழிந்தார். (சஅ)

மாவாசத் தொடைமலரு மானமிசைச் செறிமலருங்
காவானார் சொரிமலருந் திசைதோறுங் கமழ்வதனாற்
பூவானார் புகழ்ந்தலன் புட்பகந்தப் பெயரினைப்பத்
தேவர்தி தேவனுறை கயிலையஞ் சேர்ந்தணைந்தான். (சகூ)

போர்தாரன் பரவலுமே புத்தேளி ரிப்பதலி
மீதரிய கொடும்பாவிக் கெவ்வெனவே நிகழ்ந்ததுநாங்



காய்ந்துகோடுந் தூதருயிர் கொடுபோங்காற் கரங்குவித்துச்
சேர்ந்ததிசை குறித்தெழுந்து திரிகூடந் தொழுததனால். (ருo)

அச்சத்தால் விளையாட்டா லார்வத்தா லாரேனுஞ்
செச்சைத்தார் கமழ்தருநந் திரிகூடந் திசைநோக்கி
நிச்சத்தாற் பணிவாரேற் பாவமெலா நெறிந்தோட
வுச்சத்தா லுயர்கயிலை யெமதுபதத் துறைவாரே. (ருக)

ஆதலாற் பெறுவதிவ னறியாத பதவியென
நாதனா ரருளுதலு நன்னுசிவ கணமாகிப்
பூதநா யகர்கயிலைப் புனிதர்பதம் பிரியாமல்
வேதன்மால் பெறலரிய பதம்பெற்றான் வியன்மறையோன். (ருஉ)

விதுவுண்டார் புனைசடையார் விறலிக்குச் சித்திரப்பூம்
பொதுவுண்டார் திருநடத்துப் புகன்றதிது வெனப்புகன்று
மதுவுண்டா னுயிர்மீட்ட மகிமைமகத் தெனச்செவிகட்
கிதுவுண்டாட் டெனமுனிவன் யாகமுனி வர்க்கிசைப்பான். (ருந)

12 - புட்பகந்தச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ச0உ.

## பதின்மூன்றாவது :— தருமசாமிச் சருக்கம்.

மாப்பழுக்கும் பொதும்பர்தொறு மலைபழுத்த தெனத்தோன்றிக்
காப்பழுக்காய்க் குலைசிதறிக் கண்ணோளரி கடுத்தகனி
மீப்பழுக்கண் மிசைத்தாவும் வெய்யவன்றேர்க் கால்வழுக்குந்
தேப்பழுக்கு முயர்பெருமைத் திருவழுதி வளநாடு. (க)

தொழுதிவள நாட்டணியாந் தொகைமணிக்கு முகமணியா
யெழுதிவள நாட்டுமுலை யிந்திரையங் கிரமாகிக்
கொழுதிவள வாட்டமெனக் கோமடந்தை முகமெனவாழ்
வழுதிவள நாட்டுறையு மறைவாணர் குலதிலகன். (உ)

அந்திபகற் புனலாடிக் கடன்கழிப்ப தறமாகப்
புந்தியுற வாச்சிரமம் போற்றுவது பொருளாக
விந்துவணி சடையானை யேத்துதல்பே ரின்பமதா
முந்துநெறி யிவைமூன்றுந் தரித்தவைய முந்நூலான். (ந)

ஒருநெறியு மிருபிறப்பு முத்தழலு முயர்நான்கு
சுருதிகளு மைந்துவகை வேள்வியுஞ்செய் தொழிலாறுங்
கருதுமெழு பவமுணர்ந்த காட்சியுமெண் டிசைமதிப்பும்
பெருகுதவ நாமமேயும் பெற்றசிவ சாமியென்பான். (ச)

பன்னமடைக் காயெதிரிற் பாலர்போற் பழுவடிசின்
மன்னிடத்தில் விருத்தர்போன் மான்றோற்கு மாமுனிபோற்
பொன்னனையா ரிதழ்த்தேனிற் பூந்தேனிற் புனவேங்கை
முன்னுறுதேன் போற்பிரம சரியமுடித் தொழுகுநாள். (ரு)

கோதிலா நிறைகேள்விக் குரவனடி யிணைபரவி
யாதியா மறைவகுத்த வாச்சிரம மொருநான்கி
னாதியங்க ளிம்மையினு மறுமையினு முதவுமது
யாதுபுக லெனக்கேட்ப வாங்கவனு மெடுத்துரைப்பான். (சு)

பேதையர்பான் முகம்பாரா தோதல்பிர மச்சரியங்
காதலியை மணம்புணர்ந்து வாழ்தல்கா ருகத்தியமா
மாதரொடு வனத்துறைந்து நோற்பதுவா னப்பிரத்த
மோதுமிவை மூன்றுமொழித் தொன்றுணர்தல் சந்யாசம். (எ)

முன்னிரவி யுடன்மடவார் முகம்பார்ப்பார் மறைபார்ப்பார்
நென்னலமு தடைக்காய்கைக் நெகிழார்செந் தேனிகழார்
முன்னுசிகை முஞ்சியுடன் மான்றோலுங் கைவிடுவார்
தன்னுயிர மச்சரியத் திருந்தாலுந் தீர்ந்தரே. (அ)

பதிந்துணைவி யோடிற் பன்னிருநாட் படிகடவார்
விதித்தகுல தருமம்விடார் பிறர்மனையை விரும்பவுறார்
துதிப்பமனை யறத்திருந்துந் துறவோரே துறவோராய்க்
கதித்தமனஞ் சுழிபட்டா ரிருவகைக்குஞ் சுழிபட்டார். (கூ)

இத்தகைய நால்வர்களின் மூவருக்கு மிறந்தார்க்கு
மத்தமுத லற்றூர்க்கு மாதார மாதலினா
லுத்தமமா மில்லறமே வாழ்வினுக்கு முயர்கதிக்கும்
வித்துமாக் துறவறத்தின் வேருமா மெனும்வேதம். (கo)

தருமமெனும் பண்டமிடுஞ் சகடமா மனைவாழ்க்கை
கருமநுகம் பிணித்துமனைக் காதலியுந் தானுமென



இருவராய் முறைசெலுத்தி னெந்நாளுந் தருமஞ்செல்லு
மொருவராய்ப் பூண்டிழுப்பி னோரிறையுஞ் செல்லாதால். (கக)

இறல்பூண்ட வுயிர்க்குறுதி யிம்மைமறு மையுமீவீடு
மறுமூன்றும் பொருளிரண்டு மின்பமொன்று மளிக்குமனை
யறமேலா மில்லறத்தின் றெக்காரு மெனிறையோன்
பொறைபூண்ட மனைக்கிசைந்த மாதரிலக் கணம்புகல்வான். (கஉ)

வேறு.

தோடலர்பங் கயமிருதாள் புறவடிபுக் கம்பாரி கொணர்த்த நாகா
மாடல்பெறு குதிகளைப் பந்துகணைக் காலரவ மலயன் சானு
கீடசம்பை தொடைகுடக்கு காக்கைகொடி யிடைமணித்தேர் நிதம்ப
நாடுகிர்ச் சுழியுதர மாலமயி ரொழுங்குமூ னாவெங் கந்தும். (கங)

விரல்பலவங் கிளிமூக்கு வள்ளுகிர்செங் கரங்காந்தள் விளை
முன்கை வளையிருதோள் வளையிடறு வள்ளைகுழை குமிழ்மூக்கு
வருணக் கிங்க, ளிருகுவள் கண் ணடிநாட்டங் கருங்குவளை முல்லை
நகை யிதழ்செவ் வாம்ப, லொருபிறையு மிருகிலைபு நுதல்புருவம்
மருமுகி லுயர்மென் கூந்தல். (கச)

கருமைகுழ் தருமோதி கண்ணுகச் செம்மையுகிர் கால்கை நா
வாய், பொருவருகட் கடையாக வெண்மைமணி முறுவல்பொதி
பொன்மை யாக, வொருமைமயி ரதிநாடி நாவாக விருமையுயர் புரு
வ மாக, மருவுகுடி தடமுலைகண் பெருமைகைகை சிறுமையிடை வறு
மை யாக. (கரு)

கால்விரல்க ளிளாது குறாது நெருங்காது கலந்தி டாது
செல்வரைசங் கழுங்கொடியு நடுவிரலைக் கியவரையுஞ் சிறி தாகு
மேலிருகை விரலடிதாய் நேரியதாய் நெருங்கிவிரி கமலஞ் சங்கம்
போலமைய கிடக்கும் பிடைகிடவாய் பொம்மன்முலைப் பூவை
யாமால். (கசு)

என்புகரம் பெழலாகா வெறுவெறுப்பு முரோமமைம்பா னின்றி
யாகா, மென்கழுகா வழுகா கானநுதன் மூன்றிரண்டு வீரை
காது, நன்றுபெறு மனவாகிக் கூந்தலிரு குழைமூக்கு நாட் டிரண்டு
பொன்பொலிவு நிறைபொறையும் பனிமொழியு முடையாளினைவிற்
பூவை யாமால். (கஎ)

இன்னவகை யிலக்கணங்கள் குறையாம லொன்பதின்மே லாண்டே ருமற், பன்னிரண்டு பகர்குணத்தின் முறைமேவி நிறை மேவும் படிமை வாய்ந்த, கன்னியே மணம்புரிதற் குரியளா முல குதனிற் கடிசேர் மன்றன், முன்னர்மறை யொருநான்கும் வகுத் துரைத்த விருநான்கு மொழியக் கேண்மோ. (கஅ)

வேறு.

இருவரு மிணங்கு களவுகந் தருவ மனந்தரி விண்கல்லை சா சம், பெருவலி யதனுன் மருவுத லரக்கம் பேரிலக் கெய்தலே யசு ரம், பொருளுகந் தளித்த லாரிடம் பிரசா பத்தியம் பொருள்கொ ளா தளித்த, லருமகம் வேட்பிந் தளித்தலே தெய்வ மறைத்தெதிர் கொடுத்தலே பிரமம். (கசு)

வேறு.

ஆதலாற் பிரமமே நயதிகமெனப் புகல்குரவ னருளைப் போற் றி, யோதலான் டாறுநான்கி னிரட்டிபிர மச்சரிய முளுற்றி ருனை வேதபா ரகனொருவ னிலக்கணஞ்சேர் தன்மகளை மிளிர்பொன் பூட் டிக், கோதிலா மூவேழு குலமுமுய்ய விதிமுறையிற் கொடுத்தான் மன்னோ. (உ0)

வேறு.

மின்னினிடை யன்னநடை விம்பவிதழ்க் கும்பமுலைக்
கன்னன்மொழிப் புனிதவதி காதன்மணம் வேட்டுவந்து
முன்னவனுஞ் சிவசாமி முப்பொழுதுங் குறைமுடித்து
மன்னியமுத் தழல்வளர்த்து மனையறஞ்செய் துறைபுநாள். (உக)

பெருவாரி சூழுலகிற் பிறர்தன்னைப் பேணுங்கா
லருநாணம் பழிநாண மறிவுகொடை மடமென்னு
மிருநானு மிருமடமு மிசைவானை வசமாக்க
வொருநாண முதலமருந் தோரைந்து மெனவுணர்வாள். (உஉ)

மட்நாண மெனுமியற்கை மாறும லருட்கணவ
னுடனுக வுவந்துறைத லாராண்மை யெனநான்குங்
கடனுக வுறப்பெற்ருள் கனநாளு மலர்க்கூந்தல்
விடநாளும் வரிவிழியாண் மேலொன்ருன் மனந்தளர்வாள். (உங)



பதிபின்வாழ் புனிதவதி கொழுநனடி பணிந்தொருநா
ணிதியிலா தவரினுமை நீரிலா நெடுவாவி
நதியிலா வளநகர நரபதியி லாநாடு
மதியிலா வுயர்வான மக்களிலா மனையென்ருள். (உச)

பைந்தொடிகூ றலுமறையோன் பண்டைநான் முனிவர்கடன்
முந்துபிர மச்சரிய முயன்றுகழித் தோமனையாற்
செந்தழன்மா மகம்புரிந்து தேவர்பெருங் கடன்கழித்தோ
மைந்தனுற் பிதுர்க்கடன்கள் கழிப்பதினி வழக்கென்பான். (உரு)

மெய்ந்நெறிசேர் மகவேண்டின் மிக்கதவஞ் செயல்வேண்டு
முன்னெறிமெய்த் தவம்புரிதல் சிறைபொழுதின் முடியாதா
லிந்நெறியே யெய்துகமென் றியன்மறையோன் மனைவியுடன்
றென்னிமிசை யாறணிந்தார் தலம்பரவச் சென்றணைவான். (உசு)

கூடற்பூ வணம்புறவை கொடுங்குன்றம் புவ்வாயி
லேடகந்தென் கானப்பே ரிராமசே துச்சுழிய
லாடானை பரங்குன்ற மாப்பனூர் நெல்வேறுகற்
றேடரிய தலம்பரவிக் குற்றாலஞ் சென்றணைந்தான். (உஎ)

சீதமுகில் கண்படுக்குந் திரிகூடத் தெய்வவரை
வேதம்போ லாகமம்போன் மெய்ப்பொருள்போன் மேலான
போதம்போன் மந்திரம்போற் புண்ணியம்போற் பூதலத்தோர்
மாதவம்போற் பொலிந்தோங்கும் வடவருவித் துறைகண்டான். ( )

கருப்பைவலக் கையிலேந்திச் சங்கற்ப முறைபோற்றிப்
பருப்பதத்தை முதல்வணங்கித் தடாகத்திற் படிந்தேறி
யுருத்திரமா மனுவோதி யோங்குதூல் விதிமுறையே
திருத்தகுபூ சனைபுரிந்து சித்திரநங் கையைப்பரவி. (உகூ)

அறையோசை யணங்கோசை யந்தரபல் லியங்கறங்கு
முறையோசை வலம்புரிகண் முழக்கோசை முகிலோசை
மறையோசை மாதவர்கள் வானவர்க ளுவந்தாடுந்
துறையோசை செவிகுளிர்ப்பத் தொழுதருவித் தடங்குளித்தான்.

அருவிநீர் படிந்திடுங்கா லரும்பாவங் கழுநீராய்
வெருவியிரிந் தோடுதலால் வெவ்வினைவென் றவனுனன்

தருபுல்லென் றியகிலையாற் றன்னையுணர்ந் தவனுறு
ஞருவில்லொளி தெரிசனத்தா லொருபொருள்கண் டவனானான். (௩௧)

அங்கருவிப் புனலாடி யருகியமக் குறைமுடித்துப்
பொங்குசீ ரக்கமணி புண்ணியவெண் ணீறணிந்து
திங்களணி திரிகூடச் சிவபிரா னடிவணங்கி
மங்கலஞ்சேர் திருவாக்கா னடிவரம்பெற் றேகினான். (௩௨)

பதிமேவிச் சிலநாளிற் பதுமைநிகர் புனிதவதி
கதிமேவுந் திருவயிறு கருப்பமுற விருப்பமுற
மதியாறு புகுந்தவுடன் மதியாறு புனைந்தசடை
முதியாற்பொன் னடிபரவிச் சிமந்த முறைபுரிந்தான். (௩௩)

பங்கயமா முகம்வெளுப்பப் பசுநரம்பு தளதளப்பத்
தங்கநடை தளர்ந்துவரத் துடிமருங்கு வளர்ந்துவரப்
பொங்குமுட லயர்ச்சிவரப் புளித்தவூண் முயற்சிவரத்
திங்களது நிறைந்துவரத் திருவயிறு நொந்துவர. (௩௪)

சிற்குமுயர் சாதிநெறி நீதிவரம் பும்பெருக
நற்கவிமா லவனுதிப்ப வமரர்குரு நனிபார்ப்பச்
சற்கரும வைதிகமுஞ் சைவநெறி யுந்தழைப்பக்
கற்கர்கோத் திரம்விளங்கக் காதன்மக வைப்பயந்தாள். (௩௫)

பிறந்தநா ளீராட்டிச் சாதகன்மம் பெரிதியற்றி
நிறைந்தபதி னொருதினத்து நாமகன்ம நிறைவேற்றிச்
சிறந்தபெருந் தருமமெலா நிறைவேறு செய்கையினு
லறந்தழைக்கும் பெயர்தரும சாமியென வறைவித்தான். (௩௬)

வேண்டுமதி யொருநான்கின் மதியினிடை யிதிப்பிற்றுத்
தாண்டுமதி யிருமூன்றில் வாயுறையின் சடங்கியற்றி
யாண்டுமூன் றினிற்சவுள மையாண்டின் முந்நூலுந்
தூண்டகைய முறையியற்றிக் கலைபலவும் பயில்வித்தான். (௩௭)

இருக்கினொடு தயித்திரியஞ் சாமமதர் வணமென்னும்
பெருக்கமறை நான்கோதி மந்திரஞ்சந் தோபிசிதி
நிருத்தஞ்சோ திடநிகண்டு வியாகரண மெனத்தழைத்து
மருத்தியா றங்கமுணர்ந் தாகமத்தின் வகைதெரிந்து. (௩௮)



வாராகம் வாயவிய மச்சம்வர மனம்பதுமம்
காருடமாற் கண்டேயங் காந்தம்வமி னவஞ்சைவங்
கூர்மமே பாகவதங் குலவுபவி டியமிலிங்கம்
பேர்பிரம கைவர்த்தம் பிரமாண்ட மாக்கேயம். (௩௯)

இன்னவகை யாயபதி னெண்புரா ணம்பயின்று
மெய்ந்நெறிசேர் மிருதிகளும் விரித்தோதி மறைச்சிறுவன்
சொன்னகலை மதிக்கொழுந்து செய்சொரியுஞ் சுடர்க்கொழுந்தாய்த்
தன்னையன்றிப் பிறிதொருவர் தனக்குநிக ரிலையானான். (௪0)

பொன்னழகு குண்டலமும் புயத்தழகு புரிநூலு
முன்னழகு நிறைந்தமதி முகத்தழகு முடித்தசிகைப்
பின்னழகுங் காணுதொறு மடவாரைப் பேசுவதென்
கன்னலெனுஞ் சிலைபிடித்த காமனுங்கா முறவளர்ந்தான். (௪௧)

ஆனையான் மதிமருட்டு மடங்காத மெய்வடிவு
நானிலா ளதிசயிப்பக் கற்றகலை யும்பார்த்துக்
கானயாம் புதல்வனுக்குக் காதலா லருமறையோன்
வானைநிகர் விழிமாதை வதுவைமணம் புரிவித்தான். (௪௨)

நாட்டகத்தி லுயர்குடியா யுயர்குடியி னனிவேட்டு
வேட்டகத்தும் பிறந்தகத்து மேன்மேலுஞ் சிறப்பெடுப்பத்
தோட்டகத்து வனருகமு நீலமுமோர் துளைபூத்த
கோட்டகத்து வெறியாடுங் கோலமது கரயானான். (௪௩)

அழகினு லுயர்குலத்தா லுறைவும் பெருங்காமக்
குழகினுற் சிறுநாத்தின் குடப்பால்போற் குணந்திரிந்து
பழகிடா மூர்க்கரொடும் பழகினன் கல்விபெறுங்
கழகமாம் பெரும்பயிர்க்கு மூடமெனுங் களைமுட. (௪௪)

முதியமறை நூல்விடுத்து மோகமத நூல்பயிற்றி
யதரமுதம் பருகினன்று மமு[illegible]கில பருகினந்து
மிதமுறுயா ழிங்கனமு மென்னலில்கர ணமுந்தெரிப்பான்
பதுமினிசித் தினிமுதலாம் பாவையரைத் தழுவுவான். (௪௫)

அந்நாட்டி லொருமடந்தை யனங்கமோ கினியானாள்
மின்னுன துருவெடுத்து மேகமெனுங் குழன்முடித்துந்

தென்னாடு வளம்பார்க்க வந்ததனை யாடிரும்பப்
பொன்னாடு தனிற்போகாள் பொம்மன்முலை கனத்ததனால். (௬௬)

பிடியிருக்குஞ் சிறுநடையாள் பெருங்காம னபிடேக
முடியிருக்குங் கனதனத்தாள் முத்திருக்குங் குறுநகையா
ளடியிருக்குஞ் சிற்றிடையாள் குதுபெருங் குடிலமெலாங்
குடியிருக்கும் படைவிழியாள் குமரிருக்குஞ் சகிபோல்வாள். (௬௭)

முலைவேழ முன்காப்ப மூரிமதன் பின்காப்ப
வலைவீசுங் கலகவிழி வாள்களிரு புறங்காப்ப
வலையாழி சூழுலகை யாணைவசத் தாலடக்கிக்
கலைவேலைக் குள்ளாக வரசிருக்குங் கடிதடத்தாள். (௬௮)

தூயசிலை கரும்புருவத் தோளிணைகள் கரும்புருவந்
தேயுமிடை கடித்துவருந் திரளுமுலை நடித்துவருங்
காயுமத னெடும்பிறந்தாள் கமடமுது கிருபுறந்தாள்
சாயலொரு மேனகையா ளவரும்பு மேனகையாள். (௬௯)

பாடலாற் கருங்குயிலைப் பணிகொண்டாள் பரிமளப்பூங்
காடெலாம் பூங்குழலாற் கைவிலைகொண் டாள்கடல்சூழ்
நாடெலாம் பணிகொளவோ நாககாட் டரம்பையரை
யாடலாற் பணிகொளவோ வரங்கேறத் தொடங்கினாள். (௭௦)

கங்கர்சோ னகர்கலிங்கர் துளுக்குடகர் கருநாடர்
சிங்களர்சா வகர்கொல்லர் தெலுங்கர்கோ சலர்சீனர்
வங்கர்கூ விளர்மகதர் வார்பொழிற்க டாரர்முதற்
கொங்கணரு நிறைந்ததமிழ்க் கொற்கையார் பெருஞ்சபையில். (௭௧)

அன்னமோ வானாட்டி லரம்பையோ முனிவோரை
யின்னமோர் முறைமயக்க வெழுந்தமோ கினிதானோ
சொன்னமோ மதனிரதி தோற்றமோ சிலைக்காமன்
சின்னமோ மடமாதர் தீபமோ வெனப்புகுந்தாள். (௭௨)

புட்படுக்குங் கொலைவேடர் புதனூடு மறைவதெனத்
திட்டமுடன் சதிபார்த்துச் சமரிக்கைத் திரைமறைந்து
மட்புலத்தா டவரிதய மச்சமெலாங் கண்வலையா
லட்டபிடிக்கச் சிலைக்காம னொளிபிருப்ப வெளிப்போந்தாள். (௭௩)



பத்தியின்சைக் காம்போதி தோடியபி ரவிபாடித்
தித்திசிறு முகவீணை சீங்குழலின் னரமிழற்ற
மத்தளங்க ளிருபுறமும் பரதமுறை வகுத்தியம்பத்
தத்தளங்க தளங்கவெனத் தாளமுறை முறைமுழங்க. (௭௪)

பின்னையார் கவித்துவமுஞ் சோரணியு மஞ்சலியுந்
தன்னரிய கலைத்தருவுஞ் சதுதலகற் பமுங்காட்டித்
தெள்ளியசெக் கணியாடிக் குச்சரா நிகள்சேர்த்துக்
கள்ளவிழி போராடக் கையிலபி நயமெடுத்தாள். (௭௫)

மண்ணின்மேற் பெயர்த்தாளோ வானின்மேற் குதித்தாளோ
கண்ணின்மேற் கலந்தாளோ கருத்தின்மேற் புகுந்தாளோ
பண்ணின்மேல் வரிச்சுரும்போ தும்பியோ பாடமயிலோ
விண்ணின்மே லுருப்பசியோ மேனகையோ வெனநடித்தாள். ()

தாள்வீசும் பரிகொறுஞ் சதிவீசு மணிச்சிலம்பு
வேள்வீசும் பொருகணைக்கு வில்வீசுங் குனிபுருவந்
தோள்வீசுந் தொறுங்கனகத் தொடிவீசுங் கதிர்ப்பிரபை
வாள்வீசுங் கலகவிழி வலைவீசுந் நவத்தோரை. (௭௭)

கொட்டமிடு மன்னரெலாங் கொம்பனா ளிசைவலையிற்
பெட்டலைபு பிருசெவியா மகனையாய்ப் பிறித்தாலும்
கட்டமுகா மதுவீழ்த்த கள்வண்டு பிறித்தாலும்
வட்டமுலைக் கிடைநுழைந்த மனம்பிறிக்க மாட்டாரால். (௭௮)

அச்சிருந்த தேவரம்பை யனங்கமோ கினிபார்வை
கச்சிருந்த கலைகாதிற் கொப்பிருந்து நனிநடிப்ப
வைச்சிருந்த கொடியிடையை யிடையவருந் தியமுலையைக்
கச்சிருந்து தடித்ததனாற் பிழைத்தனர்கா வலரெல்லாம். (௭௯)

பின்னுடையசிற் றிடையாள் வியந்தாடு மவைக்களத்துத்
தன்னுடைய தோழரொடுந் தருமசா மியுமிருந்தான்
பொன்னுடைய திகலைமுலைப் பூவுலகின் மடவார்க்கு
மென்னுடைய மனக்கவர்ந்தா ளிவளென்றே யதிசயித்தான். (௮௦)

பேதையிலும் பார்க்கையிலும் பேரனங்க மோகினிக்கு
யாதையுமன் மேலிருந்து மாறுதுக் குமனத்தை

வேசையெனுங் குலத்தொழிலால் விலக்கிநா டகப்புரித்தாள்
காசையும்பொன் னையுநயந்தார் காமனையு நயப்பாரோ. (௬௧)

வேறு.

சென்றநா ளெனவே யாடல் செலுத்தியெண் டிசையு ளோரை
வென்றன ளுலகை யெல்லாம் வெல்லுவ ளெனவே வேந்தர்
நன்றென வரிசை கோடி நல்கினர் பூரை பூரை
யென்றன ரெழுந்தார் மேலோ ரேங்கினர் காமப் பாலோர். (௬௨)

வேறு.

கொட்டுறுநா டகக்கணிகை கூத்தொழித்த வவைக்கூட்டம்
விட்டிடையுங் குளநீர்போல் விற்றுவிற் றுயேகி
யிட்டினர் வளம்போன்ற தேந்திழைபோய் மனைபுகுந்தாள்
மட்டறு மயல்பூண்டார் வலைபுகுந்த கலைபோன்றார். (௬௩)

அரங்காடல் கூடியபின் னவள்காமக் குளிர்பிடித்துக்
குரங்காட லெனச்சுழல்வார் குழாநோக்கிக் கொடுங்குழையாள்
வரங்காணுஞ் சிவசாமி மைந்தனுக்கே யெதிர்கொண்டா
டரங்காணு மின்பார்த்துத் தப்பவிடாக் குருகதுபோல். (௬௪)

வேறு.

மெல்லெனச் சிலம்பு தண்டை கிண்கிணி மிழற்றப் பாவை
யொல்லென வெதிர்கொண் டேகி வருகென வுருகப் பேசுஞ்
சொல்லெனுஞ் சுவையைத் தூண்டிற் சுவைகொளு மீன்போன் மாந்
கல்லெனும் வினைக்கை பற்றிக் கணிகைதன் மனையிற் போனான். ()

ஆடக மணைகை வேலி யணையொரு கொப்ப மாகச்
சேடியர் வேட ராகச் செழுமறைக் களிறு சேர்ப்ப
கூடத்த் தாயோர் பாகாய் நாளொனுந் தோட்டி பூட்ட
வாடிய மருங்குல் வல்லி தனையிடும் வல்லி போன்றான். (௬௬)

பொன்னொளிர் வரை மீதிப் புணர்முலை பிதுங்கிப் பாதித்
தன்னொளி தோன்ற நின்றாள் சுடரொளிப் பதங்கம் போன்றான்
மின்னொளி விண்ணில் வீழ மீதொளி விரக வேசை
தன்னொளி நோக்கு வாரோ தமதொளி யவர்க்கு மேலோர். (௬௭)



விரைமலர் சனிச்சப் போதின் மெல்லிய வுனது பாதந்
தரைமிசைத் தரித்து நிற்கி லென்னுளந் தரியா தென்பா
னுரைதனிற் குறிப்பு நோக்கி யொருவினர் சிவிகை மார்க
ளரியபொற் கபாடம் பூட்டி மெல்லிய லணைமேற் சேர்த்தான். (௬௮)

நறுமலர்த் தாமஞ் சூட்டி நானமும் புழுகு மாட்டி
முறைமுறை சுருள்க ளல்கி மோகன மயக்கள் செய்தாள்
பிறையுகிர்க் குறிக ளாதி புறத்தொழிற் கலவி யெல்லாந்
துறைபயில் காம நூலின் சூத்திர முறைபோற் கொள்வான். (௬௯)

மங்கைதன் மதனப் பார்வை வழிச்சென்று மலர்த்தா ளிவித்
தங்கிய வுதர ரோமச் சங்கிலி சார மாக்கிக்
கொங்கைமால் வரைமேற் றாவிக் குழலிசைத் தேனீ யோச்சிச்
செங்கனி யிதழ்த்தே னீட்டி வேட்டுவச் சிறுவன் போன்றான். ()

கடிகமழ் கனிவாய் வள்ளக் கள்ளுண்டு மயங்கித் தேங்கி
வெடிதரு புழுகு நானம் விரைகமழ் சேற்றுற் கொங்கைத்
தடவரை வழுக்கி ரோமச் சாரமுந் தரியா தந்தி
மடுவெனுஞ் சுழிவீழ்ந் தாசை மாப்பெருங் கடலி லாழ்ந்தான். (௭௧)

முத்தரிச் சிலம்பு கொஞ்ச முகின்முலை குழைய மோகம்
வித்தரிக் கின்ற தெல்லாம் வியன்பொருட் பங்கி வாங்குங்
கத்தூரி யென்ப தோரான் கன்னியென் னுயிரீ யென்றான்
புத்தரி விழிகள் சேப்பப் புலந்தன ளூடல்வே றென்று. (௭௨)

அலத்தக மலர்த்தா ளிவி யாடலா லூட னீக்கி
கலப்பெருஞ் சுவைகண் மாந்தி நடக்குநான் மறையோன் றன்னைக்
கலத்தலி னிடங்க டோறுங் களிதரு புலவி மூட்டிப்
புலத்தலி னிடங்க டோறும் பொருள்பல கவர்வ தானாள். (௭௩)

வேறு.

மோகமெனும் பாசத்தான் மிகத்தளைந்து முலைச்சுவட்டு
நாகமதால் வசப்படுத்தி நகக்குறியங் குசமழுந்தி
மாகூடைக்க ணோரித்தான் மறைக்களிற்றை மதமடக்கிப்
போகமெனுங் கவளமவன் பொருளளவிற் புரிகின்றாள். (௭௪)

ஓமமே மந்திரமே யோவ்வொன்றுக் குறைந்துவரக்
காமமே நிறைவாகக் கருமமெனுந் துணைபிரிந்து
பூமலர்வெங் கணைமதனை வென்றபுரி நான்மார்பன்
வாமமே கலைநிதம்ப வாளரவான் மதிகெட்டான். (௭௫)

இவனுநுதன் மனைவியென்றித் தேவரமு தளித்தாலுங்
கவர்வதென வொருபொழுதுங் கருதாத நெறியாளன்
பவளவிதழ்க் கனிபாலைப் பருகும்விருப் பதுபோல
வவன்மனையிற் கனிபாலு மருந்துவது பொருந்தினன். (௭௬)

என்னுவது மதனகலை யெழுதுவது முலைத்தொய்யி
லுன்னுவது வாயமுத முறங்குவது தனதடமேற்
பண்ணுசெப மந்திரமும் பாவைசெவி மந்திரமே
தண்ணளியான் குலிக்குநீர் சந்தமுலைப் பனிநீரே. (௭௭)

கைப்பொருளை லாங்கொடுத்துங் கல்விகேள் விகண்முதலா
மெய்ப்பொருளைக் கைவிடுத்து வேசைமுலைப் போகமெனும்
பொய்ப்பொருளை கைக்கொண்டான் பொதுமாதர் மயல்பூண்டா
லெப்பொருளுந் தெளிந்தாருந் தெளிவாரோ விருநிலத்தில். (௭௮)

அந்தையாஞ் சிவசாமி சங்கிரகத் தனம்போய
முந்தையார் தேடிவைத்த முதல்போயுந் தான்வேட்ட
சிந்தையார் மனைவிபொருட் சீதனங்கள் போயுமுடை
கந்தையாய்ப் போயுமொரு கணிகையார் மயல்போக்கான். (௭௯)

விந்தையாற் பொருள்கவர்ந்து விரைந்துபகல் வரப்போனான்
கஞ்சமலர்த் தார்மார்பன் கங்குலினும் வரக்காணு
நஞ்சனார் கனங்குழையா ளுழையரொடு கறவருந்தி
மஞ்சணையும் பஞ்சணைமேன் மயில்போலத் துயில்கூர்ந்தாள். (௮௰)

ஆரணங்கள் பயின்மறையோ னருங்கலைகள் விரித்தோதிக்
காரணங்கு மலர்க்குழலாள் கனதனத்தின் பொருட்டாகப்
பேரிணங்கு மன்னவர்பாற் போந்துமன தனம்வாங்கிப்
பாரிணங்குந் துயிலொழியப் பாராமல் வந்தணைந்தான். (௮௧)

வேறு.

பொருள்கொடு வரும்வேதன் புகல்கலை மதிசோரத்
தெருள்செயு முகமான மதிபொலி குழல்சோக



இருளிடை கலைசோர விரவிடை துயில்வாளை
யருள்பெற விதமாக வடிவருடு வேதாளன். (௮௨)

தன்னுடைக னணிகாலைச் சரணென வருடாமுன்
வண்டுளர் தருகாலை மலரென மலர்வின்று
புண்டிறன் மறையோனைத் தெளிகல னழிதேற
வுண்டிடும் வெறியாலே யுரைகுள றுவதானான். (௮௩)

சுருதியின் மறையோனுஞ் சுரநெறி வருதாகம்
பெரிதென வுரையாமுன் பிணைவிழி மடமாது
விரகம தறியாதே தேறல்பெய் ததுபாலின்
கரகம தெனவீந்தாள் களகள வெனவுண்டான். (௮௪)

உண்டபின் மதுவேபோ லுதவினை யெனவோடுங்
கண்டில னெனவேங்கிக் கைநெறிப் பவள்போன்றாள்
கொண்டவன் வெறிமேலாக் குலைதலு மவளோதாம்
விண்டில னயல்போனாள் வேசைய ருறவாமோ. (௮௫)

மனைநிலை தடுமாறி வருவரு மருளேறிக்
கனவென மொழிசோரக் கலையொடு நிலைசோரத்
தனியொரு துணையாகத் தரைமல ரணையாக
நினைவயர் விலதாலே நிறையழி வினைபோல்வான். (௮௬)

வேறு.

புணர்ப்புநீர் வெறியிருந்து பொறிமயங்கிக் கிடந்துமல்லா
லுணர்ச்சிதோன் றியபொழுதி லுள்ளமெலா நடுநடுங்கிக்
குணத்தினாற் கல்வியினாற் குலத்தினா லுயர்மறையோன்
கணத்தினாற் புலைபுகுந்த கன்மத்தாற் புலம்புறுவான். (௮௭)

சீறாரிற் குடிவாழ்வுஞ் சிறியாரைச் சேருதலு
மூறுநீர்க் கிணறுதக மாடுதலு முயர்கேள்வி
வீறிலார் கூட்டமுந் தாசிவே சையர்கலமு
மாறிடா நிரையமெனு மனுநூலு முணர்ந்துணரேன். (௮௮)

ஆர்க்கைநபா லின்பமெலாந் துன்பமெனு மேலோர்கள்
வார்த்தைதா னோமன் மதிமயங்கி மதுநுகர்ந்தேன்

கூர்த்தவி ரறநெறியுங் குலமுறையுந் தவறினேன்
பார்த்தபோ திகழ்மிலேச்ச பரமுயிலே யாயினதால். (அகூ)

முத்தனைய குறுநகையாள் மோகத்தாற் குலநெறிக
ளத்தனையுங் கைவிட்டே னறிவழிந்து மதுவுண்டேன்
பித்தனையே போலானேன் பெரும்பாவந் தொலையவினி
யெத்தனைகா லஞ்செலுமோ வென்செய்கே னெனவயர்ந்தான். (கூ0)

வன்புலையர் மதுநுகர்ந்தான் மாசுடையின் மாசெனப்போம்
பண்புடையா னுயர்குலத்தான் மதுவுண்ட பான்மையினால்
வெண்புடைவை தனிலழுக்கு விரைந்தேறும் படிபிறருங்
கண்புதைப்ப வுருவழிந்து கருமதிபோற் களையடைந்தான். (கூக)

வந்துவனந் தநுபாவ மிம்மைபோன் மறுமையினுந்
தொந்தமாய்த் தொடருமிது தொலைப்பதே கருமமெனப்
புந்தியுணர்ந் தாடரவம் புண்பட்டா லெனமறுகிப்
பந்திமறை யாகமநூற் பண்டிதர்வா ழவைபுகுந்தான். (கூஉ)

பாக்கியமா மறைவல்லீர் பாலெனவு நறவெனவுந்
தேக்கியபாத் திரபேதந் தெரியாமன் மதுநுகர்ந்தேன்
வாக்கியமா மனுநெறிபால் வல்வினையேன் பெரும்பாவம்
போக்கியவா றருள்புரிவீர் சரணமெனப் போய்ப்பணிந்தான். (கூங)

நண்ணியசீர் மறைக்குலத்தோர் நறவுண்டே னெனவுரைக்குந்
தண்ணியசொற் கேளாமுன் றடங்கைப்பாற் செவிபுதைத்துப்
புண்ணியர்வாழ் மன்றகத்து வருவாய்கொல் புலைநெறியோய்
கண்ணினெதிர் நில்லாதே கடிதகல்வா யென்றுனிந்தார். (கூச)

விஞ்சைதேர் மறைவாணர் வெகுண்டுரைப்ப மெய்நடுங்கி
யஞ்சவிடந் தனையறியா தருந்திவருந் தியகாலைத்
துஞ்சுமுன மருந்தூட்டித் துடைப்பதன்றித் தூநெறியீர்
தஞ்சமெனுங் குழவிதனைத் தந்தைதாய் தள்ளுவரோ. (கூரு)

பிள்ளைமையே னறியாது பிழைத்தமையைப் பொறுப்பதினித்
தெள்ளிமையோர் கடனென்னத் திரும்பவுஞ்சென் றடிபணிந்தா
னுள்ளமிசை யுவரிதங்கி யுறுபாவ மொழிப்பதற்கு
விள்ளரிய சுருதிகளின் விருதிவிரித் துரைக்கின்றார். (கூசு)



வீறுய பவக்கடலின் வீழ்ந்தவரைத் தவமுதம்பி
லேறும லழுத்துசுழி யறிவெளிக் கிருட்படலந்
தூறுய கொடுநரகி னழுத்திவிடுந் தோட்டிகதி
பேறுன வழியடைக்குங் கதவமே பெருநறவூண். (கூஎ)

எவ்வமுற நுகர்ந்தாரை யியம்புவதென் னுங்கவரைக்
கவ்வையுறப் புகன்றாலுங் கண்டாலும் பெரும்பாவ
மெய்வளரு நெறியோர்கள் விலக்குவது விலக்காத
பொய்வழியை விரும்பினரும் விரும்பாத புலைமதுவே. (கூஅ)

பின்னவருண் டாலவரே பெரும்புலையர் வணிகரொடு
மன்னவரு முண்டாரேன் மற்றையவ ரினுங்கடைய
ரன்னவர்க்கே யவையாகி லம்புவிக்குக் கடவுளரா
முன்னவர்க்கு மறுவருந்தன் முறைமையோ மடைமையோய். (கூகூ)

வெய்யகுல மூவரைப்போல் வைதியரைச் சிரந்துணிந்தல்
வைதிகத்தின் முறையன்றுன் மறையவர்போல் விழிதுறைக்கிற்
கைபகலா திப்பாவங் கள்ளுண்ட வாய்நிறைய
நெய்யைநெருப் பெழக்காய்ச்சி யுண்ணின் கெடுமென்றார். (க00)

என்றுகூ டியுங்காய மிறப்பதே நிச்சயமாய்க்
குன்றுபோற் கடல்போல வந்துகூ டியபாவந்
துன்றுபெரும் பிறவிதொறுந் தொடருமெனிற் சுமந்தாற்றேன்
கன்றுமுடற் சும்மையொடு மிம்மையிலே கழிகவினி. (க0க)

வேறு.

ஆகுவ துரைத்தல் செய்வீ ரளியனேன் செய்த தீமை
போகுவ தாகி லீதே புரிகுவன் விரைவி னென்னப்
பாகுறத் தருமசாமி பகர்தலும் பகைசேர் தூர்த்தர்
வேகுறச் சிரகநெய்யை வெந்தழ லுலைமே லுய்த்தார். (க0உ)

அந்தணர் சபையி னப்ப ணழலின்மேற் கொதிக்கு நெய்யுஞ்
சிந்தனை பருகித் தீர நின்றனன் றுணிவு நோக்கா
நொந்தனர் கண்டோ ரெல்லா நடுங்கினர் கேட்டோ ரெல்லா
வந்தனர் நின்றோ ரெல்லா மறுகினர் மனது நோவாய். (க0ங)

கண்டவர் கொதிப்ப தானூர் கனலின்மேற் கொதிக்கு நெய்யை
யுண்டவர் பிழைப்ப ரோவித் துயரப்பரோ மறையோ ரென்பார்
கொண்டதோர் பிழைக்கு வேறு கூறிமாற் றுமை வீது
விண்டன ரந்த ணாளர் மெய்த்தவக் கொடியோ ரென்பார். (௧௦௪)

அழுகுபோய்க் குலம்போ யின்றை ஞவியும் போமே யென்பார்
பழவினைப் பயனோ வேட்ட பாவைதன் விதியோ வென்பார்
சுழல்விழிப் பரத்தை மாரைத் தொட்டபா தகமோ வென்பார்
மழலிடை யணையாற் கிந்த வல்வினை வருமோ வென்பார். (௧௦௫)

தாமமா மறையோன் பேரிற் சாருமோ பாவ மென்பார்
நாமமே யழுதென் றிட்டு நஞ்சுண்டால் விடுமோ வென்பார்
வாமமே மறுவுண் டாலும் வழக்கென்பார் மயக்கி வீணிற்
காமமோ கொடுத்த தென்பார் கன்மமோ பலித்த தென்பார். (௧௦௬)

கன்னியம் பிராயந் தன்னிற் கடிமண மாலை சூட்டும்
பன்னிதன் சோக தாகம் பார்க்கவும் படுமோ வென்பார்
முன்னையில் வினையோ வென்பார் முடிவிலாத் தவஞ்செய் தின்ற
வுன்னையும் பிதாவுங் கேட்டி லென்படா ரச்சோ வென்பார். (௧௦௭)

திருமகம் புரிந்த வேதச் செல்விக்குஞ் சிவசா மிக்கும்
பெருமக விரண்டு மூன்று பிறந்தது முண்டோ வென்பா
ரொருமகன் மருந்து போல வுதித்தன னுவத்தா லென்பார்
பொருவரும் பாவ மெய்யேற் புண்ணியம் பொய்யோ வென்பார். ()

மலங்கினர் சிலர்கள் வாடி மயங்கினர் சிலர்கள் சூழ்போ
யுலம்பினர் தரும சாமி யுயிர்க்குறு மலக்க ணோக்கிப்
புலம்பினர் சிலர்கள் கண்ணீர் பொழிந்தனர் சிலர்க ளாவி
கலங்கினர் சிலர்க ளேங்கிக் கரைந்தனர் சிலர்கண் மாதோ. (௧௦௯)

அந்தணை ரிருந்த வாறே யயர்ந்தன ரயலா ரெல்லாம்
பந்தமுற் றலைந்து வீழ்ந் தார் பகைவரும் பகைத்தா ரானன்
மைந்தனுக் கிடையூ றான வன்மொழி செவியிற் கேட்குந்
தந்தைதாய் துயர மெய்மாற் சாற்றுதற் கெளிதோ வம்மா. (௧௧௦)

மனைவினை செயுநா ளன்றி மற்றைநா ளறியா ளேனுங்
கணவனு மயிர்போ மாகி லென்னுயி ரழிப்பே னென்று



துணிவுட னெழுந்தாள் பாரி தோழிய ரிரங்கி யேங்கக்
துணைவனுடைக் கற்பு மாதர் கொள்கையை விலக்க லாமோ. (௧௧௧)

சேயிழை துணிவு மன்னேன் சிந்தையி லொழிவு நோக்கித்
தாயரு மழுதார் தந்தை தமர்களு மழுதார் நல்லோர்
தியரு மழுதார் மூத்தோர் சிறியரு மழுதார் கூற்றும்
பேய்களு மழுத வாறாற் பின்னையார் சலித்த துழதார். (௧௧௨)

உரங்கெழு தரும சாமி யுயிர்க்குறு மிடுக்க ணோக்கி
யிரங்கின புள்ளு மாவு மேங்கின திசையுந் தேவும்
புரங்களு நகரு நாடும் புவனமும் வனமுங் காடு
மரங்களு மிரும்புங் கல்லு மலைகளு முருகிற் றன்றே. (௧௧௩)

கோவென வுலக மேங்கக் குழாத்திடை யந்த ணாளர்
பாவிவனக் கொடுப்ப வாங்கி மழுவெனக் காய்ந்த நெய்யை
யாவினைப் பருகா முன்ன ரடற்கரி காத்த நேமித்
தேவென மகதி வீணைத் தெய்வமா முனிவன் வந்தான். (௧௧௪)

அஞ்சலென் றொருகை காட்டி யருளுரு விழியிற் காட்டிச்
சஞ்சலந் தரும சாமி தருபெரு வினைக்குக் காட்டிக்
கஞ்சமென் கரத்து நெய்யைக் கனலெரிக் குணவு காட்டி
யெஞ்சிநின் றவர்கட் கெல்லா மின்னுயிர் காட்டி நின்றான். (௧௧௫)

எழுந்தன ரிருந்தோ ரெல்லா மெதிர்ந்தனர் நின்றோ ரெல்லாந்
தொழுந்தவ முனிவ னுக்குத் தோன்றலு மங்காட் டுள்ளோர்
விழுந்துயர்க் கடலுஞ் செவ்வேள் வேல்கண்ட கடலா யன்றோ
ரழுங்குர லொலியும் வான்சே ரனிலம்போ லடங்கிற் றன்றே. (௧௧௬)

நாதமார் மகதி வீணை நாரத முனிவ னந்த
வேதவே தியரை நோக்கி வேள்விமுத் தழல்வல் லீர்காள்
கோதமார் கனலிற் காய்ந்து கொதிக்குநெய் யவனுக் கீந்தீர்
யாதவன் செய்த பாவ மென்னலும் வணங்கி யன்னோர். (௧௧௭)

வேதநால் பயிலும் வாயில் வெம்புலை மதுவை யுண்ட
பாதக னிவனே யென்றார் பகர்தலு முமிழை மாய்ந்தோ
பேதகம் புரிவீர் பாவம் பிறிதொரு கெதியான் மாற்றப்
போதக மறியீர் கொல்லோ கற்றதும் பொய்யோ வென்றான். (௧௧௮)

என்னலும் பனவர் போற்றி யிருங்குல வணிகர் வேந்தர்
பின்னவர் மதுவுண் டாலும் பெரும்பழி தொடைக்க மாட்டார்
முன்னவ னிவனே யுண்ட முதுபழி முனிவீ யன்றி
யன்னவா கனன்வந் தாலு மகற்றுவ தரிதே யென்றார். (கககூ)

விப்பிர ருரைப்ப யாழோன் வியனகை புரிந்து பாவ
மிப்படி யனந்த கோடி யென்னினுந் தீர்க்குந் தீர்த்தஞ்
செப்பருங் குடபா லாங்கோர் தெய்வமால் வரைக்கே யுண்டு
கைப்படு நெல்லி போலக் காட்டுது மூலகங் காண. (கஉ0)

துங்கபத் திரிகா வேரி சோணைநன் மதைகா ளிந்தி
கங்கையே முதலா வந்து கலந்தநன் மாக மாடும்
பொங்குதே னருவி பாவம் போக்குதல் காட்டு கின்றோ
மிங்குள ரெழுக வென்று னெழுந்தனர் வழுதி நாடர். (கஉக)

அந்தரத் தமரர் போற்று மதியாழ் முனிவ னேகக்
கந்தரப் பொதியச் சாரல் கடந்துபொன் னுலகத் தோரு
நந்தரத் தவர்போல் வாழு நன்னகர்ப் பதியின் மேவிச்
சந்தனக் குரவ வேலிச் சண்பகச் சோலை சார்ந்தார். (கஉஉ)

சிலையெடுத் தம்பு தூவித் தெவ்வினை யடர்த்தார் சைவத்
தலையெடுப் பவர்தம் பாவந் தறுகண்மான் படமுக் கோட்டு
மலையெடுத் தெறியும் வெள்ளி வலையெனச் சுலவி மேன்மே
லலையெடுத் தெறியுந் தெய்வ வருவிகண் குளிரக் கண்டார். (கஉங)

அற்றைநாள் விரத மாக வாங்கவர் குழாத்து வைகி
மற்றைநாட் சுத்தி செய்து மகதியாழ் முனிவ னேகக்
கற்றைவார் சடையி னானைக் கருத்துற வணங்கி யேத்திப்
பொற்றைநீர்ப் பெருந்த டாகம் புகுந்தனன் றரும சாமி. (கஉச)

பவித்திரந் தருப்பை தாங்கிப் பணிந்துசங் கற்ப யோதித்
தவப்பெரு வருணை மாதி பகர்ந்துதீர்த் தடாக மூழ்கிச்
சேவித்திடு மனமுன்னிச் சிவநாம நவின்று செங்கை
குவித்துமா மலர்க ளேகிக் குளிர்வட வருவி சார்ந்தான். (கஉரு)

படிந்தனன் படியா முன்னம் பாய்திரை யருவிச் சீயத்
தடிந்தது பவமே முந்தைச் சாய்ந்தது வழுதிச் சேரி



வடிந்தது பாவக் கங்குன் மறையவன் றனக்குக் காலம்
விடிந்தது விடிந்த தென்னும் வெண்டிரை முழக்க மெங்கும். ()

வாளரா வரம்போ லுண்கண் மாதரான் மதுவுண் பாவங்
காளராத் திரிபோன் மேனி கறுத்தரு வழிந்து போந்தா
ளாளராய் புகுந்தார் செந்தே னருவிதோய்ந் தகன்ற போதிற்
கோளராத் திங்கடி நீத்த கொழுங்கதிர் மதிபோ லானான். (கஉஎ)

பார்த்தனர் தீர்த்த மேன்மை பயவினர் முனிதாள் போற்றி
யார்த்தனர் வழுதி நாட ரரவொலி யெழுந்து வானந்
தூர்த்தது சுரர்பூ மாரி சொரிந்தனர் புவன மூன்றும்
போர்த்தன சிவபி ரானார் புடார்ச்சனை புரத்தின் சீர்த்தி. (கஉஅ)

தெய்வநீ றணிந்து சைவ வைதிகச் செய்கை யாற்றிச்
சைவமே வியர்கு ழாத்துத் தவநெறித் தரும சாமி
மெய்வளர் திரிகூ டத்து விமலனைப் பணிந்து போற்றிப்
பொய்வளர் மதுவுண் பாவம் போக்கிமெய்ப் புனித னானான். (கஉகூ)

வந்தனைக் கினோர் குழ மகதியாழ் முனியைப் போற்றி
நிந்தனை யொழித்தா யாவி திருத்தினை திரிகூ டத்துத்
தந்தனை சீவன் முத்தி தவிர்த்தனை பிறவித் துன்ப
மெந்தைநின் னருட்குக் கைம்மா றென்செய்கே னெளிய னென்றான்.

உந்தைமுன் குறும்ப லாவி லொருவனைப் பரவி யுன்னைத்
தந்தன னுனக்கு மந்தத் தருமங்கை கூராலா லீண்டு
வந்தனை பாவந் தீர்த்தாய் வாழியா வென்று வாழ்த்திப்
பந்தனை தவிர்க்க கல்யாழ்ப் பண்ணவன் விண்ணிற் போனான். ()

புந்திசேர் மகதி யாழோன் பொருட்டினா லெய்தப் பெற்றும்
வந்தனை வழுதி நாடர் மாதவம் பெற்றுப் போந்தார்
சிந்தனை புரியுந் தோறுஞ் சிவதிரி கூடத் தீர்த்த
மந்தணைன் பாவந் தீர்த்த வசையந் துதிசெய் வாரால். (ககஉ)

மெய்கண்ட திரிகூ டத்தை விடுத்தினி வீடு தேடல்
கைகண்ட வவரி தத்தைச் சுழித்துநெய் தேட லென்றும்

பைகொண்ட பணிபதி னுரைப் பணிந்துமெய்த் தருமசாமி
மைகொண்ட பணிலக் கோயின் மருத்துணர் சூழ்வண் டானன். ()

நன்னக ரமர்ந்து முக்க ணாயக னடிகள் பேணி
யுன்னவ னருளி னாலே யருமறை யந்த ணாளன்
மின்னணி விமான மேவி விஞ்சையர் பரவத் தெய்வக்
கன்னியர் கவரி வீசக் கயிலைமால் வரையிற் சேர்ந்தான். (௧௩௪)

மாதிரு நதியின் றென்மை மகிமையீ தென்று சூத
னோதலும் வீதிக் கெல்லா முயர்தரு பணில வீதி
பேதநாற் றுவார மன்றிப் பெரும்பிலத் துவாரந் தோன்று
நீதமுந் தெய்வக் காப்பு நிகழ்த்தென நிகழ்த்தல் செய்வான். (௧௩௫)

அயனது வடிவ மாகி யகிலமும் படைத்த நாதன்
சயனமா லான தாலத் தடங்கையிற் படைக டம்மில்
வியனமர் பணிலக் கோயில் வீதியு மான தப்பாற்
புயல்கெழு சிகர மாகப் பொலிந்தது தடங்கை யாழி. (௧௩௬)

பூத்திமால் சங்கக் கோயில் பயின்மறை நான்கும் வாயில்
சித்திரப் பொதுவின் முன்னாட் செழும்பில வேந்தன் போந்த
வத்திரு வாய்த லொன்றே யாகவு மைந்தாம் வாயின்
முத்தமிழ் முனியும் பாந்தன் முனிக்கணத் தணித்தாய் நிற்பன். ()

இருவர்செய் தவத்தா லன்றே விமையவர் பேரி யார்ப்ப
வொருவரு முணரா மன்றி லுணர்தர நடித்தா னெங்கோன்
பொருவிலே யிரம வந்தப் பொதுநடம் பரவி மேனா
ளருள்பெறு தகையால் வென்று ளரக்கரை யமா ருய்ய. (௧௩௮)

மூலமாம் வடக்கு வாய்தன் முகத்தது சங்கக் கோயி
லாலமா மறைந்து வார நாற்பெருங் கணங்கள் காப்பாங்
கோலதீன் பிலத்து வாரங் கொற்றவா சுகியே காப்பன்
மேலவாய் தனக்கு வேந்தன் வேந்தன்மெய்க் கணங்கட் கெல்லாம்.

ஞாலையா புலவை யின்ற வல்லியைக் கயிலை நாதர்
நீலியென் றுரைத்த வாற்று னீத்தநா ளிதத்தாந் தோன்றுஞ்



சூலியாலயத்தைக் காப்பன் சூழ்மதில் வடுகன் காப்பன்
கோலமா காளி பஞ்சக் குரோசமா நகரங் காப்பன். (௧௪௦)

சாலிசூழ் தலங்கள் யாவுஞ் சாதவா கனத்தன் காப்பன்
மூலமா தவர்கள் வாழு முதுவரைத் திரிகூ டத்தை
மாலுகான் முகனுங் காப்பர் மறைகளுங் காக்கு மாழி
வேலைதா னுலகங் கட்கெல்லாம் விமலையாம் பரையே காப்பள். (௧௪௧)

வேறு.

ஆதலான் மன்னுசரா சரமாகத் திரிகூடத் தமர ரெல்லாங்
காதலா லுறைவரவ னுறைவார்மேற் றீவினைகள் கலவா தென்றுஞ்
சாதலாம் பொழுதிலுமை செண்பகப்பூங் கோதைதரு தலத்திலேந்தப்
பூதநா யகனருளா லீனத்துயிர்க்கு முபதேசம் புகல்வான் மன்னோ.

விரிந்தநான் மறைக்கடங்காக் குற்றாலத் தலமகிமை விரித்தி யா
னுங், தெரிந்தவா றுமக்குரைத்தே னெனக்காம முநலாய தெல்லை
வேறோ, டரிந்தமா தவச்சூதன் வியாதனரு ளாலுணர்த்தி யறிவா
லின்றால், பொருந்தவே யுரைப்போர்கள் கேட்போர்கள் பலனெடுத்
துப் புகல்வ தானன். (௧௪௩)

## 13.- தருமசாமிச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧௪௩.

---

## பதினான்காவது:—நாற்பயனுரைத்த சருக்கம்.

இருவிழிகள் வான்முகத்தி லிருந்தாலும் வானிரவி யொருநா
லன்றிக், கருதுகிலப் பல்பொருளுங் காண்டலரி தாமுலகிற் கண்
போல் யாரும், பெருகியசொல் வழமறிவும் பெற்றாலு நூற்கேள்வி
பெறுவார்க் கன்றித், திருவளர்புண் ணியபாவ மிம்மைமறு மையும்
வீடுந் தெரியா தன்றே. (௧)

ஆதிமறை நாலோதி வீடுபெறத் தவர்க்க ளந்த ணரை [ய்து
காதிமனு வேந்தருக்கும் வைசியருக்கு முணர்த்துமறைச் சார்பாலெ
நீதியிலர் விப்பிரமங்கையர் சதுர்த்தர்பிறர்க்குமறை நிகழ்த்தா ராதலா
லோதியபு ராணமவர்க் குறுதிநா லெனவுரைப்ப ருறுதி நாலோர். ()

வேர்புணர்ந்து நனிக்கனிதே ரூமியினில் வைத்திருந்து வீடான் வாக்குந், சார்புணர்ந்து சார்புகெடச் சருகமெனத் துறவறஞ்சேர் தவத்தினோர்க்கு, மோர்புடையின் றொருபொருளை யூகம்போற் பற்றிவிடா வுணர்வினோர்க்கும், போர்புரியைம் புலப்பேயை நேரறிவிற் செலுத்துநூல் புராண நூலே. (௩)

தாளாண்மை யில்லாதார் வேளாண்மை செலுத்துவதுந் தலைமேலென் றும், வேளாண்மை யில்லாதார் மனைவாழ்க்கை செலுத்துவதும் விசையம் வேட்டு, வாளாண்மை யில்லாதார் மண்டுசமர்க் கேறுவதும் வளர்பு ராணங், கேளாதார் கதிவிழைவும் விழியிலார் வழிநடக்குஞ் சிரம மாமால். (௪)

இந்நெறியிவ் வூர்க்கெனவோர்க் கருவார்க் கவ்வூர்சென் றெய்தலாகும், பன்னெறியிற் சுழல்வார்கள் படுகர்தோறும் வீழ்வதன்றிப் பதியிற் சேரார், புன்னெறிசேர் பசுநூல்க ளனைவையெலாம் பல்யாசப் புதையில் வீழ்த்துஞ், செந்நெறியாஞ் சிவபெருமா னருணெறியிற் செலுத்துவது சிவபுராணம். (௫)

வேறுவினை யார்பிறிது மொழிகேளார் வினையாடார் விழிகளிங்கார், மாறுபடு திசைநோக்கார் மற்றொருசொல் லுரையாடார் வள்ளனார்நூல், கூறுமவர் முகநோக்கிக் கோடாம லிருந்துசெவி கொடுத்துக் கேட்பா, ராறுசுவை தெரிந்தமுத முண்பவர்போற் சொற்சுவையு களருந்தி மாதோ. (௬)

புணர்த்துசயம் புத்தலங்க ளொன்றுமுத லுன்களவே புனிதமாகுங், குணக்குமுதற் றிசைதோறுங் குற்றால மெல்லைபஞ்சக் குரோசமென்ப, ருணர்த்துநா லத்தலத்திற் பயிலுமவ ருயர்கதியு முலகோர் வாழ்த்து, மிணக்குசரா சரவடிவாய்த் தவம்புரிவா னவர்வாழ்த்து மெய்து வாரால். (௭)

வேறு.

அண்டர்நா யகர்புராணம் பயில்வதநா லயங்கள் யாறு
மண்டப மரங்கத் தெற்றி மடந்தடம் வேள்விச் சாலை
தண்டலை நல்லோர் தங்கண் மனைச்சார்பு சுத்தி செய்து
தொண்டராற் பொறிக்க வேடு துலங்குபொற் பீட மேற்றி. (௮)



வாசனை மலர்க ளேற்றி மணிவிளக் கேற்றி யேற்ற
பூசனை புரிந்து நூலின் பொருள்விரித் துரைக்கின் றோனை
யாசனத் திருத்திப் போற்றி யாங்கவர்க் கிசைவ நல்கித்
தேசுற விருந்து கேட்பார் செல்வமும் வீடும் வேட்பார். (௯)

வேறு.

நன்னகர்மெய்த் தலமகிமை யெந்நாட்டி லெங்கிருந்து நவில்வோர் கேட்போ, ரிந்நகரை யரியபெருந் தவத்தினா லெய்தினர்பே றெய்தி வாழ்வா, ரன்னநூல் பயில்விடத்து முனிவர்வா னவர்நிறைவ ரறங்க ளோங்குஞ், செந்நென்முதற் பயிர்தழைப்ப வந்நாடு மழைவளத்தாற் செழிக்கு மாதோ. (௧௦)

விரதமுறு தினமாகின் மேல்பல னொன்றுபத்தாம் வேள்வியாகிற், சதமுறு சதமகப்பே றெய்துமா பிரமடங்காத் தவத்தோர்க்காகில், வரதனுயர் திரிகூட மான்மியத்தைப் பிதிர்தினத்தின் மகிழ்ந்து கேட்கி, னரகொழிந்து தென்புலத்தார் சுவர்க்கஞ்சேர்ந் திவர்க்காசி நல்க வாழ்வார். (௧௧)

மிகையினர் மிகைதீருங் குற்றாலத் தலமகிமை விரும்பிக் கேட்கிற், பகையினு இடைந்தவர்கள் முனைவராய்ப் பகைதடிந்து பதியிற் சேர்வார், வகையினு னொருதினத்தில் வறுமைபோ யிருதினத்தில் வாழ்வு சேருந், தொகையினன் முத்தினமுங் கேட்போர்க ளோய்துவர்கள் சுவர்க்க போகம். (௧௨)

வேறு.

முன்னமறை பவர்கேட்பின் முதுமறையோ தியபலனு
மன்னவரே லவர்கட்கு மறுமன்னர் வணரடு
நன்னர்வை சியர்கேட்பி னவநிதியும் பெரிதோங்கும்
பின்னவரே லேர்பலவாய்ப் பெரும்பூமி பலிப்பெய்தும். (௧௩)

கன்னியர்கா ளையராகிற் கவின்யாழ மணம்பெறுவர்
பன்னியரே லறிவுடைய பாலகரைப் பெற்றெடுப்பர்
சென்னிமிசை யாறணிவார் திரிகூடச் சீர்கேட்பி
னிந்நிலமே லெவரேனு நினைத்தவர மெய்துவார். (௧௪)

பேய்கொண்டார் பேயகலும் பிணிகொண்டார் பிணிநீங்குங்
காய்கின்ற பழவினைபோம் வருவினையுங் கழிந்தேகி,

சாய்கின்ற மதிச்சடையார் குற்றாலத் தலமகிமை
வாய்கொண்டு புகல்வார்க்கு மனமுவந்து கேட்பார்க்கும். (௧௫)

பித்தரா னவர்க்குமனப் பித்தொழியும் பிணிகள்போஞ்
சித்தரா னவர்காய சித்திமுத லெய்திடுவார்
பத்தரா னவர்மேலும் பரமஞா னம்பெருகி
முத்தரா குவர்புனித மூர்த்திமான் மியங்கேட்பின். (௧௬)

கல்லார்க்கு நிறைகல்வி கற்றார்க்கு மேலொழுக்கம்
பொல்லார்க்குக் குணமாட்சி புத்தியில்லார்க் குயர்போதம்
வல்லார்க்குஞ் செயல்புரிய மாட்டார்க்கும் பொருளாக்க
மெல்லாச்செல் வமுநல்கு மெந்தைபுடார்ச் சனபுரநூல். (௧௭)

அற்போலுங் குழற்கௌரி யொருபாக மகலாத
சிற்போதப் பெருமானார் திரிகூடச் சிவபுரநூல்
பொற்போடு விரிப்பார்க்கும் புத்தகத்திற் பொறிப்பார்க்குங்
கற்போர்க்குங் கேட்போர்க்கும் பயில்வோர்க்குங் கதிதருமே. (௧௮)

தனிவழிக்குத் துணையாருஞ் சகலபிணிக் கொருமருந்தா
மினியபெரும் பேரின்ப மிம்மைமறு மையுங்கொடுக்கு
முனைமுகத்தில் வென்றிதரு முக்கணனார் திரிகூடப்
பனுவலுறு தோத்திரத்தைப் பாடத்தாற் பயில்வோர்க்கே. (௧௯)

திருக்குற்றா லப்பெருமான் சிவநூலை மனைதனில்வைத்
தருச்சிப்பார் சிவலிங்க மருச்சனைசெய் பலன்பெறுவார்
விருப்பத்தா லவ்வேடு வைத்திருக்கும் வியன்மனையிற்
பெருக்கத்தா லுயர்செல்வ மேன்மேலும் பெருகுமால். (௨0)

சிந்தூரத்தின் பணியுவந்தார் திரிகூட மென்றொருக்கா
லந்தரத்தின் விழ்பவன்கேட் டமரர்பதம் பெற்றனனான்
மந்திரம்போற் பதந்தோறும் வழுத்துநூல் கேட்பவர்சீர்
நந்தரத்தோ ராலெடுத்து நவிலுதற்கு மெளிதாமோ. (௨௧)

வேறு.

நத்தமே சதுரங் கூர்ம நளினஞ்சக் கரமென் றாய
வுத்தமா லயமோ ரைந்தி லுயர்ந்தது பளிக்கோயில்



வைத்ததாம் பிரம்பொன் வெள்ளி சித்திர மணிமன் றைந்திற்
சித்திரப் பொதுவே மேலாஞ் சிற்பொது வென்னும் வேதம். (௨௨)

பரைமுதற் சுயம்பு வைந்து பலமுதல் விசேட மைந்து
தெரிசன மோர்பா லைந்து தேவரா சியமோ ரைந்து
மருவுகாப் பூந்தோ டைந்து வாய்தலோ ரைந்து முத்தி
யருளைந்து திருக்குற்றாலத் தற்புத மனந்த மின்னும். (௨௩)

அருவியின் றிரசா பங்க ளாடலின் கழுநீர்த் தோற்றஞ்
சுருதியம் பலத்துத் தெய்வ துந்துபி முழக்க மாதி
பரைபெருங் கருப்ப மெய்திப் பகவரைப் பெறாத லெம்மான்
றிருவெழுத் துணர்த்த லென்னச் சிவரக சியமோ ரைந்தே. (௨௪)

பரைபரன் மதுநக் கேசன் பரவுசோ மேசன் கூத்தன்
றெரிவருஞ் சுயம்பு வைந்தாஞ் சிகரம்வெற் பருவி சம்பு
கரிமுகக் கடவு ளென்னக் காட்சிமற் றோர்பா லைந்தா
விரிமறை யயன்மால் காரி விசையமா காளி சாத்தன். (௨௫)

பரைசிவ கணங்கள் காப்புப் பாந்தளோ டுடனி ரைந்தாம்
வரைபலா மூர்த்தி தீர்த்தம் வளர்தலம் விசேட மைந்து
தெரிசனம் பிறப்பி றப்புச் சிந்தனை திருக்குற் றாலப்
பெருகுகீர்த் தனங்கள் கேட்பர் பெறுமண முத்தி யைந்தாம். (௨௬)

விம்மிதம் புளகம் போர்த்தல் விழிப்புனன் மொழிதள ளாடல்
செம்மைசேர் சரியை யாதி திருத்தொண்டு துதிநி யான
மம்மவோ திருப்ப ணிக்கென் றீட்டுவ தழித்துண் ணாமை
யெம்மையா ளுடையான் றொண்ட ரென்வகைப் பத்தி மாதோ. ()

ஆடலந் திரிகூ டத்தி லற்புத மனைத்து மோர்ந்து
பாடலம் புனைந்த தேவைப் பத்தியெண் வகையி னாலே
தாதொழுந் தீவத்தோர் தம்மைச் சரணெனச் சரணம் பூண்டு
காதொடுந் தொழுவா ரன்றோ நாந்தொழுங் கடவு ளாரே. (௨௮)

திருமலர் திருக்குற் றாலந் தருவது நிசமே முத்தி
யருவியாய் திரிகூ டத்தை யனுகுநாள் மட்டு மன்றே
பெருவினை யவர்பா னிற்கப் பெறுவதென் றியம்பிச் சூதன்
றிருமுனிக் கணங்கள் சூழச் சித்திரச் சிரமஞ் சேர்ந்தான். (௨௯)

சூதமா முனிவ னேகச் சூழ்மக முனிவ ரெல்லாம்
வேதரா சியமாந் தொன்னூல் வியாதனு லுணர்ந்த மேலோ
னோதனுர் புராணத் துள்ளு நன்னகர்ச் சிவபு ராண
மோதலாற் பதியி னுண்மை யுணர்ந்தன முய்ந்தோ மென்றார். (௩௦)

சவுனக ராதி யாகச் சயம்புகுற் றாலந் தன்னை
மவுனரா மெண்பத் தெண்ணா யிரவரும் வந்து காண்பரன்
கவனமேற் காதல் பூண்டார் கற்பகப் பொதும்பர் சூழும்
பவனமேற் காதல் பூண்ட பாரிடத் தவர்போன் மன்னோ. (௩௧)

பெருமையேத் திரகேர் வாவிப் பெருவன முனிவர் சென்மக்
கருமையேத் திரமா சாலங் கடத்துவான் மணியு முத்து
மிருமையேத் திரவி சோம னெறிக்குமா மலையங் கொல்லி
யொருமையேத் திரஞ்சூழ் முக்கோட் டியர்திரி கூடஞ் சார்ந்தார். ()

வேறு.

மேகாங்கக் கந்தரத்தார் திரிகூ டத்தில் வியன்சிலையெ லாமிலிங்க வடிவா மென்றே, யேகாங்கந் துவிதாங்கந் திரிவி தாங்க மெனுமு க்ஷேறுயி னிளிடையில் வணங்கி யேகி, வாகார்ந்த வடவரைசூழ் வானோர் போல வடவருவித் தடஞ்சாரல் வலங்கொண் டேகிப், பாகார்ந்த புகழ்பரவிச் சாமீ பத்திற் பஞ்சாங்க மட்டாங்கம் பணிந்து போந்தார். (௩௩)

சிரம்வணங்க லேகாங்கம் வலக்கைசென்னி சேர்வணக்கந் துவிதாங்க முடியின் மீதிற், கரமிரண்டு முறத்தொழுத றிரிவி தாங்கங் கரஞ்சானு சென்னிநில முறல்பஞ் சாங்க, முரமூக்குப் பாணிசிரஞ் செவிவாய் நாட்ட முயர்சானு வெனுமிருநான் குறிப்புந் தோயச், சரணிலத் தோயாமற் றுய்யம் பார்மேற் சாராம லிறைஞ்சுதல்சாட் டாங்க மாமால். (௩௪)

வேறு.

சித்திர கங்கை மூலச் சிவமது கங்கை மேவி
யுத்தர கங்கை பூசை யுகந்தமை பாடி யாடிக்
குத்திர மகன்ற சீலக் கொள்கையர் போந்தார் மன்னோ
வைத்திர மகன்ற சாபத் தருவிசெல் பகந்த டாகம். (௩௫)



கண்டனர் அருவி யாடிக் களித்தனர் நியதி யாற்றி
யண்டர்தம் பிராட்டி கோயி லணுகினர் பரவி யார்வங்
கொண்டனர் குகைக டோறுங் குழுமினர் காய கற்ப
முண்டன ரயன்மால் கற்ப முறைவரோ வுறைந்தா ரங்கண். (௩௬)

சீரிள வேனிற் காலஞ் சித்திரைப் பௌவம் வெய்யோன்
சாரும்வெப் பூஞ்சிச் சாலை தான்புகுந் தொளிக்குங் காலை
மாரிபொன் மழைமந் தாரம் வாடையூ டாட நோக்கி
யாரிய முனிவ ரங்கோ ரதிசயம் பயப்ப நின்றார். (௩௭)

வேறு.

நின்றனர்முன் னிருந்தவர்கள் பன்னிருவர் நிறைகேள்வி நிபுணர் போற்ற, மன்றலிசைக் கந்தருவர் விஞ்சையர்சித் தியர்பரவ வானோர் வாழ்த்தத், தென்றலொரு புறந்தவழுங் கொண்டலொரு புறந்தவழச் சிகம் போர்ப்ப, வென்றிமுனி வரர்சூழத் திசைகட றத் தமிழ்மணப்ப வேத நாத. (௩௮)

குண்டலமுங் குழைகாதுந் திருமுகமு நயனமுங்கோ மரபார
மண்டலமுஞ் செபவடமுங் கமண்டலமும் புத்தகமு மகர வாரி
யுண்டலர்ந்த கனிவாயு மொளிபிறங்கப் பரிதிதென்பா லுதித்தாலென்
முண்டகத்தி லயனின்ற முதிசுரும்ப சம்பவமா முனிவன் வந்தான்.

வந்ததமிழ் முனிக்கணத்தை நின்றமக முனிக்கணத்தோர் வணங்கி வாழ்த்தி, யத்தன்மலர் கொடிபோற்றிப் பாற்கடல்சேர் மறுக்கடல்போ லளவளாவிச், சித்ரவா னுதற்கவுரி திரிபுரையா மைமர்புரி சிறப்புப் போற்றி, வித்தமலை யடர்த்தோனைக் கண்டுகளிப் புடன்பயினி விடைபெற் றாரால். (௪௦)

வேறு.

சண்பகத் தடாக நீங்கிச் சந்தனத் தடாக மூழ்கி
விண்புலத் தமர ரெல்லா மிசைபுல மொருவி யாடும்
வண்புலத் திரிகூ டத்து வடபுலத் தருவிச் சாரல்
கண்புலங் களிப்பக் கண்டார் கங்கைமேற் காதல் விண்டார். (௪௧)

ஆடின ரருவி வென்னி றணிந்தன ரக்க மாலை
சூடினர் குதன் வாய்மை துதித்தனர் சூழிலே யென்றே.

நாடினர் திரிகூ டத்தை நைமிசாரணிய வாசர்
பாடினர் வசந்த வீதித் தெய்வதம் பரவிச் செல்வார். (௪௨)

பரிதிகுழ் வடக்கு வாய்தற் பாரகோ புரம்ப ராவி
யிருதிகள் பதினெட் டாய வியன்படி வணங்கிச் சங்கத்
தெருவலம் புரிவா னுள்போய்ச் சிற்பரை யிடங் கம்பஞ்
சுருதியாங் குறும்ப லாவைத் தொழுதெழீஇக் கரங்கள் கூப்பி. (௪௩)

வேறு.

பற்றுத பிறைநுதலுங் குறுநகையுங் கயல்விழியும் பவள வாயு
முற்றுத குவிமுலையுந் துகிலுடையு மகிலாண்ட முழுது மீன்ற, சிற்
றுலின் திருவயிறுந், செல்விகுழல் வாய்மொழித்தாய் செம்பொற்
றுளுங், குற்றாலத் தெந்தைபிரான் மகிழ்மணக் கோலமுங்கண் குளி
ரக் கண்டார். (௪௪)

வேறு.

கண்டருள் பெற்றுச் சத்தி கணபதி பதம்ப ராவி
விண்டுவைப் பணிந்து ஞான விசையைதாள் பரவி மன்றல்
கொண்டருள் குமரற் போற்றிக் குடதிசை வாயில் காவ
லண்டனைத் தொழுது சோம சேகர னடியிற் றாழ்ந்து. (௪௫)

சிவமுதற் கடவுட் பஞ்ச தெரிசனம் பெற்றுக் கற்றை
யவிர்சடைக் கும்ப யோனி யடிபணிந் தரவின் வேந்தைப்
பவனமே லரசை வாழ்த்திப் பயிரவ ரிருக்கை போற்றிப்
புவனநா யகரை யீன்ற புகழ்ப்பரை பீடம் போற்றி. (௪௬)

உம்பர்தந் தேவர் மூவ ருயர்பெருந் தொட்டில் போற்றிக்
கம்பமுற் றிட்டார் தாழ்ந்து கயமுகத் தவனை யேத்திக்
தம்பமார் துவார பாலர் தாளிணை தொழுது நந்தி
யம்புயப் பதம்ப ராவி யாயிரங் கதிரை வாழ்த்தி. (௪௭)

சிந்துசெய் நால்வர்க் காகத் தெக்கண முகமாந் தேவை
முந்துற வணங்கிக் காளி முதலினோ ரெழுவர்ப் போற்றித்
தந்திமா முகனை வாழ்த்திச் சண்முக னிருப்ப காப்ப
ணைகைதயா னணங்கோர் பாலா யிருந்தருள் கோலம் போற்றி. ()

அவரிதழ்க் கமல பாதந் தொழுதபா ரதியைப் போற்றி
யுவரிலு ளெழ்வே வாங்கு மொருவனைத் தெய்வ யானை



கவிரிதழ்க் குறக்கோ மாட்டி கணவனைப் பணிந்து போற்றிச்
சவுரியை வணங்கி வாழ்த்திச் சந்திரன் றன்னைப் பராவி. (௪௯)

வேறு.

அத்திமுக னடிபரவி யாலயம்புக் குமையாடத்
தித்திமி யெனநடிக்குந் தேசோ னடி வணங்கிக்
கொத்திதழ்ச் சடையானைக் குறுமுனிக்காக் குழைத்தானை
முத்திதரும் பரஞ்சுடரைக் கண்டார்கண் முதுதவத்தோர். (௫௦)

இலைகாணு வருள்பூத்த கற்பகத்தை யிமையவருந்
தலைகாணுத் திரிகூடச் சாரலுறை தனிச்சுடரை
யலைகாணு வருட்கடலைக் காணுதொறு மருந்தவத்தோர்
நிலைகாணுப் பேரின்ப வெள்ளத்தே நிலைநிலைத்தார். (௫௧)

வள்ளலா ரருள்வாரி படிந்துமேல் வழிந்தொழுகும்
வெள்ளமே யெனத்தாரை விழிபொழிய மொழிகுழற
வுள்ளமே கரையழிய வுவட்டெடுத்தா னந்தவெள்ளந்
துள்ளவாய் தழுதழுப்ப விதழ்துடிப்ப வாழ்த்தினார். (௫௨)

வேறு.

கங்கைவார் சடையாய் போற்றி கவுரிபங் குடையாய் போற்றி
பங்கயா சனத்தாய் போற்றி பருமலா சனத்தாய் போற்றி
யங்கையா யுதங்கண் மாற்றி யகங்கையின் மழுமா னேற்ற
செங்கையாய் திருக்குற் றாலச் சிவபெரு மானே போற்றி. (௫௩)

உகந்தொறு மயன்மால் பூசை யுகந்தவீற் றிருந்தாய் போற்றி
முகந்தனி விடையா முக்கண் முகந்தமூச் சுடராய் போற்றி
யிகந்தனிற் பரத்தி லின்ப மிசைக்குநன் னகராய் போற்றி
சகந்தனில் வினைவண் டாடாச் சண்பகா டவியாய் போற்றி. (௫௪)

திண்ணிய தேவன்னி யாற்றிச் சிவநெறி யாற்றுந் தக்கன்
பண்ணிய தரும மெல்லாம் பாவமா முடித்தாய் போற்றி
நண்ணிய கொலையை வேட்டு நதியில்வீழ் வேடன் பாவம்
புண்ணிய மாக்கி நோக்கிப் புனிதவீ டளித்தாய் போற்றி. (௫௫)

பவமது கழுநீ ராக்கப் பதிபடப் படிந்தோர் தங்க
ளவமது கழுவுந் தெய்வ வருவியந் துறையாய் போற்றி

நலமதுச் சொரிக்கு கங்கை நங்கையின் பதம்பூ சித்த
சிவமது கங்கை தன்றுஞ் சித்திர நதியாய் போற்றி. (௫௬)

மறையவன் பிறவி நோயை மருத்தினு லொழித்தாய் போற்றி
துறைதனிற் படிந்தோன் றந்தை தொன்னர கொழித்தாய் போற்றி
முறைசெயா வணிகன் பாவ முடித்தழுத் திரைத்தாய் போற்றி
குறுமுனிக் குருகி யன்று குழகிய குழகா போற்றி. (௫௭)

பாதகப் புட்ப கந்தன் பரிபவ மொழித்தாய் போற்றி
போதக மெறிந்த நீரும் பூசையா வுவந்தாய் போற்றி
பேதமா மதுவை யுண்டான் பெரும்பழி துடைத்தாய் போற்றி
கோதகல் வேத மூலக் குறும்பலா வுடையாய் போற்றி. (௫௮)

கிரிவலம் வந்த யானை கிளர்பவ மொழித்தாய் போற்றி
விரிவலம் புரியாஞ் சங்க வீதியாய் போற்றி வேட
னரிவலம் புரியக் கண்டு நற்பத மளித்தாய் போற்றி
புரிசடைத் திருக்குற் றாலப் புண்ணிய புனிதா போற்றி. (௫௯)

திரிகூட மென்னு நாமஞ் செவியில்வீழ் தலுமோர் தீயோ
னெரிகூடு நரகில் வீழா தெடுத்தருள் கருணை போற்றி
பரிவான விலிங்கஞ் சாத்தும் பரிவட்டங் கவர்ந்த பார்ப்பான்
புரிவான சிவத்து யோகம் போக்கிய புனிதா போற்றி. (௬௦)

வானவர் பாவந் தீர்த்த மகிமையாய் போற்றி பார்த்தன்
மோனசம் படத்தைக் காட்டும் படார்ச்சனை புரந்தாய் போற்றி
யானசிக் குரோச மைந்தி னடைந்திடு முயிர்கட் கெல்லா
ஞானமந் திரத்தை யோது நற்குரு வமலா போற்றி. (௬௧)

சத்திபீ டத்தின் மேவுந் தாரகப் பிரமம் போற்றி
முத்திதந் தருள வேண்டி முனிந்தருண் முதல்வ போற்றி
சத்திரீ விதிபண் பாட வந்தரப் பேரி யார்ப்பச்
சித்திர சபையி லாடுந் தெய்வநா யகனே போற்றி. (௬௨)

வேறு.

என்றுபுகழ் முனிவோரை நீரயன்மா மறைமலர்
சென்றுநா தரணைகள் சென்னிமேற் குவிதருன்
மன்றவுல கனைத்துமொரு வண்ணமாய் மின்றபிரா
னென்றுபகல் வண்ணமுட னத்திவண்ணா மாயினன். (௬௩)



அண்டர்குழாம் பணிவானைப் பரவியருள் பெற்றேகித்
தொண்டர்குழாந் தனைப்பரவித் தன்மயன் றனைப்பதங்கள்
கண்டுகுழாத் தொடும்வணங்கி நந்திசன் கழல்போற்றிக்
கொண்டல்குழாஞ் செயும்பணிலக் கோயில்வலங் கொடுபோந்தார். ()

சரமசரந் தொறுநிறைந்த தனிமுதல்சங் காலயமுஞ்
சிரமபதம் பெயர்த்தாடுஞ் சித்திரமன் றமும்பரவிப்
பிரமபதஞ் சுவர்க்கபதம் விண்டுபதம் பழித்தொளிராம்
பரமபதத் திருப்பாரோ விருந்தாரென் பயனுடைத்தில். (௬௫)

ஆறுமடங் கவிர்வேணி யண்ணலார் பலதலமுங்
கூறுமடங் கவிற்குத்தன் குறிப்பினுஞ் செடுத்துரைத்த
வீறுமடங் கலுங்கனிந்தும் வினையாடுந் திரிகூட
நாறுமடந் தலைமென் னோக்கியநீ சரித்திருந்தார். (௬௬)

குருந்துமணந் தமழ்சாரற் குற்றாலந் தனிப்பலவா
யிருந்துபழ வினைநீங்கி யெந்தைபிரா னருள்பெற்றுத்
திருந்துசிவ மறைப்பவர்பால் விடைபெற்றுச் செழுந்தவத்தோர்
பொருந்துமவன் நைமிசா ரணியத்திற் போந்தனரால். (௬௭)

ஆதிபிரான் வெண்ணீறு மஞ்செழுத்து மோங்குகநற்
சாதிநெறி வேதநெறி சைவநெறி யுந்தழைக்க
மாதரார் கற்புநெறி வளர்கமா நிலமதன்மே
னீதிமனு வேந்தர்செந் நீடுழி வாழ்கவே. (௬௮)

14 - நற்பயனுரைத்த சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௬௰௮.

இரண்டாவது சிவரகசியகாண்டம் முற்றுப்பெற்றது.

காண்டம் இரண்டிக்குத் திருவிருத்தம் - ௨௦௭௦.

காப்புத்திருவிருத்தம் ௨, ஆக-௨௦௭௨.

திருக்குற்றாலத் தலபுராணம்

முற்றுப்பெற்றது.

திரிகூடநாதர் திருவடிகளேசரணம்.

சிவமயம்.

# அரும்பதவுரை.

## முதலாவது:-தானவைபவகாண்டம்.

### காப்பு.

1. பனிவரை - இமயமலை - பிடி பெண்யானை, (உமாதேவி). வேழம்-(ஆண்) யானை. இயல் - அழகு. இருபிடி - இரண்டுபெண்யானைகள், (தெய்வயானையம்மைவள்ளியம்மை). துதிக்கையன் - தோத்திரம் பொருந்திய கரங்களையுடைய குமாரக்கடவுளுக்கு. ஞானச்செயல் - அறிவொழுக்கம். ஒருகோட்டின் - ஒற்றைக் கொம்பைப்போலும். இருகோட்டு-இரண்டுபக்கமும் வளைவுள்ள. பிறை - மூன்றாம் பிறைச்சந்திரன். வாழ் - வாழ்தற்கிடமாகிய (திருமுடியும்) செக்கர் வானை - செவ்வானத்துக்கு. மயல் - மயக்கத்தை. திருமேனி - (சிவந்த) திருமேனியையுமுடைய. வேழமீன்ற ஞானச்செயல் காட்டும் செஞ்ஞ பக்களிற்றை யெனக் கூட்டுக. விநாயகர் திருமுடியிலே சந்திரன் முதலியவை யணிந்திருத்தல் விநாயகபுராணத்துட்காண்க.

### கடவுள் வணக்கம்.

1. தேம் - இடம். நிலம்மேவி - பூமியின் (கீழ்ச்) சென்று. வான்மேவி - ஆகாயத்தின் (மேற்)சென்று. கோ-மலை.

2. இமையம் - உச்சியையுடைய. வரை - மூங்கில். சமையவரை-பொறுமையுடையாரை. சமையவரை-(அறுவகைச்) சமயங்களினளவு.

3. அறம்வளர்த்தாள்-உமாதேவி. தாளம் வந்த - தாளத்தைத் (திருக்கரத்திலே) தாங்க. உமாதேவி தாளம் அடித்தல் - தேவாரத்துள், திருஞானசம்பந்த சுவாமிகளருளிச் செய்த திருவாய் மூதார்ப்பதிகம் "தளிரிள வள" ரென்னுந் திருப்பாசுரத்தாலறிக. பொது - சபை.

4. அம்பரம் - ஆகாயம். மாருதம் - காற்று. அம்பரம் - அழகியபிரமம். அம்பர் - அவ்விடத்து. அத்தினம் - அக்காலம். பரம் - பாரமாகிய. வான் - ஆகாயத்திலுள்ள. ஒரு தனுப்போல் - ஒப்பற்ற (இந்திர) தனுசைநிகராக. இருதனுவும் (சிவபிரானுடைய) திருமேனியும்(தன்) திருமேனியும். அமைந்த - (சிவப்பும் பச்சையுமாக) இயைந்து. ஒன்றாகி - ஏகமாகி. அம்பரத்தின் - கடலின். விசித்ரம்போல் - அலைபோல். அத்துவிதமாகி - இரண்ட றக்கலந்திருந்து. அம்பரத்தின் - பாணம், அரம் இவற்றின். அமர் கடந்த - போரைச்சயித்த.

5. நறை - தேன் - இசழி - கொன்றை. பொன்னரியமாலை - பொன்றொரியஅருமையுடையமாலை. கொன் - பெருமை. புயங்கம் - பாம்பாகிய. வேய்ந்த - தரித்த. மணவறையா - கலியாணமண்டபமாக. மதி - சந்திரன். விளக்கா - தீபமாக. தென் - அழகு. சீர் - சிறப்பாக. வேட்கும் - விவாகஞ் செய்யும். வேட்பாம் - விரும்புவாம்.

6. பூதபல பேதவுயிர் - (பஞ்ச) பூதங்களாலாகிய அநேகவித ஆன்மாக்களுக்கு. ஆதிமுறை - பூர்வகிரமப்படி. தேககரண புவனபோகாதிக ளெலாம் - தநுகரணபுவனபோக முதலிய யாவும். அகிலலோக நிறைவாக - எல்லாவுலகங்களிலும் பூரணமாம்படி. நாதம் - ஒலி.

7. வருக்கம் - இனம். வடதிருநீ கே (சல்) ஆல விருக்ஷத்தினிழலி டத்தே. தென்முகங்கொண்டு - தெற்குமுகமாக எழுந்தருளி விரும்ப... நால்வருக்கம் - சாத்திரத்தில்...

(உண்மைப்பொருள்). நவலாமல்நவ ன்றனை - இன்முத்திரையாற்காட்டி யருளினவனை. வருக்கை - பலா. பரவாமற் பரவல் - இடைவிடாது துதித்தல். [இதில் இருவருக்கு மொருவருக்கு நயவன்றருளிய சரிதம்புலப் படவில்லை.]

8. கங்கையார் - கங்காநதியைத் திருமுடியிலே பொருந்திய. அம்பலையானை, (செவ்வாம்பற்பூவை). சிந்தூரத்தை - திலகம் போன்றவரை, (யானையை) மாதங்கத்திருமுனியை - பெருஞ்சூதங்கிய பொன்போன்றசிறந்த யானைக்கன்றை, (வில்லாகிய மகாமேருமலை போன்றவரை). தேவேந்தர் திக்குவேந்தர் - இந்திரன் முதலிய அட்டதிக்குப் பாலகர். முடிமலர் - சிரமாகியபூக்களினிடத்துள்ள. தும்பியை - வண்டுபோல்வாரை, (யானையை). வல்லை - வல்லவையென்னு மனைவி. கொங்கையார் களபத்தை - தனங்களிலே பொருந்திய கலவைச் சந்தனம்போல்பவரை, (யானைக்கன்றை). செண்பகக் குஞ்சரத்தை - செண்பகவிநாயகரை.

9. வேலும் - வெவ்வேறுவடிவங்களாகவும். உகந்தொறும் தோறும் - பலயுகங்களிலும். விடாய் - வெப்பம். மூலச்சேறும் உக - ஆணவமலமாகிய சகதியுங்கெட. மாயைமலங்கழிய - மாயாமலமும்போக. இருவினை - நல்வினை தீவினையாகிய. பழைய நீட்டுந்தீர - பண்டை அருசமும் விலக. தெய்வக்கொடி - தெய்வயானை. கட்செல்பாய் - கண்களாகிய சேல்மீன்கள் தாவுகின்ற. சொற்றத்து - வெற்றியையுடைய. ஆனந்தக்கடல் - (முருகக்கடவுளாகிய) இன்ப சமுத்திரத்தில். ஆடல் - தோய்தல்.

10. எண் - எட்டு. கவின் - அழகுற. பூத்து - மலர்ந்து.

11. விழிமணி - உருத்திராக்க மணி. காத்திரன் - கற்பகத்தைப் போலுந்திரண்ட. தோற்றி - தோற்றுவித்து. (பிறவினை) களம் கார் மாற்றி - (சிவபெருமானுக்குத் தனக்கும் வேற்றுமைத் தோன்றக்) கழுத்தில் கரிய நிறத்தை நீக்கி. வேத்திரம் - பிரம்பு - படை - ஆயுதம்.

12. தான்பிறந்த - தான் தோன்றுதற்கிடமாகிய. நிந்தை - பழி. தடிந்து - வெட்டி. சேய் - பிள்ளை. ஆன் பிறங்கும் - இடபத்தைப் (போல) விளங்கும். மழவிடைமேல் - இளமையாகிய தருமரிஷபத்தின்மேல். இருவர் அயிர்ப்ப - பிரமவிஷ்ணுக்கள் சந்தேகிக்க. கடவுட் சேடம் - சிவப்பிரசாதம். வான்புலவர் - தேவர்.

13. மதுரேசர் - மதுரைக்கு நாயகர். சதுர் - உயர்வு - (தாற்பரியம்) ஈடேற - கடைத்தேற. கதிர் - பிரகாசம். அந்தக்கரணம் - மனம்.

14. நீற்றும் - சாம்பராக்கும். நீற்றுக்குடவறை - சுண்ணாம்புக்குகை. புறங்கண்டு - வென்று. கரு - சனனமாகிய. நீத்தம் - கடல். உகைந்தானை - செலுத்தினவனை.

15. கழைசளித்து - கரும்பை முறித்து. தலைவர் - சிவபிரான். ஆவணம் (அவர்கொண்டுவந்த அடிமை) சாதனமாகிய. கூடம் - யானைகட்டுமிடம். கொம்பு - இரண்டு (பூங்)கொம்புபோல்வாராகிய பரவை நாச்சியார், சங்கிலிநாச்சியார். ஒருவல்லி - (அவ்விருவருள்) ஒருவராகிய சங்கிலிநாச்சியார். தொடர் - பற்றுகின்ற. தளை - பந்தம் (கால்விலங்கு). நீவி - நீக்கி.

16. உள அனைத்து கலையும் - உள்ள எல்லா நூல்களும். திறல் - வலி. தென்னவனை - பாண்டியனுடைய அழகிய.

17. கிளை - மூங்கில். கிரிக்கு - மலையினிடத்து. விளை - விளைதல். கரகம் - கமண்டலம். தண்டு - தண்டம். படைத்தபிரான் (பிரமனை ஆகியிலிருந்து) சிருட்டித்த சிவபெருமான். விடுத்து - (அத்திருமேனியை) விட்டு. நேமி - சக்கரம். வளை - சங்கு. மௌலி - முடியின். சாடு - இடம். முளைமதி - மூன்றாம்பிறைச் சந்திரன். துதியெந்தும் - (அச் சிவபி



ரானைத் துதிக்கும்) தோத்திரத்தைத்தாங்கும். எனவே, திருமாலைச் சிவபிரானுக்கசெய்தவென்பதாயிற்று.

18. சிவபத்தராதி எழுவர் - திருத்தொண்டத் தொகையுட் கூறிய பத்தராய்ப் பணிவார்கள் முதலிய எழுவகையார். எல்லைதீர் - அளவு நீங்கிய.

19. வேணுமொழி - மூங்கிற் குழலிசைபோலுஞ்சொல். புகழ்வாசத் தொடை - கீர்த்தி மணத்தையுடைய (பா) மாலை.

20. நலிவு - மெலிவு. கிரிகள் - மலைகளிடத்து. தாவி - தாண்டி. படர்ந்தாலும் - சென்றாலும். தாலுதிடம் உற - நாக்குத் தடிப்பேற. பாதுகை - பாதரக்ஷை.

21. மாதர் - (நூற்பின்) மகளிர்.

---

## அவையடக்கம்.

1. கற்பனை - இல்லதை யுள்ளதாகக் கூறுதல். நவிலுவன - சொல்லத்தக்கவைகள்.

2. வைப்பு - புதையலரிய. உபதேசம் வைத்து - உபதேசித்து. அவன் - திருநந்திதேவர். அவனும் - சனற்குமார முனிவரும்.

3. மூவாறின் - பதினெண் புராணங்களுக்குள். மாதவற்கு - விஷ்ணுவுக்கு. ஆதவனுக்கு - சூரியனுக்கு. அழலோற்கு - அக்கினிக்கு. விதிக்கு - பிரமனுக்கு.

4. வியன் - பெருமை.

5. உவர் - உவர்க்கடல். கடலிடத்திற் குலவுஞ் சங்கிதைகளெனக் கூட்டுக.

6. கிளர்ந்த - விளங்கிய. உயர்மதி - உயர்ந்த அறிவு. மந்தரம் - (மந்தாகிய) மந்தரமலை. குளம் - நெற்றி.

7. தருவி - சட்டுவம்; கறிபடைக்குங் கருவி. இசைந்து - (மணம்) பொருந்தி. பரிமாறி - படைத்து. கதி - மோக்ஷம். நிறைக்கும் - நிறையச்செய்யும். கதை - சரிதம். இதனை - இந்தச் சரிதத்தை.

8. வடமொழி - சம்ஸ்கிருதம். தென்மொழி - தமிழ். இடமொழி - உறுதிவார்த்தை. அத்தலம் - அந்த் திருக்குற்றாலம். சிவமறையோர் - ஆதிசைவப்பிராமணர். உடனுறை - அவ்வாதி சைவருடன் தங்குகின்ற. குறிக்கொண்டு - குறித்துக்கொண்டு; எழுதிக்கொண்டு.

9. சித்துநதி - சித்திராநதி. புராணமூலம் - புராண வரலாறு. சிகரி - (திரிகூட) மலை. அருவி - (வட) அருவி. மதுகங்கை - (சிவ) மதுகங்கை. மந்தாகிலம் - மந்தமாருதம். சம்பு - நரி. வைத்த - (தன்னிடத்து) வைத்துக்கொண்டிருந்த.

10. வனசரன் - வேடன். தா - கேடு. பொருள் - ஐசுவரியம். சிவரகசியம் - சிவரகசியகண்டம். ஈதேபூர - பதினாறாக.

11. ஒருமை - ஒருதன்மை. சிவநெறி - சைவமார்க்கம். உபயம் - இரண்டு. அவயவம் - உறுப்பு. கீர்த்தனம் - தோத்திரம். கலன் - ஆபரணம். இருமைக்கதி - இம்மை மறுமைப்பயன். வீடு - மோக்ஷம். திருசிறப்பாக. அருள்செய் - கொடுக்கின்ற. புராணச்செல்வி - புராணமாதாகிய. கல்வியுரு - நூலின் வடிவத்தின். கலன்களாகக் கல்வியுரு மகிமை தெரிக்கின்றேனென முடிக்க.

12. தோடு - பூவிதழ் - துணர்த்த - பூங்கொத்திலுள்ள. வேய்ந்தார் - அணிந்த சிவபிரான். கோட்டு அகம் - நீர்க்கரையிலுள்ளிடம். கமலம் - தாமரைப்பூ. காப்பண் - நடு. கொட்டி - பயனற்ற ஒரு நீர்ப்பூ.

13. புடார்ச்சுனபுரம் - திருக்குற்றாலம். திகழ்தர - (எங்கும்) வியாபிக்கும்படி. வல்லை - வல்லமையுடையாய். இகழ்தர - இகழ்ச்சியைக்கொடுக்க. நாண் - வெட்கம். போராடி - பொருது. அகழ்தர - வருத்த (தாற்பரியம்.)

14. தேக்கிய - நிறைந்த. கடுவை - ஆலகால விஷத்தை; இவ்வி

மூத்தின் வேகத்தையொழிக்கி உருட்டித் திரட்டிச் சிவபிரானின் திருக்கரத்திற் கொடுத்தலால் அமுதமாகும் பாக்கியச் செல்வியென்றார்.

15. சிந்தை செறிந்திலனெனும் - மனத்திட்ப மில்லாதவனானாலும். புகலாநின்றேன் - சொல்லுகின்றேன். மறிந்த - மடங்கிய. வேழம் - யானை. எறிந்த - வீசிய. தளிர் - இலை.

16. கவை - பிளவு. அவி - தேவருணவு; அமுதம். குவிதருநெறி - ஒருப்பாடான மார்க்கம்.

17. வேலை - சமுத்திரம். என்பு - எலும்பு. சாலை - இருப்பிடம். தொழும்பு - அடிமை. வாலை - இளம்பருவப்பெண்.

18. வேரி - தேன். ஊடாடா - உள்ளே புகப்பெறாத. காவில் - (சோலையிடத்து) சோலையினிடத்து. ஆரியன் - சிவபிரான். ஆடு - நடிக்கின்ற. ஆரியநாடு - ஆரியநாட்டின் வளங்களை. வாரிநீர் (இருபெயரொட்டு) தெய்வவாநதி - தெய்வத்தன்மை பொருந்திய விசேடமாகிய யாறு.

---

## முதலாவது :- திருநதிச் சருக்கம்.

1. தேர் கொண்ட வசந்த வீதி - (மன்மதன்) இரதமாகக் கொள்ளப்பட்ட தென்றற்காற்று உலாவுகின்ற தெருவையுடைய. சங்கம் - கூட்டம். பரந்து - விரிந்து. வேலைநீர் - சமுத்திர சலத்தை. தம்பால் - (மேகங்கள்) தம்மிடத்துள்ள. தரங்கம் - அலைகள். கடலின்மேனி - சமுத்திரவடிவத்தின் கருநிறத்தை. மீண்ட - திரும்பின.

2. பை - அழகு. தரக்கு - புலி. உரிவை - தோல். சித்திரமன்று - சித்திரசபை. அந்தரப்பேரி - ஆகாயத்திலுள்ள துந்துபிவாத்தியம். அதிர்தர முழங்கி - மிக ஒலித்து. வரை - (பொதிய) மலை. அபயம் - அச்சமின்மை. வரதம் - கருணை.

3. ஆம் - போலும். தும்பி - யானை. சரிதரு - சஞ்சரிக்கின்ற. போல் - உவமையசை. அல் - அசை. ஆல் - உவமைப் பொருளென்பது, ஆன்வாசிவிமாடாவேறே என்னுந்திருவாசகச் செய்யுளுரையா னுணர்க. இங்ஙனம் வருமிடந்தோறுங் கொள்க.

4. துவிதரு - நீர்த்துளியைக் கொடுக்கின்ற. துளியா - மழையாக. வானம் - மேகம். தூவுநீர் - சொரியப்பட்ட சலம். ஆம்போல் - அதுபோல (தன்மை) போல.

5. முத்திரச் சிகரம் - மூன்றுருவாகிய உச்சியையுடைய மலை; (திரிகூடமலை). வானை - மேகத்தை. முயங்கி - கலந்து. நளன் - நட்பமாகிய. துளி - நீர்த்துளி. பை - அழகிய. திரள் - திரண்ட. கொடி - (பச்சிலைகளையுடைய) கொடி. ஒடிகிடி - ஒடிகிளப்பெற்று. அகடு - நடுவிடம், (வயிறு). விம்மி - பருத்து. வால - இளமையாகிய. பசுநரம்பு தேகத்திலோடிப் படர்தல் பெண்கள் கருப்பக்குறிகளிலொன்று.

6. கோடு அனைத்தும் - மலையினுச்சிக ளெல்லாவற்றினின்றும். ஆடல் - வென்றி. அண்ணலும் - அடுத்தல்போலும்.

7. கடல்மேல் - கடலிடத்து. வால் நீட்டி - வாலைநீட்டி, (பரிசுத்தம் அதிகப்படுத்தி). படிவங்காட்டி - (நீளச் செல்லுதலால்தன்) வடிவத்தைக் காண்பித்து. சையம் - பொதியமலை. கவித்த - சூட்டிய. தலை அருவி - மேதன்மையான அருவியானது. திமிர்ந்தவகையாம் - உயர்ந்த விதம்போலும். முடி - சிகரங்களை. கவித்த - வளைத்த. விசையம் ஆம் - வென்றிபோலும்.

8. அளி - சிங்கம். எழுமி - பன்றி. புலவாமை - நீராமை. வாமனம் - தாவுகின்ற அன்னம், (குறுகியவடிவம்). சேல் - மச்சம். பொலிவு - விளக்கம். ஆராமம் - சோலை. அபிராமம் - அழகு. இசைந்து - (இவற்றைப்) பொருந்தி. சங்கிராமம் விளை



த்து - (களையொடு) பொருதலைச் செய்து. ஆவினம் - பசுக்கூட்டம். தொடர்ந்து - பின்பற்றி. வாங்குதிரை - தாவுகின்ற குதிரை, (வளைந்த அலை). கெடுமாலுக்குக் கூறுங்கால் - ஆராமம், அபிராமம், சங்கிராமம் என்பவற்றிற்குப் பரசுராமாவதாரம், தசரதராமாவதாரம், பலபத்திர ராமாவதாரம் என இதன் மூன்றுள்ள அச்சுப்பிரதியில் வரைந்திருத்தல் காண்க.

9. புண்டரிகப் பொருட்டு - புலிகளையுடைய மலை, (தாமரைக்கொட்டை). அரும்புவனம் - உண்டாகுகின்றநீர், (அரியவுலகம்). கமண்டலம் - மேகமண்டலம், (சலபாத்திரம்). மூலமறைபலவுமோதி - (மர) வேர்களையும் பாறைகளையுந் தாக்கி, (ஆதிவேதங்கள் பலவற்றையும் ஓதி). உந்தியந்தடம் - சுழிகளையுடைய நீர் நிறைந்த தடாகம், (கொப்பூழாகிய அழகிய மடு). பாரதி - பூமியின்மிக்க இடம், (சரசுவதி).

10. தேம் - இடம், (வாசனை). அஞ்சனக்கண் - அழகிய சனங்களின் கண்கள், (மைதோய்ந்த பார்வை). மணக்கோலம் - வாசனையின் அழகு, (கலியாணக்கோலம்).

11. பொங்குமாகடல் - பொங்குமாகடலென்னும் பெயரையுடைய தீர்த்தம், (பொங்குகின்ற பெரிய சமுத்திரம்). அமுதத்தின் - அமுதத்தைப்போல, (அமுதத்துடன்). பூ - பூமி, (தாமரைமலர்). சங்கநிதி - சங்கு பொன், (சங்கவடிவமான நிதி). மணி - இரத்நம், (சிந்தாமணி). தரு - விருக்ஷம், (கற்பகம்). திருமான் - (இ) லக்குமி.

12. கமலம் - நீர், (தாமரைப்பூ). படிகம் - பளிங்கு. வாய் - இடம், (வாய்). கண் - இடம், (நேத்திரம்). கலை - மான், (கல்விநூல்). போதகம் - யானைக்கன்று, (ஞானவரம்பு). சொல் - நெற்பயிர்கள், (வார்த்தைகள்). மலரேடு - பூவிதழ், (விரிந்த ஓலையேடு). பண் - நீர்நிலை, (இசைப்பாட்டு). தாவம் - பூமி, (நாக்கு). நாமகள் - சரசுவதி.

13. ஐவனம் - மலைநெல். தோரை - மூங்கிலரிசி. ஏனல் - தினை. பாணிக்கு - நீரிடத்து, (கையிடத்து) பணிதலால் - வணங்கிச் செல்லுதலால்.

14. குயிற்றிய - செய்யப்பட்ட. குரவம் - குரவம் பூமாலை. குமரி - அர்க்கை. பயிற்றிய - பழக்கப்பட்ட. பறிபொருள் (பாலைநிலவழிவருவாரிடத்தில் வேடர்) பறித்த பொருள்களை. குறையாடி - கொள்ளைகொண்டு. எயிற்றியர் - பாலைநிலப்பெண்கள். குறும்பு - அக்கிரமம். சாய - கெட. கங்கை - (சித்திர) கங்கை. அயித்தியர் - அசுரர்.

15. வாய் - (தன்) இடத்து, (வாயில்). பாலை - பாலைநிலத்துப்பொருள்களை, (அமுதத்தை). குரவையாடி - பெருமுழக்கமிட்டு, (கூத்தாடி). முல்லைமாதரை மயக்கி - முல்லையாகிய பெரியபூமியை வேறுபடுத்தி, (இடைப்பெண்களை மயக்கஞ்செய்து). மருதத்தாடு - மருத நிலத்தினிடம், (மருதமரத்தினடுவே).

16. குவளைக்காடு - நீலோற்பல மிகுதி. மெய் ஆய் - சரீரமாக (ஆய் - எச்சத்திரிபு). இடையிடை வனசம் பூத்து விழியா - நடுவே நடுவே தாமரைமலர்ந்து கண்ணாக. நோக்கி - (அவற்றாலெங்கும்) பார்த்து. வெள்ளைவாரணம் - வெள்ளிய சங்கு, (ஐராவதயானை). செய்யவாயரம்பை - செவ்வையுடையனவாய் வாழைமரங்களை, (சிவந்தவாயையுடைய தெய்வப் பெண்களை). தரு - விருக்ஷம், (கற்பகம்). சையம் - மலை. சதமகன் - இந்திரன்.

17. பரத்தியர் - நெய்தனிலப் பெண்கள். உணக்கும் - காயவைத்திருக்கும் அளத்தியர் - உப்பளத்திலுள்ள அப்பெண்கள். படுத்த - தொகுத்துவைத்த. நரை - வெள்ளை. வாரி - அள்ளிக்கொண்டு. துளையர் சேரி - பரவர் தெரு.

18. கொல்லை - தோட்டம். குடத்தியர் - இடைச்சியர். மிட்வு - மிடா.

நதி-தயிர். பனை - பருத்த. தொடுத்து - ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டு. எல்லை - அளவையுடைய.

19. நால்வகைமலர்-கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ. ஐம்பால்-அழகியவெண்ணிறமுள்ள, (கூந்தலையுடைய). கால்வழி -வாய்க்கால்மார்க்கம், (காலினிடத்து). கலிங்குஅம்புஜர்ப்பு - மதகுகளிடத்து நிரம்பிப்ப, (கலிங்கம் -மேகலாபரணம்). இது - ஆகுபெயர். கனதனம் - உயர்ந்த கவர்ணம், (பருத்தமுலை). பிணைப்ப-மிகுப்ப, (பெருக்க). பால்வளை-வெள்ளியசங்கு, (பகுப்பாகியவளையல்).

20. தம்பம் - தன்னைப்பற்றுக்கோடாகவுடைய. தாப்பு-பவளம். தாளம்-முத்து. பான்மை-தன்மை. இம்பர்மேல்-இவ்விடத்தின்மேல். ஐம்பால்-குறிஞ்சி முதலிய ஐந்துபகுப்பாகிய. கம்பம் - அசைவு.

21. கோள் - வலி. இபம்-யானை. இடங்கர்-முதலை. துரைநுரை-முழங்குகின்ற அலை. கமடம்-ஆமை. பரிசை-கேடகம். வாங்கி-கொண்டு. காளமா - எக்காளமாக.

22. அரிசனம் - மஞ்சள். தகரம்- வாசனைப்பண்டம். அஞ்சி - ஏலம். தூணி - கட்டை. திரிபலை-கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய். மயிற்பீலி - மயிற்றோகை. தேவதாரம் - ஓர்வாசனைமரம். சித்திலம் - முத்து. திரைதிரை - வரிசைவரிசையாக. கூலம் - கடற்கரை, (கடைவீதி.)

23. பகுத்து- (கால்களாகப்)பிரிக்கப்பட்டு. சித்திரகங்கை - சித்திராநதி.

24. வெள்ளத்தானினன் - சமுத்திரத்தை வஸ்திரமாகவுடைய பூமிதேவி. மேகலை ஆர்ப்பாம் -மேகலாபரணத்திரளொலிபோலும். புள்ளொர்ப்பு - (வெள்ளத்திலகப்பட்ட.) பறவைகளினோசை. அவள்போர்வையின் ஆர்ப்பாம் - அப்பூமிதேவியின் போர்வையாகிய கடல் முழக்கம்போலும். கடல், பூமிதேவிக்கு ஆடையாகவும் போர்வையாகவுமிருப்பது காண்க.

25. பூங்காடு-நந்தனவனம். கயல்வெடிதாவுவ-கெண்டைமீன்கள்குதிப்பன. கோடி கோடி - அனந்தம். விழிபெறும் - பார்வை பொருந்தும். கொள்கையாம் - குவளைம் போலும்.

26. கோலும்-வினையும். ஐந்திணை (குறிஞ்சிமுதலிய) ஐந்துநிலம். கூடிபொழுதும்-சேர்ந்து நடக்கும். காலவாரி - (பல) கால்களையுடைய வெள்ளம். அறமை - நீங்குதலில்லாதிருத்தல். ஆல் - அசை. வாஞ்சை-ஆசை.

27. அருள்-கருணையானது. அங்கமாம் - (தனக்கு) வடிவமாம்.

## இரண்டாவது—திருநாட்டுச் சருக்கம்.

1. திரையாய்-வரிசையாய். சிறு-பெருமுழக்கஞ் செய்கின்ற. வியன-பெருமை.

2. கொம்பு- ஊதுகுழல். கிணை-மருதநிலப்பறை. கோடு-சங்கு. குமுற - முழங்க. குழுமி - கூடி. மள்ளர் - உழவர். அகழி ஆக - அகழ்கிடங்குபோல. தம்படை, தங்களுடைய கலப்பை. தொழில்-தொழில்கள். செய்யப்பட்ட (அணைகட்டுதல்-முதலிய) வினைகள். அரண்புரி - காவல் செய்கின்ற. படைத்தலைவர்-போர்வீரர்.

3. விசயம் - வெற்றி. இந்திரன்-தேவேந்திரன். படைத்தொழில் - உழுதொழில். கழனி-வயல். வளமை-வளத்தின் நன்மை.

4. கழனி - மருதநிலத்துள்ள. தேம் - வாசனை. அடை-அடைந்த. தென்வடிய - தேனொழுக. (அத்தேனொருபுறம் போகவொட்டாமல்) மள்ளர் - உழவர். மாமடை-பெரிய துவாரங்களை. செறித்த-அடைக்கப்பட்ட. வயல் - நன்செயில். வாய்மடை - வெளியேபோகும் நீரின் வழியை. திறந்து -, தாம்-தாமே. அடை-வந்த. வளைகுவளை - சங்குக் கூட்டங்களை. சரித்து வெளியேபோக்கி. மரைகாவி - தாமரை குவளைகளின். ஆம் - உண்டாகிய. அடை-இலைகளை.



மிதித்து - (அவ்வயல்களின் உரமாக) மிதித்து. உழுபடைக்கு - கலப்பைக்கு. அணிவகுப்பார் - வரிசை பிரிப்பார்.

5. முழவு-வாச்சியமாகிய. கிணை-மருதநிலப் பறை. நாடர் - நாட்டிலுள்ளார். விழவு - திருவிழா. மணம் - விவாகம். பயப்படுவது - அஞ்சுவது, (நீர்ப்படுவது).

6. மாலை - மேகத்தை. சேவும்-(வெண்ணிற) இடபங்களும். மயிடமும் - (கருநிறக்)கடாக்களும். பகல் - பகற்காலம். எல்லி - இராக்காலம். கலந்தென - கலந்தாற்போலவும். நீலநித்திலத்தின்கோவை -நீலரத்நத்தாலும் முத்தினாலுமாகியமாலை. புரைய - போலவும். பூட்டி - ஏரிலே கட்டி.

7. களமர் ஈட்டம் - உழவர்கூட்டம். படைவாள் - கொழுக்களை. நிரைத்து - வரிசைப்படுத்தி. நாளிட்டு - நன்முகூர்த்தம் வைத்து. இசைத்து - பொருத்தி. கூர் - மிக்க. வலம்புரி - வலம்புரிச் சங்குகள். பண்டைப்பன்றி - பழைய (விஷ்ணுவாகிய) பன்றி. நகைத்தல் - சிரித்தல்.

8. பாலிகை - முளைப்பாலிகை. பாத்தி - பரந்த இடத்தையுடைய வயல். சாலி - நெல். தெளிப்ப-விதைக்க. வாரி - கடல். குரவை -(மள்ளர்) பெருமுழக்கம். பழனக்கன்னி-மருதநிலமாகிய பெண்.

9. முகிழ்தம் விளைத்து - அரும்பி. கால்கள் - நெற்பயிர்கள். விந்துருமம் - பவளம். நீட்டி - வளர்ந்து. மரகதம் விரித்து - மரகதரத்நம்போலத் தோகைவிரியச்செய்து. நாறும்-தோன்றும். நாறுமுறை - நாற்றின் பருவம். செய்த்தலை - வயலிடங்களை. தெளிசெய்து - பக்குவப்பட்ட சேருக்கி.

10. அரிதல் - நாறுபிடுங்கல். பெயர்த்து - அப்புறப்படுத்து. அமைத்தல் - வைத்தல். பரித்தல் - சுமத்தல். பதித்தல் - நடுதல். புரியும் - செய்யும். அமைச்சர் - மந்திரிகள். மன் - அரசன்.

11. குவவு - பெருமை. மாணி - பிரமசாரி (திருஞான சம்பந்தமூர்த்திநாயனார்). கருவாய் - கருக்கொண்டு. ஈன்று - வெளிப்பட்டு.

12. முகமெடுத்து - தலைதூக்கி, (தலைநிமிர்ந்து). ஆடி- அசைந்து,(நடித்து). விற்பொலி புருவங்கோட்டி - வில்லைப்போலவிளங்கி வடிவம்வளைந்து, (வில்லைப்போல விளங்குகின்ற புருவத்தை வளைத்து). நெட்டிலை - நீண்ட தோகையாகிய. முக்காட்டின் - மூடுதலையுடைய. நாணம் - வெட்கம். [பொலிபு - செய்து என்னும் வினையெச்ச வாய்பாடு]

13. கதிர்செய்து - கதிராலீத்து. உண்டாடல் - மகிழ்ச்சியால் விளையாடல். வேட்கும் - விவாகஞ்செய்யும். மாதர் - அழகு.

14. கூறு - பங்கு. கேணி - கிடங்கு. அரிந்து - அரியப்பட்டு. உணங்கும் - வாடும். பேறுகண்டு உவப்பர்- பயனடைந்து மகிழ்கின்ற செல்வான்கள். வீறுநாள் - மேலோங்குகாலம்.

15. வாள் - ஒளி. படையிரும்பு- கொழு. கிளைத்து - கிண்டி. ஆள்வகுத்த - (வேலை) ஆட்களால் வகுக்கப்பட்ட. கூனிரும்பு - அரிவாள். கேள் - நட்பு. தாள் - காலை. தனது - உரிமை. தடிவர் - கொல்லுவார்.

16. வீறு - பெருமை. வேய்ந்து- (நெற்போர்) செய்து. மேதியேறு - எருமைக்கடா. சிறை - சிறகு. வை- வைக்கோல். ஈர்ந்து - களைந்து. (தாற்பரியம்) மாறுகுன்று - விரோதிக்கின்ற மலைகளின். பாசறை - பாடிவீடு. வயங்கும் - விளங்கும். வகுப்பரென்றும் பாடமுண்டு.

17. உறை -பெருந்தொகையைக் காட்டும் சிற்றெண். ஆற்று - பற்று. திகிரிவரை - சக்கரவாளமலை. ஓங்கல் - மலை.

18. பேறுகண்டு — நெல் அளவுசெய்து. (தாற்பரியம்) களமர் முதலோர் - உழவர் முதலிய. கூலியாட்

கள். கடமை - இறை. கூறு - பகுப்பு. குவை - குவியல். விபுலம் - பெருமை.

19. கடைதிறந்தென - வாயில் திறந்தாற் போலும். கொட்டாரம் - நெற்களஞ்சியம். நாவலர் - வித்துவான்கள். செல் - (உண்டு) போகின்ற. முறையோம்பி - கிரமமாக உபசரித்து. வரையாது - நீங்காது. தரு - கற்பகம். வளம் - செல்வம்.

20. சூல்குதிக்கும் - கருவுயிர்க்கும். வலம்புரி - வலம்புரிச் சங்கு. துறை - நீர்த்துறைகளில். கால் - காலால். மேதி - எருமை. மடைதிறக்கும் - மடைகள் திறக்கப்படும். கடல்வாவி - சமுத்திரம் போன்றகுளங்களில். பால் (அவ்வெருமைகளின்) பால். குதிக்கும் - குதித்தோடிப் பாயும். படம் - விருதுக்கொடி. குதிக்கும்படி - நடிக்கும்படி. சேல் - சேல்மீன். சோலை - சோலையினிடத்து. தேன் - வண்டுகள். நான்குதிக்கும் - நாலுதிசையிடத்தும்.

21. வரம்பு - வரப்பு. கதலி - வாழை. தாழை - தென்னை. குரம்பை - கரையை. நீர்க்கு - நீர்க்கண். அரும்பும் - உண்டாம். சொக்குவளை - வாசனைவளைந்த. செங்குவளை - செவ்விய நீலோற்பலம்.

22. வனத்திடை - முல்லைநிலத்திடத்தில். பகற்பூ - பகலில் மலரு முல்லைப்பூ முதலிய மலர். ஆடி - விளையாடி. புன்மாலை - சிறிய மாலைக்காலத்தில். துனிதீர்ப்பான் - ஊடல் தீர்க்கும்பொருட்டு. வண்டு (முல்லைநிலத்திற்போய்ப் பகற்காலத்தில் விளையாடிவந்த (ஆண்) வண்டு. இசைக்கும் - இசைபாடும். எண்டிசைக்கும் - எட்டுத்திக்கினிடத்தும்.

23. கான் - காட்டில். நாறு - தோன்றுகின்ற. குன்றம்போல் - மலைபோல (நினைத்து). கார் மறுகு - மேகம் வந்து சுழலுகின்ற. தேர்மறுகு - இரதத்தையுடைய வீதியில். மாளிகையும் - மாடங்களும். சூளிகையும் - நிலாமுற்றங்களும். வானாறு - ஆகாய கங்கையை. தலைமடுக்கும் - அளாவும். (தாற்பரியம்) இசைக்கும் - (எடுத்துச்) சொல்லப்படும். பணை - வயலானது. நாறு - (தன்னிடத்திற்) றோன்றுகின்ற. பால் நாறு கரும்பு - பால் மணக்கப்படு கரும்புகளை. கரும்பு இசைக்கும் - (வளர்வித்துப்) புனர்பூச நக்ஷத்திரத்தோடு பொருந்தும். தேங்கு - நிறைந்த. ஆவிப்பூங்காவி - தடாகத்திலுள்ள நீலோற்பலத்தின். தேன் ஆறு - தேனாகிய நதியை. உகு - சொரிகின்ற. அரும்பு - மலரும் பருவத்தரும்புகளில். இசைக்கும் - (வண்டுகள்) இசைப்பாட்டைப்பாடும்.

24. காமாரி - சிவபிரான். ஆர் - எவர். என - என்றுநினைத்து. நடுங்கு - நடுங்குகின்ற. கொடும் - கொடிய. கோடை - வெப்பம். ஒடும், — [மிகுந்த குளிர்ச்சியென்றபடி] தோம் - இடந்தோறும். மாரிபுயல் - மாரியாகிய மேகம். திங்கள் - மாதம். தரு - விருக்ஷங்களை. மருவி - பொருந்தி. பூமாரி - பூமழையையும். அருவிதரும் - அருவி கொடுக்கும்.

25. முருந்து - மயிலிறகினடிமுள். கூந்தல்முகிற்புகை - கூந்தலாகிய மேகத்துக்கூட்டும் புகை. புறந்தருவார் - இரக்ஷிப்பவர். விரும்புகையில் - விரும்புதலால். வரும்புகை - (பாகசாலையில்) வரும்புகை. கரும்பு - கருப்பம்பால். (ஆகுபெயர்) மையில் ஆட - மேகத்திற் (சென்று) அசைய. மையிலாடும் - (அப்புகைகளைமேகமென்றுநினைத்து) மயில்கள் நடிக்கும். (மையில் - மயிலெனப் போலியாயிற்று.)

26. தேன் - வண்டுகள். குளிக்கும் - மூழ்கும். தேன்வாவி - சிவமதுகங்கையில். திரை - அலை. தாவி - இறந்து. கான் - வாசனை. தரங்கம் - அலையில். கரைகுளிக்கும் - கரைகள் மூழ்கும். (அலைகள் கரைகளின்மேலோங்குமென்றபடி). மிசை - மேல். கருமேதி - கரிய எருமைகள். வான் - ஆகாயத்தில். குளிக்கும் - படியும், பொருந்தும். விரிபாளை - விரிந்த



(கமுகம்)பாளையின். மடல்குளிக்கும் - மடல் (உள்ளே) மூழ்கும். வரிவாளை - கீற்றுக்களையுடைய வாளைமீன்கள்.

27. ஆடும் - விளையாடும். கண்டு - கற்கண்டு. விண்டு - பேசி.

28. வள்ளைப்பாடல் - உலக்கைப்பாட்டு. பனைஞ்செயல் - குடித்தல்.

29. பண் - இசை. நாணும் - வெட்கமடையும். குளறியதில் - குளறிப்பேசியதனால். விண்ணணம் - வெட்கம். அமையாதால் - (அப்பெண்கட்கு) அமையாததனாலே. [அமையாதால் விகாரம்] பேதுறும் — (ஒப்பாகாது) பேதப்படும்.

30. பிறங்கு - விளங்குகின்ற. ஆவி - தடாகத்திலுள்ள. திருமலர் - தாமரைப்பூவானது. பாசு அடையிட்டு இருந்தாலும். (தன்னிடத்தில்) இளைய முட்டையிட்டிருந்து ஒலிக்கும். பால் அனங்கள் - வெள்ளிய அன்னப்பறவைகள். இறங்காது - (கீழே) இறங்கப்படாது. பிரிந்தார் - (கணவரை) நீங்கிய பெண்களின். வாய்மலர் - வாயாகிய மலரானது. (பாசு அடையிட்டிருந்தாலும்) - பசிய இலையிற் படைத்திருந்தாலும். பால் அனங்கள் - பாலுஞ்சோறும். (இறங்காது) (தன்னுள்ளே) புகப்படாது. உம்மைகள் - எண்ணுப் பொருளன. பாசென்பது - பச்சைப்பிள்ளையென்றதுபோ லிளமை குறித்தது. அறங்காவல் பூண்டிருப்பார் - அரசர். அகம் - அரண்மனை. மகம் - யாகம். உறங்காது - ஒலியாதிராது. (தாற்பரியம்) மும்முரசம் - படைமுரசு, கொடைமுரசு, கலியாணமுரசு. எழுமுரசின் - சத்தசமுத்திரமாகிய முரசைப்போல.

31. தேம் - இனிமை. பழுக்கும் - முதிரும். மூப்புடைக்காய் - தென்னங்காய். தூங்கும் - தங்கும். வருக்கை - பலா. பிதிர்க்கும் - உதிர்க்கும். முட்கனி - பலாப்பழம். ஒசியும் - வளையும். பழுக்காய்க்குலை - பாக்குக்குலை. பொற்கதலி - அழகியவாழைக்குலைகள். (வாழை ஆகுபெயர்)

32. தளவம் - முல்லை. மூரல் இட - (அரும்பாகிய) சோற்றையிட. பாசடை - பசிய இலை. பால் - கருப்பஞ்சாறு. கதலிநறுநெய்வார்ப்ப - வாழைப்பழங்கள் நல்லநெய்போன்ற (தேன்) ஒழுக்க. புறந்தருவாரே - காப்பவர்களே. வியப்பு - மகிழ்ச்சி. ஆர் - நிறைந்த. ஐந்தருவார் - பஞ்சதருநிழலிலிருப்பவர் (ஆவர்). ஏ - அசை.

33. மிசை - மேலிடம். மதுகங்கை - சிவமதுகங்கைத்தீர்த்தம். சைவம் - சிவசம்பந்தம். தடம் - வாவி. செய் - வயல். கழனி - மருத நிலத்தையும். பொழில் - சோலையையும்.

34. கொல்லைவாய் ஏனல் - முல்லைநிலத்திடத்துள்ள தினை. பொன் கொழிப்பர் - பொன்னைத் தெரிந்தெடுத்துக் கொடுப்பர். ஆரம் - முத்துக்கள். கொழிப்பர் - கொழித்தெடுப்பார். மெல்லியார் - எளியவர். நுளைமாதர் - பரவப்பெண்கள். முல்லையார் - இடைச்சியர். அளத்தியர் - உப்பளத்திலுள்ளநெய்தனிலமாதர்.

35. பந்தரிடும் - பந்தல்செய்யும். பொதுவியர் - இடைச்சியர். முல்லை - முல்லைக்கொடி. புனக்கொல்லை - (தினைப்)புனமாகியதோட்டத்திலுள்ள. சந்தனம் - சந்தனவிருக்ஷம். அது - அச்சந்தனவிருக்ஷம். கொடிச்சியர் - குறப்பெண்கள். தாம் மணியொடு - (தங்களுக்குப் பாரம் நீங்கும்பொருட்டுக் கழற்றி) யெறியும் இரத்நாபரணங்களுடன். ஐந்தருவுக்கு - பஞ்சதருவோடு. (கு - உருபுமயக்கம்.)

36. மா - மாமரம். வான்முகில் - பெரியமேகம். ஆலும் - ஆடும். ஓடை - நீர்நிலை, தடாகம். பால்வளை - வெள்ளியசங்கு. மணியீனும் - முத்துக்களைப்பெறும். வாடை - வடகாற்று.

37. உயர்ந்த நிலை - மேனிலை. கோபுரமிசை - ஆகாயத்திலுள்ள நகரத் (தேவலோகத்)தின்மேலே. நூபுரம் - காற்சிலம்பு. அலம்ப - ஒலிக்க. மாபுரவலன் - பெருமைதங்கிய அரசன், இந்திரன். மீ - மேலாகிய. புரம் - மேன்மாடம். நடசாலை - ஆடரங்கு.

38. ஆறு - ஆற்று நீரும். புனல் - (ஏனைய குளத்து) நீரும். பாய்வன - பாயப்படுவனவாகிய. கண்ணறு - பெரும்பிரிவானவாய்க்கால். பணை - வயல். தோறும் - எல்லாம். மலர்நாறும் - (பல) பூக்கள் வாசனையைச்செய்யும். தேன் ஒழுக - (அப்பூக்களினின்றும்) தேன் ஒடிப்பாய. நிறைசாலி - நிறைந்தநெற்பயிர்கள். நாறும் - உண்டாகும். ஊறு தடவாளை - (நீர்) ஊறுகின்ற தடாகத்திலுள்ள வாளைமீன். தெற - (குதித்து) வருத்தப்படுத்த. ஊறுபடுபாளை - வடுப்படுதென்னம்பாளை. சாறுகெழும் - கள்நிறையப்படும். சாறுகெழும் - திருவிழாவைப்பொருந்தும்.

39. முன்னவர் - பிராமணர்.

40. அசுரர்கோன் - சூரபன்மன். கன்னிநாடு - பாண்டிநாடு. திரிகூடம் - திருக்குற்றாலமலை. பொன்னிறுடு - தேவலோகம். போந்தநாடு - வரப்பட்ட நாடு.

41. ஆடல் - வென்றி. உபரிகை - மேல்வீடு. குலவரைக்குலம் - நல்லமலைக் கூட்டம்.

42. செந்நெல் ஆரம் - சிவந்தநெல்லினின்று கொழித்தெடுக்கப்பட்ட முத்து. சிற்றில் - சிறுவீடு. சினைக்கமடம் - சூல்கொண்ட ஆமை. கன்னல்மாமணி - கரும்பின் பரியமுத்து. வலம்புரிக்குடங்கள் - வலம்புரிச் சங்காகியகுடங்களில். பெய்து - போட்டு. சொன்னமணல் - தங்கமணலாகிய. துவர் - பவளம். கனல் - அக்கினி. வயற் பாவையர் - மருதநிலப்பெண்கள். பாவைகட்கு - மரப்பாவைகளுக்கு. அருத்துவர் - உண்பிப்பார்,

43. கொல்லை - தோட்டம். குறிஞ்சி ஏனல் - குறிஞ்சி நிலத்திலுள்ள தினை. வரகு - (முல்லை நிலத்திலுள்ள) வரகக்கதிர். குரல் - கதிர். முதிரை - அவரை, துவரை முதலியன. குலைகள் - காய்க்கொத்துக்கள். சாலிவேலி - (மருதநிலத்துள்ள) நெல்வேலி. மொய்க்கும் - நெருங்கும், எல்லை - அளவு. கழனி - மருதநிலம். கைதை - தாழை, சோறு - சோறு போன்ற மகரந்தம்.

44. எயினர் - பாலைநிலமாக்கள். கூட்டி - சேர்த்து. வேடர் - குறிஞ்சிநிலமாக்களின். எறிந்த - முறிந்த. சிலையை - வில்லை. கோலா - (மாடு மேய்க்குங்) கம்பாக. இடையர் - முல்லை நிலமாக்கள். ஆயர் - இடையர். மள்ளர் - மருதநிலமாக்கள். மறிந்த. (வைக்கோலை விட்டுப்) பிரிந்த. நெற்குவை - நெற்குவியல். வாரி - அள்ளி. வலையர் - நெய்தனில மாக்கள்.

45. உழக்கும் - கலக்கும். முகிழ்க்கும் - அரும்பெடுக்கும். நாறு - நாற்று. சாறு - திருவிழா.

46. மைந்தர் - ஆடவர். புயமுந்தாரும் - தோளும் மாலையும். கொங்கை ஆர்க்கும் - முலைகளிடத்துக்கட்டப்படும். கொத்து - பூங்கொத்து. குழல் - கூந்தல். எழிலினீட்டம் - எழுந்து வளருங்கால் இனிய நீளம் (ஆம்). கோலம் - உருவம். (எழிலினீட்டம்) - அழகின் கூட்டம் (ஆம்). வண்டு,— இரவிறுடும் - இராத்திரிகாலத்தினடிக்கும், கமலம் - தாமரை. (இரவிறுடும்) - சூரியனை விரும்பும். விந்தை - ஆச்சரியம், கண்டாரைமகிழ்வித்தல். முலை - கொங்கைகளிடத்து. விரைதருகுழை - வாசனையைத்தருகின்றசந்தனக்குழம்பு. கடாவும் - செலுத்தப்படும். கண் - நேத்திரங்கள். (விரைதருகுழைகடாவும்) விரைந்துகாதுகளிடத்துத் தாவும்.

47. அன்னவாரிசம் - அன்னப்பறவைகள் வசிக்குந்தாமரை. அம்பொருடாங்கம் காட்டும் - அழகிய இலக்குமி நடனசாலையைக்காண்பிக்கும். யாறு - நதி. (அம்பொருடாங்கங்காட்டும்) நீரோடுகூடிய சுவர்ணத்தையாருகின்ற அலைகளைக்காண்பிக்கும். மறுகு - வீதி. சங்கமேயும் - சங்குகளூர்ந்து திரியும். புலமை - வித்துவத்தன்மை. (சங்கமேயும்) வித்துவான்கள் சபையிற் பொருந்தும். விழா - திருவிழா. திங்களார்க்கும் - மாதந் (தோறும்) முழங்கும். வதனம் - முகம். (திங்களார்க்கும்) சந்திரனைப் (போல) ஒளிவீசிப் பிரகாசிக்கும். தனம் - முலை. நாந்தநாறும் - கஸ்தூரிமணக்கும். சோலைவேலி - விருக்ஷங்களாகிய வேலிகளிடத்து. (நரந்தநாறும்) நாரத்தை மரங்கள் தோன்றும்.

48. மாலைகிளைக்கும் - மாலைக்காலத்திலுண்டாம். குழற்கு - கூந்தலுக்கு. மாலை இளைக்கும் - இரவு தோல்வியடையும். இடந்தோறும் - இடங்களெல்லாம். எவுநீர் - செலுத்துகின்ற சலத்தில், பழநத்து ஓட்டம் - பழையசங்கிறேடுதலும். பழனம் தோட்டம் - வயல்களும் பூந்தோட்டங்களும் (உள்ளன). ஆவிவாய் - தடாகத்தில். கமடம் மேயும் - ஆமைகள் திரியும். அறங்கள் வாய்க்க - தருமங்கள் கிடைக்க. மடம் - மடங்களில். அடு அப்பால் அன்னம் - காய்ச்சுகின்ற அந்தப் பாலும் சோறும். ஏயும் - பொருந்தும். துறைதொறும் - நீர்த்துறைகளெல்லாம். தாவிய மடப்பால் அன்னம் - சிறைகளையுடைய இளைய வெள்ளிய அன்னப் பறவைகள் (உள்ளன).

49. கோடு ஆர்க்கு - விளைந்த சைபதோறும். புயல்கள் உலாவும் - மேகங்கள் சஞ்சரிக்கும். கோடரம் - குரங்கு. மாதங்கம் - பெரிய அலைகள். கலனகள் - ஆபரணங்கள். மாதர் அங்கம் - பெண்கள் அவயவம். சங்கம் - புலவர் கூடுமிடம். சங்கம் - சங்கு. கால் ஆறு பொரும் - வாய்க்காலும் நதியும் மோதும். காலாறு - வண்டு.

50. அலை - அலைதல், (திரை). அவி - நெய், (அவிதல்). உலை - நெகிழ்தல், (பொன்னுருக்கும் உலை). உடை - பிளவு, (உடுத்தல்). மலை - சூழ்தல், (மலை). மஞ்சு - மேகம். வளை - வளைதல், (சங்கு). தனு - வில். கலை - கோடசகலைகள், (கல்விநூல்). கரை - வரம்பு, (கரைத்தல்). படும் என்பதெல்லாவற்றிற்கும், உண்டாமெனக்கொள்க.

51. தளவு - முல்லையரும்பு. முருகு - வாசனை. முருகு என்பது முருவென விகாரமாயிற்று. தாயமை முதலியவற்றின் பின்னின்ற ஆகாரம், ஆக என்பதின் கடைக்குறை.

52. பண்ணவர் - முனிவர். கடவுளர் - தேவர். கன் அகன் - இடமகன்ற. எளிது ஆமே - இலேசு ஆகுமா. (ஆகாது)

53. சொற்றும் - சொன்னோம். பா - பாட்டு.

மூன்றாவது :—திருநகரச் சருக்கம்.

1. அகிலம் - உலகம். அகிலலோகமும் - எல்லாவுலகமும். தவிர்படு - ஒழியப்படுகின்ற. பருப்பதம் - மலை. புரிசை - மதில். அகப்பா - அகழி.

2. நேமிக்குன்றம் - சக்கரவாளகிரி. புறம் - சுற்றுப்பக்கம். ஞாயில் - மதில். வாமம் - அழகு. குன்று - மலை. எமக்குன்றுசூழ் - மகாமேருமலையைச் சூழ்ந்த. நாற்கிரி - (மந்தரம், கந்தமாதனம், விபுலம், சுபார்சுவம் என்று) நான்கு மலைகள். எண் குலக்கிரி. அட்டகுல பருவதங்கள்.

3. இஞ்சி - கோட்டை. துங்கம் - தங்க, மஞ்சு - மேகம். மைந்தர் - ஆடவர். அஞ்சனாதம் - பஞ்சவாத்திய முழக்கம்.

4. நாட்டம் - கண். அனேகன் - குபேரன். தேட்டம் - செல்வம். திருநிதி - சங்கநிதி, பதுமநிதி. திருவை - உமாதேவி. காமக்கோட்டம் - ஆசையுடைய கோயில், பெரும்பான்மை நீட்டம் - பெருந்தன்மையினீட்சி.

5. நித்திலம் - முத்து. நெற்றி - திண்ணை. நிரைத்தன - வரிசையாகச் செய்யப்பட்டிருப்பன. கோலும் - பன்றி. ஏதிமம் - அன்னம். தேவர் - தேவராகிய பிரம விஷ்ணுக்கள். தாலம் - பெரிது.

6. முந்தை - பழமை. முது - பெரிய. விந்தை - விநோதம். சிந்தை வேதச்சிரூர் - மனத்தின்கண் பிரக

க்கி யெழுதல்.

32. முத்தழல்-மூன்று அக்கினி; காருகபத்தியம், தெக்கணாக்கினி, ஆகவநீய மென்பன. யாகமென்பதனை; பிரமம், தெய்வம், பூதம், மானுடம் என்பவற்றோடுங் கூட்டுக. மேதகு-மேன்மை தங்கிய. அறுதொழில் - ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல். புரி - விரும்புகின்ற. நூற்செல்வர் -பிராமணர்.

33. மறைமூலமது - பிரணவமந்திரம். முறை - ஒழுங்கு. காலமுற-உரியகாலத்தில். உணராது -உணராமல். உணர்ந்து - (சிவனைத்தை) அறிந்து. சிவநூற்செல்வர் - ஆதிசைவர்.

34. உழையர் -பக்கத்திருக்கும் சிரிகள். காப்பு - காவல். வேள்வி வேட்டு - யாகத்தை விரும்பிச் செய்து. சாலை - (போசன) சாலை. தமர்கள் -(தமது) சுற்றத்தார். ஒற்று - தூது. துயிலிடத்தும் - நித்திரையினும். மனுநூற்செல்வர் - மநுதருமநூலுணர்ச்சியுடைய மன்னர்.

35. புங்கம் - உயர்வு. தொட்டு-தொடங்கி. பிங்கலன் - குபேரன். சருகூலம் - பொன்னறை. ஒருகூலம் - ஒப்பற்ற கடைவீதி. மரபு - குலம். கலி - தரித்திரம். கட்டு - களைந்து. மேழிச்செல்வர் - வேளாளர்.

36. நன்னெறிநிலம் - சன்மார்க்கமாகிய பூமி. வாய்மை - சத்தியம். தெளித்து - விதைத்து. பாய்த்து - பாய்ச்சி. விளைக்கும் - (அவ்வேளாளர்) விளைவிக்கும்.

37. மாமணி - மாணிக்கம். மாடம் - வீடு. மாளிகை - அரண்மனை. உறுப்பு - அவயவம். கோமதியம் - ஆகாயத்தில்வருஞ் சந்திரன். காமரு - அழகிய. கடி - காவல். மேகலை-மேகலாபரணம். பூமகளார் - சரசுவதி, இலக்குமி. பொன்னகரம் - சுவர்ணலோகம்.

38. இடைவிடார் - நடுவில்விடாத கிருகஸ்தரும், சந்நியாசிகளும். வெறுக்கை - செல்வம், (வெறுத்தல்). பதம் - இடம், (பதவி). கொண்மூப்பொழியும் - மேகநீர்பெய்யும், (கொள்கின்ற விருத்தநீங்கும்). குதவஞ்சகம், (சூதாடுகருவி). எறிவார் - கைவிடுவார். அல்லவர் - தீயவர், காமுகர். எல்லவர் -சகலமானவரும். இரவலரை -இராத்திரியில் பழிமொழியை, (யாசகரை).

39. பன்னகர்பதி - நாகருலகம். புத்தேள் - தேவர். முனிவர் சித்தர் கின்னரர் -தேவர் பிரிவிலுள்ள ஒவ்வொரு வகுப்பினர்.

40. பன்னகசயனறூடு - வைகுந்தலோகம். நகர்சுவர்க்கம் - நகராய தெய்வலோகம். ஆமே - ஆகுமா. (ஆகாது)

41. இறையவன் - அரசன். துவர் - பவளம். சரிதை - சரித்திரம்.

நான்காவது:—புநாளைவாசலமற்றுச் சதக்கம்.

1. விரை -விரைதல், (வாசனை). தாமரை - தாவுகின்ற ஆண்மான், (தாமரைப்பூ). கலைமான்-பெண்மான், (சரஸ்வதி). முருகுஉயிர்த்து - மணந்து, நால்வாய்-தொங்கியவாய், (நான்குவாய்). உறவாரண முழங்கி - மிக யானைகள் முழக்கஞ் செய்யப்பட்டு, (உறவாகிய வேதங்கள் முழங்கச் செய்து). அரசு அலமந்த பூந்தண்கமண்டலமசைத்து - அரச மரத்திற் பொருந்திய பூக்களுள்ள கிளைகளான் மேகமண்டலத்தை யலைத்து, (தலை மையமைந்த பொலிவினையுடைய தண்டத்தையுங் கமண்டலத்தையு மசைத்து). புரை - குற்றம். முழங்கி - பிறவினைப்பொருளில் வந்த வச்சம்.

2. வெயிலைசுந்து - மூக்கில்களிசைந்து, (மூக்கிற் குழலினிசையைச்செய்து). சுரப்புடைப்பாலும் - பாலை நிலத்தினிடத்தின்பக்கத்திலும், (சுரத்தலையுடைய பாலையும்). கலவி செய்து - கலத்தலைச்செய்து, (திருட்டுச்செய்து). காற்றலையுண்டு - தென்றற்காற்றிற் கலந்து, (காவிலே விலங்குஞுண்டு). கா-காவலையுடைய. இளங்கன்றுல்விளவெறிந்து- சிறுமரங்களாகிய ஆலமரங்கள் பிளக்கும் படி மோதி, (சுமத்தலையுடைய பசுவி னிளங்கன்றுக்குட்டியால் விளாமரத்தைப்பிளந்து). குருந்தமேலிவர்ந்து -குருந்தவிருக்ஷத்தின் மேலோங்கியெழுந்து. ஆழிமால் - சக்கரத்தையுடைய விஷ்ணு. சாதாரணமான சிலேடைக்குப் பொருள் எழுதவில்லை. மேலுமிதுவே.

3. வான்தரு - பெரிய விருக்ஷங்கள், (பஞ்சதரு). வச்சிரம்-தருப்பை, (வச்சிராயுதம்). அரமகளிர் தெய்வப் பெண்களைப்போல், ஆடலின்-அசைதலால். சூழ்குலாவனம் - சூழ்ந்துவிளங்காநின்ற நைமிசாரணியம்.

4. எழிலிநீர் - மேகவருஷம். மாதவி - குருக்கத்தி. கூவிளம் - வில்வம். வகுளம் - மகிழமரம். சூதமேல் - மாமரத்தின்மேல், (சிவபிரானுகிய) குறிமேல். கன்னி - அழிவின்மையுடைய.

5. குசை - தருப்பைப்புல். நிறையழுத்தது - மாட்சிமை முதிர்ந்ததாகிய. நேமியினகத்ததாய் - சக்கரத்தினுள்ளிடத்ததாகி. நரம்பி நறைபழுத்தது -நிறைந்து தேன்கனிந்தது.

6. மருங்கில் - பக்கத்தில், (இடையில்). காவி - செங்குவளை, (காவிக்கற்றோய்ந்த வஸ்திரம்). நாவி - கஸ்தூரி.

7. தேன் - பெண்வண்டு. தும்பி - ஆண்வண்டு. வேங்கை - புலி. ஒருதலை - ஓரிடத்தில். துயில்வது - நித்திரை செய்யப்படுவது. கானநாடகம் பயிறர - காட்டினிடத்து நடனத்தைச்செய்ய. கானம் - இசை.

8. சீலமூன்றின்மேல் - குணமூன்றிற்கதீதமாகிய கடவுளை. மூன்றுகுணமாவன - இராசதம், தாமதம், சாத்துவிகம் என்பன. மூன்று - சாலோக, சாமீப, சாரூபம். மேற்கதி - சாயுச்சியம்.

9. செய் - வயல். விதி - செய்வனவற்றைச் செய்தல். சமிதை - ஓமவிறகு. எறிந்து - விதைத்து. வேழக்கை வருபருமை - யானைக்கை போலும் பருத்த. (மிகுதியாகஎன்றபடி) சைவவைதிக வேளாண்மை - ஆகம சம்பந்தமும், வேத சம்பந்தமுமாகிய விவசாயத்தையுடைய. சத்திரமகம் - சத்திரயாகம். அஃதாவது: எல்லாருக்கும் பொதுவாகச்செய்யும் ஒருயாகம்; இதனால் வரும்பயனை யெல்லாரும் பாகித்துக்கொள்வார்கள்.

10. பரிவு - அன்பு. கண்டுளார் - (தன்னைத்) தரிசித்தவர். கதி--அதிட்டம். விதி - காலம்.

11. பொருந்துஅவச்சுதர் - பொருந்துகின்ற பாவமாகிய தேர்ப்பாகர். புலன் - அறிவாகிய. மகத்தேர்கடவி - மான்மியமுள்ளரதத்தைச் செலுத்தி. அச்சுதர் - அந்தச்சுதமுனிவர். வருடி -(சூத முனிவர் பாதங்களைப்) பற்றி. தவச்சுதம் - தவமாகிய மாமரம். பேரிசை - பெரியபுகழ், (பெருமையுடைய ஓசை). குயில் மாமரத்தைச் சார்ந்திருப்பதியற்கை.

12. அருக்கியம் - முனிவர்க்குச் செய்யுமுபசாரம். வாசனைமுகூர்த்தம்-வசித்த விசேடம். நேசனை-அன்புடைய சூதமுனிவரை.

13. பண இயல் - சீரியன்ற. பதிநூல் - கடவுள்நூல். எண் இயல் - எண்ணத்தில் பொருந்துகின்ற. இலக்கம் - இலக்ஷங்கிரந்தம். உவட்டாது-வெறுது.

14. அருநோய்தீர்ப்பான் - வருத்துகின்ற (பிறவிப்) பிணியைத்தீர்க்கும் பொருட்டு. ஓதி - உச்சரித்து. மூலம் - பிரணவம். வித்து - (அப்பிரணவந் தோன்றுதற்கிடமாகிய) விந்தை). அஃதாவது: சிவபிரான் றிருவாக்கு. தவிர்ந்திலம் - (அப்பிறவி நோய்) நீங்கிலம். பதிமேற்றுரும் - நகரங்களுக்குள் மேன்மையுடையதாகும்.

15. தவப்பூ - தவமாகிய மலரிலுண்டாகும். இன்பத்தேன் - சிவானந்தமது. சிவரகசியம் - சிவபிரானுடைய அந்தரங்க ஸ்தானம்.

16. நூற்குரியர் - நூல்கேட்டற்குரியோர். முன்னவர் - முதன்மையானவர். நாலிருவர் - (முற்கூறிய) அறுவர். நால்வர் - (முதன்மாணுக்கரும் இடைமாணுக்கருமாகிய) நால்வர்.

17. அதிகர் - மேம்பட்டவர். பதிமுதன் மூன்று - பதி, பசு, பாசம்.

18. சங்கிதை - சரித்திரம். குமரதேசிகன் - முருகக்கடவுள். கும்பசம்பவன் - அகத்தியமுனிவர்.

19. வகைமை - பிரிவு. அகத்தியசங்கிதை - (மேற்பாட்டிற்கூறிய) குமாரசங்கிதை.

20. விரி - விரிந்த. கடடம் - யானைகட்டுமிடம். கம்பகும்பக்களிறு - கட்டுத்தறியிற் கட்டப்பட்ட மத்தகத்தையுடைய யானை. பிளிறிட - முழங்க. வேங்கையுரிகூட - புலித்தோலுடன். புரிகூடும் - விரும்புதல்சேரும். முதலா - ஆதியாக.

---

ஐந்தாவது:—திரிகூடமலைச் சருக்கம்.

கின்னரர் - யாழ்வாசித்தலிற் சிறந்தோர். கானம் - இசைப்பாட்டின்றொலி. விஞ்சையர் - வித்தியாதரர். பண் இசை - பாட்டிற்பொருந்திய.

2. முழை - குகை. உழை - இடம். கழை - மூங்கில். ஆலி - மழைத்துளி.

3. பந்திபாய்முகில் - வரிசையாகப் பாய்கின்ற மேகத்தை. மதமா - யானை. உந்தி - காட்டாறு.

4. தேனயாறு - தேனொழுகிய நதி தேன என்பதில், அகரம் - சாரியை. கைமலை - யானை. தானம் - மதம். ததைவன - நெருங்குவன. சோணை - சோணைநதி. யமுனை - யமுனைநதி.

5. செருவில் ஆர்த்து எழுதேன் - சண்டையில் முழங்கி யெழுகின்ற வண்டுகள். பொர - (ஒன்றோடொன்று) மோத. இருல்தேன் அருவி ஆர்த்திட - தேன் கூட்டினின்றுந் தேனொகிய அருவி முழங்கிப் பாய. ஐவனம் - மலைநெல்விடங்கள். ஆர்த்திடும் - நிறையப்படும். இருவி - தினை. (ஆகுபெயர்) ஆர்க்கும் - நிறைக்கும். ஆர்ப்ப - முழங்க. குரல்பரந்து ஆர்க்கும் (அக்குருவிகளை யோட்டுமாதர்) இசைவியாபித்து முழங்கும்.

6. கமுகநெற்றி - பாக்குமரத்தின் உச்சியில். கறிபடர் - மிளகுக்கொடி படர்கின்ற. முன்றில்வாய் - முற்றத்தினிடத்தில். விமு - மிகுகின்ற, விமு - விம்முஎன்பதனிடைக்குறை. நேர்க்குநேர் - சரிக்குச்சரி. சுரமாதர் - தெய்வப்பெண்கள்.

7. படிகப்பாறை - பளிங்குத்தற்பாறையில். பந்தியா - வரிசையாக. ஊர் - ஊர்ந்து செல்கின்ற. மணிச்சுடிகை - இரத்தினங்களையுச்சியிலுடைய. பாந்தள் - பாம்புகளை. உற்கை - தீக்கொள்ளி. காய்வன - (குளிர்)காய்வன.

8. பார்க்கு - பூமிதேவிக்கு. நகில் எழும்புகையென்ன - கொங்கை வளர்தல்போல. கனிகெழு - மிகப்பொருந்திய. பொருப்பின் - திரிகூடமலையினிடத்து. அகிலெழும் புகையும் - (கூந்தலுக்கூட்டும்) அகிற்கட்டைப் புகையும். புனத்து - காட்டில். மிகில் - அதிகப்பட்டிடத்து. வேடர் அடு - குறவர்வெட்டிய. அகரு - அகின்மரம். சாந்தம் - சந்தன மரங்களில். எழும்புகையும் (அவ்வேடர் வேவித்தலால்) உண்டாகும் புகையும். முகில் எழும்புகைபோல் - மேகங்கள் எழும்புதல்போல. நாட்டம் - கண். முகிழ்ப்பர் - மூடுவர்.

9. மேலை - பழைய. வரையார்ப்பு - மலையிலுண்டாகும் எதிரொலி. உரும் ஒலி - இடி முழக்கத்தை.

10. மழை - மேகம். மருப்பு - கொம்பு. கழை - மூங்கில். எனக்களிறு - ஆண்பன்றி. விழைதர - (யாவரும்) விரும்ப. ஒளிரும் சாரல் - விளங்கும் மலைப்பக்கம்.

11. துதை - நெருங்கிய. இருவேலை - (பகலிரவாகிய) இரண்டுகாலம். தவர் - முனிவர்களுக்கு.

12. மாகம் - விண்ணுலகம். மோகம் - ஆசை. நாடகம் - நடனம்.



13. கடாவும் - செலுத்தும். தலைகள் - இடங்களில். தாவும் - தாவுகின்ற - தலைமதி மானின்மேல் - பூரணசந்திரனிடத்துள்ள மான்மேல். கலைகள். மான்கள். ககனத்துமேடை - ஆகாயத்தை யாகிய மேனிலத்திலுள்ள. நிலைகள் - நிலைகளிடத்து. நிரைவரையடு - வரிசையாகிய மலையாடுகள்.

14. கோலம் - அழகு. தாலம் வானம் - பூமியிலும் ஆகாயத்திலும். தடவ - தேட. (வழக்கு)பெறீர் - செய்யாதேயுங்கள். கூவுதல் - அழைத்தல்.

15. அண்டர்தரு - தேவர்கள் கொடுக்கின்ற. மாருதம் - காற்று. உகும் - உதிரும்.

16. சாலம் - கடம்பு. ஆ - ஆச்சா. நறவம் - குங்குமம். பணைசாதி - பருத்தகிளைசண்பகம். சால - மிக. மாவண்டுகளும். நற - தேனும். வம்புலாஞ்சினையும். அணை - பொருந்திய. சாதி - (வினைச்) சாதி விருக்ஷங்கள். எலம் - ஏலச்செடி. ஆரம் - சந்தனம். இலவங்கம் - கிராம்பு. நாறும் - மணக்கும். அங்கண் - அவ்விடத்து. எல் - பொருந்திய. அம் - அழகையுடைய. ஆரம் - ஆத்தியும். இலவு - இலவமரமும். நாறும் - உண்டாகும். அங்கணும் - என்பது திரிபுநோக்கி - அங்கநாறுமென நின்றது. மேல்வருவனவுமது. ஏ - நான்கும் - அசைகள்.

17. கவிப்பால் - பாட்டுக்களிடத்துள்ள. எழுகானம் - சத்தசுரத்தையுடைய. தும்பி - வண்டுகள். கவிப்பால் - வனவோடு. எழ - எழுந்துவர. கடாம் - மதங்களை. கடாம் - செலுத்துகின்ற. கானத்தும்பி - காட்டுயானைகள். தானத்து - சுவர்க்கலோகத்து. உம்பர்கள் - தேவர்களுடைய. இல் - வீடுகளை. தொடும் - தீண்டும். தாவலிய. குகைத்தானத்து - மலைக்குகையிடத்தினின்று. உம்பர் - மேலிடத்துள்ள. களிற்றொடும் - அயிராவதயானையோடும். தாக்கும் - மோதும்.

18. கானம் - காட்டிலுள்ள. மடங்கலும் - சிங்கங்களும். கனம் - மேகத்தை. (யானையென்று நினைத்து)உழக்குவ - மோதுவன. கானம் - இசைப்பாட்டு. மடங்கலும் - முழுமையும். கனம் - மிகுதியாக. முழக்குவ - முழக்கப்படுவன. வனம் - காட்டை. அடுத்து - சமீபித்து. உறை - தங்குகின்ற. மா - கரிய. கயமொன்றுமே - யானைகள் மாத்திரமே. வனம் - நீரையுடைய. மடு - ஆழமாகிய. துறை - நீர்த்துறைகளையுடைய. மா - பெரிய. கயம் - குளம், சுனைகளில். ஒன்றும் - பொருந்தும். மடங்கலுமென்றதும் மை, உயர்வு சிறப்பு.

19. தினம் - நாடோறும். வன் - வளர்ந்தங்கிய. கள் - தேனொழுகுகின்ற. மலர் - விரிந்த. வனசமலர் - தாமரைப்பூ. வனமாதரார் - நீரமகளிர்களுடைய. துளக்கும் - பிரகாசிக்கும். முகத்தலம் - முகத்தினிடத்தை. காட்டும் - காண்பிக்கும். அதில் - அத்தாமரைப்பூமேலுள்ள. வண்டினங்கள் - வண்டுக்கூட்டங்கள். கண்(காட்டும்) (அம்மாதர்களுடைய) கண்களைக்காண்பிக்கும். கண்டு - (இவற்றைப்) பார்த்து. உளக்கும் - (பார்ப்பவருடைய கண் ணுக்கன்றி)மனத்திற்கும் உவத்தல் - மகிழ்ச்சியை. அம் - (அம்முகங் கண்களுடைய) அழகு. காட்டும் - காண்பிக்கும். ஏ - இரண்டும் அசைகள். துலக்கும் என்பது, ளகரவொற்றுமையால் துளக்குமென்றாயிற்று. உளக்குமென்பதில், அத்துச்சாரியை கெட்டது.

20. மா - அசோகு. இருப்பை, - (இசைவழக்கில் இலுப்பையென்பர்) மகிழ் -, தரு - தேவதாரும். வன்னியே - வன்னி விருக்ஷங்களுமே. (அடுத்த). மா - மாமரத்தில். இருப்பை - இருந்தலை. மகிழ்தரு - சந்தோஷிக்கின்ற. வன்னி - கிளிகள். நாவின் - நாவால். இனித்த - மதுரித்த. வாசகம் - வார்த்தைகள். நவிற்றுவ - பேசுவன. நாவி - கஸ்தூரிப்பூனை. நித்தம் - தினமும். வாசகம் - வாசனையை. நவிற்றுவ - செய்வன. எனவென்பதில் ககரத்தைப் பிரத்தி

யேகமாக்குக. வாசமேயென்று மொருபிரதியிலிருக்கிறது. ஏ - அசை.

21. கோடரம் - குரங்குகளும். குயில் - குயில்களும். நாடும் - விரும்பும். குயின் - மேகம். ஆடு -(வந்து) அசைகின்ற. குலமாக்கோடரம் - நல்ல சாதி மரங்களையுடைய சோலை. குலமயில் ஆடு அரங்கம் - கூட்டமாகிய மயில்கள் நடிக்கின்ற சபை(ஆம்). அறையும் - (அம்மயில்களாடுதற்கியையும் வாத்தியம்போல) முழங்கும். அருவி - அருவிகளை. மருவி - பொருந்தி. ஆன் தரங்கம் -(அவ்வருவியா)லாளப்படும் அலைகள். மறையும்-(அவ்வருவியில்) அடங்கும். குரங்குகளுங் குயில்களும் விரும்புஞ் சோலையெனக் கூட்டுக. ஏ இரண்டும்-அசைகள்.

22. வானர் - வானுலகத்திலுள்ளவராகிய தேவர்களுடைய. அம்பு அயில் - பாணங்களும் வேல்களும் வைத்திருக்கும். மா - பெரிய. பல - அநேக. இல் - வீடுகட்கு; ஆயுதசாலைகட்கு. மேல்—,(உயர்ந்த) வானரம் - குரங்குகள். பயில் - தங்குகின்ற. மாவில் பலவின்மேல் - மாமரத்தினிடத்தும் பலா மரத்தினிடத்தும். வால் நரம்பு - வெள்ளிய நரம்பும். ஐ - அழகும். இன் - இனிமையுமுடைய. மையில் - குற்றமில்லாத. யாழ் - யாழோசையை. மா - வண்டுகள். செய - செய்ய. வான - பெருமையுடைய. ரம்பையின் - தேவரம்பையைப்போல. மயில் ஆலும் - மயில்கள் நடனஞ்செய்யும். மயில் - போலி. ஏ - அசை.

23. பூண் தவாது - ஆபரணங்கள் நீங்காது. புணர் - நெருங்கிய. முலை - கொங்கைகளையும். ஆர்நகை - நிறைந்த மகிழ்ச்சியையும். பூண்ட - பொருந்திய. புணர் (தங்கள் நாயகரைச்) சேர்ந்த. முலையார் - கற்புடைப்பெண்கள். வாதுபடார் - சண்டைசெய்யமாட்டார்கள். ஆண்டு - அவ்விடத்து. அசோகம் - அசோகமரத்தின். அமர் - தங்கிய. அருநிழல்வாய் - அரிய நிழலிடத்தை. அநுபவித்து. அசோகம் - சோகமின்மையை. அமரரும் - தேவர்களும். எய்துவார் - அடைவார்கள். முலை-கற்பு. இடைகுறைந்து முலையெனநின்றது.

24. மன்றல் - வாசனை. அயர் - செய்கின்ற. தலைய - தலையிலுள்ள. மின் - மின்னல்போலும். வியன் - பெருமை. தன்தலை - தன்னிடம்.

25. ஆரும் - எல்லாரும். கயிலை வடமலை - கயிலாசமாகிய வடக்கின்கணுள்ள மலை. தெற்றுக - தெளிவாக.

26. பூவருக்கம் - பூமியின்பிரிவு. புவனம் - (மற்றை) யுலகம். வருக்கை - பலாமரம். மூலம் - காரணம்.

27. தெய்வம் -கடவுள், சிவபெருமான். முத்திரை - அடையாளமிட்ட. காவென - சோலையென்று. அளி - வண்டுகள். படா - உட்பிரவேசியாத. கைவசப்பட - கையினிடத்தகப்பட. தகைந்து - தடுத்து. சாதிறல் - மகரந்தப் பொடிகளால். நீறுட்டி - விபூதி தரித்து. மைவனத்து - கரியமேகத்தின்கண் - உறைவசிக்கும். நாள் - நக்ஷத்திரம். கோள் - நவக்கிரகம். வான் - மேகம். வானோர் - தேவர். சைவமுத்திரை - குலக்குறி. சாத்தும் - அணியும். முத்தலைக்கிரி - மூன்று சிகரத்தையுடைய மலை. தெய்வமுத்திரை - சிவபிரான் சிவந்த நிறம். ஒருவரிட்ட முத்திரையை யுடைத்து உட்பிரவேசிப்பது முறையன்றாகலின், அளிபடாவென்றார்.

28. மறைப்பது - திரோபவம் செய்வது. மேல்விளையாட்டு -(இதற்கு) மேலே செய்யப்படும் அநுக்கிரகம். ஆன்ற - நிறைந்த. முறை - கிரமமாக. கணிதம் - கணக்கு. சுடர் - சுயம்பிரகாசச்சோதி.

29. சமைந்த - அமைந்திருந்த. மும்மலம் - ஆணவம், மாயை, கன்மமாகிய மலங்கள். ஒட - நீங்க. செம்மை முதன்மூக்கடர் - சிவப்பு, கறுப்பு, வெண்மையாகிய சோதி. (திரிமூர்த்திகளென்றபடி) எறிப்பது - பிரகாசிக்கப்படுவது. சென்னசஞ்சிதம் - பிறத்தற்கேதுவாய்க் கட்டுப்பட்டிருக்கும்வினை. மேய-பொருந்திய. உம்மை - சென்றபிறப்பு. இம்மை - இப்பிறப்பு. உயங்கு - வருந்துகின்ற. உ - இந்த. பவநோய்க்கு - பிறவியாகிய வியாதிக்கு. மும்மையெய் - மூன்றாகப்பொருந்திய. மணி - கடவுள். தம்-என்றது ஆன்மாக்களை.

30. பிரிவாற்றுமே - பிரிவைச்சகியாமல். கொடுமுடி - சிகரம்.

31. கவனம் - கலக்கம். நான்முகநாரணப்பிரளயகற்பகாலம் - பிரமாவிஷ்ணு முதலியோர்யாவரு மழியுங்காலம். எவனம் - யௌவனம். அந்தரம் - மத்தியதேசம். பவனம் - சுவர்க்கம். தலையாக - தலைபோல. எடுத்து - தாங்கி. அருள் - காத்தருள்கின்ற.

32 பொன்மேகலை - பொன்மயமாகிய சிகரம். தெக்கணம் - தென்றிசையில். வடசயிலம்-மகாமேருமலை.

33. புதுமை - (முன்மலைகளுக்கில்லாத) அற்புதம். தலைமலை - முதன்மையானமலை. தென்மலை - பொதியமலை. திருமலை - சிறந்தமலையாகிய.

34. அம் ஐ எழுத்து - அழகிய பஞ்சாக்கரம். உலகை - உலகிலுள்ளாரை. அருள் செய்வார்க்கு - இரட்சிப்பவருக்கு. மா - கரிய. மையெழுத்து - மையூசிய அக்கரங்களில். ஊடாடா - கலவாத. மறை - வேதம். (எனவே எழுதக்கூடாதவேதமென்பதாயிற்று.) முதற்கிடந்த - முன்னிருந்த. ஊமையெழுத்தரு - பிரணவமந்திரவடிவம். சயிலம்-மலை. சேமவெழுத்து - உள்வைப்பெழுத்தாகிய. மூன்றின் - அ, உ, ம் என்னு மூன்று அக்ஷரங்களின். திரிகூடம் - மூன்றாகக்கூடிய சிகரங்கள். ஊமையெழுத்தாவது விந்துநாதவடிவாகிய பிள்ளையார் சுழியென வழங்கும் உ-வென்று சிலர் கூறுவர். அது - சண்டைக்குப் பொருந்தாதென்க.

35. ஒரு - ஒப்பற்ற. மூன்று தொடல் ஆகி - (படைத்தல், காத்தல், அழித்தல் என்னும்) மூன்று விளையாட்டு உடைமையாக. கூடம்-சோலையில். மறைப்பீடம்-வேதாசனம். முதற்றேவியர் - சரசுவதி, இலக்குமி, உமை. மாடம்-கோயில். ஆகி, என்பது ஆக என்பதன்றிரிபு.

36. உணர்த்த - சொல்லிக்கொண்டிருக்க. (அஃதறிந்தும்) யானாமாட்டேன் - நான் (அஃதின்னதென்று சொல்ல) இசைவனல்லேன். முக்குணம் - இராசதமுதலியன. முற்செயல் - படைத்தல் முதலியன. புறச்சுட்டு மூன்றும், தவிர்வழிவந்தன.

37. அருவிப்பூமாலை - அருவியாகிய மலர் மாலை. வன்னி - அக்கினி.

38. முந்தையார்கதி - பண்டேயுள்ள ஆகாயகங்கை. முத்தலை வேலையும் - மூன்று தலையுடைய வேற்படையையும், (சூலாயுதத்தையும்). கோடு சசரமதி - வளைவாகிய குளிர்ச்சிதங்கிய சந்திரனை, (கோடீரமதி - சடையிலே சந்திரனை). குலத்தில் சாதியால். பெருமாட்டி தந்தை - பார்வதிபிதாவாகிய இமயமலை. (திரிகூடமலை)

39. தனமிசைந்து - முலைபோலப்பொருந்தி, (முலையை யநுபவித்து). பார் இடந்து - பூமியைத்துளைத்து—, வான் அளந்து - ஆகாயத்தை யளாவி, (வானுலகத்தை யளவுசெய்து). பொன்னை - சுவர்ணத்தை, (இலக்குமியை). மாமணியின் நிறம் - கரிய ரத்நத்தின் காந்தி, (பெரியகௌஸ்துப ரத்நத்தை யணியமார்பில்). ஏறி - எறப்பட்டு, (ஊர்ந்து). வாரி - நீர், (கடல்). தாமரைமலர் இலஞ்சிதனிற்பூத்து-தாவுகின்ற மான் விரிந்தமகிழமரம் தன்னிடத்துண்டாகி, (தாமரைப் பூப்போலும் கொப்பூழ் தன்னிடத்துண்டாகி). திகிரி - மூங்கில், (சக்கரம்). சங்கம் - செல்லமேகம், (சங்கு).

40. "உந்திமிசை வந்து" - எழுந்து மேல் வளர்ந்து, "(நாபிக் கமலத்திற் றோன்றி)." தடப்பாணியால் குவலயம் - தடாகத்திலுள்ள நீரால் நீலோற்பலமலரை, (விசாலமான கையால் நிலவலயத்தை). அம்புவனம் - மூங்கிற்காடு, (அழகிய சலம்). படைத்து - அடைந்து, (சிருட்டித்து). திசைமுகங்கள் - திக்கினிடங்கள், (நான்குமுகங்கள்). எண்கிரியின்வாகு - அட்டகுல பருவதங்களைப்போல அழகு. (அட்டகுல பருவதங்களைப் போலும் (எட்டுத்) தோள்கள்). பதுமம் - தாமரை. நிகர்காட்டும் - ஒப்பாகும். முருகு - வாசனை, அல்லது முருகக்கடவுள்.

41. பதிட்டை - பிரதிட்டை. அருவியுவரி - அருவியாகிய கடல். மைத்துளி, எதுகைநோக்கி மிக்கது.

43. குன்றினை - (திரிகூட)மலையை. முதற்கொண்டு - முதலாக.

44. மதம் - கருவம்.

46. முனிவர - முனிசிரேட்டரே. சரணம் - அடைக்கலம். மோசனம் - நீங்குதல். தனி - தனியாக. அரசை - அரசனை. கும்பசம்பவன் - கும்பத்திற் றோன்றிய அகத்தியர். தடத்தில் - தடாகத்தில்.

47. பாயிரமறை - (சகல)வரலாறுமுடைய வேதம். கும்பப்பன்னவன் - கும்பமுனி. குனிப்பில் - அளப்பில்லாத.

48. கொண்டல் - மேகத்தை. உவர்ப்பிடி - பெண்யானை. கோட்டுமா - ஆண்யானை. சுலவி - சுற்றி. கவளம் - (சோற்றுத்) திரளை; உண்டை.

49. தென்குணதிசை - தென்கீழ்த்திசை. பருகையில் - உண்ணும்போது. காதி - மோதி. கயம் - தடாகத்தில். கயம் - யானை.

50. கூலம் - புனற்கரை. குரை திரை - முழங்குகின்ற சமுத்திரத்தின். ஆலம் - விடம்.

51. மூலம் - ஆதியில். மூவடிவு - பிரம விஷ்ணு ருத்திரசொரூபம். காலயமனைப்போன்ற. கராம் - முதலையை.

52. மைதலை - கரியதலை. வானவ - தேவ. வேந்தன் - (இந்திரத்துய்மனாகிய) அரசன். அத்தலை - அந்தமுதன்மை.

53. பார் - பூமி. குடர் - குடல். அண்டம் - முட்டை. வேர் - வேர்வை. வாய் - இடத்தில். தோற்றம் - உற்பத்தி. எர் - எழுகின்ற. எழுபிறப்பில் - எழுவகைப் பிறப்பினுள். நீரின - நீர்வாழ்வன. பப்பத்து - பத்துப்பத்து. நிலை - தாவரப்பொருள்கள். ஆங்கு - அசை. ஊர்வன - ஊர்ந்துசெல்லுவன. யோனி - (ஆன்மாக்களுக்குப்) பிறப்பிடம்.

54. இலக்கம்(எண்பத்துநான்கு) இலக்ஷம். முச்செய்கை - மூன்றுசெயல்கள். பொன்னகர் - சுவர்க்கம். நிரையம் - நரகம். புவனமா - இடமாக. போகம்பொசிக்கும் - போகங்களனுபவிக்கப்படும். முயன்று - முயற்சித்து. முன்னது - சுவர்க்கபோகம். குறைவும் - சிறிதும். பின்னது - உலகபோகம். ஏற்றமும் - அதிகமும் ஆக - உண்டாக.

55. தாங்கரு - சுமத்தற்கரிய. பாவமிக்கான் - பாவத்தை யதிகமாகச்செய்த வொருவன். அது தொலைவின் - அப்போகமநுபவித்த முடிவில். அகற்ற - தள்ள. அந்தரம் - ஆகாயம்.

56. மஞ்சு - மேகம். தஞ்சு - பற்றுக்கோடு.

57. வரை - (திரிகூட) மலை. பருப்பதம் - (திரிகூட) மலை. சாரல் - அம்மலைப்பக்கம். சருக்கம் - பகுப்பாக. மேல் - பூருவத்தில். அரிக்கு - விஷ்ணுவுக்கு. கேண்மின் - கேளுங்கள்.

58. ஒன்றெனப் பொருந்தா அன்மா - ஒன்றென்று சொல்லக்கூடாத உயிரும். வேறுபிரிந்திடா அருள் - (இறையைவிட்டுத்) தனித்துநில்லாத சத்தியும். உற்பவத்தினென்றும் முட்புகுதா இறை - பிறவியிலெக்காலமும் புகாத சிவமும். (ஆகிய) மூன்றும் - முப்பொருளும். நீங்கா - ஒன்றைவிட்டுப் பிரியாமல். தொன்றுதொட்டு - பூருவந்தொடங்கி. அமைந்த - பொருந்திய. சுத்தசொரூபமே - சுத்த பஞ்சாக்கர (சிவய) வடிவமே. வடிவென்று - (இம்மலைக்குச்) சொரூபமென்று நினைத்து. மறைகள் மூன்று - இருக்கு, யசுர், சாமம்.



59. வெதிர் - மூங்கில். தாளராசி - முத்தின்கூட்டம். வலத்தால் - வலஞ்சுற்றிப்போதலால். கடுக்கும் - போலும். மதிவலி - அறிவாகிய கடினமுடைய. வலித்தல் - இழுத்தல்.

60. அராமணி - நாகரத்நம். செக்கர் - சிவப்புநிறம். உகுத்த - உதிர்த்த. வேய் - மூங்கில்.

61. முத்தர் - சீவன்முத்தர். கதி - பதவி.

62. குவிப்பு - தொகுப்பு. பாகம் - பகுப்பு. புராணவேள்வி - புராணமாகிய யாகத்தின். அவிப்பாகம் - தேவருணவு; அமுதம். செவி - காதினிடமாக. தவிப்பு - வருத்தம்.

63. ஆன்ற - உயர்ந்த. ஆண்மை - ஆளுந்தன்மையுடைய. மூன்றுரும் - மூன்றென்று சொல்லப்படுதலாகும். ஆன்ற என்பதில், அகரந்தொக்கது.

---

## ஆறவது:—திருக்குற்றாலத்தலமகிமைச்சருக்கம்.

2. வரம் - விசேடம். போந்து - வந்து. பரம் - மேல்.

3. கற்பம் - பிரமவிஷ்ணுக்கள் ஆயுள்முடிவுகாலம். பிரளயம் - யுகாந்தகாலத்தினிறுதிவெள்ளம். அநாதி - தனக்கொருமூலமில்லாதது.

4. புடைபடு - (அக்கடல்களின்) பக்கத்தேயுண்டாகிய. தீவும் - இடங்களையும். நேமிப்பிறங்கல் - சக்கரவாளகிரி. கால்சாய - தலைகுனிந்து விழ. வருந்திரன் - (மேலெழுந்து) வருகின்ற திரட்சி. ஒருங்குற - ஒன்றுபட. ஒருக்கி - ஒடுக்கி.

5. உகாந்தவாரி - பிரளயவெள்ளம். துரந்து - தொடர்ந்து. அண்டமூலத்து - பிரமாண்டத்தில். அங்கியின் சுடரான் - (வடவாமுக) சாக்கினியின் சுவாலையோடு. மண்ட - நெருங்க. கெழு - பொருந்திய. சண்டவாயு - பிரசண்டமாருதம். கனல் - அக்கினி. நிரந்தரித்து - பரம்ப. (செய்தெனெச்சம் - செயவெனெச்சமாயிற்று.) உலோகாலோகம் - எல்லாவுலகங்களும். நெடுவெளி - பெருவெளி, வெட்டவெளி.

6. ஆரும் - நிறையும். கனல் - அக்கினி. மால் - பெருமை. வரை - (திரிகூட) மலை. ஆறு - சித்திராநதி. குறி - அடையாளம்; (ஆக) குரோசம் - கூப்பிடுதூரம்.

7. மூவர்வீடு - (திரிபுரசங்காரத்தில் பிழைத்த) சுதன்மன், சுசீலன், சுபுத்தி என்னு மூன்று பேருடைய இருப்பிடம்.

8. கலையெலாம் - சகல அமிசங்களுடன். நிரம்பா - நிரம்பி. வெயில் - கிரணம். காந்தத்து - சூரியகாந்தக்கல்லில்.

9. அருவினர் - தேடினவராய். அரிது - இல்லை. பரிதிசந்நிதி - சூரியன்முன். காந்தம் - சூரியகாந்தக்கல்.

10. மேல - மேன்மையுடைய. மன்றம் - சிதம்பரம். பனை - பருத்த. கவர் - கவடு. துணர்த்த - பூங்கொத்துக்களையுடைய. கிளை - கிளைகள்.

11. ஏறி - ஏறப்பட்டு. வடபுலம் - வடபூமி. கடமுனி - அகத்தியமுனிவர். நிலைபெற - சமமாக. எடைக்கு - நிறுத்தலுக்கு. ஒருதட்டு - ஒப்பற்ற தட்டாகிய இமயமலைக்கு. எதிர் - சமமாகிய தட்டாக.

12. பொற்சக்கரம் - அழகிய வழுத்து. தமனியம் - பொன். சொர்க்கம் - முலை.

13. அரா - ஆதிசேடனாற் றுரக்கப்பட்ட. அகிலாண்டம் - எல்லா அண்டங்களும். மூலம் - ஆதி. பெரும்பான்மை - பெருந்தன்மை. என உரைக்கேனோ - என்று சொல்லுவேனோ.

15. வழிந்தெனை - வழிந்தொழுகின்றாற்போல. மஞ்சனசாலை - ஸ்நானஞ் செய்யுமிடம். நந்துவீதி - சங்கவீதி. சினகரம் - கோயில். பாதலம் - பாதாளவாயில்; பிலத்துவாரம். இது: அருச்சுனன் சம்புடம் பெறும் பொருட்டுப் பூசித்த சிவலிங்கத்தின் பக்கமே யுள்ளது.

16. ஆர்த்த - (விகாரம்) நிறைந்த. அண்டமுலமும் - அண்டங்களெல்லாந் தோன்றுதற்கேதுவாயுள்ள பராசத்தியும். கிளர்ந்தெனை - மேலெழுந்தாற்போலும். கிரி - திரிகூடமலை. தலை - உச்சியில். தீர்த்தம் - சித்திராநதி.

17. பொதும்பர் - சோலை. பேதாபேதம் - வேறுபாடும்; அஃதின்மையும்.

18. புலியூர் - சிதம்பரம்.

19. சிவமுரசம் - நாதமாகிய முரசவாத்தியம். ஈண்டு நாதமென்றது - முப்பத்தாறுந் தத்துவத்தை; அத்தத்துவமுஞ் சிவமு மபேதமாயிருத்தலாற் சிவமுரசமென்றார். இதனை 14-ம் பாட்டில் நாதமாகியமுரமென்பதனானு முணர்க. இறை - சிவபிரான். திருமந்திரம் - பஞ்சாக்கர மந்திரத்தை. (திருக்குற்றாலத் தெல்லையாகிய பஞ்சக்குரோசத்தி லிறந்தவர்) செவியில் - காதில். இசைக்குமாற்றால் - உபதேசிக்கு முறையால்.

20 அத்தலை - அந்தத் தலைமையாகிய. நால்வகையில் - கேட்டல், காண்டல், இறைதிருமந்திரஞ் செவியி லுபதேசித்தல், நினைத்தல்களால்.

21. வன்னிதானம் - அக்கினிஸ்நானம்; மயானத்தில் அக்கினியிற் றோய்தல். புகுமுன் - அடைதற்கு முன்னர். மானததானம் - மனத்தாற் செய்யப்படுவதாகிய மந்திர ஸ்நானமும். சென்னிதானம் - தலையிடம். தொடுத்து - தொடங்கி. திகழும் - விளங்கும். இருவகைத்தானம் - வாருணஸ்நானமும், பஸ்ப ஸ்நானமும். தோயமாட்டாரேனும் - படியமாட்டாதவரானாலும். தேவதேவன் சந்நிதானமுன் - சிவபெருமான் றிருவாயில் முன்னர், இரண்டு சதுட்டயத்தால். எட்டினால். எட்டெனபது, அட்டாங்க நமஸ்காரஞ்செய்யும் எட்டு அவயவம். [சதுட்டயம் - நான்கு] எந்தானம் - எந்த ஸ்நானமும். நிதியும் - பொன்னும். இகவார் - நீங்கார்.

24. வேதாளம் - பூதங்கள். ஒருவெளி - ஒப்பற்ற ஆகாயத்தில். பாதாள வாய்தல் - பிலத்துவாரம். பணியரசு - ஆதிசேடன். மா - பெருமை. பயிற்ற - அடிக்க. (தாற்பரியம்) வானோர்பேரி - தேவதுந்துமி. ஆதாளி - முழக்கம்.

25. ஆதாரம் - மூலம். கருவூர் - சனனபூமி. துருவபதம் - துருவசக்கரம். ஆதிகணபதி - மூலவிநாயகர்.

26. புவலோகம், சுவலோகம் - பூலோகத்தின்மேலுள்ள உலகங்கள். சத்தியலோகம் - பிரமனுலகம். மாலுலகம் - வைகுந்தலோகம். வரம் - விசேடம்.

27. சீ - விஷம். கண்டம் - கழுத்து. சாயல் - அழகு. கயிலாதி - மலைமுதல். சங்கக்கோயில் - சங்கவடிவமாகச் செய்யப்பட்ட ஆலயம்.

28 கடவுள் - தெய்வத்தன்மை பொருந்திய. காண்பான் - காணும் பொருட்டு.

29. பொங்குமாகடல் - ஒருதீர்த்தம்; இஃது: அருவிவீழுமலை யடிவாரத்திலுள்ளது. கடவுள் - தெய்வத்தன்மையுடைய. பூட்டாவில் - (அருவியிலே ஸ்நானஞ்செய்வார் கண்ணுக்குப் புலப்படும்) இந்திரதநுசு. தாணுமாலயத் தொட்டில் - திரிமூர்த்திகளுங் குழந்தைகளாயிருந்து விளையாடிய தொட்டில்; இஃது: ஆலயத்திலுள்ளது. ஆதிசத்தி - பராசத்தி. வேதக் குறும்பலவு - வேதமாகிய சிறிய பலா விருக்ஷம். நயப்பு - விருப்பம்.

30. பவர்க்கம் - நரகம். வசந்தம் - தென்றல். முன்றில் - முற்றம். பாக்கம் - நகரம்.



31. முனிக்கு - அகத்தியமுனிவருக்கு.

32. பற்றுத பிறை. மூன்றாம்பிறைச் சந்திரன். கடிகை - ஒருநாழிகை.

33. பழையர் - கட்குடியர். மூவர் - திரிமூர்த்திகள். எவர் - யாவர்.

35. பரிசனவேதி - தொட்ட பொருளை வேறுபடுத்துவது. சங்கற்பம் - நியமம். தெரிசனவேதி - பார்த்தபொருளை வேறுபடுத்துவது.

36 இடை - இடம். பின்னுவாத்திங்கள் - அமாவாசியோடு கூடிய சோமவாரம்.

37. ஆவின்வாயுறை - பசுக்கள் வாய்க்கு உணவு. ஆவுரிஞ்சி - பசுக்கள் உரோஞ்சுகிற தறி; மந்தைக் குத்துக்கல். சுண்ணம் - சுண்ணாம்பு. கொலையுயிர்விடுத்தல் - கொலை செய்யப்படுகிற வுயிர்களைவிடுத்தல். எறு - எருவிடுத்தல்; நிரைமீட்டல். மக - பிள்ளை.

38. அழிந்தோரை நிறுத்தல் - கெட்டவரை யாதரித்தல். அட்டுண் பிறரறம் - சமைத்து உண்ணப்படுகிற அன்னிய ருடைய தருமம்; சத்திரம். மகப்பேறய்த்தல் - பிள்ளைப்பெறுவித்தல். நறிய - நல்ல. விலங்கூண் - மிருகங்களுக்கு உணவு கொடுத்தல். சிறைச்சோறு - சிறைச்சாலை யடைந்தவனுக் கன்னங் கொடுத்தல். மனையறத்து - இல்லறத்தால்.

39. சில - சிற்றெண். பல - பேரெண். சலம் - வஞ்சனை. சாந்திராயணம் - ஒரு விரதம்; அது: சந்திரன் வளருந்தோறும் ஒருபிடி யன்னங் கூட்டோறு மதிகப்படுத்தியுண்டு, தேயுந்தோறும் அங்ஙனங் குறைத்துண்டிருக்கும் விரதம்.

40 கோற்று - தவஞ்செய்து. பருவம் - வருடம்.

41. காமர் - அழகு. தேம் - வாசனை.

42. ஐவகைக்கனலி - பஞ்சாக்கினி. நாப்பண் - நடுவில். உய்வகை - பிழைக்கும் விதம். வைகலை - வைபிடித்துக்கொண்ட. தெய்வம் - தெய்வத்தன்மை. சிறுபொழுது - சற்றுநேரம்.

43. புடைபட - பக்கத்திலேயாக; பிற்பட.

44. பூதானம் - பூமிதானம். விளைவு - விளைநிலம். கோ - பசு. ஓதான - எதனுலாகிய.

45. சொரி - (நெய்) சொரியப்பட்ட. புரிதரு - செய்யப்பட்ட. யாகம் - பலி, பூசை.

46. மேலா - மேலாக. வருந்தினர் - வருந்தியவராய். தலவாசம் - (யாத்திரையாக வந்தோர்தன்) இடத்தில் வசித்தல்.

47. உத்தர அயனம் - உத்தராயணம். ஒரு - ஒப்பற்ற. விழு - விசேஷ.

48. அகிலமும் - சகலமும்.

49. ஆமே - ஆகாது.

51. தொன்மையாம் - பழமையாகிய. தீவினைத்தொடர்ச்சி - பாவசம்பந்தம். கு அம் தன்மையா - கு என்னுமொழியாகும் இயல்பாக. போழ்ந்து - (அந்தக் குவ்வென்னுந் தீவினைத் தொடர்ச்சியைப்) பிளந்து. எரி - எரிகின்ற. தழல் நா - அக்கினியினது நாக்கு. தாலமா - தாலமாக. ஆரியம், தமிழ் - சமஸ்கிருதந் தமிழாகிய (கு, தாலம்) என்னு மொழிகளால். செனம நோயறுப்பது - பிறவிப்பிணி தீர்ப்பதாகிய. நாமம் - பெயரை. பெற்றது - (இந்தத்தலம்) அடைந்தது. இயம்பினென்றது - குத்திரர் விதியால் குத்தாலம் - குத்தாலமென்றியம்பக், குற்றாலமெனத் திரிந்தது.

52. கடாக்கயம் - மதத்தையுடைய யானை. சீர்நடாத்து - சிறப்பை நடாத்துகின்ற.

53. சந்தி - (மச்சக) சந்தி. வேட்பு - விவாகஞ்செய்ய. அன்னோன் - அத்தன்மையாகிய (விசித்திரவீரியன்) ஆராகம் - ஆசை. ஒருங்கு - ஒன்றாக.

54. கோட்டம் - மாறுபாடு. வாட்டமில் - தளர்வில்லாத. அரசை - திருதராட்டிரனை.

55. கோச்சிலைஞ்சனவி - சாந்

தாரி. தாரு-உலக்கை. (ஆகுபெயர்) தழுவி - வயிற்றிலணைத்து. (நெருக்கி). பாண்டுபாரி - குந்திதேவி. ஐவருக்கு - யமன் முதலிய ஐந்துபேருக்கு. ஐவர் - தருமராசன் முதலிய ஐவர். குலத்துணைவர் - குலத்திற் பிறந்தசகோதரர். ஆசை-ஆசையால்.

56. வசு - வசுதேவன். நந்தன் - நந்தகோபன். புகூஉ - புகுந்து. புள் - பறவை. சோகு - பேய். சகடு-பண்டி. மருது - மருதமரம்; இவைகளுருக்கொண்டவர், ஒவ்வோரசுரர். இச்சரிதங்கள் பாகவதத்தில் விரிவாகக்காணலாம். இடந்து - பிளந்து. அசைவு-நடுக்கம்.

57. தணந்து நீங்கி. போற்றலன் - ஆதரியாதவனாய். புயங்கேது - துரியோதனன். ஆற்றுதல் -செய்தல். சமர் - யுத்தம். அண்ணல் - தலைவன்; சிவபிரான். பாசுபதம் - பசுபதாத்திரம்.

58. செவ்வளர் - நேரே வளர்கின்ற. அங்கி - அக்கினி - சேண் - ஆகாயம். சுடர் - சூரியன். கனலினுப்பண் - அக்கினியின் மத்தியில். குவ்விடை - பூமியினிடத்தில். குறங்கு-தொடை. துண்டம் - மூக்கு. தாக்கி - பற்றச்செய்து. தீபம் - சுடர்.

59. பூதம் - ஆன்மா. ஐம்பொறியில் ஆக - பஞ்சேந்திரியங்களிடத்துச்சேர. பொறி - (அவ்) விந்திரியங்களும். புலன் - (அவற்றின்) அறிவாகிய சத்த பரிசரூபரசகந்தக்களும். கரணத்தாக -மனாதிகளின் வசப்பட. சேதனத்தவையாய் - அறிவின்கூட்டமாய். மாரன்தேவர்கோன் இருடம் - மன்மதனும் இந்திரனுஞ்செய்த இடையூறுகளையும். ஆதவம் - வெயில். கார் - மழை. சிதலரித்து - கறையானரிக்கப்பட்டு. பாதவம் - மரம். அவையாய் நின்றுனெனக் கூட்டுக.

60. வேட்டுவக்கோலம் - வேடன்வடிவம். அன்னம் - (பிரமாவாகிய) அன்னப்பக்ஷி. கோலம் - (விஷ்ணுவாகிய) பன்றி. தொடரும்-தொடர்ந்துதேடும். மைக்குழலன்னம் - உமாதேவி. புக்கு - (காட்டில்) புகுந்து.

61. வரிசிலை - வரிந்துகட்டிய வில். குரிசில் - அருச்சுனன். அடுங்கால் - அடுக்கும்போது. குனித்து-வளைத்து.

62. அல்லின் - இருளால். களத்து - கண்டத்தையுடைய. பார்த்தன் - அருச்சுனனை.

63. சேண் - ஆகாயம். பாவியேன் - பாவியாகிய யான். கூவி - (வருந்தி) அழைத்து. குழகன் - பேரழகுடையவன்.

64. ஆர்த்தம் - உண்மை. தேவு-தெய்வம். சார்த்திய - சேர்க்கப்பட்ட. சம்புடம் - விபூதிக்கோயில்.

65. கடவுள் - தெய்வத்தன்மையுடைய. பஞ்சதரிசனம் - ஐந்துதரிசனம். தாணு - சிவபிரான். போந்தார் - போயினர். கோண் - மாறுபாடு. (ஐந்து தரிசனம் - 67-ம் பாட்டிலுணர்க.

66. வெண்கதிர்-சந்திரன். சோமசேகரன் - சந்திரனைத் தலையிலணிந்த சிவபிரான்.

67. சிகரம் - விமானம். பரிவு - அன்பு. ஆற்றுற - (துன்பம்) தணிதலாக.

68. பூதி - விபூதியை. சாதனத்தோர் - சாதனமாக வுடையவர். (சாதனம் - சாத்தியப்படும்பொருட்குக் காரணமாயுள்ளபொருள்.) மீதுள - மேலுள்ள. காதைகள் - கதைகள்.

69. ஆங்கே - அவ்விதமே. உழல்வார் - வருந்துவார்.

70. பாயிரம் -(எல்லாப்பொருள்களும்) வருதலுடைய வழியாகிய. அசைக்கிலும் - சிறிது சொல்ல முயன்றாலும். (தாற்பரியம்) அசையாது-முடியாது. (தாற்பரியம்)

71. வாசி - அதிகம். சொல்லையிலும்-சொல்லுமிடத்தும். திறக்கும்-அடைப்பு நீங்கும். எல்லை - (திருக்குற்றாலத்திற்குரிய) அளவுள்ளஇடம். கன்னற்கொல்லை - கரும்புத்தோட்டம்.



## ஏழாவது:—வடவருவிச்சருக்கம்.

1. பரை - பராசத்தி. ஆட்ட - நடனஞ்செய்விக்க. முக்கோட்டுவரை - திரிகூடமலை.

2. வரை - (திரிகூட)மலை. தடம் - விரிவு. நதி - வடவருவித்தீர்த்தம். உடன் - (அவ)ரோடு.

3. குடிலை - பிரணவம். மாயை - மாயாசத்தி. கமண்டலம் - பிரமன் கையிலுள்ள சலபாத்திரம். ஆடல் - நானஞ்செய்தல்.

4. பவ்வம் - பாவம். மதுகம்-வலிமை (தம்) இடம். சகரர்-சமுத்திரந்தோண்டிய அறுபதினாயிரவர்; சூரியகுலத்தரசர். தவமது - தவமாகிய இனிமை. கங்கை - கங்காநதி. விரிகூடு - விரிதல் சேர்கின்ற. நவமது - புதிய தேனாகிய; கம்-நீரை. கையின்-கையால். நாதன் - சிவன். நவை - குற்றம். துறை - இடம்.

5. மௌனநெறி - யோகமார்க்கம். தாபதர் - முனிவர். கலனம் - கலக்கம். தானவர் - அசுரர். ஆவாள்-ஆகின்றபராசத்தி.

6. மறுகு - வீதி. புதுவாரி - புதுநீர்.

7. தடம் - வாவி. இடம் - சமீபம். (தாற்பரியம்) செய்து-தாரம். வலமாகி - வலப்பக்கமுண்டாகி. அணித்தாகி-பக்கத்திலுள்ளதாகி. கடம் - (திருமஞ்சனக்) குடம். மஞ்சனம் - நானஞ்செய்யுநீர்.

8. கூவல் - கிணறு.

9. கூடம் - மலையினுச்சி. உத்தரவாகினி - கங்கை. விரிகூட-விசாலமாக. மிருதி - தருமசாத்திரம். கூடம் - இரகசியத்தானம்.

10. தாவி - இறகு. சுகிர்தம்-அறம். தீவினை - பாவத்தை. கழுநீரா - கழுநீர்போல.

11. பதம்-பதவி. வரம்பு-அளவு. கால்-காலால். எதி - நடந்து. பதம்-(அப்) பதவி.

12. சத்தநரகு - எழுநரகம்; அவை:— அள்ளல், இரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி.

13. மொழிபடா - வார்த்தைகள் விரித்த. முழுத்த - முழுமையாகிய; ஒன்றாகிய. சுழி - நீர்ச்சுழி. செழி - செழித்தல். ஒழிபடா - கெடாத.

14. கணம் - ஒரு சிற்றளவு. வைகான்-தங்கான். நசர்பதி—, (இருபெயரொட்டு) பனைம் ? பாம்பின் படம். பாவை - பதுமை. மனாப்பது - கலிப்பது. விரகு - நுண்ணறிவு. நாலுமுந்தி - உபவீதத்திற்கட்டிய நால்வகைப்புல்.

15. பந்தி - வரிசை. எற்றும் - யாசித்தும். தேம்பி-வாடி. கந்தை - கிழிந்தற்றுணி. புற்கயிற-(தருப்பை)ப்புல்லாலாகிய கயிற்றை. அரைஞாண் - இடையிலே கயிறாக. வேட்டதற்கு- விரும்பியபொருளுக்கு. (அது கிடையாமல்) ஏமாந்து-திகைத்து.

16. குடங்கை-உள்ளங்கை. வருத்தம் - வருத்தும். கிகிரகாலம் - பனிப்பருவம். ஆற்றான் - சகியான். நம்பர் - சிவபிரான்.

17. ஆலும் - அசையும். சேலை - பரிவட்டம். கருகி - கருநிறம்படைத்து. களமாடன் - களங்கமுடையவன்.

18. வரலாறு - வந்த நிகழ்ச்சி. புரிந்த ஆற்றால்-செய்த விதத்தால்.

19. வாமபாகம்-இடப்பாகம். தேவு-கடவுள். போக்கு-நீக்குதல். அரிது - இல்லை. இரங்குகாலை - பரிதபிக்கும்போது.

20. வாக்கு - வார்த்தை. வடபுலம் - வடதிசை. கவற்சி - கவலை.

21. பொன்னி -காவிரிநதி. கன்னியந்துறை - கன்னியாகுமரி.

22. கன்னி - மாலை. மாசு - கருநிறம். ஒளி - சூரியன்.

23. அந்தி-அவ்வடவருவி. ஒருவினன் - நீங்கினன். ஆச்சரியம்-சித்திரம், விம்மிதம்.

24. மாகமதி-மாசிமாதத்து. ஒருபாகமதி - ஒருபக்குடைய சந்திரன். ஒறுப்பு - பாதிப்பது. உடையசீ

திரன் - இரண்டையுடைய சந்திரன். எனவே, பாதிச்சந்திரனையுடைய அட்டமிதிதியுள்ள தினமென்பதாம்.

25. கோடிய - கோடியென்னும் எண்ணையுடைய. கல்-(இரத்நங்களாகிய) கல். எறி - வீசுகின்ற. திரை - அலையாகிய. கவண்காட்டி,--இரிந்து- சோர்ந்து. தெய்வவில் - இந்திரதனுசு. இன் - சாரியை.

26. போது ஆடி - பூவில் வினையாடி. தலைமடுத்து - கலந்து. படியார் - மூழ்கார்.

27. கூடல்-மதுரை. குடந்தை-கும்பகோணம். புலியூர் - சிதம்பரம். ஒவிலா - நீங்காத. திரிவேணிசங்கம்- கங்கை, யமுனை, சரசுவதிகூடுமிடம். தாவம்-(பலநதிகளும் வந்து) பாயும். தீவம் - சோதி; சோதிபோலப்பிரகாசிப்பது.

28. ஐந்து - பஞ்சேந்திரியங்கள். மூச்சு - வாயுவை. அடக்கி - (வேறு வழியிற் செல்லவொட்டாமல்) தடுத்து. கூர்-மிக்க. சிசிரநாள்-பின்பனிக்காலம். நித்தியகருமம் - அநுட்டான, செபதபம் பூசை.

29. பாகமதி - பக்குவமாகிய அறிவு. சோகம் - துன்பம்.

30. ஆம் ஆறு - ஆகும் விதம். ஆகுசம்-தீட்டு.காமாரி-காமனையெரித்த சிவபிரானுடைய.

31. அனைத்து ஆகும் - எல்லாமாகும். அளவுஅளவில் - (நானஞ்செய்யும்) எண் அளவுக்குத் தக்கபடி. எனைத்தானும் - எவ்வளவாயினும்.

32. ஆலைநாம் கழை - ஆலையாகியநல்ல கரும்பை. தார்தொட்டு - அடிதொடங்கி. அயில்வதென-உண்பதுபோல. வேலைமரபினில் - காலக்கிரமப்படி. பாலை - கருப்பம்பாலை.

33. தோன்றி - உதித்து; அடைந்து. என்ற - பொருந்திய. இவ்வினை - இம்மையிற் செய்தவினை. அவ்வினை-முற்பிறவியிற்செய்தபாவம்.

34. இருதானதம்மை -(தூலதேகத்திலன்றிச், சூக்குமம், காரணமாகிய) இரண்டுடத்தினுமுடையதன் மாவை. தானம் - கொடைப்பொருள். உதவும் அது -கொடுக்கின்றஅச்செய்கை. தானப்பெருக்கம் -ஒன்று, பத்து. பத்து, நூறு. நூறு, ஆயிரமாகவிருத்தியாதல். சந்தானம்-வமிசம்.

35. மெய்யுணர்வு - உண்மையுணர்ச்சி. புரிந்து - செய்து; கொடுத்து. சிறுகாலை - விடியற்காலம்.

36. எல - பொருந்த. சால-மிக. எழுபிறப்பு - எழுவகைப் பிறவித்துன்பம். நான்குவகை - சரியை, கிரியை, யோகம், ஞானமாகிய. பாலும்- பகுப்பும், (பாலும்).

37. அயனநாள் - ஆண்டினிற்பாதியாகிய தினங்கள்; அவை - உத்தராயண தக்ஷிணாயன புண்ணிய காலங்கள். விழா - திருவிழா. பதினான்கு - சதுர்த்தசி. அண்ணல் - சிவபிரானுடைய. ஆராட்டு - உற்சவசாந்தி. மாதநாட்கள்-மாதந்தோறும்வரும் திருநக்ஷத்திரங்கள். மாகம்முப்பான்-மாசிமாதமுப்பதுதினம். சேவை- தரிசனம்.

38. முன்னுவா-அமாவாசி. பின்னுவா - பௌர்ணமி. சங்கிராந்தி - மாதப்பிறப்பு. திங்கள் - சோமவாரத்தில். மதிகதிர் - சந்திர சூரியரை. பாந்தள் -பாம்பு. இன்னவை -இவைகளுள். அந்தி - அந்தவடவருவியாகிய சித்திராநதி.

39. அரிது - இல்லை. யாண்டுசிறந்த - வருடம் (பிறந்து)சிறப்புற்ற. எதிரெப்பர் - எதிர்வந்து செய்வர். இறந்தநாள் - (தம்முன்னோர்) மரித்ததினம். இறந்தவர் - (தம்முன்னோராகிய) மரித்தவர். கும்பி - நரகம். மறந்தநாள் - (மேற்கூறியபடி தம்முன்னோராகிய பிதுர்க்களிறந்ததினத்தைநாம்) மறந்திருக்கின்ற தினமானது.அவரை-அப்பிதுர்க்களை. காலன்-யமன். மறக்குநாள் - நினையாதிருக்கின்ற தினத்தை. மறக்குநாள் - மறந்துவிடும்நாளாம். எனவே நாமறந்தநாளில் யமனிவனைந்துதண்டிப்பானென்பதாயிற்று.

40. கரு - கருப்பாசயப்பை.



வரை- (வெளியே) தள்ளும். பிறவி- சனனம்.

41. அந்தம் - (திதிகளின்) முடிவாகிய. உவா-அமாவாசி (கஉ). சங்கிரமம் - மாதப்பிறப்பு (கஉ). வீதிபாதம் - ஓர்யோகம் (கஉ). வைதிருதி - ஓர்யோகம் (கரு). பந்தம் - கட்டாகிய. மனுசதினான்கு - பௌர்ணமி. (கஉ)ம், தைமாதத்துச் சுக்கிலபக்ஷத்துச் சத்தமியும், ஏகாதசியும் ஆகிய (கச). யுகம் நான்கு - ஐப்பசிமாதத்துச் சுக்கிலபக்ஷத்து நவமி, கார்த்திகைமாதத்துச் சுக்கிலபக்ஷத்தட்டமி, வைகாசிமாதத்துச் சுக்கிலபக்ஷத்துத் திரிதியை, மாசிமாதத்துச் சுக்கிலபக்ஷத்துச் சத்தமி. மனையாளன் பத்தொடைந்து - புரட்டாசி மாதக் கிருஷ்ணபக்ஷப் பிரதமை முதலிய பதினைந்து திதிகள். தொந்தம் - சம்பந்தம். அட்டகை பன்னிரண்டு.மார்கழி, தை, மாசி, பங்குனிமாதங்களில்வரும் அபரபக்ஷத்து சத்தமி, அட்டமி, நவமிகள். பருவநாள் - பக்குவப்பட்டதினம். தருப்பிப்பார் - தருப்பணஞ்செய்பவர்.

42. தாம் பெற்றார்-தம்புத்திரர், புத்திரிகள். துணைவர் - சகோதரர். பெறும்பாலர் (அவர்) பெற்ற புத்திரர். தனையை பாலர் - தம்புத்திரி பெற்ற பிள்ளைகள். பற்று - அன்பு. அவனருளால் - தன் நாயகன் கட்டளையால். ஓம்புற்ற - (தன்னை) இரக்ஷித்த. பரிசு-தன்மை. என்ற -என்றுசொல்லப்பட்ட. (என்றவென்பதில் அகரந்தொகுத்தல்) எம்பு - அங்கலாய்த்தல். திலம் - எள். நீரார் - குணமுடையவர்.

43. சேண் - ஆகாயம். பலி - பூசை. புதத்தி- புதவிக்கு. அவர்கள் - அப்பிதுர்க்கள். கிராணி - உரிமை.

44. அந்நிலையே - அந்த இடத்திலே. அமையாதேல் - கூடாதாகில். கன்னி - அறியாமை.

45. இருநால்வர் -(42ஆம்பாடலிற்கூறிய) எண்மர். தருப்பிக்கில் -தருப்பணஞ்செய்தால்.

46. சத்தம் - எழு. அத்தி - எலும்பு. அவர்க்கு-அவ்வெலும்புடையவர்க்கு.

47. முத்தனையார்- முத்துப்போன்ற பெண்கள். தத்தனை - விஷ்ணுவை. சுத்தன் - தலைவன்.

48. முனிவர்கடன் - இருடிகட்குச்செய்யுங்கடமையை. பிரமச்சரியம் - விவாகத்துக்குமுன் கற்று விரதங்காக்குநிலை.

49. வறிது - அற்பம். பிறியார் - பிரிவில்லாதவராய். பெயர்க்கும்-நீக்கும்.

50. கள்ளாடும் - களவுசெய்யும். கரணங்காத்தல் - அந்தக்கரணங்களைப்புறம்போகாமற்றடுத்தல். எள்ளாமல் - இகழாமல். உள்ளார்வம்-நினைக்கின்ற ஆசை. சமிதம் - அமைதி.

51. துளங்கும்-அச்சப்படும். உளம்பெறுதானம் - மானததானம்.

52. நித்தன் - சிவபிரான். முத்தகம் - குளகம், தொகுப்பு.

53. காலாக- வாய்க்காலாக, மனத்தடத்தில்-மனமாகிய தடாகத்தில். படிவர் - முனிவர்.

---

## எட்டாவது:—சிவமது சங்கைச் சருக்கம்.

1. புரவி-குதிரை. கரவில் - கள்ளத்தால். மகன் - (சகரனுடைய)புத்திரன்; போசமஞ்சன். மகன் - (அவனுடைய) புத்திரனாகிய.

2. சாகரர் - சகரனுடைய இளையமனைவி புத்திரர். அருவி - தேடி. சூழ்வர - சூழ. தொட்டனர் - தோண்டினவராகி. பதனத்து -காவலையுடைய. முனிவன் - கபிலமுனிவர்.

3. சாகரம் - சமுத்திரம். நீப்ப - நீக்கும்பொருட்டு.

4. சங்கையா - மதிப்பாக. தரிப்பான் - தாங்கும்பொருட்டு.

5. பொதிர்த்து-ஒட்டைசெய்து. தரிபடாது - தங்காது.

6. மாகமண்டலம் - ஆகாயமண்டலத்தில். மறுக - சுழல. மண்டலம் - கூட்டங்கள். யோகமண்டலத்

து - யோகபூமியில். இருவகைக்கமலங்கள் - இரண்டுவகையாகிய உந்தியந்தாமரை, இருதயதாமரை. உறழ - ஒப்ப. மண்டு-நெருங்குகின்ற. அலம்-அமைவினையுடைய.

7. அடைய - சேர. ஆயிரம் பருவம்-ஆயிரம் (வருட) காலம். அடிணிசங்கை. (இப்பெயர்சிவபிரானாலமைக்கப்பட்ட எழுவகைப் பெயர்களுளொன்று) உலறி-வற்றி. புடைபிதுங்குறுது - வெளியேறுது. புற்பனி-புல்லினுனியிலுள்ள பனித்துளி.

8. சுவறல்-வற்றுதல். மீனலோசனை-மீன்போன்ற கண்களையுடைய பார்வதிதேவி. வேந்தன்- (பகிரதனெகிய) அரசன்.

9. இளிகொள்-(சடையைவிட்டு) இறங்கிய. துளி-துளிவடிவம். அமைத்து - செய்து. விளிகொள் - அழைக்கப்பட்ட.

10. கங்கை - (ஏழாம் பாட்டிற்கூறிய) கங்கை. திருக்கு - வஞ்சம், அல்லது மாறுபாடு. சன்னு - ஒருமுனிவர். சானுவி - கங்கை. மானம் - விமானம்.

11. மாய்ந்த - மறைந்த.

12. எண்வகைப்பத்திட்-, அவை: அடியார்களை வணங்கல், சிவபூசைகண்டு மகிழ்தல், சிவபூசை செய்தல், தான் செய்யும் பணிவிடைகளைச்சிவபிரான்றிருவடிக்கே சமர்ப்பித்தல், சிவசரிதங்கேட்கும்போது ஆனந்தக் கண்ணீர்சொரிதல், மயிர்சிலிர்த்தல், சிவபிரானைத்தியானித்தல், திருப்பணிக்கென்று வாங்கிய பொருளைத் தானபகரியாதிருத்தல்களாம். துத்தியம் - தோத்திரம்.

13. யாண்டு - வருடம்.

15. மது - தேன். அணுக -சேர.

16. சிலை - வில்லாக. குவடு -சிகரம். ஒன்று - பொருந்திய.

17. விடிய - கெட. உதயகிரி - உதிக்குமலை. நீர்போர்ப்ப - நீர்மூட.

18. விரணம் - துன்பம். அரணம் - காவல்.

19. கான்முகத்து - காலிடத்து.

20. மால்ஆர்த்த - மேகங்கள் முழக்கப்பட்ட. வரை-(திரிகூட)மலை. தவத்தின் - தவத்தால். ஆர்த்த-பிரகாசித்த. மால்வரை - பெரியமலை.

## ஒன்பதாவது:—மூர்த்திவிசேடச் சருக்கம்.

1. தெளிவானை - தெளியப்படுபவனை.

2. எவன் - யாது. கூறு -அமிசமாக. அமையா - அமைந்து.

3. உவட்டெடுக்கும் - மேற்பொங்கியெழும். கற்பாந்தத்து - கற்பகால முடிவில். அழிவரை - சக்கரவாளமலை. தொடராக - ஒரே தொடர்ச்சியாக. சுவற்றிற்று -வற்றச்செய்தது,

4. தரிப்பு - தங்குதல். தத்துவமும்-(நாதமாகிய) தத்துவமும்.

5. பின்று ஆகி - பின்னர் உண்டாகி. குறி - பெயர்.

6. ஒன்றிலன் - பொருந்ாதவன். இருமை - பெருமை. அருணம் - சிவப்பு.

7. தண்டம் - தடி.

8. மூக்கால் - திரிகாலம். கரலம் என்பதில் அம்-கெட்டது. இருது - பருவம். நயப்பால் - விருப்பத்தால்.

9. திரவியம் - உபகரணப்பொருள்கள். ஊரு -தொடை. நாம-பெருமையுடைய. திகிரி - மூங்கில்.

10. பிணி - கட்டுப்பாடு. சூறையில் - சூறுவளிக்காற்றில். அணி -அழகு. பகவன் - பிரமன். குணில் - குறுந்தடி.

11. அருளும் - அருள்செய்வான். பரிப்பான் - காக்கும்பொருட்டு. மயிலிரண்டு - மயில்போல்வாராகிய இலக்குமிதேவி, பூமிதேவிகள்.

12. கமலலோசனன் - தாமரைக்கண்ணையுடைய விஷ்ணு.

13. முப்பால் - மூன்று பகுப்பு. சிற்பொருள் - ஞானப்பொருள். அப்பாலன் - அந்தப்பகுப்புடையவன். பேறு - தலம். எழுத்து - ஊழ்வினை,



(அக்ஷரங்கள்).

14. ஆரிடம், மானிடம், தேவம், அசுரம், இராக்கதம்- முறையே இருடிகளாலும், மனிதராலும், தேவராலும், அசுரராலும், இராக்ஷதராலும், பூசிக்கப்பட்ட இலிங்கங்கள். (இங்ஙனம்) பதிட்டை-பிரதிட்டை. சயம்புவும்-சுயம்பு இலிங்கங்களும். பார்-தரிசிக்கப்படும். சைவலிங்கம்,—

15. போது - பொழுது. கூவிளத்தில் -வில்வத்தில். இலிங்கம் நாடி-இலிங்கத்தில் ஒருநாழிகை. அமைப்பு - தங்கியிருப்பு.

16. பொற்றூணம் - பொன்னம்பலம். வள்ளல் - மாணிக்கவாசகசுவாமிகள். குறி - சிவலிங்கம். உரைத்தது - (திருவாசகத்தில்) அருளிச்செய்தது. இந்தக்குறிப்பால் - இந்தஅபிப்பிராயத்தால்., அஃதாவது (பிறதலம்போயுவர்து) இத்தலத்தையகலாதிருப்போமென்று தேவர்கட்கு வரந்தந்தது. மேற்பாடலிற்காண்க.

17. மூட்டில் - தூரில்.

18. சாலை- யாகசாலை. அடிக்கடி- ஒவ்வொரு அடித்தூரத்திற்கு.

19. கணி - (இடைக்குறை) பூங்கண்ணி. பணி - திருப்பணி. எவற்பணி - எவற்றொழில்.

20. தேம் - தேன்.

21. குவி - கூடுகின்ற. குளகம் - ஒருவினைகொண்டு முடியும் பலபாட்டுக்கள். அவிடேகம் - ஈனம். அவிடேகம் - கிரீடம்.

22. மோலை -ஆதியில். அதிகர் - உயர்ந்தோர். தானை - சேனை. கேதனம் - கொடி. மணித் தசும்பு - இரத்நம் பதித்த குடம். இறை - சிவபிரான்.

23. படி-பொற்படிகள். தூபம் - தூபக்கால். பரிகலம் - அன்னமெடுக்கும் பாத்திரம்.

24. ஆன் - இடபவாகனத்தில். அம்மானை - அந்தமகானை.

25. கதிர்படுசெவ்வி - சூரியனுதயமாகுஞ்சமயம். சுயம்பூ- சுயம்புலிங்கம்.

26. அத்து-அரை. அம்ஆர்-அழகுபொருந்திய. அத்தம் - பாதியில். அத்தம் - கையில். ஆர் - நிறைந்த. அத்தர் - பெரியோர்.

28. பொன்-வியாளம்.பைம்பொன் - பசியபொன்னிறமுள்ள. பை-அழகிய. செம்பொன் - செய்ய இலக்குமி.

29. தோய்வை - (ஆகுபெயர்) அன்னம்;சருக்கரைப்பொங்கலும், பருப்புப்பொங்கலும். அமுதுசெய்விப்பவர் - நிவேதனஞ்செய்விப்பவர். அரும்ப - தோன்றுகிற.

30. காரி - சனி. வாரி-நீர். வளைவீதி - சங்கவீதி.

31. அணி - அழகிய. விரல்-விரல்போலு நேரிய. காசளவு-ஒருசிற்றளவு; மிகச்சிறி தென்றபடி. பணி - திருப்பணி. வீறு - பெருமை.

32. தீவு - பூசுகின்ற.

33. சிறுகாலை - விடியற்காலம், திருவனந்தல். உற - பொருந்திய. காலை - உதயகாலம், காலசந்தி. பிறங்கல்சாயும் - (சூரியன்) அத்தமனமலையிற்சேரும். பரம - மேலான.

34. வருடவழி - ஆண்டின் கிரமப்படி. கன்னமிட்டார் - கொள்ளைகொண்டவராவர். ஒருநாள் கூட - (முதல் நாளோடு) ஒருங்கேசேர. இருவரையும்-(தும்புரு, நாரதராகிய இசை பாடுவார்) இரண்டுபேரையும். கன்னமிட்டார் - காதில் வைத்தருளிய சிவபெருமான்.

35. வலம்புரி வீதி - சங்கவீதி. வலம்புரிவார் - வலப் பிரதக்ஷிணஞ்செய்பவர். குலாம் - விளங்கும்.

36. தாதகி - ஆத்திமாலை. என்றூலும் - ஆறுலும்.

37. பால்அமுதம் -பாயசம். உஞ்சு - பிழைத்து. அமுதர் - தேவர். அஞ்சு-(தக்கன்சாபமுதலியவற்றால்) பயப்படுகின்ற. அமுதகதிர் - சந்திரனை. அடிசில் - சோறு. நஞ்சமுதல்-தாமரை மலரிலிருக்கும் முதற்கடவுளாகிய.

38. சரிதை - சரித்திரம். பார்

வானுலகம்பேசிப்புக்தெனக்கூட்டுக.

39. கறை - நஞ்சு. கடன் - கடமை. நியதி. மிண்டர்க்கு - வலிமையுடையவரிடத்து. (கு - உருபுமயக்கம்) உறுகண் - துன்பம்.

40. உலையெடுத்து - உலைவைத்து. அடுதெகடுப்பார் - அன்னஞ்சமைப்பவர். கலை - கல்வியினால். மானெடுத்தார் - (சங்கெடுத்தகையில் அதனை விடுத்து) மானையெடுத்தவர்; விஷ்ணுவாயிருந்தவர் சிவபிரானாயினமை யென்றபடி.

41. நெடிது - நீண்டது. தேடி - தேடி. கொடி - உமாதேவி. ஆடும் - விளையாடும். பொடியாடும் - விபூதி தோயும்.

42. பின்று - பிறகிடு, பின்றாழ்கின்ற. உறுதி - பயன்.

43. ஆர்த்தம் - அன்பு. பரை - பராசத்தி. பரமகீதை - சிவகீதை. முறையினில் - கிரமப்படி.

## பத்தாவது:—பராசத்திபீடச்சருக்கம்.

1. ஒன்றின் - ஒன்றாகிய. சோதி - பிரமம். குடிலை - பிரணவம். நாதம் - ஒலி. விந்து - விந்துசத்தி. நாதன் - கடவுள். குறி - பெயர்.

2. போகம் - இன்பம். நிகிலகாரணத்தினால் - எல்லாந்தோன்றுமேதுவினால். மகிமையை யென்பதில், ஐ - சாரியை.

3. பெரு - பெருமைதங்கிய. சிவகோணநான்கு,—சிற்பரை - சத்தி. கோணம்ஐந்து,—ஆம் - ஆகிய. நவகோணத்துள்ளே - ஒன்பதுகோணத்தினிடத்தே. ஈரிருபான் முக்கோணமுனும் - நாற்பத்துமுக்கோணம் பொருந்தும். மேல் - (அதற்கு) மேல். இவர்தருவட்டம் - எழுகின்ற வளைவாக எழுதிநிறைத்த. எட்டிதழ் - எட்டிதழும். மேல்- (அதற்கு) மேல். கோணம் ஈரெண்ணிதழ் - வளைவாக எழுதிநிறைத்த பதினாறிதழும். உவரி - (அதற்கு) மேல். மூவட்டம் - மூன்றுவட்டத்தினிடமும். மூன்றுசதுரமும் - மூன்றுசதுரத்தினிடமும். (ஆகிய) ஓர்பீடமுளது - ஒருபீடமிருக்கிறது. [பீடம் - ஆசனம்.]

4. அன்றே - அல்லவா. அரு - இல்லாத. பரிம - மேலாகிய. அகிலமூலம் - உலகந்தோன்றுங் காரணப்பொருள், பராசத்தி. அரித்தலால் - தங்குதலால்.

5. நங்கை - பராசத்தி. புங்கவன் - பரமேசுரன். அதிகாரங்கள் - சிருட்டியாதி தொழில்கள்.

6. மோலி - சடையும். மூன்றுநாட்டங்கள் - மூன்று கண்களும். சததளமே - நூற்றிதழ்த்தாமரை. அபயம்,—தானே - ஆயுதம். செபவடம் - செபமாலை. நாற்கை - நான்கு கரங்களும். (பராசத்தி முதலிய ஐந்து சத்திகட்கும் பொதுவாகும்.) மதிமுகம் - சந்திரன்போன்ற முகம். (அவ்வைவருக்கும்) மரபின் - முறையே. ஐந்து நான்கு மூன்று ஒன்று நான்காம்,—பதி - பதிகின்ற. ஐவர்மேனி - அவ்வைவர்நிறம். வெண்மை...பொன்மை,— இவற்றுட்பாலும் - வெண்மைநிறம்.

7. அனிதம் - இதமின்மை. பரையே - பராசத்தியே. பொன்னை - இலக்குமியை. வல்லிசாதம் - கற்பகத்திற்படர் கொடி.

9. முற்றரும்புண்ணரி - முதலிற்சிருட்டிக்கப்பட்ட சமுத்திரம். அலர்மேற்செல்வி - இலக்குமி. எம்மான் - எம்பிரான்.

10. குற்றாலம், கோவிதாரம், சமருகம்,— நாமந்தரு - பெயர்களைக் கொடுக்கும். வரையாத்தி - மலையாத்திமரத்தின். திரு - (அம்மரங்களில்) சிறந்த. குற்றாலம்,—மூலட்டானம் - (எம்பிரானெழுந்தருளியிருக்கும்) மூலஸ்தானம். குற்றாலஞ்சிறந்த பெயரென்பது திருக்குற்றாலத்தல மகிமைச்சருக்கம் 51-ம் பாடலினுங்காண்க.

11. முகிழ் - (தாமரை) அரும்பு



போலும், பயந்ததனாலும் - பெற்றதனாலும். மூவிசேடம் - (தலம் தீர்த்தம், மூர்த்தியென்னும்) மூன்று விசேடம். நிகழ்வது - சொல்லப்பட்டு வருகின்றது. தாணுமாலயன் - உருத்திரன், விஷ்ணு, பிரமன். பூங்கொட்டில் - (அவர்கள் நித்திரைசெய்யும்) பொலிவினையுடைய கொட்டில்.

12. பூ - பொலிவாக. அணி - புனைகின்ற. மரு - வாசனையுடைய. மத்தனும் - ஊமத்தம்பூ மாலையுடைய ருத்திரனும். (மத்தம் - மத்தெனக்கடைகுறைந்தது.) பொன் - இலக்குமியை. அணி - அணிந்த. மருமத்தனும் - மார்பையுடைய விஷ்ணுவும். நா - நாவினில். அணி—ஒரு - ஒப்பற்ற. கொம்பானும் - பூங்கொம்பு போன்ற சரசுவதியையுடைய பிரமனும். ஒருகொம்பானும் - ஒற்றைக்கொம்பையுடைய விநாயகரும்.

13. பரானுபவம் - பரபோகம். சிவானுபவம் - சிவபோகம். நிராமயம் - நோயின்மை. திரிபுரை - பார்வதி. புகல் - அடைக்கலம்.

14. வலம்புரியும் - வலமாகச்சுற்றிவரும். பொலம்புரிசை - பொன்மதில். மங்கலை - மங்களப்பொருளாகிய பராசத்தி

15. நிலாக்கொழுந்து - சந்திரகிரணம். தோட்டு - இதழ்களையுடைய. கருப்பூர சந்தனம் - பச்சைக்கருப்பூரங்கலந்த சந்தனமும். மந்திரபதம் - மந்திரவசனம்.

16. யாளிமாதம் - ஆவணிமாதம். திரு - இலக்குமி.

17. கிருதம் - நெய். அங்கிலை - அந்தப்பராசத்தி பீடத்தில்.

18 அமரகுலதீபம் - தேவர்குலத்திலிந்திரன்.

19. கடமதி - மாசிமாதம். அரிசனபாளிதம் - மஞ்சட்காப்பு. கயல்மதி - பங்குனிமாதம். ஐவகைதிரவியம் - ஐந்து பிரிவுடைய வாசனைப்பண்டங்கள்., இவற்றைத் திருமஞ்சனத்திரவியமென்பர்.

21. முப்பொறி - மனம், வாக்கு, காயமாகிய மூன்று கரணம்.

22. உயர்காயத்திரி - உயர்ந்த (சிவ)காயத்திரிமந்திரத்தை.

23. மேகவண்ணம் - மேகநிறம். கந்தரத்தார் - கண்டத்தையுடைய சிவபிரானார். மழைவண்ணம் - மழையின் குணம்போலும். சதுரகவி - நாற்கவிகளையுடைய. நாற்கவியாவன: ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமாம்.

## பதினோராவது:— குறும்பலாச் சருக்கம்.

1. அங்கணம் - அவ்விதம்.

2. எய்ந்த - பிறந்தன. (தாற்பரியம்) விரித்த - விரித்துச்சொல்லின.

3. மேல - உயர்வுடையன. அங்கம் - வேதாங்கம்; அவை: மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம். கதி - பதவி. கதி - மோக்ஷம்.

4. ஆரண நடப்பால் - வேதங்கள் நடைபெறுவதால்.

5. தவர்படு - தவறுதலுண்டாகின்ற. [தவர்தல் - தப்புதல்.]

6. மனுக்கள் - மனுச்சக்கரவர்த்திகள்; இவர்கள் பதினால்வர்.

உபநிடப்பொருள் - வேதசாரமாகிய ஞானப்பொருள்.

8. மேல்வானம் - பழைய சுவர்க்கம்.

9. உபநிடதவேதம் - உபநிடதமாகிய வேதப்பொருளை. பனசம் - பலாமரம். குலமறை நின்றதெனக் கூட்டுக.

10. மந்திரம் - கோயில். தாலமந்திரம் - தாலபஞ்சாக்கரம். சூக்குமமந்திரம் - சூக்குமபஞ்சாக்கரம்; இவற்றை யுபதேச முறையா லுணர்க.

11. ஓம் - பிரணவம். செழு - பொருந்திய. தாங்கியும் - தங்கியும். துளங்கியும் - சலனப்பட்டும். ஏங்கின - வருந்தின.

12. ஆயிரம் - அனந்தம். சுருதி - ஓசை. அமரராண்டு - தேவருடம்.

13. நமோஸ்து - வணக்கம். விநோதா - ஆச்சரியமாயுள்ளவனே. ஆளா - ஆளுகின்றவனே.

14. பராபரா - முன்னும்பின்னுமானவனே. சடாதரா - சடையைத் தரித்தவனே. நிடதம் - அட்டகுலபருவதத்தொன்று. குழன்மொழி - குழல்வாய்மொழி யம்மை. மனோகரா - சந்தோஷமுடையவனே.

15. கலைத்தழும்பு - நூல்களின் அடையாளம்.

18. ஒருவடிவாய் - ஒப்பற்ற சிவலிங்கமூர்த்தமாகி. பலவடிவாய் - பலாமரத்தின் அடியிடத்து.

19. மூலம் - பிரணவம். அதன்மூலம் - அம்மரத்தின்வேர். பாகை - ஞா[illegible]ன்காண்டம், கருமகாண்டம். கவர் - கவடு. சுருதி - சுரம். பணை - பருத்த கொப்பு. சாகை - பிரிவு. சாகையாகிளைகளாக. தவிரா - நீங்காத. சூல்கொண்டு - கருப்பமாகக்கொண்டு. நகை - மகிழ்ச்சி. தருமமுதல் - அறமுதலாக. பெறும்பலவும் - பெறப்பட்ட பலபொருள்களையும். குறும் - சிறிய.

22. ஒருமதி - ஒருமாதம். இருமதி - பெரியசந்திரன். எழுபடிக்கு - எழுலகத்துக்கும். தலைமன்ற - வமிசம்.

23. இடுவார் - தானஞ்செய்வார்.

24. மந்தமாருததானம் - தென்றற்காற்றிற்றோய்தல்.

---

## பன்னிரண்டாவது—மந்தயர்நதச் சருக்கம்.

1. சனகர் - சனகாதியர்.

2. ஆச்சிரமம் - இருப்பிடம்.

3. திரவு - வலிய, (உ - சரியை) குரவன் - ஆசாரியனாகிய சிவபிரான்.

4. இன்னம் - துன்பம்.

5. விண்டலை - ஆகாயத்தினுச்சிவரைவளர்ந்த. வானை - வாளைமீன். குழவியை - (அம்மீனாகிய) பிள்ளையை. தருவும் - தேடும். கண்டலைதாழையை. தண்டலை - சோலையின். சென்னி - தலையில். நாடு - தேடுகின்ற.

6. நீரச - சலமாக. நேரியர் - சோழராசர்கள். கோலிய - வளைந்த. சோணாடு - சோழதேசத்தில்.

7 பொரானன் - பேரையுடையவன். அகம் - மனைவாழ்க்கை. வயிறுவாய்ப்ப - கருப்பமுற்றிருப்ப. ஆத்திரேயன் - ஆத்திரேயநாமமுடையவன். உரு - அழகு.

8. பார்பயின்று - பூமியில் (மிதித்தல்) பழகி. பருவம் - வயது. தாருமாத்தில். புல்லுரிஇ - புல்லுருவி; இது, மரத்தைக்கெடுக்குமொருபூண்டு.

9. பயிலும் - (நடந்து) பழகும். சோரும் - சூழும். ஐம்படை - பஞ்சாயுதம். நாண் - (வண்டாகிய) கயிற்றில். பூண - பொருந்த. ஐம்படைநாண் - பஞ்சாயுதமமைத்துச் செய்த பிரபாணக்கொத்த [illegible]குழந்தைகள் மார்பிலணியப்படுவது.

11. கிள்ளைபோல்வான் - கிளிபோலச் சொன்னதைமட்டுஞ்சொல்வான். நீர்க்கரண்டம் - நீர்க்காக்கை. நியர்சம் - கிரியைசெய்தல். அவிநயம் - நாடகம்.

12. முன்னையிரண்டு - அறநூல், பொருணூல். பின்னொன்று - வீட்டுநூல். ஒருக்கு - ஒற்றுமை. இன்பத்தேனும் - இன்பநூலினையேனும். ஒழிநீக்கப்பட்ட, பொருந்திணை - பொருந்தாக்காமம். அன்றி - அல்லாமல். ஐந்திணை - அன்புடைக்காமம்.

14. இன்னோன் - இந்த ஆத்திரேயன். பொருவான் - சமானமானான்.

15. பதங்கம் - விட்டில். துளக்குசலனம். ஒட்டு - பிடித்துக்கொள்ளும் ஒருவகைப்பறை. பதங்கம் - பறவை

16. விடர் - வெடிப்புநிலம்.

17. யாமம் - (நடுச்)சாமம். பிறன்கடை - அன்னியர் தலைவாயில். விடார்த்தார். சூகரத்தை - பன்றியை. ஆன் - பசு.

18. மா - பெரிய. வட்டில் - தலையில். வழுதாது - வழுதாமல். மறைசொல்வார் - வேதமோதும் பிராமணர். மா - வண்டுகள்சூழும். வட்டில் - புவிதழில்லாறு - வழுகின்ற. சாதிமுகிழ்த்தங்கிளியுடைய. சொய்வான் - பறிப்பான். மாதருக்கா - பெண்களுக்காக. தீ - ஓமாக்கினியை. வேட்ட - விரும்பிய. முன்ற - ஒழுங்கு. புரியும் - செய்யும். தருப்பை - தருப்பைப்புல். தீ - கொடிய. வேட்டம் - வேட்டையாடும். முறை - கிரமத்தை.

19. பெருக்கு ஆய் - விருத்தியாகி. பிறமாதர் - அன்னியமடவார். செரு - (கலவிப்) போரில். காய - கோபிக்க. திரிகுலத்தார் - (ஊனை) மூன்றுகுலத்தார். இருக்கு - வேதங்களை. ஆய - ஆராய. திரிவாரை - சஞ்சரிப்பவரை. இனம் - கூட்டமாகிய. உரு - நிறம். சாயல் - காயம் - சரீரம். திரி - பெண்கள். காயத்திரி - காயத்திரி மந்திரம்.

20. அஞ்சுமகம் - பிரமயாக முதலிய பஞ்சயாகம். அஞ்சும் - பயப்படும். அகம் - மனம். விஞ்சு - மிகுகின்ற. அறுதொழிலும் - ஓதல் முதலாகிய ஆறு தொழில்களையும். அறு - கெடுகின்ற. அணை - மெத்தை. பாராட்டி - பழகி. செவிக்கு - காதினிடத்து. சதுர்மறை - திறமான ரகசியம். வழங்கு - பேசுகின்ற. சதுர்மறை - நான்கு வேதம்.

21. சந்தி - சந்தியாவந்தனம். சந்தி - தெரு. முந்தி - முதலில். தொடுமிடம் - தொட்டுக் கிரியை செய்யுமிடம். முந்தி - சேலையின் முகப்பு. தொடுமிடம் - தொட்டிழுக்குமிடம்.

22. பிரமச்சரியம் - பிரமச்சரிய விரதம். சாதம் - மெய்ம்மை. தெய்வமணச்சடங்கு - தேவவிவாகக் கிரியை. ஆரிடம் - ஆரிடவிவாகம்.

23. பாசுரத்தில் - வாக்கியத்தால். எழுதரிய - எழுதற்கரிய. வழிச்செல்வன் - வழிநடத்தலினிடத்தும். மா - பெரிய. சுரத்தில் - காட்டில். பைசாசமணம் - பேய்மணம். பொருந்து - பொருந்துகின்ற இடபத்தை. தழுவி - கட்டிப்பிடித்து. அசுரத்தில் - அசுரவிவாகமுறையில். சோவைசியர் - பசுமேய்ப்பவர். (மேலேகூறிய விவாகங்களினிலக்கணங்களைத் தொகையகராதியிற் காண்க.)

24. இராக்கதமணம் - ராக்கதவகை மணத்தொன்று. மூவகையார் - மூன்று பிரிவானவர்; க்ஷத்திரிய வைசிய சூத்திரர். சிலமாதர் - (வேறு சங்கரசாதிச்) சிலபெண்களை. கந்தருவம் - காந்தருவமணம்.

25. சிறைப்படுத்தி - காவல்செய்து. பொன்றூசி - பொன்றூசியர் னைக்கனற்றொதிக்து.

26. புலவி - ஊடல். அறு - நெருங்கிய. முளைவித்து - முளைக்கின்ற விதை. மோகம் - ஆசையுண்டாய கலப்பையே - கலத்தலையே. புணர்ச்சியையே. கருவி - துணைக்காரணம், (உழுபடை). வேளாண்மை - விவசாயம், (மன்மதனுடைய வீரம்). கரிவியங் கனன்றாகிய பூமியென்னும் போல்வாரெனக்கூட்டுக.

27. மூன்றுசந்தி - உதயம், மத்தியானம், சாயுங்காலஞ் செய்கின்ற சந்தியாவந்தனம். நான்காம் ஒழுக்கம் - ஞானமார்க்கநடை.

28. அடிமுறை - பண்டைக்கிரமப்படி. மோகச்செடி - ஆசையாகிய புதர். இடறி - தடுக்கப்பட்டு. கட்டடவாவி - நிதம்பமாகிய குளத்தை. கயம் - மடு.

29. சொம்பெலாம் - (மாதராகிய) பூங்கொம்புகளெலாம். சாதி - குலம். பம்பிய - நெருங்கிய. வரம்பு - முறை. பழி - பொய். சாடு - மிகுதியாக. பல்கி - பெருகப்பட்டு. அம்பலம் - பொது இடம். சந்தி - தெரு. அம்பலாய் - பழிச்சொல்லாகி. அரும்பி - தோன்றி. வம்பு - வீண், (வாசனை). அலர் - பிறர் குறைபேசுதல், (மலர்). வடு - குற்றம், (பிஞ்சு). பரந்த - வியாபித்தன.

30. கேளா - கேட்டு. அறிஞன் - குரு. அயர்த்தது - மறந்ததை. மேல்நெறி - மேன்மையான மார்க்கம். செறிவு - நெருக்கம்.

31. கடை - இறுதி. தலை - முதல். பறம்பர் - குறவர். சோனகர் - துலுக்கர். குனர் - ஊன்விற்பவர். சண்டாளர். காளவர் - [illegible]

டர். நுளையர் - பரவர். பழையர் - கள்விற்பவர்.

32. சுதூர்த்தர் - நான்காம்வருணத்தார். கேழ் - தனக்குத்தானே சமமாகிய. உழவர் - உழுதுண்பார்.

33. புனம் - முல்லைநிலஞ்சார்ந்த காடு. ஒருவி - நீங்கி. முயன்றாய் - செய்தாய்.

34. ஒழிந்த - (இல்லறவியல்)நீங்கிய. காருகத்தியம் - இல்லறவியல். (ஆகிய) ஆச்சிரமம் - நிலையின். நெறிகள் - மார்க்கங்கள். மூவர் - (மேற்கூறிய) மூவர். படர்பயிர் - செல்லுகின்ற கொடிக்கு. கொளுகொம்பு - ஆதாரவாகிய கோல்.

35. சவுசாதி - அசௌசியகருமமுதலியவை. முயன்று - செய்து. ஓம்பி - பாதுகாத்து.

36. பண்டிதர் - அறிவுடையோர். எறி - உயர்ந்து. தே - தெய்வத்தன்மையுள்ள. பாலராய் - இடல்புடையாய். அந்தரத்து - ஆகாயத்தில். கடனோ - முறையோ.

37. நினம் - கேடு. கோள் - வலிய. பவத்தாறு - பாவமாகியசெடி. கானம் - காடு. பாசம் - கயிறு. கூளி - பேய். கற்கபாடம் - கற்கதவு.

38. சு - நல்ல. குடம் - (பூர்ண) கும்பங்கள். சுருடம் - நாய். தலைகீழ் - முறைதவறுதல். ககுடன் - சூரியகுலத்து ஓரரசன்.

39. சினை - கரு. பருவம் - பக்குவம். பைங்கூழ் - பயிர். பொதிகள் - கதிர்கள். கானல் - காடு. பொழிவது - பெய்தல். (போலும்)

40. கொழுந்துவிட்டு - மேன்மேல்வளர்ந்து. கொளுத்திய - அழுத்தமாகக் கூறிய. கழுந்து - உலக்கைநுனி. எதோ - யாதனுலோ. கடத்தினை - குடத்தை. உழுந்தென - உழுந்துபோல. உகுத்து - (உட்கொள்ளாது) புறம்போக்கி. தசையவாக - தசையுடையனவாக.

41. வருடுவது - தடவுவது. ஆசான் - குருவே. முகத்தில் - இடத்தில்.

42. சிதைந்தனன் - கெட்டனன்.

43. தனம் - முலை. ஆற்று - பற்று. கனதை - மேன்மை. கடப்படும் - கடன்படுவோன். (அதன்மேல்) கடப்படாது - கடன்கிடையாமல். இனைய - வருந்த.

44. ஊனமங்கையர் - ஊன்விற்கும் பெண்கள். துவசமங்கையர் - கள்விற்கும்பெண்கள். சுனமங்கையர் - புலைப்பெண்கள்.

45. சாந்திபுரிந்து - ஓமஞ்செய்து. வாலாமை - அசுசம்; தீட்டு.

46. ஆழ்ந்தான் - அழுந்தினஆத்திரேயன். கிளை - சுற்றம். தாரம் - மனைவி. (ஆகிய மூவரும்) வேறாய் - வெவ்வேறாகி. (முறையே) குலினம் - குலப்பெருமைக்கேடு. தீனம் - எளிமை. மைமை - சந்ததிப்பேறின்மை (ஆகிய) மூவகையின் - மூன்று விதத்திலும். மாய்ந்தார் - மறைபட்டார்கள். சூழ்தரு - சுற்றுகின்ற. நரம்பு —, தண்டம் - வீணைத்தண்டு. சுரை - சுரைக்குடுக்கை. இசையின் - ஒன்றுசேர்ந்தால். யாழ் - வீணை. வீழ்படில் - (அம்மூன்றும்) தனித்தனி பிரிந்தால். வேடர்கண்ணி - குறவர் பறவை பிடிக்குங்கண்ணி. விறகு —, வெம் - கொடிய. பலியோடு - பிச்சையெடுக்கும் ஓடு.

47. அங்கணம் - சலதாரை. உக்க - சொரிந்த. விட்ட - வெறுத்த. கொங்கணம் - ஓர்தேசம். காழகம் - கடாரதேசம்.

48. நீர்நாடு - சோழதேசம். வார்நாடு - கச்சு விரும்புகின்ற. தடை - இடையூறு. தீர்ந்த - நீங்கிய. மலைநாடு - மலையாளதேசம். எனவே மலையாளத்துப் பெண்கள் மார்பைத் திறந்துகொண்டு திரிவார்களென்பதாயிற்று. வாய்த்தது - (சமீபமாகக்) கிடைத்தது.

49. முரி - ஒடிகின்ற, வளைகின்ற. கலை - மேகலாபரணத்தை. ஆளி - ஆளுதலையுடையதாகிய. தேர் - அல்குலாகிய ரதங்களை. சிரைத்து - வெளிப்படுத்தி. புடை - பக்கம்.



50. மீடுப்ப - அகப்படுத்த. சூழல் - இடம்.

51. அம்பதி - ஆகிய ஊர். அவர் - அப்பெண்கள். பரிசில் - தன்மை. காம்பு - மூங்கில். உறழும் - ஒக்கும். அம்பதிதன் என்பதற்கு, ஆகியசாதிப்பிராட்டனெனினும் பொருந்தும்.

52. குருகு - பறவை.

53. இன்றிய - இல்லாத. மீனம் - மீன். அல்குல்வியாளத்தின் - சர்ப்பமாகிய பாம்பின். பீனம் - பெரிய. தேரை - தவளை.

55. தூங்க, — அம் - சரீரியை. காண் அலா - பார்க்கக்கூடாதது. பூண் அலா - பொருந்தக்கூடாத.

56. குலாவு - விளங்குகின்ற.

58. உழல் - வருந்துகின்ற. மறுகு - வீதி.

59. தலைநாடு - முதல் நாடு, சோழநாடு. புலை - புலைத்தன்மை. தேக்கிலைமிசைப்புனல் போல்வானென்பது - ஒட்டியும் ஒட்டாமலுமிருந்தானென்றபடி.

60. ஊடு - (வயிற்றின்) நடு. அயர் - சோர. பிடுங்க - வருத்த. வாடை - (அம்மாதர்மேற்றோய்ந்துவரும்) காற்றை. எற்று - நுகர்ந்து. (தாற்பரியம்).

61. சரதநெறி - உண்மைவழி. வீசுகு - வீரகம். (கடைக்குறை.) பரமனையார் - அன்னியர் பெண்கள்.

62. வலையர் - பரவர். சேரி - சேர்ந்திருக்குமிடம். மள்ளர் - பள்ளர். புலையர் - சண்டாளர்.

63. அம்மை - வருபிறப்பு. ஒருசார் - (அது) ஒருபக்கம். இம்மை - இப்பிறப்பு.

64. தரு - மரங்கள். இருள் - இருண்ட. வனத்து - காட்டில்.

65. சோகம் - இளைப்பு. பாகத்தால் - பங்குப்படி, தென்புலத்தார் முதலியோர்க்குக் கொடுக்கும் பாகப்படி. பகுத்து - பங்கிட்டுக்கொடுத்து.

66. கூண்டு - கூடி. வாலாமை - தீட்டு. காண்டல் - பார்த்தலால்.

67. உழிக்கொண்டலைந்து சேர்த்துக்கொண்டு திரிந்த. கண்முகிழ்ப்ப - நித்திரைசெய்ய. இழி - இழிவு. கங்குல் - இருள்.

68. பலியொன்றுமின்றி - பிச்சையொன்றுங்கிடையாமல். கன்றினன் - வருந்தினான். சென்றுசேர் - (ஓரிடத்துக்குப்) போய்ச்சேர்கின்ற.

69. வான்தானை - வாளாகிய ஆயுதம்பெறுன்ற. வாட்டி - வருத்துகின்ற. துணைக்கோட்டானை - இரண்டு கொம்பானையை. குழறுகுரல் - (கண்டத்தில் புறா முதலிய பறவைபோல) முழங்கும் ஒலியை. கோட்டானை - கூகையை. குளறுகுரல் - (அவைகள்) உளறுகின்ற சத்தத்தை.

70. சனக்கள்ளிகள் - புலைச்சாதிவிவசாரிகள். இடும் - கொடுக்கும். இதழ்ப்பானக்கள் - அதரபானக்கள். (பானம் - குடித்தல்.) கானக்கள்ளிகள் - காட்டிலுள்ள கள்ளிமரங்கள். பொதிசோறு - பொதிந்திருக்கப்பட்ட (தசையாகிய) சோறு. கடி - நீக்கப்பட்ட. ஊனக்கள் - குற்றம்பொருந்திய மது. வந்த - தாங்கிநிற்ப.

71. வீங்கி - பருத்து. திமிரம் - இருள். எய்ப்ப - போல. உடு - நக்ஷத்திரங்கள்.

72. திமிரவெள்ளம் - இருளாகிய பிரவாகம். வடிந்திட - வற்ற. படிந்திடும் - தோய்ந்துகிடக்கும். முடிந்த - கெட்ட. னளது - என்பதில், அது - பகுதிப்பொருள் விகுதி. விடிந்தது - கெட்டது.

74. கானல் - காட்டிலுள்ள. பரல் - பருக்கைக்கற்கள். பொடி - தூள். தழல் - அக்கினியில்.

75. தூரப்ப - தொடர. போற்ற - ஆதரிக்க. இருண்டு - மறைந்து.

76. கருணைநிலை - கையறுநிலை. தடுமாறி - மாறுதலடைந்து. சாக்கிரம் - தெளிவுநிலை. சொற்பனம் - கனவுநிலை. சுழுத்தி - மயக்கபானத்திநிலை. கருவி - காரணமாகிய. கரணம் - மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்னும் அந்தக்கரணங்களை. கடந்து - தாண்டி. துரியவவத்தை

சுத்த நிலையாகிய உபாதி. வீழ்ந்து - படிந்து. நோயாதிகளும் - சுத்தநிலைக் கப்பாற்பட்டதில்லை. குக்குயத்துஆய் - குக்குய சரீரத்திற்போய்.

78. என்கேன் - என்று சொல்லுவேனோ. கவுணியன் - கவுணியர் கோத்திரத்திலவதரித்த திருஞானசம்பந்தமூர்த்திநாயனார். வாய் - திருவாயில்.

79. இயமபடர்-யமனுடைய வேலைக்காரர். முடுகி - விரைந்து.

80. வேலை-சமயம். நிராகரித்து-தடுத்து. உதிரக்கறை - இரத்தமாகிய மாசு.

81. பண்ணவர் -முனிவர். புட்பகம் - தேவவிமானம். கரியுரிவை - யானைத்தோல்.

82. செம் - செவ்வையாகிய. மானம் - விமானம். மிசை - மேனின்றும். மெய்ம்மான் - திருமேனியிலிருக்கும் உமாதேவி.

83. தைவரல் - தடவல்.

84. உவர்ப்பு - வெறுப்பு.

85. யாமியம்-தென்றிசை. சாமி அந்தகன் - முதல்வனாகியயமன். காமி - கொடுங்காமியாகிய ஆத்திரேயன். அந்தரம் - மத்தியவுலகம்.

86. வெய்த - கொடுமையுடைய. ஆறு - மார்க்கம்.

87. செறிவு (கோப) நெருக்கம். குறிகொள் - எழுதுந்தொழிலைக்கொண்ட. கணக்கால் - கணக்கின்படி. பொறிகளை - எழுத்துக்களை.

88. குலநெறி - குலாசாரமாகிய. நேத்திரத்தொழில் - கண்போன்ற கிரியை.

89. நற்பு - சிநேகம். (நட்பின்றிரிவுபோலும்) நண்ணிய - நண்ணுவித்த. (பிறவினை)

90. தன்மம் - தருமம். வேலை - காலம்.

91. கோளினன் - கொள்கையுடையவன். பொரு - ஒப்பு.

92. நெறம்புனல்-வலிக்கும்நீர். மறவி - மறப்பவன். நிரக்கர குக்கியான் - எழுத்து இல்லாத வயிற்றையுடையவன். (மூடனென்றபடி)

93. வருடாதி - வருடப்பிறப்பு.

96. காணம் - கணக்கு. வீரர் - சித்திரகுத்தர். நரகவீரன் - நரகத்திற்சேரும் வலியுடையனாகிய ஆத்திரேயனை. வரவு - புண்ணியம் (தாற்பரியம்.)

98. முறைதப்புமேல் - நீதிதவறுவாராகில். தாக்கு - (அவருடைய) உத்தரவை. வைத்தகல்வது- (கீழே) வைத்துவிட்டு நீங்குவது. கப்பு-கவர்.

99. பாசம் - கயிறு. தண்டம் - தடி. எழு - தூண். கரபத்திரம் - ஈர்வாள். சிங்கம் - வேல். விறல் - வெற்றி. மழு - மழுவாயுதம். மூசு-மொய்க்கின்ற. சம்பம்-வச்சிராயுதம். முசலம் - உலக்கை. தணையம் - யானை வராமற்றடுக்குமரம். வாட்பூசல்- வாள்யுத்தம். புறம் - பக்கம்.

100. தூலம் - பெரிய.

101. வைவச்சுதபுரம்- யமன்பட்டணம். துளங்கி - அச்சப்பட்டு. சூழ் - ஆராய்கின்ற. திறை - கப்பம். கிங்கிரர் - ஏவலாளிகள். மல்லர் - மற்போர்செய்வோர்.

102. பெருவியாதி-கிரந்தி. குரு - ஓர்நோய். சேட்டுமம் - ஐயம்.

104. ஊர்தியென் - (எருமைக்கடா) வாகனமென்று சொல்லப்பட்ட. வங்கம் - நாவாய், கப்பல்.

105. நீங்குபு-நீங்கி. வைதரணி - யமபட்டணத்தருநதி. உந்து - செலுத்தப்பட்ட. ஒண் - அழகிய. கயல் - சேல்மீன். பந்தி - வரிசை. சேர்தரு- சேர்கின்ற. சினை - முட்டை.

106. பரிவாரத்தொகை-சூழ்ந்திருக்குங்கூட்டம். வீங்கு - மிகுந்த.

108. கோட்டம்-கோனல். கடைகாவலர் - வாயில் காப்பாளர்.

109. கடைகள் ஏழினர் - வாயில்கள் ஏழினுமுள்ளவர். நந்தி-திருநந்திதேவர். அமைந்து-அடங்கின்று.

110. அருண்முறை - அருளுடையின்படி. ஆர்ப்பு - மகிழ்ச்சி.

111. கின்னரம்-வீணை. மிழற்ற- வாசிக்க. தந்திரி-யாழ்நரம்பு. மீட்டிற-



றுருக்கி. பின்னைகப்பந்திகள் - சடைமுடியின் வரிசைகள்.

112. மாலோகத்தவர்- வைகுண்டத்திலிருப்பவர்.

113. அணிமாதி ஆதி - அணிமா முதலிய. சித்திகள்-(அட்டமா) சித்திகள். ஈசானன் - திக்குப்பாலகரிலொருவர். பூங்கல் வேந்தர்-சூரியர்கள். புனிமாற-தாங்கிநிற்க. படிமக்கலம்- கண்ணாடி.

114. எறிழ்வலி-மிக்கபலம். மறுஅற - குற்றமில்லாமல். இருகோடி- இரண்டுபக்கம். வருட - தடவ.

115. நன்மதை - நருமதை. இரட்ட - வீச. வயிறுவாய்த்த - பெற்ற. (தாற்பரியம்) பொருப்பு - (இரவுஞ்ச)மலை. கயனை-கயமுகாசுரனை. களிறு-யானையாகிய விநாயகர்.

116. நீள்நித்தம் - நீண்டகாலம். விசிரத்த-வரிசைபடுத்திப் பதித்த. ஆணிப்பொன் - மாற்றறியும்பொன்.

117. மருங்கு - இடை. இருசருமம் - யானைத்தோல், புலித்தோல். உடை - உடுத்தல். பணுடவி - படத்தின்மிகுதி. பணிலத்தோடு - சங்கக்குழை. உரகருண்டலம் - சர்ப்பகுண்டலம்.

118. கங்கணம் - கைவளை. துயல்வரு - அசைகின்ற. பிரமை - மயக்கம். அல்லது, மெய்யறிவு.

119. கணவழுக்கி - கண்கூசி. வழிக்கொண்டு - நடைகொண்டு.

120. சரணம் -அடைக்கலம். அநுபூதியாய் - சுவாநுபவப்பொருளாயுள்ளவனே. மேதியான் - கடாவாகனமுடைய யமன். யாறு - வது.

121. விதிர்ப்பு - நடுங்க. ரோமஞ்சிலிர்ப்ப - மயிர்க்கால் தடிப்ப. துகிலொதுக்கி - வஸ்திரத்தை உள்ளடக்கி. ஏறு - அங்கீகரிக்கக்கூடாது.

124. வீடுபெறு - வீடுதலடைகின்ற. சுவர்க்கம் - மோக்ஷம். விகற்பிப்பான் - வேறுபடுத்திக் கூறல். ஏன் - எதற்கு. [ஏன், என்னென்பதன்விகாரம். மேல்வருவனவுமிது.]

125. கைப்பு -வெறுப்பு. ஒழுகு- மிகு. (தாற்பரியம்)

126. தக்கவேதியன் - தக்கனாகிய பிரமன். சேய்ஞலூர் மறையவன் - சண்டேசுரநாயனார். மறைப்பாலகன் - மார்க்கண்டமுனிவர். வாளுன் அழிவு - (வஞ்சனையாகிய) ஆயுட்கால நீக்கம். முப்புரப்பொலிவு - திரிபுரத்தின் வாழ்நாள்விளக்கம். மாற்றும் - விலக்கும். செயல் - செய்கை. விதிமுறை - விதிக்கிரமம். தருமன் - யமன்.

127. முந்து - முற்படுகின்ற. அக்கால் - அந்தக்காலத்தில். மந்தகால் - மந்தமாருதம். வழங்குவோம்- சொல்லுவோம்.

128. இளையாடும் - மூங்கில்களை அசையும். அளையாடி -தோய்ந்து. தளையாடி - கண்ணிகட்டி. மடல் அவிழ்க்கும் - இதழ்களை விரிக்கும். மருங்கில் - பக்கத்தில். [இக்கவியில் அபிடேகத்துக்குரிய தேன், தயிர், பால், அமுதம்; இவைகள் முறையே வரக் கூறிய வியப்புக் காணக.]

129. அலைந்து - திரிந்து. அலையாமல்-வருந்தாமல்.

130. ஆர்த்த - (உலகில்) நிறைத்துவைக்கப்பட்ட. கூர்த்து (விகாரம்)-நுணுகி, அடப்பமாக. (உலவு-சஞ்சரிக்கின்ற.)

131. வசந்த ஊதை - தென்றற்காற்று. போது - காலம். ஐ - சாரியை. தைவரல் - தடவல்.

132. ஐந்திணை - ஐந்துநிலம்; குறிஞ்சியாதிய நிலம். இருபாதுயிர் - உயர்திணை, அஃறிணையாகியஆன்மாக்கள். தவிர்தி - நீங்குவாய்.

133. கோளா - கேட்டு. இரங்கி - வருந்தி.

134. பின்னல் அணி - பின்னுதலையுடைய. மவுலி - முடியாகிய.

135. மேறாம் - இடத்தும். வருமம் - (யுத்தத்துக்குச் செல்லும்)வைராக்கியம். குறிக்கொளவெனை - குறித்துக்கொள்ளுங்களென்று. பருமமேதி - பெரிய எருமைக்கடா.

136. வாராதவழி -(இதன்முன்

னொருவரும்) தெரிந்திராத மார்க்கம். ஆராமை - (அன்பு) அடங்காது மேலெழுதல்.

## பதின்மூன்றாவது:—தக்கன் வேள்விச் சருக்கம்.

1. மூலைத்தலம் - கொங்கைத்தானம், மார்பு. அறத்திறவன் - தருமதேவதை.

2. பின்னம் - வேறுபாடு. சிற்குணன் - ஞானகுணன். ஒருவன் - சிவபிரான்.

3. துடைப்பவனை - அழிக்கின்ற ருத்திரனை. உடைப்பிரமம் - சகலமுமுடையபெரியபொருள். அருளி - சிருட்டித்து.

4. பூதவகை - (பிருதிவி முதலிய பஞ்ச)பூதங்களின்பிரிவை. பூரணம் - நிறைவு. பிரமம் - பெரிய கடவுள். காரணமாம் - (ஒவ்வொரு) ஏதுப்பற்றி உண்டாகும். முகமனுரை - உபசாரவார்த்தைகள். (அவை) கடுக்கும் - போலும்.

6. சடுத்து - ஒத்ததாக. சிதைப்பான் - அழித்தல். மறைத்து - திரோபவஞ்செய்து. பான்மை - தன்மைக்கு. பயில் - தங்குகின்ற.

7. விள்ளாமை - வேறுபடாமல். மேவா - பொருந்தி. தள்ளாமை - நீங்கப்படாமல். எள்ளாரும் - எள்ளிடத்து நிறையும்.

8. மீதுஎலாம் - (தன் திருமேனியின்) மேற்புறமெல்லாம்.

9. சேவினன் - இடபவாகனத்தையுடைய சிவபிரானுக்கு. யாரை - எவரை. இறைஞ்சின் - வணங்கினும். (அவ்வணக்கம்.)

10. கூதி - புகலிடம். நவ்வி - மான்.

11. கதியின்மேல் - புகலியின் மேன்மை கருதா - எண்ணி. அதிகன் - உயர்ந்தவன். ஆவெனும் - ஆவேனென்னும்.

12. அந்தமானது - அழகாகியது. அணித்தாம் - சமீபமாம். கந்தம் - கம்முடைய. முந்த - முதலில். முயன்று - செய்து. சொற்றான் - சொன்னான்.

13. கூர்ந்த - மிகுந்த. பாந்தள் - பாம்பு.

14. மேகபதம் - மேகமண்டலம். விரிஞ்சன் - பிரமன்.

15. சுந்தரி - அழகுள்ளவளாகிய. தோகை - மயில்போன்ற உமாதேவி. இவைநிற்கும் - இவ்வாறுங்கள் நிலைக்கும்.

16. மழ - இளமை. கூர் - மிகுந்த. இவ்வாறோ - இந்தவிதமோ. பணித்தது - சொல்லியது. பயின்றான் - செய்தான். தரம் - தகுதி. காளம் - நஞ்சு.

17. கல் மெல்முளை - கல்லின் மேலுதைந்தமெல்லிய சிறுகழி. சிதைவு - அழிவு. கம்மியன் - தச்சன். பெருக்கம் - ஐசுவரியம்.

18. முறைபுரிய - (தான்சொல்லிய) கிரமப்படி நடக்க.

19. வேட்டு - விவாகஞ்செய்து. உரைசெய் - உபதேசிக்கின்ற. ஒழிவு - கேடு.

20. உழன்றிட - சுழன்றுதிரிய. சால்பு - மாட்சிமை. தருமற்கு - யமனுக்கு.

21. அனல் - அக்கினிதேவன். வேட்ப - மணஞ்செய்ய.

22. புத்திரைசனதி - புத்திரையாகிய சனதி. தத்தை - கிளிபோன்றவள். வித்தகம் - ஞானம். அத்திரி - அத்திரிமுனிவர். சோமன் - சந்திரன். அசுபதிமுதல் - அசுபதி முதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்கள்.

23. இமவான் - இமயவரசன்.

24. கவிகள் - குரங்குகள். முதல் - முதலியோர். புலகனின்றோர் - புலகன் பெறப்பட்டவர். கவியை - சுக்கிரனை. திரு - திருவென்பவளை. அவுணர் - அசுரர்.

25. ஆதித்தர் - பன்னிரு சூரியர்கள். பொன்னவன்சேய் - இரணியனுடைய புதல்வனாகிய பிரகலாதன்-



அவன்மகன் - அப்பிரகலாதன் புத்திரனாகிய விரோசனன்; அவன்சேய்மாவலி - அவன் மகனாகியமாவலி. புதல்வன் - (அம்மாவலியினுடைய) மகனாகிய. வாணன் - வாணாசுரன்.

26. காலை - காலையென்பவள். ஆயு - ஆயுவென்பவள். மேலையோர் - மேன்மையுடையவர். நால்வர் - தார்க்ஷியன், அரிஷ்டநேமி, அருணி, வருணியென்பவர். கலுழன் - கருடன். அருணன் - சூரியன் தேர்ச்சாரதி. மூவா - கெடாத. ராகுவை - இராகுவாகியபாம்பை. பயந்தாள் - பெற்றாள். சிங்கியை - சிங்கியையென்பவள்.

27. இளை - இளையும். கபிலை - கபிலையும். பாரி - (தன்) மனைவி. மருத்துவர் - தேவவைத்தியர். உலப்பில் - கெடுதலில்லாத.

28. எண் - எண்ணுகின்ற. இளைய - விருத்தியாக. எண்பெற்றான் - எண்ணபயனை யடைந்தான். விண்ணோர் - விண்ணுலகத்தார். இளையா - கூட்டமாக. வீடு - மோக்ஷம். பெண்ணிளையால் - பெண்சுற்றத்தால். பெருங்கிளை - பெரியவிருத்தி.

29. சித்து - வல்லமை. அகந்தை - கருவம். இருவகை - கல்வி, செல்வமாகிய பிரிவு. மத்தநோய் - மயக்கவியாதி. உன் - உன்னே. கொளுவார் - நினைப்பார், (உண்பார்.)

30. மகக்குழாம் - (தக்கனுடைய) பிள்ளைக் கூட்டம். சோமன் - சந்திரன். ஆரல் - கார்த்திகை. உரோணி - உரோகணி. உகப்பு - மகிழ்ச்சி. கேளா - கேட்டு. விதிமகன் - தக்கன்.

31. திசை - பக்கம். தீரான் - நீங்காதவனாய்.

32. உழன்று - வருந்தி. ஓரம் - பக்ஷபாதகம். மேல்நெறி - உயர்ந்தபதவி.

33. முதிரை - அவரை, காராமணி முதலிய பயறு. மோதகம் - பலகாரவகையிலொன்று. (இவற்றைப்படைத்து நைவேத்தியஞ் செய்யும்) விழாவில் - திருவிழாநாளில்; சதுர்த்தி தினத்தில். அதிகவிறு - (விநாயகரைப் பரிகாசித்துத்) தற்பெருமை. அதனை - அந்த விநாயகக்கடவுளை. சதுர்த்தியின் - (ஆவணிமாதம் முற்பக்கத்துச்) சதுர்த்தி மட்டில். அமைத்து - அடங்கச்செய்து. நீத்தான் - போக்கினான். (இச்சரிதம் கந்தபுராணத்துள் விரிவாகக் காணலாம்.) தீர்தி - நீங்குவாய்.

34. நான்கு - நான்குகலை. ஏக - குறைய. வழிவிடப்ப - வழிகாட்டப்

36. அருகு - (எடையின்) பக்கம். அயல் - (மதியின்) பக்கம். பணிவுறுவ - ஏவல்கேட்க. வருமுறையதனால் - வந்த முறைப்படி. தேய்வும் - கெடுதலையும். மதி - மாதம்.

37. பிதற்றலும் - பேசுதலும். புலகன் - (தக்கன் மருகரி லொருவனாகிய) புலகமுனிவன். கிறவி - (மாதந்தோறு மொருமுறை தேய்கின்று) சிறுத்தி. புரை - குற்றம்.

38. சாதனை - பயிற்சி. சதி - கற்பாட்டி, உமாதேவி.

39. முராரி - விஷ்ணு.

40. சகளம் - உருவம். நிட்களம் - அருவும். தோற்றம், ஒடுக்கம் - உற்பத்தி நாசம். நிகழ்தர - நடக்க. அகளம் - அருவம். அருள் - சத்தி.

41. அகிலம் - எல்லாவற்றினிடத்தும். ஆம் - ஆகின்ற. உணாவை - அறிவை. நிகிலமும் - எல்லாப்பொருளும். மாலானோன் - மயக்கமுடையவனாயினன். பிரமம் - சூரியம், அருவம். (மால் பிரமமென்பவற்றில், விஷ்ணு பிரமப்பொருள் என்னும் ஒரு நயப்பொருளுங்காண்க.)

42. தானக்கம - சனனம்.

43. புணர்ப்பு - செய்கையை. உறு - உறுவிக்க. தனைப்பிறல் (தம்மை)நீங்குதலின்றல் பிறனெயுதி. (வேறு) சனனமெடுத்து. உறு - பிறவிப்பொருளில் வந்தது.

44. வலம்புரியென - வலம்புரிச் சங்குபோல.

45. கதம் - கோபம்.

46. வெருவி - பயந்து. சூழ்ந்து - ஆராய்ந்து.

47. ஈய்ப்ப - செலுத்த. மாது - பெண்ணாகிய மகளையும். மருமகன் - மருமகனாகிய சிவபிரானையும்.

48. குலிசம் - வச்சிராயுதம். அது வள - அசைய.

49. பூதர் - பூதகணங்கள். சிறுவிதி - தக்கன். செல்விகாந்தன் - உமாதேவிநாயகன். கடை - வாயிலில்.

51. அல்கல் - குறைதல்.

52. வளவிதே - நிறைவிருக்கின்றனவா, நீடுவாயாக - நீயிருப்பவனாக. (வளவி தாவொருகுறிப்புமொழி.)

53. புரிவன - செய்வனவற்றை.

54. படையினர் - ஆயுதங்களையுடைய தேவர். கடையின் - கீழிடத்தில். ஆர் - பொருந்திய. முகனார் - முகமுடையவராகிய அவ்வெம்பிரான். கோயிற்கடை - ஆலயத்தின் திருவாயில். படையினர் - பக்கத்திலுள்ளார். (கீழிடத்திற் பொருந்திய முகம் - அதோமுகம்; அதனோடு சிவபிரானுக்குத் திருமுகங்களாறென் றுணர்க)

55. சாரதர் - பூதங்கள். அடித்தொழும்பர் - அடித்தொண்டர்.

56. சேறி - (உள்ளே) செல்வாய்.

57. குழகு திர்பணிவீர் ஆதில் - அனுகினவராகி வணங்குவீராகில். மன்றுதொட்டு (உங்கள்) கீறித்தல் முதல். நம்பி - சிறந்தவனே.

58. காமன் - கற்பகத்தையுடைய இந்திரன். காமனுநெதி - காக்கின்ற மநுநீதி. சோமன் - வஜ்ரம். மாமன் - பெரிய தலைவன்.

59. தீர்த்தனன் - நீக்கினேன். அகந்தை - அகங்காரம். செல்வத்துர வினை - பொருட்டினைற்றை. [துரவு - கிணறு.]

60. செய்கலர் - செய்திலர். வெருவு - அஞ்சுகின்ற. வைத்து - வைக்கோலின் கூட்டம்.

61. வயிறு ஆற்றுமல் - வயிற்றுப்பசிபொறுக்கமாட்டாமல்.

62. வீதியிலார்க்கு - செல்வமில்லாத சிவனுக்கு.

63. தீ இல் - (மயானத்) தீயிடம். திக்கு எலாம் - திசை முழுதும். உடைதொட்டு. வஸ்திரமாகவுடுத்து.

64. சமநடம் - சுடுகாட்டிலாடுதல். வணங்குதிர் - வணங்கினீர்.

65. பொன்மை - அழகின்றன்மை. இருவர் - கார்த்திகை, உரோகணியாகிய பெண்கள். அன்மை - வேண்டாமை. ஆய் - ஆக. (எச்சத்திரிபு) வேட்டு - விரும்பி. சதியை வேட்டான் - உமாதேவியைமணந்த சிவபிரான்.

66. புள் - காகமுதலிய பறவைகள். இடை - நடுவில். தட்ப - (அவசகுனத்தால் தடைசெய்ய.

67. கணகலவனம்-ஒருவனம். நூர்யில் - மதிலுறுப்பு. கோட்டம் - கோயில். தெற்றி - திண்ணை. அறப்புறம் - அறச்சாலை, தருமசாலை. வேதி - ஓமகுண்டம்.

69. உழி - இடத்தில். ஓலைவழி - திருமுகத்தின் மூலமாக.

70. முகூர்த்தம் - இதனை, இரண்டரை நாழிகையென்றும். மூன்றே முக்கால் நாழிகையென்றுஞ் சிலர் சொல்வர்.

71. கருப்பம் - இக்கு, திசை. பந்வமாதவர் - தவப் பெண்கள். மேல் - மேன்மை.

72 கருடத்துரங்கம் - கருடனாகிய குதிரை. கலை - கல்விநூல். [கலை - ஆண்மான். அறுபத்துநாலு கலையோடொருமானென்று கூறிய வியப்புக் காண்க.]

73. புக்கனர் - (தக்கன்யாகசாலையுட்) புகுந்தனர். புகல் - புகலு (கடைக்குறை) உண்டோ - (ஒன்று) உளதோ. புகலாமுன்னர் - (வாய்) பேசுதற்கு முன்னம்.

74. மவுனர் - யோகிகள்.

76. வடவரை - மகாமேருப்போதும். தறி - தம்பம். பாரிசாதம் - கற்பகதருவிலொன்று.

77 பணிப்ப - சொல்ல. மோனை - ஆதி. இரதம் - இரசம். வருக்கம் - வகை.

78. கேரடகம் - பூந்தட்டு. பணிக்குறை - வேலைக்குற்றங்கள்.

79. தருமன் - இயமன். குரவன் - ஆசாரியன்.

80. மடித்து - தடித்து. மடித்தல் - தடித்தலென்பதைத் திருமால் சிவபிரானை எருக்கம் 7-லும் தக்கன் வேள்வி யழிந்த சருக்கம் 58-லும் காண்க.

81. படருவான் - செல்வானாகிய தக்கன். விழைப்பான் - உண்டாகும் பொருட்டு

83. நிச்சம் - எப்பொழுதும். விச்சை - அறிவு. விதி - பிரமன். எச்சம் - குறை.

84. பன்னொருவர் - பதினொரு ருத்திரர். நேர்வார் - ஒப்பவர். ஓதை - நாதம். வித்தா —, இதன் வடிவம் வட்டம், அமுதத்துளியென் றுரைப்பவர். மூல உருத்திரற்கு - காரண உருத்திரராகிய சிவபிரானுக்கு.

85 சொல்வார் - கூறுவர். தமது - சிவபிரானுடைய. உருப்பெற்றோர் - சாரூபபதவியடைந்தவர். அங்கிசம்புவின் கணத்தோர் - காலாக்கினிருத்திர கூட்டத்தார். தாது ஐந்து - இரும்பு, செம்பு, ஈயம், பொன், வெள்ளி. சுவணம் - பொன்.

87. அமுது - சோறு. கங்கண் - திருவாணி. குஞ்சிதபவுரி - காலைத் தூக்கியநடனம். கூத்தன் - விளையாட்டுக்காரன். கஞ்சுகி - பாம்பு. சருத்தன் - மனமுடையவன். கருத்தன் - கடவுள். பன்றி, மீன், ஆமையென்று - இம்மூன்றவதாரமு மெடுத்த திருமாலே.

88. கழி - (இறந்தவரினின்றும்) நீங்கிய. அழி - மூர்க்கம். அலகை - பேய். விசித்தன் - வேறுபாடுடையவன்.

89. கறை - குற்றம். கெழு - பொருந்திய.

90. திகம்பரன் - திருவாணி. மருங்குல் - இடையும். நெஞ்சம் - மனமும். ஆசை - திசை, (அன்பு). உடை - சேலை, (உடைமை). திறை - காட்சிறை.

91. அவ்வவர் - அந்தந்தமுனிவர். ஆபிசாரம் - ஒருயாகம்; அஃதாவது பிறரைக்கொல்லுதற்காகச் செய்யப்படும் யாகம். முயல் - (அவ்யாகத்தி லெழுந்துவந்த) முயலென்னு மிருகம். வேங்கை - புலியிடத்தில். வெவ்வு - கிராகிக்கின்ற. உரி - தோல். நவ்வி - மான். உடை - உடுக்கு. கதுவலை விளங்குகின்ற தலைமாலை. வெவ் அடர் - வெப்பம்நெருங்கிய. படையா - சேனையாக.

92. பவனம் - உலகத்தில். ஊன்று - பதிகின்ற.

93. வீறகீர் - மிருகத்தலம். உகாந்தம் - யுகமுடிவில். எரி - வடவைத்தீ. வெளி - ஆகாயம். ஈறு இலாமையினுல் - கெடாதிருத்தலாலே. வைகு - இடையூறு. சேவாய் - இடபமாகி. ஒருதான் ஆக்கும் - (சிவபிரானைத் தாங்கி) ஒருகாலாலே நடக்கும்.

94. மறையை - (சோமகாசுரன் திருடிக்கொண்டு சமுத்திரத்திலுள் ளொளித்திருந்த) வேதங்களை. மீட்டு - திருப்பிக்கொண்டுவந்து. கமடம் - ஆமை. வெற்பை - (அமுதக்கடையும்போது மந்தர) மலையை. மகிதலம் - பூமி. கோட்டால் - கொம்பால். ஏனம் - பன்றி. மா - பெரிய. மால் - விஷ்ணு. மால் - மயக்கத்தைத் தைந்தர் - வயிரவர் முதலியபின்னைகள். காட்டம்-(அம்பினுடைய) கண். ஓடு - (அந்த அமையின் முதுகாகிய) ஓடு. கோடு - (அப்பன்றியின்) கொம்பு.

95. கயம் - யானை. அவுணக்குன்றம் - இராக்கதமலை. கயமுகாசுரன். வியம் - உடல். உருது - பொருந்தாமல். அயன்மதம் - பிரமன்கருவம். சிரம் - தலை. அந்து - அந்தலை. பலிக்கலம் - பிச்சா பாத்திரம். அ - அந்த. மாலாதி - இந்திரன் முதலியோர்.

96. வாசவன் - இந்திரன். வேறுருவாய் - வேறாகிய (பூத) வடிவாகி. பூசல் - போர். வெகுதத்தின் - கொடியசோபத்தால். ஊர்த்த - செலுத்திய, பிறப்பித்த. சலந்தரன் - சல

ந்தராசுரன். வெற்பிலீசன் - கயிலாசமலையிலுள்ள சிவபிரான். அந்தணன்போல்-பிராமணன்போல (வந்து). நேமி - (பூமியிற்றிருவடியாற்கீறிய) சக்கரத்தால். இருகூறு-(சலந்தரன்) இருபிளப்பு. (இச்சரிதங் கந்தபுராணம் ததீசியுத்தரப்படலத்தில் விரிவாகக்காணலாம்).

97. வீந்தவன் - இறந்த சலந்தரன். காந்தை - (சலந்தரன்) மனைவி. மயானத்தாடு-(பிருந்தையைச்சுட்ட) சுடுகாட்டின் மத்தியில்.

98. தரிக்குவன் - (நீகூறிய எல்லாவற்றையும்) அணிவன். விடுப்பன் - நீக்குவன். நிகிலம் நாயகன்-எல்லாந் (தானாகிய) தலைவன். நிகழ்ந்தது -(இங்ஙனம்) நடந்ததை. ஞாலம்-உலகம். நிகழ்த்தும் - சொல்லும்.

99. உந்தை - உன்பிதாவாகிய. அவியும்பெய்து- அவிப்பாகமுங்கொடுத்து. சிரம் - நெடுங்காலம்.

100. பாங்கு - உரிமை. பரிகலம் - பாத்திரம். எந்தை - என்பிதாவாகிய பிரமன்.

101. எண்ணு-எண்ணி. மருகா-மருமகனுக.

102. பற்றிலன் - (அச்சிவனிடத்தில்) அன்பில்லேன்.

103. முயற்சி-ஊக்கம். வலிப்ப-வலிந்துசொல்ல. இறையின்றி - சிவபிரானில்லாமல். சடம் - பொய். ஊக்கம் - முயற்சி.

104. இயனும் - (யாகத்தின்)இயற்கையையும். அட்டு - கெடுத்து. யூபம் - யாகத்தம்பம். ஆவிகழியுமட்டு - உயிர்நீங்கும் அளவில். ஆடும்-அசைக்கும். யூபம்-உடற்குறைப்பிணம். (ஆம்)

105. கலாபம் - மேகலாபரணம்.

106. பசுக்கள் - ஆன்மாக்கள். பசுபதியை- (அவ்) வான்மாக்களுக்கு நாயகனாகிய சிவபிரானை. பண் - தகுதி. பசு - பசுமாடு. படுத்து - (யாகத்தில்) கொன்று.

107. முசுக்கள்-குரங்குகள். கல்வை - பழிமொழி. உசுக்கள் - ஒருவகைப்புழுக்கள். அரிப்ப - கெடுப்ப. பசுபதி - ஆன்மநாயகனாகிய சிவபிரான்.

109. யாங்கும் - எவ்விடத்தும். அறிவித்து - அறிவித்தால் (எச்சத்திரிபு).

110. இருகு - வஞ்சம். கோப்பு-கோவை, சேர்க்கை.

111. திருமலை - ஸ்ரீகயிலாசமலை. ஓலக்கமண்டபம் - அரசிருக்கைமண்டபம். சிற்சூது - ஞானவிளையாட்டு. கவறு - (சொக்கட்டான் விளையாட்டில் உருட்டும்) பாச்சிகை.

112. புடை - பக்கத்தில். விடையம் - காரணமாக. ஆர் - நிறைந்த.

113. சூது -சொக்கட்டான்காய். கிடத்தினள் - கீழே வைத்தவளாய்.

114. தன்னையர்-தன்மூத்தோர்.

115. வல்லிக்கொம்பு - வல்லிக்கொடியும் பூங்கொம்பும்போலும் உமாதேவி.

116. ததிநிலம் - (யாகத்துக்கு உழுதன் முதலிய செய்து) பக்குவப்பட்ட பூமியில். குண்டம்-ஓமக்குழி. கீண்டு-கிழித்து, தோண்டி. சமிதை-ஓமவிறகு. சாலிமுதிரை - நெல்பயறு முதலியனவாகிய. வித்து-விதை. தீவினை - அக்கினிகாரியம், (கொடியவினை).

117. சுதை-சுண்ணும்பு. சுதைமகள். தகவிலன் - உரிமையில்லாதவனும். சுதை - பால்கொடாப்பசு. சுதை - அமுதம். ஆலம் - விடம்.

118. ஆயிழை - பெண்கள். பாசவர்க்கம் - அன்பின்வகை.

119. பயந்தனள் - பெற்றவளாகிய தாய். பயந்தனள் - பயப்பட்டாள். பதகன் - பாதகனாகிய தக்கன். விருப்பினர் -விருப்பமுடையவராகி. அயர்ந்தனன் - சோர்ந்தவனாகி. கலையுரிவை - மான்றோல். போர்த்தான்-மூடிக்கொண்டவனாகிய தக்கன்.

120. அயர்த்தனை - மறந்தாய்.

121. அமுதக்கடல் - பாற்சமுத்திரம். பாயல் - படுக்கை. சாலை-யாகசாலையானது. நண்ணுதற்கு -அடைதற்கு. உரித்தோ - உரிமையுடையதோ.



122. பாரணம் - உண்ணுதல். பகுதினர் (அத்தேவர்கள்) உண்டனர்.

123. தவிர்க்க - நீங்குக.

124. மூர்க்கன் - ஆங்காரனுகிய தக்கன்.

125. தூசர்-படைஞர். அந்தரம்-அண்டங்கள். மேனி - வடிவம்.

128. சிட்டர் - சன்மார்க்கர். பரிக்கும் - பாதுகாக்கும். தோன்றலார்-(உன்கண்ணுக்குப்) புலப்படாதவராகிய சிவபிரான்.

129. யாவரே-எவராயினும். பாவரை - பாவிகளை. அடுதல் - கொல்லுதல். படாதெனில் - (அது) கூடாதாயின். பழி - நிந்தையை. மேல்வைத்து (அப்பாவிகள்) பெரிதுமத்தி.

130. மானத்து- விமானத்தில். கமலம் - மேகம். நீலங்கள் - கண்கள். (இவையுருவகங்கள்)நாணி-வெட்கப்பட்டு.

131. கணக்கர் - சிவகணங்கள். ஓரந்திட்டு - ஓட்டி. அன்னேன் - அத்தன்மையுடைய தக்கன். அபிசாரம் - கொலைக்காகச்செய்யும் யாகத்தில். தூணங்கு - இருள்போல். எழுதோன்றுகின்ற தறுகண் - அஞ்சாமையுடைய. பூதம்—,

134. வறிதா - பயனில்லாமல். வேரம் - வேர்வை. குறிப்பு - நினைப்பு.

---

பதின்ஞாலாவது:—தக்கன்வேள்வியழிந்த சருக்கம்.

1. கொடுமுடி - சிகரம்போன்ற தலைகள். சூர்த்த - பயத்தைச்செய்கின்ற

2. கோளகைமுகடு - வட்டமாகிய உச்சி. கண்டகம் - வாளாயுதம்.

3. கடப்ப - பாய. குழைப்ப - குழைக்க. தமிப்ப - அழுக்க. எற்று - எதிர்த்து. இறுப்ப - அழிக்க.

4. என்பணிக்கு - என்னவேலைக்கு.

6. தந்தான் - தந்த வீரபத்திரர்.

7. மீ போர்வை- மேலாகியதோல். தானை - (தோலாகிய) ஆடை. ஏனமருப்பு - (விஷ்ணுவாகிய) பன்றிக்கொம்பு. சேல் - (விஷ்ணுவாகிய) மீனின். கண்களும் - விழிகளும்.

8. உரவு -வலிமை. சிங்கவேற்று - நாசிங்கத்தின். உரிவை - தோலாகிய. உத்தரிகம் -அங்கவஸ்திரம். மாசுணக்கங்கணம் - பாம்பாகிய கைவளை.

9. கச்சு - (ஆதிசேடனுகிய) இடைக்கயிறு. காயகங்கை - ஆகாயகங்கை. குடர் - குடல்.

10. வடி - நீண்ட. தொடி-தோள்வளையாகிய. பணி - பாம்புகள்.

11. கண்டகர் - பகைவர்.

12. பொறி - (கேடயா) க்கினி. கனற்ற - சுட.

13. கன்னி - அழிவில்லாமையுடைய. கா - காக்கின்ற. [அழிவில்லாமையுடைமை - "ஊழிதோறூழு முழுவுலகீன்றுமல்லாயிருப்பாளு முன்னைக்கு முன்னாய்"? என்பதனாலுணர்க. [திருவிளையாடற்புராணம், திருக்கைலாயப்புகழ்ச்சி 2-ஆம் பாட்டு.]

14. கப்பணம் - நெரிஞ்சின்முள் வடிவாகிய ஆயுதம். பிண்டிபாலம் - எறியாயுதம். கணிச்சி -மழுவாயுதம். முட்கரம் - சர்வாள். வை - கூரிய. சுரிகை - வாள். தோட்டி-அங்குசம். வெதிரம் -அரிவாள் (குறுக்கல்வீசாரம்). துப்பு - வலி. முசலம் - இருப்புலக்கை. படை - ஆயுதம்.

15. முருடு........................ காளம்—,(ஆகிய வாத்தியங்கள் படிவெட்டும். (இவற்றுள், இடடு-இரண்டமாமாகியமத்தளம்.) கொடுங்காலம்-கார்காலம்.

16. சண்டன், மணிமான் - படைத்தலைவர். முரணி - விரோதித்து. சாரிகைதிரிய - இடமும் வலமுஞ் சுற்றித்திரிய.

17. முகத்தன -முகத்தையுடையன. கலை - ஆண்மான். வயப்புலி - சிங்கம். உளை உத்தரி - பிடரிமயிரையுடைய குதிரை. கலை-ஆண்குரங்கு.

முகத்திலும் - இடத்திலும். வாவ - தாவ.

18. அடித்தலங்களில் - கால்களால். உறுக்க - திசையு, நெறுங்க. மிசைவன - உண்பன. நெடு - இருப்பிடம். ககனம் - ஆகாயம்.

19. கரி - யானையை. கொடு - கையிற்கொண்டு. பாரிடம் - பூதம். வீரசேனானி - வீரதிங்கம், வீரபத்திரர்.

20. காளி - பத்திரகாளி, வஞ்சனி, காளிகள் - பத்திரகாளி யேவற்பெண்கள். கலுல - நெருங்க. கூளி - பேய். சிந்து - யானை. குறள் - பூதம். புலிப்பறழ் - புலிக்குட்டி. குழும - கூட. ஆளி - சிங்கம்.

21. அதிர்ந்தன - கடுங்கின. ததுதி - கூட்டங்கள்.

22. ஞாளி - நாய். குரைத்தன - குலைத்தன.

23. தன்மகம் - (பிரமன்) தன்னுடைய யாகத்தை. கடிந்து - முனிந்து. தான் புரிவான் - (தக்கன்) தானே செய்வானும். மிக்கன் - உயர்ந்தோன். காண்டும் - காண்போம்.

24. தழனித்சகைக்கு - ஓசையின் பெருமைக்கு. மால் - மயக்கம். திசைக்கும் - திசைப்படையும், (திசைக்கும்). அசைத்து - உயர்த்து. அயரும் - செய்யும்.

26. ஆதிநாயகன் - சிவபிரான். புதல்வனை - புத்திரனாகிய விநாயகனை. முன்னிடாது - முன்வைத்துக் கொள்ளாமல்.

27. திளைக்கி - நிலைகலங்கி.

28. உதிரக்கோலம் - இரத்தத்தாற் கோலம். இட்டென - செய்தாற்போல. விழித்தனவாய் - பிளக்கப்பட்டனவாகிய வாய். குருதிகாலவிட்டன - இரத்தமொழுகச்செய்தன. கால - தொங்க.

30. சாரதர் - பூதங்கள். ஆலை - கரும்பாட்டும் எந்திரம். பாலைகிழத்தி - துர்க்கை. கலம் - மரக்கலத்தை.

32. கொடிப்படை - முற்படை. அழன்று - கோபித்து. அங்கி - அக்கினி. தமனியத்தலைவன் - குபேரன். திமிலம் - பேரொலி.

33. மணிமான் - பூதத்தலைவன். சண்டன் - பூதத்தலைவன். சாரதர் - பூதர்.

34. தழன்முதல் மூவர் - அக்கினி, யமன், நிருதி.

36. தடிந்து - அறுத்து. துமித்து - வெட்டி. மடுத்து - கலந்து.

38. கார்முகம் - வில். கணப்படை - பேய்ச்சேனை.

39. பத்திரம் - பாணம். கணிச்சி - மழுவாயுதம்.

40. திகழ - ஆக. கதை - தண்டு.

41. குலிசம்-வச்சிராயுதம். வலியையேல் - வலிமையுடையவனாகில். வள்ளல் - வீரபத்திரர். கலைகள்-கல்வி நூல்கள்.

42. அடலை - சாம்பல்.

43. சுறங்கென - காற்றடியைப்போல. திரித்தான் - சுழற்றினான்.

44. கழற அடி - உரல்போன்ற பாதம். மறைபுகாது - (வீரபத்திரரிடம்) அடைக்கலம்புகாமல். சிறைகிறகு.

45. அங்கியை - அவ்விடத்திற் பொருந்திய. இகலி - பகைத்து. அயம் மன் - ஆட்டுவாகனத்தில் பொருந்திய. வயம் - வெற்றி. அங்கி - சூரியன். உகுத்து - உதிர்த்து. மடுத்து - ஓட்டி (தாற்பரியம்). சயம் - வெற்றி. அங்கி - சட்டை. பேர்த்து - மூடி.

46. திருணவேந்தரை - யௌவனமுடைய அரசரை.

47. சுதப்பு - சன்னம். துகைத்து - மிதித்து. பற்றி - பிடித்து. சர்த்தாம் - பிளத்தம்.

48. அவிக்கடம் - தேவருணவு வைத்த குடங்கள். மால் - விஷ்ணுவாகிய.

49. போதுமின்-வாருங்கள். புகுமின்-(உள்ளே) நுழையுங்கள். சிக்கவசப்பட. யாத்து - கட்டி. முந்தையார் - அநாதியேயுள்ளவராகிய சிவபிரான். மோலி - கிரீடம். உற - மிக.

52. புக - புகுந்து. தாங்கும் - காக்கும். நின்னுழை - உன்னிடத்திருந்து. தருதியோ - கொண்டுவந்துவிடுகின்றாயோ. ஊங்கு-இவ்விடத்து. பொருதியோ - சண்டைசெய்கின்றாயோ.

54. கினையலை - கினையாதே. பேதுறுவெனில் - மயங்கமாட்டாயென்றால்.

55. குணபம் - பிணம். கவந்தபந்தி - உடற்குறைப்பிணத்தின் வரிசைகள்.

56. துமிக்கும்-வெட்டும். கில்லி - தேருருள்.

58. விகடர் - உன்மத்தமுடையராகிய தேவர். ஆவிதேடி - உயிரைத்தேடினவாகி.

59. அமரராய் - தேவர்களாகி. உடலுண்டார்கள் - விரோதித்தவர்கள். அலகையாய் - (புறங்காட்டியோடியிறந்து) பேய்களாகி. உடல் உண்பாராய் - (பிரேதங்களின்) சரீரத்தைப்புசிப்பவராகி. சமருள் - யுத்தகளத்துள். ஆர் - கிறைந்த. படைகள் - சேனைகளுள். மாய்ந்து - மறைந்து. தம்பிரான் - வீரபத்திரர். படையாய் - சேனையாகி. குழ—, குமரி (அலகை) - பெண்பேய். கூளிகள் - (ஏனைப்) பேய்கள். திமிலை - ஒருவகைவாச்சியம். ஆர் - ஒலிக்கின்ற சீர் - சிறப்பாக. வேட்டன்று - விவாகஞ்செய்தது.

60. அகண்டம் - எல்லாம். நோநில் - வலி. முடிக்கும் - முடித்துவிடும். எண்ணலர் - பகைவர்.

61. விதிமகன் - தக்கனை. ஓர் பசு - ஒரு பசுவின். விதி - ஊழை. அற்றான் - கெடுத்தான். வீரவார் - பகைவர். யூபமா - யாகத்தம்பமாக. களம் - வேள்வியிடம். அவியுண - கெடுதலுடைய. நிரப்பி - நிறைத்து. பசு - உயிர்களை. படுத்தன்று - கொன்றது.

62. அறினன் - கெடுத்தான். நுதி - கூர்மை.

63. படை - பாணம். காந்த - கடியபடி. பாய் - பாந்த. இரும்பு அடைகாந்தம்-ஊசிக்காந்தம். பணித்தான் - ஏவினன்.

64. பாரிடத்தவன் - பூதப்படையுடையவராகிய வீரபத்திரர். முராரி - விஷ்ணு. படுத்து - கொன்று. தேரிடத்தவன் - தேரிடத்திலுள்ள சாரதி. பார் இடத்தவன் - பூமியிலுள்ளவன்.

65. சேமத்தேர் - உதவித்தேர். வாம் - தாவுகின்ற. அத்தானையின் - அந்தப் பூதசேனையோடு. சோமத்தாரவன் - சந்திரனை மாலையாகவுடைய வீரபத்திரர்.

66. புதைய - அம்புக்கட்டினையுடைய. உதையவரைக்கு - உதயகிரிக்கு (எதிரில்). மால் - பெரிய. இறுதிவரை - அத்தமனகிரி. கதை - (ஒரு) தண்டாயுதத்தால். கதையிலையென - (தக்கனுக்குப்) பேச்சில்லையென்று சொல்ல.

67. குல்லை - துளசி. குறியா - குறித்து. வல்லையேல் - வலிமையுடையாயாகில்.

68. நேமி - வட்டமாகிய. அம்நேமிபடை - அழகிய சக்கராயுதத்தை. கொதித்து - சுட்டு. மீமிசைத்த - மேலாகிய. உங்காரம் - உம்மென்று முழக்கம். இசைத்தனன் - முழக்கினான். பக்குவன் - (பெறுதற்குரிய சாதனங்களால்) பெறுபவன். காமியம் - விரும்பப்பட்டபொருளை. மடுப்பது - தடுப்பது.

69. அலை - சமுத்திரம். மிலைதர - அணிய. தலைவர்போல் - சிவபிரானைப்போல. தலைமாலையிற்கடைமணி - (பிரமவிஷ்ணுக்களின்) சிரமாலையிலுள்ள இருதிமணிகள். தயங்க - பிரகாசிக்க. பிரகாசித்தல் - சங்கரத்தி னெளியாலென்க.

70. சண்டநேமி - வேகமுடைய சக்கராயுதம். உரும் ஒலிக்கு- இடிமுழக்கால்.

71. தின்குரல்-பலத்தமுழக்கம். ஆற்றுமோ - தாங்குமோ.

72. மடுத்து - கலந்து. கால் - காற்று. கறையுக -இரத்தஞ்சொரிய.

73. ஒருவனை - ஒப்பற்றவனை. ஆயம் - ஆட்டுக்கூட்டத்தை. உகைக்கும் - செலுத்தும்.

75. கணை - பாணம். குந்தம் - கைவேல். சுரிகை - வாள். இடங்கர்மா - முதலை. திணை - (பாலை) நிலமாகிய. நெடுங்களம் - யுத்தகளத்தில். தேர்க்கலிங்குமுன் - இரதமாகியமதகுக்கு எதிரே. சுழிக்கும் - சுழியைச் செய்து.

76. விண்ட - விடுபட்ட. கணங்கள் - பேய்கள்.

77. சேண் - உயர்ந்த. அலிக்குடம் - அமுதம்வைத்திருக்கும் கும்பங்களை. வீண் - வீணாக. குவைப்படு - குவித்திருக்கப்பட்ட. திரவியம் - உபகரணப்பொருள்கள்.

78. வர்த்த - அழகிய. ஈர்த்து - இழுத்து. கூளி - பேய்கள்.

79. இந்திரை - இலக்குமி. துண்டம் - மூக்கு. அதிதிறத்தவர் - புதிதாய்வர்தபிறர். குமிள் இமிழ் - மூக்குமுலை. (உருவகங்கள்) காண் - வெட்கம். நிரம்பவோ - அதிகப்படவோ. கண்ணெச்சில் - திட்டிதோஷம். கழியவோ - நீங்கவோ. அஃதாவது: பேரழகால்வரும்திட்டிபரிகாரஞ் செய்யவோ என்றபடி.

80. யாகதண்டத்து அமர் - யாகசங்கார யுத்தம். இக்கு - இப்பூமியில். அனைத்தவர் - எல்லாரும். முக்கனல் தழல் - மூன்றாகிய முழங்குகின்ற (காருகபத்திய முதலிய) அக்கினி. முருக்கென - முருக்க மலர்போல. பூத்து - உண்டாக்கி. (பிறவினை) சிகை - குடுமியை.

81. திக்கு - திசைகளில். அடாமல் - (உன்னை) அடுத்துநில்லாமல். திருப்பாய் - மீட்டுவரமாட்டாய். அடாவினை - செய்யக்கூடாத தொழில். விடிந்ததோ - அநுகூலமானதோ. அக்கடா - அங்கே.

82. பராய் - பரவி.

84. எ சகாயத்தவரும் - எந்தவுதவிசெய்தவரும். எச்சன் - யாககருத்தா. எச்சம் - மிஞ்சியபொருள். இரலையாவெழுந்த - மான் வடிவங்கொண்டெழுந்த. எச்சன் - யாகதேவதை.

85. ஆகுதிபுரிந்து - பூரணாகுதிசெய்து, (யாகத்தைப்பூர்த்திசெய்து)

86. அமரர் ஆக - தேவர்களாக. வேம் - வேகின்ற. அவி - அவிப்பாகம், உண்டி. அமரர் - பகைவர். அவியுண்டார் - இறந்தார். தமரம் - ஒலி. நினைத்தவா - நினைத்தவிதம்.

87. ககம் - பறவைகள். அழித்திட - (உடலையுண்டு) அழிக்க. காமம் - வீரபத்திரனென்னும் பெயர்.

88. நண்ணும் - (மேற்கூறியபொயைப்) பொருந்தும்.

89. பாவை - (பெண்) மகள். பதிபவம் - அவமானம். இமவான் - இமயமலையரசன். செல்வி - மகள். ஆகென - ஆவாயென்று. போந்தான் - (இமயமலைக்கு) வந்தான்.

91. அத்தலை - அந்த இடத்தில். யூபம் - உடற்குறை. முடி - தலை. மெய்த்தலை - மெய்யைத் தலையிலுடைய. யூபத்தடு - வேள்வித்தம்பத்தினடுவே. சினத்தலை - மாயிசத்தலை. யூபம் - உடற்குறையில். மைஆட்டின்தலை.

92. வினைகளால் - (அவரவர்செய்த) கன்மங்களால். பாகத்திலுயிர் - பக்குவப்பட்ட ஆன்மாக்கட்கு. பயன் - பலனை. அறிந்து - தெரிந்து. ஊட்டற்பாற்றே - உண்பிக்கற்பாலதே.

93. குவவு - திரட்சி. திணி - வலின்மை.

---

**பதினைந்தாவது:—தேவர்கள் சிவத்துரோகமடைந்த சருக்கம்.**

1. விரவிலாத - கலவாத. மாலை - இரவு., அமாவாசையிருட்டு.

2. பாவக்களர்நிலத்திடை - பாவமாகிய உப்புத்தரையில். கால் ஆழ்ந்த - காலமுழ்கிய. வளம் - செல்வம்.

3. நல்குரவு - தரித்திரம். புலவர் - வித்துவான்கள்.

4. உழக்கனைன் - (நடந்து) வருந்துஞன். நவியம் - மழு. மறி - மான்.

5. பதம் - பதவி. மந்திரக்கிழவர் - மந்திராலோசனைக்குரியவர். சூழ்ந்து - ஆராய்ந்து. களைகண் - பற்றுக்கோடு.

6. குரவன் - பிதாவாகிய.

7. தடமும் - பெருமையும். பால் - பக்கம். நூலிரண்டு - கல்விநூல், முப்புரிநூல். அகம் - உள். புறம் - வெளி. நோன் - வலிமை. மார்பு - நெஞ்சு.

8. போது - மலர்போல.

9. மாமாடத்து - நன்றாகிய வீட்டில். ஆவிபேதகம் - ஒவ்வொரு உயிர்கள். அங்குரிப்ப - முளைக்க, உண்டாக. தாவில் - கெடுதலில்லாத. அங்கம் - வேதாங்கங்கள். கலை - கல்விநூல். தளிர்ப்ப - தோன்றி. பேதகம் என்பதில் - க, பிரத்தியேகமாக்குக.

10. வனருகம் - தாமரை. தொழித்தன - தெரித்தெடுத்தற்போன்ற.

11. வானம் ஆதியில் - ஆகாயம் முதலியவற்றால்; பஞ்சபூதங்களால் என்றபடி. உடல் - சரீரம். கரணங்கள் - அந்தக்கரணங்களால். வயக்கி - விளங்கச்செய்து. ஏன - பிற. போகமும் - அநுபவிக்கப் படுவனவும். புவனமும் - உலகமும். வினைவழியிசைத்து - வினையின் முறைப்படி கூட்டிப்பொருத்தி. மேனை - மேன்மையுடைய. நடைபெற - நிகழ. தானை - கொடையையுடைய. பங்கயாச்சிரமனே - தாமரைப்பூவை நிலையாகவுடையவனே. பரமனே - மேலானவனே.

12. நாற்பெருங்கோணில் - பெருமைதங்கிய சிவகோணநான்கில். பானுவாய் - சூரியனாகி.

13. அந்தராதிபன் - இந்திரன்.

14. திறை - கப்பம். நாமம் - அச்சம். உடைந்து - தோற்று.

15. ஆடல் - மூழ்குதல்.

16. கலம் - தோணி. நசைக்கு - விரும்பப்பட்ட பொருட்கு. அலந்தனம், — அலத்தல் - இடையாமல் வருந்துதல்.

18. தகவு இல் - தகுதியில்லாத.

19. பொறி - பொலிவு. வெறுவிதாய் - பயனற்றதாகி. ஆவரேல் - (விருத்தி) ஆவாராஞல்.

20. அமரராய் - மரணமில்லாதவராகி. மகத்தால் - (தக்கன்) யாகத்தால்.

21. நந்திநாயகன் - திருநந்திதேவருக்குத்தலைமையான சிவபிரான்.

22. அனந்தசாயி - ஆதிசேடசயனத்தையுடைய விஷ்ணு.

23. படுக்கும் - கொல்லும். தாவசோபம் - வெப்பத்தையுடையசோர்வு.

24. மிறை - துன்பம்.

25. கழுந்து - அடிப்பாகம். பீழைகண் - துன்பம்.

26. மாசுணப்படம் - பாம்பின்படம். தோகை - மயில். கோம்பியால் - ஓந்தியினுல். சுழல்வது - வருந்துவதை. இயற்றவும் (ஏதாவது உபாயம்) செய்யவும்.

27. விதி - கட்டளை. பேதம் - வேறுபாடு.

28. ஓராத - உணரக்கூடாத. கோகத்தி - பசுக்கொலை. ஒன்றொன்று - ஒன்றுக்கொன்று. பிழைத்தனர் - பிழைசெய்தவர்.

29. தொன்றுசேர் - பழமையாகச்சேர்ந்த.

30. பூதலம் - பூமிக்கு. ஒசனை - யோசனைதூரம். (அதன்மேல்) மதி - சந்திரமண்டலம். (அதன்மேல்) உடு - நக்ஷத்திரமண்டலம். (அதன்மேல்) மேதை - புதன். புகர் - சுக்கிரன். செவ்வாய், — பொன் - வியாழம். சவுரி - சூரியன். தானம் - மண்டலம். (ஒவ்வொன்றும்) இங்விரண்டு - இரண்டிரண்டு. ஆதி - முதன்மையாகிய. முனிவோர் எழுவர் - சத்தருஷிகள். தானம் - மண்டலம். மேல் - (அவற்றின்) மேல். அப்புறம் - அதன்மேல். துருவதானம் - துருவமண்டலம். காறும் - வரையும்.

31. (புவலோகத்திலிருந்து) சுவலோகம், — எம் - எம்முடைய. (பிரமனுடைய) பதம் - மண்டலம். அரிபதம் - விஷ்ணுமண்டலம். பித்தி - அண்டச்சுவர்த்தலம். பார்மேல் - பூமிக்கு

மேலுலகங்கள்.

32. புயங்கமெட்டும் - அட்டநாகங்களும். எண்களிறு - திக்குயானைகளெட்டும், கீழ்க்கோடி - கீழ்ப்பக்கம், ஆடகர் - ஆடகேசபுவனத்திலுள்ள ருத்திரர். கோயில் - ஆலயம். இருபான் இலக்கம் - இருபதிலக்ஷயோசனை தூரம், பன்னகர் - நாகர். அரக்கர் - இராக்ஷதர். அவுணர் - அசுரர். சூழ்வோர் - (அவரைச்) சுற்றியிருந்து ஏவல்செய்வோர்க்கு. விடுத்த - விடுக்கப்பட்ட. அதல முதலேழும், அதல, விதல, சுதல, நிராதல, தராதல, மகாதல, பாதாள முதலேழுலகமும். எழுநான்பரன் - அறுபத்துமூன்றிலக்ஷம். கூர்மாண்டர், —பதம் - இருப்பிடம், கீழ் - (அதன்) கீழ்ப்பக்கம். ஒன்பான் - ஒன்பதிலக்ஷம். கும்பி - ஓர் நரகம். [விடுத்த என்பதில் அகரந் தொக்கது.]

33. இருள்நிலம் - (கும்பிநரகத்தின் கீழ்ப்பக்கம்) இருட்பூமி. எழுநான்குகோடி இலக்கம் இருபத்தொன்பான் - இருபத்தெட்டுக்கோடியேயிருபத்தொன்பதிலக்கயோசனை தூரம். கீழ் - (அதன்) அடியில். கமடம் ஆமை. உயங்கும் - வருந்தும். புகைப்படலம் - புகைக்கூட்டம். அக்கினிச்சுவாலை - (அதன்கீழ்) எரியும் தீக்கொழுந்து. காலாக்கினி வரதர்கோயில் - காலாக்கினி ருத்திரர் ஆலயம் (கோடி). பித்தி - அண்டச்சுவர். பித்திகோடி என்பதன் கோடியைக் கோயிலுக்குக் கூட்டுக,

34. கோவலயம் - பூமியின்வட்டம். நடு - மத்தி. நாவல்...............புட்கரம்—, தீவு - கடலுள் மேடாகிய இடம். உப்பு .....நீர்,—நாவலந்தீவு —சம்புத்தீவு. ஓர் இலக்கம் - ஒருலக்ஷயோசனை தூரம். மேன்மேலும் - (அதன்) மேலுள்ள ஆறு தீவுகளும். இரட்டி - (ஒவ்வொன்றும்) இரட்டிப்புத்தொகையுள்ள தூரம்; இரட்டித்தலாவது, ஒன்றுக்கு, இரண்டு. இரண்டுக்கு, நான்கு. நான்குக்கு, எட்டு. எட்டுக்கு, பதினாறு. பதினாறுக்கு முப்பத்திரண்டு. முப்பத்திரண்டுக்கு, அறுபத்துநான்கு என்க. உப்புநீலை - உப்புக்கடல். அன்னவே - (மேற்கூறியா) அத்தன்மையாக இரட்டிக்குந்தொகைகளே.

35. சூழ் - (மேற்கூறியதீவுகளையுங் கடல்களையுஞ்) சூழப்பட்ட. கனகபூமி - சொர்ணபூமி. அதனை - அக்கனகபூமியை. களம் - (அம்மலையின்) உயர்வு. அயுதம் - பதினாயிரம் யோசனை தூரம். வளைந்த - (அம்மலையைச்) சூழ்ந்த. புறக்கடல் - பெரும்புறக்கடல். (அக்கடலைச்சூழ்ந்த) பாழ் - பயனற்ற. இருண்டபூமி - இருட்டடைந்த பூமி. ஆழ் - ஆழ்ந்த. கனம் - மேன்மைதங்கிய. பித்திகை - அண்டச்சுவர்.

36. வாசனை - (எங்கும்) வசிப்பவனாகிய சிவபிரானை. மகிதலம் - பூமி.

37. கனற்சிகை - அக்கினிச்சுவாலை. காலாங்கி - காலாக்கினி [illegible]தாலிப்படரெனக்கூட்டுக.

38. இடையமாட்டேம் - வருந்தச்சகியேம். தன்னம் - சிறிதுகாலமும்.

39 பேனம் - நுரை. திகிரிவெற்பு - சக்கரவாளமலை.

40. ஆர்வலி - நிறைந்தபலம்.

41. அவரினும் - அவ்வெழுவருள்ளும். இவர் - இவ்வொன்பதின்மராவார். நவகண்டத்தோர் - (தங்கள் தங்கள் பெயரையுடைய) ஒன்பது கண்டங்களையுங் காப்பவர்.

42. தீபம் - தீவு. நாற்குன்றம் - நான்குமலைகள், அவை மந்தரம், கந்தமாதனம், விபுலம், சுபார்சுவம், என்பன. சூழ் - (மேலேகூறிய நான்கு மலையைச்) சூழ்ந்திருக்கின்ற.

43. மிக்கு உள - மிகுந்துள்ள. வரைகட்கு - (மற்றை) மலைகளுக்கு, எண்கிரிச்சார் எட்டும் (இந்த) எட்டுமலைப்பக்கத்திலுள்ளவட்டிடத்திலும். சுற்றும் - சுற்றுப்பக்கத்திலும். ஒன்பான்கண்டம் - நவகண்டம்.

44. வடகடல் இருக்கநாப்பண் - வடகடலுக்கும் இருங்கமலைக்குமத்திய தேசம். குருவருடம் - குருகண்டம். இப்பால் - (அதற்கு) இந்தப்பக்கம். இடவிய - விசாலித்த. சுவேதங்காறும் - சுவேதமலைவரையும். தடவரை - (அந்தப்) பெரியமலையாகிய சுவேதத்திலிருந்து. நீலங்காறும் - நீலமலைவரையும்.



45. மேல்பால் கடலிடை - மேல்சமுத்திரத்தினிடத்திலுள்ள. கந்தமாதனம் - கந்தமாதனமலை. கேதுமாலம் - கேதுமாலகண்டம். கீழ்பால்வாரி - (அதிலிருந்து) கிழக்குச்சமுத்திரத்தினிடத்துள்ள. மாலியவான் மட்டும் - மாலியவான்மலைவரையும். பத்திரி - பத்திரிகண்டம். தென்பால் - தென்கடற்பக்கம்.

46. பனிவரை - இமயமலைக்கும். சேது - சேதுவுக்கும். பத்திரி, கேது - பத்திரிகண்டமும், கேதுமாலகண்டமும். ஏனையாறும் - (அவ்விடத்திலுள்ள) மற்றை நதியும், துங்கபத்தி[illegible]நதியும். அனைய - அவ்வளவினையுடைய. நாப்பண் - (நதிக்கும் கேதுமாலகண்டத்துக்கும்) நடுவிடம். ஒன்பானாயிரம் - ஒன்பதினாயிரயோசனை தூரம். மற்று எ - அசைகள்.

47. தருமபாவம் - புண்ணியமும் பாவமும். கருமபூமி - பரதகண்டம். இருணிலம் - நரகம். போகம் - (மேலேகூறிய தருமமுதலிய மூன்றின்) பலன். சுவர்க்கசேடம் - சுவர்க்கலோகத்தி லநுபவித்து மிஞ்சிய பலன். போசிப்பது - அநுபவிக்கப்படுவது. போகபூமி - மகாமேருவைச் சூழ்ந்த சாம்பூநத நதியின் பக்கமுள்ளவிடம்.

48. வரைவு - (சித்திர) மெழுதல். சிற்பம் - சிற்பத்தொழில்; ஆலயமண்டப முதலியகட்டுதல். மேனியும் - சரீரமும். குறையாகிற்கும் - (பாதியாகக்) குறையும்.

50. உச்சி - முடியில். அண்டமூலம் - அண்டத்தினடி. மண்டும் - நெருங்கும். ஆடகர் - ஆடகேசபுவனத்திலுள்ள ருத்திரர். அதன்மேலா - (காலாக்கினிருத்திரர்) கோயிலுக்குமேலாகவும். மகிதலத்தின் - நிலவுலகத்துக்கு. கீழா - கீழாகவும். மன்னும் - நிலைபெற்றிருக்கும். நடு - பூமியின்மத்தியில். குடதிசையின் - மேற்றிசையின். மேகலை மூன்றினில் - சுற்றுப்பக்கம் மூன்றிடத்திலும்.

51. திணைவும் - பொருந்தும். சாத்தர் - அரிகரபுத்திரர்.

52. புடை - பக்கம். கன்னி - அழிவில்லாத. ககனம் - ஆகாயத்தில்.

53. துளு - துளுவதேசம். பொன்னித்தலம் - சோழதேசம். கொங்கு - கொங்குநாடு. தமிழ்நாடு - பாண்டிநாடு. தெக்கணபால் - தென்றிசைப்பக்கம்.

54. ஆதிதலம் - பண்டைக்காலத்திலுள்ள தலம். பருப்பதம் - சீபருப்பதம். அபிடேகத்தானம் - உச்சித்தானம்.

55. இனை - இலம். ஐந்து - குறிஞ்சிமுதலியன. கவனம் - காடு. கன்னி - கன்னியாகுமரி. கழனி - மருதநிலம். கேதாரமுதல் - கேதாரமுதலிய இடம். தமிழ்நாடு - பாண்டிநாடு.

56. மூலவீடாய் - ஆதிஇருக்கையிடு. சிற்றிலென - சிறுவீடாக.

57. கவுரி - உமாதேவி. மறக்கும் - விரோதிக்கும். பால்கள் - பகுப்புக்களாகிய. நான்கு - தருமார்த்தகாமமோக்ஷங்கள். சுறக்குமிடம் - வெளிப்படுத்துமிடம்.

58. கூண்டு - கூடுதல் (ஆக). பெரும்பற்றப் புலியூர் - சிதம்பரம். சேண் - விண்ணுலகம்.

60. கிரிக் கோதண்டம் - மலைவில்.

63. துறை - இடம். புதூலம் - புதிதாகிய போகம்.

64. கன்னியவாறு - (தாங்கள்) கருதியவிதம். மன்னி - மாசுபோக்கி. உவட்டெடுக்கும் - பெருக்கெடுக்கும். பொருட்டு - மலை, (தாமரைக்கொட்டை).

65. பிறங்கல் - மலை. மேல் - இடத்தில். ஆக்கிரமமிதை - பகன்மாநகலையின்மேல்.

### ௯௩-வது:—தேவர்கள் சிவத் துரோகந் தீர்ந்த சருக்கம்.

1. துறை - நீர்த்துறை. விழைவு - விருப்பம்.

2. பக - இழிபட. சிலை - கல், எண் - எண்ணைத்தால். வெண்பகல் - வளர்ந்தங்கிய ஒளி.

3. ஈறுபுரி - நாசஞ்செய்கின்ற. ஞானவரை - அறிவினளவையுடைய. எனவர்கள் - மற்றவர்கள்.

4. குரவம் - கோட்டம்.

5. பின்னி - (ஒன்றோடொன்று) நெருங்கப்பட்டு. பழுப்பிலை - பழுத்த இலையாகிய. நீளவும் - நீளமாகவும், (நெடுங்காலமும்). கெய்யரி - பன்றையுடையாகிய. சீரை - மரவுரி. தாளினீர் - தாளுண்டசலம். தலையினேற்று - சிரசிலே யிளநீராகக்கொண்டு. தவத்தர் யோகியர் - தவத்தராகிய யோகியர். தாளிகேரங்கள் - தென்னை விருக்ஷங்கள். [தவத்தர் தாளினீர் தலையிலேற்றுதலாவது, சாரூபபதவியடைதல்.]

6. கன்னி - இளமை. துகில் - உத்தரீயம்.

7. கதலி - வாழை. அரம்பை - தெய்வப்பெண்கள். ஆலவட்டங்கள் - விசிறிகள், சுழற்றல் - சுற்றி விசிறுதல்.

8. குருக்கம் - குங்குமமரம், உரு - நிறம். ஆம - போலும்.

9. (சோலைகள்) தளிக்கும் - அளிசெய்யும். தேறல் - தேன். (தேவர்களே உங்களுக்கு) கொள் - பெருமை. மலி - நிறைந்த. தாரை - அபிஷேகசலம் (ஆம்). சன்மலி - நன்மை நிறைந்த.

10. புலன் - அறிவு. புறஞ்சொல் - புறங்கூற. அமைத்து - அடக்கி. வாய்புதைத்தல் - (அவ்விலையமைவாகிய) வாயைப் பொத்துதல்.

11. பாவனை - ஒப்பாகிய.

12. அண்டர் நாயகன் - வியாபகனான். வாய்மை - உண்மைச்சொல்.

13. பூவின் - பூமியின். தானம் - இடத்தை.

14. அந்தரவருடம் - மேகவிருந்தத்தை. புனற்கிறை - வருணன். வரி இந்திரதநு - (அருவி) நீர்ற்றேன்றும் இந்திரவில்லை.

15. வேட்டுருவம் - வேடர் வடிவம். தந்திரர்......விஞ்ஞசயர், (தேவசாதிப்பகுப்பாராகிய). புத்தேளிர் - தேவர்கள்.

16. மாக்கள் - மிருகங்கள், புயல்கெழு - மேகங்கள் பொருந்திய. புதல் - குத்துச்செடி. தனிதாய் - முழக்கமுடையவராகி. தானவர் - அசுரர்.

17. வானோர் - தேவர்களாகிய. நால்வகைச்சங்கத்தோர் - நான்குவித கூட்டத்தார்; அவர்: மருத்துவரிருவர், வசுக்களெண்மர், உருத்திரர் பதினொருவர், சூரியர் பன்னிருவராவார். நன்மை.........பத்திரம் - பத்மாசனம், கோமுகாசனம், சுவத்திகாசனம், வீராசனம், சிங்காசனம், முத்தாசனம், சுகாசனம், மயூராசனம், பத்திராசனம்; இவ்வொன்பதாசனத்தின் விவரத்தை யோகநூலிற்காண்க.

18. உடற்பகை - சரீரத்திற்கு விரோதிகள். ஆறு - காமமுதல் மாச்சரியம் வரை யாகியவை. ஐம்புலன் - மெய், வாய், கண், மூக்கு, செவி. நாற்கரணம் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம். கட்டி - ஒடுக்கி. முக்குற்றம் - காமம், வெகுளி, மயக்கம். மாற்றி - போக்கி. ஊறு - தோன்றுகின்ற. கால்வளி - காற்றாகிய வளி; இடை, பிங்கலை. ஒருக்கி - ஒன்றுபடுத்தி. ஓர்வழி - ஒருவழி; சுழுமுனையில். கடாவி - செலுத்தி. மாறு - விரோதம். யோகுநீர் - யோகமாகிய சலம்.

19. இயமம்.........பிரத்தியாகாரம்,—கிட்டையுயரும் - உறுதிமேற்படும். உளுற்றியும் - செய்தும். ஆசாரத்து,— இயல் - தன்மை. பெறு - பெறுகின்ற. மூலத்து பாந்தள் எழுப்பி - (நாதமாகிய) மூலாதாரத்தில் பாம்புவடிவாயுள்ள அக்கினியை மேன்முகஞ்செய்து. மேல் - குளத்துக்கு மேலாயுள்ள சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞைகளில். ஆடல் - நடித்து.



(19 contd.) குடம், நாபி, இதயம், அடிநா, நெற்றியாகிய சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞைகளில். ஆடல் - நடித்து.

20. கறித்து - கடித்து. கவ்வி - தோண்டி. சாய் - பஞ்சாய்க்கோரைப்புல். அசித்தும் - உண்டும். தாங்காதாங்கமுடியாத. பக்கணம் - பக்ஷணம். வசிவு - வளைவு; விருத்தம். தின்றும் - கெடுத்தும்.

21. சாந்திராயணம் - ஓர் விரதம். திங்கள் உபவசித்து - மாதப்பட்டினியிருந்து. மாந்திடும் - உண்டிடும். அயனம் - அரைவருடம். காந்தி - ஒளி. பஞ்சக்கனல் - ஐந்து அக்கினி; அவையாவன:- நாலுபக்கத்திலும் வளர்க்கப்பட்ட அக்கினிக்குண்டம் நான்கும், சூரியகாந்தியை நோக்கி நிற்றலால் சூரியகிரணம் ஒன்றுமாம். வாரிநீரில் - வாரியாகிய சலத்தில்.

22. வீழ்த்தும் - வீழச்செய்தும். செல்லெனு - மேகமென்று. கலங்குறுது - கலக்கமடையாமலும்.

23. ஊன்றி - (நிலத்திலே) பதித்து. நாசிகா - மூக்கின். மூலம் - அடியில். இசைவாய் - பொருந்தச்செய்வதாய்.

24. அப்பரிசு - அத்தன்மை.

26. மறுகினோரும் - சுழன்றோரும். விரவினோர் - கலந்தோர்.

27. நிலைசெய்தார் - நிலைக்கச்செய்தவர். பரிவிலார் - இரக்கிலார்.

28. வேகம் - விரைவு.

29. அங்கம் - (அவயவ) திருமேனி.

30. பவர் - நெருக்கம். தவர் - விட்டு.

32. தோன்றாத்துணை - மறைந்திருக்குந்துணை.

33. மேற்கண் - நெற்றிக்கண்.

34. நரிகூட - நரியுடன். நந்தாத - கெடாத.

35. நல்குதி - கொடுப்பாய். ஓ - அசை. இகழ்வார் - (பத்திமிக) விளக்குவார். அகழ்வாரை - தோண்டுவாரை. (தன்னை வருத்தஞ்செய்வாரை யென்றபடி) அச்சோ - ஐயோ.

36. அறியா - அறியப்படாத. தாயத்துணை - தாயாகிய துணை. நிலம் - எல்லாம். பரம்பரமூர்த்தி - நிறைந்த சிவசொரூபமுடைய கடவுளே.

37. நோந்தேமை - வருந்திய எங்களை.

38. நராசுரன் - நரகாசுரன். கொள்ளாது - அடங்காது.

41. காயும் - சுடும். தனிர் - குளிர்ந்த.

44. ஒன்று - ஏகம். இரண்டு - துவிதம். ஒன்றிரண்டு - அத்துவிதம்.

45. பரிப்பவன் - காப்பவன். திரோபவம் - மறைத்தல். அடைப்பவன் - புகுத்துபவன்.

46. கருவி - காரணம். புரிவான் - செய்பவன். புவனகோடிகளும் - எல்லா வுலகங்களும்.

47. புணைவும் - பொருந்தவும். புலப்பட - அறிய. கேளோ - ஆகாயமோ. சேண், ஆண், பெண்ணென்பவற்றில், அது - பகுதிப்பொருள் விகுதி.

48. எளியையோ - இலேசானவனோ. எகா - ஒப்பற்றவனே.

49. ஒன்று - பொருந்துகின்ற. வெளிநின்றுயை - எதிர்ப்பட்டு நின்ற உம்மை.

51. சந்து - சந்தனமரம். வேலிகாவலாக வுடைய. மந்த மாருதங்கொழுந்து - இளந் தென்றற்காற்று. முந்து - அநாதி. பிரயாகை - திரிவேணிசங்கத்தில்மூழ்கிய). ஆயிரமாகம் - ஆயிரமாசிமாதம். பெறு - பிலன்.

53. எனினும் - ஆனாலும். கல் - இரத்னம். எல் - இரவு.

54. அழுது அரங்கவாய் - அழுகயிருக்கும் இடமாகிய வாய். செவ்வரம் - ஒழுக்காகியவரம். வெளியாங்கம்பெற - வெளிப்படையாக. வழுத்து அரங்கம் - சித்திரசபை.

55. பால் மதி - வெள்ளியசந்திரன். நிந்திப்பாம் - (தங்க) வெண்ணையும்.

56. சிலம்பு - (திரிகூட) மலையை. உரி - உரிமையாகவுடைய. பொய்யப்புரிபொன்னிறஞ்செய்கின்ற. கண

ம்-கோபம். சம்புவை-நரியை. வலம்புரிபணிலவிதி - வலம்புரிச்சங்கத்தெரு. வலம்புரி - வலஞ்சுற்றிவரு

தலைச்செய்த. உரி - ஈறுகெட்ட பெயரெச்சம்.

---

## பதினேழாவது:—வேடன் வலம் வந்த சருக்கம்.

1. கிரீசன் - சிவபிரான்.

2. நாற்பதம். சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியம்.

3. மெய்வலம் - அங்கப்பிரதக்ஷணம்.

4. தேயம் - தேசம். கண்டம் - பகுக்கப்பட்ட பரதகண்ட முதலிய இடங்கள். தீபம் - சமுத்திரத்தின் மத்தியில் மேடாயுள்ள இடங்கள். சிகரவில்லியார் - மலையை வில்லாகவுடைய சிவபிரான். (சிகரம் - ஆகுபெயர்.)

5. கோமாயு - நரி. மான - ஒப்ப. ஏன - மற்றைய. மோனம் - பேசாநிலை. கொடுத்தவாஉ-கொடுத்தவிதம்.

6. காலத்து - உரிய காலத்தில். ஆம்பிரக்கனி-மாம்பழங்கள். பந்தாடு - பந்தாக விளையாடுகின்றீ. கோலம்-அழகு. தாம்பிரவன்னி - பொருநை. திரைகொழி - (முத்துக்களை) அலைகள் கொழிக்கின்ற. தாலம் -பெரிய. தாம்பிரக்குன்றம் - தாம்பிரம் விளையும் மலை (பொதியம்). வாரிசம்-தாமரை. தமிழ்,—சுருதி- வேதம். மூலத்து ஆம் - (சிருட்டிக்கு) ஆதியில் உண்டாம்.

8. குழுமலால் - கூடலால். முடக்கு-வளைவு. குடக்கு - மேற்கு. நோக்கியமதி - பார்த்தசந்திரன்; மூன்றும்பிறைச் சந்திரன்.

10. தேய்த்த - தேய்ச்செய்த. நிறம் - (கரு) நிறம். கடா - ஆட்டுக்கடா. மருப்பு - கொம்பு.

11. கவடி - சோகி., இது, கீழ்ச்சாதியார் ஆபரணமாகத்தரிக்கப்படுவது.

12. மூரி-வலிய. கலை-ஆண்மான். கானம் - வானம்பாடி. சேனம் - பருந்து.

14. தோயும்- (மேலேவந்து)படியும். வாடை - வாசனைக்காற்று. எடுத்து - பற்றி. சுவடுபோய் - அடிபட்ட அடையாளத்தைத்தொடர்ந்துசென்று. குழிநரி - ஓர்நரி.

14. சிகைப்பங்கி - குடுமிமயிர். தூபம் - புகை. உயிர்-மூச்சு. துண்டம் - மூக்கு.

15. உதரம் - வயிறு. நடலை - வஞ்சனை. அடல் -விபூதி. முண்டம்-நெற்றி.

16. மாலும் - மேகமும். மலையாசலம். பொதியமலை. கோலும் - வளையும். நீள்வரை - நீண்டமூங்கில். தொல்லி - ஓர்மலை. மயேந்திரம் -ஓர்மலை. மேலும் - அப்பாலும்.

18. வேலனை - வெறியாட்டாளனை -கூய்-அழைத்து. தெள்ளிது - தெளிவுடையது. ஐவனம் ஆதியா- மலைநெல் முதலாக.

19. மூளைத்தோரை-மூங்கில்அரிசி. மலர்பெய்து -பூக்களைத்தூவி. அவி- சோறு. தூவி - படைத்து.

20. பலிவைத்த - பூசையாகப்படைத்த. சேடம் - மிச்சம். வர்விசேடம். விசேடமாகிய வரங்களும். நிமித்து- (விகாரம்) சகுனம். சுரவு...... ......தொடுதோல் - தொடுசெருப்பு. இட்டான் - பூட்டினான்.

21. செம்மலை- வேடர்தலைவனை. செருமினர் - நெருங்கினர். கைம்மலைக்குலம் - யானைக்கூட்டம்.

22. ஆதி - தலைமையான. முதியவன் - வயதுசென்றவன். வீங்கு - பருத்த. குரல் -ஒலி. விளித்தலும் - ஒலித்தலும்.

23. பரிசை - கேடகம். வரி-கீற்றுக்களையுடைய. அதள் - தோல். புலிப்போத்து -ஆண்புலி. அரவுரி - பாம்புச்சட்டை. அசக்கி-கட்டி. அடல்கூளி - வலியபேய். சுரிகை-வாள். துளக்கி - அசைத்து. இடிம்பன் - இடும்பாசுரன். கரடியுரிக்கஞ்சுகம் - கரடித்தோற்சட்டை.

24. வளைதடி - ஓராயுதம். மருங்கு - பக்கத்தில். முந்திச்செல்ல. முளை - தண்டாயும். தடியர் - பருத்தவர். மூரிமருப்பு - நெரிந்தகொம்பு. இரலை - கருமான். கொளை -கொலை; இது லகர ளகரவொற்றுமை. கொடுமரம் - வில். திளை திளைத்து - நெருங்கி நெருங்கி. திளைத்துத்திளைத்தென்பது திளைதிளைத்தெனமருவிற்று.



25. வாள் - ஒளி. படலம் -கூட்டம். சுடர் - சூரியனை. படர் - விரிந்த. வேள் - மன்மதன். கரி - யானையாகிய இருள்.

26. தானையர் - வஸ்திரமாகவுடையவர். கிளை - கவர். கிளை- கிளைக்கின்ற. வல்லயம் - ஒருவகையாயுதம், (தளிர்). இளையர்- சிறுவர். இமவுளர்-குறிஞ்சிநிலமாக்கள். வனசரர் - காட்டிற்சஞ்சரிப்போர். பளையர் [illegible] கள் விற்போர். குனர் - ஊன் வி[illegible] போர். பறம்பர் - தோல்வினை[illegible] கிராதர் - வேடர், பழையர், எ[illegible] பதிற்பளையரென்றுமிற்று.

27. குழல்-ஊதுகுழல். [illegible]டகத்துடி-தொண்டகமாகிய [illegible]றை; குறிஞ்சிநிலப்பறை [illegible] - முழக்கி. ஞாளி - [illegible] தொ[illegible] - புதர்களை. வாடை [illegible] - [illegible]ரித்து-தெளிவித்து. தடம்- (அத்த) வழியை. எடுத்து - தெரிந்து.

28. சிலம்பும் - ஒலிக்கும். பறக்கையும் - சிறுதூறும். குரலங்கானமும் - பிரப்பங்காடும். குவடும் -மலையினுச்சியும். வனாகமும் - திணைப்புனமும். நீடினர் - அநேகர். (தாற்பரியம்)

29. மாடு - பக்கம். ஊடுபெற்றி - நடுவேயாரம்பித்து. ஓடியெறிவார் - காய்ந்த செடிமரங்களைவெட்டித்தள்ளுவார். கோடுபற்றி - கொம்பைப்பிடித்து. குமுறி - முழக்கஞ்செய்து.

30. வேடுபாய்வர் - வட்டமாகப்பாய்வர். உழுவையை -புலியை. வேழத்தின் கோடு - யானைக்கொம்பு. மேல் - உயர்ந்த. அறை - பாறையில். சூகரமோடு - பன்றியையிற்றில். மறித்து - தடுத்து.

31. அழுங்கு - ஆமை. கவுதாரி - ஓர்பறவை. புள் - வண்டு. ஒழுங்கு - வரிசை. புல்வாய் - கருமான். கலை - ஆண்மான். எறிய - முன்னேறிச்செல்ற. உழுந்து - உலக்கைக்கழுந்து. கைசெயும் - கையால் வேலைசெய்யும். சூழல்வாய்- இடத்தில். கைசெயல்- ஓடியெறிதல், காடுகலைத்தல், வலைவீசுதல் முதலியன.

32. நீலம் - நீலநிறம். சரற்காலம் - மழைகாலம். கான்அரா - மலைப்பாம்பு. தாலம் - பருமை. ஓலமிடுன்றது - பெருமுழக்கமிட்டது.

33. மாசுணம் - பாம்பு.

34. கட்டு - சுற்றிய. காரம்னன- முதலையாக. நேமியா - சக்கரமாக. தொட்ட-தொடுத்த. வாளி-பாணம்.

35. வல்லை - விரைவில். பாந்தளின்-பாம்பினின்றும். விட்டபின் - விடுவித்தபின்னர். விடமீட்ட-விடந்தீர்த்த. வரிவெங்கை - புள்ளிகளையுடைய புலி; இது: "வெங்கைவரிப்புலி நோய்தீர்த்த விடதாரி" என்றுமூதுரைச்செய்யுளை ஞாபகப்படுத்துகிறது.

36. தானை - படை. சமரில்-யுத்தகளத்தில். தெவ்வர் - பகைவர்.

37. சோனை - விடாதுபெய்யுமழை. சரம் - பாணம். விட்டென - நீங்கினாற்போல. வான் - மேகம். இறைத்தது-நீரைச்சொரிந்தது. வெறித்தது-வறுமையாய்நின்றது. சாபம்- வில்.

38. சேணில் -தூரத்தில். வீணில் - வீணாக, வேட்டைக்குபயோகமில்லாமல். கறித்து - கடித்து.

39. உழந்து - வருந்தி. கார்முயல் - கரியமுயலை. கூன - வளைந்த. குணில்-குறுந்தடி. மானா -வீரத்தையுடைய.

40. கொம்பு - திக்கடைகோல். பம்பு -நெருங்குகின்ற. சம்பு - நரி. தாயது - தாவிச்சென்றது.

41. தசை - மாமிசம். சம்பு - நாவல். சம்பு -ஓர்புல். சம்பு-சிவபிரான்.

42. ஓட - (நரி) ஓட. ஓடி - (வேடனும்) ஓடி. ஓடம் - தோணி. கூடுதலாய் - சேர்தல்போன்று.

43. வேறு - வேறாக. அமைத்த பின் - வைத்தபின்னர். வினைபிரித்து - வினையை வேறாக்கி. தனித்தான் - தனிப்பட்டிருந்த வேடராசன். துணைவில் - விரைவில்.

44. பார்வை - கண்ணால். இகலன் - நரி. பூர்வம் - பின்னடைதில்லை.

45. வரி - கீற்று. பொறி - புள்ளி. மீட்டவன் - விடுவித்தவேடன். கைப்படை - கையாயுதம். தனை - ஊனை. பரிய - பருத்த.

46. சிவந்த - உயர்ந்த. தேடியும் - தேடியும். ஓரியும் - நரியும். உவந்த - (தாம்) மகிழ்ந்த. உயிரைமறியாமை - உயிர்க்குவருங்கேட்டைநினையாமை.

47. எட்டுவன் - சமீபிப்பன். பொறி - (கண்களில்கோ)பாக்கினி. இகலன் - நரி. கொதிப்பான் - கோபங்கொள்வான். மிடல் - வெற்றி. (ஆகுபெயர்)

48. திறை - கப்பம். முனைவன் - தலைவனாகிய வேடன். ஓரி - நரி. பெயர்வான் - செல்வான்.

49. வரை - மலையில். பொரு - மோதுகின்ற. கடல் - சமுத்திரம் போலும்.

50. இரு - பெரிய. வலம்புரி - நந்தியாவட்டம். நந்தனவனம் - பூந்தோட்டம். வலம்புரி - வலஞ்சுழிகின்ற. தண்டலை - சோலை. வலம்புரி - வலம்புரிச்சங்கம். வலம்புரிமருகு - சங்கவீதி. மறுக - சுழல.

51. முத்து அலை - முத்துக்களை அலைக்கின்ற. முத்தலைக்கிரி - திரிகூடமலை. உளரும் - சுழலும். தனைந்தபோல் நீங்கியதுபோல. [தனைந்தி தன்பது, ஈறுகெட்டுநின்றது.]

52. தமதமது - (நரியும்வேடனும்) தங்கள் தங்களுடைய. இடங்குலாய் - இடத்தில் விளங்கி. மானம் - விமானம். இணங்கு - பொருந்துகின்ற. கிங்கிரன் - தேவதூதன்.

53. மேல் - அதன்மேல். செழித்தும் - சொல்லும். உலைவில் - வருத்தமில்லாத.

பதினெட்டாவது:— யானைபூசித்தசருக்கம்.

1. முந்தும் - முற்படும். நித்திய முதலொன்று - நித்தியம், நைமித்தியம், காமியம். ஐந்துசுத்தி, பூதசுத்தி, மந்திரசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, இலிங்கசுத்தி. போது - பூ. மற்றவை - பிறபொருள்கள். புந்தி - அறிவு. மூன்றுருவினில் - (குரு இலிங்கம், சங்கமமாகிய) மூன்றுடையாளப் பொருள்களில். புரிவது - செய்வது.

2. வேழம் - யானை.

3. பேடை - பெட்டை (மயில்). அகவும் - ஆடும். பருவம் - காலம். குருகு - நாரைப்பறவை. பேடைகள் - பெட்டைகள். ஒருமை - ஒற்றுமை. சேவல் - ஆண்பறவைகளின். ஊடலுக்கு - ஊடுதலினிமித்தம். ஊடல்கூர் - (நாங்கள்) ஊடுதல் மிகுகின்ற. குளிரும் - குளிர்காலமும், கூதிர்க்காலமும். பருமை - பருத்த. கூரவின் - சிறகுகளிடத்து. (அணைந்து). இடைவிடாது - நீங்காது. பனியும் - (முன்) பனிக்காலமும்.

4. பாங்கு - அழகிய. கயம் - தடாகம். தளாட்ட - ஓயாட்டத் தாங்கு - தங்குகின்ற. வெய்யிலோன் - வெயிலாகிய. வானாயுதம். விதிர்த்து - அசைத்து.

5. தெறுதல் - வருத்துதல். வேட்டு - விரும்பி. ஊர் உலாவு - பரிவேடத்துள் சஞ்சரிக்கின்ற. விளர்க்கும் - வெளுக்கும்.

6. புலவு - புலால் நாற்றம். நீர் - (கடற்) சலம். சுலவியும் - (தம்மைச்) சூழ்ந்திருந்தும். வீழ் - விழுவது. துளியாமை - மழைபெய்யாமை. பெருகிந்தது - வெந்தது. வள்ளியோர் - கொடையாளிகள். கயவர் - உலோபர்.



7. படம் - பாம்பின்படம். பாந்தள் - பாம்பு. கரிந்த - கருகிய. கருப்பை - காடெலி. கானெரி - காட்டுத்தீ.

8. மதியான - (தன்) னுள்ளாகப்பட்ட. அத்தி, தோல், தங்கல் ஆம் - இப்பெயர்களையுடையதாகிய. அசலம் - மலைபோன்றயானை. அத்தி - எலும்பு. தோல், — தங்கல் - தோம்பல்.

9. பன்னம் - இலை, இரை - உணவு. பன்னக் ஆதிகள் - பாம்புமுதலியவைகள். பவன அசனம் - காற்றாகியசோறு. பழகி - (உண்டு) அப்பியாசித்து. வான் - ஆகாயத்தில். அலை - அலைகின்ற. கானலை - பேய்த்தேரை. தன்னம் - அற்பம்; சிறுசெத்து. சுழன்றது - சுற்றித்திரிந்தது.

10. கனல்வது - சுடுவது. தொடர்தரத்தர - தொடர்ந்து செல்லச்செல்ல, தொலைதரும் - இல்லையாம்படி; — உடலும் - விரோதிக்கும்.

11. உலக்கும் - வாடும். பன்னாள் - பண்டை பகலம் பூத்த - செமித்துவைத்த.

12. பற்பம் - தாமரை. கற்பகவடவி - கற்பகச்சோலை.

13. கானவாரணம் - காட்டுக்கோழி. பேடைசேர் - பெட்டையுடன் கூடுகின்ற. பதுக்கை - சிறுகாடு. கமம் - நிறைவு. கூன - வளைந்த. வாரணம் - சங்கு. மோனம் - காத்துவிகருணம். ஆர் அணங்காம் - அரியதெய்வப்பெண்கள். பயில் - தங்குகின்ற.

14. மடித்தடம் - அழுமாகிய தடாகம். பொதும்பர் - சோலை. தொடுத்த - சேர்க்கப்பட்ட. குக்கமம் - குசுமதேகம். ஞாலம் - ஞாலதேகம். ஆவி - உயிர். அயர்வுயிர்த்தது - சிரமாற்றி செய்தது.

15. பசிக்கு - பசியால். பாணுனர் - பாணபத்திரர். பாணியை - சங்கை. சேரன் - சேரமான் பெருமாளுடைய. பொழில் - சோலை.

16. மதுகரி - விரோதிக்கின்ற யானை. கூழை - (ஆகுபெயர்) அக்குலையின் கிளி ஓன்கள் பழங்களை. முங்கி - விழுங்கி. பேழை - பெட்டி. தாழை - தென்னை. முப்புடை - மூன்று புடைப்புடைய, நறுங்கனி - நல்ல பழம்; தேங்காய். தாங்கி - பிருத்துண்டு.

17. ஆகம் - தேகத்தில். மால் மதம் - பெரியமதம். உவட்டெடு - பெருக்கெடுத்தோட. (மேற்கூறியவைகளை) நுகர்ந்த - உண்ட. தாள் - முயற்சியுடைய. அசலம் - மலைபோன்ற யானை, (அந்த யானைக்கு) போகமே - இன்பத்தையே. மாகதி - ஆகாயகங்கை.

18. தூயம் - புகை. கொழித்து - ஒதுக்கி. தழைசெவியன் - விரிந்த காதையுடைய யானை. தாமம் - தாகம். படித்த - முழுகிய. பசுந்துயர் - பிறவித்துன்பம். மறிபடும் - அற்றுப்போகும். படி - தன்மை.

19. கொண்டு - முகந்து. மெய்ப்புறம் - தேகத்தினிடம். வைப்பு - இடம். வினையமிட்டு - வட்டமிட்டு. திதமா - யானை. சேரன் - வலிய. அரா - கரும்பாம்பு. உமிழ்வது - கக்குவது.

20. இருமை - பெருமை. நாகம் - மலை. வயிரவாள் - வச்சிராயுதம். ஏய்ப்ப - காத்தோங்க. ஒரு - ஒப்பற்ற. மைநாகம் - மைநாகமலை. படிந்து - மூழ்கி. அயர்வுயிர்த்து - இளைப்பாறி ருஞ்செய்து. பருமை - பருத்த. நாகம் - யானை. பனைக்கை - பனைபோலும் துதிக்கை. படர் - (தன்னிடத்து) வருகின்ற. கோள் - கிரகங்களிலொன்றாகிய. கருமை - கறுத்த. நாகம் - (இராகுவாகிய) பாம்பு. இருமதி - பெரிய சந்திரன். ஒருமதி - ஒப்பற்ற அறிவு.

21. சர்தம் - (விகாரம்) தங்கத்தை. ஓர் - உணர்கின்ற. இருபிறை மருப்பு - இரண்டுபிறைச்சந்திரன்போன்ற கொம்புகள், கால்வாய் - தொங்கிய வாய். சித்தம் - மனம். மைந்து - வலிமை. முத்தவாரி - முத்துக்களையுடைய நீரை. நீர் - தன்மை. சத்தம் - ஏழு. நீர்த்தாரை - மழைத்தாரையை.

22. கறையடி - உரல்போன்ற கால்கள். கவுள் - கன்னம். மதக்கருழி - மதமாகிய காட்டாறு. சிந்துரம் - பொட்டு. சிந்துரம் - யானை. உடல்வழி - சரீரத்தினிடத்தில்.

23. மறி - வலிமை. முது-பெரிய. வாரிநீர் - வாரியாகிய நீர். (இருபெயரொட்டு) வரையின்-திரிகூடமலையிலுள்ள இமைப்பு-பிரகாசிப்பன. நமிநந்தியடிகள் - அறுபத்துமூன்றுநாயன்மாரிலொருவர். நிரை - வரிசை.

24. தூங்கல் - மெலிவுள்ளது. துறையில் - அருவித்துறையில். ஓங்கல் - மலை. மதர்த்து - கருவங்கொண்டு. தேம் - தேன். கலாம்-(வீகாரமொழி.) செருக்குவனை. தடம் -(திருப்புலிக்காத்துப் தெப்பக்)குளம். வேட்கோவர் - குயவராகிய திருநீலகண்ட நாயனார்.

25. அரிய - அன்புடைய. தண்டலை - சோலையில். அடி-வழியாடி, மூழ்கி. பரிந்து-(விகாரம்) முறித்து.

26. துறும்-நெருங்கும். பலாபலவும் - பலவும்பலவின்மையும், பலாதி-பழமுதலியபொருள்கள். கதிர்த்துறைவாய் - சித்திராநதித்துறையின் பக்கத்தில். குழகர் - பேரழகுடைய திரிகூடநாதர். குழுமி - கூடி.

27. இமிலம் - பெருமுழக்கம். உமிழும் - (வாயினூற்) சொரியும். தின்னன் - கண்ணப்பநாயனார். ஆய்-ஆக. அவன் - அந்நாயனார். சிகையுருக்கும் - குடுமியினின் றுதிர்க்கும். அலிகள் - உணவுகள். (ஆய் இரண்டும் - ஆகள் பதின் திரிபுகள்.)

28. கலிர்தம் - தவம். (தாற்பரியம்) பருகும் - பருகத. அற்புதம் - ஆச்சரியப்பொருள்கள்.

29. அருச்சனை - அர்ச்சித்தல். அருகில் - பக்கத்தில். நிவேதனம் - நைவேத்தியம். இது - இக்கிழ்ச்சி.

30. மஞ்சனம் - ஸ்நானநீர். ஒருமை - மனவொருப்பாடு.

31. கவனம் - நிலையாகிய உணவுடைய. பவனம் - பவனத்திலுள்ள. கால் - (மரக்)காலால். தினை மெலிய. காய் - சுடுகின்ற. துவள் - அசைய, சலனப்பட.

32. அந்நெறி - அந்தமார்க்கம், வினைநெருங்கேந்தவழி. மெல் - மென்மிய. நெறி - ஒழுக்கம். தந்தாவனம் - யானை. தம்-தன்னுடைய. தாவனம் - இருப்பிடம். (தன்னென்பது தம்மெனத் திரிந்தது.)

33. தரிகூட - தங்குதலசேர. அரிகூட - விஷ்ணுவினுடன். விரிகூட - விசாலமாக.

34. நன்புலத்து - நல்லவிடத்தில். பொறித்து - அநுபவித்து. உலப்ப - கெட. ஒழிந்தநாள் - மரணகாலத்தில். எதிர் - நேரே. எற்றார் - எதிர்த்தார். புன்புலத்தின் - அற்ப அறிவினையுடைய. விலங்கு - மிருகமாகிய யானை.

35. கடுவன் - ஆண்குரங்கு. பானுவை - சூரியனை. தனிதாவு - தனியாகக் குதிக்கும். நேசனை - அன்புடைய குரம்பவா வீசனை.

36. அற்புதநும் - அன்புடையரும், நற்பேறு - நல்லபலன். பெறுவம் தன்றும் - அடைவதென்றுகேட்டுக். படர்க்கு - நாதர்க்கு. கழல்கள்போ - திருவடியைத் தரிசித்தோ. முன் - முற்காலத்தில். முசுகுந்தன் - திருவாரூரிலிருந்த முசுகுந்தச் சக்கரவர்த்தி; இவன் குரங்காயிருந்த ஒருவனத்தின் வில்வத்தழைகளை யுதிர்த்துக்கொண்டிருக்க, அத் தழைகள் கீழேயிருந்த சிவலிங்கத்தின் திருமேனியைப் பொதிந்து பூசையானதால், சக்கரவர்த்தியான கதை திருவாரூர்ப் புராணத்துட் காண்க.

37. எங்குளார் - எந்த இடத்திலுள்ளா(ரும்). அங்கசாதனம் - சொரூபசாதனம். வங்கம் - தோணி; கப்பல். புட்பகத்தேர் - புட்பகவிமானம்.

38. வேதி - ஒன்றை மற்றொன்றாக வேறுபடுத்துங் குளிகை.

முதலாவது: [illegible] முற்றிற்று.

சிவமயம்.

# அரும்பதவுரை.

## இரண்டாவது:— சிவரகசியகாண்டம்.

### காப்பு.

1. கரத்து - துதிக்கையிலிருந்து வரும். மாருதம்-காற்று. உயிர் (பிராண) வாயுவின். பிறக்கம் - விளக்கம். கரத்து-(மற்றொரு)கையிலுள்ள. மருப்பு - (கயாமுகாசுரன்பொருட்டு முறிக்கப்பட்ட) கொம்பு. நூரிசு - குற்றம். மோதகக்கை - மோதகமென்னும் பலகாரம் வைத்திருக்கும் கரம்.

உமைதிருவவதாரச்சருக்கம்.

1. சேடம் - எஞ்சியவற்றை. போகபூமி-சாம்பூநதநதியைச் சூழ்ந்த நிலம். வரம்பு - எல்லையாயுள்ளது. ஆணி - உரையாணிபோல்வது. அத்தாணி - அரசிருக்கைமண்டபம்.

2. தார் - மாலையிடத்து. உதிக்கும் - தோன்றும். மணி - இரத்தினம். உதித்தும்-தோன்றப்பட்டும், புத்தும் - உண்டாகப்பட்டும், தரிக்கும் - அணியப்படும். அவட்கு - அப்பூமிதேவிக்கு. கலையாய் - வஸ்திரமாகி, வாரிதிக்கு - கடலுக்கு. நீர் உதிக்கும் - சலந்தோன்றும். காலுதிக்கும் - நான்கு திசையிலும். வரைகடவா - (தான்தன்)எல்லையைக்கடந்து செல்லப்படாத. மாவேலி - பெரிய வேலி. பனிக்குன்றம் - இமயமலையானது.

3. கம்பப்பொருட்டு - தாமரைக் கொட்டை. பொதுளும் - நெருங்கும். வளர் - கன்வளர், நித்திரைசெய்கின்ற. துகிலம் - பனியாகிய. தோயம் - நீர். மன்னல் - நிலைபெறல். வடிவமூன்றும் - (இந்த) சொரூபமூன்றையும். பனிவரை - இமயமலையானது. முத்தேவியர்-இலக்குமி, பார்வதி, சரஸ்வதியாகிய மூவர். உறும் - பொறும்.

4. அறை - பாறையில். மிறை - பயமாக. வருந்தும் - வருந்தப்படுத்தும். வாளரி - ஒளிபொருந்திய சிங்கம். பிறை - பிறைச்சந்திரனுகிய. வளைப்பெருந்தண்டத்து - வளைந்த பெரிய தந்தத்தையுடைய. புயல்-மேகங்கள் தப்பிய. வரையை - இமயமலையை. சிம்புள் - எண்காற்பறவை. மழை - குகையுள். சியம் - சிங்கம். பிறையாகிய தந்தத்தினையுடைய சிம்புளெனக்கூட்டுக."

5. யாவர் - எவருடைய. அம்பு அயர் - பானைமுந் தோர்வடைய யாவும், கண்ணினர்-கண்களையுடையராய். கண்ணினர் இவரை - பொருந்தினவராகிய இவ்வரையாகியவனை. பணிவது - வணக்கப்படுவது. சிறுகுடிச்சிறுபால் - சிறிய குடிசையில் வசிக்கும் வேடர்பிள்ளைகளிடத்து. கா-சுற்பகத்தின். வரம்பையில் - அளவில்லாத. கனியளித்து - பழங்களைக்கொடுத்து. ககனம் - ஆகாயத்தில். அா - தாவிச்செல்லும். அரம்பையின் கனி - வாழைப்பழங்களை. நனிமிகவும். மா கொன் சயிலம் - பெருமையைக் கொண்டிருக்கின்ற மலை." வாம் பையெனற்றில் - அணிபெயர. அம்பு மென்றுமும்மைமொழிதொக்கது.

6. சமைய - பொருந்த. மந்தரம் மத்திமம், தாரம் - (இம்மூன்றுசுரங்களுடன்.) ஒன்றுபிறைகைக்கும்-ஒன்றென்றிசைபாடும். அமையம்- சமயத்தில். அந்தரத்து - ஆகாயத்தில். அகணரா - நகணப்பறவை. (அவ்வொலிகளைக்கேட்டு) அமைரும்-சுற்றித்திரியும். அடவி - சோலைசூழ்ந்த. இமையவர் - உச்சியில். அந்தரத்தவர் - தேவர்கள். உறைற - வசிக்கும். குலவரை-நல்லமலைகளை. தெரிப்போர் - தெளிந்தெடுத்துச்சொல்வோர்.

7. குருநாள்-தெய்வமையுள்ளவர். யாருளார் - வைகுள்ள (மேரு). ஆயர் - ஆவர்கள்.

8. மவேலகன் - பிராக்கள், கால், — இயிர்த்து - இயிர்கொண்டு. உறை -

இடத்தில். படியும் - கூடியிருக்கும். பணி - பாம்பு. சிசிரம் - பின்பனிக்காலத்தின். ஞாட்பினால் - வலிமையால்; அல்லது போரால்.

9. அகன்இடம் (இமயமலையின்) விரிந்த இடம். விசும்புதொட்டு - ஆகாயத்தைப் பரிசித்து. அழன்று - சுடுதலால். மதிக்கலை - சந்திரனிடத்துள்ள மான். முடங்கு பான்மையும் - வளைந்தொடுங்குந் தன்மையும்.

10. வடதிசை - (மேருமலைக்கு) வடக்கின்கணுள்ள திக்கு-குடம்உறு - கும்பராசியைப் பொருந்திய. மிடல்-வலி. வடவனலின் - வடவாமுகாக்கினியால்.

11. வெற்பு அகம் - (இமய)மலையினிடம். எறி - வீசுகின்ற. வேய்ந்தன - அணிந்தன. பகம் - பெண்குறி. நாணில் - கயிற்றில். பொற்பு - அழகு. அகம் - இடம். நித்திலக்கோவை - முத்துமாலை. அணிந்தனவாகிய வல்லிகளெனக்கூட்டுக.

12. அமையன-மூங்கில்போன்ற.

13. உதரம் - வயிறு. மலை-அணிகின்ற. மேனைகாவலன் - மேனையென்பவளுக்கு நாயகன். அமலைபுரி - முழக்கஞ்செய்கின்ற. கோட்டு-சிகரத்தையுடைய. மைந்நாகன் - மைந்நாகனென்னுமலை. தந்து - பெற்று. (அதன்பின்) அமலை - உமாதேவி.

14. கன்னன் - விஞ்ஞு. அறுகு - அறுகம்புல். அன்னல் -தலைவனுடைய. மெய்க்கண்-உண்மையினிடத்து. முயல்-முயன்று செய்கின்ற. எக்கண்ணும் - எந்த இடத்தும்.

15. சுகிர்தம் - தருமம். பொன்அவாம் - இலக்குமி விரும்பும். இன்ன - இத்தன்மையுடைய.

16. இழை - ஆபரணம். மேயினன் - பொருந்தினன்.

17. உவாமதி - பூரணசந்திரன். (மகிழ்ந்து) கண்ணுறீஇ - கண்களாலுற்றுநோக்கி.

18. உகனம் - இரண்டு. வீங்கினள் - (பால்சுரந்து) பருக்கப்பட்டனள். எங்கின - (தேவியாரைப்பிரிந்ததனால்) வருந்தின.

19. மோப்ப - மோந்துபார்க்க. ஓடி - படரப்பட்டு. கனகவள்ளம் - பொற்கிண்ணம்போன்ற கொங்கை. பச்சைவல்லி - பச்சைக்கொடிபோன்ற பார்வதியின். பவளவள்ளம் - பவளக்கிண்ணம்போன்றவாய்.

20. புவனகோடியை - மிக்கவுலகங்களை. போக்குவரவு - மரணம், சனனம். பவனம் - தேவலோகம். பணித்தது - செய்ததாகிய. சுவனம் - தங்கம்.

21. அரிக்கிண்கிணி- பருக்கைக்கற்களையுடைய சதங்கை. அலம்புகின்றது - ஒலிக்கின்றது. ஐ-சாரியை. அடி - பாதங்கள். கலம் - (அவ்)வாபரணங்கள். புலம்புறலோ - அழுதலோ.

22. இறை - சிவபிரான். இரண்டெடி - இருநாழிகெல். (படி ஆகுபெயர்) சகம் - உலகத்தை. முறை -வரிசையாக.

24. துற்றிய - நெருங்கிய. துதையும் - நெருங்கும். முற்றிலும் - முழுவதும். எற்றிலும் - எத்தன்மையுடையதிலும். அமைவது - பொருந்துவதாகிய. இயைபு - சம்பந்தம். முன்றில்வாய் - முற்றத்தின்கண்.

25. பாவை - மரப்பாவை. கழங்கு - கழற்சிக்காய். பயிற்றுதல் - பழக்கிவிளையாடுதல்.

26. பேதைஆர் - பேதைத்தன்மைநிறைந்த. பருவம் - (ஏழு)வயது. கோதை - மாலை. ஆர்வத்தால் - ஆசையால். மேதைஆர் -பேரறிவுநிறைந்த. மேனை - (தாயாகிய) மேனை. தாதை - மகரந்தத்தை.

27. உறையுள் - இருப்பிடம். வழங்கினான்-சொன்னான். அழகன்-பேரழகுடையவன். கிழவி - உரியவளாகிய பார்வதி.

28. வாலை - இளமைப்பருவமுடையவள். இறும்பூது - மகிழ்ச்சி. தனிமை - தனித்திருத்தல்.

29. சங்கநீர் - வலம்புரிச்சங்கத்திலுள்ள சலம். பதுமை -இலக்குமி.



கவுரி - கவுரநிறமுள்ளவள்; பசலைநிறமுள்ளவள்; (உமாதேவி). சிந்தைவயிரம் - மனவயிராக்கியம். வரைப்பெண் - மலைபோலக் கடினமாகிய மாது, (மலையிற்பிறந்தபெண்).

30. கூவம் - புனற்கரை. வனத்திடை - சலத்தினடுவில். நிலை - நிலைத்த. நிட்டை - யோகம்.

31. புகட்டி - பதித்து. மேற்கண் - மேலிமையை. முகிழ்த்து - குவித்து, மூடி. [கண்-ஆகுபெயர்.]

32. ஏற்ப-ஏற்றுக்கொள்ள. மோனை - முதற்காலம். ஆர்வம் - அன்பு. வானை - வானில். (உருபுமயக்கம்)

33. பரந்து - விரிந்து. எழு - வளர்ந்து.

34. காண்பான் - காணும்பொருட்டு. ஆதி - முதலிய.

35. அந்தணமுதியோர் - பிராமணப்பெரியவர். பணி - வணங்கப்படும்.

37. ஊழி - யுகாந்தகாலத்தையும். நீந்த - கடந்த.

38. தேம்ப - வாட. வண்ணம் - அழகு. நோற்றல் - தவஞ்செய்தல். கடிஞை - பிக்ஷாபாத்திரம். கடுநுகர்ந்தார்க்கோ - விடமுண்டவர்பொருட்டோ.

39. மொழிதலாற்றார் - (ஒன்றும்) பேசார். கயிலமான் - மலைமான்போன்ற பார்வதி. வீறால் - கருவத்தால். (அசையடக்க) அடல்-வலிமை. பலிகொண்டார்-பிக்ஷாபாத்திரத்தைக்கையிலெடுத்தார். (பலி ஆகுபெயர்)

40. பொன்மலைதரு - பொன்னுலகங்களிக்கும். வல்லீர் - வல்லவரோ. இகழ்வதோ -இகழ்த(லா)மோ.

41. மைப்படி - (விகாரம்) மைதோய்ந்த. வருமோ - (உங்கள்தவத்துக்கு) வருவாரோ. ஒப்பிலாது - (எங்கள் தவத்தை) ஒப்புக்கொள்ளாமல். ஒழிந்தாரேனும் - நீங்கினாராயினும். ஒழிகலம் - (தவத்தை) விடமாட்டோம்.

42. போந்தவாறு - வந்தவிதம். வழங்கினீர் - பேசினீர்.

43. மறைவடிவு - மறைந்தவுருவம், (வேதசொரூபம்). சொல்லும் - வார்த்தையும். மறைமொழி - மறைத்தவார்த்தை, (வேதவாக்கியம்). மாழ்கி - மயங்கி. வெட்கி-நாணி. கோட்டி - வளைத்து.

44. காந்து - மறைத்து.

45. வேண்டிற்றே - வேண்டியதோ.

46. மறையின்முன்னே - வேதங்களின் முன்னாகிய பிரணவப்பொருளே.

47. கராய் - கரியநிறமாகி. ஒழுகும் - ஏகும். அந்தமாந்தாய் - முடிவாயுள்ளவனே. பரமேட்டி - மிகமேலானவனே.

48. நீலம் - நீலம்போன்ற கண். முத்து - முத்துப்போன்ற கண்ணீர்த்துளி. உகுத்தாள் - சொரிந்தாள். அமருங்கால் - சூழும்போது. மன்று - (சித்திர) சபை.

49. பணகம் - பாம்பு. (இடைக்குறை) படர் - விரிந்த. தினகரோதய - சூரியோதய. அனவரதம் -எப்பொழுதும். கனம் - மேன்மை.

50. நகிலவரை - கொங்கையாகிய மலை. நோன்பு - தவம். நின்றாளும்-தினந்தோறும். நவின்றான் - சொன்னான். சேண் - உயர்ச்சி.

51. ஆற்றும் - அணியும். (தாற்பரியம்.) ஆற்றுவார் - சகிப்பார். கருநிறம். ஆற்றும் - செய்யும்.

52. கொந்து-கொத்தாகிய. கோதையான் - கூந்தலையுடையாளாகிய மேனை. பயந்த - பெற்ற. வருந்தல்-ஈதுந்தாதே. விந்தநாசாந்தம் - விந்துநாதமென்னுஞ் சிவதத்துவங்களின் முடிவு.

---

## இரண்டாவது:— திருமணச் சருக்கம்.

1. வரைச்சாபத்தார் - மலைவில்லையுடையவர். சாபத்தர்-சபித்தலையுடையார். வரித்தி - வரவழைத்து. வயிர - கொள்ளுகின்ற, பகர் —

சொல்லினவராய். வருதிர் - வாருங்கள்.

2. இமவான் - இமயவரசன். பக்கல்-பக்கம். பாங்கு - அருகில்.

3. கொண்டனளீர் - கொண்டாற்போன்றவரே. கழிப்பி - கழித்து, கடந்து.

4. தனையன்-புத்திரனாகிய. முந்தையார் - பண்டேயுள்ளவர். கொந்தை- பூங்கொத்தை. அழிப்பரிாகிய கொன்றைவேய்ந்தாரெனக்கூட்டுக.

5. மேனையார் - மேனாதேவியார். மகட்கொடுத்தார் - மகளைக்கொடுத்தவராகிய தக்கனார். தானை - ஆயுதம். அரிந்து - நறுக்கி. சம்பந்தம் - கல்யாணம். மோனர் - ஞானிகளாகிய சத்தருஷிகள். மோனையாய் - ஆதியாயுள்ளவனே. முத்தங்கொடுத்து - முத்தமிடுதற்கு.

6. மனை - மனைவி. தகவு - (சிவபெருமான்) தகுதி. வேட்பதானுல் - மணஞ்செய்வதென்றால்.

7. பூளை - பூளைப்பூ. ஆர் - ஆத்திப்பூ. கரந்தை - கரந்தைமலர். இரை - இலக்கினம். நயந்தனர் - விரும்பினவராகி.

8. செம்பொற்பொருப்பு - மகாமேருமலைபோன்றசிவபிரான். மணக்கும் - விவாகஞ்செய்யும்.

9. புண்ணவர் - முனிவர். மணஞ்செய்தான் - நினைத்தார்.

10. வேட்கும் - விவாகஞ்செய்யும். மங்கலம் - சுபமுகூர்த்தம். வகை பெறும் - பிரிவுபடும். வேய்ந்த மறைஞனெனக் கூட்டுக.

11. பாவகன் - அக்கினி. நிருதேசன் - நிருதி. பவனுதிபன் - வாயு. சரணம் - பஞ்சாங்கத்திலொன்று.

12. அண்டமூலம் - அண்டத்தினடியிலிருக்கிற. அவர்போல்வார் பதின்மர் - அந்தக்காலாக்கினியுருத்திரரைப்போன்ற பத்து உருத்திரர். நாற்பூதகணத்திறன் - (நான்குவாயில்கள் காக்கும்) நால்வகைப் பூதகூட்டமாகிய திரள். ஆடகர் - ஆடகேசபுவனத்திலுள்ள ருத்திரர். குறட்படை - பூதசேனை. கூர்மாண்டர் - ஒருவகையுருத்திரர். இருங்கிலம் - (பெரும்புறக்கடலைச்சுற்றியிருக்கும்) இருட்பூமியை. வளர்க்கும் - விருத்திசெய்யும். அட்டகர் - புத்தி தத்துவத்தின்மேலிருப்பவர். கணபணத்து - கூட்டமாகிய படத்தையுடைய.

13. கோளகை - கூட்டமாகிய. புணிகொள்வார் - ஏவல்கொள்வாராகிய. குரகத மாசாத்தர் - குதிரையூரும்பெரியஐயனார் கூட்டங்கள். பேர் - பெரிய. அனீகத்திறன் - சேனைக்கூட்டத்தையுடைய. உருத்திரகணம் - உருத்திரகூட்டத்தில். படைவீரர் - சேனைத்தலைவர்.

14. நூறுகோடியர்-(மேடுமேலேசொல்லிய சேனைத்தலைவர்) சதவகுப்புள்ளவர். பதிநொரு கோடியர் - பதினொரு வகுப்புடைய ருத்திரர். நுதற்கண்ணர் நூற்றுவர் - நெற்றிக்கண்ணையுடையவராகிய நூறு ருத்திரர். ஆறுகோடியினிரட்டியர் - பன்னிரண்டு பகுப்புடையராகிய. ஆதவர் - சூரியர். அவர்மேலும் - அந்தச் சூரியர் மேலும். வீறு - கருவங்கொள்ளும். கோடியினிரட்டியர் - இரண்டுபகுப்பாராகிய. மருத்துவர் - தேவவைத்தியர். வசுக்களாம் நாலிருகோடியர் - வசுக்களாகிய எட்டு வகுப்பார். கோடிய-பகுப்புள்ள. பெருந்தீர்த்தம்—,

15. மூலநான்முகன் - பழையபிரமதேவன். அடங்கற்கு - (கருவ)மடங்க. மூரி - வலிந்த. கங்காளர் - முழுவெலும்பணிந்தவர். சூலபாணியர் - சூலத்தைக் கையிற்றரித்தவர். க்ஷேத்திரபாலர் -வயிரவராகிய. சுவாவினர் - நாய் வாகன முடையவரும். வடுவாணக்கோலமேயவர் - வஸ்திரமில்லாதவரும். கஞ்சுகம்-அங்கி, சட்டையுடையவருமாகிய. எண்மர் - எட்டுப்பேர்.

16. கண்ணனுக்கு - விஷ்ணுவுக்கு. அருள்செய்தோன் - திருவடிதீக்ஷைசெய்த உபமன்னிய முனிவர். சாதம் - மெய். மா - பெருமை.

17. சித்தமாதவர் - பூருவத்திலுள்ளபெரிய தவசிகள். தந்திரர்...... வித்தியாதரர்-தேவசாதிப்பகுப்பார். சாலகடங்கடர், நிசாசர்-இராக்ஷதர். (இருபெயரொட்டு.) வேதாளர் -பைசாசவகுப்பார். சித்தர்-அட்டமாசித்தி பெற்றவர். விண்ணவர் - அந்தரவாசிகள். ககசாரியர் - ஆகாயமார்க்கமாக நடப்பவர். தைத்தியர் - அசுரர். கடவுளர் - தேவர். யோகர் - யோகஞ்செய்யு முனிவர். சத்தநாரியர் - சத்தகன்னிகைகள். சத்தம் - ஏழு. முகில்வேந்தர் - மேகங்களினதிதேவதைகள்.

18. அனகம்-பாவமின்மை. புலிப்பாதன் - வியாக்கிரபாதர்.

19. மதி - அறிவு. வீதி - ஊழ்.

20. சதுட்டயம் - நான்கு. தத்துவம்—, பதம் - பதவி. அத்துவா - வழி. ஊர்தி - வாகனம். உகைத்தனர் - செலுத்தினவராகி. விசும்பு ஆறு - ஆகாயவழியாக.

21. பரந்த - விரிந்த. (பரந்தவென்பதில் பெயரெச்ச அகர ஈறுகெட்டது) ஆகாயகவனர் - ஆகாயமார்க்கஞ் செல்பவர். கோத்து - மூடி. உகவாரி - யுகாந்தகால வெள்ளம்.

22. ஒத்து -ஒன்றுசேர்ந்து. ஒருமுகங்கொடு - ஒருவழிக்கொண்டு. போந்தும் - வந்தும். அத்துணைக்கு - அவ்வளவுக்கு. தத்தி - தாவி. பூண்டது - பொருந்தியதாகிய. பாரிடத்தலைவன் -பூதநாதனாகியசிவபிரான்.

23. எயில் -(திரிபுரமாகிய) கோட்டையை. சிதைத்த - அழித்த. பரம்பரன் - மேலானசிவபிரான்.

24. உவரி -(பாற்) கடலிலுள்ள. திரள் - திரண்ட. பூதர் - பூதத்தலைவர்.

25. தருக -அழைத்துவருக. வேத்திரம் - பிரம்பு. படை - ஆயுதம். ஒச்சி - செலுத்தி. மரபினுல் - கிரமப்படி. வாக்கு - வார்த்தை.

26. அம்புராசிகள் - சமுத்திரங்கள். பம்ப - நெருங்க. பரந்த -வியாபித்தன. (பரந்த என்பதில் முற்றிறுதி கெட்டது.)

27. பயினவி - சத்தமாதர்களிலொருத்தி. காடுதான் - ஐயனார்தாய். பிரமாணி - சத்தமாதர்களிலொருத்தி. குமரி - துர்க்கை. வீரி - காளி. மந்தாகினி - கங்கை. யோகினி, கொற்றவை -காளியேவற்பெண்கள்.

28. ஞாயில் - மதிலுறுப்பு. செய்குன்றம் - செய்யப்பட்டமலை. குளிகை-நிலாமுற்றம். தெற்றி- திண்ணை. சித்திரகூடம் -சித்திரமெழுதியகூடம். காவணம் - பந்தல். பூவணம் - மலர்களாற் சூழப்பட்ட அழகிய. அகரம்- பிராமணரிருப்பிடம்.

29. உபரிகை - மேல்வீடு. வேதிகை. திண்ணை. சாளரம் - சன்னல். மாடை - பொன்னுமாம். மாமதிமணியினுல்-பெரிய சந்திரகாந்தக் கற்களினுலாகிய. அரமியம் - நிலாமுற்றம். ஆடை-சேலை. படங்கு - மேற்கட்டி. ஓடை - நெற்றிப்பட்டம். மா - கரிய. யாளிகள் - சிங்கங்கள். மீனிகள் - வீரர்கள் உருக்கள் - வடிவங்கள்.

30. இரசதம் - வெள்ளி. பூகதம் - கமுகு. (பூகதமென்பதில், தகரம் பிரத்தியேகமாகவந்தது) பழுக்காய்-பழுத்தகாய். பழுத்தாறு - பழுக்கொத்து. நித்திலம் - முத்தால்.

31. புறம் - இடம். வேட்டு-விரும்பி. அவண் - அவ்விடம்.

32. மா - பெரிய. புவனத்திரள்- உலககோடிகள். வகுத்தன - வகுக்கப்பட்டன. உருக்கள் (சித்திர) வடிவங்கள். உதித்தன -தோன்றப்பட்டன. மானும் - போலும். வான்கம்மியன் - தேவதச்சன். அருத்தவீதி - பொன்மயமானதெரு. அயன்கொடி-. அன்னப்பறவை.

33. வல்லை - சீக்கிரம். நாற்றுவார் - தொங்க விடுவார். எல்லை - சூரியமண்டலத்தை. மொய்த்து - வளைந்து. நிரப்புவார் - நிரைப்பார். அணி - வரிசை.

34. தேன்-, குறிஞ்சி - குறிஞ்சிநிலம். சாந்து-சந்தனச்சேறு. முல்லை- முல்லைநிலம். மாதர் விளையாட்டால்- பெண்கள். (முல்லைக் கருப்பொருளா

இயதூரவைக்கூத்து) விளைபாட்டினுல். மாமணித்திரள் - மாணிக்கக்கற்குவியல். பரல் - பருக்கைக்கல். படு - உண்டாகின்ற. பாலே - பாலைநிலம். பன்னீர், — (பலநீர்). திரவி - கலந்து. நெய்தல் - நெய்தனிலம்.

35. அடை - இலை. கா - சோலை. நிரைத்து - வரிசைபடுத்தப்பட்டு. இருண்டதால் - இருள்பட்டதால். கோமதன் - (தங்கட்குத்) தலைவனுண மன்மதனுடைய. சிலை - (அவனுடைய) வில். நாண் - கயிறு. கணை - பாணம். வேழம் - யானை. செவ்வி - சமயம். ஒருங்கு - எல்லாம். யானைக்கு, இருள் - உதைலயுவமையாக்குக.

36. சுண்ணம் - பொற்பொடி. விடுபூ - தனிப்பூ. நிரைத்து - வரிசையாக்கி. நறுக்கி - அறுத்து. ஒப்பிடு - ஒன்றொடொன்று உவமைகாணப்படு. சரம் - மாலை (ஆகிய). குறித்த - குறிக்கப்பட்ட. குப்பை - குவியல். உடைத்து - உடையது.

37. இமம் - பனி. அணி - அலங்காரம். தமனியப்பணி கொடு - பொன்னுபரணங்களால். மணவணி - மணக்கோலம். அணித்தமை - அலங்கரித்திருத்தல். காண்டெகை - காண்பாயென்று.

38. ஆம்பல் - யானை. போர்வை - தோல். உட்சாத்தும் - உள்ளே யணியும். கலிகொள் - முழக்கங்கொண்ட. புனைத்து - படத்தால். கச்சும் - அரைப்பட்டிகையும். ஒலியல் - வஸ்திரம். ஒளிறு - விளங்குகின்ற. காஞ்சனப்பட்டிகை - பொற்கச்சு. மலிந்து - நிறைந்து.

39. மோது - பொரு. வளை - வளைவாகிய. போதில் - பூவால். பொங்கிய - மிகுந்த. வாசிகை - மாலை. சுரோடிகை - முடிமாலை. பனைமுடி. படங்களை முடியிலுடைய.

40. தூ - பரிசுத்தம். மருப்பு - (விஷ்ணுவாகிய பன்றிக்) கொம்பு. மீன லோசனம் - (விஷ்ணுவாகிய) மீன்கண். சன்னவீரம் - தோள்வளை. கசு - இரத்தம். மீ - மேலாகிய. என்பு - எலும்பு. ஆரம் - மாலை. (விஷ்ணுவாகிய பன்றி, மீன்களின் கொம்புங் கண்ணுமாபரணமாகிய கதை கந்தபுராணத்துட்காண்க.)

41. கன் - கன்ணுகிய. ஒளிர்தரும் - பிரகாசிக்கின்ற. குறி - அடையாளம். கவின் - அழகிய. நுதற்குறி - நெற்றியிலணியும் பொட்டு. வள் நன்மேல் குழை - வளந்தங்கிய நல்ல மேன்மைபெற்ற காது. மணி - அழகிய. வளைத்தோடு - சங்கக்குழை.

42. மணிப்பணி - இரத்தமுடையபாம்பாகிய. அங்கதம் - வாகுவலயம். பொன்அணிப்பணி - பொன்னுற்செய்த ஆபரணங்களையுடைய. (அணிப்பணி இருபெயரொட்டு) அகலமும் - மார்பையும். அகலம் - விசாலம். காண்குற - காணுதற்கு. தணிப்பு அணி தகைமையால் - (தன்கண்கள்) குறைதல் பொருந்திய தன்மையால், சுருங்கியதன்மையால். பணிப்பணி - செய்துசெய்து. பார்த்த - நோக்கிய. பார்வையான் - கண்களையுடையபிரமன். (பணிப்பணி - இடைக்குறைகள்.)

43. பூண் - ஆபரணம். கண்ணுறீஇ - பார்த்து. எழீஇ - எழுந்து. பெற ஒணு - அடையக்கூடாத. தவம் - (ஆகுபெயர்) தவப்பயன்.

44. தருணம் - சமயம். அடல் எற்று - வலியுடையவாகனமாகிய. நம்பிரான் - நம்முடைய திருநந்திதேவர். புறத்து - முதுகில். இவர்ந்தனர் - எழுந்தருளினர்.

45. நீலலோகிதர் - பிரமாவினெற்றியிற் றோன்றிய உருத்திரர். ஆடகர் - ஒருவகை உருத்திரர். அட்டகர் - புத்தி தத்துவத்தின்மே லிருப்பவர். நிமலர் - மலமில்லாதவராகிய. நூற்றுவர் - சத உருத்திரர்; இவர் சிவபிரானிடத்திற் றோன்றியவர். மேலைப்பழைய. அண்டத்துச்சியர் - அண்டமுடியிலிருக்கிற உருத்திரர். அண்டமூலம் - அண்டத்தின் கீழிருப்பவராகிய. விமலருத்திரர் - மலநீங்கிய உருத்திரர்.



46. கணநாதர் - பேய்க்கூட்டத் தலைவர். ஐந்து வாத்தியம் - தோல், துளை, நரம்பு, கஞ்சம், மிடறு என்னும் பஞ்சவாத்தியங்கள். போர்ப்ப - நிறைய. (தாற்பரியம்) தமை - தம்மை. தெளிந்தவர் - அறிந்தவர், ஆத்மலக்ஷணமறிந்தவர்.

47. மேதகம் - ஒருபலகாரம். பணைக்கோடு - பருத்தகொம்பு; கயமுகாசுரனுக்காக ஒடித்த தன்கொம்பு. பாசாங்குசம் - கயிறு, தோட்டி. மூடிகம் - பெருச்சாளி வாகனம். மணத்து - விவாகத்தில். அங்குரம் என - முளைபோல. வேதபாரீகர் - வேதபாராயணஞ் செய்யும் பிராமணர்.

48. பாவகன் - அக்கினி. ஊதை - வாயு. ஆலவட்டங்கொடு - விசிறியால். சுழற்ற - விசிற. பல்கொடை - பலவிதமாகக்கொடுக்கும். திரவியம் - பொருள்கள். அளகேசன் - குபேரன்.

49. நிருதி - தென்மேற்றிசை காவலன். பாதுகை - பாதரக்ஷை. படிவர் - முனிவர்.

50. இமசலம் - பனிநீர். கால் - காம்பு.

51. நுதல்விழி மணவாளனெனக்கூட்டுக. வளம் - சம்பத்து.

52. நிட்களம் - கள்ளமில்லாமை. நிராமயன் - நோயில்லாதவன். மாயைத்திமிரம் - மாயையாகிய இருள். பணிமாற - முழங்க.

53. திளைத்து - நெருங்கி, அல்லது அழுந்தி.

55. மருகனுக்கு - மருமகனுக்கு. செம்மலை - (மருமகனுகிய அச்) சிவபிரானை.

56. பாசனம் - சுற்றம். வலஞ்செய - வலஞ்சுற்றிவர. வாசம் - வசித்தற்கிடமாகிய புவனம்.

57. விண் - விண்ணுலகத்தவர். மிடற்றினர் - (நீல) கண்டத்தையுடைய சிவபிரான். கார் - மேகம். தோகை - மயில்.

58. கார்த்த - கரிய. பூங்குழல் - (அன்மொழித் தொகை) பார்வதி. கட்டழகு - பேரழகு. வர்த்தபெருழில் - மிகுதியாகிய அழகு. பறிப்பரிது - மீட்டலரிது.

59. வார் - நீண்ட. உண்டு - உள்ளது.

60. வன்னி - அக்கினி. மாருதம் - காற்று. உரு - திருமேனி. மேலவள் - மேலாகிய உமாதேவி. ஒருகண் - ஒப்பற்ற (அக்கினிக்)கண்.

61. சங்கு - வளையல். ஆரா - உண்ணக்கூடாத. நுங்குவரென - உண்பார்போல்.

62. காய்தரும் - சுடுகின்ற. மோய்தரும் - கெடும், வருந்தும். சாய்தரும் - சோரும். மோய்தல், கெடுதலென்பது "முந்தை வினையெல்லா மோயவுரைப்பன்" என்னுந் திருவாசகப் பாசுரத்தாலறிக.

63. சுழி - நீர்ச்சுழி (போல). சுழிவிலாது - கெடாது. மோனம் - மௌனம்.

64. போய் - (புறம்)போந்து. அ - அந்த. வேயுக்கு - மூடப்படும். வெந்தமை - சாம்பராதல்.

65. ஆரம் - சந்தனம். ஆதவம் - வெய்யம். சேர - ஒருமிக்க.

66. நுதலே - (எம்முடைய) நெற்றியை. நடங்கிய - முடங்கிய, வளைந்த. மதலை - கொன்றை. முதலை - முதற்பொருளாகிய சிவபிரானை. கலுழனை - கருடனுக்கு. மோடனம் - அவமானம். விதலை - நடுக்கத்தையுடைய. பாந்தள் - பாம்பு.

67. வஞ்சி - வஞ்சிக்கொடிபோல்பவள். நேடி - தேடி. துஞ்சல் போக்கி - நித்திரை விட்டு.

69. அஞ்சல் - அஞ்சற்க. கமலம் (கையாகிய) தாமரை, அபயாஸ்தம். அருட்கஞ்சம் - கருணைசெய்யும்(கையாகிய) தாமரை, வரதக்கை. காட்சியை - தோற்றத்தை. ஊஞ்சலாட - ஊசல்போற் போக்கு வரவு செய்ய. பூசல் - சண்டை.

70. அகில் - அகிற்புகை. உண்ணூட்டப்பட்ட. நீர்முகில் - நீருண்ட மேகம். உண் - போன்ற. நிகிலம் - (உலகம்) எல்லாம். நாதர்க்கு - (பெரு

ருவாயிருக்கும்) தலைவருக்கு.
71. பரவுறு - விரிந்த. சூரதம் - அன்பு. ஆர்தல் - உண்ணுதல்.
72. கீழ்ப்பட - தாழ்மை அடைய, (கீழிட்டதாக). எணமர் - இருப்பாலகர். புகர் - சுக்கிரன். கோள் இடம் - கொள்ளுகின்றதானம், (கிரகங்களிடம்). வீணை - புயனற்றமையை(யாழ்). பொலிந்தது - விளங்கியது.
73. விந்தை - ஆச்சரியம். பவனம் - தெய்வலோகம். வெறுக்கை - வெறுப்பு, (பொன்). அலர் - பழி, (தாமரைமலர்). சலம் - சலனம், (நீர் வடிவம்). நந்திநாயகன் - சிவபிரான். விளர்த்தது - (மெலிவால்) வெளுத்தது, (வெண்ணிறமுற்றது).
76. தொடி - தோள்வளை. இழுசலம் - பனிநீராலாகிய. சேறு - சேற்றில். துடியடி - உடுக்குப்போன்றபாதம். களிறு - ஆண்யானை. (கால் பெயர்க்கமாட்டாமல்) பிளிறும் - முழங்கும்.
77. பொருத்திடு - ஊட்டுகின்ற. நியதி - ஊழ். ஞாயில் - மதில். திருக்கடை - தலைவாயில். கிழமை - சிறமை. அமைத்து - தராதரந்தெரிந்து. இடும் - உள்ளே செலுத்தும்.
78. பதம்பெயர்த்திலர் - அடியெடுத்து வைத்திலர்.
79. கீராஞ்சனம் - ஆலத்தி. அமைப்ப - உண்டாக்க.
80. தெய்வதப்பிணைக்கள் - தெய்வப்பெண்கள். கருல - நெருங்க.
81. முருகை - வாசனையை. ஒருகை - ஒப்பற்ற துதிக்கை. கயகருணன் - (யானையாகிய) கயகருணன். தருகையால் - கொடுத்தலால். பாதுகை - பாதரக்ஷை.
82. என்றுமுடைமை - நித்தியத்தன்மை. சுவத்திகம் - மங்கலவாழ்த்து. நடைபடம் - பாவாடை. பற்றிச்சென்றுசேரினக் கூட்டிக.
83. மருகு - மருகன். வாசம் - வசித்தல். பெற்றுள் - அடைந்தானாகிய மேனை. விளக்கி - கழுவி.
84. வேதி - திண்ணை.
85. கூர்மாண்டன் - ஒருவனுடைய

ருத்திரர். ஒருங்கு - (அவர்) கூட ஆடகேசன் - பொன்னிறஉருத்திரர். உருத்திரர் - (மற்றை) உருத்திரர். கம்பலம் - மேற்கட்டியுடைய. இருக்கை - இருப்பிடங்களை. அருளிச்செய்தார் - இருக்கும் குறிப்புணர்த்தினர்.
87. உரகேசன் - ஆதிசேடன். விதிர்த்தனன் - அசைத்தனன்.
88. வெரீஇ - பயந்து. இருவோர் - பிரமவிஷ்ணுக்கள்.
89. கவனம் - வேகம். பவனம் - தெய்வலோகத்தை.
90. கும்பசம்பவம். கும்பத்திற்பிறத்தல்.
91. சுரும்பணி - யாதவேலை. தீபம் - தீவு. எழித்து - வகைபிரித்து.
92. மரக்கலம் - கப்பல்,(வழக்கு) நாவலந்தீபம் - சம்புத்தீவு. தீவினை - தீவிற்பொருந்திய. நங்கூரக்கல் —.
93. காவாய் - மரக்கலம். புறம் - இடம்.
94. மனைவாழ்வு - இல்லறவாழ்க்கை. திராவிடமுனிவ - தமிழ்முனிவனே.
95. மெலிவு - (வட திசை) வருத்தம். தென்மலைக்கு - பொதியமலையிடத்து. துருவன் - துருவசக்கரம். எது - (திருவுளந்தாங்குப்) பொருந்தாது. வேட்டு - விரும்பி. அருளால் - (சிவபிரான்) ஆஞ்ஞையால்.
96. காண - தரிசிக்க. என்னும் - என்று சொல்லப்படும். அசலம் - மலை. ஒருகாட்சி - ஒப்பற்ற திருமணக்காட்சி. பொசுந்தேன் - வந்தேன்.
97. பன்கநாள் - பாம்பாகியதாய். (பனகம் இடைக்குறை) காமக்கோட்டம் - உமாதேவி. ஏண் - பிறந்த. அகலரை - இடத்தையுடையமலை, இமயமலை. அ - அந்த. நகலரை - நகமாகிய மலைக்கு. தெக்கணபால் - தெற்குப்பக்கத்தில். முதல் உள - முதலாயுள்ள தலங்கள்.
98. மின்பரப்பும் - பிரகாசம் பரப்பும்.
99. பொதிகை - பொதியமாகிய.



வடமலை - வடதிசையிலுள்ள மலையாகிய. மின் - மின்னலை. மலைக்கும் - பொருதும். விபுலம் - இமயமலை. வியமம் - மனமுவந்திருத்தல்.
101. மசப்பொலிவால் - யாகத்தின் விளக்கத்தால். வெள்ளி வேந்து - இந்திரன். வடுகச்செம்மல் - வயிரவர்.
102. முயங்கும் - தழுவும். தயவுவரு - அதைரியின்ற. கோடு - கொம்பு. உழக்கும் - கலக்கும்.
103. கழங்கு - கழற்சிக்காய். இந்து - சந்திரனை. ஆள் - அடிமைகொள்கின்ற. சந்து - சந்தனத்தைக. ஆள் - ஆள்கின்ற, தோய்கின்ற. தடிப்ப - பருக்க.
104. நிலை - நிலைக்கின்ற. கடமுனிவ - குடத்திற்றோன்றியமுனிவனே.
105. அணியாய் - அழகாய். ஊறுஞ்சுழி - உகாந்தவெள்ளத்தை. தாங்கு - (உன்னைவரவொட்டாமல்) டாதுகாக்கின்ற. எயில் - கோட்டை. மோசனம் - நீக்கம்.
107. அத்தலை - அவ்விடத்தில். அக்கீர் - அச் சித்திர கங்கை.
109. கின்ற - தங்கிய.
111. முன்றூ - முற்காலத்தில். சுந்தமலை - சந்தனசலமென்றும் பொதியமலை. அம் அலை - நீரும், அலையுமுடைய.
112. பொன்னிநதி - காவிரியாறு. ஒழுகுநிறை - ஒழுகுநிறைநுணம். பெண்டகைமார் - பெண்ணின்தகைமையுடையார். உசிநேர - உயாயமோ. (தாற்பரியம்) கெழுபொருந்திய தகை - தகுதியையுடைய. குதித்து வரையறுத்து.
113. உம்பர் - மேலாகிய. கோவணத்தால் - கோவணத்தின்பொருட்டு. பெருமான் - பெரியமகாருஷி. அமர்நீதி - அமர்நீதிநாயனார். அவை - தராசு. (இத்தலைக்கைப்பெரியபுராணத்துட் காண்க.)
114. கோண் அற - காய்தலில்லாமல். இரு - பெரிய. ஆநியை -

(அன்மொழித் தொகை) கூர்தலைப்புடையபோர்கருதியை. ஒஇறியர் - மலையரசன். பொற்புறினை - அழகாயுள்ளவளை. ஒப்பனை - அலங்காரம்.
115. பேரெழிலுக்கு - பேரழகாயுள்ளவளுக்கு. இம்மேல் - இம்மையில். பேதைமை - அறியாமையாகிய. அனவக்கணவாம் - (அவருடைய) அனவுத்தனங்கள் அனவுத்தலையானத் தோற்றும்.
116. காலத்தின் - (உரிய)காலத்தில். முன்னோனனையை - முதலிலெண்ணப்பட்ட. பூசைக்கடன் - பூசைமுறைப்படி. சமைத்தான் - அமைத்தான்.
117. மணிக்கலை - இரத்தினமிழைத்த பரிவட்டம். அணி - அலங்காரம். செய்யை - சிவந்தகையால். அணிக்கு - ஆபரணங்களுக்கு. அணி - அழகு.
118. தாரகணம் - நக்ஷத்திரக்கூட்டம். தலைப்பணி - தலையாபரணமாகிய. உத்தி - திருவுருப்பு, இதை இக்காலத்துச் சுட்டியென்பர். திருத்தினான் - அணிந்தான்.
119. குழல்வின்வெளி - கூந்தலாகிய மேகத்தினிடத்தில். ஊன்ஆனி - தட்டையாகிய கீர்த்திவலை. முத்தணி தொங்கல் - முத்துக்கோவை செய்தமாலை. அணைத்து - கட்டி. பட்டம் - நெற்றிப்பட்டம். வீக்கி - கட்டி. ஒருமைப்பிறை - ஒருபிறைச்சந்திரன். இரு - பெரிய. மான - ஒப்ப. இருமை - பெருமையுடைய.
120. குமிழ் - குமிழமலர்போன்ற நாசியில். முத்தம் - (முத்துக்களாகிய) முத்தை. கொக்கை - கொவ்வைப்பழம்போலும் இதழ்கள். முகிழ்க்கும் - முகிழ்க்கொண்டிருக்கின்ற. முத்தின - (பற்களாகிய) முத்துக்களைப்போல. அமர - தங்க. தவம் - தவஞ்செய்தற்கிக. வளியில் கீழ்ந்தும் - வளியிற்கிடந்திகயேந்தும். ஆரம் - முத்து. பொற்குவழில் - அழகியகாதில். குழை - (மகரக்) குழை. தொடு தீயம் - அன்றநவிதலும் நிலைதாம் நீந்தை. உவிழ் - கக்குகின்ற. சட

லிற்புடை - கடலின்பக்கத்து. பாய்தாவுகின்ற. சுறவு - சுறுமீன். (கானிலமென்றும்பாடம்.)

121. வயிரப்பணி - வயிரக்கற்களாற்செய்த வேலை. வயக்குகின்றாள் - விளங்க அணிகின்றாள். கவற்றும் - கவலையடையச்செய்யும். எயிலை - திரிபுரத்தை. (அவரது) வாளி - விஷ்ணுவாகிய பாணம். தனை - (கன்றாகிய) தன்னை.

122. வரும் - வருகின்ற. காண் அணி - கவிற்சேரும் கூடிய ஆபரணங்கள். மல்கு - நிறைந்த. வலம்புரிக்கு - வலம்புரிச்சங்குபோன்ற கழுத்தில். திருமங்கலநாண் - திருமங்கலியத்தை. தாங்க - (ஆதனமாக) சுமக்க. மதாணி - பதக்கம். கலமான - ஆபரணமான. கடகம் - கங்கணம். சரிசங்கு - (இருபெயரொட்டு) சரியாகியவளையல். பெய்தாள் - இட்டாள், அணிந்தாள்.

123. மதர் - களிப்பு. விழிப்பொருகாரை - கண்ணாகிய மோதுகின்ற மேகத்தை. உததிக்கு - (அக்கண்ணாகிய) கடலின்கண். ஒன்று - பொருந்திய. விது - சந்திரனை. வைத்தன - வைத்தாற்போலும். வெள்ளிவளைக்கு - வெண்ணிற வளையலுக்கு. முகிழ்த்த - குவிந்த. கஞ்சம் - (கையாகிய) தாமரையை. கதிர்வைத்து - சூரியனைவைத்து. விரித்தன - மலர்த்தினாற்போல. (உததிக்கு - உருபுமயக்கம்.)

124. எழு - எழுகின்ற. முத்தலம் அவை - திரிலோகங்களாகிய அவைகளை. ஈன்று - (உமாதேவி) பெற்றும். முற்றுவது - முதிர்வது. முற்று - கெடாத. செழு - வளமும். முத்தம் - பிரியமும் உடைய. முலை - கொங்கையே. தனைமுக்கணர் - நாயகராகிய சிவபிரான். செவ்வி - (உன்) சமயத்தை. அடைய - (காத்திருந்து) பெற. செழுமு - நிறைகின்ற. நினைந்து - சொல்லி. பைம்பூண் - பசிய ஆபரணங்கள். முழுமுத்தம் இடற்கு - பூரணமாகிய முத்தம் கொள்ள

ற்கு. இனை - ஒப்பாக. (முலை - அன்னையின். செழுமுத்தவம் - "முலைத்தனை யென்பவற்றில், சந்தகோக்கித் தகரங்கள் இரட்டித்தன. ஈன்றும் என்றும் உம்மை விகாரத்தாற்றொக்கது.)

125. முருகும் - அகிற்சந்தனமும், (நறும்பும்), மான்மதம் - கஸ்தூரியும். மொண்டு - முகந்து. (முலைகளில்) தொயில் - கோலம். தீட்டி - எழுதி. பருமம் - பதினெண்கோவைமணி. மேகலை - எழுகோவைமணி. தந்து - இட்டு, அணிந்து. பனி - குளிர்ந்த. கலாபம் - பதினாறுகோவைமணி. அருமென்கலை - அரிய மிருதுவாகியபட்டாடையை. (தொயில் இடைக்குன்ற.)

126. எது - யாது. எங்குமா - வருந்தாமல். புலம்பு - ஒலிக்கின்ற. பாதசாலம் - பாதசரம். சீர்ப்பொலி இசை விளங்குகின்ற. கிண்கிணி - சதங்கை. கீர்த்தி - பிரகாசிக்கச்செய்து.

127. கண்ணொச்சில் - திட்டிதோஷம். திருப்பதம் - திருவடி. திருப்பதம் - சிறந்தபதவி. செல்வி - இலக்குமி.

128. ஆற்றால் - முறையால்.

129. எல் - பிரகாசம். கதிரும் - மோதுமும். கரதலத்து - கைகளினால். இயற்கை - தன்மை. காட்டி - (அவ்விருவர் கைகளுக்கும்) காண்பித்து.

130. அலத்தகம் - செம்பஞ்சுக்குழம்பு. உறத்து - ஊட்டுகின்ற. திலத்தமை - திலோத்தமை.

131. யோகினி - காளி. நடைப்பாவாடை - வழியில் விரிக்குஞ்சேலை. சுண்ணம் - பொற்பொடி.

132. ஒல்கி - அசைந்து.

133. குலத்திரள் - (மலையாகிய) குலக்கூட்டம். தொய்யும் - வளையும். மதி - அறிவு. விதி - ஊழ்.

134. பெற்றோர் - அடைந்தவர்.

136. அங்கிலை - அப்பொழுது. கொழுந்து - மின்னை. கன்னி - இள



மை. பீர்னி - மை. அமைத்து - வைத்து.

137. பனிவாதம் - சங்கிலேவி. ஆசி - ஆசீர்வாதம். குழவை - குலவை.

138. பரபரி - கூத்தின்விகற்பம், பலவகைக் கூத்து.

139. சுழுவன் - (பிரமனாகிய) கூழ்முதிர்தலையுடையவன். சட்டுரு - திரளை. செய் - வயல். திரவியம் - (முடம்) பொருள்களாகிய சமித்து முதலியவை. வித்தி - விதைத்து. கிமம் - அறுகு. தேறு - காமதேனு. மகம் - (விவாகமாகிய) யாகத்தின்.

140. குனல் - குளத்தடியால். இயம்ப - ஒலிப்ப. குனிந்து - முழுங்க. சுருதி - வேதவிதிப்படி. இணைஇலி - ஒப்பில்லாதவனாகிய.

141. வேந்தன் - அரசனாகிய ஆதிசேடன். அயிரப்பெருந்திபம் - ஆயிரங்கொருந்திரியென்று சொரும மகவிளக்கு. குலம் - தன்மை. வேள்வி - (விவாக) யாகச்சடங்கு.

142. செப்பொடு - செப்புடனும். (உருபுமயக்கம்) இருப்புயம் - (இடமிராவுடைய) இரந்ததோள்களை. கொப்புடு - கொப்புடன். (கொப்பு - காதணியென்று.) குலத்தொடு - குலமாகிய மலைகளினும். பணைப்பு - பருத்தல்.

144. அருத்தி - ஆசை. திருத்தி - செவ்வைசெய்து. பாசனம் - உண்கலத்தில்.

145. கந்தம் - (இருபெயர்) மலர்மாலை. ஒழு - பொருந்திய. இயற்றினன் - அமைத்தனைத்தவனும். விமலம் - பரிசுத்தமாகிய. பாசமேசேடம் - பாத்திரசேடம். (சேடம் - மிச்சமாயிருப்பவை.) தேசன் - ஒளியுடையவனாகிய சிவபிரான்.

146. உணவை - உண்டிப்பொருள்களை. திமிலம் - பெருமுழக்கம்.

147. சொல் அறநின்றோர் - பேச்சிலாமலிருந்தவர், யோகிகள். அறல் - கருமணல்.

148. மலையாட்டி - மலையாள

ளும் அரசி, மேனையாகியமாமி. சோமன் - சந்திரன். ஆசி - இக்கு.

149. மேனைதான் - (உருத்திராணியை மருமாரிடத்தைக்குப்) போனார்.

151. மையுணகன் - மேருவின் மயிலின் நகரம். பவனம் - தேவலோகம்.

152. சூர் - சூரன். அவிக்கவிர்ந்தயர்அலக்களாகிய துன்பம். முறையிட்டார்க்கு - தங்கள் குறை கூறியவர்க்கு அருள்செய்தருளினார்.

153. இராசியம் - மறைவு. உடம் - அவை.

154. அறுமீன் - (கார்த்திகையாதலிய) ஆறு நக்ஷத்திரங்கள். தாமரை - முழுக்கமுள்ள கடலுருந்த.

155. படிவம் - உருவம்.

156. எழு - (ராஜஸ்யாகத்தில்) எழுந்த. கார்மேல் - ஆட்டின்மேல். மகவீரர் - ஒன்பது (அம்மாயாகிய) வீரர். மெடுமேன் - மெட்டாயிலிருந்தது. ஞாயிறு என்ன - சூரியனைப்போல. விரைந்து - பறக்காட்ட. கடாத்தி - வேகமாகச்செலுத்தி. விதி - பிரமனை.

157. மிசைப்புரி - பயப்படுத்துகின்ற. சூர் - சூரன். சேர்செல்வனும் சேவல் - அக்கினியாகிய கோழிக்கொடி.

158. தானை - ஆயுதம். வேல் - சத்திவேல். இருத்தியம் - பூதம். தானை - சேனை. மருத்துவர் - அச்சுவினி தேவதைகளாகிய தேவவைத்தியர். மருத்துவன - வைத்தியன்.

159. சவற்றி - வற்றச்செய்து. குன்றமெறிந்தது - கிரௌஞ்சகிரியைவேலைப்பிரயோகித்து. குகர் - (மாமனாகிய) ஆயன்மகனுடன்.

160. மாரகதகலாபம் - மரகதத்தையும்போதும் தோகையும். அங்குமணி அணி - உயர்ந்த மணிபோலும் அழகிய. விழி - கண்களையுடைய. மந்தரமாதங்கம் - மலைபோன்ற யானை. சுமந்து - நடாத்தி. வெள்ளான் - வெள்ளிய யானை. (அக்கினியாகிய) குக்குடத்துவசம் - கோழிக்

சொடி. [அக்கினி வெண்ணிறமுன் னமென்றது, அருகிக்குலவார் கூறு கட்டபருமைப்படி.]

161. பரந்தாமன்மகள் - தெய்வ யானை. புள்ளிமான்மகள் - வள்ளிநா யகி. தணியல் - திருத்தணிகை.

162. பொலிவு - விளக்கம். தா பதர் - (தூரிகாரணிய) முனிவர்.

முன்றாவது:— திருமால் சிவபிரானை அருச்சித்தது.

2. கறி - புகலிடம். (ஆகம்). புக ல் - புகுகின்ற.

3. கோட்டம் - கோணல். போ தாய் - (தென்றிசைக்குச்)சென்றாய்.

4. விரிகட - (பிரளைய வெள் ளமொடு) விரிபுகுமோ. புரிகட - மு றுக்குதல்செய. அரிகட - விலக்குறு வினுடன.

5. பரதன் - பரதனென்னும் அ ரசன். கருமகண்டம் - (நவகண்டத் துளொன்றாகிய) கருமபூமி. குமரிக ண்டம் - குமரியென்பவளா லாளப் பட்ட குமரிகண்டமாகிய பூமி. வி சையத்தண்டம் -வெற்றியையுடைய யோகதண்டம். விளக்கா - தீபமாக. கலுழ்சவரை - கிரவுஞ்சமலையின். இ ருட்படலம் - இருட் கூட்டத்தை.

6. வரைக்கு - (அம்) மலைக்கு. அமைத்து - இட்டு. மைந்தன் - கு மாரக்கடவுள். தன் - தன்னுடைய. தன் என்பது - சிவபிரானை.

7. மேருவுடன் - மேருமலையி னும். புணர்ப்பு - சூழ்ச்சி. விந்தம் - விந்தமலை. மடுத்து - தடுத்து, (நே ரே செல்லவொட்டாமல்) தடைசெ ய்து. துன்றுநோக்கி - செருக்கிவ ருதற்கிடமில்லாமல் வளர்ந்து. கோரி யர் - மேலோர். பூரியர் - கீழோர். தேரும் - தெளியும். செறியம் - மா ர்க்கத்தையும். தீர்த்து - நீக்கி. சீரிய ரல்லார் - கீழோர். இழமாந்து - கரு வங்கொண்டு. திமிர்த்தது - திமிர் கொண்டது. கோரியர்க்கும் பூரியர்க் கும் மூன்று, இரண்டு, ஒன்று வழி யென்பது - மேலோரும் மேலோரும் எதிர்ப்படில் இருவரும் விலகிச்செல் லுதலானும், மேலோரும் கீழோரும் எதிர்ப்படில் மேலோர் மாத்திரம் வி லகிச்செல்லுதலானும், கீழோருங் கீ ழோரும் எதிர்ப்படில்இருவரும் வில

கிச் செல்லாமையானும் முறையே யாம். (செறிதீர்த்தல் - இரண்டு பக்கமும் விலகுதற் கிடமில்லாது பருத்து நிற்றல்.)

8. வா - கன்னத்தையுடைய. வி ந்தவரை - விந்தமலை. குமிழி - உச் சியை. பற்றி - பிடித்து. தரவிந்தா- தருநியாகிய சந்திரனையணிந்த சிவ பிரான். வரவு - வருதல். (சுரு - கா வுள்பதி ஈன்றுபெற்ற கோடுயர்.)

9. செம்புவரை - தாமிரபருணி நதியையுடைய பொதியமலை. செம் பு - சுடுகின்ற. வரை - மூங்கிலையுடை யுடைய. குமிழி - உச்சி. படிந்து - (பாதலத்து) அழுந்தி. அதிகப்புக மு தலாகிய இவெபெருமானுடைய. அ மரகாளன்றுயில் - அமரயிற் கட்டில் கவிழு, வஞ்சிரம். சாதி - உயர்ந்த, சா வம் - பெருங்கோபத்தால்.

10. உருத்திராவணம் - கேடு. குரு - குருவாகிய. திராவிட முனி- தமிழ்முனிவனை. இராவணம் - இரா த்திரி நிறம் (போல). இருண்ட-இரு ளடைந்த. வில்வலன்—, இதை - இல்வலனெனவும்கொள்ளலாம். இல் வலனென்றே ன்மலிருத கந்தபுரா ணங் கூறுகின்றது.

11. சாலே - (பன்ன) சாலேயர் னே. மறு முனி - குற்றங் கடிந்த. தன்னுவைத்து - அரிசியால். கருலோ - பொறிக்கறி. மறிசெய்து - ஆடுசெய் து. ஆக்கி - சமைத்து. கூவ - (வாதாவியென்று) அழைக்க. கறு முனி-கோபிக்கின்ற அகத்தியரிடத் தில். கறி -பொறிக்கறியாகிய வில்வ லன்.

13. அகக்கைக்கு - உள்ளங்கை. தை வரல் - தடவல். சமித்தான்-சீரணித் தான். முடித்துவிட்டு - கொன்று அழித்து. சேகாதமி - நூற்குதி.



14. தூங்கர் - உயர்வுடையவரா கிய சிவபிரான். முத்தாறு-மணிமுத் தாறுநதி. முதுகுன்றம்-விருத்தாசலம். பிணம்-பருத்த. பிரமச்சாயை - பிரம கத்தி. ஆறலைக்கும் - வழிப்பறிசெய் யும்.

15. இகல் - பகை. தீர்ப்பான் - தீர்க்கும்பொருட்டு. கொங்கு - கொ ங்குதேசம். புகலி - சீகாழி.

15. ஐந்து - பஞ்சகௌவியம். பலோதகம் ஐந்து-ஐந்துவகைப்பழச் சாறு. ஐவகைத்திரவியம்-பஞ்சதிரவி யம். ஐவகையமிர்தம் -பஞ்சாமிர்தம்- நாவிமதம் - கஸ்தூரி. சாந்தம் - சந் தனக்குழம்பு. ஆவிய - பரிசுத்தமா கிய. பரிதம் - ஒருவகைச் சருக்க ரை. பன்னியம் - பலபண்டம். நிவேதனம் - நைவேத்தியம் - ஒக்க - ஒன்றாக.

16. படிமக்கலம் - கண்ணாடி. சத் திரம் குடை. தாபனம்-தாபித்தல், நிலைநிறுத்தல். ஓமம்-கித்தியாக்கினி. கயம் - யானை.

17. படலை - பூமாலை. கிரிசான்- கயமுகாசுரனுக்கு. வய அரி-வெற்றி பொருந்திய சிங்கம் போன்றவனே. தடம் - விசாலம். குணதர - குணத் தைத் தரித்திருப்பவனே.

18. முதியவ-முதியோனே. உய ரிய - உயர்ந்தவனே. நெடியவன் விழிதரு - விஷ்ணுவுக்குக்கண் கொ டுத்த. நெடியவ-பெரியவனே.

19. வனருகம் - தாமரை. காடு- விருதி.

20. பாகசாதனன் - இந்திரன். ஓகை - மகிழ்ச்சி.

21. திருப்பள்ளித்தாமம் - அலை யத்துக்கு வேண்டுமலர் மாலைக் (காக வைத்த). நவிந்தன-வருந்தின. பணி த்தருள் - செய்தருள்வாய்.

22. காண்டகை - காணத்தகுதி. அண்டக்காக்கை-ஒருவித அருங்காக் கை. சேண் - ஆகாயத்திலுள்ள. நிகை- அழகுடைய. அண்டம்-தேவ ருலகம். காக்கை - காத்தலையுடை ய. கண்டகை - குறிகிய கையைய

டைச் - விரட்ட. கும்பகீர் -கமண் டலத்தை. அண்மித்தால் - மூக் கால். அண்டகை - ஆகுத்தகுதியு டைய விநாயகக் கடவுள்.

23. எடுத்து - தோன்றி, எழு ந்து - எழும்பி. சக்கரம் - பெருமை. தடம் - தடாகம், (விசாலம்). படிமை- யவ், (பருத்த). மருதமுந்தி-மருத நிலத்தின் முதல்புட்டு,(புருகாரத்தை யொடித்தித்தன்னி). செக்க -சிவந் த. சீர்ப்புள்-சீர்வாழ் பறவை. பொழ ந்து - பிளந்து. அம்பு -நீர், (பாணம்). நேமியளாவும் - பாற்கடலின் மித்தி னோசெய்யும்.

24. பிரிந்த - (முனிவர் கமண் டலத்தை விட்டுப்) பிரிவு செய்த. அன்னியன் - பிறராதியன் (போல் ஆகி). அணியன் - சமீபித்தவன். ஆசை - திசை.

25. படர்ந்தும் -நடந்தும். சாரி- உலாப்போதல்.

27. தம்பி - (தேவர்களிற்) சிறந் த விநாயகக்கடவுள். இதற்கா - இந்தத் தவித்திருக்கவெண்டு போதற்காக. பறி பட - ஒழுக. கும்பமா - மத்தகத்தை யுடைய யானை.

29. கமண்டலத்து - (அமுதேயு டைய) சலபாத்திரத்தில். ஈாதன் - விநாயகர். மேகம்,— மண்டலத்து- வட்டமாகிய. மூங்கீர் - சமுத்திர நீரை. மினைக்கெதன - உண்டாற் போல. மாகமண்டலம் - ஆகாய மண்டலத்தின். வாரி - கங்கை. மா று - ஒத்த. வாரி - அன்னி. காகம்- காக்கை. காமண்டலத்தில்-(முனி வன்) கையிலுள்ள சலபாத்திரத்தில்.

30. இரசாகம்பம் - நிலைசை அசை ப்பு. அருகுராதம்-பெருக்காவியாகி ய நதியை.

31. குடத்தை - கும்பகோணம். வலஞ்சுழி - திருவலஞ்சுழி. காவை- திருவானைக்கா.

32. காலை - காணப்பெறுர். புத் தூர் - திருப்புத்தூர்.

34. கவனம் - சீக்கிரம். குரோ சம் - கூப்பிடுதூரம், இந்த வழக்கில்

இரண்டு கூற்றாமென்பர். சமஸ்கிருத அகராதியிலுங்காண்க.

35. நாற்கடவுளர்-சூரியர், உருத்திரர் - வசுக்கள், மருத்துவர்.

36. சுருட்டும் - மடக்கும். போகென - போக என்று. ஒச்சி - விரட்டி. விறல் - வெற்றி.

37. வயின்வயின-இடந்தோறும்.

38. உளவு - வழி. மண்டிலம் - தவிசு. அரவொலி - அரமுழக்கம்.

39. காஞ்சி - ஒருவகை விருக்ஷம். கழை - கரும்பு. கன் - கனுப். தாம் - தாமே. தாந்து - தருதியினளவு. இசை - இணைக்கின்ற. பாஞ்சராத்திரிகள் - வைணவசமயிகள். பழித்திடுகின்றன. வாஞ்சை - ஆசை.

40. அரத்தம் - சிவப்பு. காவி - காவி வஸ்திரம். நீற்றில நிருடி - முத்தாகிய விபூதி பூசி. சிரம் - உச்சி. சாத்து - தருதியோடு. முனி - முனிவன். ஐ - சாரியை.

41. இருமணம் - வருத்தமும் மகிழ்ச்சியு முள்ள மனம். அருகர் - சமணர். எடு - (திருநள்ளாற்றுப்பதிக மெழுதிய) ஏடு. ஒளிறு - விளங்குகின்ற. பூகம் - கமுகமரங்கள்.

42. நாடி-விரும்பி. தும்பி-வண்டு. அதிர் - நதி (நீரை) நிறைக்கும். கீறிவோர் - விபூதியணிவோர்.

43. உதையவன் - சூரியன். சமயபேதம் கொண்டவர் - சமயத்தின் வேறுபாட்டைக்கொண்டவைணவர். குழாத்து நின்றான்-கூட்டத்தில் நின்ற அச்சூரியன். (அகத்திய முனிவரைக் கண்டுபயந்து) குன்று - அந்த மணமலை.

44. முகை-அரும்பு. உடைந்து-கட்டவிழ்ந்து. இறும்பூது - மகிழ்ச்சி.

45. துயிலே - குவிதலே. (தாற்பரியம்) செங்கழுநீர்க்கண்- செங்கழுநீராகியவிழி. வண்டால் - வண்டின் ஒலியால். சுண்ணம்-பொற்பொடி.

47. கடல்வரைப்பு - சமுத்திரஞ்சூழ்ந்த இடம்.

48. ஆங்கணம்- அவ்விடம். அம்ர்ந்து - விரும்பி.

49. கொழித்து-திரட்டி. பால்வளை-வெண்ணிறம்வளைந்த. வாலுகம்-வெண்மணல். கால் - காண்டு. வளமலர் - வளந்தங்கிய பூக்கள்; கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ. வால்வளை - வெளிய சங்கம்.

50. கடை - வளைந்த. வாரணம்- சங்குகள். வாவி - தடாகத்தைவிட்டு. கானவாரணம் - காட்டுக்கோழி. முல்லைக்கான இடை - முல்லைநிலத்துக் காட்டின்கண். கூவல் - கூவுதல். மோனம்-மௌனத்தையுடைய. ஆனைத்தான் - வேதத்தையுடைய வீருகிய.

51. திருப்பள்ளித்தாமம்-(பூசைக்குவேண்டும்) பூமாலை. புராணம்- பழைய. பொழில் - சோலை.

52. புள்ளினம்-பறவைக்கூட்டம். தும்பி - யானை. குழகன் - பெருமையுடைய சிவபிரான். அம்பகம் - ஆங்கிலி - ஒருவிதவண்டு, கன்றுவன்று தச்சாலை - சண்பகச்சோலை.

53. பொங்கா-சோலை. புரையறு - குற்றமில்லாமல். விழுதை-உண்ணை, மெய்க்க. அங்கி - அக்கினி.

54. சதுமுகன்-பிரமன். திவள்-விளங்குகின்ற. கலையமுதம் - சாஸ்திரங்களின் சாரம். ஆமித்த - ஆமனத்துசெய்த. பவர் - நெருக்கம்

55. இடைகள் -இருப்பிடம். கழகம் - கல்விபயிலிடம். குலம் - கூட்டம். பரந்த - விரிந்தன.

56. கருதிமுலம்-பிரணவம். உபநிடதம்-உபநிடதம், வேதசாரத்தெளிவுநால். கோற்பார் - தவஞ்செய்யு முனிவர்.

57. பதம் - பதவி. மந்திர பதங்களாதி -மந்திரம், பதமுதலிய அறத்துவாக்கள்.

58. கொற்றவன் - அரசனாகிய இந்திரன். நான்முறை - இத்தனை நாளின்ன இன்ன பதவியில் இருக்கவேண்டுமென்னுங் கிரமம்.

60. பன்னகர் - சர்ப்பர்கள்.

61. தாகம்-ஆசை. தசம் - பத்து.



முறை - தரம்; அளவு. சரிக்கும் - சஞ்சரித்திருக்கும். காகம் - காக்கை. (எனவே காக்கை ஆயிரவருடமிருக்குமென்பதாயிற்று) கழித்திடும் - கடத்தும். கழற்கண்- கழற்சிக்காய்போலுங்கண்ணையுடைய. நாகம்- பாம்பு.

62. நோக்கா - நோக்கி. பூண்டு- பொருந்தி.

63. வாணன் - (இரண்டாயிரங்கையுடைய) வாணாசுரனை. கடுக்கும்- போலும்.

64. மணத்தால் - திருமணத்தினித்தற்காக. நிலைபெற -உறுதியாக. நெறிபெற -ஒழுக்கு அடைய. அணைந்தான் - இருக்கச்செய்தீர்ன். திருப்பள்ளித்தாமம் - பூமாலை. திருமணந்தரிசிக்கப் போய் வந்தது. திருமணப்படலம் ௬௦ம் பாட்டிற்காண்க.

65. மலை-(திரிகூட)மலை. தருசெறிகின்ற. நெறிகள் - வழிகள். வயிரமா - சலஞ்சாதித்தலாக. மலை தரு - பொருகின்ற. நெறி - முறை. முழை - குகை. கலை - சந்திரகலை. மான் - (களங்கமாகிய) மான். ககனத்து-ஆகாயத்தில். அம்புலி-சந்திரன். கலை - ஆண்மான். மான் - பெண்மான். கானத்து - காட்டில். அம் - அழகிய.

66. அமலமூர்த்தி- நின்மலராகிய சிவபிரானுடைய. ஒளி -சோதியை. ஒளிபொருமை - (செண்பகச் சோலையின்) சோதியொற்றுமை. வெளிபுறம்புள்ள. விருக்கங்கள் - மரங்கள். தெளிவு - தெளிதலையுடைய. இருக்கு அங்கம் - வேதாங்கம். தெளிவிலன் - தெளியாதவருகி.

67. கனம் - மேகம். அல் -இருள். எல்லை - அளவு. ஏற்ற - கேவேறிப்பிக்க. செல்-(அம்) மேகம். முரசம்- முரசவாத்தியம்(போல).

68. என்றுதார் -மதியாதார். என்னுவார்- நினைப்பார். நவிலை-கழுமுனைநாடியை. வரவுபோக்கு-சனனமரணம்.

69. பிங்கலை-வலப்பக்கத்துநாடி. இடை - இடப்பக்கத்துநாடி. அலர்-விரிந்த. சுழுனை நடு - சுழுமுனைநாடி; நடுநாடி. அசைவு - இயக்கம். அடங்குவார் - (மனம்) ஒடுங்குவார். பொக்கல்- மேலெழுதல். மூலநாடி-மூலாதாரத்து நாடிள். புதுவழி- புதியமார்க்கத்தை திறந்து,— மேல் ஆய் - மேற்சென்று. (மூலநாடிப்புதுவழி திறக்கும் விதத்தை யோகநூலார் பாற் கேட்டறிக.)

70. நனவு - சாக்கிரம். நாடுதோறும் - ஆராய்ந்தோறும். நாடாது - ஆராய்ந்த செட்டாதனை. சரிக்கின்றார் - சஞ்சரிக்கின்றவர். மனம் அற - மனமடங்க. தனை - ஆன்மாவை. அதீதம் - துரியாதீதம். (நாடாதொனாடி-இடை விடாதாராய்ந்து எனினுமாம், சொல்லாமற் சொல்லி என்றதுபோல.)

71. இருமை - பெருமை. ஒரு கோணம் - மூலாதாரம். எரி - அக்கினி. காலால் - (பிராண) வாயுவால். மூட்டி -பெருக்கி. மதிமண்டலம்- சூரியமண்டலம். முட்டி - நெருக்கி. படி - கிலை. எறி-சென்று. துருவித்தேடி. சுடர் -பிரணக்கற்றை. விட்டெறிக்கும் - வீசிப் பிரகாசிக்கும். சோதி- சோதியயமாகிய. அரு-அரிய. கலாமண்டலம்- சந்திரமண்டலம்.

72. பாம - மேலான. சேருவிருக்கின்றார்-யோகஞ்செய்வார். சந்திரபாதம்-அருட்சத்திபதிதல். சுதட்டயவழி-நான்சாமார்க்காகிய ஞானவழி. நித்தியமாயசித்தி-என்றுமழியாதசீர மடைதல். கரும்பு-கிடைக்கு.

73. நரைநூர்-நரைக்குணர். குகைமலைக்குகை. அனைகதென்ற்றன்-குபேரன். உவர்த்து - வெறுத்து.

74. ஆக - போல. அமலம் - மலமில்லாமை. கந்தையார் - ஆகாயங்கையையுடைய தேவர் ஈயிலையார் - சயிலாச வாசிகள். வருகின்றார்-(அரிசனத்தின் பொருட்டு) வருகின்றவர்.

75. இப்படி - இந்தப்பூமி. வரித்தது - வாசனைத்தது. தகைப்படி - கையிலே தொங்க. செல்வி - செல்

லிக்கனி.

76. விம்மிதம் - ஆச்சரியம். விதிர்ப்ப - நடுங்க. செம்மல் - சிறந்தோனாகிய. துளக்காநின்றான் - அசைக்கின்றான்.

77. இறார் - சிற்றூர். வைப்பு - இடம். தானவர் - அசுரர். சாரதர் - இசைபாடுவோர், கந்தருவர். வரி - இரேகை. வினைவீறு - தங்கவீறு.

78. தாவமடந்தை - பூமிதேவி. அணி - ஆபரணம். மிழலும் - வீதியம். ஞானம் - அறிவு. சொல் - வார்த்தை. தாலம் - காவிலுடைய. திரு - சிறந்த. மடந்தை - சரசுவதி. துன்று - நீர்த்துறைகள். பொற்குலம் - பொன்னுலகம். மீட்டாதலன்ன - வந்தாற்போலும்.

79. கால்கீட்டி - உயர்ந்து. (தாற்பரியம்) கவி - குழ்கின்ற. ஆக - போல.

80. உலக மூன்றும் - திரிலோகத்தாரையும். இருவாயும் - இரண்டுபக்கமும். பொன்சொரிய - பொன்போலும் சொற்கள் வெளிப்பட. இறங்கும் - உள்ளேபுகும். உலகமூன்றும் ஒருவாயிலேஉண்டு உமிழ்ந்தானையெனக்கூட்டுக.

81. பேர் - பெரிய. யுகத்தில் - (மற்றொரு) பிரளயத்தில். பிரமன் மாயனூர் உகத்தும் - பிரமப் பிரளயம் விஷ்ணுப்பிரளயத்திலும். புகுந்தது - கைகூடியது.

84. உலம் - திரண்டகல். குளித்துறை - ஸ்நானஞ்செய்யு நீர்த்துறை. சிதடர் - குருடர். பலியெடுப்பான் - பிச்சையெடுப்பான்.

85. மாலோகம் - வைகுந்தம். சுவலோகம், தவலோகம் - மேலேழுலகினுள்வொன்று. ஆலோகம், ......

86. வற - பெருக. மன்றில் - சபையில் ஒன்ன. மாமறையோர் - பெரியவேதியராகிய வைதிகரை. விலையம் - குட்சி.

87. விளர்த்த - விளங்கிய. கடைவாயில். இலகிடுந்த - தகட்டு வடிவாயிருந்த. கடை - தடுத்தல், போகக்கூடாது. என - என்று.

88. பரிவிலர்காள் - அன்பில்லாதவர்களே. அநுக்கிரகம் - கருணை. நிக்கிரகம் - தண்டம்.

89. களபம் - (கஜேந்திரனுகிய) யானை. படை - சக்கராயுதம். விருத்தை - சலந்தராசுரன் மனைவி. மயற்பிணி - மோகவியாதி. தம்பிராட்டி - அப்பிரான்மனைவியாகிய உமாதேவி. தோற்றிடாதோ - தெரியாதோ.

90. காரோட - கருநிறமுடைய. தொடர்ந்து - (பின்) பற்றி.

91. ஒன்று - பொருந்திய. மறுக்கின்றீர் - தடுக்கின்றீர்.

92. குலிசம் - வச்சிராயுதம். மாதலன் - இந்திரன். பகுத்துணரீர் - (நன்மைதீமையைப்) பிரித்தறியாதவர்களே. மடவீர் - அறியாமையையுடையீர். அதிபர் - அதிபர்.

93. நிட்டை - யோகம். ஊக்கம் - உற்சாகம். ஒடுக்கம் - அடக்கம். தகர் - ஆட்டுக்கடா.

94. குத்திரம் - வஞ்சகம். சரவணம் - சரவணப்பொய்கை. சம்பவன் - (அதில்) தோன்றிய குமாரக்கடவுள். உத்தரவாகினி - வடக்குமுகமாகவருநதி, கங்கை. பொன் - அழகிய. இலஞ்சி - தடாகம். மேல் - இடம்.

95. பித்திகை - சிறுசண்பகம். மாதவி - குருக்கத்தி. தாதகி - ஆத்தி. மகிழும் - மகிழமரமும். குல்லை - வெட்சி. தாது - மகரந்தம். இரியும் - உதிரும். (தாற்பரியம்) வில்லுவம் - வில்வம். புடை - பக்கம். செறி - நெருங்கிய. விபுலம் - விரிந்தஇடம். பல்லவம் - தளிர்.

96. கால் சிமிர்த்து - கால் உயர்த்தி. மடல் - பானை. நிச்சம் - எப்போதும். முச்சி - உச்சி. முழுத்த - பூரணமாகிய. பூகம் - கமுகமரம்.

97. சுற்று - சூழ்கின்ற. துமிந்து - அமைபட்டு. முன் - எதிரேயுள்ள. தாற்றின் - குலையினது. மந்தஆற்றின் - வேதவழியில். இரிந்தேகும் - நழுவிச்செல்லும். சூர் இட்ட - சூழ்விடப்பட்ட. பற்று ஆற்றும் - அன்பைச்செய்யும். படர்தல் - செலுத்தல். பற்றுற்றும் அமரர் சூழாமெனக்கூட்டுக.

98. பகுவொளிமீனம் - ஆண்வாளைமீன். வெடிதாவ - துள்ளித்தாவ. புடை - பக்கத்தில். போழ்ந்து - பிளக்கப்பட்டு. வாரணத்து - (விநாயகரிதிய) யானையினது. குர்மா - கூராகிய மாமரம். கானவாரணம் - காட்டுக்கோழி. காட்சி - தோற்றம். ஆட்சி - இறுதலையுடைய. மானகேதனம் - பெருமையுடைய (கோழிக்) கொடி. எனை - மற்றை.

99. பொதுளி - நெருங்கி.

100. விண் - மேகம். படர் - விரிகின்ற. விண்கிழிப்ப - ஆகாயத்தை யூடுருவ. சிகரனகம் - தூவியையுடைய ஆலயம்.

101. தானவர் குலாந்தகன் - அசுரகுலத்துக்கு யமன்போன்றவனை. மானம் - வீரம். சம்பந்தன் - விவாகஞ்செய்தவன்.

102. இரண்டு - இரண்டுபக்கத்து. குழை - காதணி. சிமயம் - உச்சியையுடைய.

103. அங்குசம் - தோட்டி. கேதனம் - கொடி. அபயம் - கருணை. வலம் - வலப்பக்கம். கோதண்டம் - வில். தண்டு - தண்டாயுதம். வங்கியம் - ஓராயுதம். வரதம் - அநுக்கிரகம். போகம் - கூட்டம்.

104. விண் - விண்ணுலகத்தார்க்கு. பண் - இசை. பரிபுரம் - சிலம்பு.

105 வால்சவுந்தரி - இளமையுமழகுமுள்ள பார்வதிதேவி. பாலித்தான் - அருளினவன்.

106. விஞ்சையர் - வித்தியாதரர். விஞ்சை - வித்தை. அவுணஇருள் - அசுரராகிய இரவு.

107. உழவர் - உரியவனே. சிறுவா - புத்திரனே. பொற்பணி - பொன்னாற்செய்யப்பட்ட தொழிலையுடைய. கொங்கு - வாசனை. அலர் - விரிந்த.

108. உரோமம்பொடிப்ப - மயிர்க்கால்தடிப்ப. தழுதழுப்ப - தடிப்பேற.

109. பயில்வார் - படிப்பார். பொதிஅவிழ் - கட்டவிழ்ந்த.

112. ஆக்குபு - ஆக்கி.

113. அருள் அருந்தி - அருளுக்குப்பயந்து. உறுதி - உபாயம், திடம்.

114. தயங்கி - வருந்தி. அஞ்சல் - பயப்படாதே. செஞ்சம் - திருத்தம். வேறல் - வெல்லுதல்.

115. ஆறுதல் - சிவனுவது. புரிசெய்வாய். மகுடாகமம் - மகுடாகம (விதிப்படி).

116. அற்புதம் - ஆச்சரியம் (ஆக). வித்தகம் - ஞானம், முத்தன் - சிவபிரான். முற்கலை - முதன்மையான மகுடாகமம்.

117. வைத்து - உபதேசித்து. (தாற்பரியம்)

118. அநுபூதி - அருள். மத்தம் - களிப்பு. மலையாசலம் - பொதியமலை.

117. கலைஞானம் - சாஸ்திர அறிவு.

120. ஐவகை - ஐந்துவிதம். கந்தயிலம் - வாசனைத்தயிலம். கவியம் - பஞ்சகௌவியம். அமுதைந்து - பஞ்சாமிர்தம். நெய்பொழிந்து - நெய்யாலபிடேகித்து. கன்னல் - கருப்பஞ்சாறு. கனிச்சாரம் - பழவர்க்கங்களின் ரசம். கலசம் - கும்பம். மந்திரபுட்பம் - மந்திரத்தால் மலர். மந்திரான்னம் - திருவொற்றுடைசாத்துமுன்னர் நிவேதிக்கு மன்னம். நிறைவேற்றி - முடித்து.

121. புரிநூல் - பூணுநூல். மான்மதம் - கஸ்தூரி. சுத்தான்னம் - வெறுஞ்சோறு. பணிகாரம் - பலகாரம். கருணை - பொரிக்கறி. வருக்கவகை - விதவிதமாகிய. நற்றி - நிவேதித்து. பணிமாறி - பூசித்து.

122. செந்தா - (விகாரம்) செந்தனே.

123. கருதித்தமிழ் - தமிழ்வேதம். கருத்து - மனம். இழுதாளினம் - மாமிசபேதங்கள். கழுது - பேய்,

தூரந்த -செலுத்திய.

124. வாளுத்தால் - வெண்மணலால். உபயவடிவு - இரண்டு சிவலிங்கம். ஆராதனை - பூசை.

125. வாலுகர் - வெண்மணலுருவான சிவபிரானார். பால் - உரிமை. மேல்யுகம் - முதல்யுகம். மைந்தன் - புத்திரனாகிய அகத்தியமுனிவர்.

126. மாதவன் - பெரிய தவத்தையுடைய அகத்தியர். மாதவன் - விஷ்ணு. கணத்தார் -கூட்டத்தார்.

127. பவித்திரமாலை-தருப்பைமுடிச்சு. ஊர்த்தபுண்டரம் - மேனோக்கிய முக்குறி. பட்டவர்த்தனர் - பட்டந்தரித்தவர். பாகவதன் - விஷ்ணுபத்தன். எட்டெழுத்து-அட்டாக்கர மந்திரம். எட்டு - எட்டுகின்ற. எழுத்து - (பஞ்சா)க்கரம்.

128. அச்சுதன் - விஷ்ணு, (அழிவில்லாதவன்). கோவிந்தன் - விஷ்ணு, (கண்ணில் சந்திரனையுடையவன்). ஆலமர்கடவுள் - ஆலிலையில் தங்கிய விஷ்ணு, (கல்லால விருக்ஷத்திற்றங்கிய சிவபிரான்). புகுவான் - புகும்பொருட்டு. வேதியர் - வைணவப் பிராமணர். சங்கவீதி - கூட்டத்தையுடைய தெரு.

129. வாநதி - விசேடதீர்த்தம், சித்திராநதி. தேவை - விஷ்ணுவை. குரவன் - ஆசாரியன். பகவற்கே - திருமாலுக்கே, (சிவபிரானுக்கே).

130. திருமலை - திருவேங்கடம், (திருக்கயிலாசம்). முளரிக்கண்ணன் - தாமரைக்கண்ணன், (அக்கினிக்கண்ணன்). திருப்பதி - திருப்பதியென்னுந் தலம், (சிவலோகம்). திருமுற்றம் -திருக்குற்றாலம்; இப்பெயர் அக்காலம் வைணவரிட்டபெயர். வகை - பொருள்கள்.

131. வசந்த வீதி - தென்றல் வீதி.

132. சினகரம் - கோயில். பொறிகள் - பஞ்சேந்திரியங்கள். வலம்புரி - வலம்புரிச்சங்கு. மறுகு - தெரு. திகிரி - சக்கரம். மணிச்சிகரம்- அழகிய உச்சி. மிருதி - தருமசாத்திரம். மூலச்சுருதி -ஆதிவேதம்.

133. இருக்கை - இருப்பிடம். கதிரவன் - சூரியன். குடதிசை - மேற்றிசை. இறைவன் - ஐயனார். குழாம் - கூட்டம். படலை - விரிந்த.

134. மாடம் - மாளிகையுடைய. துவாரபாலர் - வாயில்காப்பாளர். இருவரை - (அவ்) விருவரையும். அமைந்து - (கையா) லடக்கி.

135. மேனி - வடிவம்.

136. முன்னர் - எதிரே. அகத்துள் - (கோயிலி) னுள்ளிடத்தில். ஆக்கி - அமைத்துவைத்து.

137. மேனி - வடிவம். விச்சைகூர - அறிவுமிகுந்த. கூர்மவேட்டுவத்தியானம் - ஆமை, குளவியினைப்புக்கள்; அவற்றுள் கூர்மத்தியானமாவது: (தன்கருவாகிய) ஒருபொருளைத்தன்னினைப்பினாலே தானாக்குதல்; வேட்டுவத் தியானமாவது: (புழுவாகிய) ஒருபொருளைப் பரிசித்துத் தானாக்குதல்; அவைபோல அகத்தியமுனிவர் சோகம் பாவனைசெய்திருந்து, விஷ்ணுவை நினைப்பினாலும்பரிசத்தினாலுஞ் சிவமாக்குதல் காண்க. சோகம்பாவனையாவது: தான் சிவமாயிருத்தல். பரிசித்தல் - தொடுதல் -செச்சை-உதயசந்திரன் (போலும்). இச்சையில் - ஆசையால். ஒருமைகூர - ஒற்றுமைமிக. இருமையால் - இரண்டுபொருளால்.

138. மூத்தனே - பிரியமுடையவனே, (மலரகிதனே). முளரிக்கண்ணா - தாமரைக் கண்ணுடையவனே, (அக்கினிக் கண்ணுடையவனே). மூலமென் றழைத்த வேழப்பத்தியினெல்லைகாக்கும் பகவனே - (ஆதி) மூலமென்று கூப்பிட்ட யானையின் அன்பினளவையிற் காக்கும் விஷ்ணுவே, வேரில் மென்மைசெறிந்த மூங்கில் வரிசையினையுடைய திருநெல்வேலியைக் காக்கும் சிவபிரானே). திகிரியாளா - சக்கரத்தை யாள்பவனே, (கயிலாசமலையை யாள்பவனே). அருள்கூற்கொண்ட கந்தநக்கருப்பினுனே - கருமையுடையநீருண்ட மேகத்தின் கருநிறமுடையவனே, (கருமையே குடிகொண்ட கண்டத்தின் கறுப்புடையவனே. நந்தனி செவியகோலமாதெற் கரியகம்பி - சங்கத்தையணிந்த செவ்விய அழகானது ஆராய்தற்கரியபுருடனிற் சிறந்தோனே, சங்கக்குழையணிந்த காதையுடையாய் (விஷ்ணுவாகிய) பன்றி, தேடுதற்கரிய சிரேட்டமுள்ளவனே.

139. அண்டர்தாம் பிழைக்குங் கட்டசீல் கறையமர் கண்டமேயாய்- இடையர் கயிற்றால் கட்டுங்கட்டுறால் உரலினிடத்துத் தங்கிய கட்டிக்கப்பட்டு நிற்றலைபொருந்தியவனே. அண்டர்........மேயாய் - தேவர்தாங்கள் உய்யும் உறுதியால் அடங்குகின்ற விஷத்தையுடைய கண்டத்தைப் பொருந்தியவனே. வண்டுளை அலங்கலார்க்கு மருமத்தேன் இதழியுள்ளாய் - வளந்தங்கிய துளவமாலை நிறைக்கு மார்பினில் தேனிறைந்த அதரத்தையுடையவளாகிய இலக்குமியை யுடையவனே. வண்டுளை ......... உள்ளாய் - வண்டுகளுலாவுகின்ற பிரகாசித்தலையுடைய ஆத்திமாலையோடு புயத்தில் தேனிறைந்த கொன்றைமாலை யுடையவனே. உலவுளை வது உளவென. லகர ளகர வொற்றுமையாயிற்று. ஆர்க்கு-உருபுமயக்கம்.

140. ஆழியும் வளையும் ஏற்பாய் அணிமணிப் பணிகள் பூண்பாய் - சக்கரமும் சங்கும் ஏற்பவனே! வரிசையாக ரத்நாபரணங்கள் அணிந்தவனே. ஆழியும்.........பூண்பாய்- சமுத்திரமும் சூழும் மேன்மைதங்கிய (பூமியிற்) பாந்த ஆபரணமாக இரத்நங்களையுடைய பாம்புகளையணிந்தவனே. வாழி - அசை. அந்தரங்கமாக - அந்தச்சீரங்கம் (இட)மாக. மருவும் - பொருந்தும். மாதிரையையாவாய் - பெரிய அலைகளையுடைய காவிரி நதியையுடையவனே. வாழி- வாழ்வாயாக. அந்தரங்கமாக - இரகசியமாக. மருவும்-பொருந்தும். ஆதிரையையாவாய் - திருவாதிரை நக்ஷத்திரத்தையுடையவனே. (திரை- திருவேபயன்).

141. முத்தலைவரையாய் - மூன்று தலையாகிய வரையை யுடையவனே, (திரிகூடமலையை யுடையவனே). முண்டகக்கண்ணா -தாமரைக் கண்ணனே, (நெற்றிக்கண்ணனே). பங்கஜத்கொத்து - தாமரைக்கொத்து. உத்தமன் - சிவபிரான்.

142. முளைக்கு - திருகுகின்ற. வலம்புரி - வலம்புரிச்சங்கு. குழக - அழகா. நுதல் - நெற்றியில். நிகிலம் - எல்லாம். குறுகுகுழகு - சிறியதாவாய் சிறியதாவாய். காலை - காலத்தில்.

143. தெருள் - தெளிவு. சுவம் - நன்மை. நிறை - உறுதிப்பாடு. சதுட்டயம் - நான்கு. சிவம் - மங்களம். குறகி - சிறுகி.

144. சித்து - மாயவித்தை. கரும்பொன் - இரும்பு. படி - தன்மை. உருகி - நெகிழ்ந்து. படிவன் - உருவமுடையவன். சத்து - உள்ளது. அசத்து - இல்லது. சதசத்து - உள்ளதுமில்லதும். ஞானம் - அறிவு. நித்தியம் - அழிவின்மை. நிட்களம் - அருவம். சகளம் - உருவம்.

146. காணூஉ - கண்டு. கூச்செறிந்து - சிலிர்த்து. உரோமம்பொடித்தன - மயிர்க்கால்தடித்தன. புளகம் - ஆனந்தம். தளிர்த்தன - பிரபவித்தன.

147. அநுபூதி - அநுபவித்தி. பூ - அழகு. பூவாப்பூ - மந்திரபுட்பம். தியானபூசை - மானதபூசை.

148. காகம் - தமனீடலம். கன்னல் - கரும்பிரசம். கூரபிழிந்து - பக்குவிளைந்து, பஞ்சகௌவியம். சங்கை சேர் - அளவாகச்சேர்ந்த. அமுதமைந்து - பஞ்சாமிர்தம்.

149. சதவுருத்திரம் - நூறுஉருத்திரமந்திரம். முருகு - வாசனை. மெழுகி - இலேபனஞ்செய்து. திக்குடை - திசையாகிய வஸ்திரம்.

150. பனகம் - (இடைக்குறைந்த)

பரிம்பு. பரித்து - சுமந்து. அனகம் - பாவமின்மை. மனுவால் - மந்திரத்தால். அட்டப்பரிஷு - காய்ச்சியபால். ஐந்துவாசம் - பஞ்சவாசனைப்பண்டம்; அவை: - ஏலம், கிராம்பு, இலவங்கம், சாதிக்காய், கர்ப்பூரம். சேர்த்தி - கூட்டி. ஏற்றி - நிவேதிப்பித்து.

151. மணி - முத்துக்களையுடைய. மணி - அடிக்குமணி. மணி - உத்திராக்கம். மணி - அழகிய. குயிற்றிய - செய்த.

152. ஐவகைத்தீ - ஐந்துவிதமாக்கினி; இதை மகுடாகமத்திற் காண்க.

153. பாலும் - தெற்றி. விதிர்ப்ப - நடுங்க.

155. பராபரா - முன்பின்னானவனே. பராங்கதா - பாரமாகிய பாம்பையணிந்தவனே. பரசுபாணி - மழுவைக்கையிலுடையவனே. நிராமயா - நோயில்லாதவனே. நித்தா - நித்தியமானவனே.

157. பிரமம் - பெரியது.

158. தோற்றி - காணப்பட்டு. சோர்வு - தவறு.

160. குரவன் - ஆசாரியன். கரவு - கள்ளம்.

161. இந்திரசாலம் - மாயவித்தை. யாதுதந்திரம் - என்னசூழ்ச்சி. அச்சோ - ஐயோ.

162. காமம் - ஊர்த்தபுண்டரம். குறி - வைணவ அடையாளம். புணர்ப்பு - வஞ்சகம். காமம் - அன்பு. குறைந்து - குறுகியது. பாரீர் - பாருங்கள்.

163. இரு - பெரிய. மலைவு - மாறுபாடு. பொருமல் - அழுதல். பொம்மல் - பொலிவு.

164. நம்பி - புருடோத்தமன். நம்பன் - சிவன். கறுவு - கோபம். கடை - தலைவாயில். பாசம் - கயிறு. வலியான் - கரிக்குருவி.

166. படர்தலும் - செல்லுதலும். புனைவர் - (வைணவப்) பிராமணர்களுடைய. தொடிக்கரம் - கங்கணமணிந்த கை. சூளுறும் - (காசிவிசுவேசர் சந்நிதியில் விஷ்ணுவேபரமென்று) சத்தியஞ்செய்யும். கரம்போல் நிற்ப - கையைப்போலத் தம்பித்து மடக்கமாட்டாமல் நிற்க.

167. அல்மந்து - சுழன்று. புகல் - அடைக்கலம். அஞ்சல் - அஞ்சற்க. நோக்கு - பார்வை. ஆற்றி - சாந்திசெய்து.

168. அனகர் - சிவபிரான். மனவு - சங்கை. உரைத்து அனைந்தவல் அன்ன - தேய்த்துச்செய்தாற்போல. சகோரம் - ஓர்பறவை.

169. (திருமதிலினுட்பிரகாரமாகிய) சங்கவீதி, — புரிவீர் அல்லீர் - செய்யாதேயுங்கள். வல்லீர் - வல்லவரே.

170. புரிதும் - செய்தும். கூத்தன் எம்மான் - கூத்தனாகிய எங்கள் சிவபிரான். சிவமறையவர் - ஆதிசைவர்.

171. மகார் - பிள்ளைகளாகிய. சிறார் - சிறுவர். உணர்வித்து - அறிவித்து. தத்துவம் - உண்மைநூல்.

---

**நான்காவது :— சிவபூசை யுரைத்த சருக்கம்.**

1. குதம் - மலத்துவாரம், அங்குலி - விரல். அடப்பம் பூப்போல் - (முக்கோணவடிவமாகிய) அடப்ப மலர்போல. நாற்கோணை - நாற்கோணம். சுவாதிட்டம் - சுவாதிட்டானம். ஆக்கினை - ஆஞ்ஞை. கயமாமுகன் முதலோரறுவர் - விநாயகர், பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவம். மண்முதற்பூதம் - பிருதிவி முதலிய பஞ்சபூதம்; இவற்றன் மூலாதாரத்துக்குஞ் சுவாதிட்டானத்துக்கும் பிருதிவியே பூதம்.

2. சோதிசிவம் - சோதியாகிய சிவம். சதாக்கியம் - (விகாரம்) சாதாக்கியம். ஆதி - முதன்மையாகிய. பூதமைந்து - பிருதிவி முதலியவை. பொறியைந்து - மெய் முதலியவை. புலன்களைந்து - சத்தமுதலியவை. கருமேந்திரியமைந்து - வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம். கரண நான்கு - மனம், புத்தி, சித்தம், அகங்காரம். உயிர்த் தத்துவம் - ஆன்மதத்துவம்.



உட்கருவி - அகக்கருவி.

3. வான் - ஆகாயம். வளி - காற்று. தெரிக்கும் - காட்டும். வன்னி - அக்கினி. தாலு - நாக்கு. நால் நிலம் - நான்குபூமி. மேல் நிரல் - முதலினின்று வரிசையாக. கமனம் - நடை. விசர்க்கம் - மலசலங்கழிதல்.

4. மருத்து - வாயு. கருமம் - தொழில். அந்தி - புத்தி. புனர்செயல் - கீழ்ன் செய்கை. சித்தம் - மனம். பார் - பிருதிவி. இவை போக்கிய காண்டம் - இவைகளுக்குப் போக்கியகாண்டமென்று பெயராம். கலை, — வினைச்செயல் - கிரியையை. மிகுதி - அதிகப் (படுத்தும்). வித்தை, — ஞானம் - ஞானத்தை. மிகுதி - அதிகப் (படுத்தும்). நியதி, — நிச்சூசெயும் - (கன்மபலத்தை) நிச்சயிக்கும். அராகம், — இச்சை - ஆசையை (எழுப்பும்). காலம், — புலஞ்செயும் - கன்ம பலத்தையூட்டும். மாயை, — மறைக்கும் - மறைப்பிக்கும். புருடன், — கருவிசுற்றும் - கருவிகளைத் தொழிற் படுத்தும். இவை - இவைகளுக்கு. போககாண்டம் - போககாண்டமென்று பெயராம்.

5. சுத்தவித்தை, — சத்தமுதல் விடய மூட்டும் - ஓசைமுதலியவிஷயத்தை (விஷயம் - அறியத்தக்கது) எழுப்பும். ஈசுரம், — தொழில் மூட்டும் - கிரியையை யெழுப்பும். சாதாக்கியம், — நேர்செய்யும் - (மேற்கூறிய இரண்டையும்) சமமாக இருக்கச்செய்யும். சத்தி, — உருசிப்பிக்கும் - சுவையறியச்செய்யும்; சுத்தவித்தை முதலிய இவ்வைந்து தத்துவங்களுமுறையே ஞானமேறிக் கிரியை குறைந்திருக்குமென்றும், ஞானங் குறைந்து கிரியையேறி யிருக்குமென்றும், ஞானமுங்கிரியையுமொத்திருக்குமென்றும், கிரியையாயிருக்குமென்றும், ஞானமா யிருக்குமென்றும் பெரும்பாலார் கூறுவர். சிவம், — ஆன்மா - உயிரை. தற்செயல்செய்விக்கும் - தன்னுடைய செய்கையைச் செய்யச்செய்யும். சிவமுதலைந்தும் - சிவதத்துவங்களைந்தும். கலாதிகளேழும் - வித்தியா தத்துவங்களேழும். சுத்தாசுத்தம் - சுத்தாசுத்தமாயைகளாம். பார்முதலநான்கு - பிருதிவி முதலிய (ஆன்மதத்துவம்) இருபத்து நான்கும்.

6 பார்க்கூறு - பிருதிவியின்மிசம். வன்னி - அக்கினி. சலம் - பொய். மாற்சரியம் - பொறாமை. வான் - ஆகாயம். பூதகாரியம் - பஞ்சபூதங்காரணமாகத் தோன்றியவைகள்.

7. சூக்குமை - சூக்குமைவாக்கு. பத்தி - அன்புடைய. எழுத்து - (ஒலி) எழுத்து, நாதம் (ஆம்). உள்ளொளி - (அது) உள்ளே யுள்ள பிரகாசமாகிய. பைசந்தி - பைசந்திவாக்கு. நியாஎம் - நினைவு மாத்திரையாய் விளங்கும். மத்திமை - மத்திமைவாக்கு. உரையாமலுரைத்தல் - செவிக்குவிடயமாகாமல் கண்டத்தினுள்ளே விளங்கும். வைகரி - வைகரிவாக்கு. வகனித்தல் - பேசல் (ஆம்). அத்தம் - திரவியம் - எடனை - ஈடணையின் மருஉ - அஃது:— இச்சை. அத்தமென்பதனோடும் எடனையைக் கூட்டுக.

8. அனம் நிறைக்கு மெங்கும் - (உண்ட) அன்னசாரத்தை (உடலெங்கும்) பரவச்செய்யும். வியானன், — வியாபிக்கும் - (தோலெங்கும்) நிறைந்து பரிசத்தையறியச் செய்யும். சமன் - (எல்லாவாயுக்களையும் ஏறுதல் குறைதல்செய்யவொட்டாது) சமனாக்கும். பிராணன், — சதாவுயிர்க்கும் - (இலாடத்தானத்திலேதோன்றி) எப்போதும் போக்கு வரவு செய்துகொண்டிருக்கும். வியர்ப்பு - வியர்த்தல். விதானம் - விரிவுடைய. நாகன், — கொட்டாவி - கொட்டாவியை (யுண்டுபண்ணும்). அதா - தாகை. உயிர்போய் - உயிர் (உடம்பை விட்டுப்) போக. (போய் - எச்சத்திரிவு.) (அதன்மேல்) தனஞ்செயன், — மேல்வெடிப்பித்து - கபாலத்தைப்பிளக்கச்செய்து.

9. பிங்கலை - பிங்கலை நாடியானது. (மூலாதாரத்திலேதோன்றி) வலப்பாலின் - வலப்பக்கத்தில். சு

வினையைச் சுழுமுனைநாடியைச் சுத்தஞ்
செலுத்தி. இடப்பால் - இடப்பக்க
த்தில். மாறி-கீர்த்தரிக்கோல்போலமா
றிச்சென்று. மூன்றுமண்டலம்-அக்கி
னிமண்டலம், சூரியமண்டலம், சந்
திரமண்டலம். இடையிடையே-(அம்
மண்டலங்களின்) நடுவேநடுவே. மா
றுபடி - மாறிமாறிப்போய். மேலைத்த
லம் - பிரமரந்திரம். சிரம் - உச்சி.
நாசித்தலம்-மூக்கினிடம். இடையும்-
இடப்பக்கத்துநாடியும். இடப்பால் -
இடப்பக்கத்திலும். அற்றே - அத்த
ன்மைத்தே, மூலாதாரத்திலே தோ
ன்றி இடப்பக்கத்திற் சுழுமுனையைச்
செலுத்திக்கத்தரிக்கோல்போலமும்
மண்டலங்களிலுமாறிச்சென்று பிர
மரந்திரத்தையடைந்து உச்சியிலேசெ
ன்று இடப்பக்கத்து நாசியிலேவந்து
நிற்கும். சுழுனைநாடி - சுழுமுனை
நாடி. தலைப்பான்மை - முதற்றன்
மையுடைய. மூலம்-மூலாதாரத்தில்.
சடாதாரம் - ஆறுதாரம். மேலாதார
ம் - கபாலம்.

10. மூலமுதல்- மூலாதாரந்தொ
டங்கி. புருடன், காந்தாரி -இவ்விரு
நாடிகளும். கண் அளவாம் - (முறை
யே) வலக்கண் இடக்கண்வரையும் வ
ந்துநிற்கும். மத்தி, அலம்புருடன்,—
செவி- (முறையே) வலச்காது இடக்
காது. சிங்குவைநாடி,—தாலுவில்-நா
வின்வேர். சங்கினி,—நாபி-உந்திக்க
மலம். குய்யம்-குறி. குகு,— குதம்-
குறியின்கீழ்ப்பக்கம், மலத்துவாரம்.
ஏலும் = பொருந்தும். தசநாடி-பத்து
நரம்பு. தசவாயு-பத்துவாயு. எடணை-
ஆசை. பூதியம்-பூதகாரியம். போலும்-
உரையசை. நால்வாக்கு,—சூக்குமை,
பைசந்தி, மத்திமை, வைகரி. வசனா
தியைந்து-வசனம், கமனம், தானம்,
விசர்க்கம், ஆனந்தம்.

11. புரந்தவன் -அரசன். சேனை-
படை. கடைதோறு இருத்தி-வாயில்
கடோறும் நிறுத்திவிட்டு. உள்ளே-
(தன்னிருப்பிடத்தி) னுள்ளே. புகு
ம் -(சரீரத்தினுள்ளிடத்தே) செல்லு
ம். புருடன் - ஆன்மா. அவத்தை -
உபாதி.

12. புருடனும் - ஆன்மத்தத்துவ
மும் (ஆகிய), முப்பத்தைந்தால்- மு
ப்பத்தைந்து கருவிகளுடன். (ஆன்
மா) நுதலின் -இலாடத்தானத்தில்.
இசைவது - பொருந்துவது. சாக்கிர
ம்-சாக்கிராவத்தை. களத்து -கண்ட
த்தானத்தில், நீர்த்தது - நீங்கியதா
கிய மேற்சொன்ன இருபத்தைந்து.
சொப்பனம்-சொப்பனவத்தை. மன
த்தில்,— புருடன்,— வாயு-பிராண
வாயு. சித்தம்,—சுழுத்தி - சுழுத்திய
வத்தை. இரண்டு- புருடன், பிராண
வாயு. ஆர்த்த-(விகாரம்)பொருந்திய.
உந்தியிலே - நாபித்தானத்திலே நிற்
றல். துரியம்-துரியாவத்தை. அவை-
புருடன், பிராணவாயுவாகியஇரண்டு.
அணு- ஆன்மா. மூலமலத்தில்-மூலா
தாரத்தில். அதீதம். துரியாதீதாவத்
தை.

13 மாயை - மாயைமலம். கன்ம
ம்-கன்மமலம். எவ்வம்- துன்பம். ஆய்-
போன்று. ஆணவம்-ஆணவமலம். தவ்
வல்-கெடுதல். வவ்வல்-கவர்தல். கரு
வி-தத்துவம். மூலமலத்து-ஆணவம
லத்தில்(சருவசங்காரகாலவரையும்).
அழுந்தி-படிந்து. தனியுறல்-தனியே
கிடத்தல். கேவலம்-கேவலாவத்தை.

14. கவனம் - கவலை. அநீதத்
துறுதல் - அப்பாற்பட்டுநிற்றல். சூத்
தம் - புனிதம். இவ்வழி - இந்தமார்க்
கங்களை (யுணர்ந்து).

15. ஒருமை - பிளவுபடாமை.
செனனவாசனை - பிறவிப்பழக்கம்.
பூதம் (சுத்தி)- ஆன்மசுத்தி, மானத
சுத்தி,—தத்துவத்தால் - பலத்தின்
பொருட்டு.

16. சடுதி - விரைவு. வடிவுற
நினைந்து- சொரூபத்தியானஞ் செய்
து. வடகுணபால்- வடகிழக்குப்பக்க
ம். சிகரம் -கோபுரத்துச்சி.

17. மேல் - மேன்மை. திரணம்-
துரும்பு. ஒலியல் - வஸ்திரம்.

18. உரையகற்றி- வாய்பேசாது.
காட்டாறியால் - விறகு முதலியவற்
றால். வருத்தி - வரவழைத்து. நீர்ம்
கு - நீர்நிலைக்கு. ஒருமுழம் - ஒருமு
ழத்தூரம். கார் - கார்காலம். இருது-
பருவம். பூவின்-பூமியின். காமலை-
தூரமாக. உரைத்து - தேய்த்து.

19. சவுசம்-மலசுத்தி. பேணம் -
நுரை. நரந்தம்-நாரத்தை. கடுக்கை-
கொன்றை. இறலி - இத்திமரம்.

20. சந்தி - சங்கஞ்செடி. செய
லை - அசோகு. பங்கமா - குற்றமாக.
தில்லை - ஒருமரம். பராய் - பராயம
ரம். ஆண்மரத்தில் - ஆண்மரங்களு
க்குள். கழிப்பர் - நீக்குவர். அங்குல
மெட்டு = எட்டுவிரல் நீளம்.

21. முறுவல்மாசு-பல்லழுக்கு. வி
திபாதம் - ஓர் புண்ணியகாலம். கழி
ப்பர் - (பல்விளக்குதல்) நீக்குவர்.

22. உதகம் - நீர்.

23. கந்தரத்து - கழுத்தில். அற
ங்கள்-தருமங்கள் (முப்பத்திரண்டு).
அருக்கர் - சூரியர் (பன்னிரண்டு).
கண்டாபரணத்து-சிரசுமாலை. தத்துவம்,—
(முப்பத்தாறு). அரிநூர் - விஷ்ணு
தலங்கள் (நூற்றெட்டு). (அல்லது)
வடவெழுத்து - சமஸ்கிருத எழுத்
துக்கள் (ஐம்பத்தொன்று). படிக
ம் - பளிங்கு. துப்பு- பவளம். ஆரம்-
முத்து. வந்த - இடைத்தலை. (வந்
தது என்பது வந்தன முற்றியறுதி
கெட்டது). சிரம் - குடுமியில் (ஆகு
பெயர்). மணிக்குழை - அழகிய காது
களில். அங்குலி சமயம்-விரல்களும்
சமயமுங்கொண்ட தொகையாகிய
பதினொன்று.

24. மவுலி-சடையையுடைய சிவ
பிரான். சகத்திரம் - ஆயிரம். சிந்தி
யா -. சிந்தித்து. பதம் - எழுத்து.
சமிதை - ஓமவிறகு. திரவியம்-பொ
ருள்.

25. திதி - பக்ஷம். தினம்-நாள்.
வாரம்,— அயனம் -உத்தராயணதெ
க்ஷிணாயன புண்ணியகாலம். விடு-வி
ஷு. இருமண்டலம் - அமாவாசை,
பௌர்ணமி. சானித்தியபூசை-எதிர்
முகப்படும் பூசை. வற்சரபூசை-
வருஷாபிஷேகபூசை. மாதவிழா-மா
தந்தோறும் செய்யுந்திருவிழா. மாத
பூசை-மாதாந்தத்திற்செய்யும் பூசை.
பூசை யென்பதனைச் சானித்தியத்
தோடுங்கூட்டுக.

26. தவன்பூசனை - கும்பந்தாபி
த்துச்செய்யும் பூசை. தீபவளி-(விகா
ரம்.) தீபாவளி. சங்கபூசை - சங்கா
பிஷேகபூசை. நிவேதனம் -புது
நெல்லரிசியன்னம்வைத்தியபூசை.
மகாசந்தி, காலை, உச்சி, மாலை.—
(இந்நான்கும், காலமென்பன.) யாமம்-
சாமம். அருணசந்தி .....................
நிசி,—நான்கு - (இந்)நான்கும். உவ
காலம்- உபகாலம் (ஆம்); இந்நான்கு
உவகாலங்களும், மேற்கூறிய காலங்
களின் இடை, கடைகளிலாவன;
இவற்றைத்தற்காலம் பூசை நிகழ்ச்
சியினுங்காணலாம். [உபகாலம் எது
கைநோக்கி உவகாலமெனலாயிற்று.
உபகாலம் - துணைக்காலம்.]

27. அன்னதில் -அந்தந்தப்பொ
ருளில். நீர் - சலத்தை. அத்திரத்தா
ல் - அத்திரமந்திரத்தால். சங்கற்ப
முறைமைபோற்றி - இன்னதற்காக
இது செய்கிறேனென்னும் ஆரம்பகி
ரியையைச்செய்து. கொன்-பெருமை.
சந்தனத்தோயம்- சந்தனங்கலந்தநீர்.
பூரித்து - நிறைத்து.

28. புண்ணியயாகம்-புண்ணியா
வாசனம். முறை - கிரமமாக. செபி
த்து-செபஞ்செய்து. சாந்திஓமம்-
தோஷபரிகாரமாகச்செய்யும் ஓமம்.

29. கவியம்-பஞ்சகௌவியம். மனு
வின் - மந்திரத்தால்.

30. மிசை - மேல். கனிச்சம்பீர
ம்- (ஆகுபெயர்)எலுமிச்சம்பழச்சாறு.
மீது - மேல். துப்பு - நெய். அக்கா
ரம் - சருக்கரை. புட்பசலம் - மலர்
தோய்ந்தநீர். பரிவு-அன்பு. கன்னல்
பிந்து - கருப்பஞ்சாற்றுக்குப்பின்பு.
கழுநீர்க்கொட்டம் - ஒருவாசனைத்தி
ரவியம். பஞ்சவில்வம் - வில்வம், மா
துளை, மாவிலிங்கு, விளா, நொச்சி.
பலோதகம் - பலசுனிரசம்.

31. எற்றி - நிவேதிப்பித்து. நி
ராஞ்சனதீபம் - கர்ப்பூராலாத்தி. நா
ளிகேரப்பின்னர் - தேங்காய்க்குப்

வின். கந்ததோயம்-வாசனைப்பண்டங்கலந்தசலம்.

32. வில்லுவம் - வில்வம். பணிலம் - சங்கு. பீ - மேன்மை. மந்திரானம் - திருவொற்றுடைசாத்துமுன்னர் நிவேதிக்குமன்னம். தாபனம் - தாபித்தல்.

33. மிசை - மேல். உபவீதம் - பூணுநூல். மொழுகி - அப்பி. படீரம் - ஒருவகை வாசனைப்பொடி. கேயூரம் - வாகுவலயம்.

34. பொருட்கலம் - பொற்பாத்திரம். பண்ணியம் - பலகாரம். கருனை - பொரிக்கறி. வருக்கலங்கபலவிதம். எற்றி - நிவேதிப்பித்து. சுருளெடுத்தி. தாம்பூலநிவேதிப்பித்து. கவிகை - குடை. ஆர்ப்ப - முழங்க.

35. ஆலயஞ்சூழ்தேவ - சுற்றுக்கோயிற்றெய்வம். விளியோகமிடல் - விபூதிமுதலியபிரசாதஞ்செலவிடல். படிஞமப்பூசை - நித்தியப்படித்தாபூசை.

37. முருகு - வாசனை. அலர்-விரிந்த. பற்பம் - தாமரை. உருவம் - நிறம். தளவம் - முல்லை. சாதி - சிறுசண்பகம்.

38. மருத்த - வாசனையுள்ள. பத்திரம் - இலை. சதம் - நூறு. சாலும் - மிகும்.

39. பதம்-திருவடி. சானு-முழந்தாள். வாமம் -கெண்டைக்கால். குறங்கு - தொடை. குய்யம் -இரகசியத்தானம். அங்குலம் - விரல். அ-புனிதம். உந்தி - கொப்பூழ்.

40. வயின் - வயிறு. கண்டம் - கழுத்து. நாண்டம்-மூக்கு. வதனம் - முகம். கன்னம் - காது. கபோலம் - கன்னம்.

42. கன்னப்பூண் - காதணி.

42. அங்கம் - அவயவம். உத்தமாங்கம் - தலை. சங்கம்,— மறுகுகூழ் - வீதி(யாகச்)சூழ்ந்த. துங்கம் - உயர்வு. மகுடபூசை-மகுடாமலிதிப்படிசெய்யும் பூசை.

43. ஆவாகனம்......புட்பாஞ்சலி,— (இப்பத்துமுப்தேசமுறைநயணுணர்க).

44. மா - நெல்லரிசிமா. சம்பீரம் - எலுமிச்சம்பழச்சாறு. ஆச்சியம்-நெய். பயம் - பால். குளோதகம்-சர்க்கரைநீர். தோடம் - தோவகம்.

45. சீதபானீயம்-குளிர்ந்தசலம். பிறவிநோறும்-சனனத்தைக்கெடுக்கும். பலோதகம் - பழச்சாறு. தோயம்-நீர்.

46. அன்னசமிர்த்தி -சோறுவிருத்தி (உண்டாகும்). நத்தின்றேயம் - சங்கசலம். சன்மலி-நன்மைநிறைந்த. அறிவிருட்டி - பெருங்கேடு.

47. மோக்கம் - மோக்ஷம். சானித்தியம் - சந்நிதிப்படுதல்.

48. அக்காலத்தி-சருக்கரைகலந்த நீராலத்தி. செக்கமலை - (விகாரம்) சிவந்தஇலக்குமி. நீராஞ்சனம் - திட்டிபரிகாரமாகச்செய்யும் ஒருவகையாலத்தி. சுருள் - வெற்றிலைச்சுருள். [அக்காரம்-விகாரம்.]

49 கரடி, படகம், திமிலை-ஒவ்வொரு வாத்தியம். நித்தம் - தினம்.

50. மூன்றுதீக்கை - சமயம், விசேடம், நிருவாணம்.

51. நித்தியமுதலமூன்று - நித்தியம், நைமித்தியம், காமியம். ஐந்துபதம் - பஞ்சாக்கரம். நாற்கதி - சாலோக முதலியவை. மேலை - பழைய. அத்துவா - (ஆன்மாக்களைப் பரகதியடைவிக்கையாகிய)வழி. ஆறு - மந்திராத்துவா, பதாத்துவா, வர்ணத்துவா, புவனத்துவா, கலாத்துவா, தத்துவாத்துவா. [ஐந்துபதம் - பஞ்சாக்கரமென்பது."அந்தியுநண்பகலுமஞ்சுபதஞ்சொல்லி" என்னுஞ்சுந்தரமூர்த்திநாயனாருளிய தேவாரத்தானுமுணர்க.

52. கோட்டம்- கோணல். கோன் - பெருமை.

53. அலவன் - ஆடிமாதம். இலைத்திங்கள் - மார்கழிமாதம்.

54. அலகுக்கு - அவ்வகத்தியமுனிவருக்கு. ஊக்கதி-பன்றிமை.



ஐந்தாவது:— நதிவீழ்வோடனீ கதிபோது சருக்கம்.

1. மால் - மயக்கத்தை. மாலை - மாலைக்காலம். மாலை - மேகத்தின். அருவிமாலை-அருவியாகிய(பூ)மாலை.

2. சூர்-அச்சம் அல்வேலி-இருணிறைந்தவேலி. தோகைமார் -வேடப்பெண்கள். வேரல்வேலி- பிரம்புவேலி. மூரல் - சிரிப்பாகிய. வேலியிட்டாழ் - வேலியைச்செய்தால். என- போன்ற. முத்தம் ஆர் - முத்துக்கள் நிறைந்த. சாரல்வேலி - மலைப்பக்கமாகியவேலி. கொல்லிச்சயிலம்-கொல்லிமலை.

3. அத்தலை - அந்தமுதன்மையாகிய. மைத்தலை - இருளிடம். கொந்து - கூட்டம். அலைத்தன - அலைத்தாற்போலும். வித்தலை-விதைத்தலை.

4. ஐவனம் - மலைநெல். வனத்தினை - சோலையை. எறிந்தனர் -வெட்டினவர். கொய் - கொய்யப்பட்ட. வனத்தினை - காட்டிலுள்ள தினைக்கதிரை. துரப்ப - ஓட்ட. களம் - கழுத்தினையுடைய. கிளியினம் -கிளிபோலும் பெண்கள் கூட்டத்தை. செறித்தார் - நெருக்கி வைத்தார்.

5. மலர்க்கு - தாமரைப்பூவுக்கு. தாள் - கால். நீத்த -(அப்பூவை) நீங்கிய. வஞ்சியரை - இலக்குமி போல்வாரை. இருதாள்- இரண்டுகால், (பெரியகால்). இதண்-பரண். அமைத்து- வைத்து. போதாது - பற்றாமல்.

6. ஏனல் - தினைப்புனம். அமரர்-தேவர்கள். மருந்திட-மருந்துசெய்ய,(அமுதுபடைக்க). வரைமேல் - (கொல்லி) மலையின்மேல். வேள்வி - யாகம்.

7. இளையார்-இளைக்கமாட்டார். இளையார் - இளமைப்பருவமுடைய பெண்கள். கிளிகடி - கிளிவிரட்டுகின்ற.

8. கீலியர் - நீலநிறமுள்ள வேடப்பெண்கள். வனசரப்படர் - வேடராகிய மதுதாரகள். புனம் - தினை. (ஆகுபெயர்) மழிக்கவும் - அறுக்கவும். துறவுத்தனம் - சந்நியாசித்தன்மை.

9. பிணை - மான். இனமென - (தமது) இனப்பொருள்களென்று. இசையிறுல் - (அப்பெண்கள்) இசைப்பாட்டால். கிறைந்த - (உருகி) அழிந்தன.

10. கூனல் - வளைவு. அங்குரமதி - முளையாகிய சந்திரன், (மூன்றாம்பிறையென்றபடி). நச்சும் - விரட்டும். பால் நல் அம் -பால்போலும்நல்ல அழகிய. குரல் - தினைக்கதிர். கான் அலங்கு - காட்டினிடத்து விளங்குகின்ற. உரலடி - யானை. (உரல்போன்ற பாதமுடைமையினிப்பெயர்த்து.) கறுவ - வெருங்க.

11. உழிதர - சுழல. பொருப்பர் - வேடர். கானவர் - முல்லைநிலமாக்கள். பொருளி- நெருங்கி. தோல்கள்(முன்கைக்கட்டுந்) தோல்கள். செறித்து -நெருக்கிக்கட்டி. கானும்-காற்றும்.

12. கோடு - சங்கு. ஆடல்-வெற்றி. மூசினர் - மொய்த்தனர். புருரம் - புருவம்.

13. கடமான்-காட்டுப்பசு. எனைமாக்கள் - மற்றைமிருகங்கள். கவடு எடுத்து - அடிப்படியுபற்றி.

14. மலைமுழை-மலைக்குகையில். அசனி - இடி. துடியடிக்கு - உடுக்குப்போலும் வட்டமாகிய கால்களுக்கு. ஒடுபு - ஓடி. துமித்து - முறித்து. மத்தகம் - தலை.

15. குத்திரவேங்கை - வஞ்சகமுடைய புலி. குதியார் -குதித்தோடாதவராய். உகிர் - நகம். செல்-மேகங்கள். உகுத்தென - சொரிந்தாற்போலும். செல்லுங்குத்தென வில்லுகுத்திடு கொடுங்கணையெனக் கூட்டுக.

16. குறை - குறுவுளி. கதை - தண்டாயுதம். முரடு - கணு. இருத்திய - வைக்கப்பட்ட. முசுண்டி - ஓராயுதம். பரடு - கணைக்கால்.

17. துன்றி - நெருங்கப்பட்டு. சூலவி - சுற்றி. சிலம்பம் - ஆயுதப்ப

யிற்சி. இருட்கு - இருளொடு. (-உருபுமயக்கம்) சாரிகை - வட்டமிகவோடல். (செய்து)

18. தடறு - உறை. உரீஇ - உருவி. விதிர்த்து - அசைத்து. தரியா - தாங்காமல். மிடறு - கண்டம். உடைத்து - பிளந்து. கடறுகட்டினர் - காடுகட்டினவராய். இடர் - துன்பம். உசாவியை, புலனம் - நீர்நிலை. எறுழி - பன்றி. (காடுகட்டல் - மந்திரத்தாற் குறித்த காட்டைவிட்டு மிருகம் அப்பாற்செல்லாமற் றடுத்தல்.)

19. இவன் - இந்தவேடர்தலைவன். ஏனவி - பன்றி. கடவும் - (இந்திரனால்) ஏவும். மஞ்சு - மேகம். பஞ்சவன் - பாண்டியன்.

20. கிளைத்திட - உண்டாக. ஓச்சினன் - எறிந்தவனாகி. கிளைத்து - கிண்டி. சூகரம் - பன்றி. கிளைத்திடா - எட்டா. (தாற்பரியம்)

21. சாரியின் - வட்டமாயோடலால். பூ - அழகு, (மலர்). சரம் - பாணம், (மாலை). சேர்த்தி - ஒன்றுபடுத்தி. உலைந்திடாது - வருந்தாது. ஒளியிருத்தல் - பிறரறியாதிருத்தல்.

22. சுவடு - (பன்றியின் கால்பதிந்த) இடத்தை. காணுமுன் - பார்ப்பதற்குமுன். சகலரை - மும்மலமுடைய ஆன்மாக்களை. பிரளயாகலர் - இருமலமுடையஆன்மாக்களை. கண்டும் சேணதில் - பார்த்தும் (அப்பன்றி) தூரமானால். விஞ்ஞானகலர் - ஒருமலமுடையஆன்மாக்களை. மலந் திரியத்திரிய - (மேற்கூறிய) மலங்கள் கெடக்கெட. வேடன்,—மாணாக்கன் - சீடன் (ஆக). நெறி - மார்க்கத்தை. பார்க்கும் - (திரும்பி) நோக்கும். பாவனை - பாவனாநிலையால். பரிசத்தால் - (கிட்ட நெருங்கும்போது பன்றியைக்கொல்லற்காக வேடன் தொடுதலால்) பரிசதீக்ஷையால். வன்கண் - கொடுமையுடைய. கேழல் - பன்றியானது. கோண் - வளைவு. ஆர்ந்த - பொருந்திய. குண்டமண்டலாதிகளில் - ஓமகுண்டங்கு முதலிய கிரியைகளால். நெறிவருந்தும் - பக்குவப்படுத்தும். குரவன் - ஆசாரியன். மலந் திரியத்திரிய நெறிவருந்தும் குரவனெனக் கூட்டுக.

23. இனம் - (தனக்குச்) சுற்றமாகிய. மானின்கணம் - பன்றிக்கூட்டத்தில். பிரியாது - (தன்னை) விட்டு நீங்காது. எகும் - பின்றொடரும். வனம் - மிருகி. தத்துவம் - (பிருதிவி முதலிய) தத்துவங்களை. மலர் - ஆணவமலம். புனம் எறி - காட்டில் நீளச்சென்று. தாய் - தாவி. ஏனம் - பன்றி. புகும் - சேரும். புகுதா - அடையக்கூடாத. சுத்தநனவு - சுத்தசாக்கிரம். துரியம் - துரியநிலை. நணுகுவான் - அடைபவன்.

24. வாவி - தாவி. மேல் - மேலுள்ள. உலாய் - உலாவி. சுலவல் - சுற்றல். சூகரம் - (விஷ்ணுவாகிய) பன்றி. சிவணும் - போனும்.

25. பள்ளி - படுக்கையிடம். செரிந்து - ஓடி. வலைசுழிந்து - வலையைத் தப்பியெழுந்து. விசை - வேகம். மடுத்து - கலந்து. ஒரீஇ - நீங்கி. வளைதடி - ஓராயுதம். பிழைத்து - தவறி. படிந்தென - மூழ்கினாற்போல.

26. அதுவே - அந்தடாகமே. செருவில் - யுத்தத்தில். எதிர்த்தென - எதிர்த்தாற்போல. வன்மீன் - முதலை. புக்கது - (வெளியே) போய்ச் சேர்ந்தது.

27. வாலறைந்து - வாலாலடித்து. வாய்மடுத்து - வாயாற் பற்றி. வலிப்ப - இழுப்ப. புனவனும் - வேடனும். மேற்குதித்தான் - (அம்முதலை) மேலே தாவினவனாகி. எல - பொருந்த. மூலமேனி - மூலதேகம். எயிற்றினல் - பல்லால்.

28. ஓடம் - தோணி. தகைத்து - ஆல் - முறையால். வலம் - வலிமை. இடங்கர் - முதலை. இலக்கு - (அனைக்குத்தானே) சமம். இடத்தால் - தானபேதத்தால்.

29. மாகநாள் - மாசிமாதம். தலைமை - முதன்மை. மானம் - விமானம். சிலைசெய் - மலையாற்செய்யப்பட்ட.



30. தகுமோ - கூடுமோ. இயல்பாய் - (எல்லாத்) தன்மையும் பரந்த. அந்தமால்வரை - அழகியபெரிய கயிலாசமலை.

31. நிந்தை - பழி. அயா - வருத்தம். உரைத்தும் - சொன்னேம். முந்தை - பூருவத்தில். முனிக்கு - அகத்தியருக்காக. காட்டிதும் - சொல்வோம். (தாற்பரியம்.)

32. பவித்தலை - சனனமாகியமான். சாரல் - மலைப்பக்கம்.

## ஆறவது:— வானவர்வழிபடு சருக்கம்.

1. கறுவினல் - சலஞ்சாதித்தலாலாகிய அகங்காரத்தால். பொருள் - குணம். பெரிய - உயர்ந்த. வன் - வலிய.

2. இம்பர் - இவ்வுலகம். முன் - சிவத்துரோகந்தீர்த்தகாலம்.

3. காண்பான் - காணும்பொருட்டு. ஓர் - உணர்ந்த.

4. புலவோர் - தேவர்கள். விரவும் - கலக்கும். விதிபதம் - சத்தியலோகம். சுருதிக்குன்றம் - வேதவடிவாகிய திரிகூடமலை.

5. பக - பிளக்க. முக்கோட்டு - மூன்றுசிகரத்தையுடைய. வேதண்டம் - மலை. பகல் - சூரியன். மறுகங்கை - சிவமதுகங்கைத் தீர்த்தம். தேன்இறால் - தேன்கூடு. கோட்டால் - கொம்பால். பகடு - யானை. உழக்கும் - கலக்கும்.

6. அருவி - அருவியாகிய. திருவலகிடுவார் - ஆலயத்திற் குப்பைகளை யொதுக்கித்தள்ளுவார். திருப்பணி - தொழில்.

7. அகம் - உள்ளிடம். உருவா - வடிவாக. பொறி - இந்திரியம். சிகரி - கோபுரங்கள். தகுதி - குணமுடைய. மண்டலங்கள்மூன்று - சூரியமண்டலம், சந்திரமண்டலம், அக்கினிமண்டலம். தரணி - தரணியாகிய. பதுமபீடம் - தாமரையாசனம்.

9. தேவதாரம் - பஞ்சதருவிலொன்று. தொடை தார் - மாலையின்பேதங்கள். வாரி - கடல். வாரி - அள்ளி. (க்கொண்டுவந்து)

11. மரபு - முறை. கற்றை - திரண்ட. சாந்திவேள்வி - சாந்தியோமம்.

12. ஆராதிப்ப - பூசிக்க.

13. நனி - குளிர்ச்சி. கழித்தும் - போக்கியும். கா - (செண்பகச்) சோலை. அளிபடா - வண்டுவிழாத.

14. பொருந்தா - உரிமையாக. பச்சை - தோல். துகில் - ஆடை.

15. சரணென - அடைக்கலமென்று. திரிகூடத்துத் தெய்வகீர்த்தியைனக் கூட்டுக.

16. செயல் - (படைத்தல் காத்தல்) தொழில். மௌலி - முடி. ஆண்டகை - ஆளுந் தகுதியுடையாய். அருளில் - ஆஞ்ஞையால்.

17. சிந்தனை - சிந்தித்தலையுடைய. பணிப்பாய் - கட்டளையிடுவாய். நீவிர் - நீங்கள். சந்ததம் - எப்பொழுதும். புரிக - (பூசை) செய்க.

18. படிவர் - முனிவர். தொடுத்தார் - ஆரம்பித்தார்.

19. தைஅயனம் - உத்தராயணம். வேட்ட - விரும்பப்பட்ட. உவா - பௌர்ணமி. மாகச்சிவனிராத்திரம் - மாசிமாத மகாசிவராத்திரி. பாற்குனத்திருநாள் - பங்குனித்திருவிழா. மேடவிழு - சித்திரைவிஷு. துவட்டாநாட் பௌவம் - சித்திரைநக்ஷத்திரத்தோடு கூடிய பௌர்ணமி. மாகவிழா - மகநக்ஷத்திரத் திருவிழா. ஆனிமுக்கனிகள் - ஆனிமாதமுப்பழ அபிடேகங்கள். மாசப்பூசை - மாதாந்தத்திற் செய்யும் பூசை. இங்கன்யாவும் - மாதமுழுதும்.

20. தெறும்பல் - (தக்கன யாகத்தில் வீரபத்திரரால்) முறியும் பல்லையுடைய. ஆதவன் - சூரியன். விலங்க - விலகிச்செல்ல. திங்கள் - சந்திரன். கறும் - கறைபடுத்தும், சமும்புபடுத்தும். பலா - பல்லாகி. முகடு - சிகரம். முகடு - (அண்டத்தி)னுச்சியை. பல் - பல. மதி - மாதம். உம்பர் - தேவருலகம்.

21. பறா - பறவையின்ற. வடவிழல் - கல்லாலவிருக்ஷத்தினிழலிலே.

பூங்கருளியு, உணர்ந்தவன்பால் - நந்திதேவரிடத்து. பெற்ற - (அறியப்) பட்ட. விராவுகின்ற. வடகலை-சமஸ்கிருதம். திராவிடம் - தமிழ்.

---

## ஏழாவது:—திருமூலர் வழிபடு சருக்கம்.

1. தாது - மகரந்தம். ததைந்து - மிடைந்து, தோய்ந்து. திங்கள் - சந்திரன். அரமகளிர் - தேவப்பெண்களது. கீந்தரத்தின் முழைதோறும் - மேகங்கள்படியும் குகைகளிடத்தெல்லாம். நுழைதோறும் - புகுந்தோறும். கலவிகூடி - (அச்சந்திரனோடு) புணர்ச்சிசெய்து. அந்தரத்தின் - ஆகாயத்தில். உடுமகளிர் - நக்ஷத்திரமாகிய பெண்கள். இரிதல் - ஓடல். மணி - முத்துக்களை. கூடம் - மலையினுச்சி. சாரல் - மலைப்பக்கம். சாரலையுங் கூட்டத்தையுமுடைய திரிகூடவரையெனக் கூட்டுக.

2. உம்பர் - தேவர். உம்பர் - விண்ணுலகம். கொம்பர் - பூங்கொம்புகள். அமர் - பொருந்திய. ஆடல் - அசைதல். இம்பர் - இவ்விடத்து.

3. அந்தணர்கள்சைவர் - பிராமணராகிய சைவர்கள். சிவசாதனம் - உருத்திராக்கம். நந்து - சங்கம்.

4. மூன்றுவடிவு - திரிமூர்த்திசொரூபம். வருத்தி - வரவழைத்து. செய்து. என்ற - பொருந்திய. நெறியாறு - ஆறத்துவா. எண்வகைய பத்தி - சிவபத்தர்களைச்சருக்கம் கஉ-ம் பாட்டின்ராயிற்காண்க.

6. நேயம் - நெய். மது - தேன். கன்னற்றேயம் - கருப்பஞ்சாறு. பலசாரம் - பல கனிரசம். சுவையிற்சுவை விளைக்குமுறை - மதுரத்தினுமதுரம்பெற.

7. மூவகைய - சிவப்பு, பச்சை, மஞ்சள் ஆகிய மூன்று பிரிவுடைய. முருகு - வாசனை. பாவனை - தியானம். அளி - அன்பு. பயிற்றும் - பழக்கும். தேவநதி - ஆகாயகங்கை. கண்டு - தரிசித்து. வடதேசு - உத்தரதேசத்திலுள்ள. எழுதிக்கோவொடு - எழுதியின் கலத்தால். அணிந்தபடி - அபிடேகஞ் செய்தது போல. (தாற்பரியம்.) (ஓடு-உருபும்யக்கம்.)

8. குயிற்றி - பதித்து, புனைந்து. நால்வகையசாந்து - அவை-கஸ்தூரி, புழுகு, குங்குமப்பூ, பச்சைக்கருப்பூரம் கலந்த சந்தனம். பாலமுதம் - பாயசம். ஏற்றி - நிவேதிப்பித்து.

9. படிகின்ற - தோய்கின்றன.

10. ஆடி அயனம் - ஆடிமாதப்பிறப்பாகிய தக்ஷிணாயனம். உருள் - உரோகணி. புரட்டையல் - புரட்டாசிமாதத்தில். விழு - விசேஷம். துலாம் - ஐப்பசி. மாகம் - மகநக்ஷத்திரம். தொழும்பு - தொண்டு.

11. மூலட்டானம் - மூலஸ்தானம். குடப்பாலில் - மேற்றிசைப் பக்கத்தில். பவித்திரங்கொண்டருளி - தருப்பாசனத்திலெழுந்தருளி. பூரம் - பூரநக்ஷத்திரத்தில். பாவைக்கு - (அந்த) உமாதேவிக்கு. சடங்கு - கிரியை. குடப்பாலிற்புனல் - கும்பத்திலுள்ள நீர். குடமுனி - கும்பமுனி.

12. வேதவிருக்கம் - வேதவிருக்ஷமாகிய குறும்பலா. காவணம் - பந்தர். விதிப்பவன் - செய்பவன். உதகஞ்செய்வோன் - தாரைவார்ப்பவன். ஆக்கம் - இலக்குமி. பணிசெய்யும் - ஏவல் செய்யும்.

13. ஊசல்பாராட்டும் - ஊஞ்சலைக்கொண்டாடும். (திருவிழா) ஆராட்டும் - உற்சவமுடிவிற்செய்யும் சாந்தியும். துலோர் - துலாவுணரம்படும். விருச்சிகச்சுடர் - கார்த்திகைமாதம். கார்த்திகை தீபம் - கார்த்திகை நக்ஷத்திரத்தீபம். மன் - நிலைமை. பாவை - திருவெம்பாவை யோதற்குரிய. மின் - பிரகாசிக்கின்ற. ஊசல் - அசைதலையுடைய. விளக்கு - தீபோற்சவம்.

14. மனமுதற்பொறி - மனம், வாக்கு, காயம். கடகம் - ஆடி. தனு - மார்கழி. திங்கள் - மாதம். ஈறு - இறுதியாக. நிசி - இராத்திரி. கதிர் - சூரியன். வடபுரிற்செல்ல - வடபக்கம் போக உத்தராயணம் வந்ததென்றபடி.

15. கடவுள் - தெய்வத்தன்மை. மடல் - இதழ். முறுக்கவிழ்ந்த - கட்டுவிட்ட. பூகம் - கமுகு. பொறிகள் - (பழுக்காய்களாகிய) தீப்பொறிகள்.

16. பாவச்செந்து - பாவமாகிய பிராணி. முன்றல் - வாசனை. தென்றல் - தென்றற்காற்று. வாசனையுடைய தென்றற்காற்றெனக் கூட்டுக.

17. நனி - (எல்லாவளமு) மிக்க. வரை - திரிகூடமலை.

18. தென்னன் - பாண்டியன். தென் அணி - அழகுபொருந்திய. யூபம் - யாகத்தம்பம். நிறுவி - நிறுத்தி. பொருள் - (யாகத்துக்கு வேண்டும்) பதார்த்தங்கள். உய்த்தான் - (யாகசாலைக்குப்பக்கத்தில்) செலுத்தினான்.

19. மேல் நவில் - மேலாகச்சொல்லப்பட்ட. பிரமத்தானம் - முதலிடம். அமைவுற - பொருந்தியிருப்ப. பாற - கெட. இரும்பூது - மகிழ்ச்சி.

20. 21. சோதிட்டோமம்........இராசசூயம், (ஆகிய) மேக்கம் - புகழ்ப்படும்.

22. குருஉ - நிறம். அண்டமூலத்து - அடியண்டத்தில். படலம் - கூட்டம். செழுமூ - பொருந்திய. ஊழியுருத்திரன் - காலாக்கினி யுருத்திரமூர்த்தி.

23. வாய் - இடத்தில். சுருதி வேள்வியர் - வேதவிதிப்படி யாகஞ்செய்து முடித்தவர். சாலை - யாகசாலையிலுள்ள. மூவிருகாற்றோக்கு - (அவபிருதஸ்நானஞ்செய்ய எதிர்செல்லும்) ஆறுசக்கரத்தையுடைய இரதத்துக்கு. சாய்ந்து - தோற்று. கடல் - (மேற்றிசைச்) சமுத்திரம். மலை - அத்தமனகிரி. மானமாம் - விமானமாகவலரவும்.

24. சதமகம் - நூறுயாகம். கழிந்தான் - இறந்தான். சகரர் - (கடல் தோண்டின சூரியகுலத்தரசராகிய) சகரர். செய்தவர் - செய்தவராகி. தாழுநர் - அழிந்தார். [தாழுதல் - அழிதல்.]

25. அந்தரங்கக்கூத்து - இரகசியநடனம். வெளியரங்கம் - பகிரங்கம்.

---

## எட்டாவது:— சைதகிருபாய் புரி சருக்கம்.

1. போதவடிவு - ஞானசொரூபம். ஒரு - ஒருவகை யாண்மாக்கள்; அவர்: மும்மலமுடையாராகியசகலர். காதவெளி - சிதாகாசம். பரம் - மேல். சிற்சபை - சிதம்பரம்.

2. வீழி - கொவ்வைக்கனி.

3. அது - அச்சிதம்பரம். மால் - ஆசை. மாதவன் - விஷ்ணு. தாது - மகரந்தம். அளவு - கலந்த.

4. மகரம் - தைமாதம். பூ - மலரால். மகம் - இன்பம். அகவு - ஆடுகின்ற. அகவிருப்பு - மனத்தாசை.

6. நவமது - புதிதாகிய. கம் - பிரமகபாலத்தை. கைவேய்ந்தார் - கையிற்றரித்த சிவபிரான். பவம் - உண்டாகின்ற. மது - தேனில். நவமது - நவத்தேன். (நவமது என்பதில், அது - பகுதிப்பொருள் விகுதி.)

7. எல்லை - காலம். பல் - பல்விளிடத்து. நவில் - சொல்லப்பட்ட. காலகூடம் - விடத்தையுடைய. பகுவாய் - பிளந்த வாய். பாந்தள் - பாம்பு.

8. மதுகை - வலி. அனந்தன் - ஆதிசேடன். துணைவன் - சகோதரன். பொது - சபை. விழைந்து - விரும்பி.

9. கோன் - பெருமை. குணம் - கயிறு, (குணம்). ஒர்வெற்பை - ஒப்பற்ற மந்தரமலையை. பிணி - கட்டு, (வியாதி). மருந்து - அமிர்தம், (ஒளடதம்). கடலிற் பிணிசெய்தெனக் கூட்டுக.

10. பொறியுடல் - பஞ்சேந்திரியங்களையுடைய சரீரமாகிய. பாலை - பதுமை. புலன்கள் - சத்தபரிசரூபரசகந்தங்களை. குத்திரம் - துன்கள். சுழும் - கோபிக்கும். மணப்பாசம் - மனமாகிய கயிறு. கலாதிவழ் - வித்தியாதத்துவங்க ளேழாகிய. ...

தங்கள் - காரியப்படுத்தல். ஐந்து - சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம். பேதக்குறி - வேறுபாடாகிய அடையாளத்தையுடைய. இரு - பெரிய. தருவால் - கோவில். (தரு - ஆகுபெயர்.) கூத்தனை - நாடகனை.

11. பணியின் - பாம்பின். பணியின்பணியார் - சர்ப்பாபரணத்தையுடையார். சூட்டு - உச்சியையுடைய. பெற்றி - தன்மை. தணிவில் - குறைவில்லாத. அருளால் - திருவருளுண்டாயில்.

13. கடைநோக்கு - கடைக்கண் பார்வை. நடமேல் - நடனத்தினிடத்தில். ஞானகாரணம் - அறிவுமூலம்.

14. தன்வயமா - தன்வசமாக. சனந்தன் - (விகாரம்) சனந்தயன், பிரமாவின்புத்திரன்.

15. சிலை - வில். நாணானோன் - கயிறாகிய வாசுகி. ஆற்றேன் - சகிக்கமாட்டேன். சிவபெருமான், — (அண்மைவிளி) கடன் - முறை.

16. பதவி - பதவியாகிய. பெருமானை - பெருமானே. எட்டாக்காலம் - நீண்டகாலம். கட்டா - கட்டாக; கட்டியெனலுமாம். தறியா - தடியாத. செறி - நெருங்கிய, இறுகிய. பாகின்வட்டா - சருக்கரைக்கட்டியாக.

17. பாண்டரங்கம் - ஒருவித நடனம். முயலகச்சாடுகூத்து - (தாருகாவனத்து முனிவர்கள்விட்ட) முயலகனை மிதித்துச்செய்யுநடனம்.

18. கொந்து - கூட்டமாகிய.

19. பற்று - அன்பு. இயற்று - (தவஞ்) செய்யும். உலப்பில் - கெடாத. குளிகை - மாத்திரை. வெற்றாய் - வீணாய். வாதியர் - இரசவாதிகள். வேதிக்குளிகை - உலோகங்களை யொன்றை யொன்றாக்குமாத்திரை.

20. கொழித்து - ஒதுக்கி. கந்து - சுகந்தம். வந்து - தென்றற்காற்று.

21. வெளிமன்று - ஆகாயசபை. மணிமன்று - இரத்தசபை. அனகம் - பாவமின்மை. தாம்பிரப்பொது - தாம்பிரசபை. சனகர் - பிரமாவின்புத்திரர் நால்வரி லொருவராகிய முனிவர்.

22. வரிவிது - பரிசுத்தமுடையது. அடிக்கு - பாதத்தினளவாகிய தூரத்துக்கு.

23. கண்டகம் - வயிரம், கடினம். மிருகண்டு - மார்க்கண்டமுனிவர் பிதா. கண்டகசேதனன் - பத்தாவது சருக்கத்திற் சொல்லப்பட்டவன்.

24. விழி - கண்களையுடையான். நகுசு - நைந்து. அளிக்கும் - கொடுக்கும். அம் சங்கு - அழகியசங்கம். அளிக்கும் - ஈனும். மணி - முத்து. கருவா - முட்டையாக. அஞ்சம் - அன்னம். அரவேந்தல் - சர்ப்பங்களிற்றலைவனான வாசுகி.

25. இந்து - சந்திரன். முடி - சிகரத்தில். உந்தி - நீர்ச்சுழி, (கொப்பூழ்). பாரிடந்தும் - பூமியைக்கிழித்தும். அலர் - விரிந்த. பூ - பூமி, (தாமரைப்பூ). திசைமுகம் - நான்குமுகம், (நான்கிடம்).

26. கூடம் - மலையினுச்சி. குன்றில் - திரிகூடமலையில். ஆடல் - அசைதலையுடைய. நீடல் - நீடுதலையுடைய. அரவம் - முழக்கம், (பாம்பு). பஃறலை - பலவிடம், (பலதலை; ஆயிரந்தலை). அனை - துணைவனாகிய. இலையால் - (அருவியிற்றோன்றும்) இந்திரதனுசால். மகவான் - இந்திரன்.

27. அரிய - அன்பாக. பொருள் - (வேண்டும்) பதார்த்தம். பரை - உமாதேவி. தவப்பள்ளி - தவஞ்செய்யுமிடம்.

28. பணைகள் - கிளைகள். துன்னு - நெருங்கிய. சடை - சடையாகிய. வீழ்து - விழுது. பழுமரம் - ஆலமரம். செல்லெடுப்ப - கறையான்கட்ட. வன்மீகம் - புற்று. ஒழுகு - நீண்ட. பங்தி - புறமயிர். உரோமசன் - ஒரு முனிவர்.

29. ஊன்றுகால் - நிலத்திற்பதிந்த காலாக. எழுகாலாக - தாங்கியபாதமாக. பதமூன்றும் - (இவ்



மூர்த்திகளையுடைய) பதவிமூன்றையும். பதம் - கால். நிலை - நிற்றல். இயக்கம் - சஞ்சரித்தல்.

30. நடைதப - நடத்தல்கெட. வாசிமேலேறி - பிராணவாயுவின்மேலேசென்று. வீதிவலம்புரி - (மும்மண்டல) வழியை வலஞ்சுற்றுகின்ற. நாசி - நாசி. மேற்சுடரும் - மேலுள்ள அக்கினிமண்டலமும். கொழும் - கொழுத்த, தடித்த. சுடர் - (மூலாதாரத்தினின்றும்) அக்கினியை.

31. பவனன் - காற்று. மூலம் - வேர்.

32. சரிக்கின்றார் - சஞ்சரிக்கின்றவர். உருக்கள் - அசேதனவடிவங்கள். சிலை - மலை; படிவம் - சரீரம்.

33. சதுர் - நான்கு. மனுவின்வாழ்க்கை - மனுக்கள் பதினால்வரி லொருவரதுவாழ்நாள்.

34. அயன்பகல் - பிரமன் பகற்காலம். மேயினர் - மேவினவராகி. சேய் - செம்மை, ஒழுங்கு.

35. இன்னணம் - இவ்விதம். புரிசேன் - செய்வேன். பணி - ஆஞ்ஞை. பன்னகப்பிறவி - பாம்புச்சனனம். பறிபடும் - நீங்கும்.

36. சந்ததம் - எப்பொழுதும். சைவசாதனம் - உருத்திராக்கம். கிழமை - உரிமை.

37. அனிலம் - வாயு.

38. பூ அலர் - பொலிவுவிரிந்த. பொது - (சித்திர) சபை. விரிஞ்சன் - பிரமன்.

39. கழிந்தனர் - மிகுந்தனர். சன்மலி - நன்மைநிறைந்த. நீரா - நீங்காத. வாராய் - வருவாய். நின்மலை - பார்வதி.

---

## ஒன்பதாவது:— திருநடச்சருக்கம்.

1. அற்பு - (விகாரம்) அன்பு. தனையன - புத்திரன்.

2. நணுகும் - சேரும். போய் - கெட. (எச்சத்திரிபு) பொடித்தன - தடித்தன. புளகப்புள்ளி - சந்தோஷத்தாலுண்டாகிய மயிர்க்காற்றடிப்புக்கள்.

3. குறி - அடையாளம். தானம் - கொடையையுடைய. மால் - மேகம். சாதகத்திரள் - வானம்பாடிப்பறவைக்கூட்டம். நேமி - சக்கரவாகம்.

4. குரு - நிறம். மணிவடம் - உருத்திராக்கமாலை. மருமம் - மார்பு. பணிலத்தோடு - சங்கக்குழை. மாசுணைக்கம்பி - பாம்பாகிய கம்பி.

5. உருக்கிளர் - நிறம் விளங்குகின்ற. மறிந்து - கெட்டு.

6. குறிஞ்சி - குறிஞ்சிப்பூ. சூரல் - பிரம்பு. சாரல் - மலைப்பக்கம். பிறங்கும் - விளங்கும். உத்தரபால் - வடபக்கம்.

8. வாணன் - வாணாசுரன். துவைக்கும் - முழக்கும். மண் - ஒப்பனையமைந்த. முழவு - மிருதங்கம். கிளை - ஒலி. வங்கம் - தோணி. ஏய்ப்ப - ஒப்ப.

9. இவவு - முழுக்காணி. இருவர் - (திருச்செவியிலுள்ள கந்திருவர்) இருவர். நவ - கேண்மையுடைய. வியாபக - எங்குநிறைந்த. உவவி - மகிழ்ந்து. உக்க - உதிர்ந்த. சீகரம் - திவலை. வியாளம் - (வாசுகியாகிய) பாம்பு.

10. படர் - விரிந்த. கனல் - அக்கினி. சுடர்விட - பிரகாசிக்க. துடி - உடுக்கு. செருகு - சொருகுகின்ற.

11. யாமளை - உமாதேவி. வாய்விட - முழங்க. குறளன் - முயலகன். கதி - வேகம். சதி - தாளவொத்து.

12. கலம் - பாத்திரம். திவள் - அசைகின்ற. பாணி - கை. பரிமாற - படைக்க.

13. பகல் - சூரியன். கருவ - நெருங்க. உருவ - நிறமுள்ள. ஒழுக - பிரகாசிக்க. (தாற்பரியம்) இருபொழுது - இராப்பகல். குரு - நிறம். கழல் - வீரக்கழல். குமைப்ப - கெடுப்ப.

14. பருவம் - சமயம். அசித்து - உண்டு.

15. நடமும் - நடித்தலும். அடைவு - முறையாகிய. சாரி - இடம்வலஞ்சுற்றல். ஓவியப்பொது - சித்திரசபை. கடுப்ப - ஒப்ப.

16. கண்தலம் - கண்ணிடங்கள். மண்டலமூன்று - சூரியசந்திராக்கினி மண்டலங்கள். கெழும் - பொருந்தும். தண்டலை - சோலை. மதிமானம் - சந்திரன்விமானம். மிடற்றால் - (கரிய) கண்டத்தால். இந்திரசாபம் - இந்திரன் வில்.

17. சாந்து - சாந்துப்பொட்டு. கொப்பு - செருங்க. விலகி - இடம்விட்டு. வில்உமிழும் - பிரகாசத்தைத்தரும். மிளிர - விளங்க. கணபண கங்கணம் - கூட்டமாகிய படங்களையுடைய (பாம்பாகிய) கைவளை. கலிப்ப - முழங்க.

18. வன் - வலிமை. இருவர் - பதஞ்சலி, வியாக்கிரபாதர். இருவர் - பிரமவிஷ்ணுக்கள். ஆண்தகை - ஆண்தகுதி. தாண்டவம் - நடனம்.

19. துடித்திரள் - உடுக்குக்கூட்டம். சோபனம் - மங்களம். சுருதி - சுதி. இசை - கீர்த்தி. நவில் - செய்கின்ற.

20. அங்கணம் - அழகியதிருவைத்தகண்ணுடையவனே. நங்கள் - எங்கள்தங்கள். எளிவருகாட்சி - இலேசான தோற்றம். நல்கின்றருள் - செய்தருள். செங்கணன் - சிவந்த கண்களையுடைய விஷ்ணு.

21. இருஞ்சடை - பெரியசடை. புயங்கன் - வாசுகி. உவரி - கடல்.

22. வீரி - காளி. விசையை - துர்க்கை. வடுகன் - ஐயனார்.

23. மாதங்கி - பாங்கிப்பெண். கூத்தன் - நாடகன். பணியாசு - வாசுகி. பாதலவாசல் - பிலத்துவாரவழி. பொதியில் - சபையில். வாசன் - வசிப்பவன். குரவர் - முதியவர், பெரியவர். ஓசைபொலி -, (இதுபெயரொட்டு) [பொது இல்லன்றது பொதியிலெனமருவிற்று.] மன்றம் - (அச்)சபையில்.

24. சயிலநீர் - மலைத்தன்மையுடைய. ஆழிநீத்துயிலை - சமுத்திரகித்திரையை. மயிலை - மயில்போலுமுமாதேவியை. நகைதுளக்கி - புன்சிரிப்புச்செய்து.

25. மழ - இளமை. காதலன் - புத்திரன். மிக்கா - அதிகமாக. ஆதரம் - ஆசை. அமைந்தனம் - பொருந்தினேம். ஊசியம் - இரகசியம்.

26. அகண்டம் - அளவுபடாத இடம். வரன்முறை - கிரமமாக. தண்டல் - கெடுதல். தாயகம் - ஆதாரம்.

28. போதரும் - வரும். செயல்கள் மூன்று - சிருட்டி, திதி, சங்காரம்.

29. புலம் - அறிவு. யாதும் - சிறிதும். தராது - தராமல்.

30. கூறே - அமிசமே. கிருமலைபராசத்தி. கிரம்பா - கிரம்பி.

31. தருவும் - விருக்ஷங்களும். தேவர் - வானவர்களாம். வேதமூலம் - பிரணவம்.

32. திங்கள் - மாதம்.

33. பொங்கேறு - மிகுந்துவளர்கின்ற. ஏறி - உயர்ந்துவந்து. பஙகேறி - பங்கத்தைக்கடந்து. பகர்க்கம் - நரகம். ஆமே - ஆகாது, முடியாது.

35. அப்பரிசு - அத்தன்மை. புட்பகந்தன் - புட்பவாசனையுடைய குலவன். மக்பதை - மக்கட்கூட்டம். கருப்பம் கீழ்த்தினார் - கருவழித்தவர்.

36. உழலை - சுழல.

38. சின்மயப்பொது - ஞானமாகிய சபை. நண்ணுதும் - பொருந்தியிருப்போம். பன்னகசாயி - சர்ப்பசயனமுடைய விஷ்ணு. பொன்னகரின்முரசு - தேவதுந்துபி.

39. இயந்திரக்கன் - சித்திரவடிவங்கள். பொறித்தான் - எழுதினன். வாதராயணன் - வியாசமுனிவர்.

---

### பதினாலாவது — கண்டகசேதனச் சருக்கம்.

1. சாகினிமான் - பூமிதேவியின். வந்தனம் - வணக்கம், வினவு. மருங்கு - இடை. வல்லிசாதம் - வல்லிக்கொடி. தண் - குளிர்ச்சியும். பொதியம் : பொதியப்படும். தண்ணும் என்னும் மைமைநோக்கது.

2. திரை - கடல். வரை - (பொதிய) மலை. குவிதி - சிகரம். (அவ்வமுதம்.) போந்தமென - வந்ததுபோல. கண் - இடம். பொருந்தம் - தாம்பிரவன்னிநதி.



3. கரகம் - கும்பம். உதகம் - நீர். முக்களவில் - முக்களா விருக்ஷத்தில், பாவநாச க்ஷேத்திரத்தில். முரகரி - விஷ்ணு. முத்திதருந் தடம் - (அத்தியாழிநல்லூர்) முத்திதீர்த்தம். விரகு - நுண்ணறிவு. எறிந்த - செலுத்திய. சித்தன் - கருவூர்ச்சித்தர். மெய்சாய்ந்தோர் - திருமேனி சாய்ந்த சிவபிரான். பதி - திருப்புடைமருதூர்.

4. மெய்த்தலம் - உண்மை க்ஷேத்திரம், கடையம். சிவசயிலம், — வன்னியீச்சுரம் - அக்கினி பூசித்ததலம்; இது: ஆழ்வார்குறிச்சிக்குக் கிழக்குப்பக்கமுள்ளது. செஞ்ச - ஒழுக்குடைய. வாலீச்சுரம் - வாலி பூசித்ததலம்; இது: பிரமதேசத்துக்கும் வாகைகுளத்துக்கும் நடுவி லுள்ளது. கடனை - (சிவசயிலமலையிற் றோன்றிவரும்) கடனாநதி. ஒருபாங்காய் - ஒருபக்கமாகக்கொண்டு. பஞ்சலிங்கம் - (களக்காட்டுச்) சத்திவாகீசுரர், (பத்தைக்) குலசேகரநாதர், (பத்மநேரி) நெல்லையப்பர், (சிங்கிகுளக்) கயிலாசநாதர், (தேவநல்லூர்ச்) சோமநாதர் என்னும்) ஐந் திலிங்கங்கள். பொலிந்து ஒங்கும் - (தன்கரையில்) விளங்கியுயரும். (களக்காட்டுமலையிற் றோன்றிவரும்) பச்சாறும், — ஒருபாங்காய் - ஒரு பக்கமாகக்கொண்டு.

5. செங்கணன் - விஷ்ணு. சு - நல்ல. வகையில் - இனத்துடன். ஆயம் - மாதர்கூட்டம். நிறை - நிறைகின்ற. ஆழியுவகையினர் - சக்கராயுத மகிழ்ச்சியுடைய விஷ்ணு. நவகயிலாயங்கள் - பிரமதேசம், அரியநாயகிபுரம், சிந்துபூந்துறை, கீழைநத்தம், முறப்பநாடு, ஸ்ரீவைகுண்டம், தென்திருப்பேரை, சேந்தமங்கலம், சங்கைகொண்டான் என்பன; இவற்றிலெழுந்தருளியிருக்குஞ் சுவாமி பெயர்: கயிலாசநாதர். திருப்பதிக ளொன்பது - ஸ்ரீவைகுண்டம், திருத்தொலைவில் மங்கலம், வரகுணமங்கை, புளிங்குடி, பெருங்குளம், தென்திருப்பேரை, திருக்கோளூர், திருக்குருகூர், இரட்டைத் திருப்பதி என்பன; இவற்றுட் ஸ்ரீவைகுண்டமும், தென்திருப்பேரையும், நவகயிலாயத்துக்கும் நவ திருப்பதிக்கும் பொதுத்தலங்கள். (சுவகையில் என்பது எதுகைநோக்கிப் போலியாய்ச் சுவகயிலென நின்றது.) நடைபெறும் - நடந்துசெல்லும்.

6. வலம்புரிக்குழிசி - வலம்புரிச்சங்காகிய பாத்திரம். பூசி - விளக்கி. மணி - முத்து. துவர்த்தீ - பவளமாகிய அக்கினி. கரை - முழக்கம். கெழு - பொருந்திய. திரைப்பாவை - அலையாகிய பிள்ளை. சிற்றிலாடும் - சிறுவீடுகட்டி விளையாடும்.

7. நச்சம் - தினம். கடலா - கடலாக. வெற்பு - பொதியமலை. சென்னி - தலை. கடல் - கடலினிடத்து. பழனம் - மருதநிலத்தில். சாலி - நெற்பயிரும். செல்வி - இலக்குமியும்.

8. மதிக்கீறு - மதிப்பிளவு, பிறைச்சந்திரன். செவுரி - உமாதேவி. கூறு - பாகம். அகது - அல்லாமல். கூற்றொளி - (தன்னுடைய) பாகத்திலொளி, சிவப்பு. காந்தாலென்ன - மறைந்தாற்போல. பச்சுரு - பசியவடிவம். அழகுமேவ் - அழகுடையமூங்கில். [தன்னென்பது சிவபிரானை.]

9. கண்துயிலா - நித்திரை செய்யாத.

10. இஞ்சி - மதில். சாலிவாடச்சுபந்து - திருநெல்வேலிக்கு. குடபால் - மேற்பக்கம். செஞ்சியர் - செஞ்சிதேசத்தார். வஞ்சியர் - கருவூரார். வணிகமாக்கள் - வைசியர்களாகிய. ஆவணம் - கடைவீதி. மூதூர் - பழையநகர்.

11. ஆனினம் - பசுக்கூட்டம். வாணிபம் - வியாபாரம். வேட்டல் - விவாகஞ்செய்தல். ஆதி - முதன்மையாகிய. கவிப்பர் - மூவகைவணிகரிலொருவர்; இவராவார்:- இரண்டெக்கத்திலும் இடபங்களின்மேலேறிச்

ன்ற இருவர் நோக்கும்போது ஒருவ ர்முக மொருவருக்குத் தெரியாத வி தம் அவ் விருவருக்கு மிடையிலே குவிக்குந் திரவியமுடையார்; இத னை "இப்பர் கவிப்பர் பெருங்குடியா ளரென், ஒருப்புடைய மூவ ருரைக் குங்கால்—தப்பின், மீதியடியே ருமை மிகை நோக்கினர்கள் காண, நிதி யுடைய ரென்பர் நிலத்து" என்னு ம் சீவசம்போதனைச் செய்யுளா லுண ர்க.

12. ஈட்டுதல் - சம்பாதித்தல். பகுத்தல் - பங்கிட்டுக்கொடுத்தல். இறவதில்-கெடுதல்வந்த இடத்தில். சிறிது - கொஞ்சமும். தனிமை-ஒப் பின்மை. இயரில் தேறல் - துன்ப த்தினின் றுந்தெளிதல். சிறிதுமென் றவும்மைதொக்கது.

13. சிகரம் - மலையினுச்சி. இல் லம் - காடு. மகரநீர் - மகரமீன்களு டைய கடல். கருகலம் - பொக்கி ஷம். பரதவன் - வைசியர்குலத்தவ ன். பண்டசாலை-பதார்த்தங்கள்வை த்திருக்குமிடம்.

14. துகிர்-பவளம். தாளம் - தூ ள். முன்றில்-முற்றம். நகில் -(கடை க்குறை) கொங்கை. நடம்புரி - கூத் தாடுகின்ற.

15. ஈறு - கெடுதல். வீறி - பெருமையுற்று. வேட்கை - ஆசை.

16. கண்டம்- சருக்கரைக்கட்டி. ஆற்றி (யும்)- செய்தும். தண்டம் - தடி, கட்டை. தேன்-வாசனை. மாற் று - விலை. நான்மடி - நான்குபங்கு. பண்டமாற்றி - பதார்த்தங்களிலொ ன்றுகொடுத்தொன் றுவாங்கி. படை க்கும் - உண்டாக்கும்.

17. நோய் - வியாதி. பசிக்கு - (தன்) பசிக்கு. உற - மிக. நுங்குவ து - உண்ணுவது. சேய் - பிள்ளை.

18. முன்னவர்-பிராமணர். கோ வர்க்கு-அரசருக்கு. கொடிறு உடை ப்பார்-கன்னத்தைத்தகர்ப்பார். ஈர்ங் கை - ஈரக்கை. விதிர்க்கலான்-அசை க்கமாட்டான், இக்கவி - "ஈர்ங்கை விதிரார்கயவர்" என்னுந் திருக்குற ளை ஞாபகப்படுத்துகிறது.

19. தாபம் - (ஆசைப்பெருக்கா கிய) துன்பம். தீபம் - தீவு. யூபம் - பாய்மரம். (தாற்பரியம்) கலம் - கப் பல்.

20. விண்ட - சொல்லப்பட்ட. காணி - ஒருசிற்றளவு. மண்டு-நெரு ங்கிய, அ வான்பொருள் - அந்தப் பெரியபொருள்களை. மண்ணிடை - பூமியில். தாழ்க்க - புதைத்துவைக் க. கண்ட - செய்த. அசேதனன் - அறிவில்லாதவன். கண்டகசேதன ன்,— கண்ட என்பதில் அகரந்தொ க்கது.

21. திசை-இடம். விடை-(பொதி) மாடு. சேற்றுஇசை - சேருக்குகின்ற உழவர் முழக்கத்தையுடைய, சேல்மீ ன்களிருக்கு மிடங்களையுடைய என லுமாம். இசை - புகழ்.

22. ஆக்கிய -தொகுத்துவைத்த. பொருளுக்கு - பண்டங்கட்கு. எற்ப - பொருத்தமாக. விழு - விசேஷ. வாக்கியம் விதிப்பான் - பஞ்சாங்கஞ் சொல்பவன். ஊக்கினும் - செலுத் தினும். கூழ் - உணவு. அரிது - இல்லை. பாக்கியக்கலம் - பொற்பாத் திரம். (ஊக்காவிடினும்) வீழும்- வி ழும். பஞ்சதாரை-ஒருரசபதார்த்தம்; இதையிக்காலத்துச் சீனியென்பர்.

23. வற்கரை-வலியகரை. அற்க ரை - இருள்கெடுகின்ற.

24. கவிப்பர் - செட்டிகள். மாம ழை - பெரியமழை. வாரி-வெள்ளம்.

25. தானம் - இடம். மவுனர் யோகிகள். பொருவிற்று - ஒத்தது.

26. உந்தி - ஆறு. இந்திரதநு - அருவியிற்றோன்றும் பச்சை, செம் மை கலந்த வில். ஏய்ப்பார்- ஒப்பார். மந்திரத்து - மந்திரத்திரள்.

27. நியதி -நித்தியகடன். தாசு- ஆடை. கடகம் - கங்கணம். விளைவு- விளைநிலம். நித்திலம் - முத்து. வே ட்டார் - விரும்பினவராவார்.

28. வேண்டார் - வேண்டாத வராகி.

29. கொடுவிலை - மிகுவிலை. கய வன் சுசீமோரின். கோள் -கொள்கை. மண்டுற-நெருங்க. வரை - (அத்தூரி ன) மலை.

30. கொடிது - கொடியது, அரி யவிலை. வைகி - தங்கி. உற்றநாள் - கொடுக்கவேண்டிய தினத்தில்.

31. குறுகொள-அடைதற்கரிய.

32. குறுக - தேய. கடியகடை - வேகமானநடை. ஆட்கடியன்பாம்பு- நாட்சென்று ஒருவகைப்பாம்பு. ஆயுக ம் - வயது. தூதுவர் - யமதூதர்.

33. தாளாண்மைத்தனம் - முய ற்சித்தன்மை. கோளாண்மை - குற் றமுடைய. துடைப்பம் - விளக்கு மாறு. கேள் - நட்பு. நாள் - தினமா கிய. ஆண்மை - வீரம்.

34. வாதனை - துன்பம். நிந்த னை - பழி.

35. கவித்த -அணிந்த. வாகை- வெற்றி. நிறைத்தேன் - நிறைவித் தேன் ... வேன் - இல்லை.

36. நசை - விருப்பம். அசைவு - சோர்வு. மிசைபவர் - உண்பவர்.

37. செம் - செவ்வையாகிய. இ ருப்பள்ளித்தாமம் - பூமாலை. சேர்வு ற - சேர. பனசம் -பலா. ஆம்பிரம்- மாமரம். நாளிகேரம் - தென்னை.

38. கிளை -உறவினர். சுற்றம் - பந்துக்கள். வீழ்ந்தன - கெட்டுப் போயிருக்கிற.

39. ஓலம் -பெருமுழக்கம். கா லம் - உரியகாலம். முகித்தல் - முற் றுப்பெறச்செய்தல்.

41. வாசி - இலாபம்.

42. ஒட்டி - அநுமதி. கூவல் - கிணறு. விளைத்தேன் - பெருக்கி னேன். செட்டேன் - செய்வேன்.

43. அலகு - அளவு. அவத்தை- ஆபத்து. அயர்ந்து - தளர்ந்து.

44. பாங்கினோர் - பக்கத்திலுள் ளார்.

45. மன் - நிலையாகிய. இடங் கை - படுக்கை. மனை - மனைவி. மூ டை - நாற்றம். பிடர்பிடிப்ப-பிட ரியைப்பிடித்துத் தள்ள.

46. வீக்கினர் - கட்டினர். வெ ருட்டினர் - பயப்படுத்தினர். பாலை ம் - பாவத்தில். அந்தகன் - யமன்.

47. அலைப்பதனை - வருத்துவ தை. கையமைத்து - கையாலடக்கி. அசைத்த -கட்டிய. நகை-மகிழ்ச்சி.

48. கொன் - பெருமை.

49. முடித்தது - கெடுத்தது.

50. மன்றல் - வாசனை.

51. தவிர்த்த - நீக்கிய.

---

## பதினேழாவது:—கவுந்தசனைச் சருக்கம்.

1. கொண்டைஉறு - மயிர்முடி யைப்பொருந்துகின்ற. நீலவிழி-கரி யகண்களை. கொண்டு-பார்த்து. (தா ற்பரியம்) ஐயுறு - (தாம்பகையென் று) சந்தேகிக்கின்ற. நீலம் - நீலோ ற்பலம். பாணிபுகு - நீர்க்குள் செ ல்கின்ற. கேணி - தடாகம். செறி- நெருங்கிய. சோலைக்கண் - சோலை யினிடத்தில். தையலர் - பெண்கள். ஆடு - விளையாடுகின்ற. கிளி,— கண் டை - (ஆகுபெயர்) கற்கண்டின் மதுரத்தை. அலர் - விரிகின்ற. சொல்வாய் - சொல்லையுடையவாயா கிய. தொண்டை - கொவ்வைக்கனி யின். வனம் - வனத்தை. நாடும் - வி ரும்பப்படும்.

2. நாஞ்சில் - கலப்பை. மாஞ்சி னை - மாமரத்தின்கிளை. வரிவாளை- கீற்றுக்களையுடைய வாளைமீன். பா ளை - கமுகம்பாளை. இளைத்து - நெ ருக்கி. மதுரோசர்,—கொடி - மீனக் கொடி. நிகரத்தில் - ஆலயத்தில்.

3. வைப்பு - இருப்பிடம். பரா- பராசத்தி. மருக்கில் - பக்கத்தில்.

4. ஆனகம் - திருப்பிராத்தியம். அகன் - உள்ளிடம். மாலை -வரிசை. கோன் நகர் -இராசநகரத்தில். மான கஞ்சுகத்தான் - மானமாகியசட்டை யையுடையவன்.

5. மரபு -முறைமை. பாபர் இரு வர் - சொற்படாவிற் பிரதான் பாப னென்று சொல்லியுசெவ்வாயுஞ் சனி யும். சுபரெலா நீசமெய்த -புதன், சுக்கிரன்; இவ்விருவரும் சுகவலத்

தில் நீசமெய்தல் கணிதநூற்படி கூடாமையின், இவ்விருவரு ளொருவரோடு சந்திரனும் வியாழனும் நீசராசியில் நிற்க. சுபக்கோள் நான்கில் மூன்று நீசமெய்தலின்மிகுதியுற்றிச் சுபரெல்லாமென்றார். ஊழகரும் - (இலக்கினத்தில்) இராகு கேதுக்களிலொன்றும். கரிசேயும் - சனியின் பிள்ளையாகிய குளிகனும், இராகுகேதுக்களிருவரும் ஒரிடத்திலிரார், ஆதலால் இருவரி லொருவரென்று கூறினும்; இவற்றைச் சோதிடநூல் வல்லார்வாய்க் கேட்டுணர்க. இனி, மண்டலக்கோளில் நான்குசுபக்கோள்நீசமாதல்கூடாவாயினும், ஆருடக்கோள்களில் நான்கு சுபக்கோளும் நீசமெய்தல் கூடுமாதலால் சீவகசிந்தாமணியிலும் சினேந்திரமாலை உள்ளமுடையான் முதலிய சோதிட நூல்களிலுங் கூறியபடி ஈண்டும் ஆருடக்கோள்களையே கூறினுரென்று கொள்ளலு மமையும். காவடன்-கள்ளனாகிய. கரும்பினி லரும்பு - கரும்பிற்றேன்றிய பூவரும்பு; (அது பூத்தவுடன் கரும்பு ஒன்றுக்கும் பயன்படாது.)

6. கிடைபட-கீழேகிடக்க. கிளர்வுற - தலையெடுப்ப. நடலை - வஞ்சனை.

7. படிறு - களவு. கோள் -பொய். குறளை - கோட்சொல்லல். மொழியா - சொல்லாக. வீட்டும் - கொல்லும். விழல் - ஓர்புல்.

8. முன்சிகை - முன்குடுமி. நடர் - நாடகமாடுபவர். குப்பம் - கூட்டம். குமந்திரம் - கேடுசெய்யு மந்திரம். கிடை - வேதவொலி. கிடையா - கிடத்தலாக.

9. குரவர் - உபாத்தியாயர். குலநூல் - கல்வசாத்திரம். கரவடம் - கள்ளம். கணித்து - வரையறுத்து. பன்னி - படித்து. அத்தாணி - அரசிருக்கை மண்டபத்தில்.

10. பிறன்கோள் - அந்நியர்கொள்கை. வயப்படுத்து - வசப்படுத்தி. கூர்ச்சி - கூர்மை. வீழ்த்தி - சொன்று. கோம்பி - ஓந்தி. புள் - (மயிற்) பறவை.

11. மறுக்க - மாற்ற. கிளர்ந்த - விளங்கிய. பங்கயம் - தாமரை, (முகம்). உண்கண் - மையுண்டகண்கள். பிடி - பெண்யானையை.

12. வேட்டகம் - விவாகஞ்செய்தவீடு. வேட்டம் - வேட்டை. கோலம் - அழகு, (பன்றி). புகுந்த - (அதனை) யடைந்த. குவைநிதி - கூட்டமாகிய திரவியம். படுப்பது - அகப்படுத்துவதாகிய. கலை - ஆண்மான்.

13. மனு - மனுச்சக்கரவர்த்திகள். உகவாழ்நாள் - யுகங்களாகிய ஆயுள்நாள். அட்டகை, விதிபாதம், வைதிருதி - இவ்யோகங்களைவடவருவிச்சிருக்கம் 41-ஆம் பாட்டிற்காண்க. (திருதி - மூதற்குறை).

14. முன்னுவா - பௌர்ணமி. நிசி - இரவு. இருவர் நாள் - அரன்அரிநக்ஷத்திரமாகிய திருவாதிரை திருவோணம். பதினான்கு - சதுர்த்தசி.

15. சந்தி - பலதெருக்கூடுமிடம். சந்தி - நியதிக்கடன். மொய் - வலி. நலம் - அழகு. நியமம் - தவம். மதனம் - விரகம்.

16. ஒருவி - நீங்கி. உந்தி - கொப்பூழ். மந்திரம் — (ஆலோசனை).

17. கடன் - நித்தியகன்மம். அனலோம்பி - அக்கினிகாரியமுஞ்செய்து. மேலை - பழைமை. சாலை - போசனஞ்செய்யுமிடம். மாலையில் - இரவில். வளர்வார் - நித்திரை செய்வார்.

18. விரகு - நுண்ணறிவு. கரவு - கள்ளம். மந்திரக்குடிலம் - யோசனையால் வஞ்சகம். காந்தன் - கணவன். புன்மை - அற்பத்தன்ம.

19. கோ - அரசன். இன்னேன் - இத்தன்மையுடைய குற்சன்.

20. இனம் - சுற்றம். முறை - ஒழுங்கினில். திறம்பினன் - மாறுபட்டவனுகி. மறக்குறும்பு - பாவமாகிய சேட்டை.

21. தம்பனம் - தம்பித்தல்; அஃது அட்டகருமத்தொன்று. புலைமருந்து - கீழ்மையாகிய மருந்து. முயக்கு - சேலப்பு. அலத்தகம் - மாதர்பாதங்களிலூட்டும்)செம்பஞ்சுக்குழம்பு. முருக்கு - முருக்கம்பூப்போலும். மது - தேன். முது - பழைய. மது - கள்.

22. அருக்கியம் - பெரியவர்கட்குச்செய்யுமுபசாரத்தொன்று. பலி - பிச்சை. முன்சொலும் - முதன்மையாகக்கூறுங். நடப்பு - செல்லுதல். மிடுக்கு - வலி.

23. கொள்ளை - மிகுதி.

24. வேட்ட - விவாகஞ்செய்த. மருந்தீ - அமிர்தம். பூத்தென - பூத்தாற்போல. வயிறுவாய்த்து - கருப்பங்கொண்டு. காற்று அடிப்பத்தாழை பூத்தாற்போலென்றது - குற்சனுடைய ஏகதேசக்கலப்பாலென்றதைவிளக்கி நின்றது.

25. ஓதம் - ஒலி. உவர்நீர் - உப்புச்சலம். உதரம் வாய்ப்ப - கருக்கொள்ள. மேதகு - மேன்மைதங்கிய. குலத்து - கூட்டத்தில். சேயாய் - மகனுக. பயந்தாள் - பெற்றுள்.

26. கேர்படான் - எதிர்வரான். தொந்தனை - (தொந்தவினையென்பதன் விகாரம்) பழவினை. துவட்சி - அசைவு. சிந்தனை - எண்ணம். கீடம் - புழு.

27. இற்பிழை - மனைவிக்குத் தீங்கு.

28. உரிமையாட்டி - உரியவள். முரம்புதேம் - பரற்கல்லடுத்த நிலத்தினிடம். நாஞ்சில் - கலப்பை.

29. நறுநெய் ஆடி - நல்லநெய் ஸ்நானஞ்செய்து.

30. அடும் - கொல்லும். தண்டு - தடி. முன்னுற - நினைக்க. மூட்டு - பொருத்து. வீக்கி - கட்டி. பரடு - கணைக்கால். குணில் - குறுந்தடி.

31. நவிந்தனர் - (விகாரம்) வருந்தினவராய். வெருவி - பயந்து. துரந்தனர் - ஓட்டினர். கிளர் - விளங்குகின்ற. ஈர்ப்ப - இழுப்ப. புரியிட்டு - வயிற்றால்.

32. துதைந்திட - நெருங்க. குருதி - இரத்தம். மாந்த - உண்ண. கிணம் - கொழுப்பு.

33. வீரதந்தம் - வீரப்பல். செங்கோலரசு - யமன்.

34. தொழும்பு - அடிமையாளர். சுறுக்கென - விரைவாக. வெறித்து - மருண்டு. படர் - பகை. தடிமின் - துண்டமாக்குக. அசனியேறு - ஆணி

35. சண்டன் - யமன். கூளி - பேய். விண்டு - பிளந்து. எரி - பிரகாசிக்கின்ற. விண் - மேகம். கண்டகர் - கீழோர். உறுக்கும் - கோபிக்கும்; (பிளந்தலாவது கவர்கொள்ளுதல்.)

36. கொட்டு - அடிக்கின்ற. குணில் - குறுந்தடி. முசலம் - இருப்புலக்கை. தோட்டி - அங்குசம். ஈர் - பிளக்கின்ற. மத்திகை - சம்மட்டி. குந்தம் - கைவேல். கண்தழல் - கண்களில் அக்கினியையுடைய. கப்பணம் - நெரிஞ்சின் முள்வடிவாகிய ஆயுதம்.

37. ஞாளி - நாய். பொறியும் - பொறிபறக்கும்.

38. உறுக்குவார் - வருத்துவார். பதகர் - பாதகர். கந்துகந்தா - சிற்சில்லாக.

39. தண்டம் - தண்டனை. குரவன் - குரு. சத்தம் - மெய்ம்மை, (தாற்பரியம்).

40. தறிக்கும் - வெட்டும். கோரம் - கொடுமை. துணிக்கும் - துண்டமாக்கும். ஓச்சி —, குழு - கூட்டம்.

41. புடை - பக்கம். உந்தினர் - (யமன்முன்னர்ச்) செலுத்தினர். பதைப்ப - நடுங்க. ஒறுக்கும் - தண்டிக்கும். கீரார் - குணமுடையார்.

42. பலி - அதிதிபூசை. பொங்கு - தேனை - மரப்பொந்துபோலும். மட்டு - அளவு. மரப்பொந்துபோலும், வா - யெனக்கூட்டுக.

43. அயிர் - சோர.

44. வரைநிகர் - மலைபோலும் (திண்ணிய). உரை - சொல். உருத்தனர் - உதிர்த்தனர். குரைதரு - முழங்குகின்ற. கொடிறு - கன்னம்.

45. பிணித்தனர் - கட்டினவராகி.

கொடி - (ஆகுபெயர்) பெண். துமித்தார் - வெட்டினோர். இறஇற - நொறுங்க நொறுங்க.

46. எறி - (ஒளி) வீசும். முறிய டுத்தி - மாறுபாடுசெய்து.

47. பானம் - குடிக்குநீர்.

48. அத்திரம் - பாணம். பத்தி ரம் - ஆயுதம். சித்திரத்துணி - சித்திரவதை; அஃதாவது: சிறிதுசிறிதாக அறுத்தல்.

49. வருகை - வருதல். ஒச்சி - நீட்டி. சுரிகை - சுர்வாள். திரிகை - சக்கரம்.

50. வாய்கொளீஇ - வாயிற்கோத்து. துனித்த - துன்புற்ற.

51. நம்பர் - சிவபிரான். வம்பு - அபவாதம்.

52. தூஉய் - சொரிந்து. மண்டி - நெருங்குகின்ற. கொண்டமேனி - எடுத்தசரீரம்.

53. நடு - நடுநிலைமையை. குழைப்பிய - பிறழ்வித்த. வடு - குற்றம்.

54. புன் - வருத்தம். பொறி - இந்திரியம். மிண்டன் - தடியன்.

55. அவா - ஆசை. கனற்பாவை - அக்கினிப் பதுமை. பொறி - தீப்பொறி.

56. உறுப்பு உறுப்பு - ஒலிக்குறிப்பு. என - என்று. அவலன் - கிலேசமுடையவன். மறுத்து - திரும்ப. மேனியிலைத்தும் - சரீரமாகப் பொருந்தியும். கறுத்தும் - கோபித்தும். ஒய்ந்தனர் - வலியடங்கினர். கன்மம் - செய்தவினை.

57. கண்டம் - துண்டம். தண்ட - தண்டத்தையுடைய.

58. மறலி - யமன். முகடுமுட்டிய - அண்டத் துச்சிவரை யுயர்ந்த.

59. நிகர்தம் - வஞ்சகம். மறுகல் - சுழலல்.

60. சிதித்து - வஞ்சித்து. மம்பி - நெருங்கி. கும்பிபாகம் - ஒருநரகம்.

61. அவத்தம் - வீண். கவற்று - கவலையடையச்செய்கின்ற.

62. தேவதாயம் - தெய்வங்களுக்கு விடப்பட்ட சொத்துக்கள். செய் - நிலம். இறை - வரி. எரிவாய் நரகம் - அக்கினிநரகம்.

63. அச்சன் - கீழ்மகன். மிச்சில் - எச்சில்.

65. கூடசத்தொழில் - வஞ்சனைத்தொழில். கூடசன்மலிக்கும்பி - ஓர்நரகம்.

66. மழுக்கு - ஈநானம். நழுக்கு - வருத்துகின்ற. கோரம் - கொடுமை.

67. ஆழும் - அழுந்தும். போழும் - பிளக்கும்.

68. வீறு - உபாயம், வஞ்சகம். வெஃகிய - விரும்பிய. களவடம் - கன்னம்.

69. மட்டு அறு - அளவில்லாத. சட்டம் - ஒழுங்கு. கூற்று - யமனுதாகியொருவனாகிய காலன்.

70. அன்னை - தாய். அலரியின் அரும்பு - சூரியனைச்சார்ந்த தாமரையரும்பு; (அஃது: உடனே மலர்ந்து மணப்படும்).

71. மானம் - பெருமை. கணத்து - கூட்டத்துடன். தானம் - இடம். உளைய - வருந்த.

73. பவர்க்கம் - நரகம். படரை - துன்பத்தை. சேய் - (புத்திரனாகிய) பிள்ளை. பழி - குற்றம். கழுவ - போக்க.

74. சிக்கும் - கெடுக்கும். குரை - ஒலிக்கின்ற. திரை - (ஆகுபெயர்) கங்கை. விளித்து - (தன்னிடத் தகப்பட்ட பொருள்களை) அழைத்து, உள்ளே யிழுத்து. எறி - வெளியே வீசுகின்ற, தரங்கம் - அலை.

75. தவமதுகம் - தவமாகியமதுரம். கையெய்தி - கைவரப்பெற்று. பவமதுகம் - பாவமாகிய கைப்பை. கைகித்த - கைவிட்ட. படிமை - தவவேடம். மாகந்திங்கள் - மாசிமாதம். நவம் - செம்மையுடைய. அறு - பகுதிப்பொருள்விகுதி.

76. சிலை - இந்திரதநுசு. அம்பு - சலம், (பாணம்).

77. விஞ்சு - மிகுகின்ற.

78. அங்கம் - வேதாங்கம்.



கேள்வி - கல்வி.

79. முகிழ்த்து - மூடி. யோகிருந்து - யோகஞ்செய்து.

80. புவனாதி - உலகில் முதன்மையானநகரம். நவநாதசித்தர் - ஒன்பதுசித்தர்.

81. மகதியாழ் - மேன்மையுடைய வீணை. குருநிலைமை - ஆசாரியத்தன்மை. அருக்கிய பாத்திரியம் - முனிவர்கட்குச் செய்யுமுபசாரங்கள்.

82. உந்தை - உன்றந்தை. எதிர் - சமானம்.

83. பாகம் - பக்குவம். பாகம் - பங்கு. யோகம் - உயர்ச்சி. உத்தரபாலயனம் - உத்தராயணம். மாகமாசம் - மாசிமாதம்.

84. நடப்பில் - நிகழ்ச்சியில். சனகன் - (கவுந்தனாகிய) பிதா.

85. சுமுகம் - நன்முகம். தாரை - தானசலம். சமர - கலகமுடைய. எறி - வீசுகின்ற. திமிரம் - (பாவமாகிய) [illegible]. தாரை - திரள்.

86. பயந்தானை - பெற்றவனை. பவர்க்கம் - நரகம். யாவையும் - எல்லாம். உய்த்திட - செலுத்த.

87. தெய்வதம் - தெய்வம். அந்தம் - நாசம்.

88. பிணையியம்பியும் - பிணைப்பட்டும். துணைவராய் - சகாயஞ்செய்பவராய்.

89. கூபம் - கிணறு. கல்வினோர் - தோண்டினோர். படம் - வஸ்திரம். உபரிகை - மேல்வீடு. இருப்பன - இருத்தல்கள்.

90. அஞ்சல் - பயப்படாதேயுங்கள். செல்லல்கூர் - துன்பமிக்க. பானம் - குடித்தல். செச்சை - மாடங்களின்மேற்பக்கம்.

91. பதம் - பாதுலி. வழிக்கொண்டான் - வழியில் நடந்துசென்றான்.

92. ஆதுலர் - யாசகர். என்ன - எப்படிப்பட்ட.

93. இருது - பருவம். தகுதி - பொறுமைக்குணம். கரணமேலவர் - அந்தக்கரணசுத்தியா லுயர்ந்தவர்.

94. தாபதர் - முனிவர். மேருவை - மேருவில். நிலவு - பிரகாசம். ஊர - ஊர்ந்துசெல்ல.

95. கொடு - கொண்டு. தண்டம் - தண்டனை. யாவர்பண்பினும் - எவருடைய குணத்தினும். என்றனர் - என்று சொல்லினவராகி.

97. புக - புகுத. இகப்பு - நீங்கல். இறுமாப்பு - கருவம். உகப்பு - மகிழ்ச்சி.

98. மிசை - மேல். கதிரோன் உதிக்கும் - சூரியனுதிக்கின்றான். என்ன - யாதுஎன்று கேட்க. அம்தா - அந்தப்பக்கத்தில்.

99. அந்தணாளன் - பிராமணனாகிய கவுந்தன். வலம் - வலப்பக்கத்து அவயவங்கள்.

100. உழந்த - அனுபவித்த. கடன் - நியதி.

101. தொந்தனை - பழவினை. தந்தென - தந்தாற்போல. என் - என்று. அந்தரபல்லியம் - தேவதுந்துபி.

102. பெட்பு - ஆசை. அகம் - மனம். வயம் - வசம். ஒருமை - ஒற்றுமை. கொட்பு - சுழற்சி. அகந்தை - (விகாரம்) இடத்தையுடைய. தட்பம் - குளிர்ச்சி.

---

## பன்னிரண்டாவது:—புட்பகந்தச் சருக்கம்.

1. ஆடகம் - பொன். அணி - வரிசை. பேர்அணி - பெரிய படைவகுப்பு. கோடணை - ஒலி. கொடிப்படை - அறுவகைப்பட்டவையி லொன்று. கோலி - வளைந்து. நீடல் - உயர்தல். திருபன் - (பாண்டிய)ராசன். வீட - தோல்வியடைய. (தாற்பரியம்) தன்னிநாடு - பாண்டிநாடு.

2. மாகம் - ஆகாயம். மாடகூடம் - (இருபெயரொட்டு) வீடு. வரைத்திரள் - மலைக்கூட்டம். சேனை - படை. மான - ஒப்ப. ஈட்டம் - கூட்டம். விசைத்து - விசைகொண்டு. சிறகர் - சிறகு. நாகம் - ஆகாயம். படங்கு - மேற்கட்டி, (பெருங்கொடி). ஞாயில் - மதிலுறுப்பு. சிகரி

வேந்தன் - மலையரசன். பரிகாரிதனன் - இந்திரன். மேல் - மேற் (செல்லுதற்கு). ஈட்டும் - தொகுக்கும். பாசறை - படைவீடு. மூதூர் - பழைய நகரம்; (அஃதாவது: அடுத்தபாட்டிற்கூறும் கொற்கை.)

3. பொற்கை - அழகிய கையில். புலிமான் - புலியாகியமிருகம், புலிக்கொடி. பொருகையார் - போர்செய்தலையுடைய சோழராசாக்கள். குருகை - பறவைகளை. ஆர்க்கும் - பொரும். வில் - விற்கொடியை. கையார் - கையினிடத்துடைய சேரராசாக்கள். புல் - புல்லை. கையாராய்விட - கையினிடத்துள்ளாராய்த் தோல்வியடைய. அடல் - வலிய. மீனம் - மீனக்கொடி. சிற்கையார் - (தன்னிடத்துச் சரணடைந் தெதிர்வந்து) நிற்றலுடையாரை. நடத்தும் - (நல்வழியிலே) செலுத்தும். நிருபன் - (பாண்டிய) ராசன். அத்தாணி - அரசிருக்கை மண்டபத்தையுடைய. கொற்கை - (இராசதானியாகிய) ஒரு நகரம். மீனமேந்திநடத்தும் செங்கோல் நிருபனெனக் கூட்டுக. தோல்வியடைந்தவர் ஆயுதங்களைக் கீழேபோட்டுப் புல்லைக் கையிலேந்தி நிற்றல் பண்டைவழக்கு.

4. அங்கம் - வேதாங்கங்கள். வேள்வி - யாகங்கள். ஒழுக்கம் நான்கு - பிரமசரியமுதலிய நான்கு. அனல் - அக்கினி. ஓம்பி - பாதுகாத்து. நூல் தங்கும் - சாஸ்திரங்களிலே பொருந்தும். இருமை - இம்மைமறுமைப்பயன். ஒருமை - ஒற்றுமை. பேறு - பயன். அங்கி - அக்கினி. நாறு - மணக்கின்ற. அங்கம் - சரீரத்தையுடைய. மறிமான். நாகம் - மிருகக்கன்று. குதட்டும் - உண்டுகளிக்கும். ஆ - வீதம். ஆ - ஆடென்பதின் விகாரம்.

5. பன்னி - தேர்ந்து. அயம் - ஆடு. துகர் - உண்ணுகின்ற. குளகு - தழையாகிய உணவு. அத்திரி - தருமநூல் பதினெட்டினொன்று. மனு - மனுதருமசாத்திரம். வாசிட்டம் - பதினென் புராணங்களினுபபுராணத்தொன்று. பிதற்றுகின்றான் - பலகாற்பேசி நின்றான்.

6. ஓவில் - நீங்குதலில்லாத. பயின்றும் - பழகியிருந்தும். தாவு - விரோதமாகிய. பரமதம் - அந்நியமதம்.

7. வைசேடிகம் - ஒருநூல். பறத்தும் - இனரும், எழும். மீமாங்கிசம் - புறச்சமய நூல்களிலொன்று. மறத்து - பாவத்தையுடைய. விரை - அளவு.

8. நனி - மிகுதியாகிய. கருகலம் - பொக்கிஷம். அளை - கலந்த. வீழ்த்தி - கைவிட்டு.

9. ஏனோர் - பிறர். பேதை - அறிவில்லான். தீர்ந்தான் - நீங்கினான். இக்கவி: "தெரியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும்" என்னுந்திருக்குறளை நினைப்பிக்கின்றது.

10. யாதும் - எதுவும். உதிக்கும் - தோன்றும். நிற்றல் - இருத்தல். (தாற்பரியம்) இதுவே - இந்தவிதமியற்கையே. சம்பு - உருத்திரன்.

11. கிழக்கு - கீழ்த்திசை. மேற்கு - மேற்றிசை. தேவு - கடவுள். முன்வினை - பழவினை. செயல் - தொழில். பங்கம் - பழுது. கழிதல் - கெடுதல்.

13. நந்துற - செழிதல்பொருந்த. நலிவது - வருந்துவது.

14. உடலுக்கு - (அவரவர்) சரீரத்துக்கு. நோன்பு - விரதம். புறநெறி - அந்நியசமயம். அந்தகாரம் - இருளில். கருமம் - தொழில்.

15. பயிற்சி - பழக்கம். அநங்கநூல் - மன்மதனுக்குரிய காமநூல். பரந்து - எங்குஞ்சென்று.

16. வினையா - தொழிலாக. மூட்டி - மூளச்செய்து. கன்மம் - கிரியை. நெறி - சன்மார்க்கம். தாம் - ஒழுங்குடைய. பகர் - பகுதி.

17. கோட்டம் - கோவில். கன்னி - கன்னியாகுமரி. தும்மா - தும்மி.

18. சந்திகள் - பலவழிகூடுமிடங்கள். நியமம் - நெடுந்தெரு. நியமம் - முறை, வழக்கம். பந்தி - பந்தியாகிய. மேல் - உயர்ந்த. புன் - விஷயம். கழூர் - வெடிப்புநிலம்.

19. பாவனை - பாவித்தல். ஓரான் - உணராதவனானேன்.

20. புக்குள - (தான்) புகுந்திருந்த. மிக்கு - மிகுந்து. ஆற்றுன் - செய்யான்.

21. புரிதரு - செய்கின்ற. உறுகண் - துன்பம்.

22. நீரம் - கரை.

23. கவனம் - கருத்து. பல்நெறி - பாவமார்க்கம். படர் - விரிந்த.

24. காயிகம் - காயத்தாற் செய்யப்படுவது. பால் - பகுப்பு.

25. இலாதால் - (விசாரம்) இல்லாததால்.

26. புதல் - செடி. ஒக்க - ஒருமிக்க.

27. கனை - முழங்குகின்ற. பொன்னி - காவிரிநதி. குனி - வளைந்த.

28. வார் - ஒழுங்கு. வெண்ணீறுமூடி - விபூதியின்மூழ்கி. மணி - அழகு. அக்கவடம் - உருத்திராக்ஷமாலை. ஓர்தரு - உணர்கின்ற.

29. நிகழ்த்திடல் - பேசினால், வாதியேல் - விவாதஞ்செய்வாயானால். வருதி - வருவாய். அவர் - அவ்விருவர். தருக்கம் - வாதம், நாப்பண் - நடுவில். காதலையென்பதில், தன் - சாரியை.

30. வேறுநெறி - வேறுவழியில். ஆர்க்கும் - ஒழுகச்செய்யும். போதனை - போதித்தல். வாய்மை புகல்வது - பேச்சுப்பேசுவது. புணர்ப்பு - தந்திரம். சாதனை - சாதித்தல். கணிதர் - சோதிடசாஸ்திரிகள். மறையோன் - (சோழநாட்டுப்) பிராமணன்.

31. காநிய - (நான்காகக்) கூறுசெய்யப்பட்ட, பகுக்கப்பட்ட. வீறு - பெருமை.

32. கொந்து - கூட்டம். கங்குல் - இருள். இந்துவை - சந்திரனை.

33. இயம்புதற்கு - பேசுதற்கு, வாதிப்பதற்கு. எதிரா - நேராக. விட்டான் - செலுத்தினான். சயம் - வெற்றி. வியன் - பெருமை. வெறுவிதின் - பயனில்லதாகவால்.

34. பாங்கு - பக்கம். பரிவு - அன்பு. வாங்கு - வளைந்த.

35. பேதமீ - மிகுபாடு, இளர்ந்து - விளங்கியது. இளைத்து - விருத்தியாயது. நியதி - நியமமாகிய.

36. அண்ணினோர் - அடுத்தவர். கருதேன் - நினையேன். பொறி - ஊழ். மறலிதூதர் - யமதூதரை. காண்டி - காண்பாய்.

38. கேழ் - ஒளி, புகழ். கேள்வி - கல்வியறிவு. வணக்க - வளைக்க. கழை - மூங்கில். நாய்கன் - வணிகன்.

39. எயம் - பொருந்தும். அலந்து - அங்கலாய்த்து. உழந்து - வருந்தி. புறம் - வெளியில். சந்தியிற்பந்து - தெருவிற்கிடக்கும் பந்து; அதுபலராலுமுதைபட்டுத் தள்ளக்கிடப்பது.

40. சவி - வலிமை. அம்பலம் - பொது இடம். உழன்று - வருந்தி. சுழன்று - கலங்கி. பதைபதைத்து - நடுநடுங்கி.

41. காலபடர் - யமதூதர். பறந்தாட - விரைவாய்க் கொண்டோட. புடைத்து - அடித்து. படிவம் - சரீரம். துறந்தாட - வெறுத்துவிட. சுழற்றி - சுழலச்செய்து. சுழலி - இமைக்கின்ற. மறம் - கோபம்.

42. புரிந்த - (தான்) செய்த. ஆணை. அதோ - அவ்விடத்தில். வெவ்வாறு - கொடியவழியில். விலக்கினோர் - (திரிகூடத் தெல்லைவழியே) நீக்கினார்.

43. இளங்கான் - எம்பதியாத குசலன். பொரு - ஒப்பு. தண்டம் - தண்டனை.

44. சுழக்கு - விரைவு. வரிந்திடு - கட்டிய. அயர்ந்து - சோர்ந்து.

45. பொற்றுலம் - பொன்னுலகம். முற்று - முதிர்ந்த.

46. ஒருங்கால் - ஒருதரம். உறுத்தி - கோபித்து. வயிரம் - வச்சிரதண்டம். பாலன் - பருப்பால்.

47. பதகன் - பாதகன்.

49. மானவிமானம் - விமானத்தின்மேல். காவாணர் - தேவர். பூவாணர் -

பூமியில் வாழ்பவர். புட்பகந்தம்- மலர்வாசனை.

50. புத்தேளிர் - தேவர்கள். என்னென- (ஸந்தேகிதம்) எதுவென்று.

51. ஆர்வம் - அன்பு. செச்சை - இளஞ் சந்திரன். நிச்சம் - (நிச்சயத்தின் மரூஉ) உறுதி. உச்சம் - உயர்வு.

53. விது- சந்திரன். உண்-பொருந்திய. (தாற்பரியம்) தார் - மாலை. விறல் - வெற்றி. சித்திரப்பொது - சித்திரசபையில். உண்டு- உளதாகி. ஆர் - நிறைந்த. திருநடத்து- திருநடனஞ்செய்யுங்காலத்து. புகன்று - சொல்லி. ஊண்டாட்டு - களியாட்டு. முனிவன் - சூதமுனிவர். புகன்று இசைப்பானெனக்கூட்டுக.

---

## பதின்மூன்றாவது:— தருமகாமிச் சருக்கம்.

1. மா - மாமரம். பொதும்பர் - மரச்செறிவு. மலைபழுத்ததென-மலைபோலும் பழங்களைப்பழுத்ததென்று சொல்ல. தோன்றி - காணப்பட்டு. கா - சோலையானது. பழுக்காய்க்குலை - கமுகம்பழக்கொத்து. சிதறி- சிந்தி. கண்ணேணி - மூங்கிலேணி. கடுத்த - ஒத்த. சினை - மரக்கிளைகளின். மீ - மேலாகிய. பழுக்கன் - (வளார்களாகிய) படிகள். மிசை-மேல். தேப்பழுக்கும் - தேனைப்பெருக்கும்(தேம்பழுக்குமென்பது வலித்தல் விகாரம் பெற்றது). வழுதி - பாண்டியன். பொதும்பர் மாப்பழுக்குந்தேறுமெனக்கூட்டுக.

2. தொழுதி-கூட்டமாகிய. வளநாட்டு - வளத்தையுடைய நாடுகளின். அணியாம் - அழகாகும். தொகைமணிக்கு - கூட்டமாகிய இரத்நங்களுக்கு. முகமணி - நாயகமணி. ஆய் ஆடு எழுதி - (தொய்யில்) எழுதி. வனம் - அழகை. நாட்டும் - நிறுத்தும். இந்திரை - இலக்குமி. மந்திரம் - கோயில். கொழு - செழுமை (கடைக்குறை). திகள - விளங்க. நாட்டமெனை - கண்ணெனவும். மணியாய் மந்தரமாய் நாட்டமெனை முகமென வாழ்கின்ற வழுதி வளநாடெனக்கூட்டுக.

3. கடன் - கியதி. புந்தி-அறிவு. ஆச்சிரமம் - நிலை. போற்றுவது - பாதுகாப்பது. பொருள் - உடைமை. முந்நூல் - முப்புரிநூல், உபவீதம்.

4. நெறி-மார்க்கம், சமயம். இருபிறப்பு - இரண்டு சனனம்—; அவை: கருவினின்றுந்தோன்றுதல், சமஸ்காரத்தினுற்றோன்றுதல். பவம் - சனனம். காட்சி - தோற்றம். நவதாரணை - அட்டாங்கயோகத்தொன்று.

5. பன்னம் - வெற்றிலை. அடைக்காய் - பாக்கு. மன் - நெருங்கிய. தேனில் - தேனிடத்து. வேங்கை - வேங்கை மலரை. மூன்றாறு - கரும். தேன்போல் - வண்டுபோல் (வெறுத்து). மான்றேற்கு,—வேதமாமுனி - வியாசர். போல்,—(விருப்புற்று).

7. காருகத்தியம் - இருக்கிதம், இல்லறநிலை. மாதர் - மனைவியர். நோற்பது -தவஞ்செய்வது. ஒன்று - பிரமம்.

8. முன் - (சித்திரைவிட்டெழுந்த) முதலாவது. நென்னல்அமுது- நேற்றுச்சோறு, பழையசோறு. சிகை - குடுமி. முஞ்சி- ஒருபுல்.

9. பதி - வீட்டில். துணைவி - மனைவி. நீராடில் - இருதுஸ்நானஞ்செய்தால். சுழிபட்டார் -சுழற்சியடைந்தார். இருவகை-இல்லறம், துறவறம். கழிபட்டார் - நீக்கப்பட்டார்.

10. மூவர்- (இல்லறத்தாரல்லாத)மூவர். இறந்தார்-தென்புலத்தார். அத்தம் - பொருள். அற்றார் - இல்லார், வறியவர்.

11. சகடம் - பண்டி. கருமம் - செய்தொழில். நுகம் - நுகத்தடி. முறை - ஒழுங்கு (ஆக). பூண்டு- பொருந்தி. இறை - ஒருசிற்றளவு.

12. விறல் - வலி. உறுதி - உறுதியாகிய. இம்மை - இம்மைப்பயனும், மறுமை-மறுமைப்பயனும். வீடு - மோக்ஷமும். அறம் - தருமமானது. மூன்றும் - (மேற்கூறிய) மூன்றையும். இரண்டு- இம்மை மறுமைப்பயன்கள். ஒன்று - மோக்ஷம். அவை - அறமுதலிய மூன்று. வளாது - பொருந்ாது. தொக்கு - (அம்மூன்றும்) ஒருங்கு. மனைக்கு - வீட்டுக்கு. பொறைபூண்டமாதர் - பொறுமைபொருந்திய பெண்கள்.

13. பூரடு - கரடு. துணைத்தாரை - இரண்டு தாராசுத்தட்டு. ஆடல் - வெற்றி. குதி -குதிக்கால். அலவன் - நண்டு. கானு - முழந்தாள். தொடை -(அடித்) தொடை. குறங்கு - முன்றொடை. கரிக்கை - துதிக்கை. காபி - கொப்பூழ். ஆலம் - ஆலிலை. ஞானம் - தாமரைத்தண்டு. கஞ்சம் - தாமரை. அல்லது, தாமரையரும்பு.

14. யவவம் - (விகாரம்). (மாந்)தளிர். வன்உகிர் - கூரியநகம், வரை- மூங்கில். வளை - சங்கு. மிடறு-கழுத்து. குழை - காது. கவுள்-கன்னம். நகை - பல். ஒரு - ஒப்பற்ற. நிலவில், நுதல் - நெற்றி. பருவமுகில்-நீருண்ட மேகம்.

15. கருமை - கரியநிறம். ஒதிகூந்தல். செம்மை - சிவந்தநிறம். பொருவரு - ஒப்பற்ற. கட்கடை - கடைக்கண் - முறுவல் - பல். பொறி- தேமல். பொன்மை - பொன்னிறம். இருமை - பிளவுபடாமை.மயிர்நுதி - மயிர்நுனி. இருமை -பிளவுபட்டது. கடிதடம் - அல்குல். பெருமை-பெரியது. நகை - சிரிப்பு. சிறுமை -சிறியது. வறுமை - இன்மை.

16. சேல்வரை -மச்சரேகை. சங்கம் - சங்கரேகை. கொடி - கொடிரேகை. நேரியது - ஒழுங்குள்ளது. கமலம்-பதுமம். பொம்மல் -பொலிவு.

17. என்பு - எலும்பு. கடி - கடிதடம், (கடைக்குறை) நிதம்பம். களம் - கழுத்து. அதன்-நெற்றி. குழை - காது. நாட்டம் - கண். பொன்பொலிவு -இலக்குமியினுறுடு.

18. ஆண்டு -வயது. பன்னிரண்டுணம் - திருநகரச் சருக்கம் 31-ம் பாட்டிலிறிக. நிறை - நிறைதல். படிமை - கல்லொழுக்கம். கடி -வாசனை.

19. இணைகரு -பொருந்துகின்ற. ஆன்ந்தா - சத்தினிரா. இராக்கம் - இராக்ஷதமணம். பேர்-பெரிய. இலக்கு ஏய்தல் -குறித்தபொருளைப்பாணத்தாலெறுத்து வீழ்த்தல். மகம் வேட்பித்து -அக்கினிகாரியஞ்செய்வித்து.

20. உறற்றிறனே - செய்த இருசாலையை. வேதபாரகன் - வேதங்களைப் படிப்பிக்கும்பிராமணன்.

21. விம்பம் - கொவ்வைப்பழம். குறைமுடித்து -எல்லாக்கிரியைகளையும் பூர்த்தியாகச்செய்து.

22. பெறுநாள்-(பிறந்தன்னை ப்) புகழுக்காலத்தில். அரு - அரிய. நாளம் - வெட்டப்படுதல். பழிநாளம் -கக்கைக்கு வெட்டப்படுதல். அறிவுகொடை மடம்-அறியாமடம், கொடைமடம். இருநான் - (மேற்கூறிய) இரண்டுகொனகள். ஒரு - ஒப்பற்ற. நானமுதல் - நானமுதலிய (நான்) குணங்களுன்றும். ஐந்தாம் - மெய்யாதிய பஞ்சேந்திரியங்களும். மருந்து - ஒளடதம். (அறிவுமடம்-அறிந்ததைதயறியார் போன்றிருத்தல். கொடைமடம் - வரையாது கொடுத்தல்.)

23. வாரானம் - பலன் ஊக்கம். கடன் - கடமை. கணம் - மேகம்.

24. பதியின் - நாயகனுடைய. கொழுநன் - நாயகன்.

25. முனிவர்கடன்-முனிவர்க்குச் செய்யுங்கடமை. முமைந்து-செய்து. மனையாள்-இல்லறத்தாள். நிமையம் - அக்கினிகாரியம். முறை.

26. முன்னெறி - பண்டைவழி. இந்நெறி - இக்கதி; இலங்கு மறைந்திரை. மந்திரம் - அடைவேம்.

27. கூடல் - மதுரை. புதுமை - இருப்பதார். கழியல் - இருக்கற்ற. ஆடானை - திருவாடானை. சென்னை - திருவெண்வேலி.

28. கண்படுக்கும்-நித்திரைசெய்யும். வரை -மலையின்கண்.

29. சங்கற்பம் - மனோசங்கல்பம்.

வதை முன்னர்ச் சொல்லிக்கொண்டிருந்தில். முறைபோற்றி-செய்து. (தாற்பரியம்) பருப்பதம் - திரிகூடமலை. தடாகம் - (அருவியின் அடிக்கீழ்ப்புக் கமுள்ள) நீர்நிலை.

30. அறை-மோதுகின்ற. ஒதை-(அலையின்) ஒலி. அணங்கு ஓதை - தெய்வப்பெண்கள் முழக்கம்.

31. இரிந்து - நெரிந்து. புலன்-ஐஞ்சேந்திரியங்கள். ஒன்றிய-ஒன்றுபட்ட. தன்னையுணர்ந்தவன்-ஞானி. உரு - நிறம். வில்-இந்திரதநுசு. ஒரு பொருள் - ஒப்பற்ற பரம் பொருள்.

32. வக்கு - (அசரீரி) வாக்கு. மகவரம் - பிள்ளைவரம்.

33. பதுமை - இலக்குமி. மதி - மாதம். மதி - சந்திரன். ஆறு - கங்கை. முதியார் - பெரியவர். கதிமேவு கருப்பமெனக்கூட்டுக.

34. துடிமருங்கு - உடுக்குப்போலுஞ் சுருங்கியஇடை. ஊண்முயற்சி-உணவுஉண்ணும் நினைப்பின்மிகுதி. திங்கள் - மாதம்.

35. கவி - சுக்கிரன். மாலவன் - புதன். உதிப்ப-(ஓரிடத்திற்) றோன்ற. அமரர்குரு - வியாழன்.

36. சாதகன்மம் - பிறந்தவுடன் செய்யுஞ் சடங்கு. நாமகன்மம் - பெயரிடுங்கிரியை.

37. மறுகு - தெரு. சாண்டும் - செல்லும். வாயுறையுஞ்சடங்கு-அன்னமூட்டுங்கிரியை. சவுளம் - மயிர்களையுங்கிரியை. முந்நூல் - உபவீதம். காண்தகைய - காணுந்தகுதியுடைய.

38. அருத்தி - ஆசையுடைய. அங்கம் - வேதாங்கம்.

40. மிருதி-தருமசாத்திரம். கலைமதி - கல்வியறிவு. ஆய் - ஆக.

41. அழகு-அழகுடைய. சிகை-குடுமி. காமுற - ஆசைப்பட.

42. ஆளைஆள் - ஆளுக்கு ஆள், ஒவ்வொருவருக்கு மென்றபடி. (ஆளை, என்பதில் ஐ - கு வ்வுருபுப்பொருளது.) மதி மருட்டும் - அறிவு மயக்கச்செய்யும். நாளை - (வரும்) காலத்தை. நாள் - (சென்ற) காலம். கற்று - (மேலுமேலு மதிகமாகப்) படித்த. அறிவுமயங்கச் செய்தவாவது: இவனைச் சேர்தற்குப் பெண்வடிவை விரும்புதல். "ஆடவர் பெண்மையை யவாவுந் தோளினாய்" என்றார் பிறரும்.

43. தோடு-பூவிதழ். வனருகம்-தாமரை. கோடு - நீர்க்கரை. வெறியாடும் - கள்ளுண்ணும். மதுகரம்-வண்டு.

44. குழகு - இளமைப்பருவம். சீருணம் - வெப்பு. திரிந்து - வேறுபட்டு. கழகம் - கல்வி பயிலுமிடம். கழகமாங்கல்வியெனும்பெரும்பயிர்க்கெனக்கூட்டுக.

45. அமுதநிலை - அமுதமிருக்குமிடம். ஆலிங்கனம்-தழுவுதல். கமனம் - கலவி. தெரிப்பான் - தெளிவிப்பவனாகிய தருமசாமி. பதுமினி - முதற்சாதிப்பெண். சித்தினி - இரண்டாஞ்சாதிப் பெண். துருவுவான் - தேடுவான்.

47. பிடி-பெண்யானையை. குமர்-கன்னியழியாமை. சசி-இந்திராணி.

48. வேழம்-யானை. மூரி- பெருமை. கலைவேலி - சேலையாகியவேலி. கடிதடம் - அல்குல்.

49. சிலை - வில். கரும் - கரிய. கரும்பு உருவம் - கரும்பின்வடிவம். தடித்து - மின்னல். அரும்-அருமையாகிய. தடித்து - பருத்து. கமடம்-ஆமை. புறந்தாள் - புறவடி. சாயல்-அழகால். ஒரு - ஒப்பற்ற. மேனகையாள் - மேனகையாகிய தெய்வப்பெண்போன்றவள். தளவு அரும்பு-முல்லையரும்பு. மேல் நகை - மேன்மையுடைய பல்.

50. பணி- ஏவல். கைவிலை-சிறுவிலை. அரங்கு - சபை.

51. கொற்கை- பாண்டியராசன் இராசதானியாகிய ஒரு நகரம்.

52. சொன்னம் - தங்கம். சின்னம் - அடையாளப் பொருள்.

53. புட்படுக்கும் - பறவைகளைப் பிடிக்கும். புதல் - நெருங்கிய செடி. திட்பம் - உறுதி. சதி-தாளவொத்து. சமரிக்கை ........மட்புலம் - மண்ணிடம். ஒளியிருப்ப- ஒளித்திருக்க. பத்தி - வரிசை. மிழற்ற - ஒலிக்க. இயம்ப - முழங்க. முறைமுறை - கிரமப்படி.

55. பிள்ளையார்கவித்துவம் - பிள்ளையார் துதி. பேரணி - ............ அஞ்சலி-...........சலாந்தரு-...... சவுதவிகற்பம் - ......செக்கணி - ஓர் கடனம். குச்சாதி - ............போராட - போர்செய்ய. அபிநயம் - கை மெய்காட்டல்.

56. பண்ணின் - இசையால். வரி-பாட்டு. சுரும்பு - பெண்வண்டு. தும்பி - ஆண்வண்டு.

57. பவுரி - கூத்தின் விகற்பம். சதி - தாளவொத்து. வேன் - மன்மதன். விசும் - விடும். விசும் - காட்டும். (தாற்பரியம்) குனி - வளைகின்ற. தோள் - கை. தொடி - வளையல். பிறை - காந்தி. வாள் - ஒளி. தவத்தோனை - முனிவனிடத்தில். (ஐ - கண்ணுருபுப் பொருளது.)

58. கொட்டம் - செருக்கு. இடு-செய்கின்ற. பெட்டு - விரும்பி. அகணமா- அசுணப்பறவை. பிறித்தல்-பிரித்தல். கட்டழகு - பேரழகு.

59. அச்சு - (பெண்ணிலக்கணத்துக்கு) அடையாளம் (ஆக). தேவரம்பை - தெய்வரம்பை (போலும்). நச்சு - நஞ்சு. கணை - பாணம். எச்சு - இளைத்து. இடைய - வருந்த.

60. பொன் - (அருபெயர்) பொன்னிறம். இதலை - தேமல்.

61. நாடகம - நடனம். பொன்-அழகு. நயந்தார் - விரும்பியவர்.

62. காசு - பணம். பூரைபூரை - போதும் போதும். காமப்பாலோர் - காமப்பிரிப்புடையவர்.

63. கணிகை - வேசி. விட்டு - இடைவிட்டு. வீற்றுவீற்றாய் - வேறுவேறாகி. வளம் - செல்வம். மட்டு - அளவு. கலை - மான்.

64. கொடுங்குழை - வளைந்தகாதணி. வரம் - விசேடம். தாம் - தரு தி. தப்ப - தவற. குருகு - பறவை.

65. பாவை - அணங்குபோலியெனி. மாந்தி - உண்டு. நிகல்லெனும் - கல்லென்றொலிக்கும்.

66. ஆடகமனை - சொன்னத்தாலாகிய வீடு. கைவேலி - சிறுவேலி. அனை - மெத்தை. கொப்பம்-யானை வீழும் படுகுழி. சேடியர் - தோழிப்பெண்கள். களிறு - யானைபோன்ற தருமசாமி. தாய் - தாய்க்கிழவி. பாகு - பாகன். தோட்டி - அங்குசம். பூட்ட-பொருத்த. மருங்குல்வல்லி - இடையாகிய கொல்லிக்கொடி. தளையிடு - கட்டுகின்ற.

67. துன் - நெருங்கிய. ஒளிப்பதங்கம் - விளக்கில் (வீழ்)விட்டில். ஒளி - மறைகின்ற. மீன்ஒளி - நக்ஷத்திரப் பிரகாசம். ஒளி - புகழ்.

68. உரை - சொல். ஒருவினர் - நீங்கினர். சிலதிமார்கள் - தோழிப்பெண்கள். கவாடம் - கதவு.

69. சுருள் - வெற்றிலை மடிப்பு. மோகனம் - மோகம். பிறை உகிர் - மூன்றாம்பிறைச் சந்திரன்போலும் நகம். குறி - அடையாளம். துறை - மார்க்கம். சூத்திரம் - மூலம். உரை-பொருள்.

70. மதனப்பார்வை - காமநோக்கம். நீவி - தடவி. உதரம் - வயிறு. சாரம் - மேலேறப்படும் கருவி. இசை- இராகத்தையுடைய. ஈட்டி-சம்பாதித்து. வேட்டு வக்கிறுவின் - வேட்பின்னை.

71. வெடி - நறுமணம். உந்தி - தன்னி. மடு - தடாகம். சுழி - (கொப்பூழாகிய) சுழி.

72. முத்துஅரி - முத்தரிசிப்பருக்கைக்கல். கொஞ்ச-கிங்கிணிசெய்ய. (தாற்பரியம்) வித்தரிக்கின்ற - மிகுகின்ற. பொருட்பங்கி - திரவியமாகிய குடுமி. கத்தரி - கத்தரிக்கோல். புத்துஅரி - புதிய செவ்வரிகருவரிகள். புலத்தனன் - ஊடினான்.

73. அலத்தகம் - செம்பஞ்சுக்குழம்பு. நீவி - தடவி. அடல் - புணர்ச்சி. களிதரு - மகிழ்ச்சியைக்கொடுக்கின்ற. புலவி - ஊடல்.

74. தளைந்து - கட்டி. கூவட்டு நாகம் - தழும்பாகிய யானை. கேரிசம்- ஒருவகைபபாணிம். கூவளம் - யானை யுணவு.

75. ஓமம் - ஓமாக்கினி. கருமம்- கிரியை. வாமம் - அழகு. மேகலே - மேகலாபரணம். மதி - அறிவாகிய சந்திரனை.

76. இவள் - விளக்கம். கவர்வ து - திருடுவது. (ஆம்).

77. தனதடம் - முலையாகிய மலை. ஒசவிமந்திரம் - காதிற்சொல்லும் இரகசியம். அளி - அன்பு.

79. ச்சிக்கிரகத்தனம் - உயர்ச்சிச்செயல், குடிப்பிறப்புச் செய்கை. போயும் - நீங்கியும்.

80. விஞ்ஞை - வித்தை. கவர்ந்து - கிரகித்து, தேடி. உஞ்சல் - ஊசல். ஆர் - ஒத்த. குழை - காது. உழைய ர் - பக்கத்திலுள்ளார். மஞ்சு - அழகு.

81. கனதனம் - பருத்தமுலை. கனதனம் - மிக்கபொருள். பார் - பூமியில். துயிலாளை - நித்திரையாகிய பெண்ணை. பாராமல் - நோக்காமல். உறக்கமில்லாமலென்றபடி.

82. கலைமதி - கல்வியறிவு. மதி - சந்திரன். இருள் - இருட்டு. இடை - வருந்துகின்ற. கலை - பீதாம்பரம். வருடுவது - தடவுவது.

83. சரண் - அடைக்கலம். உளர் தரு - முழங்குகின்ற. மலர்கின்றாள் - கண் விழிக்கின்ற அனங்கசேனை. (தாற்பரியம்) திண் - திட்பம். திறல் - வலி. தேறல் - தேன், கள். வெறி - மயக்கம்.

84. சுரநெறி - பாலைநிலவழி. பிணை - மான். சிகரம் - பாத்திரம். தேறல்பெய்தது - கள்வைத்திருந்த பாத்திரத்தை. கரகம் - பாத்திரம். கள கள - கள்ளொழுகும் ஒலி.

85. எங்கி - அழுது. கொண்டவன் - (மதுவையுட்)கொண்ட தருமசாமி. குலைதலும் - நிலைதவறுதலும். விண்டிலள் - பேசாதவளாய்.

86. மருள் - மயக்கம். தனி - தனிமை. அயர்வு - சோர்வு. நிறை - உறுதிப்பாடு.

87. புணர்ப்பு - புணர்ச்சி. நீர் - குணம். பொறி - இந்திரியங்கள். உணர்ச்சி - அறிவு. கணம் - (கீழோர்) கூட்டம். புலை - கீழ்ச்சாதித்தன்மை. கன்மம் - தொழில், கட்குடித்தல்.

88. சீறூர் - சிற்றூர். உதகம் - நீர். வீறு - பெருமை. கூட்டரவு - கூட்டம். நிரயம் - நரகம்.

89. தூர்த்தை - விவசாரி. கூர்த்த - மிகுத்த.

90. குறுநகை - சிறியபல். செய்கேன் - செய்வேன்.

91. வன் - வலியுடைய. மாசுஉடை - அழுக்குப்புடைவை. பண்பு - (நல்ல) குணம். கறை - குற்றம். (வன், மெல்லினவெதுகை.)

92. தொந்தம் - சம்பந்தம். கருமம் - வேலை. மறுகி - சுழன்று. பந்தி - வரிசை. பண்டிதர் - அறிஞர்.

93. பாக்கியம் - செல்வம். தேக்கிய - நிறைத்த. போக்கிய - போக்க. ஆறு - மார்க்கம். சரணம் - அடைக்கலம்.

94. தண்ணிய - தாழ்ந்த. மன்றகத்து - சபையிடத்து. கடிது - சீக்கிரம்.

95. விஞ்சை - வித்தை. துஞ்சும் - இறக்கும். துடைப்பது - (அவ்விடத்தைக்) கெடுப்பது. தூ - சுத்தம். தஞ்சம் - பற்றுக்கோடு.

96. பிள்ளைமை - குழந்தைத்தன்மை. தெள்ளியோர் - தெளிந்தோர். கடன் - முறை. மிருதி - தருமசாத்திரம்.

97. வீறு - பெரிது. (தாற்பரியம்) வரம்பு - கரை. படலம் - கூட்டம். தூறு - நிந்தை. தோட்டி - அங்குசம். கதிப்பேறு - மோக்ஷம் பெறுதல். நறவுண் - கள்ளுணவு.

98. நுகர்ந்தார் - அநுபவித்தவர். கவ்வை - பழிச்சொல். புலை - கீழ்மை.

99. பின்னவர் - சூத்திரர். கடவுளர் - தேவர்.

100. வெய்ய - விரும்பப்பட்ட. மூவர் - க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர். கையகலாது - நீங்காது.

101. என்று கூடியும் - எவ்வளவு நாளானாலும், (தாற்பரியம்). கூடிய - சேர்ந்த. கன்றும் - வருந்தும். சும்மை - சுமை. கழிக - நீங்குக.

102. செய்வீர் - செய்யுங்கள். பாகு உற - பக்குவமாக. தூர்த்தர் - விடர். வேகுற - வேக. சிரகம் - ஒருவிதபாத்திரம். உய்த்தார் - செலுத்தினார்.

103. நிந்தனை - நிந்தை பழி. நுடங்கினர் - சலனமுற்றார். மறுகினர் - சுழன்றார். மறுகு - வீதி.

104. கொதிப்பது - சுடுவது, வருந்துவது. பிழை - குற்றம். விண்டனர் - சொன்னார். மெத்தவும் - மிகவும்.

105. இன்னோன் - இத்தன்மையுடைய தருமசாமி. வேட்ட - மணந்த. மழவிடை - இளமையுடைய எறு.

106. தாமம் - ஒழுங்கு. நாமம் - பெயர். வாமமேல் - வாமமார்க்கத்தினிடத்து.

107. பன்னி - மனைவி. என்படார் - என்னபாடுபடமாட்டார். அச்சோ - ஐயோ.

108. மகம் - யாகம். வேதச்செல்வி - பார்ப்பனப்பெண், சிவசாமி மனைவி.

109. மலங்கினர் - கண்ணீர்ததும்பினர். உலம்பினர் - மனத்தையடக்கினர். அலக்கண் - துன்பம்.

110. அயர்த்தனர் - (தம்மை) மறந்தனர்.

112. சேயிழை - தருமசாமிமனைவி. ஒழிவு - வெறுப்பு. சலித்து - வருந்தி.

113. தே - தெய்வம். புரம் - இராசதானி. உருகிற்றென்பதை, புரமுதலியவீற்றிற்குத் தனித்தனி பயனிலையாக்குக.

114. கோ - வருத்தத்தைக்காட்டும் ஒலிக்குறிப்பு. எங்க - அழ. ஆவென - வாய்திறந்து. பருகா - உண்ணாத. மகதி - மகத்துவமுடைய. முனிவன் - (நாரத) முனிவர்.

115. அஞ்சல் - பயப்படாதே. சஞ்சலம் - துன்பம். கனல் - சுடுகின்ற. எரி - அக்கினி. ஏஞ்சி - (மனம்) குறைந்து.

116. ஆய் - போன்று. அனிலம் - காற்று.

117. வேள்வி - யாகம். முத்தழல் - மூன்றக்கினி. கோதம் - குற்றம். யாது - ஏது.

118. புலை - கீழ்மை. பேதகம் - பேதம், வேறுபாடு. பிறிதொருநெறி - வேறொருவழி. போதகம் - ஞானம். (பேதகம் போதகம் என்பவற்றில் - க, பிரத்தியேகம்).

119. பனவர் - பிராமணர். தொடைக்க - போக்க. முன்னவன் - பிராமணன். முதுபழி - பெரும்பழி.

120. விப்பிரர் - பிராமணர். குடபால் - மேற்றிசைப்பக்கம். தெய்வமால்வரை - தெய்வத்தன்மையுடைய பெரிய திரிகூடமலையின்கண்.

121. மாகம் - மாசிமாதத்தில். ஆடும் - ஸ்நானஞ்செய்யும்.

122. கந்தரம் - குகை. சாரல் - மலைப்பக்கம். நந்தரத்தவர் - நம்முடைய தகுதியுடையவர். குரவம் - நறுமணம்.

123. சிலை - இந்திரதநுசு, (ஒலி). அம்பு - நீர், (பாணம்). தெவ் - பகை. பாவத்தறுகண்மான் - பாவமாகிய அஞ்சாமையுடையமான். பட - அகப்பட. சுலவி - சுற்றி.

124. வைகி - தங்கி. சுத்தி - புனிதம். கற்றை - திரட்சி. வார் - நீண்ட. பொற்றை - (திரிகூட)மலை.

125. பவித்திரம் - தருப்பையுப்பு ல்லாற்செய்த முடிச்சு. வருணம் - வாருணமந்திரம். செவித்திடு - செபிக்கின்ற. மூலம் - சிவமூலமந்திரம்.

126. தடிந்தது - கொன்றது. கழுநீர்ச்சோரி - கழுநீராகிய இரத்தம். வடிந்தது - ஒழுகியது, கெட்டது. பாவக்கங்குல் - பாவமாகிய இருள். காலம் - (கெட்ட) காலம். விடிந்தது - முடிந்தது.

127. உண்கண் - மையுண்டகண். காளம் - கறுப்பு. போந்தால் - வந்த

ஞளுகிய திருமேசாமி. ஆள் - ஆளப்பட்ட. கோள் - வலிய, நீத்த-விட்ட.

128. தார்த்தது - நிறைந்தது. போர்த்தன - மூடின.

130. வந்தனே-வணங்குதலுடைய. அளியன் - அன்புடையயான்.

131. உந்தை - உன்பிதா. கைதரல் - கைகொடுத்தல், உதவிசெய்தல். வாழிய - வாழக்கடவாய். பந்தனே - பந்தம், கட்டு.

132. பொருட்டின்-நிமித்தமாக. வந்தனே-வணக்கமுடைய. போந்தார்-போனார்.

133. வீடு - மோக்ஷம். நவநீதம் - வெண்ணெய். மை - மேசம். கோயில் - கோயிலாகிய. மதத்துணர்-தேனையுடையபூங்கொத்தை.

135. மா-மகத்தாகிய. திரு-சிறப்பு. தொன்மை -பழைமை. துவாரம்-வாயில். காப்பு - காவல்.

136. சயனம் - படுக்கை. படைகள்-ஆயுதங்கள். வியன் - பெருமை. புயல்மேழு - மேகங்கள் பொருந்திய. சிகரம் - கோபுரமுடி. ஆழி-சக்கரம்.

137. பத்தி - அன்பு. கோயில் - ஆலயத்தில். பிலவேந்தன் - பாதாளத்திலிருக்கும் வாசுகி. போந்து - வந்த. வாய்தல் - வாயில், வாசல். பாந்தள்முனி - பதஞ்சலிமுனிவர். அணித்தாய்-சமீபமாய்.

138. இருவர் - வாசுகி, அகத்தியர். தகை - அழகு.

139. மூலமாம் - முதலாம். நாற்பெருங்கணங்கள் - பெருமைதங்கிய நால்வகைப் பூதகூட்டங்கள். கோலம் - அழகு. கொற்றம் - வெற்றி. வேந்தன்- அரசனுகிய ஐயனார். வேந்தன் - காவலன்.

140. வாலே-இளம்பருவப்பெண். நீத்த - நீக்கிய. காளிதம் - கறுப்புநிறம். சூலி - துர்க்கை. வடுகன்-வயிரவர். மாகாளி - சத்தமாதர்களிலொருத்தி.

141. சாலி - நெற்பயிர். சாதவாகனத்தன் - பூதவாகனத்தையுடைய சிவபிரான். மூலமாதவர் - ஆதிருஷிகள். முதுவரை - பழையமலையாகிய.

142. அவண் - அவ்விடம். கலவாது - கலக்காமாட்டாது.

143. செவ்வை - பகைமை.

---

## பதிஞ்சகாவது:— நூற்பயனுரைத்த சருக்கம்.

1. வான் - ஒளி. அரிது- இல்லை.

2. வீடுபேறு- மோக்ஷமடைதல். மறைச்சார்பு - வேதச்சார்பாகிய மிருதிமுதலிய நூல்கள். விப்பிரமங்கையர் - பிராமணப்பெண்கள். சதுர்த்தர் - சூத்திரர். அவர் - பிராமணப்பெண்கள், சூத்திரர்.

3. புணர்ந்து - அடைந்து. உறவியின்-எறும்பைப்போல. வீடு ஆள்வார் - மோக்ஷத்தைச் (சென்று) ஆள்கின்றவர். சார்பு - பற்றுக்கோடு. சேருகம் - அட்டை. தவத்திேனார் - யோகிகள். ஓர்புடை - ஒருபக்கம். யூகம் -கருங்குரங்கு. உணர்விேனார்-ஞானிகள். நோறிவு - ஒழுங்கானஅறிவினுல். செலுத்தும் - ஓட்டும்.

4. தாளாண்மை - முயற்சி. வேளாண்மை - விவசாயம். வேளாண்மை - ஈகை. வாள் ஆண்மை - வாள்யுத்தத்தில் வீரம். கதிவிழைவு-மோக்ஷவிருப்பம். கிரமம் - முறை. ஆம்- போலும்.

5. நெறி - வழி. பதேர் - பள்ளம். பதி - ஊர். பசு - உயிர்.

6. தோடமல் -தோஷமல். தெரித்து - தெளிந்து.

7. புணர்த்து - சேர்க்கின்ற. சயம்பு - சுயம்பு. ஒன்று - ஒரு கூப்பிடு தூரம். குணக்கு - கிழக்கு. பஞ்சக்குரோசம் - ஐந்து கூப்பிடு தூரம். [குரோசம் - இரண்டுகற்தூர மென்பர் சமஸ்கிருத அகராதிகாரர்.]

8. பயில்வது - ஆராய்ச்சி செய்யப்படுவது. தெற்றி - திண்ணை. தடம் - தடாகக்கரை. தண்டலை - சோலை. சார்பு - இடம். பொறித்த-எழுதிய.

9. நாற்றி - தொங்கவிட்டு.



இவையவ-பொருந்துவனவாகியபொருள்கள். வேட்பார் - விரும்புவராயிர்.

11. வேள்வி - யாகசாலே. சதமகம் - நூறுயாகம். நிரகு - நரகம். ஆசி - வாழ்த்து.

12. மிகையினர் - பகையுடையார். மூவேவர் - தலேவர். தடிந்து-கெடுத்து. வகையின் (இவ்) வகுப்பில். தொகையினுல் - தொகுத்தலால் (ஆய).

13. முன்னம் - முதன்மை. நன்னர் - அழகு. பவீப்பு-நயப்படுதல்.

15. வருவினே - ஆகாமியம். சாய்கின்ற- குறைகின்ற. வாய்கொண்டு-வாயால்.

16. பனசம் - பலாமரம்.

17. மேல் - மேன்மையாகிய.

18. விரிப்பார் - விரித்துச்சொல்வார். பொறிப்பார் - எழுதுவார்.

19. முனே - போர். பனுவல் - பாடல்.

21. சிந்துரம் - யானே. பணி - (பூசனேத்) தொழில். மந்திரம் - வேதம். பதம் - பொழுது, காலம். நந்தரத்தோர் - நம்போலியர்.

22. நத்தம் - சங்கு. கூர்மம் - ஆமை. நளினம் - தாமரை. பணிலக்கோயில் - சங்கவடிவானகோயில். மணி - இரத்நம்.

23. வாய்தல் - வாயில். முத்தி- மோக்ஷம். அருள் - அருளுதல்.

24. அருவியிந்திரசாபம் - அருவியினிடத்துத்தோன்றுமிந்திரதநுசு. ஆடலின் - மூழ்குதலால். கழுநீர்த்தோற்றம் - (மூழ்குவார் பாவம்) கழுநீராயோடுங்காட்சி. ஆதிபரை - பராசத்தி. பகவர் - திரிமூர்த்திகள். திருவெழுத்துணர்த்தல் - (இறந்தவர்கள் காதில்) பஞ்சாக்கரவுபதேசஞ்செய்தல்.

25. மதாகக்கேசன் - தேனுற்கங்கை பூசித்த இலிங்கம். சோமேசன்- சோமலிங்கம். கூத்தன்- (குறும்பலாமூர்த்திக்கு வடபக்கத்திலநாதியேயுள்ள) கூத்தலிங்கம். சிகரம் - மலேயினுச்சி. சம்பு - இலிங்கம். மறை - வேதம். காரி - இந்திரன். விசைய - துர்க்கை. சாத்தன் - ஐயனார்.

26. பாந்தள்வேந்து - வாசுகி.

27. விம்மிதம் - உடல்பருத்தல். அம்ம ஓ - அசைச்சொற்கள். ஈட்டுவது - சம்பாதிப்பதாகிய பொருள்.

28. ஆடல் - திருநடனம். பாடலம் - பாதிரிப்பூ. சரண் - அலைகலம். பூண்டு - பொருந்தி.

29. சித்தர் - முனிவர். ஆச்சிரமம் - இடம்.

30. தொன்னூல் - பழையநூல், வேதசிவாகமம். மேலோன் - சூதமுனிவர். உள்ளும் - நினேக்கப்படும். பதி - இறைவன்.

31. சவுனகர் - முனிவரிற்றலேவராகிய ஒரு முனிவர். சயம்பு-சுயம்புவாகிய. மவுனர் - யோகிகள். கவனம் - நினேப்பு. பொதும்பர் - சோலே. பவனம் - பூமி. பாரிடத்தவர்- பூமியிலுள்ளவர். சவுனகராதி யெண்பத்தெண்ணுயிரவரெனக் கூட்டுக.

32. எந்திரம் - தருப்பையாலாகிய சக்கரத்தால். நேர் - தரப்பட்ட. வாவி - தடாகத்தையுடைய. பெருவனம் - பெரியகாடு, நைமிசாரணியம். சென்மக்கரு - பிறத்தற்கிடமென்னுங்கருப்பமாகிய. மயேந்திரசாலம்- மாயவித்தையை. கடத்துவான்-கடத்தும்பொருட்டு. மணி - இரத்நம். முத்தும்,— இருமை - பெருமை. ஏந்து - தாங்குகின்ற. இரவி - சூரியன். சோமன் - சந்திரனேப்போல். எறிக்கும் - பிரகாசிக்கும். மலேயம் - பொதியமலே. கொல்லி - கொல்லிமலே. ஒரு - ஒப்பற்ற. மயேந்திரம் - மயேந்திரமலே. மூக்கோடு - மூன்று சிகரம். நேர்பெருவனமெனக் கூட்டுக.

33. மேகாங்கம் - மேகம் போலும் சொரூப முடைய. கந்தரத்தார் - கண்டத்தையுடையார். சிலேகல். நீளிடை - நீண்டதூரமாகிய இடம். வாகு - அழகு. வடவரை-மகாமேருமலே. பாகு - (ஆகுபெயர்) இனிமை. சாமீபம் - பக்கம்.

34. சானு - முழங்கால். உரம் - மார்பு. பாணி-கை. சரணம்-பாதம். குய்யம் - இரகசியத்தானம்.

35. மூலம் - ஆதியாகிய. உத்தர கங்கை - வடதிசைக்கங்கை. உகந்தமை- மகிழ்ந்துசெய்தமையை. குத்திரம் - வஞ்சகம். அத்திரம்-பாணம். அன்ற - நீங்கிய. சாபம் - வில். என வே இந்திரதநுவென்றாயிற்று.

36. நியதி - நித்தியகன்மம். ஆர்வம் - அன்பு. குழுமினர் - கூடினர். காயகற்பம் - சரீரத்தைத்திடப்படுத்துமருந்து.

37. பௌவம் - பௌர்ணமி. சாயை - நிழல். தாள் - (அவ்வப்பொருளின்) அடியில். மாரி- மேகம். பொன்மழை - மஞ்சள்மழை. மந்தாரம் - மப்பு. வாடை - (தென்றற்)காற்று. ஊடாட - கலக்க. பயப்ப - தர.

38. இருந்தவர்கள் - பெரியதவத்தையுடையவர்களாகிய. பன்னிருவர் - தொல்காப்பியர்முதலிய மாணாக்கர் பன்னிரண்டுபேர். நிபுணர் - அறிவின்மிக்கோர். கொண்டல்-கீழ்க்காற்று. காற-மணக்க.

39. குழை - செழிக்க. கோடீரம் - சடையின். பாரம் - கனத்த. மண்டலம் - வட்டம். கும்பசம்பவம்-கும்பத்தின் பிறப்பு.

40. மக - மேலாகிய. மது - தேன். அளவளாவி - கலந்து.

41. விண்புலம் - ஆகாயத்தினிடம். மிசை - அருபவிக்கின்ற. புலம் - (மக்க)ளிடம். ஆடும் - விளையாடும். வன் - வளம். புல் - பொருந்துகின்ற. விண்டார் - வெறுத்தார்.

43. மிருதி - தரும சாஸ்திரம். புரிவான் - செய்யும்பொருட்டு: கம்பும் - (தசத்)தம்பம்.

44. பற்றுதமிழை - இராஜாத்திரன். முற்றுத - முதிராத. ஆல் - (ஆகுபெயர்) ஆலிலை.

45. சத்தி - பராசத்தி. விசையை - துர்க்கை. குமரன் - போருடையவர். குடதிசை - மேற்றிசை, சோமசேகரன் - சந்திரசேகரர்.

46. கடவுள் - தெய்வத்தன்மை. கற்றை - திரண்ட. அரவின்மேல் துயில்வார்க்கு, பவனம் - தேவலோகம். பயிரவர் - வயிரவர். புவனநாயகர் - உலகத்துக்குத்தலைவர், திரிமூர்த்திகள்.

47. இம்பர் - இவ்விடம். தம்பம் - ஆதாரம். துவாரபாலர் - வாயில்காப்பாளர். ஆயிரங்கதிர் - சூரியன்

48. நால்வர் - சனகாதியர். எழுவர் - சத்தமாதர். நாப்பண்இருப்ப - நடுவிடத்திலிருக்க. எந்தையார் - சோமாஸ்கந்தர்.

49. துவர் - பவளம். கமலை-இலக்குமி. பாரதி - சரசுவதி. உவரி - கடல். கவிர் - முண்முருக்கம்பூ. சவிதிரி - சூரியன்.

51. சிலை - சிற்றவினளவு. சிலைதினைத்தார் - சிற்றலையுடைபவித்தார்.

52. உவட்டு - அதிகப்பெருக்கு. துள்ள - ததும்ப. ததுதழுப்ப - ததும்ப.

53. பதுமலோசனம் - தாமரைக்கண். அங்கு - அவ்விடத்து. ஐயாயுதம் - பஞ்சாயுதம். அவை: சக்கரம், சங்கு, தண்டம், வாள், வில். அங்கை - உள்ளங்கை.

54. முகந்த - அள்ளியெடுத்த. இசைக்கும் - சேர்க்கும். விலை - விலையும். வழங்கு - வண்டெனும். ஆடா - ஊடாடாத.

56. பவம் - பாவம். அது - பகுதிப்பொருள்விகுதி. படித்தோர் - மூழ்கினோர். நவம் - புதிய. மது - தேன்.

57. மறையவன் - பிராமணனாகிய ஆத்திரேயன். மருத்து - தென்றற்காற்று. துறை - சித்திராநதித்துறை. படிந்தோன் - மூழ்கினனாகிய சுருதசன். வணிகன் - வைசியனாகிய கண்டகசேதனன்.

58. பரிபவம் - வியாகுலம். போதகம் - யானை. மதுவையுண்டான் - கள்ளுண்டவனாகிய தருமசாமி.

59. புரி - முறுக்கிய.

60. வீழ்தல் - பதிதல். தீயோன் - கொடியவனாகிய குசலன். எரி - அக்கினி. பரிவு - அன்பு. பார்ப்பான் - பிராமணன்;* இவன்: சரிதம் வடவருவிச் சருக்கத்திற் கூறப்பட்டுள்ளது. புரிவு - செய்தல்.



61. பார்த்தன் - அருச்சுனன்.

62. தாரகப்பிரமம் - பிரணவப்பெரியபொருளே. அத்திரவிழி - பாணம்போன்ற கண்களையுடைய வுமாதேவி. பண் - இசை. அந்தரப்பேரி - தேவதுந்துபி.

63. மூன்ற - அசைச்சொல். ஒருவண்ணம் - ஒருவிதம். பகல்வண்ணம் - வெண்ணிறம்.

64. பணிவான் - வணங்கப்படுவான். குழாஞ்செயும்-கூட்டங்கூடும். போந்தார் - வந்தார்.

65. சிரமு - உயர்ச்சியுடைய. மன்றம் - சபை. பதம் - பதவி.

66. ஆறு - (கங்கா)நதியும். அடங்கு - ஒடுங்குகின்ற. அவிர் - விளங்குகின்ற. மடங்கலின் - சிங்கம்போல. வீறு - பெருமை. மடங்கலும் - சிங்கமுமே. மடங்கு - பங்கு.

67. குருந்து - ஓர்மரம். போந்தனர் - போயினர்.

68. ஆதிபிரான் - சிவபெருமான்.

இரண்டாவது:—சிவரகசியகாண்ட முற்றிற்று.

திருக்குற்றாலத் தலபுராண அரும்பதவுரை முற்றுப்பெற்றது.

# அரும்பதவுரைப் பிழைதிருத்தம்.

| பக்கம் | பாட்டு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| கஙச | 12 | எ | பிரமவிஷ்ணுக்கள் | விநாயகர்சுப்பிரமணியர் |
| ருகஅ | 1 | உ | வியன | வியன் |
| ருஉஎ | 14 | க | அரு | அடு |
| ருருக | 35 | அ | என்ப | என்ப |
| ருருசா | 59 | ௬ | தக்களு | தங்களு |
| ருருஎ | 5 | உ | கலக | கலக் |
| ,, | ,, | எ | இருடம் | இடரும் |
| ருசாக | 127 | உ | மந்தக | மந்தக் |
| ருகூ0 | 1 | உ | திறவன் | திறைவன் |
| ,, | 7 | கரு | பப்டா | ப்படா |
| ருகூக | 41 | உ | உணா | உணர் |
| ருசாஉ | 8 | உ | ஆம | ஆம் |
| ருசாக | 45 | ச | ஊன | ஊன் |
| ருஎஎ | 120 | ச | பபழம் | ப்பழம் |
| ருஅ0 | 11 | ச | பொறி | பொரி |
| ,, | ,, | அ | பொறி | பொரி |
| ருஅக | 17 | உ | வெறறி | வெற்றி |
| ருகூஎ | 19 | ச | இரும் | இறும் |
| ருகூஅ | 24 | சா | வேநத | வேந்த |
| ச0ச | 5 | உஎ | காவட | கரவட |
| சக0 | 2 | எ | எழுதி | எழுதி |
| சாகரு | 61 | க | நாடகம | நாடகம் |
| சாகசா | 74 | ரு | வகைப | வகைப் |

## நூற்பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 4 | 11 | சுழிந்து | சுளிந்து |
| 14 | 17 | வீது | வீது |
| ,, | 17 | மேவி | மெவி |
| 15 | 25 | காட்டி | காட்ட |
| 27 | 19 | விளிர் | விதீர் |
| 30 | 2 | சித | சித |
| ,, | 16 | சோனே | சோனை |
| 48 | 11 | ராமாக் | தமாக் |
| ,, | 16 | சேஜுயிர் | சேஜுயர் |
| 49 | 26 | தனி | தனி |
| 61 | 4 | காரியம | காரியா |
| 62 | 9 | கட்வு | கடவு |
| 64 | 19 | வணஙக | வணங்க |
| 69 | 10 | நன்து | தின்து |
| 70 | 14 | மலியுல | மலியுல |
| 99 | 6 | டன்ன | டனன |
| 116 | 7 | சேத் | சேத் |
| 131 | 22 | சாடபி | சாபி |
| 137 | 13 | வாண்ட | லாண்டூரு |
| ,, | 21 | பால | பால் |
| 140 | 20 | மலிசுஷி | மலிஷி |
| 159 | 22 | துறை | திரை |
| 179 | 9 | மதுரத்திஸன் | மதுரத்திரன் |
| 191 | 11 | கூடாந்து | கூர்ந்து |
| 194 | 14 | வில்லவன் | வில்லிலன் |
| ,, | 17 | ஞன் | ஞன் |
| 211 | 8 | சார்க்த | சாந்த |
| 215 | 10 | பூவிரய்ப் | பூவாப் |
| 217 | 24 | ஒலபெலை | ஒல்லெலை |
| 222 | 15 | ருலத | ருலத் |
| 228 | 9 | கோல்வி | கொல்வி |
| 280 | 18 | புலதசோ | புலத்சோ |
| 252 | 9 | பாக்காம் | பாக்காய் |
| 274 | 17 | புறகை | புற்கை |
| 277 | 6 | மடைமை | மடமை |
| 281 | 3 | தொமுதத | தொழுதன |
| 311 | 7 | சித்திமன் | சித்திரமன் |

## நூற்பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 26 | 9 | றல் | ரல் |
| 48 | 17 | சாரால் | சரால் |
| 80 | 19 | படா | பாட |
| 89 | 14 | வைவைச் | வைவச் |
| 90 | 2 | வைவைச் | வைவச் |
| 117 | 25 | வைசக்கி | வைசக்கி |
| 182 | 11 | தொன்றி | தென்றி |
| 192 | 23 | யாவலி | யாவலி |
| 195 | 12 | அவினை | அவினை |
| 212 | 8 | பவுத்தி | பவித்தி |
| 214 | 4 | மதசேர | மத்சேத |
| 217 | 17 | யேத்தி | யெத்தி |
| 219 | 23 | குகப்பி | குசிப்பி |
| 239 | 4 | மெச்க | மெச்ச |
| 267 | 15 | வமபி | வம்பி |